ஸ்ரீ:

ஸ்ரீ பிள்ளைலோகார்ய ஜீயர்

அருளிச் செய்த

# யதீந்த்ரப்ரவண ப்ரபாவம்

(ஸ்ரீ மணவாளமாமுனிகள் திவ்ய சரிதம்)




யதிராஜ பாதுகா

68, தெளிசிங்கப்பெருமாள் கோவில் தெரு.

திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

1992

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:          ஸ்ரீமதே வரவரமுநயே நம:

பரமகாருணிகரான

**ஸ்ரீ பிள்ளைலோகாசார்ய ஜீயர்**

அருளிச்செய்த

# யதீந்த்ப்ரவண ப்ரபாவம்


பதிப்பாசிரியர் :

**Dr. V. V. ராமாநுஜன் M.A., M. Sc, Ph. D.**

ஓய்வுபெற்ற பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்

ஆசிரியர் யதிராஜ பாதுகா


பெருமாள் கோவில் வித்வான் ஸ்ரீ உ வே (திருப்பதி

**தி. அ. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி**

அவர்களால் பரிசோதிக்கப்பட்டது


This book is published with financial assistance from

**TIRUMALA TIRUPATI DEVASTHANAMS**

under their Scheme

Aid to Publish Religious Books

வெளியீடு :

**யதிராஜ பாதுகா**

68, T. P. கோயில் தெரு, திருவல்லிக்கேணி

சென்னை-600 005.

1992

ஸ்ரீ

## ஸ்ரீமான் கோயில்கந்தாடை வாதூலதேசிக அண்ணவிலப்பன் குமார வேங்கடாசார்ய ஸ்வாமியின்

## மங்களாசாஸநம்:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:     ஸ்ரீவேங்கடகுரவே நம:

அண்ணவிலப்பன் திருவடிகளே சரணம்

நமது ஆழ்வார்கள் ஆசாரியர்களுடைய வைபவங்களைப் பின்பழகிய பெருமாள் ஜீயர் "ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்" என்னும் க்ரந்தத்தின் மூலம் வெளியிட்டருளினர். இதில் பொய்கையாழ்வார் முதலாக நம்பிள்ளை ஈறாக ஆழ்வாராசாரியர்களின் வைபவம் பேசப்பட்டுள்ளது. அதற்குப்பிறகு எம்பெருமானாரின் அபராவதாரராய் பூர்வாசாரிய பரம்பரையில் சரமசாரியராய் அவதரித்து பெரிய பெருமாளுக்கும் ஆசாரியராய்த்திகழ்ந்த நம் பொய்யிலாத மணவாளமாமுனிகளின் வைபவத்தை ஆசார்ய பரதந்த்ரரான ஸ்ரீ பிள்ளைலோகார்ய ஜீயர் "யதீந்த்ரப்ரவணப்ரபாவம்" என்ற க்ரந்தத்தில் அருளியச்செய்தார். பொய்கையார் முதல் நம்பிள்ளையீராக வைபவங்கள் குருபரம்பராப்ரபாவமாயிற்று. மணவாள மாமுனிகள் வைபவத்தையே முக்கியமாகக் கொண்ட இந்நூல் "யதீந்த்ரப்ரவண ப்ரபாவம்" என்று பெயர் பெற்றது. நம் தரிசனத்தில் ஆத்யாசார்யனுக்கும் ஆசாரியனுகையாலே இவர் வைபவம் தனிக்ரந்தமாக அவதரித்தது யுக்தமே.

ஆசார்யபதம் எம்பெருமானாருக்கே உரியதொன்று. அவரே அபராவதாரமாய் வரவரமுனியாய் வந்துதித்தார். நம்பெருமாள் இவருக்கு எம்பெருமானாரிடம் இருந்த ப்ரேமத்தின் கனத்தை யிட்டு "யதீந்த்ரப்ரவணர்" என்று தாமருளிச்செய்த ஸ்ரீசைலேச தனியனில் பெயரிட்டருளினர். அத்திருநாமமே இந்தவைபவ நூலுக்கும் அமைந்தது. பிள்ளை லோகார்ய ஜீயர் இந்த திவ்யக்ரந்தத்தை அருளிச் செய்யாவிடில் நம்பிள்ளைக்குப் பின்னர் தோன்றிய ஆசாரியர்களின்-குறிப்பாக பெரிய ஜீயரின் வைபவங்களை அறியவே முடியாது போயிருக்கும். ஆகவே நாம் பிள்ளைலோகார்ய ஜீயர் விஷயத்தல் கனத்த உபகாரஸ்ம்ருதியை அநுஸந்திக்க ப்ராப்தமாகிறது.

இந்த க்ரந்தம் கிடைப்பது மிகவும் துர்லபமாய் லுப்தமாகக் கூடிய இச்சமயத்தில் ஸ்ரீமான் டாக்டர் V.V. ராமாநுஜாசார்ய ஸ்வாமி இதை மிகவும் பரிச்ரமப்பட்டு பல பழையபதிப்புகளை சேகரித்து ஒப்பிட்டு சோதித்து இருந்தவற்றை விடாமல் புதிதாக ஒன்றும் சேர்க்காமல் "யதிராஜ பாதுகா" மூலம் வெளியிட்டு உபகரித்துள்ளார். இது ஒரு பெரிய காரியமாகும். இவருடைய முயற்சியைப் பாராட்டி மங்களாசாஸநம் பண்ணுகிறோம்,

முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை
பெருமாள் கோயில்
ஐப்பசித் திருமூலம் 10-11-91

ஸ்ரீ கோ. க. வா. அ.
குமார வேங்கடாசார்ய
ஸ்வாமி

# முன்னுரை

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:

ஸ்ரீஸ்வாமி மணவாள மாமுனிகள் வைபவமான யதீந்த்ர ப்ரவணப்ரபாவம் என்ற நூலை யதிராஜ பாதுகா பத்திரிகையில் அதன் ஆசிரியர் ஸ்ரீ உ.வே. V. V. ராமாநுஜ அய்யங்கார் ஸ்வாமியால் வெளியிடப்பட்டு வந்ததை அடியேன் ஆரம்பம்முதல் முடிய வாசித்தும் தெளிந்தும் ஸந்தோஷம் அடைகிறேன். ஆசிரியர் ஸ்வாமி தமக்குக் கிடைத்துள்ள 1891ம் வருஷம் 19.7 வருஷம் தமிழ் லிபி மற்றும் தெலுங்குலிபி அச்சு ஸ்ரீகோசங்களையும் மற்றுமுள்ள ஸ்ரீகோசங்களையும் நன்கு பார்த்து பரிசோதித்து எழுதியிருக்கிறார். முன்னால் வெளிவந்த ஸ்ரீகோசங்களுக்கு ஒருவித்மான மாறுதல் அன்னியிலும், 100 வருஷங்களுக்குப்பின் எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்ற பழமொழிப்படி பொய்யையே திரும்பத் திரும்ப ப்ரசுரம் செய்து மெய்யாக்கிக் கொண்டிருக்கிற "ராமேச் வரம் க்ஷேத்ர விஷயம்" போலல்லாமலும் "முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு பின்னோர்ந்து தாமதனைப் பேசாதே தன்னெஞ்சனில் தோற்றினதே சொல்லி இது சுத்தவுபதேச வரவாற்றதென்பர் மூர்க்கராவார்" என்றும், "பின்னேயொன்றுதனில் நெஞ்சு போராமல் பெற்றோம், பிறர் மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே" என்றும் அருளியுள்ளதை அநுஸரித்து இப்போது வெளியிட்டிருப்பதை ஸ்ரீவைஷ்ணவர்கள் கடாக்ஷித்து மிகவும் போற்றி ஸந்தோஷப்படுவார்கள் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அநேகம் பேர் விசதவாக்சிகாமணியின் வைபவபரமான யதீந்த்ரப்ரவண ப்ரபாவ ஸ்ரீகோசத்தை கடாக்ஷித்து இருப்பார்களோ? என்பது ஸந்தேஹமே, இப்போது ஆசிரியர் ஸ்வாமியால் மிகவும் தெளிவாகவும் எல்லாருக்கும் புரியும் படியும் எழுதப்பட்டு வெளிவரும் பொய்யிலாத மணவாளமாமுனிகளின் வைபவமான இந்த யதீந்த்ரப்ரவணப்ரபாவ நூலை வாங்கி நன்கு கடாக்ஷிக்க வேண்டுமென்று ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளில் தலைவணங்கி, கை கூப்பி ப்ரார்த்திக்கிறேன்.

திருஜீயர் மடம்
திருக்குறுங்குடி
10—11—91

N. ஸ்ரீநிவாஸய்யங்கார்
ஸ்ரீகார்யம்

# முகவுரை

ஸ்ரீ உ.வே டாக்டர் V.V. ராமாநுஜாசார்ய ஸ்வாமி தாம் ஆசிரியராக நடத்தும் யதிராஜ பாதுகையில், பிள்ளை லோகாசார்ய ஜீயர் ஸ்வாமி அருளிய யதீந்த்ரப்ரவணப்ரபாவம் என்னும் மணவாள மாமுனிகளின் வைபவ க்ரந்தத்தை, ஒவ்வொரு மாதமும் சிறிது சிறிதாக வெளியிட்டு முடித்திருக்கிறார். இப்புத்தகம் 231 பக்கங்கள் கொண்டதாய், அப்பத்திரிகையின் அளவிலேயே அமைந்துள்ளது.

இந்நூல் இதுவரையில், தமிழெழுத்தில் திரு கா. வே. திருக்கச்சிநம்பி தாஸராலும் ஸ்ரீ உ. வே. சித்ரகூடம். கந்தாடை திருவேங்கடாசார்ய ஸ்வாமியாலும் நூறு வருஷத்துக்கு முன்பு இரண்டு தடவைகள் அச்சிடப்பட்டுள்ளது. தெலுங்கெழுத்தில் ஸ்ரீ. உ. வே வித்வான் புதுப்பேட்டை இளையவில்லி. வேங்கடாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ உ. வே புதுப்பேட்டை திருவேங்கடாசார்ய ஸ்வாமியும் சேர்ந்து பராங்குசாவதாராதி 5011 வதான ஸௌம்ய வருஷத்தில் (இற்றைக்கு 81 ஆண்டுகளுக்கு முன்பு) அச்சிட்டுள்ளனர். இப்புத்தகத்தில்- இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்குப் பதவுரையும் சேர்க்கப்பட்டுள்ளமை விசேஷாம்சமாகும். இவற்றில் தற்போது ஏதும் கிடைக்காமையினால் இப்புதிய பதிப்பு வெளியாகி உதவிபுரிவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

இது முற்காட்டிய தமிழ்ப் பதிப்புக்களையே பற்றுசாகக் கொண்டு அச்சிடப்பட்டிருக்கிறது ஆயினும், தெலுங்குப் பதிப்பில் அதிகமாகக் காணப்படும் விஷயங்களையும் கீழே பாடாந்தரமாகக் காட்டியுள்ளார் ஆசிரியர். தெலுங்குப் பதிப்பின்கண் இல்லாமல் தமிழ்ப்பதிப்பில் மட்டும் உள்ள விஷயங்களையும் 'இது தெலுங்குப்பதிப்பில் இல்லை' என்று விளக்கமாகக் காட்டியிருக்கிறார். மேலும் இந்நூலில் சிற்சில இடங்களுக்கு ஸம்வாதமாக, வேறு சில நூல்களிலிருந்தும் சில பகுதிகளை அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இவை இப்பதிப்பின் சிறப்பாகும்.

இப்பதிப்பில் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்குப் பொழிப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. இப்பொழிப்புரை பெரும்பாலும் தெலுங்குப்பதிப்பின்கண் தென்படுகிற பதவுரையையே பின்பற்றியுள்ளது. தெலுங்குப் பதிப்பில் இல்லாமல் தமிழ்ப் பதிப்பில் மாத்திரமே உள்ள ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்குப் புதிதாகப் பொழிப்புரையெழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. இது வடமொழிப் பயிற்சி இல்லாதவர்களுக்கு பயன்படுமென்பதில் ஐயமில்லை. பொதுவாக இந்நூல் வெளியீடு தற்போது பாலைவனத்தில் தண்ணீர்ப் பந்தல் போன்றதென்பது எள்ளளவும் அதிசயோக்தியாகாது. இதை வாசகர்கள் தந்தம் அநுபவத்தில் காணலாம்.

இவ்வெளியீட்டிற்காக ஸ்ரீ உ. வே. V. V. R. ஸ்வாமி பலவிதமான ச்ரமங்களை வரம்பற்று ஏற்றுக்கொண்டு இது தன்னை நிறைவேற்றியிருக்கிறார். இவர் திறத்தில் ஸ்ரீவைஷ்ணவவுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. வாழ்க ஆசிரியர்,

பெருமாள் கோவில்
10—11—91

தி. அ. க்ருஷ்ண [illegible]

# அடியேன் செய்யும் விண்ணப்பம்

"யதீந்த்ரப்ரவணப்ரபாவம்" எனும் இந்த திவ்யக்ரந்தம் ஸ்வாமி மணவாளமாமுனிகளின் வைபவத்தைப் பேசுவது. மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்கள் அவர்களுக்குப் பின் அவதரித்த பூர்வாசாரியர்கள் வைபவங்களை நம்பிள்ளையின் திருவடியான பின்பழகியபெருமாள் ஜீயர் "ஆறாயிரப்படி குரு பரம்பராப்ரபாவம்" என்ற க்ரந்தத்தில் வெளியிட்டருளினர். அந்த க்ரந்தம் நம்பிள்ளை வைபவத்துடன் முடிவடைகிறது. அதன் தொடர்ச்சியாக அமைந்துள்ளது இந்த நூல் வடக்குத் திருவீதிப் பிள்ளை வைபவம் ஈடு முப்பத்தாறாயிரப்படியின் அவதாரம், நம்பிள்ளை நியமனத்தால் அது பிரசாரமடையாமலிருந்தது, நம்பிள்ளையருளால் வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு பிள்ளைலோகாசாரியர், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் என்ற இரு குமாரர்களின் அவதாரம், அவர்கள் ரஹஸ்யக்ரந்தங்கள் அருளிச் செய்தமை, பிள்ளை லோகாசாரியர் நம்பெருமாள் திவ்யமங்கள விக்ரஹத்தை துலுக்கரால் விளைந்த கலாபத்தில் வலசையாய் எழுந்தருளப் பண்ணியது. ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் திவ்ய மங்கள விக்ரஹத்துக்கு ஏற்பட்ட ஆபத்து, நம்பெருமாளுடன் ஆழ்வார் ஸமாகமம், பிரிவு, இந்த விக்ரஹங்கள் சேமமாகப் பேணப்பட்ட வைபவங்கள் எல்லாம் இந்நூலில் முற்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளன. திருவாய்மொழிப்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் நியமனப்படி கூரகுலோத்தம தாஸரால் திருத்தப்பட்டது. பெருமாள் கோவிலில் சேமவைப்பாயிருந்த ஈடு முப்பத்தாறாயிரப் படியை தேவப்பெருமாளுடைய நியமனத்தால் திருவாய்மொழிப் பிள்ளை பெறுதல். திருவாய்மொழிப்பிள்ளை ஆழ்வார் திருநகரியிற் கோயிலை புநருத்தாரணம் பண்ணி வலசையாக எழுந்தருளியிருந்த ஆழ்வார் திருமேனியை எழுந்தருள்பண்ணி ப்ரதிஷ்டிப்பித்தல், மணவாளமாமுனிகளின் அவதாரம், அவர் திருவாய்மொழிப் பிள்ளையிடம் ஆச்ரயித்தல் முதலான விஷயங்கள் அடைவே பேசப் பட்டுப் பின்னர் மணவாளமாமுனிகளின் வைபவம் பரக்கப்பேசப் பட்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் முதலில் (1907) ஸ்ரீ கா. வே. திருக்கச்சி நம்பி தாஸரால் இந்த நூல் தமிழ்லிபியிலும், அதே காலத்தில் (1908) ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தமுத்ராபக சபையாரால் தெலுங்கு லிபியிலும் அச்சிடப்பெற்றன. 1865லும் 1891லும் ஸ்ரீசித்ரகூடம் கந்தாடை திருவேங்கடாசாரிய ஸ்வாமியைக்கொண்டு இரண்டு

பதிப்புகள் தமிழ்லிபியில் அச்சிடப்பட்டுள்ளன. 1865, 1891, 1907 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட மூன்று தமிழ்ப் பதிப்புகளும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. தெலுங்கு லிபிப்பதிப்பு இவற்றினின்றும் பல இடங்களில் வேறுபட்டுக் காணகிறது.

யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தை 1970 ஆண்டு மணவாளமாமுனிகளின் 600வது திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு ஸ்ரீபிள்ளைலோகார்ய ஜீயர் ஸாதித்துள்ள பங்க்திகளை மாற்றுமல் ஸங்க்ரஹித்து திருவல்லிக்கேணி மணவாள மாமுனி கைங்கர்ய சபையின் ஆதரவில் வெளியிட்டுள்ளேன். அது இப்போது துர்லபமாய் விட்டது. முழு நூலையும் வெளியிட வேணும் என்று பலர் வேண்டுகோளின்படி இப்பதிப்பு வெளியிடப்படுகிறது. 1970ல் வெளியிட்டது 1907 தமிழ்ப் பதிப்பை மட்டும் தழுவியது. இப்போது வெளியாகும் பதிப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிப்புகளின் விவரங்கள்:

1. ஸ்ரீ மடும்பை பார்த்தஸாரதி ஐயங்கார், ஸ்ரீ சித்திரகூடம் கந்தாடை திருவேங்கடாசாரியர், ஸ்ரீ வைகுதமாநிதி முடும்பை ஸ்ரீநிவாஸ அப்பங்கார் இவர்களால் பரிசோதிக்கப்பட்டு சென்னை வாணீநிகேதன அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது 1865. (தமிழ்)

2. ஸ்ரீ சித்திரகூடம் திருவேங்கடாசாரியரால் பரிசோதிக்கப்பட்டு சென்னை மெமோரியல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1891 (தமிழ்)

3. ஸ்ரீ திருவழுந்தூர் சடகோபராமாநுஜாசாரியரால் பரிசோதிக்கப்பட்டு ஸ்ரீ கா. வே திருக்கச்சிநம்பி தாஸரால் சென்னை ஆநந்தா பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது 1907 (தமிழ்)

4 ஸ்ரீ புதுப்பேர் இளைபவில்லி திருவேங்கடாசாரியர், ஸ்ரீ புதுப்பட்டு திருவேங்கடாசாரியர் இவர்களால் பரிசோதிக்கப்பட்டு சென்னை ஸ்ரீவைஷ்ணவ முத்ராபகஸபையாரால் காஞ்சிபுரம் ஸ்ரீநிவாஸ முத்ராக்ஷசாலையில் அச்சிடப்பட்டது. ஸௌம்ய வருஷம் 1908. (தெலுங்கு)

இவற்றுள் தெலுங்குப்பதிப்பில் மட்டும் மேற்கோளாக எடுக்கப்பட்ட ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்கு பதவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றைத் துணைகொண்டு ச்லோகங்களுக்கு மொழிப்புரை எழுதப்பட்டு இப்பதிப்பில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ்பதிப்பில் மட்டுமுள்ள சுலோகங்களுக்குப் புதிதாக மொழிப்புரை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ

அடியேன் எழுதித் தயாரித்த கையெழுத்து ப்ரதியை திருப்பதி திருவேங்கடவன் கீழ்நிலைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணி புரிந்து ஓய்வுபெற்ற ஸ்ரீ உ.வே. வித்வான் திருமலை அநந்தாண் பிள்ளை கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி தமிழ்ப்பதிப்பு, தெலுங்குப் பதிப்பு இவற்றின் துணையுடன் பரமக்ருபையுடன் பரிசோதித்து, திருத்தங்கள் செய்து, உரையில்லாத சுலோகங்களுக்கு பொழிப் புரையும் எழுதித்தந்து உதவியருளினர். இப்பதிப்பில் தமிழ்ச் செய்யுள்களையும், ஸம்ஸ்க்ருத சுலோகங்களையும் வசன மூலத் துடன் கலக்காமல் ஆங்காங்கு பிரித்து அச்சிட்டுள்ளேன். இச் செய்யுள் வடிவங்களை ஸ்ரீ T.A.K. ஸ்வாமி சீர்செய்து உதவியுள் ளார். பல சிரமங்களையும் பாராது இவ்வுதவிகளைச் செய்துள்ள ஸ்ரீஸ்வாமிக்கு அடியேன் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். தலையல் லால் கைம்மாறிலேன். ஸ்வாமி ஸாதித்தருளிய முகவுரைக்கும் அடியேனது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீஸ்வாமியின் உதவியில்லையேல் அடியேனால் இப்பதிப்பை வெளி யிட்டிருக்க முடியாது.

இப்பதிப்பில் உள்ள அச்சுப்பிழைகளுக்கு அடியேனை பொறுப் பேற்க வேண்டும். வாசகர்களை க்ஷமித்தருளும்படி வேண்டுகிறேன். தமிழ்பதிப்புக்கும் தெலுங்குப்பதிப்புக்குமுள்ள வேறுபாடுகளை ஆங்காங்கே அடிக்குறிப்பில் காட்டியுள்ளேன். ஸ்ரீவசநபூஷணம் தோன்றிய வரலாறு இந்நூலில் விவரமாக எழுதப்படவில்லை. எழுதப்பட்டுள்ளதும் சரியாகப் பொருந்தவில்லை. பின்வந்தோர் சேர்த்ததோஎன்று ஐயப்பட இடமுள்ளது. பொய்யிலாத மண வாளமாமுனிகள் தாமே இவ்வரலாற்றை தமது ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானத்தில் விவரமாக ஸாதித்துள்ளார். அதை அப்படியே இந்நூலில் சேர்த்துள்ளேன். இம்மாதிரி வாசகர்களுக்குப் பயன் படக்கூடிய குறிப்புகள் பல ஆங்காங்கே அதிகப்படியாக சேர்க்கப்பட்டுள்ளன

இந்நூல் வெளியீட்டிற்கு கீர்த்திமூர்த்தி ஸ்ரீமான் A. K. சடகோபாசாரியஸ்வாமி (அம்பத்தூர்) ஏற்படுத்திய "தர்க்க தீர்த்தம் பாரதம் V. ரங்காசார்யஸ்வாமி மெமோரியல் எண்டோ மெண்ட் ட்ரஸ்ட்" இலிருந்து ஷை சடகோபாசாரியஸ்வாமி குமாரர்கள் ஒரு பெருந்தொகையை உதவியுள்ளனர். இந்த ட்ரஸ்டின் நிர்வாஹ தர்மகர்த்தா ஸ்ரீ A. K. தேவராஜனுக்கும் அவர் ஸஹோதரி, ஸஹோதரர்களுக்கும் அடியேனுடைய மிக்க நன்றி உரித்தாகும். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் அளித் துள்ள நிதி உதவிக்கு அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீ சுந்தரம் சாரிடீஸ் ஸ்தாபனத்தாருடைய உதவிக்கும் நன்றி செலுத்துகிறேன்.

தெலுங்குப் பதிப்பின் க்ஸெராக்ஸ் ப்ரதி ஒன்றை பம்பாய் அநந்தார்யா ஆராய்ச்சிக் கழக முதல்வர் Dr. K. K. A. வேங்கடாசார்ய ஸ்வாமி தந்துதவினர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் நிரந்தரஸேவை புரிபவரும் தற்சமயம் தி தி. தேவஸ்தானத்தாரின் ஆழ்வார்கள் திவ்யப்ரபந்த திட்டத்தில் சிறப்பு அலுவலராகப் பணிபுரியுமவரான Dr. M. வரதராஜன் இதை சில ஆண்டுகளுக்கு முன்னமே தமிழில் எழுதித் தந்து உதவினர். இவ்விருவருக்கும் அடியேனுடைய நன்றி உரித்தாகும்.

ஸ்வாமி மணவாள மாமுனிகளின் சிஷ்யர்களில் முதல்வர் ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி இவரே பொன்னடிக்கால் ஜீயர் என்று போற்றப்படுபவர். இவரே வானமாமலை மடத்தின் ஸ்தாபக ஒன்றான ஜீயர் ஸ்வாமி. இம்மடத்தில் வர்த்தமான பீடாதிபதியான ஸ்ரீமத் பரமஹம்ஸ பட்டர்பிரான் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி அநுக்ரஹித்துள்ள மங்களாசாஸனத்துக்கு க்ருதஜ்ஞதாபூர்வமான அஞ்ஜலியை ஸமர்ப்பிக்கிறேன்.

ஸ்ரீமான் கோ. க. வா. அ. குமாரவேங்கடாசார்ய ஸ்வாமி திருமாளிகை (ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை) வர்த்தமானஸ்வாமி பரம க்ருபையுடை இந்நூலுக்கு மங்களாசாஸனம் அருளியுள்ளார். மணவாளமாமுனிகளின பரமப்ரீதிக்குப் பாத்திரமானவரும் அவரால் "நம் அப்பாச்சியரண்ணாவோ!" என்று அன்புடன் அழைக்கப்பட்டு, அவரைத்து தமது ப்ரிய ப்ரதம சிஷ்யரான ஸ்ரீவானமாமலை ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியிடம் திருவிலச்சினை பெறுவித்தவருமான அப்பாச்சியாரண்ணா திருவம்சம் இந்தத் திருமாளிகை. மணவாள மாமுனிகள் அப்பாச்சியாரண்ணாவை பெருமாள் கோயிலுக்கு தர்சநப்ரவர்த்தகராக அனுப்பி வைத்தருளினர் என்பது ப்ரஸித்தம். கீர்த்தி மூர்த்தியான இத்திருமாளிகை பெரிய ஸ்வாமி அஸ்மதாசாரியர்

**ஸ்ரீ கோ. க. வா அ. குமாரஸ்ரீசைலாசார்ய ஸ்வாமி**

திருவடிகளில் இந்த க்ரந்தத்தை நினைவஞ்சலியாக ஸமர்ப்பிக்கிறேன்.

மற்றும் திருக்குறுங்குடி திரு ஜீயர் ஸ்வாமி மடம் ஸ்ரீ கார்யம் ஸ்ரீ உ. வே. N. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி உகந்தருளிய முன்னுரைக்கு அடியேன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திருவல்லிக்கேணி
ஐப்பசித் திருமூலம்
10-11-1991

வரவரமுநிப்ருத்ய தாஸன்
V. V. ராமாநுஜன்

# யதீந்த்ரப்ரவணப்ரபாவம்

## பொருளடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| பெரியோர்களின் மங்களாசாஸநங்கள், முன்னுரைகள், பதிப்பாசிரியரின் விண்ணப்பம் | i-viii |
| நம்பிள்ளை வைபவம் பிள்ளை லோகாசாரியார், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவவதாரம், 1-5. | 1 |
| திருவாய்மொழி வ்யாக்யானங்களில் 9000ப்படி அவதார க்ரமம்; நம்பூர் தேவராஜர் நம்பிள்ளை என நஞ்சீயரால் அழைக்கப் பெறுதல், 24000ப்படி அவதாரம். 7-8 | 7 |
| ஈடு முப்பத்தாறுயிரப்படி அவதாரம், அது ஓராண்வழி வரும்படி நம்பிள்ளை நியமனம் 9-10 | 9 |
| நம்பிள்ளை வைபவம் 11-17 | 11 |
| பெரியவாச்சான் பிள்ளை வைபவம், வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் வைபவம். 18-22 | 18 |
| ஈயுண்ணி மாதவப்பெருமாள் மூலம் ஈடு ஓராண் வழி வருதல் | 23 |
| வடக்குத்திருவீதிப் பிள்ளை பிள்ளை லோகாசாரியர் வைபவங்கள். ஸ்ரீவசநபூஷண அவதார க்ரமம் 27; நம்பெருமாள் கோயிலை விட்டு வெளியே எழுந்தருளல் 28; உலகாரியன் திருநாடு அலங்கரித்தல் 3[illegible], மேல் நம்பெருமாள வ்ருத்தாந்தம், ஆழ்வார் திருநகரி நம்மாழ்வாருடன் ஸமாகமம் 33-34. திருமலைக்கு எழுந்தருளல் 35, மேலே ஆழ்வார் வ்ருத்தாந்தம்-திருக்கணாம்பி எழுந்தருளல் 37 மேலே கோயில் வ்ருத்தாந்தம் 38 | 25 |
| திருவாய்மொழிப் பிள்ளை (திருமலையாழ்வார்) வைபவம், கூரகுலோத்தம தாஸர் பிள்ளையைத் திருத்தியது 40; பிள்ளை தேவப்பெருமாளருளால் நாட்டைப் பெற்றது 43, திருநாராயணபுரத்தில் நாலூராச்சான் பிள்ளை ஆயிக்கும் திருமலையாழ்வாருக்கும் ஈடு ஸாதித்தல் 43; நம்மாழ்வாரை ஆழ்வார் திருநகரியில் ப்ரதிஷ்டிப்பித்தல் 46; திருமலையாழ்வாரும் விளாஞ்சோலைப் பிள்ளையும் 47; | 39 |
| அழகியமணவாளப் பெருமாள் நாயனார் (மாமுனிகள்) திருவவதாரம் | 50 |
| கோயில் வ்ருத்தாந்தம்-நம்பெருமாள் மீண்டெழுந்தருளல் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருமலை | 54 |

யாழ்வாரை ஆச்ரயித்தல் 56; உடையவர் திருவடிகளில் ஈடுபடுதல்; யதிராஜவிம்சதி விண்ணப்பம் செய்தல் 58; ஆசாரியரான பிள்ளையுடன் அநுபவங்கள்; பிள்ளையின் சரமதியமனம் 59-6; பிள்ளையின் தன்னேற்றம் 63.

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் வைபவம். வான மாமலை அழகியவரதர் நாயனாரை ஆச்ரயித்தல் 64; நாயனார் திருவரங்கம் எழுந்தருளல் 65; நம்பெருமாளை ஸேவித்தல்; காலக்ஷேபபரராக எழுந்தருளியிருத்தல் 72. 64

நாயனார் திருவேங்கடயாத்திரை எழுந்தருளல்-திருக் கோவலூர், திருக்கடிகை மங்களாசாஸநம், 73-74; திருமலைக்கெழுந்தருளி அப்பனை மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டு பெருமாள் கோவில் எழுந்தருளு தல் 75-78. ஸ்ரீபெரும்பூதூருக்கெழுந்தருளல் 79; உடைய வரிடம் ஸ்ரீபாஷ்யத்துக்கநுமதி பெறுதல் 80; 73

பெருமாள் கோவிலில் ஸ்ரீபாஷ்யம் கேட்டது-கிடாம்பி நாயனாருக்கு அவதாரரஹஸ்யப்ரகடநம் 82; ஸ்ரீபாஷ்ய ப்ரவசநமும கோயிலேற எழுந்தருளலும் 82-83. 80

நாயனார் ஸந்யாஸாச்ரமம் ஸ்வீகரித்தல்-நம்பெருமாள் ஜீயருக்குத் திருநாமம், திருவாராதனம், மடம் ப்ரஸாதித்த தல் 85, மடத்தை செப்பனிட்டு 'திருமலையாழ்வார்' அமைத்தல் 86. 84

பல சிஷ்யர்கள் ஜீயரை ஆச்ரயித்தல்-திருமஞ்சநம் அப்பா, பட்டர்பிரான் ஜீயர் ஆச்ரயித்தல் 86-87; அப்பா குமாரத்தி ஆச்சியார் ஆச்ரயித்தல் 90; சிங்கரையர் வ்ருத்தாந்தம் 92. 86

கந்தாடையண்ணன் கண்டஸ்வப்நம் 94; அண்ணன் ஜீயா திருவடிகளில் ஆச்ரயிக்க ஒருப்படல் 96; ஸ்வஸம்பந்தி களுடன் மடத்துக்கெழுந்தருளல் 98; அசட்டாச்சான 99; அண்ணன் ஜீயரைஸேவித்தலும் ஸமாச்ரயணம் பெறு தலும் 99-102; அப்பாச்சியாரண்ணாவை ஜீயர் அபிமா னித்து வானமாமலை ஜீயரிடம் ஆச்ரயிப்பித்தல் 102; ஆண்ட பெருமாளை அண்ணனுக்காக்கியது 104, 94

ஜீயர் நாயனார் (பூர்வாச்ரமத்திருப்பேரன்) திருவவதாரம் 105
ஜீயர் ஆழ்வார் திருநகரி எழுந்தருளல் 106
ஜீயர்-திருநாராயண புரத்தாயி ஸமாகமம் 109
ஆழ்வார் திருநகரியில் ஜீயர் மடம் திக்கிறையானது 111
திருக்குருகூரிலும் திருக்குறுங்குடியிலும் கைங்கர்யங்கள் 112

கோயிலேற மீண்டுமெழுந்தருளல் 113
எறும்பியப்பா ஜீயரை ஆச்ரயித்தது 114
ஜீயர் திநசர்யை 117
ஸப்தகோத்ர வ்யவஸ்தை 124
அப்பிள்ளை, அப்பிள்ளார் ஜீயரை ஆச்ரயித்தல் 125
அவதார ரஹஸ்ய ப்ரகடநம் உத்தம நம்பியைப் பெரிய பெருமாள் திருத்துதல் 127; சடகோபக்கொற்றிக்கு காட்சி 128 127
ஜீயர் வ்யாக்யாநங்கள் அருளிச் செய்தது அநுஷ்டான விசேஷங்கள், சம்முள் விரோதப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர் களைத் திருத்தியது 131, கிழட்டணிலாகிலும் மாமேறும் 132; அம்மையாருக்கு ஸ்வரூபசிக்ஷை 132; ஸ்ரீவைஷ்ணவர் தனி வழிவரக் கூடாது 133; ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் காட்டித் தருதல் 135 129
வேடலப்பையைக் கொண்டு குத்ருஷ்டி நிரஸநம் 137
ப்ரதிவாதி படங்கரமண்ணு வ்ருத்தாந்தம் 139; திருமலையில் அண்ணு ஜீயர் வைபவம் கேட்டல் 140, பெருமாள் தீர்த்தம் அவ்வைபவத்தால் பரிமளம் பெறுதல 141, கோயிலுக்கெழுந்தருளி ஜீயரை ஆச்ரயித்து வாழுதல்142. 139
ஜீயர் மீளவும் திருமலை யாத்திரை செய்தருளல் 145
பெருமாள் கோயிலின் தேவப்பெருமாளை ஸேவித்தல் 145; வைசாக உத்ஸவம் ஸேவித்தல் 147; எறும்பியப்பா ஜீயரை ஸேவித்தல் 147; அப்பாச்சியாரண்ணவை கச்சியில நிதய வாஸம் பண்ண நியமித்தல் 149; திருக்கடிகை. எறும்பி வழியாக திருமலை எழுந்தருளல் 150. மங்களாசாஸநம் 152; திருமலையில் கோயில் கேள்வி ஜீயரை நியமித்தல் 155 திருப்பதி மங்களாசாஸநம் 158; திருவெவ்வுளூர் திருவல்லிக்கேணி, பெருமாள் கோவில், மதுராந்தகம், திருச்சித்திரகூடம் ஸேவித்தல் 158 திருமங்கையாழ்வாரைத் திருவடிதொழுது வடிவழகை வர்ணித்துப் பாசுரமருளியது 159; கோயிலேற எழுந்தருளல் 160.
அப்பாச்சியாரண்ணு பெருமாள் கோவில் எழுந்தருளல் 160
அண்ணுவுக்கு அர்ச்சைத்திருமேனி அநுக்ரஹம் 161; திருவாரதனமாக என்னைத் தீமனங்கெடுத்தாரை அநுக்ரஹித்தல் 162.
ஆசார்யஸிம்ஹாஸங்களில் முதலிகள் அபிஷேகம் 162
எறும்பியப்பாவை கோயிலுக்கழைத்தல் 163

நம்பெருமாள் ஜீயரை பகவத் விஷய காலக்ஷேபம் ஸாதிக்க நியமித்தல். பகவத் விஷய கால க்ஷேபம், சாற்றுமறை 170 ஸ்ரீசைலேச தயாபாத்ர தனியனவதாரம் 171, வாழி திருநாமத்துக்கு நியமனம் 171; திவ்யதேசங்களுக்கு நம்பெருமாள் நியமனம் 172; அண்ணன் திருமாளிகையில் ஒரு அதிசயம் 173; திருவேங்கடமுடையான் இந்தத்தனியனை ப்ரவர்திப்பித்தது 174; திருமாலிருஞ்சோலை அழகர் ப்ரவர்த்திப்பித்தது 176; முதலிகள் ஜீயரை புகழ்தல் 1 7 ஜீயர் வடதேச திருப்பதிகளை த்யாநித்தல் 178; முதலிகள் ஜீயருக்காக யாத்திரை செய்தல் 180; பத்ரிகாச்ரமத்தில் நிகழ்ந்த அதிசயங்கள் 18'-182, ஸ்ரீசைலேச தனியனவதரித்த காலம் கூறுதல் 185· கோயில் நிகழ்ச்சிகள் 188; திருமலையில் அதிசயங்கள் 189. 167

கந்தாடையண்ணன் திருமலைக்கெழுந்தருளல் 90, அயோத்யை ராமாநுஜய்யங்கார் அண்ணனை ஆச்ரயித்தல்; 192; அண்ணன் மீளவும் கோயிலுக்கெழுந்தருளல் 193; வழியில் காஞ்சியில் பேரருளாளனுக்கு சாலைக் கிணற்றி விருந்து திருமஞ்சன கைங்கர்யம் 194; கந்தாடை ராமாநுஜ அய்யங்கார் காஞ்சியில் செய்த கைங்கர்யங்கள் 195; "அண்ணன் ஜீயர்-ஜீயரண்ணன்" 195; எறும்பியப்பாவுக்கு திருவடி நிலைகளை ப்ரஸாதித்தல் 197; 190

வானமாமலை ஜீயர் அரங்கநகரப்பனைத் திருவாராதனமாகப் பெறுதல் 197

ஸ்ரீ கோவிந்ததாஸரப்பரின் மதுரகவி நிஷ்டை 198

ஜீயர் ஆழ்வாரை ஸேவிக்க திருநகரிக்கு எழுந்தருளல் 199

மஹாபலிவாணநாதராயன் ஜீயரை ஆச்ரயித்தது 200; புளியமரத்துக்கு மோக்ஷமளித்தல் 201; கோயில் அநுபவமில்லாமைக்கு வருந்துதல் 202; ஆழ்வார் வாழி திருநாமம் அருளியது 203; ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான திவ்யதேசங்களை ஸேவித்து மீண்டும் கோயிலெழுந்தருளல் 204; அழகர் கோவிலுக்கு நிர்வாஹகராக ஒரு ஜீயரை அனுப்புதல் 205.

முதலிகளைக் கொண்டு திவ்யதேச கைங்கர்யங்கள் செய்தல் 206

பெரியாழ்வார் திருமொழிக்கு வ்யாக்யானமருளுதல் 207

கந்தாடை நாயன் வ்யாக்யானத்தை ஸேவித்தல் 208

ஆசார்ய ஹ்ருதயத்துக்கு வ்யாக்யானமிடுதல் 209

ஏட்டூர் சிங்கராசாரியர் ஜீயரை ஆச்ரயித்தல்-அஷ்டகோத்ர நிபந்தனை 209

ஜீயரின் அடைஷ்திக்கஜூங்கள் முதலிகளுக்கு வருத்த கைங்கர்யங்கள் 210; 210
ஜீயர் நோவு சாந்தி ஸஞ்சாரக்ஷமரன்றியிருத்தல் திருநாடு அடைய த்வரித்தல் 215. 214
அண்ணராய சக்ரவர்த்தியை பட்டர்பிரான் திருவடிக் காளாக்குதல் 218
ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளியது; சரம தசையில் நாலாயிரம் கேட்டருளல் 220; திருநாடெழுந்தருளல் 221 சரமகைங்கர்யங்கள் 222; திருப்பள்ளிப்படுத்தல் 224; 220
பின்னர் நடந்தவை. ஜீயர் நாயனுர் ஸ்ரீபாஷ்யம், பகவத் விஷயம் ஈடு பெறுதல 226; வானமாமலை ஜீயர் கோயி லுக்கெழுந்தருளல் 227; பட்டர்பிரான் ஜீயர் அந்திமோ பாய நிஷ்டை அருளியது 227; பட்டர்பிரான் ஜீயர் சிஷ்ய ரான தோழப்பர் திருநாராயணபுரத்தில் திருநந்தவன கைங்கர்யம் பண்ணுதல் 228; எறும்பியப்பாவின் ஆர்த்தி 229; ஸ்ரீபாதத்து முதலிகள் தந்நிஷ்டர்களாய் வாழ்ந்தது 230. 226
வாழி திருநாமம், நான்பாட்டு, மங்களம் 231
பிள்ளைலோகம் ஜீயர் வைபவம் 232

## அநுபந்தம்

ஸ்ரீசைலேச மந்த்ர ப்ரபாவம் 233
ஸ்ரீசைலேச தனியனுரை: பிள்ளைலோகஞ்சீயர் உரை 233; ஸ்ரீ காஞ்சி ப்ர.அண்ணங்கராசார்ய ஸ்வாமி விளக்கம் 237 ஸ்ரீகாரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி வழங்கும் செம்பொருள் 240
ஸ்ரீசைலேசாஷ்டகம் 241
ஸ்ரீசைல வைபவம் 242
ஜீயர் திருவடிகளே சரணம் - ஸ்ரீ நல்லான் ராமகிருஷ் ணய்யங்கார் ஸ்வாமி 245
மணவாள மாமுனி விஷயமான ஸ்தோத்ரங்கள் 251
பாதாதிகேச மாலை 252; கண்ணிநுண்சிறுத்தாம்பு 254; சம்பிரதாய சந்த்ரிகை 256; வரவரமுநி அஷ்டகம் 260; வரவரமுநி ஸுப்ரபாதம் 261; ப்ரபத்தி 262; முக்தகங்கள் 264




**பொன்னடியாம் செங்கமலம்**


மணவாளமாமுனிகளின் பொன்னடிகள் (ஸ்ரீரங்கம்







மணவாள மாமுனிகள் ஆழ்வார் திருநகரி



[illegible]

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே வரவரமுநயே நம:

# யதீந்த்ரப்ரவண ப்ரபாவம்

**ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |**
**யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||**
**ஸ்ரீ பட்டாரி குரோர்திவ்ய ஸ்ரீபாதாப்ஜ மதுவ்ரதம் |**
**ஸ்ரீமத்யதீந்த்ரப்ரவணம் ஸ்ரீலோகாசார்யமுநிம் பஜே ||**

**குலநாதனெங்கள் மணவாளயோகி குணக்கடலைப்**
**பலநாளு மண்டிப்பருகிக் களித்திந்தப் பாரினுள்ளே**
**உலகாரியன் முனிமேக மிந்நாளென்னுள்ளங் குளிர**
**நலமானசீர்மை மழைநாளும் பொழிந்ததிந்நிலத்தே**

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவந காமனாய்க்கொண்டு கலிகாலத்திலே பராங்குசபரகால பட்டநாதாதிகளான ஆழ்வார்களையும் நாதயாமுநயதிவராதிகளான ஆசார்யர்களையும் அவதரிப்பித்தருளி தந்முகேந லோகத்தை ரக்ஷித்தருளின படியைப் பின்புள்ளாருமறிந்து உஜ்ஜீவிக்கும்படி முன்புள்ள ஆசார்யர்கள் குருபரம்பராப்ரபாவ ப்ரமுகங்களான ப்ரபந்தங்களாலே ப்ரதிபாதித்து உபகரித்தருளினார்கள். அவ்வளவன்றிக்கே விசேஷித்து அசேஷசிதசித்வஸ்து சேஷியான அந்த ச்ரிய:பதியினுடைய நியோகத்தாலே சேஷாவதாரமாக வவதரித்து பஹுமுகமான தம்முடைய உக்த்யநுஷ்டானங்களாலே ஸர்வசேதனரையும் ரக்ஷித்துப்போந்த யதீந்த்ரப்ரவணரான ஜீயருடைய ப்ரபாவத்தை அனைவருமறியும்படியாக அஸ்மதாசார்யருடைய ப்ரஸாதமடியாகவும் கந்தாடை நாயனுடைய ப்ரஸாதமடியாகவும் அறிந்தவளவை ப்ரதிபாதிக்கிறது இப்ப்ரபந்தத்தாலே.

இதுதான், பூர்வோக்தமான ப்ரபந்தங்களுக்கும் சேஷமானதாயிருக்கும். இனி இவ்வைபவங்களெல்லாவற்றையும் உஜ்வலமாக்கும்படியான ஸத்ஸம்ப்ரதாய ஸம்யுக்ததயா வந்த வைபவத்தை முந்துறப் பேசாதே நின்று கொண்டு, அநந்தரம் அவருடைய அத்புதமான அவதார சரிதங்களையெல்லாம் அடைவே பேசித்தலைக் கட்டுவதான விதில்

(1) **ஸ்ரீவத்ஸசிஹ்ந பவநஸரோஜ ஸேவாம்ருதைக**
**ரஸிகாந் கருணைகபூர்ணாந் |**
**பட்டார்யவர்ய நிகமாந்தமுநீந்த்ர லோககுர்வாதி தேசிகவராந்**
**சரணம் ப்ரபத்யே ||**

என்று சுத்தஸம்ப்ரதாயப்ரவர்த்தகத்வம் நஞ்சியர்க்கும் நம்பிள்ளைக்குமேயுள்ள தொன்றாகையாலே, அந்த நம்பிள்ளையடியாக வந்த ஆசார்யர்களுடைய சுத்தஸம்ப்ரதாய பரம்பராநுபவமானது இவர்க்கு வந்தவாற்றை ப்ரதிபாதிப்பதாக ப்ரதமம் பிள்ளைலோகாசாரியருடைய வைபவத்தை ப்ரதிபாதிக்கிறது எங்ஙனேயென்னில்;

**கோதிலுலகாசிரியன் கூரகுலோத்தமதாதர்**
**தீதில் திருமலையாழ்வார் செழுங்குரவை மணவாளர்**
**ஓதரியபுகழ்த்திருவாய்மொழிப்பிள்ளை தாதருடன்**
**போத மணவாளமுனி பொன்னடிகள் போற்றுவனே**

என்கிறபடியே ஆழ்வாருடைய அவதாரமென்னலாம்படியான வைபவத்தையுடைய நம்பிள்ளை, ஒரு நாள் நித்யப்படி காலக்ஷேபம் நிறைவேறி மத்யாஹ்நகாலத்திலே தனியே எழுந்தருளியிருக்க, திருவடிகள் ஸம்பந்தியான வடக்குத் திருவீதிப்பிள்ளை திருத்தாயாராயிருக்கிற அம்மி தண்டனிட்டு ஸமர்ப்பித்து நிற்க, அவளைக் கடாக்ஷித்தருளி "உம்முடைய க்ருஹயோகக்ஷேமங்கள் என்?" என்று கேட்டருள; "என்ன விண்ணப்பஞ் செய்யப் போகிறேன்? ஒரு பேய்ப்பிள்ளையாயிருக்கிறதே" என்ன, "அதெப்படி?" என்ன, "ஒரு பெண்ணை விவாஹஞ் செய்வித்தீரே; அந்தப் பெண் பெரியவளானாள்; ஸஹசயனகல்யாணம் பாலே பண்ணி சயிக்கவிட, உடனே பிள்ளை முறையிட, 'அதென்?' என்று எல்லாரும உள்ளே புக, உடம்பெல்லாம் புழுக்க நீர்சொரிய விம்மியழுது நிற்க, "இதேது பிள்ளாய்?" என்று கேட்டேன்; 'அம்மா! இதுவொரு ஆடுகிற பாம்பாயிருந்தது; பயப்பட்டேன்; இன்னுமப்படியேயிருக்கிறது" என்ன, "இதுவுமொரு புதுமையோ"வென்று பெண்ணை அப்பாலே போக விட்டேன்.

---

(1) கூரத்தாழ்வானே! தேவரீருடைய திருவடித்தாமரைகளில் கைங்கர்யமாகிற அமுதத்திலே மிக்கரஸிகர்களாய், கருணைமிக்க ஆழ்வான் பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, முதலான மஹாசாரியர்களை சரணம் பற்றுகிறேன்.

இன்னுமொருநாள் அந்தப் படியேயாச்சுது'' என்று வ்யாகுலப் பட, பிள்ளையும் சிரித்தருளி, "அதற்கு உமக்கென்?'' என்ன, ''இப்படியருளிச் செய்யுமோ? பெண் வாழ வேண்டாவோ? வம்சத்துக்குப் பிள்ளை வேண்டாவோ?'' என்று திருவடிகளிலே விழுந்து சோகிக்க, பிள்ளையும், ''அம்மீ! எழுந்திரு: நீ சோகிக்க வேண்டா; மறுகட்டுப்பெண் ருது ஸ்நாதையாய் வருகிறபோது இது வழியாயழைத்து வா'' என்று அருளிச்செய்து விட அவளும் அப்படியே அழைத்து வந்து விட, திருவோலக்கத்திலே பிள்ளையும் அந்தப் பெண்ணைக் கிட்டவழைத்தருளி அவள் வயிற்றைத் தம் திருக்கைகளாலே ஸ்பர்சித்து, "நம்மைப் போலிருப்பானொரு பிள்ளையைப் பெறக் கடவாய்'' என்று ஆசீர் வாதம் பண்ணிவிட்டு, அற்றைஞாயிறுபாடு வடக்குத் திருவீதிப் பிள்ளையையழைத்தருளி, ''உம்முடைய பயமுந்தீர்ந்தது, விஹித விஷயவைராக்கியத்திற்குங் குறைவு வராது; ஆனால் லோக மரியாதைக்கு நாம் சொன்னதற்காக இன்றிராக் கூடியிரும்' என்றருளிச்செய்ய; அப்படியே கூடியிருந்தவளவில் ஆச்சியுங்கர்ப் பந்தரித்து லோகவிலக்ஷணமாய் "தத ஸ்ச த்வாதசேமாஸே'' என்கிறபடியே பன்னிரண்டாம் மாஸத்திலே ஐப்பசியில் திருவோண நக்ஷத்திரத்திலே பிள்ளை திருவவதரிக்க, அவருக்குப் பன்னிரண்டாம் நாள் நாமகரணத்திலே "லோகாசார்யர் பிள்ளை'' என்று நம்பிள்ளையுடைய திருநாமஞ்சாத்தி வளர்ந்து வந்து அப்தபூர்த்தி உத்ஸவத்திற்கு பெருமாளை ஸேவிப்பிக்கைக்குத்தாக நம்பிள்ளை முதலான பெரியோர்களெல்லாரும் மங்களவாத்தியங் களுடனே திருப்பல்லக்கிலே யெழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு சென்று ஸேவிக்க, நம்பெருமாளும் போரவுகந்தருளி தீர்த்தம், ஸ்ரீசடகோபன், சந்தனம், ஸுகந்தம், திருமாலை ப்ரஸாதங்களும் பட்டுச் சிற்றாடையும் ப்ரஸாதித்தருளி, நம்பிள்ளையை, அர்ச்சகமுகேந "உம்மைப் போலேயொரு பிள்ளை கொடுத்தீரே; இனி நம்மைப் போலேயொரு பிள்ளை கொடும்'' என்று நியமிக்க, ''நாயன்தே நாயன்தே'' என்று ஓமறைய, அப்படியே அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவவதாரஞ் செய்தருளினார்.*

---

*இங்கு அச்சிடப் படுவது தமிழ்லிபியில் 1907ல் சென்னை ஆனந்தா பிரஸ்ஸில் அச்சிட்ட ப்ரதியைத் தழுவியது. 1909ல் சென்னை ஸ்ரீநிவாஸா முத்ராக்ஷர சாலையில் ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையார் வெளியிட்டுள்ள தெலுங்கு லிபியில் பதிப்பிலுள்ள பாடாந்தரம்:—

ஒருநாள் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை திருமாளிகைக்கெழுந்தருள, அங்குள்ளாரெல்லாரும் நம்பிள்ளை திருவடிகளிலே வந்து ஸேவிக்க, அப்போது வடக்குத்திருவீதிப்பிள்ளை தேவிகள் ஆர்த்ரவஸ்த்ரததுடனே தண்டனிட்டு நிற்க, நம்பிள்ளை அவளருகு நிற்கிற ஸ்த்ரீ ஜனங்களைப் பார்த்து "இந்தப் பெண் ஆர்த்ரவஸ்த்ரத்துடனே நிற்பானென்?" என்ன, அவர்கள் சொன்னபடி; "நாலுநாள் தூரஸ்தையாயிருந்து இப்போது தீர்த்தமாடி வந்து தேவரீர் திருவடிகளிலே ஸேவிக்கிறுள்" என்ன. அது கேட்டு நம்பிள்ளையும் உகந்து அவளை "பெண்ணே! இங்கே வா" என்றழைத்து திருக்கையாலே அவளுதரத்தை ஸ்பர்சித்து "நம்மைப் போலொரு பிள்ளையைப் பெறுவாயாக" என்று திருவுள்ளம் பற்றியருளினர். அத்தைக் கண்டு வடக்குத்திருவீதிப்பிள்ளையும் "நமக்குக்குமாரனுண்டானல் ஆசார்யன் திருவுள்ளத்துக்கு உகப்பாம்" என்றிருந்து ததநுகுணமாக வர்த்திக்க, தத்ஸம்வத்ஸரத்தில் வடக்குத்திருவீதிப்பிள்ளை தேவிகள் கர்ப்பவதியாய் "ததஃச த்வாதசேமாஸே" என்கிறபடியே பன்னிரண்டாம் மாஸத்தில் க்ரோதந வருஷம் ஐப்பசியில் திருவோணத்தில் ஒரு குமாரர் திருவவதரிக்க ஸூதிகா சௌச நிவ்ருத்தியான பன்னிரண்டாம்நாள் நாமகரணத்திலே அக்குமாரருக்கு **லோகாசாரியர்** என்று ஸ்வாசாரியரான நம்பிள்ளையின் திருநாமம் சாத்தியருளினர்.

பிள்ளையும் அது கேட்டு, வடக்குத் திருவீதிப்பிள்ளையையழைத்து, "க்ருஷ்ணரே! நாம் பெருமாளின் திருநாமம் சாத்துவதாக உத்தேசித்திருக்க, நீர் நம்மைக் கேளாமல் இப்படிச் செய்யவாமா?" என்ன, அவரும் நடுங்கி, பயப்பட்டு, நிருத்தரராய் நிற்க, அவ்வளவிலே, முதலிகளெல்லாரும் "தேவரீர் திருநாமம் சாத்துகையிலுள்ள ஆதரத்தாலே செய்தாரித்தனை; இன்னுமொரு குமாரர் உண்டாம்படி ஆசீர்வதித்தருள வேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் உகந்து, அப்படியே, "ஸத்புத்ரன் இன்னுமொருவன் உண்டாக" என்று ஆசீர்வதித்து விட, வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு அப்படியே பின்னையுமொரு குமாரர் திருவவதரிக்க, பிள்ளையும் அதுகேட்டு ஸந்துஷ்டராய், பத்துநாளுங் கடந்த இரண்டாம் நாள் அவரை "அழகிய மணவாளப் பெருமாள் நாயனர்" என்று நம்பெருமாள் திருநாமஞ் சாத்தியருளினர்.

---

இப்படிப்பட்ட பெருமையையுடையவருடைய அருளாலே அவதரித்தவராய் அவதார விசேஷமாயிருந்துள்ள பிள்ளைலோகாசாரியரும், அவருடைய அருளே தாரகமாக வளர்ந்த அவர் திருத்

தம்பியரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும், தத்வ ரஹஸ்யந் தொடங்கி அநேகப்ரபந்தங்கள் இட்டருளி ஸ்வரூப வர்த்தகராய்

தம்பியுடன் தாசரதியானானுஞ் சங்கவண்ணா
நம்பியுடன் பின்னடந்து வந்தானும்—பொங்குபுனல்
ஓங்கு முடும்பையுலகாரியனும் அறந்
தாங்கு மணவாளனுமே தான்

என்னும்படி ஸௌப்ராத்ரத்தையுடையராய் யெழுந்தருளியிருக்கிறகாலத்திலே ஸர்வஜ்ஞரான பிள்ளைலோகாசாரியர் திருவடிகளிலே ஸாத்விகராயிருப்பார் பலரும் ஆச்ரயித்து ஸத்ஸம்பந்தத்தை யுடையராய் ''ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:'' என்று ஆநந்த நிர்ப்பராயிருந்தார்கள்.

அவர்களில் கூரகுலோத்தமதாஸநாயனும், மணப்பாக்கத்து நம்பியும் கொல்லிகாவலதாஸரான அழகியமணவாளப்பெருமாள் பிள்ளையும், கோட்டூரிலண்ணரும் விளாஞ்சோலைப்பிள்ளையும், ஸாத்விகைகளில் திருமலையாழ்வார் இருத்தாயார் தொடக்கமான சில அம்மையார்களும், திருவடிகளிலே ஆச்ரயித்தவன்று தொடங்கி அந்தரங்க ஸேவை பண்ணிக்கொண்டு அந்தேவாஸிகளாய் அகலாமலிருந்தார்கள். இப்படி இவர்களாலே ஸேவ்யமாநராயிருக்கிற பிள்ளை, பின்பு தம்முடைய க்ருபையாலே இவர்களையழைத்து அந்தரங்கமாகக் திருவாய்மொழியாகிற திவ்யப்ரபந்தத்துக்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி முப்பத்தாறாயிரப்படி, என்கிற வியாக்கியானங்கள் ப்ரவ்ருத்தமானதற்குக் காரணம் இன்னபடியும் இன்னபடியுமென்று அருளிச் செய்தருளினார்.

அதாவது— த்ராவிடவேதஸாகரமான திருவாய்மொழிக்கு நிபுணராய் பூர்விகராயுள்ளவரனேகர் ஸ்வஸ்வபுத்திவிஸ்தாராநுகுணமாக லக்ஷணங்களுக்கு படிமாவென்றுகந்து வ்யாக்யானமிட்டு வைத்தார்கள். அவ்வளவேயன்றிக்கே இவற்றினுடைய ஸஹஸ்ரசாகோபநிஷத் ஸமாகமத்வம் ப்ரகடிதமாம்படி ஒரு ப்ரபந்தமிட்டருளும்படி திருக்குருகைப்பிரான் பிள்ளானை எம்பெருமானார் கடாக்ஷிக்க, அவரும் அவதாரவிசேஷமென்னும்படி ஆழ்வார் திருவுள்ளத்தை அடியொற்றிக் கொண்டு; ஆறாயிரப்படி என்கிற வியாக்யானஞ் செய்தருளினார்.

பின்பு, அவரும் மற்றுமுள்ள பெரியோர்களும் "இன்னம் இவ்வர்த்த விசேஷங்களுங் கூட்டி அனைவர்க்கும் ஸுக்ரஹமாக அர்த்தமாம்படி ஒன்பதினாயிரப்படியாக ஒரு ப்ரபந்தமிட்டு வையும்" என்று பட்டருக்கு நியமித்து வைக்க; அவரும் அத்தைத் திருவுள்ளத்திலே வைத்துக் கொண்டு மாதவர் என்னுந் திருநாமத்தையுடையராய், ஸகலசாஸ்த்ர வித்தமராய், ஸந்யஸித்து வேதாந்தி என்னுந் திருநாமத்தையுடையராய், பின்பு பட்டர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஸர்வஜ்ஞராய் திருவடிகளுக்கந்தரங்கராயிருக்க, இவரை பட்டர் "நம் ஜீயர்" என்று அபிமானித்துப் பெருமாளைத் தொழவெழுந்தருள, பின்னும் சில ஜீயர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் நிறைந்து நிற்க, பெருமாள் உகந்தருளி அர்ச்சகமுகேந இவரைக் கையைப் பிடித்து, "வாரீர நஞ்சீயரே!" என்று அருளப்பாடிட்டருளி "பட்டர் திருவுள்ளப்படிக்கு ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானஞ்செய்யும்" என்று நியமித்தருள ஆறாயிரப்படிக்கு கனகாபிஷேகமென்னும்படி ஒன்பதினாயிரப்படி செய்தருளினார். அன்று முதல் இவருக்கு நஞ்சீயர் என்று இதுவே திருநாமமாயிற்று.

பின்பு பட்டருக்கு ப்ராப்யபூமி அணித்தாக, நஞ்சீயர் சோகித்து சிந்தித்தபடி:—"நாம் வார்த்தக்யத்தையுடைந்தோம், ஸ்வாமி பட்டருக்குச் சிறுவயஸ்ஸாகையாலே தர்சநஸ்திதிக்குக் குறையில்லை, உத்தரோத்தரம் தழைக்குமென்றிருந்தோம்; அது போய் இப்படியாவதே!" என்று திருமுடி மோதி பட்டர் திருமுன்பே சென்று திருவடிகளைப்பிடித்துக்கொண்டு க்லேசிக்க பட்டரும் அவரைக்கிட்ட வரவழைத்தருளி "நீர் சோகிக்க வேண்டா; தர்சநப்ரவர்த்தகனாயிருப்பானொரு பிள்ளையைப் பெறுவீர்" என்றருளிச்செய்யக்கேட்டு ஜீயரும் ஸமாஹிதராய் திருவுத்தரீயத்தலைப்பை முடிந்துகொண்டு (பட்டர் திருநாடடைந்தவாறே) பட்டருடைய கைங்கர்யத்தை அதிவிஜ்ரும்பணமாக நடப்பித்தருளி, பின்பு ஒன்பதினாயிரப்படியை இன்னம் இருபத்திநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யானங்களுக்கு இடங்கொடுக்கத்தக்க அர்த்தபூர்த்தியுடனே பட்டோலை கொண்டு நிறைவேற்றி, இத்தை நல்லவோலைகத்திலே ஏறியருளப்பண்ணி அநேக முகமாக ப்ரவர்த்திப்பிக்கத் திருவுள்ளமாய் நல்ல வேளையை விசாரித்தருள;

அவ்வளவிலே "பருகை சக்ரவர்த்தி திருமகன் கோயிலருகே குடியிருந்து அந்வயத்தால் ஸத்வநிஷ்டராய், பண்டிதபாமரஸாதாரணமாக எல்லாரும் ஆதரிக்கும் படியான வைபவத்தையுடை

யராய் உபாதாநபரராய் தேவராஜர் என்றொருவருண்டு; அவரை யழைத்து அவருக்குபதேசித்து அவரைக்கொண்டு ஏறியருளப் பண்ணுவியும்" என்று ஸ்வப்நமாக; "இது ஆழ்வாருடைய நியமனம்" என்று உகந்தருளி, மறுநாள் "இப்படியொருவருண்டோ?" என்று அருகுநிற்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக் கேட்டருள, அவர்களும் உண்டென்று உடனே தேவராஜரை யழைத்து வந்து விட, ப்ரதமத்திலே *ஆழ்தல்வண்ணன் என்று கடாக்ஷித்தருளி ஒரு முறியைக் கொடுத்து எழுத்து எழுதிக் காட்டுமென்ன, அவரும 'நஞ்சீயர் திருவடிகளே சரணம், பட்டர் திருவடிகளே சரணம்'' என்று எழுதக்கண்டருளியிருக்க, தேவ ராஜரும், திருவடிகளைப்பிடித்துக்கொண்டு, "க்ருபைபண்ணியருள வேணும்" என்று விண்ணப்பம் செய்துகொள்ள; உகந்து க்ருபை பண்ணியருளி, திருவாய்மொழியினர்த்தத்தை ஸங்க்ரஹேண ஸாதித்தருளி, பட்டோலையையும் அலேகத்தையும் ஸாதித்தருளி "நன்றாக ஏறியருளப்பண்ணிக்கொண்டுவாரும்' என்று விடை கொடுத்தருள; அவரும் அக்கரைக்கெழுந்தருளுவதாகப் புறப்பட, ஆறுபெருவெள்ளப்பட நீந்தவல்லவராகையாலே ஒரு சாலைப் பிடித்துக்கொண்டு பட்டோலையும் அலேகத்தையும் திருமுடியிலே கட்டிக்கொண்டு நீஞ்ச, வெள்ளம் அதிகமாக, போரத்தளர்ந்து பட்டோலையும் அலேகமும் திருப்பரிவட்டத்துடனே †பெருக்கிலே விழுந்து விட, இவர் போரகலேசித்து நொந்து மெள்ள அக்கரைப் பட்டு, "ஆசார்யாபசாரம் வந்ததே?" என்று விழுந்து புரள. இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கண்டு தேற்றி இவர் திரு மாளிகையிலே சேர்க்க, தேவிகளும் கண்டு அநுசோகித்து இருவரு முபவாஸமாயிருக்க, "பெருமாளுக்குத் திருவாராதனமின்றிக்கே யிருக்கவொண்ணாது" என்று தேவிகளறிவிக்க, அப்படியாகவென்று கைங்கர்யத்தை நியமித்துத் தாமும் நீராடியருளித் திருமண்காப்பு சாத்திக் கொண்டு திருவாராதனத்துக்கு எழுந்தருளி உபக்ரமிக்க, அலஸையினாலே நித்ரைபகட்ட, அவ்வளவிலே கோயிலாழ்வாரிலே யிருக்கிற ஸ்ரீரங்கராஜர் திருவாய்மலர்ந்தருளி, "வாரீர்! தேவ ராஜரே! நீ சோகிக்க வேண்டா; ஸம்புடமேறியருளப் பண்ணும்; நாம் முன் நிற்கிறோம்" என்ன, "ஸ்ரிய:பதியாய்" என்று தொடங்கி, "விசேஷ கடாக்ஷம் பண்ணியருளினான்" என்னுமளவாக ஒரு ஞானையைப்ரஸாதிக்கப் பெற்றுத் தெளிந்து, ஞானை தெட்டுருவாயிருக்க அத்தை அப்போதே விளித்தருளி, திருவுள்ள முகந்து பெருமாளையமுது செய்தருளப்பண்ணித் தாமும் அமுது செய்தருளி ஸ்ரீகோசமேறியருளப்பண்ணத் தொடங்கி நிறை வேற்றி, ஸ்ரீகோசத்தைக் கொண்டு புறப்பட்டு 'ஜீயரை நண்டன்

ஸமர்ப்பித்து ஸ்ரீகோசத்தையும் ஸமர்ப்பிக்க, ஜீயரும் உகந்தருளி திருவுள்ளத்துக்குகப்பானபேரைக் கூட்டிக் கொண்டு கடாக்ஷித்தருள: தாம் ஸந்திக்தமாக வைத்தஓரோவிடங்களிலுள்ள வாக்யங்களும் அர்த்தங்களும் நன்றாக இசைந்திருக்கக்கண்டு எல்லாரும் உகந்து தேவராஜரை உள்ளேயழைத்தருளி, "இதென்ன அற்புதம்? இதென்ன சாதுர்யம்?" என்று கேட்க, அவர் இஸ்ஸந்நிதியினின்றும் புறப்பட்ட பிற்பாடு நடந்த செய்திகளையெல்லாம் நடந்தபடியே தப்பாமல் விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி, ஜீயரும் உகந்து எழுந்திருந்து தேவராஜரை "நம்பிள்ளையோ!" என்று கட்டிக்கொண்டு எல்லாருங்கூடி யெழுந்தருளி பெருஞ்செல்வத்தைத் திருவடிதொழுது நிற்க; தேவராஜருக்கு நம்பிள்ளை என்று அருள்பாடிட்டு தர்சநப்ரவர்த்தகத்வாபிஷேகம் பண்ணியருளி "உம்முடைய புத்திவிஸ்தாராநுகுணமாகத் திருவாய்மொழிக்கு வ்யாக்யானமாம்படி உபந்யஸித்து நம்மிராமானுசன் தரிசனத்தை வளர்த்துக்கொண்டுபோரும்" என்றுநியமித்தது. பட்டர் சரமகாலத்திலே தர்சநப்ரவர்த்தகருக்கென்று ஸாதித்திருந்த மோதிரத்தை நம்பிள்ளை திருவிரலிலேயிட அவரையெல்லாருங் கொண்டாடி ப்ரதிபத்தி பண்ணினார்கள். இப்படி தர்சநப்ரவர்த்தகராய் ஜ்ஞாநபக்திவைராக்யங்கள் இட்டு மாறினாற்போலே வடிவிலே தொடை கொள்ளலாம்படி அதிசயத்தையுடையராய், அத்புதவ்யாக்யானவைபவராய் எழுந்தருளியிருக்கிறபடிகளைக் கண்டு அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆச்ரயித்து, "நம்பெருமாள் கோஷ்டியோ? நம்பிள்ளை கோஷ்டியோ?" என்னும்படி ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்தியுடனே வாழ்நதருளுகிற காலத்திலேயுண்டான அப்ரதிமவைபவங்கள் அனேகமாயிருக்கும்.

இப்போது பெரியவாச்சான் பிள்ளைக்கு நம்பிள்ளை ஒன்பதினாயிரப்படியுடனே சில அர்த்தவிசேஷங்களைக்கூட்டி ப்ரஸாதிக்க, அவர் அன்றைக்கன்றுண்டாம் பட்டோலை கொண்டு எழுதி நிறைவேறின பின்பு எல்லாவற்றையுங்கொண்டு வந்து ஸமர்ப்பிக்கக் கடாக்ஷித்தருளி உகந்தருளிநல்ல அலேகத்திலே ஏறிபருளப்பண்ணி பின்னும் அநேக ஸ்ரீகோசங்களையுமுண்டாக்கி பஹுமுகமாக ப்ரவர்த்திப்பிக்கும்படி நியமித்தருளி அப்படியே நடவாநிற்கச் செய்தே;*

---

* உபதேசரத்தினமாலை 43ம் பாசுரத்தில் மணவாள மாமுனிகள் இந்த வியாக்யானமவரித்தபடியை, "நம்பிள்ளை தம்முடைய நல்லருளால் ஏவியிட பின் பெரியவாச்சான் பிள்ளையதனால்—இன்பாவரு பத்தி மாறன் மறைப்பொருளைச் சொன்னது இருபத்திநாலாயிரம்" என்றருளியுள்ளார். அதனால் என்பதற்கு பிள்ளைலோகம் ஜீயர் "ஆசார்ய நியமனத்தைப்பற்ற; இதனால் வ்யத்நத்தாலே செய்த நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையையும் வ்யாவர்த்திக்கிறது" என்று வியாக்கியானமருளியுள்ளார்.

ஐயரையும் (வடக்குத்திருவீதிப்பிள்ளை) சிறியாழ்வானப் பிள்ளையையும் (ஈயுண்ணிமாதவர்) அழைத்து "ஒன்பதினாயிரப்படி வாசியுங்கோள்" என்ன; பெரியவாச்சான்பிள்ளையும் "அடியேனுங் கூட ஸேவித்துவருகிறேன்" என்ன, "ஆனால் பெருக்காம்" என்றருளிச் செய்து உகந்து ஸாதித்தருளி; அன்றைக்கன்றுடம் ஸாதித்த வர்த்தத்னத ஸ்வார்த்தமாகப் பட்டோலைகொண்டு ஐயர் (வடக்குத் திருவீதிப்பிள்ளை) சேர்த்துக் கட்டிவைக்க; ஒருநாள் நம்பிள்ளையை அமுதுசெய்தருள விண்ணப்பஞ்செய்ய; உடனே புறப்பட்டருளி தாமே திருவாராதனஞ்செய்கிறோமென்று முயன்றவளவிலே பட்டோலைக்கட்டைக்காண, ஒரு ஓலையை வாங்கி வாசித்தருளி, "இதென்னன் புது?" என்று கேட்க, ஐயர், "தேவரீர் ஸாதித் தருளின அர்த்தத்தை விஸ்மரியாமைக்குக் குறிப்பாக இட்டுவைத்தேன்" என்று விண்ணப்பஞ்செய்ய; "ஆகில் திருவாராதனம் நீரே செய்யும்" என்று நியமித்து பட்டோலைக்கட்டையிறக்கி நெடும்போது சோதித்து, பெரியவாச்சான்பிள்ளையையும் சிறியாழ்வானப்பிள்ளையையும் 'நீங்கள் இந்தவிரகைப் பார்துக் கொண்டிருங்கோள்' என்று சடக்கெனவமுதுசெய்தருளித் தாமுமங்கே யெழுந்தருளி பின்னும் நெடும்போது கடாக்ஷித்தருளி, "யானைக் கோலஞ்செய்தாப்போலிருக்கிறது" என்று ஒருவர்க்கொருவர் அருளிச்செய்து கொண்டு உகந்திருக்கச் செய்தே நம்மையரையழைத்தருளி, "நீர் இப்படிச் செய்ததென்? ஆச்சான்பிள்ளை பண்ணலாமோ? நாமும் பண்ணுவோமென்று ஆக்ரஹித்துச் செய்தது போலேயிருக்கிறது' என்று பிள்ளை சீறியருள, ஐயர் நடுநடுங்கி சோகித்து மோஹித்துத் தெளிந்து "ஜீயா! அடியேன் அப்படிச் செய்திலேன்; விஸ்மரித்தால் பார்த்துக்கொள்ளச் செய்தேன்" என்ன, "அதற்கு இருபத்திநாலாயிரப்படியுண்டே," என்ன, "அவிவேகம் வந்தது" என்று திருவடிகளிலே விழ, "க்ஷமித்தோம்" என்றருளிச்செய்து, "நீர் ஒரு அவதாரவிசேஷமென்றிருக்கிறோம்; நாம் ஜீயர் ப்ரஸாதமாகச் சொன்ன அர்த்தத்தில் ஒரு ச-து-போடாமல் எழுதினீர்; உம்முடைய ஸாமர்த்யத்தை என்னென்று சொல்லுவோம்?" என்று மிகவும் ப்ரீயப்பட்டு, "மாதவருக்கு ஓர் திசயம் வேணும்" என்று திருவுள்ளம் தோன்ற "நமக்கு ப்ராணஸுஹ்ருத்தாய், ஜீயருடைய பூர்வாச்ரமத்தின் திருநாமத்தையுடையராய் நமக்கு அபிமதராயிருப்பாரொருவராகையாலே அவரைக்கொண்டு இத்தை ப்ரவர்த்திப்போம்" என்ன ஐயரும் மிகவுமுகந்து "அப்படியே செய்தருளவேணும்" என்று தீர்க்கப்ரணாமம் பண்ண, உடனே பட்டோலைக்கட்டையெடுத்துச் சிறியாழ்வானப்பிள்ளை கையிலே ப்ரஸாதித்தருளி, "இத்தை

நாலைந்து அலேகத்திலே ஒரு ஊர்த்வமாம் படிபண்ணி இத்தை பஹுமுகமாகப் ப்ரவர்த்திப்பியும்'' என்றை நியமித்தருள; 'அதற்கு அடியேன் வல்லேனே? அதிகாரங்கிடைக்குமோ?'' என்றாற்போலே சில விண்ணபஞ்செய்ய, ''அது உமக்கு பரமோ? ஜீயர்கடாக்ஷம் முன்நிற்கும் திருநாமமுடையீரன்றோ? ஒரை திவ்ய முண்டு—கேளும், துன்னு புகழ்க்கந்தாடைத் தோழப்பர் ஸ்வப்நத் திலே பேரருளாளப் பெருமாள்,

**ஜகத்ரக்ஷாபரோநந்தோ ஜநிஷ்யத்யபரோமுநி: |**
**ததாச்ரயாஸ்ஸதாசாரா ஸாத்விகாஸ்தத்வதர்சிந: ||**

[உலகத்தைக் காப்பாற்றுவதில் ஊற்றமுடைய திருவனந் தாழ்வான் [ராமாநுஜமுநிவராக மட்டுமன்றி] மற்றொரு முநிவ ராகவும் அவதரிக்கப் போகிறார். [அப்போது] அவரை ஆச்ரயிக்கு மவர்கள் ஸதாசாரமும் ஸத்துவ குணமும் தத்துவஜ்ஞானமும உடையராயிருப்பா.] என்று அருளிச் செய்திருப்பதுமுண்டு, திருவனந்தாழ்வான் எம்பெருமானாருடைய அவதாரமானாப் போலே இன்னமொரு அவதாரஞ்செய்யப் புகுகிறார் அவர் முப்பத்தாறாயிரப் பெருக்கராய் இத்தை ப்ரவர்த்திப்பிக்கப்புகுகிறார். நீர் ஓராண் வழியாய் நடத்திப்போரும்'' என்று பட்டோலைக் கட்டை ப்ரஸாதித்தருளினார். அவரும் அஞ்சு (5) ஸம்புடமாக ஏறியருளப் பண்ணித் தம்குமாரருக்குப் ப்ரஸாதித்தருளினார்.

---

தெலுங்கு லிபிப் பதிப்பில் நம்பிள்ளை வைபவ பரமாகக் காணும் அதிகப்படி விஷயங்கள்

நம்பிள்ளைக்கு இரண்டு தேவிகளுண்டாயிருக்க, மூத்த தேவி கள் ஒரு நாள் தளிகைக்குச் செய்ய இளையதேவிகள ஒருநாள் தளிகைக்குச் செய்ய இங்ஙனே நடந்து செலகிற நாளிலே ஒருநாள் மூத்ததேவியாரையழைத்து, ''நீ நம்மை புத்தி பண்ணியிருக்கும்படி சொல்லிக்காண்'' என்ன, அவளும் அஞ்ஜலித்து லஜ்ஜாபயங்களை நுவர்த்திக்க, வணக்கவொடுக்கமுடனே ''தேவரீர் நம்பெருமாளு டைய அபராவதாரம் அடியேனுக்கு ஆசார்யர்'' என்றும, ''திருவடிகளிலே பண்ணும் கைங்கர்யங்கள் ஸத்தாதாரகமான ஆசார்யாநுவர்த்தநம்' என்றும் நினைத்திருப்பன்'' என்று விண்ணப்பஞ்செய்ய, ''நல்லது'' என்று கேட்டு, இளையதேவி

யாரையழைத்து "நீ நம்மை நினைத்திருக்கும்படியென்?" என்று கேட்டருள, அவளும் லஜ்ஜாபயங்களுடனே 'தேவரீர் பார்த்தா, அடியேன் பார்யை என்றன்றோ நினைத்திருக்கும் படி' என்று விண்ணப்பஞ் செய்யக் கேட்டு, பின்னை மூத்ததேவிகளைப் பெருமாள் தளிகைக்கு ப்ரதிதினம் செய்வதாக நியமித்து இளைய தேவியை தத்பரிசாரகக்ருத்யையாக நியோகித்து இப்படி செல்லுகிறவளவிலே மூத்ததேவி ருதுவாய் தூரஸ்தையான போது இளையதேவி தளிகைக்குச் செய்தால் எம்பெருமானைத் திருவடி விளக்கி அமுது செய்வித்தருளித் தமக்கபிமதராய் உத்க்ருஷ்டஜந்மஜாதராய் வேதகப்பொன்போலேயிருந்துள்ள பரம ஸத்வநிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவாக்ரகண்யர் கரஸ்பர்ஶமாக்கி அமுதுசெய்தருளுவர். இத்தால் இளையதேவிகளுக்கு பாவசுத்தி போராமையாலே பகவத்த்ருஷ்டிபூதமானாலும் நியத ஸத்பாத கரஸ்பர்சமும் அவச்யாபேக்ஷிதமென்று கருத்து.

நம்பிள்ளைக்கு இளையதேவிகளிடத்திலே ஒரு குமாரர் திருவவதரிக்க, முதலிகள் வந்து பிள்ளைக்கறிவிக்க, அருகிருந்த **திருப்பேராச்சான்**, "அடியேனுக்கு ஒரு திருத்தமையனார் திருவவதாரம்" என்று உகந்தருளினார். இத்தால் ஆசார்யபுத்ரன் அத்யஜாதனேயாகிலும் பஹுமந்த்வ்யனென்று கருத்து. பிள்ளையும் ஜாதகர்மம் செய்து, பன்னிரண்டாம் நாள் நாமகரணத்திலே **தூவியம்புள்** என்று திருநாமம் சாத்தியருளினார்.

நம்பிள்ளை பின்பழகியபெருமாள் ஜீயர் மடத்திலேயொரு நாள் எழுந்தருளியிருக்க, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும், "ஆழ்வாருடைய அவஸ்தையுண்டாய்ப்போரவேண்டியிரா நின்றது; ப்ராப்யஸித்திக்கு இப்போது ஸ்த்ரீயந்நபாநாதிகளாலே கூடியிருக்கிற நாங்கள் என் செய்யக்கடவது?" என்று விண்ணப்பஞ்செய்ய பிள்ளையும், "இங்கு அவஸ்தை பிறந்ததேயாகிலும் ஸதாசார்யகடாக்ஷவிசேஷத்தாலே ஸ்தூலசரீரம் கழிந்து ஸூக்ஷ்ம சரீரமோசநத்துக்கும் கைங்கர்யப்ராப்திக்கும் நடுவே அவ்வவஸ்தையைப் பிறப்பித்து எம்பெருமான் காரியம் செய்யும்" என்றருளிச் செய்தார். இதுக்கு ப்ரமாணம் "நகலு பாகவதாயம விஷயம் கச்சந்தி" [பாகவதர்களான வைஷ்ணவர்கள் யமனுடைய தேசத்தையடையார்] என்றும், *அவன் தமர் எவ்வினையராகிலும் எங்கோனவன் தமரே என்றொழிவதல்லால் நமன் தமரால் ஆராயப்பட்டறியார் கண்டீர் [முதல திரு. 55] என்னுமிதுவேயிறே. ஆகையாலிவ்வாத்மாக்களுக்கு உஜ்ஜீவனத்தில் ஊன்றிப்போரும் எம்பெருமான் ஸ்தூலசரீரவியோகாநந்தரத்திலே அர்ச்சிராதிபதகமந

காலத்திலே ஸ்வசரீரோபேக்ஷையைப் பிறப்பித்து ஸ்ரீமாலாகாரர்க்குத் தன் திருவடி வழகைக் காட்டினாப்போலே இவனுக்கும் வடிவழகைக்காட்டி பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளையுண்டாக்கிக் கைகொண்டருளும் படி.

நம்பிள்ளை பெரியகோயில் வள்ளலாரைக்குறித்து *குலந்தரும் [திருமொழி 1-1-9] என்கிறபாட்டில் முதற்பதத்துக்குத் தாத்பர்யமருளிச் செய்யவேணும் என்ன, அவரும், "முருட்டுத்திருப்பதியனைவென்னை நம்பூர் குலத்துக்கு சேஷமாக்கினால் குலந்தரும்" என்றருளினார். அதாவது, *பண்டைக்குலத்தைத் தவிர்த்து தொண்டக்குலத்திலே மாசில் குடியிலே ச்ரேஷ்டஜந்மஜாதனாய் ஆசார்யவம்ச பரம்பரைக்கு இஷ்டவிநியோகார்ஹனாகை—ஸ்ரீவைஷ்ணவோத்தமகுல மென்றநுஸந்திக்கவேணுமென்றபடி.

"அவதாரமிருக்கும்படியென்?" என்று முதலிகள் நம்பிள்ளையைக் கேட்க, பிள்ளையும், "மெய்வெளுத்து நாக்குவற்றியிருக்கும்" என்றருளினார். முதலிகளும் "அதுவென்?" என்று கேட்க, "அதிகாரி பெருமையாலே மெய்வெளுத்திருக்கும்; பெற்றாலும் ப்ரயோஜநாந்தரபரராகையாலே மயிர்ப்பட்டசோறென்று நாக்கு வற்றியிருக்கும்" என்றருளினார். ஆகையால் ஆசார்யவானான அநந்யப்ரயோஜநனாயிருக்குமதிகாரி எம்பெருமான் தேடிபார்க்கிலும் துர்லபனென்றபடி.

முதலிகளெல்லாருங்கூடி பெரியகோயில் வள்ளலாரை "ஸ்ரீவைஷ்ணவர்களென்று இவர்களுக்குத் திருநாமமாகைக்கடியென்?", என்று கேட்க, "ச்ரிய:பதிபுத்ரராகையாலும், ஸ்ரீமான் பிதாவாகையாலும், ஸ்ரீ மாதாவாகையாலும் ஸ்ரீமானுடைய வைபவத்தையறிகையாலும் ஸ்ரீமான் இவர்கள வைபவமறிகையாலும், ஸ்ரீமத்பதத்திலே பிறக்கையாலும், ஸ்ரீ புருஷகாரமாக வளர்கையாலும் இவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களென்று நிருபகமாய்த்து" என்று அவரருளிச் செய்தாரிறே.

நம்பிள்ளையைச் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் "ப்ரபந்நனுக்குத் தஞ்சமாக விச்வஸித்திருக்குமர்த்தமேது?" என்று கேட்க பிள்ளையும், "ஸகல ப்ரமாணஸாரதமமான மந்த்ரரத்நார்த்தத்தையே விச்வஸித்திருப்பான். த்வயத்திலர்த்தத்தை விச்வஸித்திருந்தானாகில் எம்பெருமானைப்பற்றியிருக்கும்; ஆசார்யனைப்பற்றினனாற்றமுண்டாகில் ஸ்ரீவைஷ்ணவர்களைப்பற்றியிருக்கும்; இனி எம்பெருமானையே பற்றியிருக்கை தேவதாந்தரபஜநஸமமென்று

ஆசார்யன் திருவடிகளையே கட்டிக்கொண்டுகிடக்க, எம்பெருமான் இவனளவிலே பிச்சேறியிருக்கும். இவன் ஸ்ரீவைஷ்ணவர்களைப் பற்றியிருக்க எம்பெருமானேபாதி ஆசார்யனும் இவன் மேலே பிச்சேறியிருக்கும். இத்தால், தத்தேசிக ததீயசரமநிஷ்டை யுண்டாகவே அம்மூவரும் இவன் விஷயத்திலே ஆஸக்தராவர்கள்'' என்றருளிச்செய்தார்,

நம்பிள்ளையருளிச்செய்த வார்த்தை:— ஸ்ரீவைஷ்ணவர்கள் ஈச்வரனுக்கு ஆத்மஸமாநர்; ப்ராணஸமாநர்; த்ருஷ்டிஸமாநர், பாஹுஸமாநர்; ஆபரணஸமாநர்; ஆயுதஸமாநர்; பாதஸமாநர், பாதரேகாஸமாநர்; பாதுகாஸமாநர்; சாயாஸமாநர்; ஜிஹ்வாஸமாநர். அதெங்ஙனேயென்னில்; *ஜ்ஞாநீத்வாத்மைவ மேமதம் (கீதை 7-18 [பகவத்ப்ராப்திகாமனை ஜ்ஞாநி எனது ஆத்மா வென்பது என்கருத்து] என்கிற அநந்யப்ரயோஜந ஜ்ஞானத்தைப் பற்றவும்; *மமப்ராணா ஹி பாண்டவா: (பாரதம் உத், 90-32) [பாண்டவர்கள் எனது ப்ராணபூதர்கள் அல்லவா] என்கிற பராபிமானத்தைப்பற்றவும்; *யேப்ரபந்நா மஹாத்மாநஸ்தே மே நயநஸம்பத: [ப்ரபந்நர்களான மஹாத்மாக்கள் எனக்குக் கண்ணான செல்வங்கள்] என்கிற பாமரஜநோஜ்ஜீவநகரகடாக்ஷத் ருஷ்டித்வத்தைப் பற்றவும்; *ராமஸ்ய தக்ஷிணோபாஹு: (ராமா, ஆ, 34-13) [ராமபிரானுடைய வலது கை போன்றவர் இளைய பெருமாள்] என்கிற ததிச்சாகதப்ரவர்த்தந பாஹுத்வத்தைப் பற்றவும்; *சாபமாதாய ஆத்மவிபூஷணம் [தமக்கு ஆபரணமாயிருக்கிற தநுஸ்ஸை வாங்கி] என்கிற ஆபரணகோடீபந்தர் பாவத்தைப் பற்றவும்; *அலர்மகள் கேள்வன் கையாழி-இடையே இராமாநுசமுநி (இரா. நூற் 33) என்கிற ப்ரதிபக்ஷநிரஸனசீல ஸுதர்சநஸாம்யத்தைப் பற்றவும்; *ஜங்கமஸ்ரீவிமாநாநி ஹ்ருதயாநி மநீஷிணாம் [ஜ்ஞானிகளின் இதயங்கள் எம்பெருமானுக்கு நடமாடும் ஸ்ரீவிமானங்கள்—கர்ப்பக்ருஹங்கள்] *நடையாவுடைத் திருநாரணன் (திருவாய் 3-7-4) என்கிற கௌரவத்தைப் பற்றவும்; ஸ்ரிய:பதி பதத்வந்த்வங்களுக்கு "சடகோபன்" என்கிற பாதுகாத்வத்தைப் பற்றவும்; *நிழலுமடிதாறுமானோம் (பெரிய திரு 31) என்கிற அவிநாபாவ ப்ராதிநஸத்தாதிமத்தையைப் பற்றவும்; *ரஸாந் பக்தஸ்ய ஜிஹ்வாயாமஸ்நாமி [பக்தர்களுடைய ரஸங்களை யும் பக்தனுடைய ரஸநேந்த்ரியமான நாக்கிலே புஜிக்கிறேன்] என்கிற ஸ்வாநுபவஸாதநத்வத்தைப் பற்றவும் ஜிஹ்வாத்ய விலாவயவ ஸமானர்களிறே ஸ்ரீவைஷ்ணவர்கள்.

ஸ்ரீவைஷ்ணவத்வமாவது மூன்று ப்ரகாரமாயிருக்கும். எங்ஙனேயென்னில் ஸத்காரயோக்யரென்றும், ஸஹவாஸயோக்யரென்றும், ஸதாநுபவயோக்யரென்றும். இதில் ஸத்காரயோக்யராவார்-ரூபநாமப்ராதாந்யர், உச்சாரணப்ராதாந்யர், அபிமானப்ராதாந்யர், ஸஹவாஸயோக்யராவார்-ஜ்ஞாநப்ராதாந்யர், அனுஷ்டானப்ராதாந்யர், அங்கீகாரப்ராதாந்யர், ஸதாநுபவயோக்யராவார் - ஆர்த்திப்ராதாந்யர், அபிநிவேசப்ராதாந்யர், அபிருசிப்ராதாந்யர். இதில் த்யாஜ்யோபாதேயத்தைத் தெளியவறியாதவர்களாய் ஸம்பந்தமாத்ரமேயானவர்கள் நமஸ்காரயோக்யர்-தெளிந்த ஜ்ஞாநிகளான ஸப்ரஹ்மசாரிகள் *போதயந்த: பரஸ்பரம் (கீதை 10-9) பண்ணயோக்யர், ஆசார்யனும், ஸதாசார்ய ஸத்ருசரும் உத்தேச்யதயா அநுவர்த்தநீயரென்றபடி.

இனி ஸ்ரீவைஷ்ணவிஷயமாக த்ரிவிதகரணங்களாலும் அபராதம் பண்ணுதொழிவான். ப்ரஹ்மஹத்திக்கு சிகாயஜ்ஞோவீததர விப்ரமாத்ரமே போருமாகையாலே பாகவதாபசாரத்துக்கும் ரூபநாமதர வைஷ்ணவத்வ மாத்ரமே போரும் ப்ரஹ்மவிதக்ரேஸர ப்ரபந்நாதிகாரி விஷயாபாசாரம் உடலும் உயிரும் பிரியும்படியாய் ஸத்தாஹாநியாம் படியாயுமிருக்கும். *தஸ்யப்ரஹ்மவிதாகஸ: [அந்தப்ரஹ்மஜ்ஞாநியபசாரத்துக்கு] *ஸங்கேப்ருஸம் ப்ரஹ்மவித்தோவமாநாத் [ப்ரஹ்மஜ்ஞானியை அவமதிப்பதாலே உண்டாயிற்றென்று சங்கை பண்ணுகிறேன்] என்றும், *ஹந்தி ச்ரேயம்ஸி ஸர்வாணிபும்ஸோமஹததிக்ரம: [மஹான்களிடத்தில் அபசாரமானது புருஷனுடைய ஸமஸ்தமங்களங்களேயும் நாசமடைவிக்கும்] என்றும் இந்த பாகவதாபசார விஷயமாக ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸபுராணங்களிலே ப்ரமாணசதங்கள் கோஷியா நின்றதிறே. *வையத்தேவரான இவர்கள் பாததூளி பட்டு இவ்வுலகம் பூதமாம் படி; *சரீதரன் தொல் புகழ்பாடி ஸவிலாஸஸஞ்சாரம் பண்ணிவருமது கண்டு; *த்ரவந்திதைத்யா: ப்ரணமந்திதேவதா: [அசுரர்கள் ஓடுகிறார்கள், தேவர்கள் வணங்குகிறார்கள்] என்றும், *உந்தமர்க்கொன்றும் நமன்தமர் கள்ளர் போல் (திருமொழி 8-10-7) என்றுஞ்சொல்லுகிறபடியே தூரே இவர்களைக் கண்டமாத்திரத்தில் க்ரூரரான அஸுர ராக்ஷஸ யமபடாதிகள் காடேறிவிழுந் தாடவும், ஜ்ஞாநாதிகாரண தேவ ருஷிஜாதியிலுள்ளார் அஞ்ஜலித்து விரும்பி ஸேவிக்கும் படியுமிறே இவர்கள் வைபவமிருப்பது என்றருளினரிறே.

ஒருகால் யதிராஜதாஸர் பிள்ளை திருமாளிகைக்கு நம்பிள்ளை எழுந்தருளி அவருடைய ஸம்பத்தைக் கண்டு உகந்தெழுந்தருளியிருக்க ஸ்ரீபாதத்து முதலிகள் "இதுக்கடியென்?" என்று கேட்க, பிள்ளையும், "த்ருஷ்டத்தில் தனக்குண்டான ஸம்பந்தத்தைத் தனக்கே என்கை நரகப்ராயம்; தனக்கும் எம்பெருமானுக்குமென்கை ஸ்வர்க்கப்ராயம்; அவனுக்கும் அவனடியாருக்குமென்கை பரமபதப்ராயம்" என்றருளினார். ஆகையாலே தனக்குண்டான ஸம்பந்தத்தைத் ததீயருக்குமாக்கி *நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடு (திருவாய் 8-8-2) என்கிற மாற்றிலிசோறிட்டுத் திருமாலடியார்களைப் பூசிக்கைக்கு அவ்வருகுபட்டதொன்றுமில்லையிறே என்று கருத்து

இப்படி பிள்ளை *ஊரும் நாடும் உலகமுமெல்லாம் கலியிருள் நீங்கிப் பெரிய கிதயுகம் பற்றிப் பேரின்பவெள்ளம் பெருகும்படி எல்லாரையும் திருத்தித் திருமாலுக்கேயாக்கிச் சிறிது காலம் வாழ்ந்தருளி. திருமேனியிலே நோவுசாத்தி மிகவும் அவஸந்நராய் முதலிகளெல்லாரையும் தண்டனிட்டு தீர்த்தங்கொண்டு, அமுது செய்யப்பண்ணி முதலிகள் சேஷமும் அங்கீகரித்தருளி திருநாட்டுக்கெழுந்தருளும்போது ஸ்ரீபாதத்து முதலிகள் ப்ரஹ்மவல்லி, *சூழ் விசும்பணிமுகில் முதலாக ஸேவிக்க, கோயிலுக்கு நேரே நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் திருமடியிலே திருமுடியையும் பின்பழகிய பெருமாள் ஜீயர் திருமடியிலே திருவடிகளையும் வைத்துக் கண் வளர்ந்தருளி நஞ்சீயர் திருவடிகளை த்யாநித்துக் கொண்டு ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக்கெழுந்தருள; பெரியவாச்சான் பிள்ளை, நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர், வடக்குத்திருவீதிப் பிள்ளை, பின்பழகியபெருமாள் ஜீயர் முதலாக எல்லாரும் கடலோசைப் போலே பெருமிடறு செய்து கூப்பிட்டுக்கொண்டு விழுந்து ஆசார்யவிரஹாஸஹராய் மோஹித்துக் கிடந்து சனைர் மோஹந் தெளிந்து சோகாகுலராய் கண்ணீர் பெருவெள்ளமிட்டுப் பெருக பஹுதாப்ரலாபித்துத் தங்களிலே தேறி நின்று, பரியட்டம் திருமாலையுடனே பெருமாள் பரிகரமனைத்தும் வந்து ஸேவிக்க பிள்ளை குமாரர் தூவியம்புள்ளைக் கொண்டு ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிப்படுத்தியருளி ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் திருமுடிவிளக்குவித்துக் கொள்ள;

நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும் திருமுடி விளக்கி வைத்துக் கொள்ள, அவருக்கு நேரே ப்ராதாவாயிருப்பாரொருவர் பட்டரைப் பார்த்து, "திருக்கலிகன்றி தாஸர் பரமபதப்ராப்தி

பண்ணினதுக்கு எங்கள் கூரகுலத்திலே பிறந்தவரொருவர் தலை க்ஷவரம் பண்ணுவித்துக் கொண்டது அவத்யமன்றோ? கூரகுலத்துக் கிழுக்கன்றோ?'' என்ன, பட்டரும் அவரைப் பார்த்து "அப்படியா! ஐயோ! உங்கள் கூரகுலத்துக்கிழுக்காய்ப் பிறந்தேனே; இக் குறையை நீர் என்றைக்குத் தீர்த்துக் கொள்ளக்கடவீர்?'' என்று வ்யாதிரேகம் சொல்லிப் போகவிட, அவர் இத்தைப் பொறுக்க மாட்டாமல் பெருமாள் ஸந்நிதியிலே சென்று விண்ணப்பஞ் செய்ய அத்தைப் பெருமாளுங்கேட்டு பட்டரையழைத்துவரவிட்டு அர்ச்சகமுகேந'' நாமிருக்க நீரிப்படிச் செய்யலாமோ?'' என்ன, பட்டரும், ''பெரிய திருவோலகத்திலே அடியேன் செய்த முறைக் கேட்டைப் பொறுத்தருளவேணும்'' என்று தண்டனிட பெருமாளும் ''இதென் நினைத்துச் சொல்லுகிறபடி?'' என்று கேட்டருள, இவரும், ''பிள்ளையையும் அடியேனையும் பாராதே ஸர்வஜ்ஞரான தேவரீரிப்படிக் கேட்டருளுவதே! நாயந்தே! நம்பிள்ளை திருநாட்டுக்கெழுந்தருளினால் அவர் திருவடிகளிலே ஆச்ரயித்த நான் ஆழ்வானுடைய சேஷத்வ, பாரதந்த்ர்யத்துக்குத் தகுதியாக கூரகுலத்திலே பிறந்தபின் தாஸ்ய க்ருதயமான மோவா யும் முன்கையும் வபநம் பண்ணுவித்துக் கொள்ள வேண்டியிருக்க, அத்தைச் செய்யாதே சிஷ்ய புத்ரர்களுடைய க்ருத்யமான தலைமாத்ரம் க்ஷவரம் பண்ணுவித்துக் கொண்டதுக்கு தேவரீர் மூளிந்தருளக் கூடுமோ?'' என்று விண்ணப்பஞ் செய்ய பெருமாளுமது கேட்டு இசைந்து ஸந்துஷ்டராய் பட்டருக்கு தீர்த்தம் திருமாலையுடனே பரியட்டமும் ப்ரஸாதித்து உபலாளித் துத் திருமாளிகையேறப் போக விட்டருளினர். அநந்தரம் பிள்ளைக்குப் பெருக்கத் திருவத்யயநம் நடத்தியருளினர்கள்.

லோகாசார்யன் என்று திருநாமம் பெற்ற தன்னேற்றமும்'' அருளிச்செயல் பொருள்களறிந்துரைக்கப் பெற்ற தன்னேற்ற மும் பரமபதம் தம் சிறுமுறிக்குச் செல்லப்பெற்ற தன்னேற்றமும் நம்பிள்ளைக்கன்றி மற்றொருவருக்குமில்லையிறே. இவர் தனியன்,

**வேதாந்தவேத்யாம்ருதவாரிராசே: வேதார்த்தஸாராம்ருத**
**பூரமக்ர்யம் |**
**ஆதாயவர்ஷந்தமஹம் ப்ரபத்யே காருண்ய பூர்ணம் கலிவைரி தாஸம் ||**

[நஞ்சீயராகிய அமுதக்கடலினின்றும் உயர்ந்த வேதார்த்த ஸாரமாகிற அமுதவெள்ளத்தைக் கொண்டு வர்ஷிக்குமவராய் கருணையால் நிறைந்துள்ள திருக்கலிகன்றி தாஸரைத் தஞ்சமடை கிறேன்].

**நமாமி தேன மாதவசிஷ்யபாதேன யத்ஸந்நிதம் ஸூக்திமயம்**
**ப்ரவிஷ்டா: |**
**தத்ரைவ நித்யஸ்திதி மாத்ரியந்தே வைகுண்ட ஸம்ஸார விமுக்த**
**சித்தா: ||**

*[யாதொரு நம்பிள்ளையுடைய ஆழ்வாசார்ய ஸ்ரீஸூக்திகளாக் நிறைந்த ஸன்னிதியில் அந்வயித்தவர்கள் ஸ்ரீவைகுண்டத்திலும் ஸம்ஸாரத்திலும் செல்லாத மனத்தினராய் அந்த ஸன்னிதியி லேயே நிலையான இருப்பை ஆதரிக்கிறார்களோ அந்த மாதவ (நஞ்சீயர்) சிஷ்யரான நம்பிள்ளையின் திருவடிகளை வணங்குகிறேன்]*

**வார்த்தோஞ்ச வ்ருத்த்யாபி யதீயகோஷ்ட்யாம் கோஷ்ட்யந்த**
**ராணும் ப்ரதமாபவந்தி |**
**ஸ்ரீமத்கலித்வம்ஸந தாஸநாம்நே தஸ்மைநமஸ்ஸூக்தி மஹார்ண**
**வாய ||**

*[யாதொரு நம்பிள்ளையின் காலக்ஷேபகோஷ்டியில் பிறக்கும் வார்த்தைகளில் பிக்ஷையாவது பெற்றவர் (சிறிதாவது பெற்றால் அது கொண்டு) இதர கோஷ்டிகளில் தலைவர்களாக ஆகிறார்களோ அந்த ஸ்ரீஸூக்தி மஹார்ணவரான (ஆழ்வாராசார்ய வசனங்கள் நிறைந்த பெருங்கடலான) திருக்கலிகன்றிதாஸர் என்ற திருநாம முடைய அந்த நம்பிள்ளை வணங்குகிறேன்]*

**நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும்**
**வஞ்சக்குறும்பின் வகையறுத்தேன் மாயவாதியர்தாம்**
**அஞ்சப்பிறந்தவன் சீமாதவனடிக்கன்பு செய்யும்**
**தஞ்சத்தொருவன் சரணம்புயமென் தலைக்கணிந்தே**

× × ×

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரைப் பார்த்து "உமக்கு ஆசார்ய விஷயத்தில் க்ருதஜ்ஞதை எத்தனை நாள் நடக்கும்?" என்று கேட்க, பட்டரும் "நம்பிள்ளை திருவடிகளில் உபகாரஸ்ம்ருதி அடியேனுக்கு யாவதாத்மபாவி (ஆத்மாவுள்ள வரை—நித்யமாக) நடக்கும்" என்ன, அவரும், "ஆசார்ய விஷயத்தில் உபகாரஸ்ம்ருதி யாவதாத்ம பாவியோ! யாவதாத்ம பாவியோ!" என்று ஈடுபட்டு திருவம்சப்ரபாவத்தாலே தெளிந்து பட்டர் திருவடிகளிலே ஆச்ரயித்து ஜ்ஞாநாதிகராய் விட்டார்.

## பெரியவாச்சான் பிள்ளை வைபவம்

அனந்தரம் பிள்ளைஸ்ரீபாதத்து முதலிகளைக் கூட்டிக்கொண்டு பெரியவாச்சான் பிள்ளை தர்சநம் நிர்வஹித்தருளா நிற்க, நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் பெரியவாச்சான் பிள்ளையைப் பார்த்தருளி, "குருபரம்பரையையும் த்வயத்தையும் உபதேசித்தவர் களோடு கேட்டவர்களோடு வாசியற 'உத்தேச்யர்' என்று ப்ரஸா தித்தீர். பரம ஸாத்விகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் உம்மை அநுவர்த் திக்கிறதற்கு என் நினைத்திருப்பீர்?" என்று கேட்டருள, ஆச்சான் பிள்ளையும், "அடியேன் அஹங்காரியாகையாலே அடியேனுடைய அபிப்ராயத்தாலும், ஸ்ரீவைஷ்ணவத்வம் உண்டென்று நினைத்தி ருப்பன். ஈச்வரன் பெற்ற பிறவியாகையாலே 'ஸ்ரீவைஷ்ணவன்' என்று நினைத்திருக்கும். 'இனி இவர்கள் என் நினைத்திருக்கிறார்கள்?' என்று கூசிக்கொண்டிருக்கும். இவர்கள் என்னைக்கண்டு அநுவர்த் திக்கையாலே இவர்கள் பக்ஷத்தாலும் ஸ்ரீவைஷ்ணவத்வம் உண் டென்றிருந்தது. ஆக, த்ரிவிதாபிப்ராயத்தாலும் அடியேனுக்கு முப்புரியூட்டின ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்று நினைத்திருப்பன்" என்றருளினார். ஆக, த்ரிவிதாபிப்ராயத்தாலும் ஸ்வவைஷ்ண வத்வம் ஸித்தமாய், ஸ்வச்லாக்யதாபுரத்திரஹிதமுமான புத்தி விசேஷம் சொல்லப்பட்டது.

ஆச்சான்பிள்ளை கோஷ்டியிலே ஸ்ரீவைஷ்ணவர்கள் திரள விருந்து "நாம் லீலைக்கு விஷயமோ? இரக்கத்துக்கு விஷயமோ?" என்று விண்ணப்பஞ்செய்ய, "உடன்பட்டிருந்தோமாகில் லீலைக்கு விஷயமாகிறோம்" என்றருளிச் செய்தார். *[ஆச்சான் பிள்ளையும் 'அஸ்ப்ருஷ்டாஹங்காரரான நித்யரும், நிவ்ருத்தாஹங்காரரான முக்தரும் அவன் இனிமைக்கு விஷயமாகிறார்கள். அஹங்கார மமகாரவச்யராய் இருந்து வைத்து அக்குறையுங் கூட அறிய மாட்டாத ஸம்ஸாரிகள் லீலைக்கு விஷயமாகிறார்கள். ஸதாசார்ய ப்ரஸாதமடியான பகவத்ப்ரஸாதத்தாலே அஹங்காரமமகாரம் கழியவேணுமென்றிருக்கிற நாம் அவன் இரக்கத்துக்கு விஷயமா கிறோம் என்றருளிச்செய்தார்]. ஆக, ஸர்வசேதனரையும், ஸர்வேச்வரன் அஹம் மமதாபுத்தி முக்தி விரக்த்யாஸக்தி விசேஷத் தாலே ஸ்வமாதுர்ய காருண்ய லீலாவிஷயமாக்கி விநியோகிக்கு மென்றபடி.

ஆச்சான் பிள்ளை கோஷ்டியிலே சிலர் ஸ்ரீவைஷ்ணவர்கள் "எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தையருளிச்செய்ய வேணும்" என்ன, அவரும், "கலங்குகிறவனும், கலக்குகிறதும்,

* [ ] குண்டலிதம் க்வாசித்கம்

கலங்கிக்கிடக்கிறவர்களும், தெளிவிக்கிறவனும் தெளிகிறவனும்; தெளிந்திருப்பவனுமாயிறே இருப்பது. இதில் கலங்குகிறவன் - ஜீவாத்மா; கலக்குகிறது—அசித்து; கலங்கிக்கிடக்கிறார்கள்—ஸம்ஸாரிகள்; தெளிவிக்கிறான்—ஆசாரியன்; தெளிகிறான்—சேதனன்; தெளிந்திருக்கிறான்—ஈச்வரன். ஆகையாலே ஆசார்யோபதேசத்தெ தெளிந்தவன் கலங்குகிற தன்னையும் கலக்குகிற ப்ரக்ருதியையும் கலங்கிக்கிடக்கிற ஸம்ஸாரிகளையும் தஞ்சமன்றென்று கைவிட்டு, தெளிவிக்கிற ஆசார்யனையும் தெளிந்திருக்கும் ஈச்வரனையும் பற்றுகை காண் இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபம்' என்றருளிச்செய்தாராயிற்று.

ஆச்சான் பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ''ஸ்வரூபபாரதந்த்ர்யமிருக்கும்படி என்'' என்று கேட்க, அவர் அருளிச்செய்தபடி— ''ஸ்வசக்தி நிவ்ருத்திபூர்வகமாக ஸர்வசக்தியை அண்டைகொண்டு உபாயத்தில் கந்தலற்று உபேயத்தில் த்வரை விஞ்சியிருக்கை காண் பாரதந்த்ர்யஜ்ஞாநம்'' என்றருளினார். இத்தால் நிவ்ருத்தி ப்ரேரகத்தோடு ப்ரவ்ருத்தி ப்ரேரகத்தோடு வாசியற பராதீநனை இவ்வதிகாரிக்கு எல்லாம் பரப்ரேரிதமாமத்தனையிறே.

ஆச்சான் பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ''ஸ்வரூபாநுருபமான ப்ராப்யமோ? ப்ராப்யாநுபமான ஸ்வரூபமோ?'' என்று கேட்க, அவரும் ''முமுக்ஷுதசையில் ஸ்வரூபாநுருபமான ப்ராப்யம்; முக்திதசையில் ப்ராப்யாநுருமாயிருக்கும் ஸ்வரூபம்'' என்றருளிச்செய்தார்.

நாட்டிலிருந்து பெருமாளை ஸேவித்திருப்பார் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்யம் விஸ்லேஷபீருக்களாய்ப் போருகிறவர்கள் ஒருகால் ராகத்வேஷம் கொண்டாடி, அதிலொருவர் ஆச்சான்பிள்ளை ஸ்ரீபாதத்தேறச் சென்று மற்றவருடைய குற்றம் விண்ணப்பஞ்செய்ய; அருகிருந்த முதலிகளிலே சிலர், ''இப்படி சொல்லலாமோ?'' என்று விண்ணப்பஞ் செய்ய, ஆச்சான் பிள்ளையும், ''அவர்கள் சொல்லுகிறபடி கேளீர்: தண்டதரனை யமன் ''பரிஹர'' [ஸ்ரீ வி.பு. 3-2-13; மதுசூதனனடியார்களிடம் போகாதீர்கள் என்று தனதூட்களிடம்], என்றான். ''நகஸ்சிந்நாபராத்யதி'' [ஸ்ரீரா-யு-44-மன்னிப்பதே பெரியோர் பணி-உலகில் யார்தான் குற்றம் செய்தவரில்லை] என்றாள் பிராட்டி; ஈஸ்வரன், *செய்தாரேல் நன்றுசெய்தார் [அடியார்கள்குற்றம்செய்தாராகில் அதுவும் நற்றமே-பெரியா.திரு. 4-6-1. என்றான். ஆழ்வார்கள், *அவன் தமர் எவ்வினையராகிலும் எங்கோனவன் தமரே—(முதல்திரு. 55)

ஞர்கள். இப்படியிருக்க, "அவர் குற்றம் இவரையொழியச் சொல்லுவார் யார்?" என்றருளினார். இத்தால் சக்திமான்களுமட்பட ததீயதோஷம் சொல்லக்கூசுவர்கள் என்றபடி.

ஆச்சான்பிள்ளை பாகவதவைபவம் அருளிச்செய்யா நிற்கச் செய்தே ஒருவர் பகவத்வைபவஞ் சொல்ல, "விசேஷஞ்சொல்லுகிறவிடத்தே இது ஸாமாந்யம்" என்றருளிச் செய்தார். இத்தால் பாகவதவைபவத்தை நிறுத்தி பகவத்வைபவம் சொல்லுகை அநுபயுக்தமிமென்றபடி. ஆச்சான் பிள்ளை சிறிய தாயார் பெரிய பிள்ளையும் ஆச்சான்பிள்ளையை ஸேவித்துப் போருகிற காலத்திலே இவர் சோகாரர்த்தராக, ஆச்சான் பிள்ளை "நீர் சோகிக்கிறதென்?" என்ன, அவரும், "அநாதிகால பாபவாஸநா பலாத்கார வசத்தாலே ஜந்மாதிகளிலே ஈஶ்வரன் என்னை இன்னம் தள்ளப் போகிறானோ?" என்று பயப்படாநின்றேன்" என்ன, மேலருளிச் செய்த வார்த்தை: "இது ஆர் கேடு? என்றிருந்தாய், உனக்கு ஸ்ருஷ்டிக்க வேணுமோ? அவதரிக்கவேணுமோ? *பிறப்பில் பல் பிறவிப்பெருமான் (திருவாய். 2-9-5) என்றால், *பொருளென்றிவ்வுலகம் படைத்தவன் (திருவாய். 2-10-11) என்றும், "ஸம்பவாமி யுகே யுகே" (கீதை 4-8) என்றும் ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைப்பாரைப்போல் அகிலஜகத்ஸ்வாமியாய்த்து அஸ்மத்ஸ்வாமியாகைக்கன்றோ?" என்றருளினார். ஆகையால் ஈச்வரனுக்கு ஒரு சேதனனைப் பெறுகை அலப்யலாபம் என்றும், *எதிர்சூழல் புக்குத் தேடித்திரியுவன்தானே, "பேறும் இழவும் தன்னது" என்று ரக்ஷிக்குமென்று நிர்ப்பரராயிரும்" என்றபடி.

அநந்தரம் பெரியாழ்வார் திருமொழி தொடக்கமான ஆழ்வார்களருளிச் செயல்களுக்கெல்லாம் வ்யாக்யாநம் செய்து லோகத்தை வாழ்வித்தருளினார். இத்தை நினைத்திறே *பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும் தெரிய வியாக்கியைகள் செய்வால் . அரிய அருளிச்செயற்பொருளை ஆரியர்கட்கிப்போதருளிச் செயலாய்த்தறிந்து (உபதேசரத்-46) என்று உபதேசரத்தினமாலையிலே ஜீயர் அருளிச்செய்ததும். பின்னையும் ரஹஸ்யத்ரயவிவரணம், தத்வத்ரயநிர்ணயம் முதலான அநேக ரஹஸ்யமருளிச்செய்தருளினார்.

ஒருநாள், பிள்ளையுடைய ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்திருக்கும் வாதிகேஸரி கார்ஹஸ்த்யாச்ரம நிஷ்டராயிருக்கும்போது சாஸ்த்ர பரிசீலனை பண்ணுகிறவர்களைக்கண்டு "படிக்கிறதென்?" என்று கேட்க, அவர்களும், "இவர்க்கு அக்ஷராப்யாஸமில்லை" என்று சிரித்து,

''முலலகிலலயம் படிக்கிறோம்'' என்று பரிஹஸித்தொரு வார்த்தை சொல்ல, இவரும் அத்தைய றியாதே, ''இப்படியொன்றுண்டோ'' என்று திகைத்து, அத்தை ஸ்வாசார்யரான பெரியவாச்சான் பிள்ளைக்கு விண்ணப்பம் செய்ய, அவரும் மந்தஸ்மிதம் செய்து, ''அவர்கள் உமக்கு அக்ஷராப்யாஸமில்லாமையாலே ''கழுக்காணி துளிர்க்குமோ? உமக்கித்தைக்கொண்டு காரியமென்?'' என்று பரிஹஸித்துவிட்டார்கள்' என்றருளிச்செய்ய; இவருமத்தைக் கேட்டு லஜ்ஜாவிஷ்டராய், சலம் பிறந்து, திருவடிகளிலே விழுந்து, ''அடியேனை வித்வானாகும்படி கடாக்ஷித்தருளவேணும்'' என்று ப்ரார்த்திக்க; அபயப்ரதராஜர் உகந்து முப்பத்திரண்டு திருநக்ஷத்திலே அக்ஷரசிக்ஷைகளும் பண்ணுவித்து காவ்யநாடகாலங்கார சப்ததர்க்கபூர்வோத்தரமீமாம்ஸாதி ஸகலசாஸ்த்ர வித்தமராம்படி சிக்ஷித்தருள; இவரும் அவர்கடாக்ஷத்தாலே வித்வஜ்ஜநாக்ரகண்யராய் ''முலலகிலலயம்'' என்று ஒருகாவ்ய மிட்டு அவர்கள்கையிலே கொடுத்து வாய்முடித்தலையிறக்கிட்டு லஜ்ஜாவிஷ்டராம்படி பண்ணியருளி, மஹாவிரக்தராய் ஆச்ரமஸ்வீகாரம் செய்து, பரவாதிகளை ஜெயித்து மிகவும் சாஸ்த்ரநிபுணராயிருக்கையாலே வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் என்று ப்ரஸித்தரான இவர் பூர்வர்கள் செய்தருளிய திருவாய்மொழி வ்யாக்யானங்களை யெல்லாம் திருக்கண்சாத்தி அவைகளிலே ஸாரதமமான அர்த்தவிசேஷங்களை ஸங்க்ரஹித்து ஸர்வர்க்கும் ஸுக்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் தெரியும்படி திருவாய்மொழிக்கு த்வாதசஸ்கந்தயுக்தமான ஸ்ரீபாகவதப்ரக்ரியையாலே பன்னீராயிரம் உரை செய்தருளினார். ஜீயரும் உபதேசரத்னமாலையில் *அன்போடழகிய மணவாளச்சீயர் என்று தொடங்கி *ஏதமில் பன்னீராயிரம் (45) என்றித்தையுமருளிச் செய்தாரிறே, பின்னையும் தீபப்ரகாசம்' தத்வநிரூபணம் முதலான அனேக ரஹஸ்ய க்ரந்தங்களையும் அருளிச் செய்து உபகரித்தருளினார்,

ஆச்சான்பிள்ளைகுமாரர் நாயனாராச்சான்பிள்ளையும் தீபாதுத் பந்நப்ரதீபம்போலே தர்சநம் நிர்வஹித்துக் கொண்டு போர மதிப்புடையராய் ''ஸகலவித்யாபாரங்கதர்'' என்கிற விருதை யுடையவராய், ''ஸ்ரீரங்கராஜ தீக்ஷிதர்'' என்று பௌண்டரீக யாகம் செய்து ப்ரஸித்தராய். தத்வ ஸங்க்ரஹம், முக்தபோகாவலி' ஜ்ஞானார்ணவம், ஸாரீரம் முதலான அனேகரஹஸ்யக்ரந்தங்களிட்டு உபகரித்தருளினார்.

(1) பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம் ரோஹிணி. இவர் தனியன்—

**ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே |**
**யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலபஸ்ஸ்ரீதரஸ்ஸதா ॥**

*[யாவரொருடைய திவ்யகடாக்ஷத்துக்கு விஷயபூதரானவருக்கு ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் எப்போதும் ஸுலபனாயிருக்கிறானோ, யாமுனர் குமாரராய், ஸ்ரீமானான க்ருஷ்ணர் என்கிற திருநாமத்தையுடையரான அந்தப் பெரியவாச்சான் பிள்ளையை வணங்குகிறேன்.]*

*நாயனாராச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம் சித்திரை. இவர் தனியன்—*

**ச்ருத்யர்த்தஸாரஜநகம் ஸ்ம்ருதிபாலமித்ரம்**
**பத்மோல்லஸத் பகவதங்க்ரி புராண பந்தும் |**
**ஜ்ஞாநாதிராஜமபயப்ரதராஜபுத்ரம்**
**அஸ்மத்குரும் பரமகாருணிகம் நமாமி ॥**

*[வேதங்களின் ஸாரார்த்தங்களை ப்ரதிபாதிப்பவராய் ஸ்ம்ருதிகளுக்கு பாலமித்ரராய் தாமரை போல் ப்ரகாசிக்கும் பகவச்சரணங்களுக்குப் புராதநபந்துவாய், ஜ்ஞானஸாம்ராஜ்யத்தின் அரசராய் அபயப்ரதராஜரான பெரியவாச்சான்பிள்ளையின் குமாரராய்ப் பரமகாருணிகராய் அஸ்மதாசார்யரான நாயனாராச்சான் பிள்ளையை வணங்குகிறேன்]*

*வாதிகேஸரி அழகியமணவாள ஜீயர் திருநக்ஷத்ரம் மகம். இவர் தனியன்—*

**ஸுந்தரஜாமாத்ருமுநே: ப்ரபத்யே சரணாம்புஜம் |**
**ஸம்ஸாரார்ணவஸம்மக்ந ஜந்துஸந்தாரபோதகம் ॥**
**அஸ்மத்விதபரித்ராண ப்ரேமப்ரத்ராணமாநஸம் |**
**வாதிகேஸரிணம் வந்தே ரம்யஜாமாத்ரம் முநிம் ॥**

*[ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்திலே மிக அழுந்திக்கிடக்கும் ஜீவர்களை உத்தரிப்பதற்கு ஓடமான (வாதிகேஸரி) அழகியமணவாள ஜீயருடைய திருவடித் தாமரைகளை ஆச்ரயிக்கிறேன். (அஸ்மதாதிகளை ரக்ஷிப்பதில்) ப்ரீதியினால் நிறைந்த மனதையுடையரான வாதிகேஸரியான அழகிய மணவாள ஜீயரை வணங்குகிறேன்.]*

## ஈயுண்ணி மாதவப்பெருமாள் வைபவம்

நம்பிள்ளைபக்கல் ஈடுமுப்பத்தாறுயிரமும் பெற்ற ஈயுண்ணி மாதவப் பெருமாள் தம்குமாரரான ஸ்ரீபத்மநாபப்பெருமாளுக்கு ஈடுமுப்பத்தாறுயிரமும் பின்னும் வேண்டும் ரஹஸ்யார்த்தங்களை யெல்லாம் ப்ரஸாதித்து தர்சனப்ரவர்த்தகராக்கியருளினர். ஸ்ரீபத்மநாபப் பெருமாளும் தமக்கு அந்தரங்க சிஷ்யராய், **கோலவராஹநாயனர்** என்று திருநாமமுடைய நாலூர் பிள்ளைக்குத் தம் பைத்ருகதநமான ஈடுமுப்பத்தாறுயிரமும் பின்னும் வேண்டின தர்ஶநார்த்தங்களெல்லாம் ப்ரஸாதித்தருளினர். நாலூர் பிள்ளையும் தம் நல்ல மகனாரான நாலூராச்சான் பிள்ளைக்கு ஸ்வாசார்யரான பத்மநாபப்பெருமாள் ப்ரஸாதித்த ஈடு முதலான அகிலார்த்தங்களையும் ப்ரஸாதித்து தர்ஶநப்ரவர்த்தகராம்படி கடாக்ஷித்தருளினர் நாலூராச்சான் பிள்ளையும் மணவாளமாமுனிகளுக்கு நேரே ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளைக்கும், திருநாராயணபுரத்தாயிக்கும் (திருவாய்மொழியாச்சான்) பிள்ளைக்கும் திருவாய்மொழியை ப்ரஸாதித்தருளினர் என்னுமத்தை "ஆங்கவர்பால்பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை தாம்கொடுத்தார் தம் மகனார் தங்கையில், பாங்குடனே நாலூர்ப்பிள்ளைக்கவர் தாம் நல்ல மகனார்க்கவர்தாம் மேலோர்க்கீந்தாரவரேமிக்கு என்று உபதேச ரத்நமாலையிலே (49) ஜீயர் தாமே தெளியவருளிச் செய்தாரிறே.

ஈயுண்ணிமாதவப்பெருமாள் திருநக்ஷத்ரம் ஹஸ்தம். இவர் தனியன்—

**வரதார்யக்ருபாபாத்ரம் ஸ்ரீமாதவகுரும் பஜே |**
**ஜ்ஞாநாதீஶவேதாந்த ஸேவோந்மீலித வேதநம் ||**

[நம்மாழ்வார் அருளிச்செய்த த்ரமிடோபநிஷத்தான திருவாய்மொழி காலக்ஷேபத்தால் தெளிந்த ஜ்ஞானமுடையவராய் வரதார்யரென்ற நம்பிள்ளையின் தயைக்கு கொள்கலமான ஈயுண்ணிமாதவப் பெருமாளை வணங்கிப் போற்றுகிறேன்]

பத்மநாமப் பெருமாள் திருநக்ஷத்ரம் ஸ்வாதி இவர் தனியன்—

**வேதாவகாஹ்ய விமலோஸ்மி ஶடாரிஸூக்தோர்-வாணீகணோத்த**
**பரிபோத ஸுதாபகாயம் |**
**ஸ்ரீமந்முகுந்த சரணாம்புஜமதுவ்ரதாய ஸ்ரீபத்மநாபகுரவே நம**
**ஆசராம: ||**

[யாரொருவரால் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திஸமூஹத்திலுண்டான அர்த்த விசேஷங்களின் தெளிவான அறிவாகிற

அமுதக்கடலில் அமிழ்ந்து தாபமனைத்தையும் ஆறியவரும் ஸ்ரிய: பதியான முகுந்தனின் திருவடிகளில் வண்டுபோல்வரான அந்த பத்மநாபப் பெருமான் பொருட்டு நமஸ்காரத்தைப் பண்ணக் கடவோம்]

நாலூர்பிள்ளை திருநக்ஷத்ரம் புஷ்யம், இவர் தனியன்—

ஸ்ரீபத்மநாபகுருத: சடஜித்முனீந்த்ர ஸ்ரீஸூக்திபாஷ்ய மதிகம்ய
ஸம்ருத்தபோத: |
தத்தேவராஜகுரவே ஸ்வபிதுச்சதுர்பூர்வாசோத்த கோலவர
தேசிகமாச்ரயே தம் ॥

ஸ்ரீமத்பநாபப் பெருமாளிடமிருந்து நம்மாழ்வாருடைய ஸ்ரீ ஸூக்திகளின் பாஷ்யமான (விளக்கமான) ஈட்டை அதிகரித்து நிறைவான ஜ்ஞானமுடையரான யாவரொருவர் அந்த ஈட்டை நாலூராச்சான் பிள்ளைக்கு ப்ரஸாதித்தாரோ, அந்த—நாலூரில் வாஸத்தால் ப்ரகாசிக்கிற கோலவரகுருவை சரணம் பற்றுகிறேன்

நாலூராச்சான்பிள்ளை தனியன்

நமோஸ்து தேவராஜாய சதுர்க்ராமநிவாஸிநே |
ராமாநுஜார்யதாஸஸ்ய ஸுதாய குணசாலிநே ॥

[ஸ்ரீராமாநுஜதாஸரென்னும் நாலூர் பிள்ளையின் குமாரராய் குணபூர்ணராய் நாலூரில் வாஸம் பண்ணுமவரான தேவராஜர் என்னும் நாலூராச்சான் பிள்ளையை நமஸ்கரிக்கிறேன்]

கோலாதிபாத் த்ரவிடவாக்ய ரஹஸ்யகீதேர்பாஷ்யம் ஹி பூர்வகுரு
தேசிகவர்யகுப்தம் |
லப்த்வா ப்ரவர்த்ய புவி: ப்ரதயஞ்ச ஸ்ரீதேவராஜ
குருவர்யமஹம் ப்ரபத்யே ॥

[யாவரொருவர் பூர்வர்களான ஆசாரியர்களால் ரஹஸ்யமாகக் காக்கப்பட்டிருந்த திருவாய்மொழியின் வ்யாக்யாநமான ஈட்டை, தந்தையான கோலாதிபரென்னும் நாலூர்ப்பிள்ளையிடத்தில் நின்றும் பெற்று மூவர் மூலமாய் வெளிப்படுத்தி உலகத்தில் ப்ரஸித்தியடையப் பண்ணினரோ அந்த பரமாசாரியரான தேவராஜரை (நாலூரச்சான் பிள்ளையை) நான் போற்றி வணங்குகிறேன்]

ஸ்ரீவாதிகேஸரி குரு ஆத்மகுருத்வயப்யாம் ஸ்ரீஸூக்தி
தேசிகவரேண ச பஞ்சவிதைவம்—
ஸத்ஸம்ப்ரதாயீக்ருத பாஷ்ய ஸுஸம்ப்ரதாயோ
விஸ்தாரமேதி ஸஹி வைஷ்ணவபு———பு ॥

[எந்த திருவாய்மொழியின் பாஷ்யமான ஈட்டின் ஸத்ஸம்ப்ரதாயமானது திருவாய்மொழிப் பிள்ளையென்ன, திருநாராயணபுரத்தாய் என்ன, இந்த சிறந்த ஆசாரியர்களாலும் திருவாய்மொழியாச்சானாலும் மும்முகமாய் ப்ரகாசமாயிற்றோ அந்த ஸத்ஸம்ப்ரதாயம் தான் ஸ்ரீவைஷ்ணவப்பெரியோரிடத்தே விஸ்தாரமடைந்தது]

யதீந்த்ரப்ரவணப்ரபாவம்— 4

## வடக்குத் திருவீதிப்பிள்ளை வைபவம்

அநந்தரம் வடக்குதிருவீதிப்பிள்ளை தர்சநம் நிர்வஹித்தருளுகிற காலத்தில் ஸ்ரீபாதத்துமுதலிகள் "ஆத்மஸ்வரூபமிருக்கும் படியென்?" என்று விண்ணபஞ்செய்ய, அவரும், "அஹங்காரமாகிற ஆர்ப்பைத்துடைத்தால் ஆத்மாவுக்கு அழியாதபேர் "அடியான்" என்றிறே" என்றருளினார். இத்தால் 'ஈஶ்வரோஹம்' என்கிற அஹங்காரம் பற்றற்றால் ஆத்மாவுக்கு 'தாஸோஹம்' என்கிற சேஷத்வமே நிலைநின்ற அந்தரங்க நிரூபகம் என்றபடி. பாகவதசேஷத்வ விதுரமான பகவச்சேஷத்வமும் தேஹாத்மாபிமானம்போலே பொல்லாததாயிருக்கையாலே, *அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம்மடியாரடியோங்களே (திருவாய், 3-7-10) என்றிருக்கவேணுமென்றருளியும், எல்லா வேதங்களையும் எல்லா சாஸ்த்ரங்களையும் எல்லா ஆழ்வார்கள் பாசுரங்களையும் எல்லா ஆசார்யர்கள் வசநங்களையும் ஆராய்ந்து பார்த்தவிடத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு நிலைநின்ற ஆசார்யாபிமானமொழிய மோக்ஷோபாயமில்லை; நிலைநின்ற பாகவதாபசாரமொழிய மோக்ஷவிரோதியில்லையிறே. "ஸ்வஸத்தையில் நித்யத்வமும் நிலைநின்ற பாகவதாபசாரமுண்டாமளவத்தனையன்றோ?" என்று பிள்ளை பலகாலுமருளிச்செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும்" என்று வடக்குத்திருவீதிப்பிள்ளை தம் ஸ்ரீபாதத்து முதலிகளுக்கருளினார். இத்தால், ஆசார்யாபிமானம் நிலைநிற்கையாவது- கேட்ட அர்த்தத்தின்படி அநுஷ்டானமும் கைபுகுரப்பெற்று தத்விஷயமே ப்ராப்ய ப்ராபகங்களென்றும், தத்விஷயத்திலே மஹாவிச்வாஸத்துடனிருக்கை. பாகவதாபசாரம் நிலைநிற்கையாவது-தீரக்கழியப்பண்ணியும் நிரநுதாபமான பாகவதாபசாரம் ஸ்வஸத்தையை விளக்குப்பிணம்படுத்தி தக்தபடமாச்சி உயிர் மாட்டல் செய்து நசிப்பிக்குமென்றபடி.

இப்படி ஸர்வரையும் உஜ்ஜீவிப்பித்துக்கொண்டிருக்கிற இவர் தம் குமாரரான பிள்ளைலோகாசார்யரையும், அவர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரையும் தர்சநப்ரவர்த்தகராம்படி நன்றாகத்திருத்தியருளி சில நாளைக்குப் பின்பு பிள்ளை திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். பிள்ளைலோகாசாரியரும், "உபயஸம்பந்தமுடைய விலக்ஷண விஷயத்தை இழந்தோமே" என்று பெருக்க வ்யாகுலப்பட்டு க்லேசித்துத் தம்மிலே தேறி நின்று பிள்ளைக்கு ப்ரஹ்மமேதத்

தாலே சரமகைங்யம் செய்து பள்ளிப்படுத்தி அவப்ருதம் கொண்டாடிப் பெருக்கத் திருவத்யயனமும் நடத்தியருளினார்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருநக்ஷத்ரம் ஸ்வாதி. இவர் தனியன்-

**ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமி ஸிரஸா ஸதா |**
**யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந் மம ||**

[யாவரொருவருடைய அநுக்ரஹாதிசயத்தினால் எனக்கு ஸமஸ்த புருஷார்த்த ஸித்தியும் உண்டாயிற்றோ அந்த ஸ்ரீக்ருஷ்ண நாமா வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருவடித் தாமரைகளை எப்போதும் தலையால் வணங்குகிறேன்].

## பிள்ளைலோகாசாரியர் வைபவம்

அநந்தரம் நம்மாழ்வார் திருவவதாரமென்னலாம் படியான வைபவமுடையவராய், நம்பிள்ளையுடைய அநுக்ரஹத்தாலே அவதார விசேஷமாய்த் திருவவதரித் திருந்துள்ள பிள்ளைலோகாசார்யரும், அவருடைய அருளே தாரகமாய் வளர்ந்த அவர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் பால்யாத் ப்ரப்ருதி ஸஹஸ்நிக்தராய் இணைத் தொட்டிலிட்டு வளர்ந்த இளைய பெருமாளையும் பெருமாளையும் போலவும் "பலதேவனென்னும் தன்னம்பியோடப் பின் கூடச்செல்வான்" (பெரியாழ்வார் திரு- 1-8-5) என்கிற நம்பிமூத்தபிரானையும் க்ருஷ்ணனையும் போலவும்,

**தம்பியுடன் தாசரதியானுஞ் சங்கவணை**
**நம்பியுடன் பின்னடந்து வந்தானும் — பொங்குபுனல்**
**ஒளிரும் முடும்பை உலகாரியனும் அறங்**
**காவிரு மணவாளனுமே தான்**

என்னும்படி ஸௌப்ராத்ருத்வத்தையுடையரான இவர்களிலே பிள்ளை லோகாசார்யர் தம் பரம க்ருபையாலே பெண்ணும் பேதையும் அதிகரித்து உஜ்ஜீவிக்கலாம்படி தனிப்ரணவம், தனி த்வயம், தனிசரமம், பரந்தபடி, ச்ரிய:பதிப்படி, யாத்ருச்சிகப்படி, மும்முக்ஷுப்படி, ஸம்ஸாரஸாம்ராஜ்யம், ஸாரஸங்க்ரஹம், தத்வத்ரயம், தத்வசேகரம், ப்ரபந்தபரித்ராணம், ப்ரமேயசேகரம்,

அர்ச்சிராதி, அர்த்தபஞ்சகம். நவவிதஸம்பந்தம், நவரத்நமாலை, ஸ்ரீவசனபூஷணம் முதலான அநேக ரஹ்யக்ரந்தங்களிட்டருளி. தம்பியோடு தாமும் கூடிவாழ்க்தருளுங் காலத்திலே பிள்ளைலோகாசாரியர் திருவடிகளிலே பரமஸாத்விகாரயிருப்பரான கூரகுலோத்தமதாஸர் நாயனும் மணப்பாக்கத்து நம்பியாரும், கொல்லிகாவலதாஸரான அழகிய மணவாளப் பெருமாள் பிள்ளையும், கோட்டூரிலண்ணரும், கிருமலையாழ்வாரும், விளாஞ்சோலைப் பிள்ளையும் ஸாத்விகைகளில் திருமலையாழ்வார்திருத்தாயார் முதலான சில அம்மைமார்களும் திருவடிகளிலாச்ரயித்து ஸத்ஸம்பந்தத்தை யுடையராய், ''ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:' என்று ஆநந்தநிர்ப்பரராய் *ஒழிவில் காலப்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் நித்யஸேவை பண்ணி தேவு மற்றறியாதிருந்தார்கள் [இதுவரை தெலுங்குலிபி நூல் பாடம்]

இப்படி இவர்களுடைய ஐககண்ட்யத்தாலே ப்ரவர்த்தமாய் ஸங்க்ரஹவிஸ்தரரூபமாயிருக்குமென்று அருளிச் செய்து

**சீராருந்திருவத்தியூர் தன்னில் நின்றும் சிறந்த மணப்பாக்கத்துந நம்பியாரை**
**ஏராருங்கனவிலுபதேசத்தால் முன்னெடுத்தருளியெழிலரங்கத்தே போமிரு நீ**
**சேராமலுக்கிதமங்கே சொல்வோந்தூய வுலகாரியன்பால் சேர்ந்ததற் பின் அவர்க்கு**
**நேராகக்கனவிலாங்கவருபதேசத்தால் முன்னம் விரித்தகலை வசன பூஷண மாகியே**

என்கிறபடியே பரமரஹஸ்யமான ஸ்ரீவசன பூஷணமாகிற திவ்ய ப்ரபந்தத்தைச் செய்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார்.

அநந்தரம் நாயனாரும் ''வாக்பூஷணம் வகுளபூஷண ஶாஸ்த்ர ஸாரம்'' என்னும்படியான ஸ்ரீவசநபூஷணஸ்தாபநார்த்தமாக ஆசார்யஹ்ருதயத்தையருளிச் செய்து தோதவத்தித் தூயமறையோரான பெற்றார்க்கு ப்ரஸாதித்து இப்படி முப்பத்தாறாயிரப் படியினர்த்தத்தை ஸ்ரீவசநபூஷண ஆசார்யஹ்ருதயப்ரபந்தங்களாலே தாத்பர்யமாகக் கூட்டிப் பிள்ளையுமருளிச் செய்கையாலே **ஈட்டுத்தனியனிலே இவர்கள் தனியனையுமநுஸந்திக்கிறது. அவரும் ஆசார்யஹ்ருதயம் பெற்றார்க்கு ப்ரஸாதித்தார்; அவரும் திருநாராயணபுரத்து ஆயிக்கு ப்ரஸாதித்தார்.

** 28-ம்பக்கம் அடிக்குறிப்பு காண்க.

இதற்கு ப்ரபந்தப்ரதிபாத்யமான அர்த்தஸம்ப்ரதாயம் ஜீயருக்கு ஆய்வழியாக வந்தபடியை மேலே சொல்லுகிறது; இது ஜீயருடைய ஆசார்யரான திருமலையாழ்வாரும், அவருடைய திருத் தமப்பனாரான அண்ணரும் அதிபால்யத்திலே பிள்ளைலோகா சார்யர் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களாகையாலே பின்பு கொல்லிகாவல தாஸரிடத்திலும் கூரகுலோத்தம தாஸரிடத்திலும் ஜ்ஞாநோபஜீவநம் பண்ணி உஜ்ஜீவித்தார்கள். இப்படி ஸம்பந்த ஸம்பந்திகளும் உஜ்ஜீவிக்கும்படி *தம்பியோடு தாசரதி என்கிற படியே நம்மாழ்வார் திருவவதாரமென்னலாம்படியான நம்பிள்ளை யுடைய அநுக்ரஹத்தாலே ...தேவுமற்றறியாதிருந்தார்கள் [27ம் பக்கத்திலுள்ள தெலுங்கிலிபி நூல் பாடத்தையே இங்கும் படிக்கவும்]

இப்படியெழுந்தருளியிருக்கும் பிள்ளை லோகாசார்யர் பரம ரஹஸ்யமுமாய் திவ்யசாஸ்த்ரமுமான ஸ்ரீவசனபூஷணத்தை ஸர்வரும் அதிகரித்து ஈடேறலாம் படி யருளிச்செய்து லோகத்தை வாழ்வித்தருள, அத்தைக்கண்டு பாகவதோச்ச்ராயம் பொறுக்க மாட்டாத சில அஸூயாளுக்கள் நம்பெருமாள் பக்கலிலே சென்று,

---

* * ஈட்டுத்தனியன் வியாக்கியானத்தில் 'பிள்ளைலோகஞ் சீயர் அருளிச் செய்துள்ளது: "பிள்ளைலோகாசார்யர், நாயனாராச்சான் பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர் இவர்கள் நால்வரும் ஈட்டு ஸம்ப்ர தாயத்துக்கு ப்ரவர்த்தகராகாமலிருக்கச் செய்தேயும், பிள்ளை லோகாசாரியர் ஈட்டிவர்த்தத்துக்கு உபயுக்தமாக வகுளபூஷண சாஸ்த்ரஸாரமான ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரரத்னை தயருளிச் செய்கையாலும்; நாயனாராச்சான்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த இருப்பத்திநாலாயிரப்படி வ்யாக்யானத்துக்கு ப்ரவர்த்தகராகையாலும்; அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவாய்மொழியினுடைய சந்தை திரட்டான அசார்ய ஹ்ருதயமருளிச் செய்கையாலும் வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர் பன்னீராயிரப்படியையும், திருவிருத்தத்துக்கு ஸ்வாப தேசமும் அருளிச் செய்கையாலும் இவர்களுடைய தனியன்களும் அநுஸந்திக்கிறார்கள் நம் ஆசார்யர்கள்" என்று. [பிள்ளை லோகா சாரியரும் நாயனாரும் ஈட்டை நேரே ஸேவிக்காவிடினும் அதிலுள்ள அர்த்த விசேஷங்களைத் தமது தமப்பனாரான வடக்குத் திருவீதிப்பிள்ளை வாயிலாகக் கேட்டேயிருப்பார்கள்— பதிப் பாசிரியர்].

"பெருமாளே! பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீவசனபூஷணமென்று ஒரு ரஹஸ்யக்ரந்தமிட்டு நம் தர்சனத்தையெல்லாம் வ்யர்த்தமாக்கினார்" என்று பெருமாளுடனே கோள் சொல்ல; அத்தைக்கேட்ட பெருமாளும் சீறி, பிள்ளைலோகாசார்யரை யழைத்துவிட, அவ்வளவிலே அவர் நீராட எழுந்தருளியிருக்க, நீராடியெழுந்தருளுகிற அழகியமணவாளப்பெருமாள் நாயனார் இவ்விசேஷங்கேட்டு பெருமாள் ஸந்நிதியில் சென்றவாறே பெருமாளும், அர்ச்சகமுகேந, "நாயனாரே! நாம் அநந்தமான அவதாரம் பண்ணினது தர்மஸம்ஸ்த்தாபநார்த்தமன்றோ? நீங்கள் ரஹஸ்யக்ரந்தமிட்டு அத்தை வ்யர்த்தமாக்குகிறது என்?" என்று வினவியருள; அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும், ஸ்ரீவசபூஷண ஸ்தாபநார்த்தமாகச் செய்தருளின ஆசார்யஹ்ருதயமாகிற ப்ரபந்தத்தை, பெருமாள் ச்ரோதாவாய் தாம் வக்தாவாக, ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை சொன்னாற்போலே இவர் ஆசார்யஹ்ருதயத்தை விண்ணப்பஞ்செய்து தலைக்கட்டினவாறே, பெருமாள் மிகவுகந்தருளி. "இதுவும் நாம் செய்ததொன்றன்றோ?" என்று கோள் சொன்னவர்களை வாரியடித்துத் தள்ளிவிட்டருளி நாயனாருக்குத்தம் ஸர்வ பரிஜந பரிச்சதங்களோடே ப்ரஹ்மரதம் ப்ரஸாதித்து உபலாளித்துத் திருமாளிகையே போகவிட்டருளினார். இவ்வைபவங்கேட்டுப் பிள்ளைலோகாசார்யரும் *வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்று அதிஸந்தோஷத்துடனே ஆலிங்கித்துக் கொண்டருளினார்.**

---

**ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரம் நம்பெருமாளுடைய நியமனபடியாக அருளிச் செய்தப்பட்டதென மணவாளமாமுனிகள் ஸாதித்தருளியிருப்பதால் இங்கு காணும் ஐதிஹ்யம் ப்ராமாணிகமா? என்ற ஐயம் எழுகிறது பின்புள்ளார் எக்காரணத்தாலோ சேர்த்ததாயிருக்கலாம் என்று தோன்றுகிறது. வல்லவர் வாய்க்கேட்டுத்தெளிக.

மணவாளமாமுனிகள் தாமருளிச்செய்த ஸ்ரீவசநபூஷணவ்யாக்யான அவதாரிகையில் ஸாதித்தருளும் பங்க்திகள் வருமாறு: ஸம்ஸாரிசேதனர் இழவு ஸஹிக்கமாட்டாத பரமக்ருபையாலே தத்உஜ்ஜீவநார்த்தமாக தாமும் பலப்ரபந்தங்களருளிச் செய்த பிள்ளைலோகாசார்யர், ஆசார்யபரம்பரா ப்ராப்தங்களான வர்த்தங்களில் அவர்கள் தாங்கள் கௌரவாதிசயத்தாலே ரஹஸ்யமாகவுபதேசித்துப் போந்தவையாய் அருமை பெருமைகளைப்பற்ற இதுக்குமுன்பு தாமும் ப்ரகாசிப்பியாமலடக்கிக்கொண்டு போந்த

வையுமான அர்த்தவிசேஷங்களெல்லாத்தையும், பின்புள்ளாரு மிழக்கவொண்ணு தென்கிற தம்முடைய க்ருபாதிசயத்துக்கு மேல், **பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே, ஸ்ரீவசபூஷணமாகிற இப்ப்ரபந்த முகேந வெளியிட்டருளினர்.**

முன்பே பேரருளாளப்பெருமாள் (கச்சித்தேவப்பெருமான்) தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே மணற்பாக்கத்திலே இருப்பரொரு நம்பியாரை விசேஷகடாக்ஷம் பண்ணியருளி, தஞ்சமாயிருப்பன சில வர்த்தவிசேஷங்களைத் தாமேயவர்க்கு ஸவப்நமுகேந வருளிச்செய்து, "நீர் போய் இரண்டாற்றுக்கும் நடுவே வர்த்தியும்; இன்னமுமக்கிவ்வர்த்தங்களெல்லாம் விஶதமாக நாமங்கே சொல்லுகிறேம்" என்று திருவுள்ளமாயருளுகையாலே அவரிங்கே (திருவரங்கத்தே) வந்து பெரிய பெருமாளை ஸேவித்துக் கொண்டு, தமக்கு முன்பங்கருளிச்செய்த வர்த்தங்களையும் அசலறியாதபடி அநுஸந்தித்துக்கொண்டு ஏகாந்தமானதொரு கோயிலிலே வர்த்தியாநிற்கச் செய்தே, தம்முடைய ஸ்ரீபாதத்துக்கந்தரங்கரான முதலிகளுந்தாமுமாக பிள்ளை ஒருநாள் அந்தக் கோயிலிலே யாத்ருச்சிகமாகவெழுந்தருளி, அவ்விடம் ஏகாந்தமாயிருக்கையாலே ரஹஸ்யார்த்தங்களை யவர்களுக்கருளிச் செய்துகொண்டெழுந்தருளியிராநிற்க, அவை, தமக்குப் பேரருளாளப்பெருமாளருளிச்செய்த வார்த்தாவிசேஷங்களாயிருக்கையாலே, அவர் போர வித்தராய் உள்ளினின்றும் புறப்பட்டு வந்து பிள்ளை ஸ்ரீபாதத்திலே விழுந்து, "அவரோ நீர்?" [அந்த பேரருளாளப்பெருமாள் தானோ நீர்] என்ன, "ஆவது; ஏது" என்று பிள்ளை கேட்டருள, பேரருளாளப்பெருமாள் தமக்கு இவ்வர்த்தங்களை ப்ரஸாதித்தருளினபடியையும், இத்தேசத்திலே போரவிட்டருளினபடியையும் இன்னமுமங்கே சொல்லுகிறேமென்றருளிச் செய்தபடியையும், விண்ணப்பஞ்செய்ய, கேட்டு மிகவும் ஹ்ருஷ்டராய் அவரையுமபிமாநித்தருள, அவருமங்குத்தைக்கந்தரங்கராய் வர்த்திக்கிற நாளிலே, பெருமாள் அவர்க்கு ஸ்வப்நத்திலே 'இவ்வர்த்தங்கள் மறந்து போகாதபடி இவற்றையொரு ப்ரபந்தஸ்தமாகச் சொன்னேமென்று நீர் பிள்ளைக்குச் சொல்லுமென்று திருவுள்ளமாக, அவரிப்படி பெருமாள் திருவுள்ளமாயருளினரென்று விண்ணப்பஞ் செய்ய, "ஆனல் அப்படி செய்வோம்" என்று' திருவுள்ளம் பற்றி அநந்தரமிப்ப்ரபந்தமிட்டருளினரென்று ப்ரஸித்தமிறே. **[இது வரை மணவாளமாமுனிகளின் ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநாவதாரிகை பங்க்திகள்]**

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருப்பாவை முதலான சில ப்ரபந்தங்களுக்கு வ்யாக்யானஞ் செய்தருளினார். இத்தை நினைத்திறே *தன்சீரால் வையகுருவின் தம்பி மன்னு மணவாளமுனி செய்யுமவை தானுஞ் சில என்று ஜீயரும் அநுஸந்தித்தருளினார். [உபதேசரத்தின மாலை—47]

பின்பு பிள்ளைலோகாசாரியரும் நாயனாரும் அதிவிரக்தராய் வாழ்ந்தருளுகிற காலத்திலே, நாயனார் சிறிது காலமெழுந்தருளியிருந்து அசிரேண பரமபதத்தை ப்ராபித்தருள, பிள்ளையும் பாகவதவிஶ்லேஷத்தாலே மிகவும் சோகார்த்தராய் அவர் திருமுடியைத் தம்மடியிலே வைத்துக் கொண்டு

**மாடும்மை மன்னுமணவாள வண்ணலொடு***
**சேமமுடன் வைகுந்தஞ்சென்றக்கால்—மாமென்று**
**தொட்டுரைத்த சொல்லுந்துயந்தன்னிலும் பொருளும்**
**எட்டெழுத்து மிங்குரைப்பாரார்**

என்கிறபடியே பலவகை புலம்பி திருமுத்துதிர்த்து முதலிகள் தேற்றத் தேறி நின்று நாயனாருக்குச் சரமகைங்கர்யஞ் செய்து திருவத்யயனமும் நடத்தியருளினார். இவர் தனியன்

**த்ராவிடாம்நாய ஹ்ருதயம் குருபர்வக்ரமாகதம் |**
**ரம்யஜாமாத்ருதேவேந தர்ஶிதம் க்ருஷ்ணஸூநுநா ||**

[க்ருஷ்ணரென்னும் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் குமாரரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாராலே ஆசாரியர்களுடைய பரம்பராக்ரமமாய் ஆசார்யஹ்ருதயம் என்ற க்ரந்தம் அருளிச் செய்யப் பட்டது ]

## நம்பெருமாள் கோயிலை விட்டு வலசையாக எழுந்தருளல்

ஸர்வசேதநருமுஜ்ஜீவிக்கும்படி சரமப்ரமாணப்ரமேய ப்ரமாத்ரு வைபவங்களை ப்ரகாஶிப் பித்துக் கொண்டு பிள்ளைலோகாசார்யர் பெருமாளுக்கு ப்ராணபூதரா யெழுந்தருளியிருக்குங்காலத்தில் ஸ்ரீரங்கம் துருஷ்காக்ராந்தமாய்க் குடியிருக்கப் போகாமல் பெருமாள் நாய்ச்சிமாருடனே புறப்பட்டு, பெரிய பெருமாளுக்குத் திருமுன்பே கல்காப்புச் சாத்தி, முன்னே ஒரு

*மாடும்மைப மன்னு மணவாளன் மன்னுண்டு என்றும்—பாடம்

விக்ரஹத்தை யெழுந்தருளப் பண்ணி வைத்து, சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல்கானமடைந்து (பெருமாள் திரு 4-6) என்றும் *தம்பியோடு தாமொருவர்தம் துணைவிகாதல் துணையாக (பெரியதிரு 5-10-ா) என்றுஞ்சொல்லுகிறபடியே பெருமாள் தம் அந்தரங்கபரிகரத்துடனே வலசையாக வெழுந்தருள; பின்னையும், வாளும் வில்லுங்கொண்டு பெருமாளைப் பின்தொடர்ந்தடிமை செய்த இளையபெருமாளைப்போலே *உருவார்க்கரஞ்சங்கு சுமந்திங்கும் மோடொரு பாடுழல்வானோரடியான் (திருவாய் 8-3-7) என்கிறபடியே அத்தலைக்கு மங்களாசாஸநபரராய்த் தாமும் முதலிகளும் ஸேவித்துக்கொண்டு சேரவெழுந்தருள, அநந்தரம் பெருமாளும், "ப்ரவிஶ்யது மஹாரண்யம் ராமோ ராஜீவலோசந:" (ஸ்ரீரா-ஸம்க்ஷேபம்) என்றும் "வநம்ஸபார்ய: ப்ரவிவேஶ ராகவஸ்ஸலக்ஷ்மணஸ்ஸூர்ய இவாப்ரமண்டலம் (ஸ்ரீரா. அயோ. 119-22) [ராமபிரான் மனைவியுடனும் லக்ஷ்மணனுடனும் சூரியன் மேகமண்டலத்தைப் புகுவதுபோல வனம்புகுந்தனர்] என்றுஞ்சொல்லுகிறபடியே ஹர்ய்ர்க்ஷ தரக்ஷு கிடி கட்கபல்லூகாதி அநேக வநம்ருகஸஞ்சாரகர்ஜந பயங்கரமாய் *சிலைக்கைவேடர் திரிகிற கடுங்கானமான கள்ளர்பற்றிலே எழுந்தருளுகிறவளவிலே சிலதஸ்யுக்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணியருள, அச்செய்தியைக்கேட்டு முன்னேயெழுந்தருளின பிள்ளை லோகாசார்யர் மீண்டு எழுந்தருளி அவ்விடத்தில் அவர்களுக்குத் தாமும் ஸர்வஸ்வதாநம்பண்ணியருளி அப்பாலே யெழுந்தருள, அவ்வளவிலே சிலகள்ளர் வந்து அவர் பதம் பணிந்து பச்சைகட்ட,

**கலைமிகுபஞ்சமுடன் கள்ளர்பற்றில் கத்திருவிகாரியப்பே ரொருவர் வந்து**
**பலமறிந்து பதம்பணிந்து பச்சைகட்டப்பாங்குடனே வாங்கினுப்போல் வாங்கி நீங்கி,**
**நல மிகுந்த நாமிதனை நம்பினேமேல் நம்பெருமாளும்பருடன் நயந்து வாழும்**
**இலகுமிகு பெருஞ்செல்வமில்லையென்று எர்முடும்பையுலகாரியனு மரை செய்தானே**

என்கிறபடியே அவற்றையுபேக்ஷித்து:

## உலகாரியன் திருமலையாழ்வாரைத் திருத்தி நியமித்துத் திருநாடலங்கரித்தல்

ஜ்யோதிஷ்குடி என்கிற கிராமத்தில் பெருமாளுடனே யெழுந்தருளி அங்கே திருமேனி நோவுசாத்தி மிகவுந்தளர்ந்து கண்வளர்ந்தருள, திருவடிகளுக்கு அந்தரங்கரான முதலிகள் "எங்களுக்குத் தஞ்சமேது?" என்று விண்ணப்பஞ்செய்ய, அப்போது திருமலையாழ்வாரிடத்தில் திருவுள்ளம் ப்ரஸந்நமாய்க் குடிபுகுந்து,

ஓருமிடறு செய்து, ஸெலர்திகல்வதிகங்களிலே அதிநிபுணராய் மதுரை ராஜ்யாதிபத்யம் பண்ணுகிறவர் அதினைவிட்டு தர்சநப்ர வர்த்தகராம்படி ஆசீர்வதித்தருளி, அவரை யநுவர்த்தித்து ரஹஸ்யங்களையும் அர்த்தங்களையும் நன்றாக ப்ரஸாதிக்கும்படி கூரகுலோத்தமதாஸ நாயனாருக்கும், திருவாய்மொழியை ப்ரஸாதிக்கும்படி திருக்கண்ணங்குடிப் பிள்ளைக்கும் திருப்புட்குழி ஜீயருக்கும், மூவாயிரவ்யாக்யாநத்துக்கு நாலூர்ப்பிள்ளைக்கும், ஸப்தகாதை முதலான சில அர்த்த விசேஷங்களை ப்ரஸாதிக்கும்படி விளாஞ்சோலைப்பிள்ளைக்கும் நியமித்தருளி, *ஆனிதனில் வளர் பக்கத்தாறிரண்டா நாள் தன்னில், ஊனமிலிவ்வுலகார் முடும்பை யரிகோனுயர் திவத்து, வானவர்கள் தற்சூழ வைகுந்தக்கூட்டமொடு தானினிது வீற்றிருக்கத் திருவுள்ளமாய், விளாஞ்சோலைப் பிள்ளையைத் திருவநந்தபுரத்திலே திருமேனியளவாக எழுந்தருளி யிருக்கும்படி நியமித்தருளி, பிள்ளை திருவடிகளை த்யானித்துக் கொண்டு ஜ்யேஷ்டசுத்த த்வாதசியிலே திருநாட்டுக்கெழுந் தருளினார். முதலிகள் சோகார்த்தராய் மிகவும் க்லேசித்துத்தேறி, பெருமாள் திருப்பரிவட்டம் திருமாலை வரவிட, ஸம்ஸ்கரித்துப் பள்ளிப்படுத்துத் திருவத்யயநத்தைப் பெருக்க நடத்தியருளி னார்கள். பிள்ளைலோகாசாரியர் திருநக்ஷத்ரம் ஐப்பசியில் திருவோணம், அவர் தனியன்,

— லோகாசார்யகுரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே |
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம: ||

[ஸம்ஸாரமாகிற பாம்பினால் கடிக்கப்பட்டிருக்கும் ஜீவர் களுக்கு உஜ்ஜீவன ஒளஷதமாய், வடக்குத்திருவீதிப்பிள்ளையின் குமாரரான பிள்ளை லோகாசார்யரை அடிபணிகிறேன்]

## இனி நம்பெருமாள் வ்ருத்தாந்தம்:

பின்பு நம்பெருமாளும் *அரங்கநகருள் முன்னவனைத் திருமா லிருஞ்சோலை நின்றான் என்கிற சேர்த்தியாலே *சிலம்பாறுபாயும் தென்திருமாலிருஞ்சோலையிலே யெழுந்தருளி, இவ்விடம் *ஆயிர மாறுகளும் சுனைகள் பலவாயிரமும் ஆயிரம் பூம்பொழிலு முடைத்தாய் திருப்பொன்னியாலே சூழப்பட்ட *ஆராமம் சூழ்ந்த வரங்கத்தைப்போலே அதிமநோஹரமாயிருக்கையாலே, அங்கே பிள்ளையைப்பிரிந்த க்லேசமெல்லாம் பாறி

ஶ்ரீசித்ரகூடவிபிநேஷ்வப்யுபகாஸ் வச்ச தோயாஸ்வநுபவ
ஸாரஸஜ்ஞோ தண்டகாரண்ய வாஸாத் |
நிஷ்க்ராந்தநுபூதௌ ஸாபிலாஷோத்ய ராம ஶ்ரயஸி
வநகிரீந்த்ரம் ஸுந்த்ரீ பூய பூய: ||

[ஸுந். ஸ்தவம் 103. ராமபிரானே! ரஸிகரானதேவரீர் சித்ர கூடாதி பர்வதராஜங்களிலும், வநங்களிலும் நிர்மலமான நீரையுடைய மந்தாகிநீ முதலான நதிகளிலும், தண்டகாரண்ய வாஸத்தை அநுபவித்தருளிற்று. அப்படி திருவுள்ளத்துக்குப்பாங்காக அநுபவித்தராஸிக்யாதிசயத்தாலே மீண்டும் அவ்வநுபவங்களில் திருவுள்ளம் புகுந்து அழகராகத் திருவவதரித்து இத்திருமாலிருஞ்சோலைமலையை உறைவிடமாகக் கொண்டருளிற்று] என்கிறபடியே வநவாஸவாஞ்சையையுடையராய் வநகிரிப்ரஸ்தமான அங்கே சிலகாலமெழுந்தருளியிருந்து விச்ரமித்தருளி, அழகிய மணவாளன் கிணற்றையும் அறஞ்சுவராகி நின்றவரங்கரானதாம் தார்மிகன் வைத்த தணணீர்ப்பந்தலோபாதியாக உண்டாக்கி வைத்து, பின்பு அனைத்துப்பரிகரத்துடனே *கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன் என்று அதுவே நிரூபகமாம்படியான ஸ்ரீகுலசேகரப்பெருமாளாண்டருளிய தேசத்தை விரும்பியெழுந்தருளி அவ்வவதேசங்களிலே சிலநாள் இனிதமர்ந்திருந்து; அநந்தரம் கோழிக்கோடேற எழுந்தருள:

*சுடர்கொள்சோதியைத் தேவரும் முனிவருந்தொடர என்கிறபடியே மற்ற திவ்யதேசத்தெம்பெருமானகளும் நம்மாழ்வாரும் அங்கே வலசையாக எழுந்தருள, அவர்களையும் ஆதரித்தருளி ஆழ்வாரைத்தம்முடைய திவ்யஸிம்ஹாஸனத்திலே வைத்துக் கொண்டு *அடியடையாதாள் போலணுகியடைந்த இவரைக் கண்டுகொண்டிருந்து, தம்முடைய திவ்யஸிம்ஹாஸனமான வட்டமணையையும் முத்துச்சட்டையையும், பகல்திருமுன்பந்தத்தையும் ப்ரஸாதித்து க்ருபை பண்ணி அங்கு நின்றும் புறப்பட்டு ஆழ்வாருடனே தேனேக்கிடம்பைக்கு எழுந்தருளி அங்கே சிறிதுகாலமெழுந்தருளியிருந்து, ''கூடவருகிறேன்'' என்ற ஆழ்வாரை நிறுத்தி, புங்கனூர் வழியாகவெழுந்தருளி அங்கேயிருந்து திருநாராயணபுரத்தேற ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, அங்கே சிலநாள் விஹரித்து, *திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்தையடைந்து

## நம்பெருமாள் திருமலையில் எழுந்தருளியிருத்தல்:

**ஸுரம்ய மாஸாத்யது சித்ரகூடம் நதீஞ்சதாம் மால்யவதீம் ஸுதீர்த்தாம் |**
**ననంద హృష్టో మృగపక్షిజుష్టాం జహౌ చ దుఃఖం పురవిప్రవాసాత్ ||**

*[ஸ்ரீரா ஆர. 59-38 ஸ்ரீராமபிரான் மிக அழகியதான சித்ர கூடத்தையும் நல்ல நீருடையதும் விலங்குகள் பக்ஷிகளால் விரும்பபட்டதுமான அந்த மால்யவதீ என்னும் நதியையு மடைந்து அயோத்தியினின்றும் பிரிவினுண்டான துக்கத்தையும் மறந்தான்]—என்கிற படியே *நன்மணிவண்ணனூரான குளிர ருவிவேங்கடத்தில் கூடியிருந்து குளிரப்பெற்று, '*மந்திபாய் வட வேங்கடமாலை வானவர்கள் சந்திசெய்ய நின்ருன் அரங்கத்தர வினணையான் என்னும்படியே ஏகமான ஆகாரத்தாலே அங்கே அநேக காலம் திவ்யோத்ஸவாதி வைபவங்களுடனே வாழ்ந்து கொண்டெழுந்தருளியிருந்தார்.*

## இனி ஆழ்வார் வ்ருத்தாந்தம்

*கோழிக்கோட்டினின்றும் பெருமாள் புறப்பட்டெழுந் தருளுகிற போது கூடப்புறப்பட்டருளாமல், ஸ்தாநத்தார் ஸ்தலத்தார் பரஸ்பரவைஷம்யத்தாலே தடங்கல் பண்ண' அந்தஸமயத்திலே மேற்கும் ‡கள்ளர்பற்ருய், கிழக்கும் கள்ளர் பற்ருய். வடக்கும் துருஷ்கமயமாயிருந்தபடியினுலே அத்திசை களில் இருக்கப் போகாமல் ஆழ்வாரை வலசையாகத் தென்மேற்கு மூலையிலே பஹுதூரம் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு செல்ல, அங்கே கள்ளர்பயம மிக, வேறு கத்யந்தரமில்லாமையாலே அத்யுந்நதமான ஒரு ‡சரிவுகண்டு ஆழ்வாரை ஒருதிருப்பெட்ட கத்திலே யெழுந்தருளப்பண்ணி, சங்கிலி கட்டி அந்த அரங்கிலே புாங்காக எழுந்தருளப் பண்ணி விட்டு திருவாபரணங்களையும் திருப்பொக்கசத்தையும் நிக்ஷேபித்து எல்லோரும் மலையினின்றும் இறங்கினவளவிலே கள்ளர் பள்ளர் கையிலகப்பட்டவர்கள் உடைகளை சூறைகொடுத்துவிட, அதற்குந் தப்பினவர்கள் தங்கள் தங்களுடைய இடம் போய்ச்சேர்ந்தார்கள்.*

*அவர்களிலே தோழப்பர் என்பாரொருவர் ஆழ்வார் திருவடி களிலே அத்யந்தப்ரவணராய் அபிமானியாயிருக்கையாலே, தாம் மதுரையிலே சென்று திருமலையாழ்வாருக்கறிவிக்கக் காத்*

திருந்து இச்செய்தியையெல்லாம் தெரியச் செய்ய, திருமலையாழ்வாரும் எல்லாவற்றையுங்கேட்டு அபிமானித்து மலையாள ராஜாவுக்குத் தம்முடைய ஸ்ரீமுகமும் கொடுத்து, அந்தரங்கராய் ராஜவல்லபராய் ஸ்ரீகார்யத்திலே அபிமானிகளாயிருக்கும் ஸ்வீபட்டர்களையுங் கூட்டி, த்ரவ்யமும் ஸாதித்து அனுப்பியருள: அவர்களும் அப்படியே திருவாங்கோட்டூரிலே செல்ல, தலைநம் தெளிந்தபடியிலே ஹ்ருஷ்டராய் ராஜாவைக் கண்டு செய்தியைச் சொல்ல, திருமலையாழ்வாருடைய ஸ்ரீமுகத்தை சிரஸா வஹித்துக் கொண்டு ப்ரியப்பட்டு, தோழப்பருக்கு பஹுமானமும் பண்ணி, ஆழ்வாரைத் திருக்கணம்பியிலே யெழுந்தருளப் பண்ணி வைக்கும்படி மநுஷ்யஸாமக்ரியையும் அர்த்தஸாமக்ரியையும் பூர்ணமாகக் கொடுத்தனுப்ப, அவர்களும் முந்திரிப்பு என்கிற வழியிலே சென்று சங்கலிகளும் ஊஞ்சற்பலகைகளுஞ் சேர்த்துத் தொடுத்து மலையிலேயேறி, "சரிவிலேயிழிவாரார்?" என்று சிந்திக்க, ப்ராணஸந்தேஹிகளாகையாலே எல்லாரும் பின் வாங்கியிருக்க, தோழப்பர் "நாமே இழிகிறோம்" என்று துணிய, அவருக்கு அப்போது ஸ்தலத்தார் சொன்ன கட்டளை: "உமக்கு ஆழ்வார் ஸந்நிதியில் வகுளாபரணபட்டரோடொத்த ஸ்வதந்த்ரமும், திருமஞ்சன காலத்திலே ஸஹஸ்ரதாரை கண்டருளிய திருவந்திக்காப்பு ஆனவுடனே ஆழ்வார் திருமுடியிலே சாத்தியிருக்கிற அலங்கலம் பூந்தொடையலையும், "ஆழ்வார் தோழப்பர்" என்று உமக்கு அருளப்பாடிட்டு நித்யமாக ஸாதிக்கிறோம்" என்று சொல்ல, அவரும் உகந்து ஓமறைந்து ஆழ்வார் தோழப்பரைத் தூங்குபலகையிலேயே ஏற்றிச் சரிவிலேவிட்டு ஸாவதாநமாகப் பார்த்திருக்க, அவரும் அதிலிறங்கித் திருப்பெட்டகத்தைத்தேட, ஒரு சேஷமகாரிபக்ஷி திருப்பெட்டகத்தின் மேலேயிருந்து தேடும் போது சப்திக்க, 'இதுவெறுமனன்று' என்று உகந்து திருப்பெட்டகத்தைக் கண்டு ஸேவித்து சிறிதுபொழுது ஆழ்வாரை த்யாநிக்க உடனே அப்பக்ஷி அப்புறத்திற்செல்ல, திருக்காப்பு நீக்கி ஆழ்வாரைக் கண்டுகொண்டு ஸேவித்து க்ருதார்த்தராய்த் திருப்பெட்டகத்தைத் திருக்காப்பு சேர்த்துக் கட்டி தூங்கு பலகையிலே யேறியருளப்பண்ணி சங்கிலியைக் குலுக்க, அவர்களும் மேலே சேந்திக்கொள்ள, தோழப்பர் எழுத்தாணியையும் ஓலையையும் கொண்டு போனவராகையாலே அங்கு நடந்த வ்ருத்தாந்தத்தையெழுதிவைக்கக் கண்டு அனைவரும் ஸந்தோஷப்பட்டு ஸேவித்துத் திருப்பெட்டகத்தைப் பலகையினின்றும் இறங்கியருளப்பண்ணி தோழப்பர் வரும்படிக்குத் திரும்பி பலகையை விட, அது சேர்ந்தவுடனே தோழப்பருமேறிச் சங்கிலியைக் குலுக்க,

அவர்களும் கல்லியைச் சேர்ந்த நடுவே தட்டுப் பட்டுத் தோழப்பர் விழுந்துவிட்டார். பிற்பாடு அவர் குமாரரான அப்பன் பிள்ளைக்கு எல்லாருமாக ஸமாதானம் சொல்லி "ஆழ்வாருடைய கைங்கர்யத்திலே திருமேனிவிட்டவராகையாலே அவருக்கு நீர் சோகிக்க வேண்டா; ஆழ்வார் உம்மை புத்ரராக அபிமானித்தருளினார்; உமக்கு ஸந்நிதியிலே முன் கட்டளை ப்ரகாரத்துக்கு அர்ச்சகத் தொழும்பும் என்று அருள்பாடும் வரிசைகளும் நடப்பிக்கிறோம்!" என்று சொல்லி **ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு முந்திரிப்பிலே சென்று ஆழ்வாருக்கு அங்கு நான் ஸம்ப்ரோக்ஷணம் கண்டருளப் பண்ணி மலையினின்றும் புறப்பட்டவன்று தொடங்கி திருவடி தம்பியாரும் ஸ்தலத்தாரும் ஆழ்வாரப்பனும் நன்றாக ஆராதித்துக் கொண்டு போந்தார்கள்.

கள்ளர்பற்றிலுள்ளார் இச்செய்தியைக் கேட்ட மாத்திரத்திலே தெய்வ யோகத்தாலே ஆநுகூல்யம் பிறந்து ஆழ்வார் திருவடிகளிலே ப்ரவணராய் அநேகமாக ஸத்கரித்து முன்பு பறித்ததையும் ஸமர்ப்பிக்க, அழகிய மணவாளன் ப்ரஸாதலப்தமான பொற்றகடுசேர்த்த வட்டமணையையும், முத்துச் சட்டையையும் வெள்ளி தீவர்த்திக்கோலையும், சித்தையையும் ஸமர்ப்பித்து, ஆழ்வாரைத் திருக்கணாம்பியிலெழுந்தருளப் பண்ணும் படிக்குத் திருப்பல்லக்கு முதலானவைகளை சேர்த்து மார்க்க சோதனம் பண்ணி மங்கள வாத்தியங்களுடனே எழுந்தருளப் பண்ணினார்கள். ஒரு பெரிய திருவடி பக்ஷியும் ஆழ்வாருக்கு மேலாக ஆகாசத்திலே சூழ்ந்து கொண்டு திருக்கணாம்பியிலே ஆழ்வாரெழுந்தருளியிருக்கிற கோயில் மரத்திலே கூண்டு கட்டி வஸிக்க, இந்த ஆச்சர்யத்தைக் கண்டு எல்லாரும் ஆழ்வாரை ஸேவித்து அவர் ப்ரபாவத்தைக் கொண்டாடிக் கொண்டு தங்கள் தங்கள் சக்திக்குத் தக்கபடி சிறப்பு ஆராதனமும் நித்யோத்ஸவமும் மாஸோத்ஸவம் விசேஷோத்ஸவமும் நடப்பித்துக்கொண்டு போந்தார்கள். இந்த அதிசயங்களையெல்லாம் திருவநந்தபுரம், திருவட்

---

** ஆழ்வாரைத் திருப்பல்லக்கிலே எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு அனைத்துப் பரிகரத்துடன் திருக்கணாம்பியில் எழுந்தருளப்பண்ணி ஸம்ப்ரோக்ஷணம் செய்து நித்யபடி திருவாராதனம் முதலான விசேஷோத்ஸவங்கள் எல்லாம் நடத்திக்கொண்டு ஆழ்வார் திருவடிகளில் அதிப்ரவணராய் அபிமானித்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள் - இது தெலுங்கு லிபி நூலின் பாடம்.

டாறு திருவண்பரிசாரம், திருவல்லவாழ் முதலான திவ்யதேசங்களிலுள்ள போற்றிமார் நம்பூதரிமார்கள் கேட்டு உடனே வந்து ஆழ்வாரைஸேவித்து வித்தராய் அவரைவிட்டுப் பிரியமாட்டாமல் உதயகாலத்திலே எப்போதும் போலே திருமஞ்சனங்கொண்டருளி தத்யோதநமும் நெய்த்தோசைப்படியும், பாகூட்டின கட்டிப் பொரியும், பாற்கஞ்சிக்கடாரமும் நித்யப்படியாக அமுது செய்தருளி விநியோகமாய், பிற்பாடு ஓரைவகைகளும் அமுது செய்தருளி, மத்யாஹ்நகாலத்திலே நாயகமலங்காரத்துடனே வரிசையாக சம்பாவவஸரமும் அமுது செய்தருளி, திருப்பணியாரவகைகளும் அமுது செய்து பின்பு உச்சிக்காலமும் அமுது செய்தருளி காலோசிதமான உபசாரங்களுடனே 'விச்ரமித்தருளத் திருக்காப்புச் சேர்த்து மீளவும் போது போக, நாலுநாழிகைக்குத் திருக்காப்பு நீக்கி ஸாயங்காலம் திருவாராதனங்கண்டருளி 'அஸ்தமன ஸமயத்திலே உப்புச்சாற்றமுதும், சம்பாவும், தோசைப்படியும் பொரியும் அமுது செய்து விநியோகமாய், பிற்பாடு அத்தாளம் அமுது செய்த்ருளி, இராக்காலமுமாய் ஸ்ரீபலிதுடி, திருவுற்ற சாதம், அரவணை, சுக்கு கஷாயம், இவைகளெல்லாம் அமுது செய்யும்படி போற்றிமார் திட்டம் பண்ணி நடப்பித்துப் போந்தார்கள். திருநகரியைப்போலே•பரிஜனங்களும் பூர்ணமாய் ஏழுமடாதிபதிகளும் ஒன்று பட்டு ஆழ்வார் திருவடிகளிலே அதிப்ரவணராய் அபிமானிகளாய் தத்தத்காலோசிதமான உத்ஸவங்களை நன்றாக நடப்பித்துக் கொண்டு வாழ்ந்தருளியிருந்தார்கள்.

## இனி கோயில் வ்ருத்தாந்தம்

பெருமாள் புறப்பட்டருளின பின்பு ''அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:'' என்னும்படி அயோத்தியென்னுமணி நகரமானது அழகழிந்தாற்போலே நம்பெருமாள் புறப்பட்டருளின பின்பு *அற்றபற்றர் சுற்றி வாழும் அந்தணீரங்கம் என்றும், *நல்லார்கள் வாழும் நளிரங்கம் என்றும், *தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம் என்னும்படியான கோயிலானது அழகழிந்தது.

**பின்னும் அங்கே வந்து ஆக்ரமித்தவன் செய்தபடி:** *திட்கொடிமதிளைப் பிடுங்கி கண்ணனூரிலே தனக்கு ஆவரணமாகக் கட்டுவித்து, பின்னையும் அங்கே உபத்ரவங்களைப்பண்ண உபக்ரமிக்க, அவ்வளவிலே, **சிங்கப்பிரான்** என்னும் பேரையுடையராய் பெருமாள் திருவிளையாட்டமான அழகியமணவாளர் கார்ணிய-ப்ராஹ்மணராய் தமிழ் விரகரான ஒருவர் துருஷ்கன் வாசலிலே காரியம் ஆராய்ந்து நின்று அவன் நினைத்தபடி ஒன்றும் செய்யாமல்

அவனுக்கு அநுகூலமாகவே சொல்லிக்கொண்டு, மதிள்கள், மாளிகைகள், கோபுரங்கள் துன்னுமணி மாடங்கள், சாலைகள் தொடக்கமானவற்றையும், * செம்பொனுயவருவரையனைய கோயில் மணியனுரையும் காத்து ரக்ஷித்துக்கொண்டு போந்தார். அதுகண்டு அங்குண்டான ஆசார்யர்கள் எல்லாரும் அவரை அநுவர்த்தித்து நல்வார்த்தை சொல்லிக் கொண்டு போந்தார்கள்.

## திருவாய்மொழிப்பிள்ளை வைபவம்.

பிள்ளைலோகாசாரியர் திருவடிகளிலே ஆச்ரயித்தவளான ஸாத்விகை அல்மையார் அவர் விச்லேஷம் பொறுக்கமாட்டாமல் பரமபதத்துக்'கெழுந்தருள, அவள் குமாரரான திருமலையாழ்வாரை அவர் சிறியதாயாரான அம்மையார் போஷித்துப் போந்தார். திருமலையாழ்வாரும் பால்யங் கடந்து ப்ராப்த யௌவநராய் ப்ரவபுத்வமுடையராய், * சதிரிளமடவார் தாழ்ச்சியை மதித்து, *அணிமென்குழலாரின்பக்கலவியமுதுண்டு கொண்டு திரிய, இவர் சதிருடைய தமிழ் விரகராயிருக்கையாலே இவரைத் திருத்துவதாகக் கூரகுலோத்தமதாஸர் திருவுள்ளம்பற்றி, இவர் முன்பே திருவிருத்தத்தை அநுஸந்தித்துக் கொண்டு எழுந்தருள, இவர் (திருமலையாழ்வார்) அர்த்தவானுய் அதற்குப் பொருள் கேட்க, நாயனும், "உனக்குச் சொல்லவொண்ணுது' என்று குத்ஸித்து உமிய, **திருப்பல்லக்கிலே இருந்த இவர்க்கு (திருமலையாழ்வாருக்கு) பிள்ளைலோகாசாரியர் விஷேகடாக்ஷம் பண்ணியிருக்கையாலே உமிழ்ந்தற்குக் கோபியாமல் ஸ்வபடரைவிலக்கி அச்செய்தியை அம்மையாருக்குச் சொல்ல, அவளும் பிள்ளைலோகாசரியர் திருவடிகளிலுண்டான ஸம்பந்தத்தை ஸ்மரிப்பிக்க, இவர்க்கு அநுதாபம் பிறந்து ஆச்ரயணோந்முகராயிருக்க;

அக்காலத்திலே சிங்கப்பிரானுக்குத் "திருமணத்தூண் நம்பி" என்று திருநாமமாயிருக்க, அவர்க்கு எல்லாரும் ப்ரீத்யதிசயத்தாலே அநுவர்த்தித்து நல்வார்த்தை சொல்ல அவரும், "பலரும் அருளிச் செய்கையாலே எனக்கொன்றும் தெரிகிறதில்லை; வாக்மியாயிருப்பாரொருவரைத் தெளிவாயருளிச் செய்யும்படி

---

** திருமலையாழ்வார் அப்போது ராஜப்ரதிநிதியாய் ராஜ்யபாரம் பண்ணிக்கொண்டிருந்தார். ராஜா இறந்து ராஜபுத்ரர்கள் பாலர்களாயிருந்தபடியால் ராஜபத்நி ராஜ்யபாரத்தை இவரிடம் ஒப்புவித்திருந்ததாகத் தெரிகிறது.

கற்பிக்க வேணும்'' என்ன; அவர்களும், திருமலையாழ்வாருடைய வாக்வைபவஹார ஸாமர்த்யத்தைக் கண்டு "நீர் சொல்லும்" என்று நியமிக்க, அவரும் அப்படியே சொல்ல, அவ்வார்த்தைகள் அஸம்ப்ரதாயமாயிருந்தபடியையும், அவருடைய ஆச்ரயணருசியையுங் கண்டு, *இவரை ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராக்கக் கடவோமென்று *ஓதுமுடும்பையுலகாசிரியரருள் ஏதுமறவாத எம்பெருமானை கூரகுலோத்தமதாஸர் இவரை அநுவர்த்தித்துத் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே *செயல் நன்றாகத் திருத்துவதாக மதுரையிலே சென்று ஸமயம் பார்க்க, ஒரு நாளளவிலே திருமலையாழ்வார் யானைமேலேறிப் புறப்பட, தாம் மேட்டு நிலத்திலே நின்று தம்மைக் காண்பித்துக் கொள்ள, திருமலையாழ்வார் இவரைக் கண்டவுடனே பிள்ளை லோகாசாரியராக ப்ரதிபத்தி பண்ணி, யானையினின்றும் சடக்கென இறங்கி நாயன் திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ண, நாயனும் இவரை எடுத்தணைத்து ஸ்வாசார்யப்ரபாவத்தையிட்டு இவரைக் கொண்டாட, திருமலையாழ்வாரும் இவரை (நாயனை) உள்ளே எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு சென்று ஸத்கரித்து ஹிதம் கேட்க, பிள்ளைலோகாசாரியர் சரமகாலத்திலே அருளிச் செய்தபடிகளையெல்லாம் ஸவிஸ்தாரமாக அருளிச் செய்யக் கேட்டு உகந்து "தேவரீர் அடியேனை க்ருபைபண்ணி இங்கேயெழுந்தருளியிருந்து ப்ராத:காலத்திலே திருமண்காப்பவஸரத்திலே எழுந்தருள வேணும்'' என்று வேண்டிக்கொண்டு, வைகையாற்றின் கரையிலே ஸந்த்யாமடத்தருகே ஒரு திருவீதியையும் அதிலே இவர்க்கொரு திருமாளிகையுஞ் சமைத்து ஜாத்யாச்ரமநிமித்த துஷ்டங்களேதேதோ அவைகளைப் பரிஹரித்துத் தளிகைக்கு நடக்கும்படி அமரிக்கை பண்ணினார்.

கூரலோத்தமதாஸ நாயனும் நித்யமாகத் திருமண்காப்பு வேளைக்கு எழுந்தருள, இவர் திருமண் சேர்க்கச் செய்தே 'லோகாசார்யாய' என்று தொடங்கி தனியன்களை யநுஸந்திக்கக்கண்டு மிகவும் ப்ரியப்பட்டு அன்று தொடங்கி கிஞ்சித்கிஞ்சித்காலம் அவரிருக்குமளவும் அநுவர்த்திக்கொண்டிருந்து ரஹஸ்யார்த்தங்களை ப்ரஸாதிக்க, அவரும் நன்றாக அநுவர்த்தித்துக்கொண்டு ப்ரதிபத்தியுடனே கேட்டுவந்தார். ஒருநாள் ராஜகாரியாவஸரத்தினாலே சொன்ன அர்த்தத்தைக் கேளாமல் 'பொறுத்தருளவேணும்' என்ன; மற்றைநாள் இவரெழுந்தருளாமலிருக்க, அற்றைநாத்திலும் பராமர்சமின்றிக்கேயொழிய, பிற்றைநாள் நாயனெழுந்தருளவில்லையென்று பராமர்சித்து உடனே ஆளைவிட, அவர்கள் சென்று அறிவிக்க

விடத்து பேசாமலிருந்துவிட, அவர்கள் சென்று திருமலையாழ்வாருக்கறிவிக்க, அவர், மற்றை நாளும் நாயனெழுந்தருளாதபடியினாலே தம்முடைய ஆர்த்தியெல்லாம் தோன்றும்படி கால்நடையாக நாயன் திருமாளிகைக்குச் செல்ல, நாயன் நெடும்போது விளம்பித்து ஸேவைஸாதிக்க ஸேவித்து, திருவடிகளிலே விழுந்து போரக்லேசிக்க, நாயனாரும் உகந்தருளி "க்ஷமித்தோம்" என்று சொல்ல, காலக்ஷேபஸமயமாகையாலே அது நிறைவேறுந்தனையுமிருந்து அவர்களுடன் ஸ்ரீபாததீர்த்தஸ்வீகாரம் பண்ணினபின்பு நாயனாரும் திருமலையாழ்வாரை அமுதுசெய்யும்படி நியமிக்க, திருமலையாழ்வாரும் தளிகையை ஸ்வீகரிக்க அபேக்ஷிக்க, உகந்தருளி தளிகை ப்ரஸாதம் ஸாதித்தருள, திருமலையாழ்வாரும் ப்ரஸாத ஸ்வீகாரம் செய்தமாத்ரத்தில் பரமவிரக்தராய் "கூரகுலோத்தம தாஸநாயன் திருவடிகளே சரணம்" என்று பலகாலுமநுஸந்தித்துக் கொண்டு சென்று, ராஜகார்யஸமயத்திலேயும், ஒருவரை பேர் சொல்லியழைக்கும் போதும் இப்படியே சொல்லத்தொடங்கினாராகையாலே இவருக்கு உந்மாதம் பிடித்ததாகவேணுமென்று ராஜபத்நிக்கறிவிக்க, அவளும் திருமலையாழ்வாரையழைத்து வார்த்தை சொல்ல, இவரும் உத்தரத்துக்கு ப்ரத்யுத்தரம் சொல்லாமல் "கூரகுலோத்தமதாஸநாயன் திருவடிளே சரணம்; ஸகலகார்யமும் பத்ரம்" என்று இப்படியே சொல்ல, அவளும் "நாங்கள் ஸ்த்ரீ பாலர்களாயிருக்கிறபடியால் பிள்ளை ப்ரபுத்தனாகுந்தனையும் எல்லாவற்றிற்கும் தேவரீருண்டென்றிருந்தோம்; அப்படியின்றிக்கேயொழிந்ததோ?' என்று சோகிக்க, "நீர்சோகிக்க வேண்டா; பிள்ளை ஸமர்த்தனானான், எனக்கு நாயன் திருவடிகளை ஸேவித்துக்கொண்டிருக்கவேணும்; நீர் தவிர்க்க வேண்டா; ராஜகார்யத்தை அடிக்கடி விசாரித்துக்கொண்டு பிள்ளைக்கும் புத்தி சொல்லிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி ஸமாதானம் பண்ணி, ராஜகார்யமும் விசாரித்துக்கொண்டு நாயன் திருவடிகளையநுவர்த்தித்து ஸகலார்த்திங்களையும் அருளிச்செய்யக்கேட்டு க்ருதார்த்தராய் சிறிது நாள் அங்கேதானேயிருந்து பிற்பாடு திருப்புல்லாணிக்கு ஸமீபத்திலே நாயனெழுந்தருளியிருக்கிற **சிக்கிலி** என்கிறவூரிலே யெழுந்தருளி குருகுலவாஸம் பண்ணிக்கொண்டிருந்தார். நாயனாரும் தமக்குப் பிள்ளைலோகாசாரியர் ப்ரஸாதித்த பரமார்த்தங்களையெல்லாம் இவருக்கு ப்ரஸாதித்தருளினாராகையாலே கூரகுலோத்தமதாஸ முதாரம் என்றருளிச்செய்தார்.

அநந்தரம் நாயன் தம்முடைய சரம காலத்திலே திருமலையாழ்வாரையழைத்தருளி "விளாஞ்சோலைப்பிள்ளை யிடத்திலே இன்னம் உமக்கு வேண்டிய அர்த்த விசேஷங்களையெல்லாம் கேளும்" என்றும், "திருக்கண்ணங்குடிப்பிள்ளை யிடத்திலே திருவாய்மொழியைக் கேளும்" என்றருளிச் செய்து, பிள்ளை லோகாசாரியர் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினார். அவர் குமாரரைக் கொண்டு நாயனுக்கு தீர்த்த திருவத்யயனமும் நடத்தியருளினார்கள். கூரலோத்தமதாஸநாயன் திருநக்ஷத்ரம் ஐப்பசியில் திருவாதிரை; அவர் தனியன்

**லோகாசார்யக்ருபாபாத்ரம் கௌண்டின்ய குலபூஷணம் |**
**ஸமஸ்தாத்ம குணாவாஸம் வந்தே கூரகுலோத்தமம் ||**
**ஸ்வயமாஹூய ஸௌலேசாகுரவேஸர்த்ப்ரதாநத: |**
**லப்தோதாராபிகம் கூரகுலோத்தம மஹம் பஜே ||**

[பிள்ளைலோகாசாரியருடைய க்ருபைக்குக் கொள்கலமாய் கௌண்டின்யகுலத்துக்கணியாய், எல்லா ஆத்மகுணங்களுக்கு மிருப்பிடமான கூரகுலோத்தமதாஸ நாயனாரை அடிபணிகிறேன்.

தானே வலிய அழைத்து திருமலையாழ்வாருக்கு விசேஷார்த்தங்களை ப்ரஸாதித்ததனால் பெறப்பட்ட 'உதரார்' என்கிற] பெயரையுடைய கூரகுலோத்தமதாஸ நாயனாரை ஸேவிக்கிறேன்.

அநந்தரம் திருமலையாழ்வாரும் திருக்கண்ணங்குடிப்பிள்ளையருகே எழுந்தருளி ஸேவித்து, "அடியேனுக்குத் திருவாய்மொழியின் அர்த்தமருளிச்செய்யவேணும்" என்று வேண்ட, அவரும் அப்படியே தொடங்கியருளிச் செய்ய, அவர் தாத்பர்யப்ரதாநராய்க்கொண்டு தாத்பர்யார்த்தங்களையே ப்ரஸாதிக்க, இவர் "சப்தத்துக்கிசைய அருளிச்செய்யவேணும்" என்று நிர்ப்பந்திக்க, "ஆகில் திருப்புட்குழி ஜீயர் பாடேறப் போய்க்கேளும்" என்ன, அப்படியே புறப்பட்டுப் பெருமாள் கோயிலிலே எழுந்தருளின அற்றைநாள் அவர் திருநாட்டுக்கெழுந்தருளின பன்னிரண்டாம் திவஸமாய் அவர்க்குத் திருநாராயணபலி நடக்க அத்தைக் கண்டு மிகவும் துக்கித்திருக்க, பெருமாள்கோயிலாசார்யர்களும் கோயில் பரிகரமனைத்துக் கொத்தும் திருமலையாழ்வாரை கோயிலுக்கெழுந்தருளப்பண்ணுவித்துக் கொண்டுபோய் பெருந்தேவியாரையும் பேரருளாளனையும் ஸேவிக்கப்பண்ணி, தீர்த்தம் ஸ்ரீசடகோபன், சாத்துப்படி, திருத்துழாய், திருமாலை முதலான

வரிசைகள் ப்ரஸாதித்துபஹுமானம் பண்ணி தர்சநப்ரவர்த்தகராக வாழ்த்தினுர்கள். பிற்றை நாள் திருநாராயணபுரத்திலிருந்து நாலூர்ப்பிள்ளையும் அவர்குமாரரான நாலூராச்சான் பிள்ளையு மெழுந்தருளிப் பேரருளாளனை மங்களாசாஸனம் பண்ண வெழுந்தருள, அந்த வேளையில் திருமலையாழ்வார் ஸந்நிதியிலே மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க, இவர்கள் திருமலையாழ்வார் எழுந்தருளின செய்தியும் உள்ளே மங்களாசாஸனம் பண்ணியருளுகிறதும் அறியாமல் ஸந்தடியிலே பின்னே நின்று. "உள்ளே ஸேவிக்கிறவரார்?" என்று கேட்க, "கோயில் திருமலையாழ்வார்" என்ன, 'கோயில் திருமலை பெருமாள் கோயிலன்றோ!" என்றருளிச் செய்து கொண்டு அவர் ஸந்நிதி வைஷ்ணவர்களுக்குப் பின்னே நின்று ஸ்ரீசடகோபனுக்கு திருமுடியை உயரவெடுத்தருள, ஸ்ரீசடகோபன் திருமுடியிலே தரிக்கிற வளவிலே தம்முடைய திருவிரலாலே ஊன்ற, அர்ச்சகரும் சீக்கிர்மாக ஸந்நிதியிலே ஸ்ரீசடகோபனை யெழுந்தருளப் பண்ணி வைத்து திருமலையாழ்வார் கைப்பிடித்து, பின்னே வருகிற நாலூர் பிள்ளையை "அருளாளர் திருவடியூன்றியவரே!" என்றழைத்துத் திருமலையாழ்வாரை அவர்கையில் காட்டிக்கொடுத்து, "இவருக்கு மூவாயிரவ்யாக்யானம் ஸாதிக்கும்படி ஜ்யோதிஷ்குடியிலே நியமித்தோம்; இவர் வந்தார்; திருப்புட்குழி ஜீயர்பாடே ஈடு கேளாத இழவுதீர அந்தையும் இவருக்கு ஸாதியும்" என்று பரவசராய் நியமிக்க, பிள்ளையும், "அடியேன் க்ருதார்த்தனானேன்; திருக்கண்ணங்குடிப்பிள்ளை போராதவிவருக்குத் தினவுகெடச் சொல்ல வல்லேனோ?" என்று சிந்தித்து நிற்க, மனமொத்த நாதனை பேரருளாளன் "ஆத்மாவை புத்ரநாமாஸி" என்று ஆச்சான் பிள்ளை ஸாதித்தால் நீர் ஸாதித்ததாம்" என்று நியமித்தருள "நாயன்றே நாயன்றே" என்று உகந்து புறப்பட்டருளி "வாரீர்! திருதலையாழ்வாரே! நாம் போரஜரிந்தோம்; நீர் அதிநிபுணர்; உமக்குத் தகும்படி சொல்ல வல்லவர் இவர்" என்று *நல்ல மகனான ஆச்சான்பிள்ளை கையிலே காட்டிக் கொடுத்து, தமக்குத் திருநாராயணபுரத்துக் கெழுந்தருளத் திருவுள்ளமாய் புறப்பட்டெழுந்தருளினர்.

திருமலையாழ்வாரும், "க்ருதார்த்தனானேன்" என்று ஆச்சான் பிள்ளை திருவடிகளிலே ந்யஸ்தபரராயிருக்க, இவரைக் கைக்கொண்டருளித் திருவாய்மொழியீடு தொடங்கி நடத்தியருளா நிற்க, இத்தைத் திருநாராயணபுரத்தில் ஆயி, பிள்ளை தொடக்க மாணவர்கள் கேட்டு, இவரையெழுந்தருளும்படி எம்பெருமானை

ருடைய திருமுகமாக திவ்யாஜ்ஞையிட்டுவிட, அதைக் கண்டு ஆச்சான்பிள்ளை திருமலையாழ்வாரைக் கூட்டிக் கொண்டு திருநாராயணபுரத்தேற எழுந்தருள அவர்களும் எதிர்கொண்டு திருவடிகளை ஸேவித்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோர,

**ஆருஹ்யாமலயாதவாத்ரிசிகரம் கல்யாணதீர்த்தம் தத:**
**ஸ்நாத்வா|லக்ஷ்மணயோகிந: பதயுகம் நத்வாதுகத்வாதத: |**
**ஸ்ரீநாராயணமேத்யதத்ர தரணீ பத்மாலயா மத்யகம்**
**பஶ்யேயம் யதிகிம் தப: பலமத: ஸம்பத்குமாரம் ஹரிம் ||**

*[தூய்தான யாதவாத்ரியினுடைய உச்சியிலேறி திருக்கல்யாணிதீர்த்த புஷ்கரியிணியில் நீராடி இளையாழ்வாருடைய (எம்பெருமானாருடைய) திருவடிகளைத் தொழுது, மேலே சென்று திருநாராயணனை ஆஶ்ரயித்து, அங்கு ஸ்ரீபூமிப்பிராட்டியார், பெரியபிராட்டியார் இவர்கள் நடுவில் எழுந்தருளியிராநின்றுள்ள ஸம்பத்குமார் (செல்வப்பிள்ளை) எனும் எம்பெருமானைக் காண பெறுகில் இதைக்காட்டிலும் வேறான தப:பலனானது என்ன இருக்கிறது?]*

என்று சொல்லுகிலபடியே க்ரமத்திலே பெரிய ப்ரீதியோடே சென்று திருநாராயணன் திருவடிகளை அரணாகப்பற்றி அங்கே இனிததமர்ந்தெழுந்ருளியிருக்கிற எம்பெருமானாரை ஸேவித்து அவர் புருஷகாரமாக யதுகிரி நாயகியாரையும் செல்வப் பிள்ளையையும் திருநாராயணனையும் ஸேவித்து அங்கேயெழுந்தருளியிருந்து எம்பெருமானார் ஸந்நிதியிலே தொடங்கி A *உறுபெருஞ் செல்வம் இத்யாதிப்படியே அவருக்குகப்பாக அங்கே ஆச்சான் பிள்ளையுடனே ஈடு முப்பத்தாறுயிரமுங் கேட்டார்கள்; அவரும் *மேலோர்க்கீந்தார் என்னும்படி ப்ரஸாதித்தருளினார் திருமலையாழ்வாரும் அவர் திருவடிகளைப் பழுக்கஸேவித்து *அரியவருளிச் செயல்பொருளை ஆரியர்களெல்லாரும் உகக்கும்படி கேட்டருளினார். பின்பு தேவராஜரும் இவருடைய ஜ்ஞானபக்தி வைராக்யாதி குணபூர்த்தியைக் கண்டுகந்து இவரை விசேஷாபிமானம் பண்ணியருளி தம்முடைய திருவாராதனமான *இனவாயர்தலைவனை இவர்க்கு ப்ரஸாதித்தருளினார்.

**தேவாதிபாத்லமதிகம்ய ஸஹஸ்ரகீதேர் பாஷ்யம் விகூடமபிய:**
**ப்ரதயாம் சகார |**
**குந்திபுரோத்பவமமும் ஶரணம்பஜேஹம் ஸ்ரீசைலநாதமுருபக்தி**
**ப்ருதம் ஶடாரேர || B**

A. அடுத்த [பக்கம் பார்க்கவும் B. தொடர்ச்சி 46ம் பக்கம்.

A *உறுபெருஞ்செல்வமும் என்று தொடங்கி, *மாறன் விளங்கியசீர் நேறிதரும் செந்தமிழாரணமே (ரா. நூற் 19 என்கிறபடியே உடையவருக்கு உகப்பாக *நல்லருள் நம் பெருமான் நாராயணன் நாமங்களாய் (திருவாய் 5-9 10), *கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல் (திருவாய் 10-6-11) ஆன திருவாய்மொழி தொடங்கி ஈடு முப்பத்தாறுயிரமும் அத்ருப் தாம்ருத ரூபமான இதின் சப்தஸ்வாரஸ்யம், அர்த்தஸ்வாரஸ்யம் த்வநிவ்யங்க்யம், பாவார்த்தம், ஸ்வாபதேசம், அந்யாபதேசம், எல்லாம் ஸம்சயவிபர்யமற நன்ருகத் தெரியும்படி *மேலோர்க் கீத்தார் அவரேமிக்கு (உப.ர.மா 49) என்னும் படி நாலுராச்சான் பிள்ளை தம் பரம க்ருபையாலே ப்ரஸாதித்தருள, பிள்ளை முதலானவர்கள் கேட்டார்கள். அத்தைப்பற்றி

**ஸ்ரீஶைலநாதகுருமாத்ர குருத்தமாப்யாம் ஸ்ரீஸூக்திதேஶிகவரேண ச யஸ்த்ரிதைவம் |**
**வ்யக்தம்ஶடாரிக்ருதிபாஷ்ய ஸுஸம்ப்ரதாயோ விஸ்தாரமேதி ஸஹி வைஷ்ணவ புங்கவேஷு ||**

என்றும்

**கோலாதிபாத் பிதுரவாப்ய ஸஹஸ்ரகீதேர் பாஷ்யம் ஹி பூர்வதம தேஶிகவர்யகுப்தம் |**
**த்ரேதா ப்ரவர்த்யபுவிய: ப்ரத்யாஞ்சகார தம் தேவராஜகுருவர்யமஹம் ப்ரபத்யே ||**

என்றும் அநுஸந்தித்தார்கள். [யாதொரு ஆழ்வாரருளிய திருவாய்மொழியின் பாஷ்யமான ஈட்டின் நல்ல ஸம்ப்ரதாயமானது, திருவாய்மொழிப்பிள்ளை திருநாராயணபுரத்தாய் திருவாய்மொழியாசார்யர் என்னும் இம்மூவராலும் இப்படி மூன்று வி த மா க வெளியாயிற்றே. அதுவன்றே ஸ்ரீவைஷ்ணவ ச்ரேஷ்டர்களிடம் (இப்போது) பல படியாகப் பரவுதலைப் பெற்றுள்ளது. யாவரொருவர்—பூர்வாசார்யர்களால் மறைத்துவைக்கப் பெற்ற திருவாய்மொழியின் ஈட்டை தம் தமப்பனராகிய நாலூர்பிள்ளையிடமிருந்து பெற்று (மூவரின் மூலமாக) மூன்று விதமாக் ப்ரவர்த்திப்பித்து பூமியில் அதுதன்னை ப்ரஸித்தமாக்கினரோ, அந்த நாலூராச்சான் பிள்ளையை அடியேன் சரணமடைகிறேன்] திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறுயிரம் ஸாதித்தானவுட நாலூராச்சான்பிள்ளை திருமலையாழ்வாருடன் ஸ்வஸ்தானத்தேற எழுந்தருளினர். [இது தெலுங்கு பதிப்பில் காணும் அதிகபாடம்].

[யாவரொரு திருமலையாழ்வாரானவர் தேவாதிபர் என்ற நாலூராச்சான்பிள்ளையிடமிருந்து ரஹஸ்யமான திருவாய்மொழி யாயிரத்தினுடைய பாஷ்யமான ஈடுமுப்பத்தாயிரப் படியைப் பெற்று, பின்னர் அத்தைப்ரஸித்தமாக்கினாரோ, நம்மாழ்வார் விஷயத்தில் மிகவும் பக்தியுடையவராய், குந்தீ நகரத்தில் அவதரித்தவரான புகழ்பெற்ற அந்தத் திருமலையாழ்வாரை சரணம் பற்றுகிறேன் ] என்கிற படியே தேவப்பெருமான் கைக்கொண்டருளுந் திருமலையாழ்வாருக்கு ஆழ்வார் திருவடிகளிலே ப்ராவண்ய மதிசயித்து அவர் திருவடி தொழ வேணுமென்கிற அபிநிவேசத்தையுடையராய், "ஆஜகாம முஹூர்த்தேந" என்கிறபடியே அவரெழுந்தருளியிருக்கும் திருக்கணும்பியென்கிற திருப்படை வீட்டைக் குறித்து அங்கே சென்று அவர் திருவடிகளை ஸேவித்துத் தம்முடைய அபிநிவேசமெல்லாம் தீர்ந்து;

அநந்தரம் ஆழ்வாரைத் திருநகரியிலே திருக்குடிபுகுவிப்பதாகத்திருவுள்ளமாய், தாம்முந்தி திருநகரியேறயெழுந்தருளி, காடு வெட்டி நாடாக்கி, * நல்லார் பலர்வாழ் குருகூர் என்னும்படி குடியேற்றி ஆழ்வாரை யெழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டு *குருகூர்ச்சடகோபன் என்னும்படி யதாஸ்தாநத்திலே திருப்ரதிஷ்டை பண்ணியருளி

**ஶடகோபமுநிம் வந்தே ஶடாநாம் புத்திதூஷணம் |**
**அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜநகம் திந்த்ரிணீமூல ஸம்ஶ்ரயம் ||**

[வஞ்சகர்களுடைய புத்தியை நாசம் செய்பவராய், ஜ்ஞானமில்லாத மூடர்களுக்கு ஜ்ஞானம் பிறப்பிப்பவராய், திருப்புளியினடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசடகோபமுநிவரை அடிபணிகிறேன்] என்கிறபடியே உறங்காப்புளி நிழல்தன்னிலே ஏறியருளப் பண்ணி ஸேவித்து நிற்க இவர்க்கு **சடகோபதாஸர்** என்று தம்முடைய திருநாமத்தை யாதார்த்த நாமமாம்படி ப்ராஸாதித்தருள, இருவரும் "ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்யஶாலிநே [ஆழ்வாரின் அநுக்ரஹத்தினால் பெற்ற நிரதிசயமான பேறான கைங்கர்யத்தினால் விளங்காநின்ற திருமலையாழ்வார்] என்னும்படி பெரியவண்குருகூர்நகர் நம்பிக்காணூரியனாய், "புகழ் வண் குருகையும் பொற்கோபுரமும் புரிசை சூழ்கழனிதண்பொருநை மன்னாழ்வார் மறைத்தமிழாயிரமுந் திகழும்படி செய்த ஸ்ரீசைலேசர்" என்னும்படி ஆழ்வார் திருவடிகளிலே அசேஷசேஷவ்ருத்திகளிலும் அந்வயித்து அதுவே யாத்ரையாய்ப் பேரா நிற்கிற காலத்திலே

## திருமலையாழ்வாரும் விளாஞ்சோலைப் பிள்ளையும்

"விளாஞ்சோலைப் பிள்ளையை ஸேவித்து விசேஷார்த்தங்களைக் கேட்க வேணும்" என்று திருவுள்ளமாய்த் திருவநந்தபுரத்தே யெழுந்தருளி ஆழ்வாருடைய தமர்களில் ப்ரதானரான வாசி தோற்ற *படமுடையரவிற் பள்ளிபயின்றவன் பாதங்கண்டு பணிந்து, அநந்தரம் "கண்ணன் கழலிணை காட்டுமுலகாரியன்தாள் நண்ணுநலந்திகழ் நாரணனை" என்று சொல்லும் படியான விளாஞ்சோலைப்பிள்ளையைத் திருவடி தொழுவதாக அவரெழுந் தருளியிருக்கிற *வாசமேகமழுஞ் சோலையான திருச்சோலைக் குள்ளே சென்று ஸேவிக்க, "குருபதாம்புஜம் த்யாயேத் குரோர் நாமஸதாஜபேத்" [ஆசாரியனின் தாமரையடிகளை எப்போதும் சிஷ்யன் தியானிக்கக்கடவன்; ஆசாரியனின் திருநாமத்தை விடாமல் அநுஸந்திக்கக்கடவன்] என்றும்

**ஸ்ரீலோகார்ய முகாரவிந்தமகில ஶ்ருத்யர்த்த கோஶம ஸதாம் |**
**தத்கோஷ்டிஞ்ச ததேகலீநமநஸா ஸஞ்சிந்தயந்தம் ஸதா ||**

[ஸ்கலவேதார்த்தங்களாகிய செல்வம் சேமிக்கப்பட்ட பொக்கிஷமான பிள்ளைலோகாசார்யருடைய தாமரை போன்ற திருமுக மண்டலத்தையும் ஸத்புருஷர்களினுடைய இருப்பிடமான அவருடைய கோஷ்டியையும் எப்போதும் அவற்றிலேயே லயமடைந்த மனஸ்ஸோடு த்யானித்துக்கொண்டிருக்கிற விளாஞ் சோலைப் பிள்ளையை] என்றும் சொல்லுகிறபடியே பிள்ளை லோகாசாரியருடைய திவ்யமங்கள விக்ரஹத்தையும் அவருடைய திருவோலக்கத்தையும் த்யானித்துக் கொண்டு தம்முடைய திரு மேனியிலே சிலந்தி நூலிழைக்கும்படி A அஸ்தமிதாந்யபாவராய் நாலாறு நாள் ஸமாதியாக வெழுந்தருளியிருந்து அநுபவித்து, பின்பு இவரைக் கண்டு இவர்க்கு ஸகலார்த்தங்களையும் ஸாதிக்க இருவரும் கேட்டு க்ருதார்த்தராய்க் வேதகப் பொன்னை இவர் ஸம்பந்தத்தாலே தம்முடைய ஜந்மக்கொத்தையைக் கழித்துக்

---

A பாவோநாந்யத்ர கச்சதி' என்கிற திருவடியைப் போல இவரும் அஸ்தமிதாந்யபாவராய் நாலாறு நாள் ஸமாதியாக எழுந்தருளியிருந்து ஸ்வாசார்ய விக்ரஹாநுபவம் பண்ணியருளு கிறவர் திருக்கண்களை விழிந்து "நீர் யார்? இங்கு வந்த கார்யமென்?" என்று கேட்டருள இவரும் அடைவே எல்லாம் விண்ணப்பம் செய்யக்கேட்டு ஸந்தோஷித்து இவருக்கு

ஸ்ரீவசநபூஷண தாத்பர்ய-இவை தெலுங்கு பதிப்பில் அதிகபாடம்,

கொண்டு மீண்டு திருநகரியேறே வெழுந்தருளினர். விளாஞ்சோலைப் பிள்ளையும் ஸ்ரீவசபூஷணத்தின் தாத்பர்யங்களை ஏழுகாதையாக ஸங்க்ரஹித்து அருளிச் செய்து ஸர்வர்க்கு மூபகரித்தருளி தாமும் * செறிபொழிலநந்தபுரத்து அண்ணலார் கமலபாதமணுகுவார் அமரராவார் என்கிறபடி அபர்வறுமரர்களோடே கூடி அடிமை செய்ய வேணுமென்கிற ப்ராப்யத்வரையாலே தடுத்தும் வளைத்தும் பெறவேண்டும்படி பரமபக்தி தலையெடுத்து அவாவற்று வீடு பெற்றார்.

அப்போது நம்பிமார் (அநந்தசயனனை) திருவாராதனம் செய்யா நிற்க, விளாஞ்சோலைப்பிள்ளை திருவடி தொழச் சென்று கர்ப்பக்ருஹகத்திலே புகுந்து திருவடியருகே நிற்கக்கண்டு நம்பிமாரும் அது மலையாளதேசமாகையாலே "புலையரான விளாஞ்சோலைப்பிள்ளை யகத்து (அருகே) நாம் போகிறதில்லை" என்று திருக்காப்பு சேர்த்துக் கொண்டு புறப்பட, அவ்வளவிலே பிள்ளை ஸ்ரீபாதத்து முதலிகள் "விளாஞ்சோலைப்பிள்ளை லோகாசார்யர் திருவடிகள் சேர்ந்தார்" என்று நூற்றந்தாதி இயலுனே பரியட்டம் திருமாலைக்குக் கோயில் வாசலிலே வரக் கண்டு நம்பிமார் ப்ரத்யக்ஷமாகக் கண்ட ஆஸ்சர்யத்தை அனைவரக்கும் வெளிப்படுத்தினார்களென்று ப்ரஸித்தமிறே, இச்செய்தியையறிந்து திருமலையாழ்வார் ஸ்ரீபாதத்து முதலிகள்.

**கத்வாநந்தபுரம் ஜகத்குரு பதத்யாநோரதம் குத்ரசித் தம்**
**நாராயணதாஸமேத்யவிமலம் கத்வா ததங்க்ரிம் முதா |**
**தஸ்மாதார்யஜநோக்திமௌக்திகக்ருதம் வேதாந்தவாக்பூஷணம்**
**ஸ்ரீவாக்பூஷணமப்யவாப்பலகுதம் ஸ்ரீசைலநாதோபவத் ||**

[அந்தத்திருமலையாழ்வார் திருவநந்தபுரத்தையடைந்து ஓரிடத்தில் (புறச்சோலையில்) பிள்ளை லோகாசாரியருடைய திருவடிகளை தியானம் பண்ணுவதில் விருப்பமுள்ள அந்த நாராயணதாஸரை (விளாஞ்சோலைப் பிள்ளையை) அடைந்து நிர்மலமான அவர் திருவடிகளை மகிழ்ச்சியுடனடிபணிந்து அவரிடமிருந்து பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளாகிற முத்துக்களால அமைக்கப்பெற்ற வேதாந்த வாக்யங்களுக்கு ஆபரணமான ஸ்ரீவசநபூஷணத்தைப் பெற்று (மேலான) ஆசார்யரானார்] என்று அநுஸந்தித்தருளினார்கள்.

இந்தைத் திருமலையாழ்வார் கேட்டருளி சிஷ்ய புத்ரர்கள் செய்யும் க்ருத்யங்களையெல்லாம் பிள்ளை விஷயத்திலே அநுஷ்டானசேஷமாம்படி அநுஷ்டத்துக் காட்டியருளினார்A. இப்படி இவருடையB சரமசேஷிவிஷய சரமாநுவர்த்தநத்தை யறிக்கவர்கள்

**பற்றுதவெங்கள் மணவாளயோகி பதம்பணிந்தோன்**
**நற்றேவராசனலந்திகழ் நாரணதாதருடன்**
**கற்றுரெங்கராகுலோத்தமதாதன் கழல் பணிவோன்**
**மற்றுருமொவ்வாத் திருவாய்மொழிப் பிள்ளை வாழியவே**

என்று அநுஸந்தித்தார்கள்.

**வாழி நலந்திகழ் நாரணதாதன் வடிவும்**
**வாழியவனமுதவாய்மொழிகள்—வாழியவே**
**ஏறு திருவுடையானெந்தை உலகாசிரியன் சொல்**
**தேறு திருவுடையான் சீர்**

என்று தாமும் அநுஸந்தித்தருளினார்B. பின்பு திருமலையாழ்வார் தம்முடைய திருமருமகனாரை புத்ராபிமானம் பண்ணி, **தேவப் பெருமான்** என்று நாலூராச்சான்பிள்ளை திருநாமம் சாத்தியருளினார்.

இனி பிள்ளைலோகாசாரியர் சிஷ்யராய் கொல்லிகாவலதாஸரான **கோட்டூர் அழகியமணவாளப் பெருமாள் பிள்ளையும்**C லோகாசாரியர் ப்ராஸாதித்தருளின அர்த்த விசேஷங்களை அநுஸந்தித்துக்கொண்டு **சிக்கல் கிடாரம்** என்கிற க்ராமத்திலே சிலநாளெழுந்தருளியிருந்தார். பின்பு **திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணரையர்**D அவர் குமாரத்தியான **ஸ்ரீரங்கநாச்சியா**ரைத் திருமணம் புணர்ந்து அவர் திருமாளிகையிலே யெழுந்தருளியிருந்து தமக்கு ஜ்ஞாதவ்யார்த்தங்களையெல்லாம் அவர் ஸந்நிதி

---

A *பயிலுஞ்சுடரொளி, *நெடுமாற்கடிமை திருவாய்மொழிகளில் காட்டப்பட்ட ஸாரார்த்தமாய் பெரியநம்பி மாறநேர் நம்பி விஷயத்தில் அநுஷ்டித்ததை நினைப்பூட்டும். B இப்படி இவருடைய— அநுஸந்தித்தருளினார். இது தெலுங்கு பதிப்பில் இல்லை. C இவர் மணவாள மாமுனிகளின் மாதாமஹர். D மாமுனிகளின் தகப்பனார்; இவர் 74 ஸிம்மாஸநாதிபதிகளில் கோமடத்தாழ்வான் என்பவரின் திருவம்ஶ்யர் என்று சொல்வார்கள்.

யிலே கேட்டருளி பிள்ளைலோகாசாரியர் ஸந்நிதியிலே யோசாத் திருவெல்லாம் தீர்ந்து அந்த க்ருதஜ்ஞதைக்கு A

**வாழிமணவாளன் வாழியவன் வீரகர்**
**வாழியவன் குரவைமண்ணின் மேல்—வாழி**
**உலகாசிரியனுரைத்த பொருள்களெல்லாம்**
**பலகாலுரைக்குமவன் பண்பு**

என்றநுஸந்தித்து அவரைப் பிள்ளைலோகாசாரியராகவே ப்ரதிபத்தி பண்ணிக் கொண்டு அவருக்கு அநந்யார்ஹராய் அநுவர்த்தித்துப்போந்தார். இப்படி அவருக்கு அசேஷ ரஹஸ்யங்களையும் ஸாதித்து சிலநாள் கழிந்தவாறே அழகியமணவாளப்பெருமாள் பிள்ளையும் திருநாட்க்கெழுந்தருளினர்.

## அழகிய மணவாள மாமுனிகளின் திருவவதாரம்

இப்படி ப்ரபத்திமார்க்கமானது ஸங்க்ஷிதமாக நடந்து செல்லுகிற காலத்திலே ச்ரிய:பதியாய் பரமகாருணிகனும் திருவரங்கத்தரவணையிலே 'உறங்குவான் போல் யோகு செய்த' என்கிறபடியே ஜகத்ரக்ஷண சிந்தாயுக்தனாய்க் கண்வளர்ந்தருளுகிற பெரிய பெருமாள் மீண்டும் தர்சநம் இப்படி ஓராண்வழியாய் வருகிறபடியைக் கண்டு "எம்பெருமானாரைப் போலே லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி ஒரு விஷயத்தை உண்டாக்குவோம்" என்று யோசித்து இனி இதற்கு ஆவாரார் என்று தேடி மீண்டும் திருவநந்தாழ்வானையே கடாக்ஷித்து ஜகத்தைத்திருத்தும்படி நியோகித்தருள; அவரும் அப்படியே

1. **ததஸ்ததிங்கிதம் தஸ்ய ஜாநந்நேவ ஜகந்நிதே: |**
   **தஸ்மிந் தாம்நி மடாசாரதே:புரே புநரவாதரத் ॥** என்றும்
2. **ஸம்ஸந்தி ஸமயம் தஸ்ய துலாம்ப்ராப்தே த்விஷாம்பதௌ |**
   **மூலம் ஹி ஸர்வஸித்தீநாம் மூலருக்ஷம் ப்ரசக்ஷதே ।** என்றும்
3. **யந்மூலயாஸ்வயுஜமாஸ்யவதார மூலம்**
   **காந்தோபயந்த்ருயமிந: கருணைகஸிந்தோ:**
   **ஸ்ரீதஸத்ஸகணிதஸ்ய மமாபிஸததாமூலம்**
   **தந்தேவஜகதுப்யுதயைக மூலம் ॥**

---

A இந்தப்பாசுரம் தெலுங்குப் பதிப்பில்லை

[1. அப்போது திருவநந்தாழ்வான் பெரிய பெருமாளுடைய திருவுள்ளத்தை யறிந்தவராய், அதன்படியே சடகோபனுடைய இருப்பிடமான அந்தத் திருநகரியிலே மீண்டும் அவதரித்தருளினார்

2. ஸூரியன் துலாராசியை அடைந்திருக்கும்போது எல்லா காரிய ஸித்திக்கும் காரணமான மூலநக்ஷத்ரத்தை அந்தத் திருவநந்தாழ்வானின் அவதாரகாலமாக பூர்வாசாரியர்கள் அருளிச் செய்கிறார்கள்.

3. எந்த ஐப்பசி மாதத்தில் மூலநக்ஷத்ரமானது கருணைக்கடலான மணவாள மாமுனிகளின் அவதாரத்துக்கு அடியாயிற்றோ அதே மூலமானது அஸத்துக்களில் ஒருவனாக மதிக்கப்பட்ட (தாழ்ந்தவனான) அடியேனுக்கும் ஸத்தைக்குக் காரணமாகவும், உலமெல்லாம் வாழ்வதற்கு முக்கிய காரணமாகவும் அமைந்தது], என்றும் சொல்லுகிற படியே திருவநந்தாழ்வானும் தம்முடைய திருவவதாரத்துக்கு இடம் பார்த்து ஆழ்வார் திருநகரியிலே அண்ணர்தேவிகள் கர்ப்பத்தையடைந்து நவமாஸம் சென்றவாறேA

**பரதோபாவம் கதாயாம், கலியுக ஶரதி ஶ்ரத்தராயே ஶகாப்தே**
**வர்ஷே ஸாதாரணாக்யே ஸமதிகததுலே வாஸரே தீர்ணஸங்க்யே |**
**வாரே ஜைவேசதுர்த்யாம் ஸமஜநிசதிதௌ ஶுக்லபக்ஷே**
**ஸுகர்மா ப்ராஜந் மூலக்யதாரே யதிபதிரபரோ ரம்ய ஜாமாத்ரு நாமா ||**

[கல்யப்தம் 4471 என்ற எண் அடைந்தவளவில் சகாப்தம் 1292ல் ஸாதாரண வருஷத்தில் சூரியன் துலாராசியை அடைந்துள்ள போது 26-ம் தினத்தில் வியாழக்கிழமையில் விளங்கா நின்ற மூலநக்ஷத்ரத்தில் சுக்லபக்ஷ சதுர்த்தி திதியிலே ஸதாசாரசீலராய் ரம்யஜாமாத்ருமுநி என்னும் திருநாமமுடையராய் யதிபதிபுநரவதாரராய் மணவாளமாமுனிகள் அவதரித்தார்.] என்கிறபடியே கலியுகம் பிறந்து நாலாயிரத்து நானூற்று எழுபத்தொரு வருஷத்துக்குப் பின்பு ஸாதாரண வருஷம் ஐப்பசி மாஸத்தில் சுக்லபக்ஷத்தில் சதுர்த்தியும் வியாழக்கிழமையுங் கூடின திருமூலத்திலே B உபயவிபூதியும் கொந்தளிக்கும் குடியையுடையரான திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணரையருக்கு குமாரராகத் திருவவதரித்தருளினார். அநந்தரம்

---

A. இங்கு "செந்தமிழ் வேதியர்" என்று தொடங்கும் நான் பாட்டு தெலங்குப் பதிப்பில் அதிகபாடம். B ஆங்கிலக் கணக்கில் 1370 AD

**யஸ்மிந்ஸ்வபாதபத்மேந பஸ்பர்ஶ ப்ருதிவீமிமாம் |**
**கலிஶ்ச தத்க்ஷணேநைவ துத்ருவே தூரதஸ்தராம் ||**

[எப்போது அவர் தமது திருவடித் தாமரைகளால் இந்த பூமியைத் தொட்டாரோ அப்போதே கலிபுருஷனும் வெகு தூரம் ஓடி விட்டான்] என்று இவர் கால்காண கலி கால் பறந்தோடிற்று.

இப்படி ஸமஸ்தாத்ம ஸமுஜ்ஜீவந ஜந்மாவாக அவதரித்தருளின தம்முடைய குமாரருக்கு அண்ணரும் ஜாதகர்மம் செய்தருளி பத்து நாளுங்கடந்த விரண்டா நாள் திருவிலச்சினையும் A ப்ராஸாதித்து

**அதாஸ்ய குரு: ஸ்ரீமாந் மத்வா தம் திவ்ய தேஜஸம் |**
**அபிராமவராதீஶ இதி நாம ஸமாதிஶத் ||**

[ஸ்ரீமானும்—அந்தக் குமாரரின் தமப்பனுரான அண்ணர் அந்தக் குமாரரை அப்ராக்ருததேஜஸ்ஸையுடையவராகக் கருதி அவருக்கு அழகியமணவாளப்பெருமாளென்று திருநாமம் சாத்தினார்] என்கிறபடியே *பணமாடரவணைப் பற்பகாலமும் பள்ளிகொள்மணவாளரான அழகியமணவாளப் பெருமாளுடைய திருநாமம்சாத்தி *ஆயர்புத்திரனல்லனருந் தெய்வம் என்றும் *என்னையுமெங்கள் குடிமுழுதாட்கொண்ட மன்னன் என்றுஞ் சொல்லுகிறபடியே விசேஷ ப்ரதிபத்தியுடனே மாதுலக்ருஹமான சிக்கில் கிடாரத்திலே வர்த்திப்பித்துக் கொண்டுபோர, இவரும்

**பரபக்தி: பரஜ்ஞாநம் பரமபக்திரித்யபி |**
**வபுஷா வர்த்தமாநேந தத்தஸ்ய வவ்ருதேத்ரயம் ||**

[அந்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனருடைய வளரும் தேஹத்துடனே பரபக்தி பரஜ்ஞானம் பரமபக்தி என்னும்படியான மூன்றும் வளர்ச்சியடைந்தன] என்றும் *உன் வளர்த்தியூடே வளர்கின்றதாலுன்தன் மாயைதானே என்றுஞ் சொல்லுகிற

---

A. முன்காலத்தில்குழந்தை பிறந்து புண்யாஹவாசநமானவுடன் "புஷ்பஸமாஸ்ரயணம்" என்ற ஸம்ஸ்காரம் பண்ணி வந்தார்கள். இதில்குழந்தைக்கு ஸுதர்ஶந பாஞ்சஜன்ய இலச்சினைகளை அக்நியாலல்லாமல் திருமண் ஸ்ரீ சூர்ணங்களால் புஜங்களில் ஒத்துவது அநுஷ்டானம். இந்த ஸம்ஸ்காரம் இன்றும் சில வைஷ்ணவர்களின் அநுஷ்டாநத்திலுள்ளது.

படியே நாடோறும் வர்த்தித்துக் கொண்டு போரா நிற்க தம்முடைய திவ்யவபுஸ்ஸோடே பரிணதங்களாய் வளருகிற பரபக்த்யாதிகளை வடிவாகவுடையராய் வளர்ந்து செல்லுகிற காலத்திலே மீளவும் தமப்பரான அண்ணர்

ப்ராப்தாம் ப்ராதமிகேவர்ணே கல்பஜ்ஞா:கல்பயந்தி யாம் |
காலேகாலே ச ஸம்ஸ்காராந் தஸ்ய சக்ரே க்ரமேண ஸ: ||

[கல்பஸூத்ரங்களையறிந்தவர்கள் முதல் வருணத்தவரான அந்தணர்கட்கு உரித்தாக எந்த ஸம்ஸ்காரங்களை (சடங்குகளை) விதித்தனரோ அந்த ஸம்ஸ்காரங்களை அவர் (அண்ணர்) தமது குமாரருக்கு முறைப்படிப் பண்ணினார்] என்கிறபடியே சௌள உபநயநங்களையும சாஸ்த்ரப்ரகாரத்தாலே தத்தத்காலத்திலே செய்வித்து வேதசாஸ்த்ரங்களையும் அதிகரிப்பித்துக்கொண்டு போரா நிற்க: அநந்தரம்,

1. ஆதாம்ரபாத மாஜாநு புஜமம்புஜலோசநம் |
ஆகாரமஸ்ய ஸம்பஶ்யந் முக்தோபி முமுதே ஜந: || என்றும்

2. லௌஶீல்யேந ஸௌஹ்ருத்யேந காம்பீர்யேண கரீயஸா |
ரஞ்ஜநேநப்ரஜாநாஞ்ச ராமோऽயமிதி மேநிரே ||

[1. அறிவில்லாத ஜநங்களும் செந்தாமரைபோல் சிவந்த திருவடிகளையும் முழந்தாள் வரையிலும் நீண்டுள்ள திருக்கைகளையும், செந்தாமரையையொத்த திருக்கண்களையு முடைத்தான இவருடைய திருமேனியை ஸேவித்து மகிழ்வெய்தினர். 2. தாழ்ந்தவர்களுடனும் நன்கு கலந்து பழகுமியல்பாலும் யாவரிடத்துத் ப்ரீதியுடையராயிருப்பதாலும் மிகவும் கம்பீரமான ஸ்வபாவதாலும், ஜநங்களை மகிழ்விக்கையாலும், இவர் ராமபிரான் என்று எண்ணினார்கள்.] என்கிறபடியே அகில ஜநங்களையும் ஆநந்திப்பித்துக்கொண்டு

ஸாலோக ஸகலாநாம்ச கலாநாமேகமாஸ்பதம் |
ஶாரதே ஸததம் பூர்ண: ஶாதாம்ஶுரிவ நிர்மல: ||

பின்னர் எல்லாவித்யைகளுக்கும் சிறந்தகொள்கலமான அழகியமணவாளப்பெருமாள் களங்கமில்லாத பூர்ணசந்த்ரன் போலே எப்போதும் விளங்கினார்] என்கிறபடியேA பாலசந்த்ரனானவன் நாடோறும் கலைகளாலே வர்த்தித்துக்கொண்டு பூர்ணனாய் விளங்குமாபோலே இவரும் ஸகலகலாபூர்த்தியால் வந்த பரிபூர்ண ஜ்ஞாநத்தாலே நிரதிஶய வைபவத்தையுடையராயெழுந்தருளியிருந்தார்.

---

A. அடுத்த பக்கம் பார்க்கவும்

## இனி கோயில் வ்ருத்தாந்தம் B

அக்காலத்தில் அங்கிருந்த மஹாத்மாக்கள் நாடோறும் பூர்வம் போலே "ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரியமநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய" என்று ஸ்ரீரங்கைச்வர்யம் நித்யமாய் நிர்வதிகமாய் நிர்விக்நமாய்ச் செல்லவேணுமென்று *திருப்பல்லாண்டும், *ஏழையேதலனும், *ஆழியெழச்சங்கும் அநுஸந்தித்துப் பெருமாளை ப்ரபத்தி பண்ணிப் போருகையாலே, அந்த மங்களாசாஸநம் பலித்து செஞ்சியில் கோபணார்யனென்பானொரு வைஷ்ணவப்ரபு திருப்பதிக்குச் சென்று திருவேங்கடத்தெம்பெருமானைத் திருவடி தொழுது மீண்டு வருகிறவன் அங்கே நம்பெருமாளை ஸேவித்து திருப்பதியினின்றும் நம்பெருமாளைத் தன்னுடைய நகரமான செஞ்சியேற எழுந்தருளுவித்துக்கொண்டு வந்து சிங்கராயபுரத்திலே யெழுந்தருளப்பண்ணிக் கொண்டிருந்து பக்தி புரஸ்ஸரமாக ஆராதிந்துக்கொண்டிருக்க, திருமணத்தூண் நம்பியாகிய சிங்கப்பிரானும் காட்டிக் கொடுக்க, பகவத்விட்டுக்ளான துருஷ்கரை யடக்க ஸமயம் பார்த்து, நிரவதிகபலஸஹிதராய்ச் செஞ்சியார் சென்று நிஶ்ஶேஷமாக நிரஸித்து ஸ்வநகரத்தினின்றும் திருவரங்கன் திருப்பதியேற நம்பெருமாளைப் பிராட்டிமாருடயே எழுந்தருளப்பண்ணிவைத்துக்கொண்டு யதாஸ்தாநத்தில் பெரிய பெருமாளுடனே சேர்த்து ப்ரதிஷ்டிப்பித்து அனைத்தழகும் கண்டருளப்பண்ணினானிறே.

**ஆநீயாநீலச்ருங்கத்யுதிரசித ஜகத்ரஞ்ஜநாதஞ்ஜநாத்ரேஶ் செஞ்ச்யா**
**மாராத்ய கஞ்சித் ஸமயமத நிஹத்யோத்தநுஷ்காந் துருஷ்காந் |**
**லக்ஷ்மீ க்ஷ்மாப்யாமுபாப்யாம் ஸஹ நிஜநிலயேஸ்தாபயந் ரங்கநாதம்**
**ஸம்யக்சர்யாம் ஸபர்யாமக்ருத நிஜயஶோ தர்பணோ கோபணார்ய: ॥**

[தனது, கண்ணாடிபோல் பளபளக்கின்ற புகழையுடைய கோபணார்யனென்பவன், முழுவதும் கறுத்த கொடிமுடியின் காந்தியினால் உலகுக்கு மகிழ்ச்சியையூட்டுகின்ற அஞ்ஜநாசல

---

A மேகோபராக திரோஹிதனாய் க்ருஷ்ணபக்ஷ க்ஷயிஷ்ணுவாய் ஸகளங்கனான தோஷாகரனைப் போலன்றிக்கே அகளங்கித ஸதாஸம்பூர்ணகலாயுத ராகாசந்த்ரனைப்போலே ஷோடஶவர்ஷிகரானவாறே ஷோடஶஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருதராய் கலாபூர்த்தியால் வந்த பரபூர்ணஜ்ஞாநமுடையராய் அத்தால் அத்யந்தம் ப்ரகாஶகராய் போராநிற்க - என்று தெலுங்குப் பதிப்பு பாடம்

B இங்கு கோயில் வ்ருத்தாந்தம் தெலுங்குப் பதிப்பிலில்லை,

யென்னும் திருவேங்கடமலையிலிருந்து எழுந்தருள்வித்துக்கொண்டு வந்து, செஞ்சியில் சிலநாட்கள் ஆராதித்து பின்பு வில்லேந்திச் சண்டையிட வந்த துருஷ்கர்களைக் கொன்று, ஸ்ரீதேவி பூதேவி களோடு கூட ரங்கநாதனை அவர் தமது ஸ்தானமாகிய திருவரங்கத்தில் ஸ்தாபித்தான். திருவாராதனத்தையும் மிகவும் ஒழுங்குடையதாக நடத்தினான்] என்று இவ்வார்த்தை அபியுக்தருமருளிச்செய்தாரிறே.

*கொங்குங் குடந்தையுங் கோட்டியூரும் பேரும் எங்குந்திரிந்து விளையாடும் என்கிறபடியே *மயல்மிகுபொழில்சூழ் மாலிருஞ்சோலையிலும் *விரையார் பொழில் வேங்கடத்திம் விஹரித்து' ப்ரதிபக்ஷநிரஸநபூர்வகமாக *கோயிற்பிள்ளாய்! இங்கே போதராயே என்னும் படியான தாம் மீண்டு கோயிலறே வெழுந்தருளி, பஹுப்ரியமான சகாப்தம் Aஆயிரத்திருநூறு சென்ற வர்த்தமான பரீதாபிஸம்வத்ஸரம் வைகாசிமாஸம் பதினேழாந்தேதியில் அரங்கநகரானது "ராமஸ்ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப்தவாந்" [இராமபிரான் ஸீதையைப்பெற்று(த்திரும்பி) மறுபடியும் ராஜ்யத்தை அடைந்தான்.] என்றும், *திருமகளோடினிதமர்ந்த செல்வன் என்றும், *வீற்றிருந்த மணவாளர் மன்னு கோயில் என்றும் சொல்லுகிறபடியே அழகியமணவாளரான தாம் நாய்ச்சிமாருடனே கூடி சேரபாண்டியன் என்கிற திவ்யஸிம்ஹாஸனத்திலே சேர்த்தியுடனே யேறியருளி இனிதுடன் வீற்றிருந்து *செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் என்னுமது தோன்ற திருவாரதனங்கண்டருளி வாழ்ந்தருளா நிற்க:

அச்செய்தியை தேசாந்தரஸ்தரான ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் கேட்டு,

**பஹூநிநாம வர்ஷாணி கதஸ்ய ஸுமஹத்வநம் |**
**ஶ்ருணோம்யஹம ப்ரீதிகரம் மமநாதஸ்ய கீர்த்தநம் ||**

[பலவாண்டுகள் மிகப்பெரிய கானகத்தையடைந்த நம்பெருமாளுடையதாய் மகிழ்ச்சியை உண்டாக்குகிற (திரும்பியெழுந்தருளினாரென்னும்) நல்வார்த்தையைக் கேட்கப்பெற்றேன்] என்கிறபடியே நெடுங்காலத்திற்காக 'இப்போது பெருமாளெழுந்தருளப்பெற்றதே' என்று போரப்ரீதராய் அப்போதே யாவரும் வந்தடி வணங்கி, "ப்ரஹ்ருஷ்டமுதிதோலோக; "[மக்கள் மிகவும்

---

A சகாப்தம் 1293 பரீதாபி வைகாசி என்று கோயிலொழுகு கூறுகிறது.

களிப்படைந்தனர்] என்கிறபடியே அத்யந்தம் ஹ்ருஷ்டராயிருக்க பெருமாளும் 'விஜ்வர: ப்ரமுமோதஹ'' [ஜ்வரம்-கவலை-நீங்கிய வராய் மிகவும் மகிழ்வெய்தினர்] என்கிறபடியே துளக்கற்றமுதமாய் எங்கும் பக்கநோக்கறியாதே [ஸர்வரையுங் குளிரக்கடாக்ஷித்துக் கொண்டு அன்பொடு தென்திசை நோக்கி அழகிய மணவாளப்பெருமாள் நாயனரைக் கடாக்ஷித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

## அழகியமணவாளப் பெருமாள் திருமலையாழ்வாரை ஆச்ரயித்தல்

அக்காலத்தில் திகழக்கிடந்தான் திருநாவீறுடையபிரான் தாதரண்ணர் தம்முடைய திருக்குமாரராக வளர்ந்தருளுகிற பரம போகீந்த்ரரான அழகியமணவாளப்பெருமாள் நாயனருக்குத் திருக்கல்யாணமுஞ் செய்வித்து, பின்பு அருளிச்செயல்களையும் ரஹஸ்யங்களையும் தாமேயோதுவித்தருளினர். அவரும் அந்த உபகாரத்துக்கிடுபட்டு

**ஸ்ரீஜிஹ்வாவததீஶதாஸமமலமஶேஷ ஶாஸ்த்ரவிதம் |**
**ஸுந்தரவரகுருகருணாகந்தளித ஜ்ஞாநமந்திரம் கலயே ||**

[ஸ்ரீஜிஹ்வார்க்யாதிஶம் என்றும் பாடமுண்டு. பொருள்—கோட்டூரழகிய மணவாளப்பெருமாள் பிள்ளையினருளால் வ்ருத்தியடைந்த ஜ்ஞாநத்திக்கிருப்பிடமாய், எல்லா சாஸ்த்ரங்களையும் குறையறக் கற்றறிந்தவரான திருநாவீறுடையபிரான் தாதரண்ணரை த்யானிக்கிறேன்] என்றும்

**வாழி திருநாவீறுடையபிரான் தாதனருள்**
**வாழியவன் மாமை வாக்கின்பம்—வாழியவன்**
**வீரன் மணவாளன் விரைமலர்த்தாள் சூடி**
**பாரமதைத் தீர்த்தளித்த பண்பு'**

என்று அநுஸந்தித்தருளினரிறே. பின்பு சிலகாலஞ்சென்றவாறே அண்ணரும் திருநாட்டுக்கெழுந்தருள, அழகிய மணவாளப் பெருமாள் நாயனரும் அவரை ஸம்ஸ்கரித்துப் பள்ளி படுத்து திருவத்யயநமும் பெருக்க நடத்தியருளினர்

அநந்தரம் ஆழ்வார் திருநகரியிலே தர்சநப்ரவர்த்தகராயெழுந்தருளியிருக்கிற திருமலையாழ்வாரும், ''இனி தர்சநப்

ப்ரவர்த்தகராவாரார்?'' என்று விசாரித்துக்கொண்டு *தொண்டர்க்கமுதுண்ணச் சொன் மாலைகளான திருவாய் மொழி, நிலத்தேவரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும், பக்தாம்ருத மென்னும்படி பரமபோக்யமாக வவதரித்ததாகையாலே சப்தரஸம், அர்த்தரஸம், டாவரஸம், என்கிற விவற்றை அநவரதம் அநுஸந்தித்துக்கொண்டு ததேகநிஷ்டராய் தத்வ்யதிரிக்த சாஸ்த்ரங்களை த்ருணவத்ப்ரதிபத்தி பண்ணியிருக்கையாலே **திருவாய்மொழிப்பிள்ளை** என்று திருவாய்மொழி ஸம்பந்தத்தையே தமக்கு நிருபகமாகவுடையராய் ஆழ்வார் திருவடிகளிலே கைங்கர்யமே அரவரதமுஞ்செய்து கொண்டு போரா நிற்கிற திருவாய்மொழிப் பிள்ளையினுடைய திவ்யகடாக்ஷத்திற்கு விஷயமாமபடி அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் *திருவநந்தாழ்வான் சகந்தன்னைத் திருத்தமருவிய குருகூர் வளநகர் வந்து-என்கிற படியே ஸ்வமாதுலக்ருஹமான சிக்கில்கிடாரத்திலிருந்து தமக்கு ஜந்மபூமியான திருநகரியேற வெழுந்தருளி *பொருநற்சங்கணி துறையிலே சங்குகள் சேறுமாபோலே சங்க வண்ணநம்பியுடைய அவதாரமாகையாலே சுத்தஸ்வபாவரான தாமும் *திருவாய் மொழிப்பிள்ளைதிருத் தாள் சேர்ந்து என்கிறபடியே மெய்ஞ்ஞானத் துறையான பிள்ளை திருவடிகளிலே ஆச்ரயித்து ''அஸிஸரியதயம் பூய: ஸ்ரூ சைலாதீஸ தேஸிகம்'' [இந்த அழகிய மணவாளப் பெருமாள் திருமலையாழ்வாரென்னும் ஆசார்யரை ஆச்ரயித்தார்] என்கிறபடியே *தேசந்திகழுந் திருவாய்மொழிப்பிள்ளை வாச மலர்த்தாளடைந்து வைத்து என்னும்படி விலக்ஷணஸம்பந்த யுக்தராய்;

**ததஸ் ஸ்ருதிதரஸ்ஸோயம் தஸ்மாத்தஸ்ய ப்ரஸாதத: |**

**அஸேஷாநஸ்ருணோத்திவ்யாந் ப்ரபந்தாந் பந்தநச்சித: ||**

[பின்னர் ஸாங்க வேதாத்யயநம் பண்ணிய இவ்வழகிய மணவாளப் பெருமாள் திருமலையாழ்வாருடைய அருளால் அவரிடமிருந்து ஸம்ஸாரபந்தத்தையறுப்பதான எல்லாவருளிச்செயல்(களின் தாத்பர்யங்களையும் கேட்டறிந்தார்] என்கிறபடியே த்ராவிட வேத ததங்கோபாங்கங்களான ஸமஸ்த திவ்யப்ரபந்த தாத்பர்யங்களையும் அவருபதேசமுகத்நாலே லபித்து *மிக்கவேதியர் வேதத்திறுட்பொருளான சரமபர்வத்திலே நிஷ்ட்டராய்A ஸேஷித்வ ஸரண்யத்வ ப்ராப்யத்வங்கள் மூன்றையும் பிள்ளை விஷயத்திலே அநுஸந்தித்து, ததேக நிஷ்டராயெழுந்தருளியிருக்கிற இவரை:

A - அடுத்த பக்கம் காண்க

## நாயனாரை திருவாய்மொழிப்பிள்ளை உடையவர் திருவடிகளிலே ஈடுபடுத்தல்

பிள்ளைதாமே உகந்து உடையவர் திருவடிகளைக் காட்டிக் கொடுத்தருள *உன்பதயுகமேர்கொண்ட விட்டை எளிதினி லெய்துவன் என்கிறபடியே பரமபுருஷார்த்தத்தை ஸுலபமாக லபித்து அத்யந்த ஹ்ருஷ்டராய் எழுந்தருளி இருக்க, அவ்வளவில் பிள்ளையும் ஆழ்வார் திருவடிகளிலே ப்ராவண்யாதிசயத்தாலே அவரடி பணிந்துய்ந்த எம்பெருமானார் திருவடிகளிலும் அதிப்ராவண்யத்தையுடையராய்ப் போருகையாலே ராமாநுஜ பதாம்போஜத்வந்த்வ கைங்கர்யத்திலே அந்வயிக்கவேணுமென்று திருவுள்ளமாய் அப்படியே தத்கைங்கர்யத்திலே அந்வயித்து அவகாஹித்து அதுவே தமக்கு தாரகாதிகளாகச் செய்து கொண்டு போருகிறவர், உடையருக்குத் தனிக்கோயில் தொடக்கமான அனைத்தழகும் கண்டருளப் பண்ணி, கோயிலை வளைய ராமாநுஜ சதுர்வேத மங்கலம் என்கிற திருவீதியையும் உண்டாக்கி, அங்கே ராமாநுசனைத்தொழும் பெரியோரையும் ப்ரஷ்டிப்பித்து, தாமும் ஸுகப்ரதிஷ்டிதராய் எழுந்தருளியிருந்தார்.

## நாயனார் யதிராஜ விம்சதி விண்ணப்பம் செய்தல்

அநந்தரம் நாயனாரும் தமக்குப் பிள்ளை ப்ராப்யமாகக் காட்டியருளின உடையவர் திருவடிகளிலே **யதீந்த்ரப்ரவணர்** என்னும்படி அத்யந்தம் ப்ராவண்யத்தையுடையராய் தம்முடைய ப்ரேமாநுகுணமாக **யதிராஜ விம்ஶதியை** அவ்வெம்பெருமானார் விஷயமாக அருளிச் செய்ய, அந்த உபகாரத்திற்கு

**வல்லார்கள் வாழ்த்துங்குருகேசர் தம்மை மனத்து வைத்துச்**
**சொல்லார வாழ்த்தும் மணவாளமாமுனி தொண்டர் குழாம்**
**எல்லாந்தழைக்க எதிராவிஞ்சதியின்றளித்தோன்**
**புல்லாரவிந்தத் திருத்தாளிரண்டையும் போற்று நெஞ்சே**

என்று பின்புள்ளாருப் அநுஸந்தித்து ஈடுபடும்படியாயிற்று.

---

A "அன்னையுமத்தனு மாசாரியனுமனைத்துறவும், மன்னிய பேறுமுபாயமும் தெய்வமும் மற்றுமெல்லாம், என்னையளித்த திருவாய்மொழிப் பிள்ளையென்று நெஞ்சே! உன்னியிராது மற்றொன்றில் புல ஓதுவதே' என்றும், 'விண்ணும் திருமலையாழ் வாழ்வார்வடிவு விரைபுடைசூழ், மண்ணும் திருமலையாழ்வார் வடிவு மற்றெங்கும், கண்ணும் திருமலையாழ்வார் வடிவன்றிக் காண்கிறிலேன், என்றும் திருமலையாழ்வார் வடிவெங்கும் யாவர்க்குமே—என்றும். இதுதெலங்குப் பதிப்பில் அதிக பாடம்.

இவருடைய விண்ணப்பமான விம்சதியைப் பிள்ளையுங்கேட்டு உகந்தருளித் திருப்புளியாழ்வாரடியிலே தாம் கண்ட (கண்டெடுத்த) தம்முடையவரையும் A இவர்க்கு ப்ரஸாதித்தருளி இவரும் ''ஸ்ரீமந்யதீந்த்ர! தவதிவ்யபாதாப்ஜஸேவாம் ஸ்ரீசைல நாதகருணாபரிணாமதத்தாம்'' (யதிராஜ விம்சதி 19) என்று அநுஸந்தித்து ப்ரீதராய், 'யதீந்த்ரமேவ நிரந்தரம் நிஷேவே தைவதம்பரம்'' [எம்பெருமானாரையே பரதெய்வமாக அத்யவஸித்து நித்யமாய் கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தார்]. என்கிறபடியே அவருக்கு உகப்பாக ததாராதனபரராய் ததேகநிஷ்டராயெழுந்தருளியிருக்க, இப்படி ஆழ்வாருடையவும் எம்பெருமானாருடையவும் கைங்கர்யமே புருஷார்த்தமாக வெழுந்தருளியிருக்கிற பிள்ளையும் அப்போதைக்கப்போது அபிநவங்களாய் வர்த்தித்துக் கொண்டு போகிற இவருடைய ஜ்ஞானபக்த்யாதிகளைக் கண்டு B அபிமதவிஷயத்தைக் கண்டாற் போலே ஆதரித்துப் போரா நிற்க;

---

A. இந்த ஸன்னிதியில் ப்ரதிஷ்டிப்பிதுள்ள உடையவர் திருமேனி (உத்ஸவர்) பற்றி பெரியோர் வாய்வழிவரும் வரலாறு: மதுரகவிகள் ஆழ்வாரின் ஸ்வப்நமுக நியமனப்படி ஆழ்வார் திருமேனி எழுந்தருளப் பண்ணுவதாக தாம்ரபரணி நீரைக் காய்ச்ச முதலில் உடையவர் திருமேனி ஆவிர்ப்பவித்தாகவும், மதுரகவிகள் மாநஸிகமாய் ''இது உமது திருமேனியல்லவே'' என்று ஆழ்வாரை வேண்ட, ஆழ்வாரும் ''இது *பொலிக பொலிக திருவாய்மொழிக்கு விஷயமான பவிஷ்யதாசார்ய விக்ரஹம்; *கலியுங்கெடும் கண்டு கொண்மின் என்னும்படி இவர் அவதரிக்கப் போகிறார். இவரை ஆராதியும். மீண்டும் தாம்ரபரணி நீரைக் காய்ச்சும்; நாம் அர்ச்சையாக ஆவிர்ப்பவிக்கிறோம்'' என்று நியமிக்க, மதுரகவிகளும் அப்படியே செய்ய, இன்றும் உபதேசமுத்ரையுடன் ஸேவை தரும் ஆழ்வார் திருமேனி ஆவிர்ப்பவித்தாகவும் சொல்வர். ஆழ்வார் திருமேனிக்கும் முன்னரே ஆவிர்ப்பவித்த உடையவர் திருமேனியே இன்றும் ஆழ்வார் திருநகரி உடையவர் ஸன்னிதியில் ஸேவிப்பது என்று பெரியோர் பணிக்கும்படி.

B. ஜ்ஞானபக்தி வைராக்யங்கள் இட்டு மாறினாற் போலே வடிவிலே தொடை கொள்ளலாம்படியான இவருடைய பரமாஸக்தத்வத்தைக் கண்டு-என்பது தெலுங்கு பதிப்பில் அதிக பாடம்,

பின்பொருநாள் தமது திருநந்தவனத்தில் விளைகிற பச்சைக் கறியமுதை இவர்க்குப் போகவிட்டருள, இவரும் "இப்படிச் செய்தருளுவதே?" என்று விண்ணப்பஞ் செய்ய, பிள்ளையும் 'உம்மைத் போலேயொரு விஷயத்தைப் பெறுமையாலே அர்ச்சாவதாராதிலே மண்டினோம்" என்று அருளிச் செய்து தாமும் விரக்தராயிருக்கச் செய்தேயும் இவருடைய ஸௌகுமார்யத்துக்கநுகுணமாக அமுது செய்தருளுகை தொடக்கமான எல்லா உபசாரங்களையு மாராய்ந்து கொண்டு போருகிறபடியையும், அங்கீகரித்தவன்று தொடங்கி பங்க்திபாவநராம்படி அபிமானித்து ஆதரித்துக் கொண்டு போருகிறபடியையுங் கண்டு ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு இவரிடத்திலே அஸூயை நடந்து செல்ல, இத்தை ஸர்வஜ்ஞரான பிள்ளை அறிந்தருளி அவர்கள் அபசாரப்படாதபடி இவருடைய சேஷாஹிபதிவேஷாந்தரத்தை எல்லோரும் ப்ரத்யக்ஷீகரிக்கும்படி வாக்சாதுர்யங்களாலே காட்டியருளி, அவர்களுக்கும் இவரிடத்திலே விசேஷப்ரதிபத்தியை விளைவித்துப் போராநிற்க, இவரும் பிள்ளை திருவுள்ளத்தை உகப்பித்துக் கொண்டு அங்குத்தைக்கு விதேயராயிருக்கிற காலத்திலே; ஈடு முப்பத்தாறுயிரம் பாடமிட்டருளி மற்றுமுண்டான வ்யாக்யானங்களையும் பாடப்ராயமாகப் பண்ணியிருக்கிற காலத்திலே:

நாயனாருக்கு குமாரர் திருவவதரிக்க, "திருநாமமேது?" என்று பிள்ளையைக் கேட்டருள, "ஒருக்கால் சொன்னாற்போலே நூற்றெட்டுதரம் சொல்லியிருக்கிறதே!" என்றருளிச் செய்ய, எம்மையனிராமானுசன் என்று திருநாமம் சாத்தியருளித் தாமும் "இராமானுசன் திருநாமம் நம்பவல்லராய் வாழ்ந்து கொண்டு போராநிற்க; ஒருநாள் ஒருதிருவாதிரை நக்ஷத்ரத்திலே பிள்ளையும் முதலிகளும் அமுது செய்தருளாநிற்க,

**இன்றோ யெதிராசரிவ்வுலகில் தோன்றியநாள்**
**இன்றோ கலியிருள் நீங்குநாள்**

என்று பிள்ளை ஈடுபட்டருளி மேல் அருளிச் செய்யமாட்டாமல் இத்தையே பலகாலுமருளிச் செய்து கொண்டிருக்க

—**இன்றோதான்**

**வேதியர்கள் வாழ, விரைமகிழோன் தான் வாழ**
**வாதியர்கள் வாழ்வடங்குநாள்**

என்று நாயனார் தலைக்கட்டியருள, இதைக்கேட்ட பிள்ளை மிகவும் ப்ரீதராய் அமுது செய்யாநிற்க மத்யே தளிகைப் ப்ரஸாதம்

பராஸாதித்து மிகவும் க்ருபை பண்ணியருளினார். இப்படி ஸ்வாசார்யக்ரமம் நன்றாக நடந்து செல்லுகிற காலத்திலே ஸ்ரீபராங்குச தாஸரான் பெரிய நம்பியை ஆச்ரயித்த ஏற்றம் எம்பெருமானார்க்கு உண்டானாற்போல சடகோபதாஸரான பிள்ளையையாச்ரயித்த வேற்றம் இவர்க்குண்டாயிற்றென்று எல்லாருமிவரை உடையவருடைய அவதாரவிசேஷமென்று ஆதரித்துக்கொண்டு போந்தார்கள். இப்படி அவதாரவிசேஷமான இவர்

**வடமாமலைமுதல் மல்லனந்தபுரியெல்லை மல்கித்**
**திடமாக வாழுந்திருவுடைய மன்னிரில் தேசுடையோன்**
**திடமான ஞானவிரக்திபரமிலை சேரநின்ற**
**சடகோபதாதர் குருகூர்வாழ் பிள்ளையைச் சேரு நெஞ்சே**-என்றும்

**A, செந்தமிழ் வேதத்திருமலையாழ்வார் வாழி**
**குந்திநகர்க் கண்ணல் கொடை வாழி—உந்தியசீர்**
**வாழியவனமுதவாய் மொழி கேட்டப்பொருளில்**
**தாழுமற்றன்பர் திருத்தாள்**

என்றும் இத்தனியன்களை பிள்ளை விஷயத்தில் தாமுமநுஸந்தித்தருளினார். அநந்தரம் உகப்புடனே இங்கிருக்கும் காலத்திலே பிள்ளை

**அப்யர்ச்ய நந்ததநயம் கரபங்கஜாத்த வேணும் ததீயசரண**
**ப்ரவணார்த்ரசேதா: |**
**கோதாபிதுர்கஹநஸூக்திநிபந்தநஸ்யவ்யாக்யாம்வ்யதாத்**
**த்ரவிடவேதகுரு: ப்ரஸந்நாம் ||**

[செந்தாமரைக்கைகளாலே தரிக்கப்பட்ட புல்லாங்குழலையுடைய இளவாயர் தலைவனை நன்றாகவாராதித்து,' அக்கண்ணன் கழலிணையில் ப்ரேமத்துடன் ஆழ்ந்தமனத்தையுடைய திருவாய்மொழிப்பிள்ளை பெரியாழ்வாருடைய கம்பீரமான பாசுரங்களுக்குத் தெளிவான வியாக்கியானத்தை அருளிச் செய்தார்] என்றும்

---

A. நம:ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே! ப்ரஸாதலப்தபரம ப்ராப்ய கைங்கர்யஶாலிநே ॥ என்ற தனியனும் தெலுங்கு பதிப்பில் காண்கிறது [குந்தீபுரத்தில் திருவவதரித்தருளி ஆழ்வாருளால் பெறப்பட்ட நிரதிசயப்ராப்யமான கைங்கர்யத்தினால் விளங்கும் திருவாய்மொழிப்பிள்ளையை வணங்குகிறேன்].

**அனந்தன் திருமலையாழ்வாரென வந்தவதரித்து**
**தனம்தன்கைப்படிற்றுனம் செய்வனென்று தரணிதனில்**
**அனந்தம் புரிய சடகோபனருட் காட்செய்வது**
**இனந்தனிலொக்குமென்று எல்லோரும் பாவித்திருப்பதுவே**

என்றும் பிள்ளையுடைய வைபவத்தை மற்றுமுண்டானவர்களும் அநுஸந்தித்தார்கள்.

## அழகிய மணவாளப்பெருமாளுக்குப் பிள்ளை சரமதியமனம்.

இப்படி ஜ்ஞானபக்தி வைராக்யங்களை வடிவாகவுடையராய், அத்தாலே வந்த மஹாப்ரபாவத்தையுடையரான பிள்ளை கைங்கர்ய ஸ்ரீயோடே நெடுங்காலம் வாழ்ந்தருளி, பின்பு நித்ய விபூதியிலே நித்ய கைங்கர்யாதரராய் வாழ்க்கையில் நினைவாய்,

**உத்தமனே! உலகாரியனே! மற்றொப்பாரையில்லா**
**வித்தகனே! நல்லவேதியனே! தண்முடும்பைமன்னு!**
**சுத்த நன்ஞானியர் நற்றுணையே! சுத்தஸத்துவனே!**
**எத்தனை காலமிருந்துழல்வேன் இவ்வுடம்பு கொண்டே?**

என்று அதற்கு ப்ரதிபந்தகம் திருமேனியோட்டை ஸம்பந்தமென்று அறுதியிட்டு தத்விமோசனத்தையும் தேம் தேசிகரிடத்திலே யபேக்ஷித்துக்கொண்டேயிருக்க, அவ்வளவிலே திருமேனியிலே நோவுசாத்தி மிகவுத்தளர்ந்து கண்வளர்ந்தருளுகிறவர் பெரிய க்லேசத்துடனே முசித்து எழுந்தருளியிருக்க, ''இது என்?'' என்று நாயனார் தொடக்கமான முதலிகள் கேட்டருள, 'காலம் கலிகாலமாகையாலே ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளான அருளிச்செயலிலே ருசிவிச்வாஸங்களையுடையராய் இத்தை வளர்த்துப்போருவார் ஆர்? என்று மிகவும் க்லேசமாயிரா நின்றது'' என்ன, பின்பு நாயனாரும் திருவடியிலே ஸேவித்து ''அடியேன் அப்படியே செய்கிறேன்'' என்ன, ''கேவலம் வார்த்தை போராது'' என்ன, நாயனாரும் திருவடிகளைத்தொட்டு சபத பூர்வகமாக ''அப்படியே செய்கிறேன்'' என்றருளிச்செய்ய, பின்பு திருவுள்ளம் தேறி, நாயனாரையழைத்தருளி, ''ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களிலே பலகாலும் கண்வையாமல் ஸ்ரீபாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் நம்பெருமாளுக்கும் ப்ரியமாகத் திருவாய்மொழி முதலான அருளிச்செயலிலே அநவரதம் பரிசீலனை பண்ணிக்கொண்டு

பூர்வர்களைப்போலே பெருமாளுக்கு மங்களாசாஸனபரராய்க் கொண்டு கோயிலிலே நித்யவாஸமாக எழுந்தருளியிரும்" என்று நியமித்தருளி மற்றுமுண்டானவர்களையழைத்தருளி நாயனார் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளி "இவரை அவதார விசேஷமென்று ஆதரித்துப்போருங்கோள்" என்று அருளிச்செய்து ந்யஸ்த பரராய் பின்பு *மாகவைகுந்தம் காண்பதற்கு என்மனமேகமெண்ணும் என்கிறபடியே அதிலே அபிவ்ருத்தமநோரதராய் A பிள்ளை லோகாசாரியர் திருவடிகளை த்யானித்துக் கொண்டு வைசாக பஹுள அஷ்டமியில் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

## திருவாய்மொழிப் பிள்ளையின் தன்னேற்றம்

அநந்தரம் நாயனார் தொடக்கமான முதலிகளெல்லாரும் ஆசார்ய வியோகாஸஹிஷ்ணுக்களாய் அத்யந்தம் ஆர்த்தராய் க்லேசித்துத்தேறி ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரத்தாலே பள்ளிப்படுத்து தீர்த்தம் கொண்டாடி பதிமூன்றாந் திவஸத்திலே திருவத்யயனமும் நன்றாக நடத்தியருளினார்கள் நாயனாரும் ப்ரதிவருஷம் வைகாசி மாஸத்தில் அபரபக்ஷத்தில் அஷ்டமிதோறும் ஸ்ரீவைஷ்ணவர்களை நன்றாக அமுது செய்யப் பண்ணியருளி "முப்பழமுமுண்டாகப் பெறுவதே தீர்த்ததிவஸம்!" என்று பரிபாலித்துக் கொண்டு B எழுந்தருளியிருந்தார்

பெண்களும் C பேதைகளும் உஜ்ஜீவிக்கும்படி பரமார்த்த விசேஷங்களை ஸங்க்ரஹமாகப் பண்ணப்பெற்ற தன்னேற்றமும் பிரிவில் தரியாமையை முன்னிட்டு பின் தொடரந்தடிமை செய்யப் பெற்ற தன்னேற்றமும், பிள்ளை லோகாசாரியருக்கே உள்ளதொன்றிறே. "ஶரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஸத்குருப்யோ நிவதயேத்" (உடல் தனம், உயிர் யாவற்றையும் ஸதாசாரியர் பொருட்டுப் பயன்படுத்த வேண்டும்) என்கிறபடியே பரமாசாரியரான பராங்குசரையும் தத்ப்ரிய சிஷ்யரான உடையவரையும்

---

A மனமொழிந்தால் நானிருந்த உயர்திவத்து வாரும் என்ற ஸ்வாசாரியரான பிள்ளைலோகாசாரியர்- என்று தெலுங்கு பதிப்பில் அதிக பாடம்

B ஆசார்யநியமனத்தின்படியே திருவாய்மொழி முதலான அருளிச்செயல்களை வ்யாக்யானத்துடன் அநுஸந்தித்துக் கொண்டு— என்று தெலுங்கு பதிப்புல் அதிக பாடம். C. இந்த வாக்யம் கெ.ப ல் இல்லை.

திருநகரியிலே ப்ரதிஷ்டிப்பித்து அனைத்தழகுங்கண்டருவப் பண்ணின தன்னேற்றமும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களை ருசிவிச்வாஸ பூர்வமாக ப்ரவர்த்திப்பித்துக் கொண்டு போந்த தன்னேற்றமும், திருவாய்மொழிப்பிள்ளை யொருவர்க்கே யுள்ள தொன்றிறே. இவர் திருநக்ஷத்ரம் வைகாசி விசாகம். இவர் தனியன்:

**நமஶ் ஶ்ரீஶைலநாதாய குந்தீநகரஜந்மநே |**
**ப்ரஸாதலப்த பரமப்ராப்யகைங்கர்ய ஶாலிநே ॥**

அநந்தரம் நாயனாரும் ஆசாரியன் நியமித்தருளின படியே திருவாய்மொழி முதலான அருளிச் செயல்க ஸவ்யாக்யாணமாக அநுஸந்தித்துக் கொண்டு.

**ததஸ்து மூலபூதேஷு தேஷு திவ்யேஷு யோகிஷு**
**வவ்ருதே வர்த்தயந்பக்திம் வகுளாபரணாதிஷு**
**ததா தத்தத்ப்ரபந்தார்த்த ஸம்ப்ரதாயப்ரவர்த்தகாந்**
**அயமாத்ரியத ஸ்ரீமாந் ஆசார்யாநாதி மாநபி**

[பின்னர் ஸ்ரீமானான இவ்வழகியமணவாளப்பெருமாள் ப்ரபந்தஜநகூடஸ்தர்களாய் பெருமதிப்புற்ற நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களிடத்தில் பக்தியை வளர்த்துக் கொண்டு (தாமும்) வளர்ந்தருளினார்; அப்படியே அந்த ஆழ்வார்களருளிச் செய்த ஸம்ப்ரதாயார்த்தங்களை அநுஷ்டானத்தால் ப்ரவர்த்தியா நின்ற பூர்வாசாரியர்களையும் (ஆசார்யகளிடமும்) ஆதரித்துப் போந்தார் (மிக்க ஆதரம் காட்டினார்] என்கிறபடியே விலக்ஷண ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்களிடத்தில் விசேஷப்ரதிபத்தியை யுடையராய்த் திருநகரியிலே தர்சநத்தை வளர்த்துக் கொண்டு போருகிற நல்லடிக் காலத்திலே:

## அழகியவரதர் நாயனாரை ஆச்ரயித்தது.

"ஸ்ரீ ஸௌம்யஜாமாத்ருமுநீஶ்வரஸ்ய ப்ரஸாதஸம்பத் ப்ரதமாஸ்பதாய" [ஸ்ரீஸௌம்யஜாமாத்ருமுநீஶ்வரருடைய A அருட் செல்வத்துக்கு முதல் கொள்கலமான] என்கிறபடியே அழகிய வரதர் B சேனை முதலியார் தொடக்கமானவர்கள் இவர் வைபலத்தைக் கேட்டுத் திருவடிகளிலே ஆச்ரயித்தார்கள்

A அழகியமணவாளர் பின்னர் உத்தமாச்ரமம் பெற்று ஸௌம்யஜாமாத்ருமுனி- மணவாளமாமுனியானார்.
B. இவரே பின்னர், பொன்னான ஸ்ரீவானமாமலை ஜீயரானவர். பொன்னடிக்கால் ஜீயர் என்றழைக்கப்பட்டவர்.

அவர்களிலே அழகியவரதர், அப்போதே ஸந்யஸித்து "ராமாநுஜ ஜீயர்" என்னும் திருநாமத்தையுடையவராய், நாயனாருக்கு *நிழலுமடிதாறு மானோம் என்னும்படி ஸதா பாதரேகாஸமராய் நாயனாரை நித்யஸேவை பண்ணிக் கொண்டு போந்தார்.

## நாயனார் திருவரங்கத்துக் கெழுந்தருளல்

இப்படி அந்தரங்கரானவர்களோடே கூட எழுந்தருளியிருக்கிறவர் "ஸாபேந மநஸாத்யாதம்" என்கிறபடியே அப்போதொரு சிந்தை செய்து, "நமக்கெல்லாம் நற்சீவனமான நம்பெருமாளை ஸேவித்துக் கொண்டு அத்தலைக்கு அதிசயாவஹராய் மங்களாசாஸனம் பண்ணிக் கொண்டு யாவத்தேஹாவஸாநம் அங்கே யிருக்கையன்றோ நமக்குப்ராப்தம்" என்று அறுதியிட்டு, அப்போதே ஆழ்வார் திருமுன்பே சென்று ஸேவித்து, "*நல்குரவசரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எண்ணுதனகளெண்ணும் நன்முனிவர் இன்பந்தலைச்சிறப்ப, பண்ணார் பாடலின்,கவிகளைப்பாடி தேவரீர் மங்களாசாஸனம் செய்தருளுகையாலே பெருமாளுடைய ப்ரதிபக்ஷங்களெல்லாம் நிரஸ்தமாய்ப் பண்டுபோல அனைத்தழகும் கண்டருளுகிறார்; அடியேன் பெருமாளை ஸேவிக்க விடை கொள்ளுகிறேன்" என்று விண்ணப்பஞ் செய்ய, அப்படியே நம்மாழ்வாரும் விடை கொடுத்தருளினார். அநந்தரம்,

**ததः கதிபயைர்திவஸைஸ் ஸகுருர் திவ்யதர்ஶநः |**
**ஆஜகாம பரந்தாம ஸ்ரீரங்கம் மங்களம் புவः ॥**

[பின்பு திவ்யமான திருமேனித் தேஜஸ்ஸையுடைய அந்த நாயனார் சில தினங்களில் உயர்ந்த திவ்யதேசமாய் பூமிக்கு மங்களகரமான ஸ்ரீரங்கத்துக்கு வந்து சேர்ந்தார்] என்கிறபடியே முதலிகளும் தாமுமாக, *எம்பெருமான் திருவரங்கம் எங்கே என்று நாடிக் கொண்டு புறப்பட்டெழுந்தருளுகிறவர் *வில்லிபுத்தூருறைவான்தன் பொன்னடி காண்பதோராசையினாலே அங்கே எழுந்தருளி வடபெருங்கோயிலுடையானையும் பெரியாழ்வாரையும் திருவடி தொழுது, அநந்தரம் *அன்னவயல்புதுவையாண்டாளையும் "நீளாதுங்கஸ்தநகிரிதட" என்று தொடங்கி, "கோதா தஸ்யை நம இதமிதம் பூய," என்கிறபடியே ஸேவித்து,

**தேவஸ்யமஹிஷீம் திவ்யாம் ஆதௌ கோதாமுபாஸதந் |**
**யந்மௌலிமாலிகாமேவ ஸ்வீகரோதி ஸ்வயம் ப்ரபு ||**

[எந்த ஆண்டாளுடைய திருக்குழலில் சாத்தின திருமாலையையே ஸ்வாமியான அழகிய மணவாளன் ஆதரவுடன் சாத்திக் கொள்கிருனே, அந்த அழகிய மணவாளதேவனுடைய திவ்யமஹிஷியான கோதையை முதல் முன்னம் ஸேவித்தார்] என்கிறபடியே *சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளலாய் அங்கு நின்றும் புறப்பட்டு *மாலிருஞ்சோலை தொழக்கருதி, *நெறிபடவதுவே நினைவது நலமே-என்கிறபடியே மார்க்கசிந்தை பண்ணி அவ்வழியாலே அங்கேபுக்கு, *பதியதுவேத்தி, அநந்தரம் அழகர் தம் கோயிலிலே புக்கு, திருமாலிருஞ்சோலைநின்றான் கனைகழல்களைக்கண்டு வணங்கித் தொழுது, *முடிச்சோதியில் படியே "முடியார் திருமலையில்" என்று தொடங்கி, 'முற்றுமநுபவித்தார்' எனனும்படி அநுபவித்து தீர்த் ப்ரஸாதங்களும் ம்ரஸாதிக்க ப்ரஸாதப்பட்டு

**விஞ்ஞாபகம் வநகிரீஶ்வர! ஸத்யரூபா மங்கீகுருஷ்வ கருணார்ணவ மாமகீநாம் |**
**ஸ்ரீரங்கதாமநி யதாபுரமேஷஸோஹம் ராமாநுஜார்யவஶக: பரிவர்த்திஷீய ||**

[கருணைக்கடலான திருமாலிருஞ்சோலையழகரே! யதார்த்தமான அடியேனது விண்ணப்பத்தைத் திருவுள்ளம் பற்றியருளவேணும்; அது ஏதெனில்; அடியேன் முன்புபோலத் திருவரங்கம் பெரிய கோயிலிலே எம்பெருமானாருடைய திருவடிகளிலே சேர்ந்து வாழ்வேணும்படி அருள்புரிய வேண்டும்] என்று தாமும் இத்தையநுஸந்தித்து அப்படியே ப்ரார்த்தித்தருள, அரங்கனென்னம்மானுக்கே காதல் செய்யுந் தொண்டராய் அதிவ்வரையுடனே கோயிலேற எழுந்தருள:

அநந்தரம் *எண்டிசைக் கணங்களுமிறைஞ்சியாடு தீர்த்தநீர் என்றும், *கங்கையில் புநிதமாயகாவிரி என்றும் சொல்லுகிறபடியே A திருக்கேவேரியிலே நீராடியருளி கேசவாதி பனிரண்டு திருநாமங்களையும் சாத்தியருளி திருவரங்கப்பெருநகரைத்

---

A-காப்பானிஸ்ப்ர்ஶரஹிதராய், 'காவேரீ விரஜாஸேயம்" என்கிற அவ்விரஜை யாறு இது வென்னும் திருக்காவிரியிலே நீராடி- இது தெலுங்குபதிப்புப்பாடம்.

தண்டன்ஸமர்ப்பித்து நிற்க, அவ்வளவிலே தம்மை எதிர்கொள்ள வந்த அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்களின்பமிகு பெருங் குழுவுகண்டு தண்டன்ஸமர்ப்பித்து அவர்களுடனே கூடவுள்ளே புக்கு, வழியிலுள்ள வண்டினமுரலுஞ்சோலை தொடக்கமான திருச்சோலைகளையும் அநுபவித்துக் கொண்டு அவ்வருகேயெழுந்

மாடமாளிகைசூழ் திருவீதியும் மன்னுசேர் திருவிக்ரமன் வீதியும்
ஆடல்மாறனகளங்கன் வீதியும் ஆலிநாடனமர்ந்துறைவீதியும்
கூடல் வாழ்குலசேகரன் வீதியும் குலவுரங்கமகேந்திரன் வீதியும்
தேடுதன் வன்மாவின் வீதியும் தென்னரங்கர் திருவாவரணமே

என்று சொல்லப் படுகிற திருவீதிகளையும் திருமதிள்களையும் திருக் கோபுரங்களையும் கண்டு களித்துக் கொண்டு எழுந்தருளி, தமக்கு ஆசார்யதுல்யரான கோட்டூரிலண்ணர் திருமாளிகையேற வெழுந் தருளினார் அவர் திருமெய்யத்திலே திருவாய்மொழி வ்யாக்யாநம் இருபத்திநாலாயிரத்தையும் ஸாதித்துக் கொண்டெழுந்தருளி யிருந்து பின்பு பெருமாளெழுந்தருளுகையாலே இங்கே நித்யவாஸ மாக எழுந்தருளியிருக்கிறவரை நாயனாரும் அத்யாதரத்துடனே ஸேவித்தருள அவரும் உகந்தருளி இவரை அவதார விசேஷமென் றறிந்து ஆதரித்து , பெருமாளை ஸேவிக்கப்பண்ணுவதாக எழுந்த ருளப் பண்ணிவைத்துக் கொண்டு புறப்பட்டு, அக்காலத்திலே கோயிலதிபதியாயிருந்த திருமலைதந்தபெருமாள் பட்டருடைய அநுமதிக்காக அவர் திருமாளிகையிலே எழுந்தருள; அவரும் அப்ப்யுத்தாந ப்ரணாமாதிகள் தொடக்கமான உபசாரங்களைப் பண்ணி ஆஸநத்திலே எழுந்தருளுவித்து, "தேவரீரை ஸேவிக்க பெற்றோமே!" என்று பெரியப்ரீதியோடே ஆதரித்து "திருவாய் மொழியிலே ஒரு பாட்டுக்கு அர்த்தமருளிச் செய்ய வேணும்" என்ன, நாயனாரும் ஆழ்வாருடையவைபவத்தை ஐதிஹ்யமாகப் ப்ரதிபாதிக்கிற Aபாட்டையெடுத்து உபந்யஸித்தருள, பட்டரும் போரவித்தராய், "இவர் முப்பத்தாறுயிரப்பெருக்கர்' என்று மிகவும் உபலாளித்து "பெருமாளை மங்களாசாஸனம் பண்ணி யருள" என்று அருளிச் செய்து, அங்குண்டான ஸ்ரீவைஷ்ணவர்

A துவளில் மாமணிமாடம், என்ற திருவாய்மொழியாக இருக்க லாம் "இத்திருவாய்மொழி ஆழ்வார்ப்ரக்ருதி சொல்லுகிறது," என்று 'தம் முதலிகளெல்லாரும் போர விரும்பியிருப்பார்கள்— என்ற ஈட்டவதாரிகை காண்க

ளேயும் கூட்டியனுப்பியருள, அவர்களும் படியேபுறப்பட்டருளி, ப்ரதமம், *பொன்னரங்கமென்னில் மயலேபெருகுமிராமுசன் மன்னுமாமலர்த்தாளைகிட்டி, "யோநித்யமச்யுத" என்று தொடங்கி, "ராமாநுஜஸ்ய சரணெ ஶரணம் ப்ரபத்யே" என்று அநுஸந்தித்து ஸேவித்தருளி.

இவ்வுலகந்தன்னி லெதிராசர் கொண்டருளும்
எவ்வுருவும் யான்சென்றிறைஞ்சினக்கால்—அவ்வுருவம்
எல்லாமினிதேலுமெழிலரங்கத்திருப்புப் போல்
இல்லாதென்னெஞ்சு நிறைந்து

என்றநுபவித்தருளி பின்பு பூமகன் *கோன் தென்னரங்கன் பூங்கழற்குப்பாதுகமாய்த், தாம் மகிழுஞ் செல்வச்சடகோபரையும் ஸேவித்தருளி, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி அங்கயல் பாய்வயல் தென்னரங்கனணியாகம் மன்னும் பங்கயமாமலர்ப் பாவையான ஸ்ரீரங்கநாச்சியாரையும், "ஸ்ரீரங்க ராஜமஹிஷீம் ஶ்ரியமாஶ்ரயாம:" என்று திருவடிதொழுது, பூவளரும் திருமகளாருள் பெற்று உள்ளே புக்குத் திருமண்டபங்களையும் திருமடைப்பள்ளியையும் கருவுகூலங்களையுங்கண்டு களித்தருளி, ஸ்ரீபலிபீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்து உள்ளில் திருச்சுற்றையும் ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, அநந்தரம் வேதஶ்ருங்கமாய் அயன் பணிந்த கோயிலான ப்ரணவாகாரவிமாநத்தையும் ஸேனை முதலியாரையும் ஸேவித்தருளி, அழகிய மணவாளன் திருமண்டபத்தில் எழுந்தருளி, *ஆழிவண்ண! நின் அடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே! என்று தண்டன் ஸமர்ப்பித்துப் பெரிய திருவடியையும் திருவடிதொழுது, த்வாரபாலகர்களநுமதியுடனே யுள்ளே புகுந்து திருமணத்தூணருகே சென்று மாயோனைவாயார வாழ்த்தி, *அரங்கமா கோயில் கொண்ட கரும்பினைக் கண்டு கண்ணிணைகளித்து அமலனாதிபிரானில் படியே பாதாதிகேசாந்தமாக வநுபவித்தருளி, *பழுதே பலபகலும் போயின என்று இழந்த நாளுக்கு அநுகபித்து, அரங்கத்தரவணைப் பள்ளியானுய்க் கண்வளர்ந்தருளுகிற சேர்த்தியைக் கண்டு *படுத்த பைந்நாகப்பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே என்கிறபடியே திருப்பல்லாண்டை யநுஸந்தித்து மங்களாஶாஸனம் செய்தருளி, அநந்தரம் *பாயு நீரரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளி கொண்ட மாயனார் திருநன்மார்பும் என்று தொடங்கி *ஆயசீர்முடியுந் தேசுமடியரோர்க்ககலலாமே என்று ஸேவித்து, அதன்மேலே பெரியபெருமாளுடைய வ்யூஹஸௌஹார்தாதி

குணங்களை யநுபவித்து அநந்தரம் திவ்யஸிம்ஹாஸநம்ஆரூ சேரபாண்டியனிலே மலர்மடந்தை மண்மடந்தைகளாகிற உபய நாய்ச்சிமாருடனே எழுந்தருளியிருக்கிற நம்பெருமாளை

அப்பஜந்யஸ்தபதாப்ஜம் அஞ்சிதகடீஸம்வாதிகௌஶேயகம்
கிஞ்சித்தாண்டவகந்திஸம்ஹநநகம் நிர்வ்யாஜமந்தஸ்மிதம் |
சூடாசும்பிமுகாம்புஜம் நிஜபுஜாவிஶ்ராந்தி திவ்யாயுதம்
ஸ்ரீரங்கே ஶரதஸ்ஶதம் ததஇத: பஶ்யேம லக்ஷ்மீஸகம் ॥

[ஸ்ரீரங்க ராஜஸ்தவம், பூர்-74: ஆஸநபத்மத்திலழுத்தின திருவடித் தாமரைகளையுடையவரும், சிறந்த திருவரைக்குப் பாங்கான பட்டுத் திருப்பரிவட்டத்தையணிந்தவரும், சிறிது நர்த்தநஞ் செய்வது போல் விளங்குகிற திருமேனியையுடையவரும், இயல்பான புன்முறுவலையுடையவரும், திருவபிஷேகத்தைத் தழுவியிருக்கின்ற முககமலத்தையுடையவரும், தமது திருக்கையில் இளைப்பாறுகின்ற திவ்யாயுதங்களையுடையவருமான திருமகட் கன்பனுன அழகிய மணவாளனைத் திருவரங்கத்திலே இன்னமொரு நூற்றுண்டளவும் அங்குமிங்கும் (எழுந்தருளுமிடமெல்லாம்) ஸேவிக்கக் கடவோம்] என்கிறபடியே ஸேவித்தருளி, "திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்தஞ்சலென்ற கையும் கவித்த முடியும் முகமும் முறுவலும் ,ஆஸநபத்மத்திலே அழுத்திய திருவடிகளுமாய் நிற்கிறநிலையே நமக்குத் தஞ்சம்", (முமுக்ஷுப்படி த்வயம்-21) என்று அநுஸந்தித்தருளி, அதநன் நிதியைக் கண்டாப் போலே பூர்வர்கள்தநமாயிருக்கிற ஸ்ரீநிதியான நம்பெருமாளைக் கண்டு கொண்டு, சிவந்த திருமுகமண்டலத்தையும் கஸ்தூரித் திருநாமத்தையும் A வைத்தகண் வாங்காதே அநிமிஷராயநுபவித்துக் கொண்டு நிற்க, தேசாந்தரகதனை புத்ரனைக் கண்ட மாதாபிதாக்களைப் போலே *தந்தையுந்தாயுமானதாம் இவரைக் கண்டு ப்ரஸந்நவதநேக்ஷணராய் கருணுர்த்த

---

A. மதிநுதல் கஸ்தூரி திருநாமத்தையும், முறுவல்பூத்த பவளவாயையும், கவித்த கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொத்த நீண்முடியையும், *கையினுர் சுரிசங்கனலாழி எழிலையும், அஞ்சலென்ற கையையும், திருவரைபூத்தாப்போலிருக்கிற அந்திபோல் நிறத்தாடையும் ஆஸநபத்மத்திலே அழுத்தின செம்பங்கயத்தாள்களையும் *கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழிலையும் கண்வாங்கமாட்டாதே நிர்நிமேஷ த்ருஷ்டிகளாய்—என்று தெலுங்குப் பதிப்பில் அதிகபாடம்.

த்ருஷ்டியாலே குளிரக் கடாக்ஷித்தருளி "நமக்காவாரை நாமே தேடிக் கொள்வோம்" என்று அருளிச் செய்து எம்பெருமானாரை விஷயீகரித்தாப் போலே இவரையும் விஷயீகரித்தருளினார்.

பின்பு தீர்த்தப்ரஸாதங்களையும் ஸ்ரீ சடகோபனையும் திருமாலை ப்ரஸாதத்தையும் ப்ரஸாதிக்கப் பெற்று, முடியும் மாலையும் பெற்றாப் போலே *தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்று அத்யந்தம் ப்ரீதராய் அண்ணரைப் பார்த்து "தேவரீருக்காக நம்பெருமாள் இப்படி வாழ்வித்தருளினார்" என்று அருளிச் செய்து, அநந்தரம் அண்ணருடனே கூடப்புறப்பட்டருளி அவர் திருமாளிகையிலே எழுந்தருள, பட்டரும் அனேக பதார்த்தங்களுடன் சிறப்பு வரக் காட்டியருள அத்தையங்கீகரித்து அண்ணர் திருமாளிகையிலே யமுது செய்து எழுந்தருளியிருக்க அவரும் பூர்வாசாரியர்கள் போதமநுட்டானங்களையருளிச் செய்யக் கேட்டுத் திருவுள்ளந்தேறி அவருடனே கூடப்புறப்பட்டு பூர்வர்கள் எழுந்தருளியிருந்த திருமாளிகைகளைச் சென்று ஸேவித்து, பின்பு பிள்ளைலோகாசாரியர் திருமாளிகை நோக்கியெழுந்தருளி,

வாழியுலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழிமுடும்பையென்னும் மாநகரம்—வாழி
மனஞ்சூழ்ந்த பேரின்மல்கு மிக நல்லார்
'இனஞ்சூழ்ந்திருக்குமிருப்பு என்றும்,

மணவாளன் மாறன் மனமுரைததான் வாழி
மணவாளன்மன்னுகுலம்வாழி—மணவாளன்
வாழிமுடும்பை வாழிவடவீதிதான்
வாழியவன் உரை செய்த நூல்

என்றும் அநுஸந்தித்துத் திருமாளிகை வாசலிலே தண்டன் ஸமர்ப்பித்து அஞ்ஜலித்துக் கொண்டு.

1 A வாணீம் புண்யஸ்தாபகாம் ஶடஜித்ஸ்ஸ்வைரம் விகாஹ்யாதராத்
ஆகீயாம்ருத மத்ரசக்ரதுருபௌ லோகோபகாராத்மகௌ |
யௌ வாக்பூஷண தேஶிகேந்த்ரஹ்ருதயாபிக்யௌ
ப்ரபந்தாவிமௌ
தே வந்தே புவநார்யஸ்ந்தரவரௌ க்ருஷ்ணோத்மஜௌ
தேஶிகௌ ||

2 B ஆர்யஸ்ஸௌம்யவரஶ்ஶடாரிகலிஜித் பட்டே ஶ முக்யாத்மனாம்
பக்தானாம் விமலோக்திமௌக்திக மணீஜாதாய சக்ரே ப்ருஶம் |
க்ருத்வா ஸாதுரஹஸ்த்ரயார்த்த மகிலம் கூடம் விஶபித்ரியம்
லோகார்யாவரஜஸ்ஸ¬ஶிக்ஷகவரஶ்சூடாமணிஶ்ஶோபதே ||

3 யஸ்யாஹம் குலதைவதம் ரகுபதேராராதநம் ஸ்ரீலக:
காவேரீ ஸரிதந்தரீபநகரீ வாஸஸ்தலீ புண்யபூ: |
க்ருஷ்ணோ மாந்யகுருர் வரேண்யமஹிமா வேதாந்த வித்யாநிதி:
ப்ராதா ஸௌம்யவரஸ் ஸ்வயந்து புவநாசார்யோஸி கஸ்தே ஸம:

[1. இங்கு உலகத்தவருக்கு உதவுமியல்புடையராய் எந்த இரு ஆசாரியர்கள் நம்மாழ்வாருடைய திருவாய்மொழியாகிற புண்யமான அமுதப்ரவாஹத்தில் ஆதரத்துடன் யதேச்சையாயாழ்ந்து அதில் நின்றும் அம்ருதத்தைக்கொண்டு எந்த ஸ்ரீவசந பூஷணம் ஆசார்யஹ்ருதயம் என்ற பெயரையுடைய இருப்ரபந்தங்களையுமருளிச் செய்தார்களோ, வடக்குத் திருவீதிப்பிள்ளையின் குமாரர்களான பிள்ளைலோகாசாரியர் அழகியமணவாளப் பெருமாள் நாயனார் என்ற ஆசாரியர்களை அடி பணிகிறேன்

2. பிள்ளைலோகாசாரியரின் திருத்தம்பியராய் ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை சிக்ஷித்து அருளிச்செய்பவராய், யாவருக்கும் பூஜ்யராய் சிரோபூஷணமான அழகியமணவாளப்பெருமாள் நாயனார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், முதலான பக்தாக்ரேஸரர்களின் தூயவாக்குக்களாகிற மணி, முத்துக்களைக் கொண்டு ரஹஸ்யதரயத்தின் ஆழ்பொருள்களையெல்லாம் பூர்வாசாரியர்களின் திருவுள்ளத்துக்கிசைய விளக்கி வெளியிட்டு மிகவும் விளக்கமுறுகிறார்.

3. யாருக்கு சக்ரவர்த்தி திருமகனுடைய திருவாராதனமான அழகிய மணவாளன் குலதெய்வமோ, திருக்காவேரியின் நடுவிலுள்ள புண்ய பூமியான கோயிலானது இருப்பிடமோ, பெரும் புகழாளராய் பூஜ்யரான வடக்குத்திருவீதிப்பிள்ளை தந்தையுமாசார்யருமாவரோ, உபய வேதாந்த நிதியான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இளைய ஸஹோதரரோ, அப்படியான தேவரீரே ஜகத்துக்கெல்லாம் ஆசாரியராக உள்ளீர்; இப்படிப் பட்ட தேவரீருக்கு யார் ஒப்பாவார்?] என்கிறபடியே பிள்ளைலோகாசாரியருடைய ஸமாப்யதிகரஹிதமான பெருமையைப் பேசா நின்றுகொண்டு "ரஹஸ்யம் விளைந்த மண்ணன்றோ?" என்று மிகவுமாதரித்தருளி, அங்கேயெழுந்தருளியிருந்து பிள்ளைலோகா

A, B. இரண்டு சுலோகங்களும் தமிழ்பதிப்பிலில்லை. தெலுங்குப் பதிப்பிலுள்ளவை.

சாரியர் வைபவங்களையெல்லாம் அண்ணரருளிச்செய்யக் கேட்டு, ''இவ்வளவாகிலும் பெற்றோமே!'' என்று ப்ரீதராய் அண்ணரை ஸேவித்துக்கொண்டு ஆசாரியர்களுக்கு ஆவர்ஸ பூமியான கோயிலிலே எழுந்தருளியிருக்க, பின்னையும் ஒருநாள் வரையிலே நம்பெருமாளை இவர் திருவடிதொழச் சென்றவாறே தீர்த்தம் திருமாலை பரியட்டத்துடனே தம்முடைய தேனேமலரும் திருப் பாதத்தை இவர் திருமுடிசூடுவித்து,

**தஸ்மிந் ஸஸ்மிதநேத்ரேண ஸ்ரீமதா ஶேஷஶாயிநா |**
**ஸத்க்ருத: க்ருதவாந் வாஸம் கிஞ்சித்தத்ர ததந்திகே ||**

[மலர்ந்து நீண்டவப்பெரியவாயகண்களையுடைய ஸ்ரீமானான பெரியபெருமாளாலே அநுக்ரஹிக்கப்பட்டவராய் சிலநாட்கள் அவர் திருவடி வாரத்திலே வாழ்ந்திருந்தார்] என்கிறபடியே, திருப்பவளச்செவ்வாய் முறுவல் கொண்டு 'நம்முடையவரைப் போலே நீரும் நம்வீட்டில் கார்யத்தையும் தர்சந ரஹஸ்யங்களையும் ஆராய்ந்துகொண்டு உம்முடைய சரீராவஸானத்தளவும் இங்கே இரும்'' என்று அருளிச்செய்ய, இவரும் ' மஹாப்ரஸாதம்'' என்று அங்கீகரித்து நியமித்தபடியே அங்கே எழுந்தருளியிருந்தார்

அக்காலத்திலே அங்குண்டான ரஹஸ்யப்ரபந்தங்களையெல்லாம் திருக்கண்சாத்தி ஜீர்ணோத்தாரணம் பண்ணியருளி அவற்றை ப்ரகாசிப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருக்க; பின்பு ஒரு நாள் ''பெருமாள் திருவாராதனம் நடத்திக்கொண்டுபோருகிற உத்தம நம்பி தாழ்வாக நடத்துகிறபடியையும் அமுது செய்தருளுகிற தளிகைக்குறைகளையுங்கண்டு ''இவனை நிரஸித்தருளி அநுகூலரானவர்களைக் கொண்டு குறைவறக்கண்டருளப்பண்ணவேணும்'' என்று வானமாமலை ஜீயரருளிச்செய்ய A, அத்தைக்கேட்டருளி ''தேவரீருடைய திருப்பணி திருவாராதநம், குறைவற நடத்திப் போம்படி இவனையநுகூலனாகத் திருத்திப்பணிகொண்டருள வேணும் என்று மங்களாசாஸனம் பண்ணீர'' என்றருளிச்செய்து, தாமும் அப்படியே மங்களாசாஸனம் பண்ணியருளி.

---

A **அழகிய வரதர்** என்று திருநாமமுடையராய் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரை பால்யததிலேயே ஆச்ரயித்துப் பின்னர் ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளி ''ஸ்ரீவானமாமலைஜீயர்'' என்று அழைக்கப்பட்டார்;

இவ்விடத்தில் ஜீயர், அழகிய மணவாள நாயனாரை, ''தேவரீர் பெருமாளைக்குறித்து 'இவனை நசிப்பித்து அநுகூலரைக்கொண்டு திருப்பணி திருவாராதனம் குறைவறக் கொண்டருளவேணும்' என்று ப்ரபத்தி பண்ண வேண்டிக்கொள்ளும்'' என்ன; நாயனாரும் அது கேட்டருளி அழகியவரதரைக்குறித்து பெருமாளுக்கு- என்று தெலுங்குப்பதிப்பில் பாடம்.

## நாயனார் திருவேங்கடயாத்திரை எழுந்தருளல்

அநந்தரம் வடதிருவேங்கடமென்று ப்ரஸித்தமான வடமாமலை முதலான வடதிசையிலுண்டான திருப்பதிகளைத் திருவடி தொழுகையிலே மிகவுந்திருவுள்ளத்தையுடையராய் 'ததஸ்தேநாப்யநுஜ்ஞாதோ யாதோ தரணி முத்தராம்'' [பின்னர் பெருமாளால் அநுமதிக்கப் பட்டவராய் வடதேசத்திலுள்ள திருப்பதிகளைச் சென்றடைந்தார்] என்கிறபடியே பெருமாள் ஸந்நிதியிலே சென்று ஸேவித்து நின்று, அடியேன் திருமலைக்குப் போய்திருவேங்கடமுடையானைத் திருவடி தொழ விடை கொள்கிறேன்'' என்று விண்ணப்பம் செய்ய, பெருமாளும் தீர்த்த ப்ராஸதங்களும் பரியட்டமும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்து ''போய்வாரும்' என்று விடை கொடுத்தருள:

### திருக்கோவலூர், திருக்கடிகை மங்களாசாஸனம்

அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் *அணியரங்கத்தின்ன்றும் பெரியதிருமலையேறப் போவாராய் அப்போதே புறப்பட்டருளி, *முப்போதும் வானவரேத்தும முனிவர்கள் வெள்ளறையிலே சென்று புக்கு பங்கயச்செல்வியார் புருஷகாரமாகச் செந்தாமரைக் கண்ணரை ஸேவித்துத் தீர்த்தப்ரஸாதங்களும் ப்ரஸாதப்பட்டு ' பாதேயம் புண்டரீகாக்ஷ நாமஸங்கீர்த்தநாம்ருதம்'' [செய்யதாமரைக்கண்ணனின் திருநாமங்களைப் பாடுவதான அம்ருதம் வழிக்கு உணவாகிறது] என்கிறபடியே த்வயவசந பாதேயத்துடனே *பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! என்று பெரியத்வரையோடே புறப்பட்டு அவனடி நிழற்றடங்களையுடையராய் விச்ரமித்து விடாயாறி, ஊரைச் சென்றுகிட்டி, உள்ளேபுக்கு முதலாழ்வார்களைத் திருவடி தொழுது அவர்கள் புருஷகாரமாக ''த்ரிவிக்ரமமபிகம்ய'' என்கிறபடியே ஆழ்வார்கள் நாயனாரையும் ஆயனாரையும் ஸேவித்து, *தூரவடிவில்பார்மகள் [திருமொழி 2-10-9) என்று தொடங்கி, *திருக்கோவலூரதனுட் கண்டேன் நான் என்கிறபடியே அநுபவித்து, *நீயும் திருமகளும் நின்றாயால் (முதல் திரு-86) என்கிற பாட்டை யநுஸந்தித்து, *அன்றிவ்வுலகமளந்தாய் அடிபோற்றி என்று மங்களாசாஸநம் பண்ணியருளித் தீர்த்தம் ப்ரஸாதப்பட்டு, பூங்கோவலாயனழகு பின்னேதள்ள திருவேங்கடத்தானருள் முன்னே நடத்த' புறப்பட்டு, *குன்றமேந்திக் குளிர் மழைகாத்தவன் அன்று ஞாலமளந்த

பிரான் பரன் சென்றுசேர் திருவேங்கடமாமலை (திருவாய். 3-3-8) என்றும் *திருவேங்கடத்தாயன் என்றும் *மெய்த்தசோலை மொய் பூந்தடம் என்றும் சொல்லப்படுகிற நீர்மையையுடைய திருவேங் கடமுடையானைத் திருவடி தொழுகையிலே திருவுள்ளமாய் பெருங் கூட்டத்துடனே போவான்வழி கொண்டு அதித்வரையுடனே Aயெழுந்தருளுகையில் *நீள் சோலைவண்பூங்கடிகையில் தக்கானை யும், *கடிகைத்தடங்குன்றில் அக்காரக்கனியையும் அடைந்து மங்களாசாஸநம் பண்ணிப் புறப்படநிற்கச் செய்தே எறும்பியி லுள்ள பெரியோர்களும் பக்ஷையுடன் வந்து ஸேவித்து நிற்க, அவர்களை ஆதரித்துப் புறப்பட்டருளினர்.

## இனி திருமலை வ்ருத்தாந்தம்

திருப்புரட்டாசி முதல் திருநாள் ராத்ரி பெரிய கேள்வி ஜீயரு டைய ஸ்வப்நம்: ஆழ்வார்தீர்த்தத்திற்குத் தெற்கிலுள்ள திருத் தோப்பருகே ஒருவர் வடக்குமுகமாக நிற்கிறதாகவும்' திருமலை யாழ்வார் மேல்கோடி தொடங்கி கிழக்கு முடிவுமட்டும் ஸ்தூல மாய் அதிதீர்க்கமாயிருக்கிற திருமேனியுடையராய் மேற்கே திரு முடியும் கிழக்கே திருவடிகளும், தெற்கு நக்கைக் கடாக்ஷித்துக் கொண்டு பெரிய பெருமாளைப் போல ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கண் வளர்ந்தருளுகிறதாகவும்; ஒரு ஜீயர் திருவடி பார்ச்வத்திலே நிற் கிறதாகவும் கண்டு "இவரார்?" என்று போவார் வருவாரைக் கேட்க, அவர்கள் சொன்னபடி: 'இவர் முப்பத்தாறுயிரப் பெருக் கரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்; அவர் பொன் னடிக்கால் ஜீயர்" என்று சொல்ல, கண்விழித்து "இதொருஸ்வப்ந மிருந்தபடி என்!" என்று அதிப்ரீதியுடனே எழுந்திருந்து பெருமாள் திருவீதியில் ப்ராத.காலம் புறப்பாட்டிற்கு மங்களா சாஸநத்துக் கெழுந்தருளி இயல் தொடங்குகிறவிடத்திலே இச் செய்தியை ஸ்வாமிகளுக்கறிவிக்க, இத்தை தோழப்பய்யங்கார் கேட்டருளி

**ஸ்வப்நேப்ருஹத்யதீந்த்ரஸ்ய ஸ்ரீசைலஸமிதோமஹாந் |**
**சயாந: புருஷோத்ருஷ்ட: ஸௌம்யஜாமாத்ரு தேசிக: |**
**ததச்ச பச்சாத் தஸ்யைவ பாதமூலே யதீச்வரம் |**
**ப்ராஞ்ஜலிம் நிப்ருதம்ப்ரஹ்வம் ஸ்வர்ணாதிபதிபதஸம்ஜ்ஞகம் ||**

---

A. இதிலிருந்து திருக்கடிகை மங்களாசாஸனம். பெரியஜீயர் ஸ்வப்நம் முதலியவை தெலுங்கு பதிப்பில் இல்லை. திருமலை மங்களாசாஸனம் சுருக்கமாய்ப் பேசப்பட்டுள்ளது.

[பெரிய ஜீயருடைய ஸ்வப்நத்தில் திருமலையோடு ஒத்த அளவுடையவராய் மணவாளமாமுனி யென்கிற மிகப் பெரிய புருஷர் படுத்துக் கொண்டிருப்பவராகக் காணப்பட்டார். அவரது திருவடிவாரத்தில் விநயத்துடன் குனிந்து கைகூப்பி நிற்கும் பொன்னடிக்கால ஜீயரையும் அப்பெரிய ஜீயர் கண்டார்] என்று ச்லோகமாக அருளிச் செய்தார். இத்தை எல்லாரும் கேட்டு உகந்திருக்க, அப்போது தேசாந்தரத்தினின்றும வந்த பெரியோர் களில் சிலர் "இப்படி ஸேவை ஸாதித்தவர் கோயில் நாயனார்" என்ன, வேறு சிலர் "அவர் திருநாளுக்கெழுந்தருளுகிறார்" என்ன, மற்றும் சிலர் 'நாயனார் தம்முடைய சிஷ்யரான வானமாமலை ஜீயரைத் தமக்கு ப்ராணஸுஹ்ருத்தென்றும். பொன்னடிக்கால் ஜீயரென்றும் அருளிச் செய்வர்" என்ன; "ஆனால் இந்த விசை திருநாளுக்கு மஹாதிசய முண்டாயிற்று" என்று அனைவரும் போர உகந்து எதிர்பார்த்துக் கொண்டு எழுந்தருளியிருக்க,

நாயனாரும் பயணகதியிலே யெழுந்தருளித் திருமலையாழ் வாரைக் கண்டருளி *திருவேங்கடமாமலை யொன்றுமே தொழ நம் வினையோயுமே (திருவாய் 3-3-8)என்று திருமலையாழ்வாரைத் தண்டன் ஸமர்ப்பித்து, வைத்தகண்வாங்காதே அநுபவித்துக் கொண்டு சென்று "ஸுவர்ண முகரீம் தத்ர ஸங்கதாம் மங்களஸ்வ நாம்" [அத்திருமலையோடு சேர்த்து நல்ல ஓசையுடைய ஸுவர்ண முகி நதியை] என்று மங்களாவஹமான ஸ்வர்ண முகியைக் கிட்டி அங்கே நீராடியருளி, கேசவாதி த்வாதச நாமங்களையும் சாத்தி யருளினவளவிலே ஸ்ரீகோவிந்தராஜருடைய அபயஹஸ்தம், களபம் திருமாலை தொடக்கமான வரிசைகள் வர. அங்கீகரித்தருளி, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாருக்கும் ப்ரஸாதவிநியோகம் செய்த ருளித் தாமும் ஸ்வீகரித்துப் புறப்பட்டு கோவிந்தராஜரை மங்களா சாஸநம் செய்தருளி, வரிசை பெற்று திருமலையடிவாரத்திலே அழகிய சிங்கரைத் தொழுது, "எவம்வித் பாதேநாத்யா ரோஹதி" [இப்படி உபாஸிப்பவன் காலால் ஏறுகிறான்] என்கிற படியே ஏறியருளி, பரிஷத் திருவேங்கட முடையானைத் தொழுது கர்ப்பூரக்காலிலே தீர்த்தஸ்வீகாரம் செய்தருளி, காட்டழகிய சிங்கரைத் தொழுது, மாம்பழவெம்பெருமானைரைத் தண்டன் ஸமர்ப்பித்து விச்ரமித்துப் புறப்பட்டருள; இச்செய்தி கேட்டுப் பெரிகேள்விஜீயரும் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களும், அனைத்துக் கொத்துப் பரிகாரத்துடனே பூவார்கழல்களை எழுந்தருளப் பண்ணி வைத்துக் கொண்டு, பெரியபரிவட்டம், ஸ்ரீபாதரேணு, அபயஹஸ்தம் முதலான வரிசைகள் கூட்டி மங்கள வாத்யங்களு டனே எதிர் கொண்டு ப்ரஸாதிக்க ஸ்வீகரித்து மொண்டைத்

திருக்கோபுரத்தருகே திவ்யவிமானத்தையும் திருநாராயண கிரியையும் த்வஜஸ்தம்பத்தையும் பொற்கோபுரத்தையும் கண்டு களித்துத் தண்டன் ஸமர்ப்பித்து உள்ளே புக்கு,

*அவாவறச்சூழ்ந்தான் திருவாசலிலே தண்டன் ஸமர்ப்பித்து திருவீதிகளையும் திருமாளிகைகளையும் கண்டு களித்துக் கொண்டு ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி ஸ்வாமி புஷ்கரிணியிலே நீராடியருளி, திருமண்காப்புச் சாத்தியருளி, வேங்கட வராஹத்தை ஸேவித்து, தீர்த்தம் ப்ரஸாதம், ஸ்ரீ சடகோபன் சந்தனம் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்துப் புறப்பட்டருளி திருத்தேர்களையுங் கண்டு களித்து, உள்ளே யெழுந்தருளி ஆழகிய மணவாளன் திருமண்டபத்தை தண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீபலிபீடத்தையும் செண்பகத் திருவாசலையும் அத்தாணிப்புளியையுந் தண்டன் ஸமர்ப்பித்துச் செண்பகச்சுற்று ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளிச் சாலை வாசலாலேயுள்ளே புக்கு நெய்க்கிணறு முதலான சாலை வரிசைகளைக் கண்டு களித்துத் திருமடைப்பள்ளியையும் யமுனைத்துறைவனையுந் தொழுது, புஷ்கரிணியிலே தீர்த்த ஸ்வீகாரம் பண்ணி ஸ்வர்ண மண்டபமேறி நாராயண கிரியைத் தொழுது, செண்பகத் திருவாசலாலேயுள்ளே புக்கு, தேவப்பெருமாள் எழுந்தருளியிருந்த பொன் விஞ்சு பெருமாள் கோயிலையும் அழகப்பிரானாரையும் திவ்ய விமானத்தையும் தொழுது திருமடைட்பள்ளி நாய்ச்சியாரையும் ஸேவித்து தசாவதாரங்களையுந் தொழுது, திருமாமணி மண்டபமான யாகமண்டபத்திலே நாய்ச்சிமாருடன் மலைக்கினிய நின்ற பெருமாளையும் தண்டன் ஸமர்ப்பித்து, தீர்த்தம், ஸ்ரீ சடகோபன், ஸ்ரீபாதரேணு ப்ரஸாதிக்க ஸ்வீகரித்தருளி, திவ்ய விமானத்தைத் தொழுது ஸேனைமுதலியாரையும் வணங்கி, 'ராமநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே'[4] என்று எம்பெருமானாரைத் தண்டன் ஸமர்ப்பித்து, தீர்த்தம் அநந்தாழ்வான், ப்ரஸாதம், சந்தனம், ப்ராஸதிக்க ஸ்வீகரித்து, அழகிய சிங்கரையும், திருநிலைக் கண்ணாடி போலிருக்கிற பெரியதிருவடி நாயனாரையும் தொழுது உண்டியிலே திருமுன்காணிக்கையும் ஸமர்ப்பித்து த்வாரபாலகருடைய அநுமதி கொண்டு உள்ளே புக்கு, மத்யே சக்ரவர்த்தி திருமகனாரையும் தொழுது *குலசேகரன் படியருகே சென்று, *பொன்னம் புயல்போல் மரகதம்போல் பூவை மலர்போல் கருவிளை போல் பொங்கார்கடல்போல் பொலிந்திருண்ட புழுகிற்றுளைந்த செஞ்சோதி, அன்னம் பயிற்றி நடமாட அலர்மேல் மங்கையுறை மார்பனும், "விசேஷவேதேவதேவேஶம் ஶேஷஶைல நிவாஸிதம்" [திருமலையில் நித்யவாஸம் பண்ணும் தேவாதிதேவனான திருவேங்கடமுடையானை ஸேவித்தார்] என்கிற படியே, *எழில்கொள்

சோதியான திருவேங்கடத்தெந்தையை அநுபவித்து நிற்க, அப்பனும் தீர்த்தப்ரஸாதம்திருமாலை, ஸ்ரீ சடகோபன் இவை ப்ரஸாதிக்க, பெற்று க்ருதார்த்தராய்:

## நாயனார் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளல்

அங்கு நின்றும் புறப்பட்டு நடுவே இரண்டு மூன்று நாள் வஸித்து அதன் பின்பு *உலகேத்து மாழியானத்தியூரேற வெழுந்தருளி

**Aதூரஸ்திதேபி மயித்ருஷ்டி பதம்ப்ரபந்நேது:கம்விஹாய**
**பரமம் ஸுகமேஷ்யதீதி |**
**மத்வேவயத்ககநசும்பி நதார்த்திஹந்து: தத்கோபுரம்**
**பகவதஶ்ஶரணம்ப்ர பத்யே ॥**

'நான் தூரத்திலிருந்தாலும் ஒருவன் கண்களுக்குப் புலப்படு வேனாகில், அவன் துக்கத்வை விட்டு உயர்ந்த ஸுகத்தை அடைவான்' என்று நினைத்துப்போலும் வானளாவி நிற்கிற—ப்ரணதார்த்தி ஹரனை பேரருளாளனுடைய எந்தக் கோபுரமொன்றுண்டோ? அதைச் சரணமடைகிறேன்] என்று திருக் கோபுர நாயனாரை தண்டன் ஸமர்ப்பித்து உள்ளே சென்று புண்யகோடி விமானத்தையும் தண்டன் ஸமர்ப்பித்துதிரு வநந்தஸரஸ்ஸிலே நீராடியருளித் திருமண் காப்பு சாத்தியருளி அடைவே ஆழ்வார்களையும் ஸேவித்து பலி பீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்து உள்ளே புக்கு, சேர்ந்தவல்லி நாய்ச்சியாரையும் சக்ரவர்த்தி திருமகனாரையும் திருவநந்தாழ்வானையும் தொழுது ப்ரக்ஷிணமாக வெழுந்தருளித் திருப்புற்றுக்குக் கீழாக இளையாழ்வாரை *ஆம்முதல்வனிவன் என்று கடாக்ஷித்தருளிய யமுனைத்துறைவன் திருமுற்றத்தையும் அவரெழுந்தருளியிருக்கிற கரியமாணிக்கத்தாழ்வார் ஸோபாநத்தையும் ஸேவித்து, பேரருளாளர் பெருந்தேவியாரையும்

**ஆகாரத்ரயஸம்பந்நாம் அரவிந்த நிவாஸிநீம் |**
**அஶேஷஜகதீஶித்ரீம் வந்தேவரதவல்லபாம் ॥**

[அநந்யசேஷத்வ, அநந்யஶரணத்வ, அநந்யபோக்யத்வமாகிற மூன்று ஆகாரங்களோடே கூடியவளாய், தாமரை மலர்மேல் நித்யவாஸம் செய்யுமவளாய் எல்லாவுலகங்களுக்கும் ஈஶ்வரியாய்

A. இந்தச்லோகம் இதனுக்குப் பதிப்பிலில்லை

தேவப்பெருமாளுக்கு வல்லபையான பெருந்தேவியாரை அடிபணிகிறேன்] என்று அநுஸந்தித்து ஸேவித்து *பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு அங்கே பெரிய திருவடியையுந் தொழுது உள்ளே புகுந்து *தானவனை வன்னெஞ்சங்கீண்ட சிங்கப்பிரானையும் ஸேவித்துச் சூடிக்கொடுத்த நாய்ச்சியாரையும் ஸேனை முதலியாரையும் ஸேவித்து அவ்வருகே ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி ஸ்ரீ ஹஸ்திகிரியருகே சென்று, "ஏஷதம் கரிகிரீம் ஸமாஶ்ரயே" என்று தண்டன் ஸமர்ப்பித்து மலையாள நாய்ச்சியாரையும் ஸேவித்து, பதக்ரமத்திலே படிகடந்தேறி, கச்சிக்கு வாய்த்தான் திருமண்டபத்திலே "திருக்கச்சி நம்பி முன்னுக வரதராஜர் திருவரங்கப்பெருமாளரையருக்கு இராமானுசனைத்யாகம் செய்தருளிய ஸ்தலமன்றோ:" என்று அஞ்சலித்து, அவ்விடத்தில் அநவரத ஸந்நிதி பண்ணிக் கொண்டிருக்கிறவர்கள் புருஷகாரமாக

ஸிந்துரர்ஜஶி ரோரத்ந மிந்திராவாஸவக்ஷஸம் |
வந்தே வரதம் வேதிமேதிநீ க்ருஹமேதிநம் ॥

[திருவத்தி மாமலைக்குத் தலைக்கணிமணியாய் அலர்மேல்மங்கையுறை திருமார்பையுடையனும் யாகபூமிக்கு ஸ்வாமியான வரதராஜனை அடிபணிந்தார்] என்கிற படியே புண்யகோடியாக்யாதமான விமானமத்யத்திலே எழுந்தருளியிருக்கிற பேரருளாளரை.

ராமாநுஜாங்க்ரி ஶரணோஸ்மி குலப்ரதீப.
த்வாஸீத் ஸ யாமுநமுநேஸ் ஸ ச நாதவம்ஶ்ய: |
வம்ஶ்ய.பராங்குஶமுநேஸ் ஸ ச ஸோபி தேவ்யா:
தாஸஸ்தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீய ॥

[பேரருளாளனே! அடியேன் எம்பெருமானார் திருவடிகளை சரணம் பற்றியவன்; அந்த எம்பெருமானாரோ ஆளவந்தாருடைய ஜ்ஞாந பரம்பரைக்கணி விளக்கானவர், அவ்வாளவந்தார் தாமும் ஸ்ரீமந் நாதமுனிகளுடைய வம்சத்தவர். அந்த நாதமுனிகளும் நம்மாழ்வாருடைய ஜ்ஞாநபரம்பரையினர், அந்த ஆழ்வாரும் பிராட்டிக்கடியவர்; இப்படி பாரம்பர்யத்தாலே அடியேன் தேவரீருக்கு கடாக்ஷிக்கத்தக்கவனுகிறேன்] என்றநுஸந்தித்து தண்டன் ஸமர்ப்பித்து, அநந்தரம் திருப்பல்லாண்டையும் வரதராஜஷ்டகத்தையும் ஸ்தோத்ரகத்யங்களையும் அநுஸந்தித்து மங்களாசாஸனம் பண்ணியருள, தேவப்பெருமாளும், "நம்மிராமானுசனைப்போலே யிருப்பாரொருவரைப் பெறுவதே" என்று மிகவும் க்ருபைபண்ணி தீர்த்

தப்ரஸாதங்களையும் ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்தருளி விடை கொடுத்தருள. அங்கு நின்றும் புறப்பட்டருளிA *நிறைந்த சீர்நீள் கச்சியிலுண்டான திருவெஃகா முதலான திருப்பதிகளையும் திரு வடிதொழுது :

## நாயனார் ஸ்ரீபெரும் பூதூரேற எழுந்தருளல்

அநந்தரம், 'யதீந்ரத்ஜநிம்ப்ராப்ய புரீம் புருஷபுங்கவ: |
அந்த.கிமபிஸம் பஶ்யந்நத்ராக்ஷீல்ல க்ஷ்மணம் முநிம் ||

[ஆண்களின் சிறந்தவரான அழகிய மணவாளர் யதிராஜரின் அவதாரஸ்தலமான ஸ்ரீ பெரும்பூதுரையடைந்து ஊரிலுள்ள சிறப் புக்களைக் கண்டு களித்துக் கொண்டு சென்று இளையாழ்வாரை ஸேவித்தார்] என்கிறபடியே ஸ்ரீ பெரும்பூதூரேற வெழுந்தருளி ஊரருகே நின்று

இதுவோ பெரும் பூதூர்? இங்கே பிறந்தோ
எதிராசரெம்மிடரைத் தீர்த்தார்? - இதுவோதான்
தேங்கும் பொருநல் திருநகரிக்கொப்பான
ஓங்கு புகழுடையவூர்?

என்று ஊரையநுபவித்து ஊரிலே ப்ரவேசித்தருளி,

எந்தைவயதிராசரெம்மை யெடுத்தளிக்க
வந்தபெரும்பூதூரில் வந்தோமோ!—சிந்தை
மருளோ? தெருளோ? மகிழ்மாலைமார்பன்
அருளோ விப்பேற்றுக்கடி?

---

A தீபப்ரகாஶ நரகேஸரி வித்ருமாப வைகுண்டவாமந யதோக்தகராஷ்ட பாஹூந் | அந்யாந்ஸுதாபணி பாண்ட வதூத ஹேமவர்ணதிமாந் வாகுரு:க்ரமஶஸ் ஸிஷேவே ||

[அழகிய மணவாள குருவானவர், தீபப்ரகாசர், அழகிய சிங்கர், பவழவண்ணர், வைகுண்டநாதர், வாமனன் (உலகளந்தார்) யதோக்தகாரி, அட்டபுயகரத்தான், இவர்களையும் ஸுதாகரச் ஊரகத்தான், பாண்டவதூதர், ஹேமவர்ணர், இவர்கள் முதலான ஈற்றுமுள்ள எம்பெருமான்களையும் முறைப்படி ஸேவித்தார்.] என்கிற படியே-இது தெலுங்குப் பதிப்பில் அதிகபாடம்.

என்று அலப்யலாபமாக ப்ராப்யகௌரவத்தை யநுஸந்தித்து வித்தராயுள்ளே புக்கு, *ஆண்டுகள் நாள் திங்களாய் (இராம நூற் 31) என்று தொடங்கி *இராமானுசனைப் பொருந்தினமே என்று விஸ்மித ஹ்ருதயராய் ஸேவித்து, Aஸ்ரீபாஷ்யத்துக்கு அநுமதி கொண்டு அநந்தரம் கோயிலிலே யெழுந்தருளியிருக்க, ராத்ரி ஸ்வப்நத்திலே எம்பெருமானுரெழுந்தருளி நாயனாரை அழைத்தருளி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தை ஸாதித்து, "நாமே உமக்குப் பெருமாள் கோயிலிலே ஸ்ரீபாஷ்யம் ஸாதிக்கிறோம்; கிடாம்பி நாயனார் பாடே றச்செல்லும்; நமக்கும் திருவாய்மொழிப்பிள்ளைக்கும் ப்ரியமாக வாசித்து பின்பு அருளிச்செயல் வ்யாக்யானங்களையே பஹுமுகமாக ப்ரவர்த்திப்பியும்" என்று அருளிச்செய்கையாலே, ராமாநுஜயதிபணித ஸ்ரீபாஷ்யார்த்த ச்ரவணத்திலே ச்ரத்தையுடைராய் மீண்டு பெருமாள் கோயிலேற வெழுந்தருளி:

## நாயனார் கிடாம்பி நாயனார்பாடே ஸ்ரீபாஷ்யம் கேட்டது

அங்கே கிடாம்பியாச்சான் திருவம்ஶ்யரான கிடாம்பி நாயனாரை ஸேவித்து B அங்கே ஸ்ரீபாஷ்யம் கேட்டருளாநிற்க, கிடாம்பி நாயனாருக்கு ஸஹபாடியாயிருக்கிற ஜீயைகளப்பாவும் செல்வநாயனாரும் போர ஆதரித்து வைத்துக்கொண்டு பாடம் நடத்த அப்பா, நாயனாருடைய வாசகதாடியையும் க்ரஹணதாரண வாகவ்யவஹாரசாதுர்யதனதையும் கண்டு போரவித்தராய்

---

Aஇங்குள்ள ஸவப்ந வ்ருத்தாந்தம் தெலுங்குப்பதிப்பிலில்லை, அங்குகாணும் பாடம், *எனனெஞ்சே! எங்களிராமானுசனென்னும் நன்னெஞ்சே! நல்லைகாண், இன்னுமின்னும் பெரும்பூதூரென்னாய்: போரப் பெரும்போகமெல்லாம் பெற* என்று ஸஹ்ருதயாநுபவம் பண்ணி சரமபர்வத்திலே நிலைநின்று ஸேவித்து, இராமனுசனிணையடிகளை அடைந்து 'யோநித்யம்" என்று தொடங்கி 'ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்று அநுஸந்தித்து தண்டன்ஸமர்ப்பித்து எதிராஜன் வடிவைத் தன் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்று நீங்காதபடி நிலைநிறுத்திக் கொண்டு தீர்த்தப்ரஸாதங்களும் பெற்று *சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி என்று தொடங்கி, 'தேவரீர் நித்ய மங்களராய் வாழ்ந்தருள வேணும்' என்று மங்களாசாஸனம் செய்தருளி, ஸ்ரீபாஷ்யச்ரவணத்துக்கு உடையவரநுமதி கொண்டு

அடுத்த பக்கம் பார்க்கவும்

நாயனாரைப்பார்த்து, "இவருடைய புத்திக்கநுகுணமாக ஸாதிக்கவில்லையே" என்ன, நாயனாரும் அப்பாவை, "நாளை இவருக்கு சிந்தனை பண்ணுவியும்" என்று ஸாபிப்ராயமாக ஒருவார்த்தையருளிச்செய்ய, அப்பா, அதிநிபுராசையாலே பிற்றைநாள் தொடங்கி நாயனாருக்கு சிந்தனை பண்ணுவிப்பதற்கு எழுந்தருளியிருக்க, நாயனாரும் ஸஹஸ்ரமுகமாக உபன்யஸிக்கக்கண்டு ஐயைகள் "ப்ரஸாதித்த அர்த்தங்கள் ஒன்றும் தப்பாமல் பின்னையும் போஷித்து விசேஷார்த்தங்களுடனே ஸாதித்தருளினீர்" என்று அதிலே ஹர்ஷயுக்தராய் நெடும்போது பரவசராயிருக்க, இத்தைக்கேட்டு கிடாம்பிநாயனாரும் அங்கே யெழுந்தருள, அவர் சிஷ்யர்களான வித்வஜ்ஜநங்கள் நாயனாரோடே தர்க்கிக்கவேணுமென்றபேக்ஷிக்க, நாயனாரும், "நமக்கு இதரசாஸ்த்ர வ்யவஹாரத்துக்கு ஆசார்யவாக்யநிரோதமுண்டு" என்று அப்பாவுக்கருளிச்செய்ய, அப்பாவும், "இவர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களன்றோ? இவர்களோடு ப்ரஸங்கித்தால் ஸ்வரூபவிரோதம் வராது. அவர்களபிநிவேசத்தைச் செய்தருளவேணும்" என்றருளிச்செய்து அவர்களை முன்னே கொணர்ந்துவிட, அவர்களுக்குத்தக்கதாக தர்க்கசப்தமீமாம்ஸைகளிலே பஹுமுகமாக உபந்யஸித்தருளினவளவிலே எல்லாரும்வித்தராய் திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ணிப் புறப்பட்டு நாயனார்பாடே சென்று, "நாயனாரை இத்தனைநாளும் ஸாதாரணமாக எண்ணியிருந்தோம்; அவரிடத்திலே ஸகல சாஸ்த்ரங்களும் ஒருமிடறுசெய்திருக்கின்றன" என்று ஆச்சர்யப்பட, 'அவர் ஒரு அவதாரவிசேஷங்காணுங்கோள்" என்று அருளிச்செய்து விட்டு அவரைக்கொண்டு அருளிச்செயல் வ்யாக்யானங்களை ப்ரவர்த்திப்பிக்கத திருவுள்ளமாய், பின்பு அதித்வரை

---

B(பக் 80) அவர்பக்கலிலே ஸ்ரீபாஷ்யம் ஸேவித்தருளி, பேரருளாளரையும் ஸேவித்து, சிறிதுகாலம் எழுந்தருளியிருந்து ஸ்ரீபாஷ்யம் அநுஸந்தித்துத் தலைக்கட்டினவாறே *செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்தநாவர் என்கிறபடியே உபயவேதாந்தாசார்யராய் *வேதாந்தவிழுப் பொருளின் மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனன் என்கிறபடியே தந்முகேந பேரருளாளருடைய வைபவத்தை ப்ரகாசிப்பித்துக் கொண்டு, தேவராஜரை ஸேவித்து அவரநுமதிகொண்டு, அங்குண்டான தர்மநக்ரந்தங்களை எடுப்பித்துக்கொண்டு கோயிலேற எழுந்தருளினார். என்று மட்டுமே தெலுங்குப்பதிப்பில உள்ளது

யுடனே ஸ்ரீபாஷ்யம் நடத்திக்கொண்டுபோர, நாயனார் பலகாலும் ஈடுமுப்பத்தாறுயிரப்படியை உருச்சொல்லிக் கொண்டுபோரு கிறதைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, ஒருவருமறியாமல் ஏகாந்தத்திலே நாயனார் பாடே சென்று "முப்பத்தாறுயிரப் பெருக்கர்" என்று உமக்குத் திருநாமஞ்சாத்தினது வெறுமனன்று; இந்த புத்தி ஸாமர்த்யம் எங்குங்கண்டதன்று; நமக்கொரு மநோரதமிருக்கிறது அவச்யம் செய்ய வேணும்" என்று மறுக்கவொண்ணாதபடி அநுவர்த்திக்க, நாயனாரும் இதுக்கென் செய்வோமென்று சிந்தித்துகொண்டு ஏதென்று கேட்க நாயனாரும், "தேவரீர் அவதார விசேஷமென்று நிச்சயமாகவறிந்தேன்; எனக்கு அத்தையொளிக்க வேண்டா, உள்ளபடி காட்டவேண்டும்" என்றருளிச்செய்ய "ஆகில் ஆசார்யராகிய தேவரீருக்கு ஒளிக்க ஒண்ணாதே; பெரிய பெருமாளுடைய ரஹஸ்யநியோகத்தை ஒருவருமறிய வேண்டா" என்று விண்ணப்பஞ் செய்து கொண்டு ஏகாந்தஸ்லத்திலே மங்கள தீபத்தை ஸப்புரித்து, "அஞ்சாமலிருக்க" வென்று விண்ணப்பஞ் செய்து, அஹிபதிநிஜாகாரத்தைக் காட்டக்கண்டருளி பீதியுக்தராய் 'இத்தை உபஸம்ஹரிக்க வேணும்' என்ற பேக்ஷிக்க உபஸம்ஹரித்து எப்போதும் போலே நாயனாரெழுந்தருளியிருக்கக்கண்டு ஸவிசேஷ ப்ரதிபத்தியுடனே அத்யாதரம் பண்ணிக்கொண்டு தேவரஹஸ்யம் நடத்திக்கொண்டு நாடோறும் அமுது செய்தருளினபடியையும் ஆராய்ந்து கொண்டு "திருமேனி ஸௌகுமார்யத்திற்கு அநுருணமாம்படி பண்ணிக்கொண்டுவாரும்" என்று அடிக்கடியருளிச்செய்து கொண்டு ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டியருளும்படி தம்முடைய திருமாளிகையிலே கறக்கிற பசுவின்பாலை ஸாவதானமாகத் திருத்தி நாயனார் அமுது செய்யும் படிக்கு ஸாதித்து உகப்புடனே ஸ்ரீபாஷ்யம் நிறைவேற்றி *செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்த நாவர் என்கிறபடியே உபயவேதாந்தாசார்யராய் *வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் விரித்தனவே என்கிறபடியே தந்முகேநே பேரருளார் வைபவத்தை ப்ரகாசிப்பித்துக்கொண்டு Aஅங்கே சில நாளெழுந்தருளியிருந்து:

அநந்தரம், அங்குண்டான பகவத்விஷய ஸ்ரீகோசங்களை யெகுப்பித்துக்கொண்டு கோயிலிலே யெழுந்தருள;

---

A ஓராண்டுகாலம் யதோக்தகாரி ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யமும் பகவத்விஷயமும் ஸாதித்தருளினதாகவும் அது காரணமாகவே அந்த ஸந்நிதியில் மணவாளமாமுனிகள் உபதேச ஹஸ்த முத்ரையுடன் ஸேவை ஸாதிப்பது என்றும் பெரியோர்கள் பணிக்கக் கேட்டிருக்கை,—ஆசிரியர்

**ததः ப்ரதிநிவ்ருத்தம்தம் புருஷோ புஜகேஶய: |**
**ப்ரத்யுத்கம்ய ப்ரபுஸ்ஸ்வைரம் புந. ப்ராவேஶயத்புரம் ॥**

*[பின்னர் அரவணையில் பள்ளியானான ஸ்ரீரங்கநாதன் திரும்பவும் எழுந்தருளின அவ்வழகிய மணவாளப் பெருமாளை எதிர்கொண்டு, தம்மிஷ்டபடியே மீண்டும் திருவரங்கத்தில் ப்ரவேஶப்பித்தார்]* என்கிறபடியே பெருமாளாலே ப்ரத்யுத்கதராய் கொண்டு திருவரங்கப் பெருநகரிலே ப்ரவேசித்துப் பெருமாளை ஸேவித்தருள, பெருமாளும் போராவுகந்தருளி தீர்த்தப்ரஸாதங்கள் ப்ரஸாதித்து,

**நித்யம் ரங்கே நிவாஸய ப்ரார்த்தித: பணிஶாயிநா |**
**பஶ்யந் பதாம்புஜம் தஸ்ய பாலயாமாஸ ஶாஸநம் ॥**

*[''இந்தவரங்கத்தே இனிதிரும்'' என்று ஸ்ரீரங்கஶாயியான பெருமாளால் ப்ரார்த்திக்கப்பட்டவராய் அழகியமணவாளப் பெருமாளுடைய திருவடிகளை ஸேவித்துக் கொண்டு அந்த நியமனதைப் பரிபாலித்தார்]* என்கிறபடியே, ''இங்கேயே நித்யவாஸம் பண்ணும்'' என்று நியமித்தருள, இவரும் அப்படியே ஸம்மதி பண்ணி யெழுந்தருயிருக்க, அங்குண்டான பெரியோர்களெல்லாரும் ''தேவரீர் இங்கே பெருமாளை மங்களாசாஸனம் பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருக்கவேணும்'' என்று ஆதரிக்க, அப்படியே *இன்பமிகு பெருங்குழுவுடனே யெழுந்தருளியிருக்க இசைந்து,

**ஸ்ரீமத்ரங்கம் ஜயதுபரமம் தாம தேஜோநிதாநம்**
**பூமா தஸ்மிந் பவதுகுஶலீ கோபி பூமாஸஹாய: |**
**திவ்யம் தஸ்மை திஶது விபவம் தேஶிகோ தேஶகாநாம்**
**காலே காலே வரவரமுநி. கல்பயந் மங்களாநி ॥**

*[பிறரைவெல்லும் ஆற்றலுக்கு உயர்ந்த ஸ்தானமாய், நித்யஸ்ரீயுடன் கூடியதாய் ஸ்ரீரங்கம் என்கிற மேலான திவ்யதேசமானது நன்றாக விளங்கட்டும்; அங்கு ஸ்ரீதேவிபூதேவிகளோடு கூடிய அநிவாச்யநான பெரியபெருமாள் பாங்காக எழுந்தருளியிருக்கவேணும்; ஆசார்யர்களுக்கெல்லாம் முதல்வரான வரவரமுநி அநுதினமும் மங்களாசாஸனங்களைப் பண்ணிக் கொண்டு அப்பெருமாளுக்கு ச்ரேஷ்டமான வைபவங்களை உண்டாக்க வேணும்]* என்று காலகாலங்களிலே மங்களாசாஸநம் பண்ணியருள அத்தாலே *அரங்கர் தஞ்சீர் தழைப்ப என்கிறபடியே

பெருமாளுடைய திருச்செல்வம், *சிறந்த செல்வம் மல்கி என்றும் *நீங்காத செல்வம் நிறைந்து என்றும் ஸம்ருத்தமாயிற்று.

## நாயனார் ஸந்யாஸாச்ரமம் ஸ்வீகரித்தல்

அக்காலத்திலே பெருமாளுடைய ஸேவைக்கு விருத்தமான ஒரு ஆசௌச விசேஷத்தைத் தெற்கினின்றும் சிலர் வந்து விண்ணப்பஞ்செய்யக் கேட்டருளி *தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத் தானதில் மன்னியிருக்கிற தமக்கு தத்விச்லேஷம் அத்யந்தம் துஸ்ஸஹமாய் "த்வத்பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர்பவந்தி ஸர்வே ப்ரதிகூலரூபா:" [தேவரீருடைய திருக்கமலபாதங்களில் ஈடுபாடுள்ள மனமுடையவனுக்கு எல்லாம் விரோதிகளாகவே ஆகின்றன] என்கிறபடியே பகவதநுபவ விரோதிகளான பரிகரங்களெல்லாம் அத்யந்தம் ப்ரதிகூலங்களாயிருக்கின்றனவென்று அறுதியிட்டு அப்போதே தமக்கு ஸப்ரஹ்மசாரியான சடகோப ஜீயர் ஸந்நிதியிலே யெழுந்தருளி

**சந்தம் தஸ்யைஷ விஜ்ஞாய நந்தந் நந்தந் நிரந்தரம் |**
**ஸர்வம் ஸங்கம் பரித்யஜ்ய துங்கம் ப்ராவிசதாச்ரமம் ||**

[இவ்வழகிய மணவாள நாயனார் அந்த சடகோப ஜீயருடைய திருவுள்ளக் கருத்தையறிந்து மிகவும் உகந்துகந்து, ஸர்வஸம்பந்தங்களையும் விட்டு விட்டு உயர்ந்தான ஸந்நியாஸாச்ரமத்தில் ப்ரவேசித்தார்] என்கிறபடியே ஸர்வஸங்க பரித்யாக பூர்வகமாக ஸந்யஸித்தருளி, த்ரிதண்ட காஷாயங்களை அவர் திருக்கைகளாலே ஸாதிக்க தரித்தருளி துரீயாச்ரமத்தையடைந்து அதற்கு அநுகுணமாக "சடகோப ஜீயர்" என்று பிள்ளை திருநாமத்தையுடையராய், *அற்றபற்றராய், பற்றிலார் பற்ற நின்ற பெருமாள் திருமுன்பே யெழுந்தருளி ஸேவித்து,

**மங்களம் ரங்கதுர்யாய நம: பந்நகசாயினே |**
**மங்களம் ஸஹ்யஜாமத்யே ஸாந்நித்யக்ருத சேதஸே ||**

[ஸ்ரீரங்கநாதனுக்கு மங்களமுண்டாகவேணும். அரவணை மேல் துயிலும் பெருமாளை அடிபணிகிறேன். உபயகாவேரி மத்யத்தில் நித்யஸாந்நித்யம் பண்ணியிருப்பதில் நிலைத்த திருவுள்ளமுடைய பெருமாளுக்கு மங்களமுண்டாகுக] என்று மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டெழுந்தருளி நிற்க, பெருமாளும் இவரை ஆதரித்தருளி, தம்முடைய திருநாமமான முத்தின திருநாமந்

ளுதயே முடிய நடத்தவேணு மென்றருளிச்செய்து, "உமக்கு பல்ல வராயன் மடத்தை ப்ரஸாதிக்கிறோம்; யாவச்சரீரபாதம் எம்பெரு மானாரைப் போலே இங்கே இரும்" என்று நியமித்தருளி. Aஎம் பெருமானார் காலத்தில் கந்தாடையாண்டான் தம்முடைய ஆசார் யரான ஆட்கொண்ட வில்லிஜீயர் எழுந்தருளியிருக்கும் படி மட மாக்கி, அவருடைய திருவராாதனமான என்னைத்தீமனங் கெடுத் தார்க்கு மத்யாஹ்நகால அவஸரத்திலே அமுது செய்யப் பண்ணும் படி பெருமாள் ஸந்நிதியிலே நித்யம் ஒரு தளிகையும் திருவிளக்கு நெய் முதலியவையும் நடக்கும்படி பொலிவிட்டு நடந்து வந்த தாயும், சிலநாள்களுக்குப் பின்பு முதலியாண்டான் திருவம்சத்தார் பரஸ்பர விவாதத்தாலே ஸ்ரீபண்டாரத்தில் சேர்த்ததாயும் பூர்வ காலத்திலே அதிவிலக்ஷணமான ராமாநுஜ கூடம் பல்லவராயன் நடத்தினபடியாலே பல்லவராயன் மடமாயிற்று; திருவாராத நமும் என்னைத்தீமனங்கெடுத்தார், என்று திருநாமம்; அந்த மடத்தையும், திருவாரார்த நத்தையும் ப்ரஸாதித்து மிகவும் க்ருபை பண்ணியருளி "நிஸ்ருஷ்டாத்மா ஸுஹ்ருத்ஸுச:" [நண்பர்களி டத்தில் தம்பொறுப்பை வைத்தவர்] என்கிறபடியே தாமும் அவ்விடத்திலே ந்யஸ்தபாரராய் தீர்த்தப்ரஸாதங்களையும் ப்ரஸா தித்து, பரிவட்டம் ஸ்ரீசடகோபன் ப்ரஸாதித்து "நம்முடைய அழகிய மணவாள ஜீயரை மடத்திலே விட்டு வாருங்கோள்" என்று உத்தம நம்பி முதலான அனைத்துப் பரிகரத்தையும் இவர் பின்னே அனுப்பியருள, அவர்களும் அப்படியே ஸேவித்துக் கொண்டுபோய் மடத்தில் யெழுந்தருளப் பண்ணி, "அடியார்கள் வாழ, அரங்க நகர்வாழ.........மணவாள மாமுனியே இன்னு மொரு நூற்றாண்டிரும் என்று ஸேவித்து மீண்டார்கள்.

பின்பு மடம் முழுவதையும் வானமாமலை ஜீயர் முதலான முத லிகளைக் கொண்டு செப்பமிடுவித்து, "திருமலையாழ்வார்" என்று திருவாய்மொழிப்பிள்ளை பெயராலே யோரு வியாக்கியான மண்ட பத்தையு (காலக்ஷேபகூடம்) முண்டாக்கி பிள்ளைலோகாசாரியர் திருமாளிகையிலிருந்து ரஹஸ்யம் விளைந்த மண்ணால் தாம் எழுந்தரு ளியிருக்கிற இடத்திற்கு மண்காப்புச் சாத்துவித்து அவ்விடத்தை குருகுலவமஸமாகவே எண்ணி, ஸ்வாசார்ய பாத பங்கஜத்வந்த்வ ச்சாயமத்யே ஸுகாஸீநராய் இனிதமர்ந்து வியாக்யானித்துக் கொண்டெழுந்தருளியிருந்து, பிள்ளை நம்மாழ்வார் திருநாமத்தா லே விளங்கியருளினாப் போலே தாமும் நம்பெருமான் திருநாமத்

A "எம்பெருமானர்கள் காலத்திலே" முதல் "ப்ரஸாதித்து" வரை தெலுங்குப் மதிப்பிலில்லை.

தூசலே மிகவும் விளங்கியருளினர். இப்படி "ரங்கமங்கள துசயாய ரம்யஜாமாத்ருயோகிநே" [ஸ்ரீரங்கத்துக்கு மங்களாசாஸன பரரான மணவாளமாமுனிகளுக்கு மங்களமுண்டாகுக] என்னும்படி கோயிலுக்கு மிகவும் மங்களாசாஸனபாரராய் எழுந்தருளியிருக்கிநாளிலே,

**ஆசாரஜ்ஞாநவைராக்யைராகாரேணச தாத்ருஶ: |**
**ஸ்ரீமாந் ராமாநுஜஸ்ஸோயமித்யாஶம் ஸம்மித.ப்ரஜா: ||**

[ஆகாரத்தினுலும், ஆசாரம், ஜ்ஞாநம், வைராக்யம் இவற்றினுலும், எம்பெருமானுரைப் போலவே இந்த மணவாளமாமுனிகளும் உள்ளமையால் ஸ்ரீமானுன அந்த ராமாநுஜமுனிவரே இவர் என்று ஜனங்கள் பரஸ்பரம் புகழ்ந்து பேசினர்] என்னும்படியான திருவரங்கன் திருமுற்றத்தடியவரெல்லாரும் "இவர் எம்பெருமானுர் அவதாரம்" என்று அறுதியிட்டு இவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்து அத்யந்தம் விலக்ஷணராய், ' பரமபதநிவாஸ பணிபுங்கவ ரங்கபதேர்பவநமிதம் ஹிதாயஜகதோ பவதாzதிகதம்" [பரமபதத்தில் எழுந்தருளியிரா நின்ற திருவநந்தாழ்வானே! இந்த அழகிய மணவாளனுடைய வாஸஸ்தானமான இத்திருவரங்கமானது தேவரீரால் லோகக்ஷேமத்தின் பொருட்டு அடையப்பட்டது] என்றும் "வன்பெருவானகமுய்ய, அமரருய்ய, மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய, துன்பமிகுதுயரகல, அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகமகிழுந்தொண்டர் வாழ அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் (பெரு திரு1-10) பெரிய பெருமாள் ஜகத்ரக்ஷணார்த்தமாக இங்கே யெழுந்தருளினற்போலாயிற்று இவர் இங்கே எழுந்தருளினது என்று மிகவும் ஆதரித்துக்கொண்டு போந்தார்கள்.

## திருமஞ்சநம் அப்பாவும் பட்டர்பிரான் ஜீயரும் ஜீயரை ஆச்ரயித்தல்

A இப்படி எழுந்தருளியிருக்கிற காலத்திலே ஜீயர் அருணோதயத்துக்குத் திருக்காவேரியில் நீராட எழுந்தருளுவர்; அக்காலத்திலே அத்யந்தம் ஸத்வநிஷ்டராய் பெருமாள் ஸந்நிதியிலே 'அநந்யப்ரயோஜனராய் கைங்கர்யம் பண்ணிப்போருகிற திருமஞ்ஜநம் அப்பா வென்றொருவர் கூடவே சென்றுஜீயர் நீராடுகிற ஸ்தானத்திற்குப் பின்பேயிருந்து அந்தப்ரவாஹ தீர்த்தத்தில் தப்பாமல்

---

A திருமஞ்சனம் அப்பா விஷயம் தெலுங்குப் பதிப்பில் காணப்படவில்லை.

நீராடிக்கொண்டுபோக அவருக்கு ஜ்ஞாநோதயமாய் ஜீயர் திரு வடிகளிலே நிரவதிகப்ராவண்யமுண்டாய் ஆச்ரயித்துக்ருதார்த் தரானார். இந்த அர்த்தத்தை

**உஷஸ்யயம்வாரிணி ஸஹ்யஜாயாः ஸ்நாதோ யதீந்த்ரப்ரவணோ முநீந்த்ர: |**
**தத்ரைவ பஸ்சாதவகாஹ்ய தீர்த்தே ஸ்ரீதீர்த்ததாதாதஸ் கமுபாஸரி தோபூத் ॥**

[உஷ: காலத்தில் யதீந்த்ரப்ரவணரான மாமுனிகள் நீராடிய காவிரிப்ரவாஹத்தில் பின்னர் அமிழ்ந்தாடின திருமஞ்சனம்அப்பா அவரிடம் ப்ராவண்யமுடையராய் அவரை(மாமுனிகளை) ஆச்ரயித் தவரானார்] என்று அநுஸந்தித்தார்கள். அப்பாவும் ஜீயர் திருப் பவளத்தாலே ஸகலார்த்தங்களையும் ச்ரவித்து, ''சாயாவாஸத்வ மநுகச்சேத் '—*நிழலுமடிதாறுமானோம் என்கிறபடியே சாயாவத் பரதந்த் ராய்த் திருவடிகளைப் பிரியாமல் அங்குத்தைக்கு அந்த ரங்கராய் எழுந்தருளியிருந்தார்

அநந்தரம் 'கோவிந்ததாஸரப்பர்'' என்னும் நிரூபகத்தை யுடையவரான பட்டர் பிரான் A ஜீயர், திருவடிகளிலேவந்து ஆச்ர யித்து தத்பாதபத்ம ஸேவைகதாரகராய் ஸேவித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்,

அதன்பின்பு மணவாள மாமுனியும * முகில்வண்ணனடிமேல் மேல் சொன்ன சொல்மாலையாயிரம் என்றும் * மதிளரங்கர் வண் புகழ் மேலான்ற தமிழ் மறைகளாயிரம் என்றும் இப்படி பெரிய

---

A. பட்டர் பிரான் ஜீயர் வந்து * தண்டமிழோர் மன்னுபுகழ் தொண்டை மண்டலத்தில் வந்துதித்து தன்னுடைய வாசாரம் தப்பாமல் இந்நிலத்திலாசரிததுக்காட்டி, யரங்கத்தே சென்று புகுந்து ஈசரவணை மேலெம்பெருமான் வாசமலர்த்தாள் பரவும் மணவாளயோகி மலர்த்தாள் தனிலிறைஞ்சி நண்ணி நிலமேல் சிச்சனாகாரம் தெரிவிப்போம்'' என்று வந்த கோவிந்ததாதன்— என்கிறபடியே மணவாள மாமுனியையாச்ரயித்து, ''கோவிந் தாஹ்வாநபாயிநீ' என்கிறபடியே எம்பாரைப்போலே இவரும் அவருக்கு நிழலுமடிதாறும் போல வரவர முனி சரணத்தை அரை க்ஷணமும் பிரிய க்ஷமரன்றிக்கே பிரியாவடிமை செய்து தத்பாத ஸேவைகதாரகராய் வாழ்ந்து கொண்டிருந்தார். இது தெலுங்குப் பதிப்பில் காணும் பாடம். கோவிந்ததாதர்—பட்டர்பிரான் ஜீயர், மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரானார்;

பெருமாள் விஷயமாக ப்ரதிபாதிக்கப்படுகிற திருவாய்மொழியி னுடைய ஈடு முதலான வ்யாக்யானங்களையும் மற்றுமுண்டான ஆழ்வார்கள் அருளிச் செய்த வ்யாக்யானங்களையும் வ்யக்தமாக ப்ரஸாதித்திக் கொண்டும், ஸ்ரீவசநபூஷணாதி திவ்யரஹஸ்யதாத்பர் யங்களையும் தர்சிப்பித்துக்கொண்டும் ராமாநுஜார்ய வசகராய் நாடோறும் ஸேவித்துக் கொண்டும் *குரோர் நாம ஸதாஜபேத்', என்று எம்பெருமானார் திருநாமமாய் சயந்தருகீர்த்தியாய் ஸ்ரீவைஷ்ணவகாயத்ரியான நூற்றந்தாதியை அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டும் "வகுளபூஷண வாகம் ருதாம்ருதம்" என்று தொடங்கி தம்முடைய அபேக்ஷிதங்களையும் அவர் திருவடிகளிலே நித்யமாக ப்ரார்த்திக் கொண்டும் தத்ப்ரஸா தைகதாரகராய் தத்வைபவத்தை ப்ரகாசித்துக் கொண்டும்ல அஸத்ருச வைபவராய் திருமாலையாழ்வாருடைய அடிநிழலிCA *தேசந்திகழ எழுந்தருளியிருக்கிற காலத்திலே பெரிய பெருமாளு டைய நியமானத்தாலே தமக்குத் திருவாராதனமாக ஸ்ரீரங்க ராஜனை எழுந்தளுரப் பண்ணிவைத்துப் பிள்ளைலோகாசாரியரு டைய திருநக்ஷத்ரமான ஐப்பசி மாஸம் திருவோணத் திருநன்னா ளிலே திருப்ரதிஷ்டையுங் கொண்டருளப்பண்ணி. தமது திருக்கை களாலே ஆராதநமுஞ் செய்து 'ஜந்மர்க்ஷே ச்ரவணேபிவா" என்றும் *நீ பிறந்த திருவோணம் என்றுஞ் சொல்லுகிற படியே பிள்ளை லோகாசாரியர் திருநக்ஷத்ரமான திருவோணம் முதலான மற்றுமுள்ள ஆசாரியர்கள் திருநக்ஷத்ரங்களையும் *செந்நெலரிசி சிறுபருப்புச் செய்தவக்காரம் நறுநெய்பாலால் பன்னிரண்டு திருவோணமட்டேன் (பெரியா திரு. 2-9-7) என்கிறபடியே அக்காரவடிசிலாலே அமுது செய்தருளப் பண்ணிப்பரிபாலித்துக் கொண்டும் பூர்வாசாரியர்களுடைய வசநாநுஷ்டானங்களையும் தம்முடைய உக்த்யநுஷ்டாநங்களாலே ப்ரகாசிப்பித்துக் கொண்டும் ஸ்ரீரங்கஸ்ரீக்கு மங்களதீபம் போலே எழுந்தருளி யிருந்தார்.

இப்படி திசை விளக்காய் நிற்கிற திருவரங்கத்திலே *திக்குற்ற கீர்த்தியி ராமனுசனைப்போலே

---

A தத் ப்ரஸாதநைகப்ரயோஜநராயிருக்க, ஸ்ரீபாதத்து முதலிகள் *தப்பாமறை மொழியானெதிராசன் தண்டாமரைத் தாள், இப்பாரிட்ந்மனிலிட்டு வைத்த தனமிதென, வைப்பாகிய மனத்தான் மணவாளமாமுனியை இனி ஒப்பார்களில்லை உலகே ழிலும் உம்பரிலுமே* என்று "உபய விபூதியிலும் இவர் அஸத்ருஶ வைபவயுக்தராய்: இது தெலுங்குப் பதிப்பில் இங்கு அதிகபாடம்

யதீந்த்ரப்ரவணப்ரபாவம்-12

A (1) சிரவிரஹத ஸ் சிந்தாஸந்தாந ஜர்ஜரசேதஸம் புஜகஶயநம் தேவம் பூய: ப்ரஸாதயிதும் த்ருவம் |
யதிகுலபதிஶ் ஸ்ரீமாந்ராமாநுஜஸ்ஸம பூதயந்த்விதி ஸமதுஷந் ஸர்வே ஸர்வத்ர தத்ரஸுதீஜநா: ||

என்றும், அதுக்கும் மேலே

(2) ஸமுநிஸ்ஸௌம்யஜாமாதா ஸர்வேஷாமேவ பஶ்யதாம் |
ஸ்ரீஸகஸ்யநிதேஶேந ஶுஶுபே தேஶிக ஶ்ரியா ||

என்றும் தேஶிக ஸ்ரீயாலே மிகவும் விளங்கா நிற்க இதை தேசாந்தரஸ்தரெல்லாருங் கேட்டு

(3) ததஸ்ஸமுத்ஸுகாஸ்ஸர்வே ஶதஶோத ஸஹஸ்ரஶ:
ஶரணம்தஸ்ய ஸம்ஶ்ரித்ய சரணௌ தந்யதாம் கதா: ||

[1. வெகுகாலம் பிரிந்திருந்ததால், மிகவும் நினைப்பதினால் மனம் தளர்ந்த அரவணை மேல் பள்ளிகொண்டுள்ள பெருமானை ஆஶ்வாஸிப்பிப்பதற்கு யதீந்த்ரரான ஸ்ரீமாந் ராமநுஜரே இந்த மணவாளமாமுனிகளாக அவதரித்தார் என்று வித்வஜ்ஜனங்கள் எங்கும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

2. அழகிய மணவாளனென்று பெயருள்ள அந்த முனிவர் (ஆசாரியர்) திருமகளன்பனை பெருமானுடைய நியமனத்தினால் எல்லோரும் காண ஆசார்யஸ்ரீயுடன் விளங்கினார்.

3. பிறகு மிகமகிழ்ந்த யாவரும் நூற்றுக்கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் அந்த மணவாளமாமுனிகளுடைய திருவடிகளைப் புகலாப்பற்றி தந்யரானார்கள்] என்கிறபடியே ஸமீபஸ்தரோடு தூரஸ்தரோடு வாசியற அஸங்க்யாதராய் ஆச்ரயிக்க, அவர்களை யெல்லாம் பரம க்ருபையாலே *திருத்தித்திருமகள் கேள்வனுக்-காக்கி என்றும், *அரங்கன் செய்ய தாளிணையோடார்த்தான் என்றும் சொல்லுகிறபடியே *அரங்கன் மெய்யடியார்கள் என்றும் *திருமாலடியார்கள் என்றும் நிரூபகமாம்படி அத்தலைக்கு ஆளாக்கியருள, அவர்களும் ''அபகதமதமனை.'' இத்யாதிப் படியே *குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கநுகூலராய், ''வரவரமுநிப்ருத்யர்'' என்று நிரூபிக்கும்படி அங்குத்தைக்கு அந்தரங்கராய்த் திருவடிகளிலே நித்யஸேவை பண்ணிக் கொண்டு அவர் ப்ரஸாதித்தருளுகிற பகவத்விஷயங்களையுங் கேட்டுக் கொண்டு ஆசார்யாபிமானத்திலே ஒதுங்கி அநுகூலராயிருக்க:

---

A இந்த சுலோகம் தெலுங்குப் பதிப்பில் அதிக பாடம்.

## அப்பா குமாரத்தி ஆச்சியார் ஜீயரை ஆச்ரயித்தல் A

ஜீயர் ப்ராதःகாலத்தில் நீராட்டத்திற்குப் புறப்பட்டெழுந்தருளா நிற்கச் செய்தே ஒருநாள் அசிந்திதமாக வர்ஷம் வர, அதனால் ஒரு வைஷ்ணவர் க்ருஹத்தின் வாசல் திண்ணையை உத்தேசித்து எழுந்தருளாநிற்க அந்தக் க்ருஹயஜமானை கண்டு அத்யந்தம் ப்ராவண்யத்தாலே புடவைத் தலைப்பாலே திண்ணையைத் துலக்கி, "ஸ்வாமீ! இங்கே எழுந்தருள வேணும்" என்று ஸவிநய பக்தியோடே ஸேவித்து நிற்க, ஜீயரும் திருவடி நிலைகளைக் கீழே விட்டுத் திண்ணைமேலே ஏறியருள, அந்த அம்மை மழையிலே நனைகிற திருவடிநிலைகளை எழுந்தருளப் பண்ணித்தம் சிரஸ்ஸிலே தீர்த்தத்தோடு தரித்துக் கொண்டு, பிற்பாடு தலைப்பாலே திருவொற்றுவாடை சாத்தி மீளவும் சிரஸாவஹித்து, திருமுன்பே எழுந்தருளப் பண்ணி நிற்க, ஜீயரும், "நீயார்? பேரேது? இது ஆருடைய திருமாளிகை?" என்று கேட்டருள, "தேவரீர் திருவடி ஸம்பந்தியாயிருக்கிற திருமஞ்சனம் அப்பாவுடைய பெண்; அடியேன் பெயர் ஆச்சி. இது அவருடைய மணவாளப் பிள்ளை B கந்தாடை ஐயங்கார் க்ருஹம் என்று விண்ணப்பம் செய்யக் கேட்டு உகந்தருளி, "நம்முடைய அப்பாச்சியாரோ!" என்று அருளிச் செய்து கடாக்ஷித்துக்கொண்டு வர்ஷம் நிவர்த்தமானவுடனே திருக்காவேரிக்கெழுந்தருளினார்.

ஆச்சியாரும் திருவடி நிலைகளின் திருமஞ்சனம் தலையிலே ஊறி ஜீயர்கடாக்ஷம் பெற்றவளாகையாலே உடனே ஜ்ஞானோதயமுண்டாய், அப்போதே ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்னும் ருசி பிறந்து, பிறந்தகத்திலே சென்று பிதாவுக்கறிவிக்க, அவரும் உகந்து, தம்முடைய தௌஹித்ரர்களும் அறியாமலிருக்க வேணுமென்று அருளிச்செய்து, ஜீயர் திருவடிகளில் ஆச்ரயணமான பின்பு தம்முடைய திருமாளிகையிலே தானே ஓரிடத்திற்கும் புறப்பாடமல் சில நாளிருக்கும் படிக்கு ஆலோசனை பண்ணிய அப்பா, தம்முடைய குமாரத்தியாரைக் கூட்டிக்கொண்டு மடத்திலே எழுந்தருளி ஜீயரை தண்டன் ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய; ஜீயரும், "கந்தாடை அய்யங்கார்கள் ஸம்பந்தத்தைப் பார்க்க வேண்டாவோ? காரியப்

---

A. இந்த வ்ருத்தாந்தம் தெலுங்குப்பதிப்பில் இல்லை. B முதலியாண்டான் திருவம்சயரான சிற்றண்ணர்

படாது'' என்றருளிச்செய்ய, அப்பாவும் தம்முடைய குமாரத்தியாருடைய ஆஸ்திக்யாதராதிகளை விண்ணப்பஞ்செய்து, "ப்ரதிஹுதி ஒன்றும் வாராது; க்ருபை செய்தருளவேணும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, "அகில் இவளையிட்டு இந்தத்திருவம்சத்திற்கெல்லாம் ஆநுகூல்ய முண்டாமென்று "ஸாபேநமநஸா த்யாதம்'' என்கிறபடியே] அப்போது ஒரு சிந்தைசெய்து ஆச்சியாருக்கு ஸமாச்ரயணம் ஸாதித்தருளி ஹிதங்களையும் ஜ்ஞாதவ்யார்த்தங்களையும் உகந்து ப்ரஸாதித்தருளினார், அப்பாவும் தம்முடைய குமாரத்தியாரைத் தம்முடைய திருமாளிகையிலே தானே சில நாளிருக்கும்படிக்கு நியமித்து அவருடைய குமாரர் அண்ணா தொடக்கமானவர்களுக்கு ஒரு கார்யாந்தரத்தை அருளிச்செய்து பரிஹரித்து வைத்தருளினார். இப்படி ஆச்சியாருக்கு ஸ்ரீபாத தீர்த்தவஹநத்தினாலே வந்து அதிசயத்தை

**ஸ்ரீபாதுகாம்புஜநிதாத்ம விவேகரங்க பூஜாத தீர்த்த ஜலதாதஜ மாத்ருதேவம் |**

**த்வந்த்வச்சிதம் நிகிலதே சிக வந்த்யபாதம் ஸௌம்யோபயந்த்ரு முநிவர்யமஹம் நமாமி ||**

என்று அநுஸந்தித்தார்கள் [தமது பாதுகையின் தீர்த்தத்தினால் ஆத்ம விவேகத்தைப் பெற்ற திருமஞ்ஜனம் அப்பாவின் பெண்ணான ஆச்சித்த தேவதையும், சீதோஷ்ணம் ஸுகதுக்கம் முதலியத்வந்த்வங்களை அறுப்பவரும், ஆசார்யர்களனைவராலும் வணங்கத்தக்க திருவடிகளையுடையவருமான அழகிய மணவாள மாமுனிவரை அடியேன் வணங்குகிறேன்] Aஅநந்தரம் கந்தாடையண்ணன் திருத்தகப்பனார் தேவராஜ தோழப்பருடைய தீர்த்தம் வர, அற்றைக்கு சிற்றண்ணர் தேவியாரான ஆச்சியாரைத் தளிகை பண்ண அழைத்துவிட, அவரும் அப்படியே பாவநத்வபோக்யத்வங்களுடேன் தளிகை பண்ண, பெருமாளமுது செய்தருளி முந்தின ஸ்ரீவைஷ்ணவர்களும் அமுது செய்தருளி இஷ்டபங்க்தியும் அண்ணன் தொடக்கமானரும் அமுது செய்தருளின அநந்தரம் அண்ணன் வாசல் திண்ணையிலே எழுந்தருளியிருக்க;

---

Aஇந்த வ்ருத்தாந்தமும் பின்வரும் கந்தாடையண்ணன் கண்ட ஸ்வப்ந ப்ரகாரம் முதலானவை தெலுங்குப் பதிப்பில் இடம் பெறவில்லை.

## சிங்கரையர் விருத்தாந்தம்

ஒருஸ்ரீவைஷ்ணவர் ஜீயர் மடத்தில் நின்றும் புறப்பட்டுவர, அவரைக் கண்டு உமக்கு எந்த ஊர்?''என்று கேட்டருள, அவரும்; 'வள்ளுவராஜேந்த்ரம்' என்ன ''இங்கே வந்த காரியமேது?' என்ன, ''அடியேன் ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயிக்கக் காத்திருக்கிறேன்: ப்ராப்திகாலம் வரவேணும்'' என்ன. ''இந்த ஸ்தலத்தில் ஆசார்யபுருஷர்கள் திரட்சியாகவுண்டே, மற்றோரிடத்தில் ஆறுலோ? 'என்ன, ''இங்கே பகவந்நியமனமாயிருக்கிறது'' என்ன. ''அது எப்படி?'' என்ன, 'அது ரஹஸ்யம்'' என்ன, ''உம்முடைய பெயரேது?'' என்ன, ''சிங்கரையர்'' என்ன, இவர் பகவத் ப்ரஸாத பாத்ரபூதராகவேணுமென்று திருவுள்ளத்திலே எண்ணி, இவர் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்று தீர்த்தப்ரஸாதங்களையும் சந்தனம் அடைக்காய்களையும் ப்ரஸாதித்து ஆதரித்தருளி ''இவ்விரா திருமாளிகையிலே சயியும்'' என்று நியமித்தருளித் தாமும்திருத்தம்பிமார்களுந் தாடையப்பனும், திருக்கோபுரத்து நாயனார்பட்டரும் எழுந்தருளியிருக்க, திருவத்யயநத்தளிகைகைங்கர்யமெல்லாம் நிறைவேறி ஆச்சியார் அலஸையாய் உள்ளே படுக்கையிலே சாயும் போது ''ஜீயர் திருவடிகளே சரணம், பிள்ளை திருவடிகளே சரணம், "வாழி உலகாசிரியன்'' என்று சயிக்க, இந்த சப்தத்தை மூவரும் கேட்டு இதேது என்று விஸ்மிதவ்யாகுலராயிருக்க, இவர்களில் பாட்டர் ''உள்ளே சென்று கேட்கிறேன்'' என்று போய் மதினியாரே! என்றழைக்க, ஆச்சியார் பயப்பட்டு, தாம் சொன்னது இவர் செவிப்பட்டதென்று பேசாமலிருக்க, அண்ணனும் அப்பனும் அவரை யழைத்து ''எல்லாம் பொழுது விடிந்தவாறே தெரியும், அவரை எழுப்ப வேண்டாம்'' என்று மூவரும் கண்வளர்ந்தருள; அண்ணனுக்கு பயபக்திகள் மிக்கு *மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாகி, ப்ராதாக்களறியாமல் சிங்கரையர் சயிக்கிய விடத்திலே எழுந்தருளி அவரையெழுப்பி சில ஆத்யாத்மிகதர்மங்களையருளிச் செய்ய, அவர் கேட்டு உகந்திருக்க அந்த வேளையிலே ''ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயிக்கும்படி உமக்கு பகவந்நியமனமான பெருமையை அறியவேணுமென்று அத்யபிநிவேசமாயிருக்கிறது'' என்றருளிச்செய்யக்கேட்டு அவர் சொன்னது:

''எங்களூரிலே யுண்டாகிற காய் கிழங்குகளை யதாசக்தி ஸம்பாதித்து இந்த ஸ்தலத்திலே பெரியோர்கள் திருமாளிகைகளுக்கு அடிக்கடி ஸமர்ப்பித்துப்போருவதுண்டு; அத்தை ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கண்டு இன்றைக்கு மடத்திலே ஸமர்ப்பியும்

என்ன, பாக்யமாயிற்று என்று கொண்டு ஸமர்ப்பித்தேன்; அத்தை ஜீயர் கண்டு "இது எங்கே விளைந்தது? எந்த நீர் பாய்ந்தது? நீரிறைத்தவரார்? எதற்காகக் கொணர்ந்தீர்?" என்று கேட்டருள அடியேன் அதிவிநயமாயும் உசிதமாயும் விண்ணப்பம் செய்தபடி;- "பரிசுத்த ஸ்தலத்திலேயே விளைந்தது, அடிச்சேரியிலே தேவரீர் தாஸவர்க்கங்கள் நீரியிரைத்துப் பய்ச்சினது, ஸ்ரீ பாகவத ஸ்வத்து" என்று விண்ணப்பம் செய்ய, அது கேட்டு உகந்தருளி அத்தை அங்கீகரித்தருளி கோயிலுக்குப்போய் பெருமாளை ஸேவித்துப் போருமென்று விடை கொடுக்கப் பெருமாள்ஸந்நிதியிலே செல்ல, அருகேயிருந்த அர்ச்சகர் "இன்னைக்குக் காய்கறி யாருக்கு ஸமர்ப்பித்தீர்?" என்ன? 'ஜீயர் மடத்திலே" என்ன, அர்ச்சகர் ப்ரியப்பட்டுப் பரவசராய் அடியேன் முதுகைத் தட்டி "நீர் பாக்யவான்; உமக்கு விலக்ஷண ஸம்பந்தமுண்டாகப் போகிறது" என்று தீர்த்தம், சந்தனம் திருமாலை, வேளையம், அபயஹஸ்தம், ஸ்ரீசடகோபன் ப்ரஸாதித்து பஹுமானம் பண்ண, "அடியேனை இன்றைக்கு இத்தனை க்ருபை பண்ணியருளுவதே" என்று ஸந்நிதியினின்றும் புறப்பட்ட வளவிலே, "இவனை மல்லுக்கட்டிப்பிடி" என்கிற வார்த்தை கேட்க, அவ்வார்த்தை ஸாபிப்ராயமாக இருக்கிறதென்று மீண்டும் மடத்திலே சென்று தண்டன் ஸமர்ப்பித்து "தேவரீருக்காகப் பெருமாள் போரக்ருபை பண்ணியருளினார்", என்று இச்செய்தியையெல்லாம் விண்ணப்பஞ் செய்து ஊருக்கு விடை கொள்ளுகிறேனென்ன; அங்குள்ளார் அடியேனையாதரித்து ப்ரஸாதமும் ப்ரஸாதித்தனுப்ப அத்தை வழியிலே ப்ரஸாதப் பட்டுச் செல்ல, உடனே சித்தசுத்தி பிறந்து ஆச்ரயணருசி யுண்டாயிற்று; அன்று ராத்திரி ஸ்வப்நத்திலே பெரிய பெருமாள் ஸந்நிதியிலே திருமணத்தூணருகே நின்று ஸேவித்துக் கொண்டிருக்க பெரிய பெருமாள் அணையில் வைத்த திருக்கையை உயரவெடுத்துத் திருவநந்தாழ்வானைக் காட்டி "இவர் கிடாய் அழகியமணவாளச் சீயர், இவரோடு உனக்கு ஸம்பந்த முண்டாக்கிக் கொள்" என்றருளிச் செய்ய, இந்த ஸ்வப்நத்தைக் கண்டு க்ருதார்த்தனாய் ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிக்காத் காத்திருக்கிறேன்" என்று சிங்கரையர் விண்ணப்பஞ்செய்யக்.கந்தாடை அண்ணன் கேட்டருளி பயபக்திகள் விஞ்சி நெடும்போது சிந்தித்து உள்ளே யெழுந்தருளித் திருப்படுக்கையிலே சாய்ந்தருள, ஸ்வப்நமானப்ரகாரம்:-

## கந்தாடையண்ணன் கண்ட ஸ்வப்நம்.

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் மெத்தையினின்றும் ஏணி வழியாலே இறங்கி வந்து பெரிய கசையாலே தம்மையடிக்க, தமக்கு நிவர்த்திப்பிக்கசக்தியுண்டாயிருக்கச்செய்தேயும், "நம்மிடத்தில் ஸ்வரூப விருத்தமான நடக்கை யுண்டாயிருப்பதினாலே சிக்ஷித்தருளுகிறார்" என்றெண்ணி, "ஶஸ்த்ரக்ஷாராக்நி கர்மாணிஸ்வபுத்ராய யதா பிதா" [தன் மகன் புண்ணை ஆற்றுதற்காகத் தகப்பன் கத்தியாலறுப்பது, காரமான மருந்தையிடுவது தீயினால் கடுவது முதலிய செயல்களை ஹிதபுத்தியாலே செய்விக்குமாபோலே] என்றநுஸந்தித்துக் கொண்டிருக்க, கசையும் துணிக்கை துணிக்கையாக அறுந்து போக, அந்த ஸ்ரீவைஷ்ணவர் அண்ணன் திருக்கைகளைப் பிடித்திழுக்க, அண்ணன் ஏது செய்ய வேண்டுமென்ன; ஏணிமேலேறி மெத்தை மேலே போவென்ன; அண்ணனும் அப்படியே செய்ய; அந்த ஸ்ரீவைஷ்ணவர் தாமும் ஏறி வந்து எடுத்துக்கட்டி மேலே கொண்டு போக, அங்கே ஒரு ஜீயர் ஒரு திருவடியைத் தொங்க விட்டுக் கொண்டும் ஒரு திருவடியை குஞ்சித்துக் கொண்டும், த்ரிதண்டத்தைத் தோளிலே சாத்திக் கொண்டும் திருக்கையிலே கசையைப் பிடித்துக் கொண்டும் அக்நிகல்பராய் மிகவும் குபிதராயிருக்க, அவர் முன்னே அண்ணனைப் பிடித்துக் கொண்டு போக, ஜீயர் அண்ணனை பஹுவாக அடிக்க, கசையும் துணிக்கையான வாறே இன்னுமடிக்கத்தக்கதாக உபதண்டத்தை வாங்கப் புக, அந்த ஸ்ரீவைஷ்ணவர் தண்டன் ஸமர்ப்பித்து அஞ்சலி ஹஸ்தராய் ஜீயர் திருமுகமண்டலத்தைப் பார்த்து "இவன்சிறுபிள்ளை; பஹுவாக அடிபட்டான். இனி க்ஷமித்தருளித் திருவுள்ளமிரங்கி க்ருபைப் பண்ணியருளவேணும்" என்ன; அவரும இறங்கியருளி அண்ணனை அழைத்து மடியிலே வைத்து உச்சிமோந்து திருக்கைகளாலே திருமேனியெங்குந் தடவி "நீயும் உத்தமநம்பியும் போர அபசாரப் பட்டீர்கள்" என்ன, "அழகியமணவாள ஜீயர்ப்ரபாவ மறியாமல் அவிவேகம் வந்தது; இனி க்ஷமித்தருளவேணும்" என்று திருவடிகளைப் பிடித்துக் கொள்ள, ஜீயர் இரங்கியருளி, "நாம் ஸ்ரீபாஷ்யகாரர், இவர் முதலியாண்டான்" என்று தம்மையும் அந்த ஸ்ரீவைஷ்ணவரையுங்காட்டி,

**த்வதீயாநபராதாங்ஸ்த்வத்ஸம்பந்திக்ருதாநபி |**
**க்ஷமாம்யஹம் தாஸராதேஸ் ஸம்பந்தம் மாஸ்ந்யதாக்ருதா ||**

[நீர் செய்த தவறுகளையும் உம்முடைய ஸம்பந்திகள் செய்த தவறுகளையும் பொறுத்துக் கொள்ளுகிறேன் நான். முதலியாண்டான் ஸம்பந்தத்தை வ்யர்த்தமாக்காதீர்] என்றிந்த ச்லோகத்தைய

நுஸந்தித்து ''நாமே திருவநந்தாழ்வான், நாமே வரவரமுனி; அவர் (அழகிய மணவாள ஜீயர்) திருவடிகளிலே நீயும் உன்னுடைய ஸம்பந்திகளும் ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோள்'' என்று விட, அண்ணனும் திருக்கண்கள் [விழித்து நெடும்போது ''ஈதொரு ஸ்வப்நமிருந்தபடியென்!'' என்று விஸ்மிதராய் கண்டவற்றை யெல்லாம் புந:புந: சிந்தித்து மறவாமல் திருவுள்ளத்திலே கட்டி பண்ணி, திருத்தம்பிமார்களையெழுப்பி ஸ்வப்நவ்ருத்தாந்தங்களை யருளிச்செய்யத் தொடங்கி நடுவே நடுவே ஹர்ஷ பரவசராய் ஸ்தப்தராயிருந்து அருளிச்செய்து தலைக்கட்டியருளினார்.

இப்படி அண்ணனுக்கு எம்பெருமானார் ஸாதித்தருளின அர்த்தத்தையும் அண்ணன் விண்ணப்பஞ்செய்த அர்த்தத்தையும் அதற்கு உத்தரத்தையும்,

வாதூலதுர்ய வரதார்ய குரோர் பபாண
ஸ்வப்நேயதீந்த்ர வபுரேத்ய க்ருபாபரோங்ய: |
ஶேஷோப்யஹம் வரவரோமுநிரப்யஹம் த்வம் |
மாமாஶ்ரயேதி தமஹம் கலயாமி சித்தே ||
அத்யந்தபாபநிரத:கதமார்யவர்ய
த்வாமாஶ்ரயேஹமிதி தம் க்ருபணம் வதந்தம் |
த்ருஷ்ட்வா க்ஷமாமி நநுதா ஶரதேஸ்த்வதீய
ஸர்வாபராதமிதி தம் ப்ரவதந்தமீடே ||

[யாவரொருவர் வாதூலகுலச்ரேஷ்டரான அண்ணனுடைய ஸ்வப்நத்தில் எம்பெருமானார் திருமேனியாக ஸேவைஸாதித்துப் பரமக்ருபையுடையராய் 'ஆதிசேஷனும் நாமே, மாமுனிகளும் நாமே நீர் நம்மை ஆச்ரயியும்' என்று அருளிச்செய்தாரோ அவரை அடியேன் மனதில் த்யானம் செய்கிறேன். பாபகார்யத்தில் மிகவும் ஊன்றிய அடியேன் ஆசார்யச்ரேஷ்டரான தேவரீரை எப்படி ஆச்ரயிப்பேன் என்று தீநமாகக் கூறுகிற அவ்வண்ணனைப் பார்த்து ஓ அண்ணனே! முதலியான்டானுக்காக உம்முடைய ஸர்வாபாரதங்களையும் பொறுத்துக் கொள்ளுகிறோம்' என்று அருளிச்செய்யும் அந்த ஜீயரை ஸ்தோத்ரம் செய்கிறேன்-] என்று பெரியோர்கள் அநுஸந்தித்தார்கள். அண்ணன் தம்பி மார்களைக் கூட்டிக் கொண்டு ''அத்யமே ஸபலம் ஜந்ம ஸுப்ர பாதாச மே நிஶா'' (விஷ்ணு 5-17-3) [இன்று என் பிறவி பயன் பெற்றது எனக்கு நேற்றிரவு இன்று நல்லவிடிவாயிற்று] என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டு ஆச்சியாரருகே சென்று தண்டனிட்டு அவர் பயப்படாத படிக்கு முந்துற ஸ்வப்நவ்ருத்

-தாந்தத்தையருளிச்செய்ய, ஆய்ச்சியார் தமக்கு ஜீயர் ஸம்பந்த மூண்டான படியையும் அதற்கு மூலபூதமான ஜீயருடைய பாதுகா தீர்த்த வைபவத்தையும்: தம்முடைய திருத்தமப்பனுரான அப்பாவுக்கு ஜீயர் நீராடியருள அந்த தீர்த்தத்திலே அவகாஹித்ததால் வந்த ஜ்ஞாநாதிக்யத்தையும் ஆச்சியார் முகத்தாலே கேட்டருளி அத்யந்த ஹ்ருஷ்டராய்ப் புறப்பட்டு சிங்கரையரைக்கண்டு உகந்து அவருக்குஎல்லாவற்றையுமருளிச் செய்து கொண்டு திருக்காவேரிக் கெழுந்தருளி நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்களாகிப் புறப் பட்டருளி;

## அண்ணன் ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிக்க ஒருப்பட்டது

*சுபஸூசகங்களாயிருக்கிற நிமித்தங்களைச் செய்து கொண்டு*

**ததாகதாம்தாம் ல்யதிதாமநிந்திதாம் வ்யபேதஹர்ஷாம்
பரிதீநமாநஸாம் |
ஶுபாந்நிமித்தாநி ஶுபாநிபேஜிரே நரம்ஶ்ரியாஜுஷ்ட
மிவோபஜீவிந: =**

*[சொல்ல முடியாத துன்பமுடையவரும், இனிமேல் தான் அதிகமான துன்பங்கள் நேரப்போகின்றனவென்று நினைத்தவளும் குற்றமற்றவளும், சிறிதும் மகிழ்ச்சியில்லாதவளும், அறவே மனமழியப் பெற்றவளுமான அந்த ஸீதாபிராட்டியை, யாசகர்கள் பணமுள்ளவனை அடைந்து ஸத்தை பெறுமாபோலே சில சுபஸூசனைகளும் அடைந்து ஸத்தை பெற்றன.] என்கிறபடியே போய் திருமாளின்கயிலே யெழுந்தருளி ஆச்சியாரைக்கண்டு*

**ரங்கேஶகைங்கர்ஸுதீர்த்ததேவராஜார்யஜாம்பாகலு
பாக்யஶீலா |
ரம்யோபயந்து: பதஸம்ஶ்ரயேணயாசஸ்மத்குலம்
பாவநமாதநோதி ॥**

*[யாவருளாருத்தி மாமுனிகளின் திருவடிகளை ஆச்ரயித்து நமது குலத்தைப் பாவனமாக ஆக்கினுளோ, திருவரங்கனுக்குத் தொண்டரான திருமஞ்சனம் தேவராஜர் என்னும் அப்பாவின் புதல்வியான அந்த ஆச்சியார் பாக்யசாலிநியல்லவா?] என்நுஸந்தித்தருளி "உம்முடைய திருக்கைகளாலே ப்ரஸாதப் பட்டின்றே இப்பேறு ஸித்தத்தது" என்று உகந்தருளி, உத்தம நம்பியையழைத்துவரப் போகவிட்டு, தாமும் தம்முடைய தாயாதரான கந்தாடை அய்யங்கார்கள் எல்லாருக்கும் இச்செய்தியை*

**தீந்த்ரப்ரவணப்ரபாவம்-13**

ருளிச் செய்து அவர்களுக்கு ஜீயர் ஸம்பந்த முண்டாக்கும்படி திருவுள்ளமாய் அவர்களுடைய அகங்களிலே எழுந்தருள, பூச்சியார் குமாரரான அண்ணவும் தாசரதி அப்பையும், தந்தை ாய் எம்பாவும் அண்ணன் திருவடிகளிலே தீர்க்கப்ரணு த்துடனே "தேவரீருக்கு ஸாதித்த ஸ்வப்நமே அடியோங்களுக் ம்" என்று விண்ணப்பஞ்செய்ய, அவர்களையுங் கூட்டிக்கொண்டு க்ஷமணசாரியரென்று ப்ரஸித்தராயிருந்தவருடைய பௌத்ரரா ிருக்கிற எம்பாவண்டையிலே Aஎழுந்தருளியாசித்து இச்செய்தி ய அருளிச்செய்ய:

அவர் குபிதராய் "அபிஜநவித்யாவ்ருத்தங்களுடைய மஹா லத்திலே பிறந்து இப்படியானுயோ?" என்று நாநாபௌரு ஷாக்திகளைப் பண்ணிவிட, அவருக்கு புத்ர கோடிகளாய்ப் பெரிய ூயி திருவம்சத்தராயுள்ள அப்பா முதலானார் பதின்மர் க்ருஹங் ளிலுமெழுந்தருளி ஹிதமருளிச் செய்ய, அவர்களுக்கு அநபி தமாய்த் தோன்றி பரிஹரிக்க, திருவுள்ளத்தில் குறையோடே றப்பட்டருளித் தம்முடைய திருவம்சஸ்த்தராய் தமக்கு ப்ராத்ரு கோடிகளாயுள்ளவர்கள் திருமாளிகைகளுக்கும் புத்ரகோடி ளுடைய இருபது திருமாளிகைகளுக்கும் எழுந்தருள, அவர்கள் திப்ரவணராய் எதிர்கொண்டு தண்டன் ஸமர்ப்பித்து அண்ண ருளிச் செய்த ஹிதங்களையெல்லாங்கேட்டு, தங்கள் தங்களுக் ண்டான ஸ்வப்நங்களையும் உபச்ருதிகளையும் சகுனங்களையும் அழகியமணவாள மாமுனியினுடைய வைபவங்களையுஞ் சொல்லிக் கொண்டு ஆச்ரயணத்துக்குத்வரிக்க, தமக்கு ப்ராத்ரு கோடிகளாயுள்ளவர்களையும் புத்ரகோடிகளாயுள்ளவர்களையும் தங்கள் தங்கள் பார்யாதிகளையுங் கூட்டிக்கொண்டு உபஹார புரஸ்ஸரமாக மடத்துச்குப் புறப்படும்படி நியமித்து;

தம்முடைய திருமாளிகையிலே திருத்தாயார் திருத்தமப்பனார் முதலானவர்களையும் விட்டு குருகுலவாஸமாக தாரக போஷக போக்யங்களெல்லாம் அண்ணன் திருவடிகளே யென்றிருக்கிற

---

A. இந்த எம்பா என்னும் ஸ்வாமி, அப்போது திருமண் காப்பு வேளையாயிருக்க கோபத்தில் அதையும் பூர்த்தியாக அணி யாமல் உள்ளே எழுந்தருளிவிட்டபடியினால் "ஒத்தைக் கொம்பு எம்பா" என்று திருநாமம் பெற்றதாக கர்ணபரம்பரைச் செய்தி. பிறகு இவர் ஸ்ரீரங்கத்திலிருந்து திருமழிசை எழுந்தருளி விட்ட தாகச் சொல்லப் படுகிறது.

திருவாழியாழ்வார் பிள்ளையையும், சுத்தஸத்வம் அண்ணனையும், திருத்தம்பிமாரையும் மற்றும் பெரியோர்களையும் அழைத்து வைத்துக் கொண்டு சுத்தஸத்வமண்ணன் பாக்யாதிசயத்தாலே அவதாளவ மிகவும் பாகவதப்ராவண்யமுடையராய் ஜீயருடைய இதச்ர்யையை அடிக்கடி ஆராய்ந்து கொண்டு அதிப்ரீதராய் அண்ணன் திருவுள்ளம் சிறிது கலங்கினாலும் ''குரும் ரஹஸி தோதயேத்'' என்கிற படியே திருவடிகளுக்கு ஹிதபராய் ஜீயரிடத்திலே ப்ரீதிவரும்படி யருளிச் செய்து கொண்டு போருகிறவராயிருப்பார்; அத்தைத் திருவுள்ளத்திலே வைத்து அண்ணன் அருளிச் செய்தபடி: ''இவருக்கு சுத்தஸத்வம் என்கிற திருநாமம் யதார்த்தமாயிற்று; நமக்குப் போர நல்வார்த்தை சொல்லிப் போருவர். இவருடைய ஹ்ருதயாநுஸாரியாய் யாவத்கார்யமும் கடித்தது; இனி ஒரு குறையுமில்லை'' என்றருளிச் செய்து கொண்டு தம்முடையவர்களும் மற்றக் கந்தாடை அய்யங்கார்களும் அவரைக் கடாக்ஷித்துக் கொண்டிருக்க;

## அண்ணன் ஸ்வஸம்பந்திகளுடன் ஜீயர் மடத்துக் கெழுந்தருளால்

அவர்களில் சிலரை எம்பா மாறுபடுத்திவிட, சென்று அண்ணனுக்கு இச்செய்தியை அறிவிக்க, மிகவும் கோபித்தருளி 'அவர்களை விடும்' என்று மற்றவர்களையெல்லாம் கூட்டிக் கொண்டு ஜீயர் ஸந்நிக்கெழுந்தருளுவதாக ஆச்சியாரையழைத்து ஸமயமறிந்து திருவுள்ளத்தில் படுத்தும்படிக்கு அனுப்பியருள, அவரும் சென்று திருமாலையாழ்வாரில் ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியிலே ஜீயரெழுந்தருளியிருக்கிறபடியினாலே கிட்டி விண்ணப்பஞ் செய்ய ஸங்கோசப்பட்டு ஒரு ஸாத்விகஸ்ரீவைஷ்ணவரை யழைத்து ''ஸ்வாமியை உள்ளே யெழுந்தருளும்படி ஏகாந்தமாகத் திருச்செவியிலே விண்ணப்பஞ்செய்யும்'' என்ன அவர் ,''ஏதுக்கு''? என்ன, ''அண்ணன் முதலான கந்தாடை அய்யங்கார்களெல்லாருங்கூடி எழுந்தருளுகிறார்கள்'' என்று ஆச்சியார் உள்ளே சென்றார்,

## ''அசட்டாச்சாண்!''

அந்த ஸ்ரீவைஷ்ணவர், ஆச்சியார் சொன்னதை அந்யதா வாகக்ரஹித்து ஓடிச்சென்று, 'ஸ்வாமீ! சீக்கிரமாக எழுந்தருள! கந்தாடை அய்யங்கார்கள் கூடிவருகிறார்களாம்', என்ன; ஜீயர் துணுக்கென்று எழுந்திருந்து புறக்கடைக் கெழுந்தருள, உள்ளே

எழுந்தருளக்காணுகையாலே ஆச்சியார் அந்த ஸ்ரீவைஷ்ணவர் என்ன விண்ணப்பஞ் செய்தாரோ வென்று பயப்பட்டு, சோபந வார்த்தையை விண்ணப்பஞ் செய்யவேணுமென்று புறக்கடையில் புகுவதற்கு ஸமயமாகக்காணுகையாலே, புறம்பே ஒளிக்க அண்ணன் முதலானார் பெருங்கூட்டமாகத் திருமுன்காணிக்கைகளும் பலங்களும் முன்னே பிடித்துக்கொண்டு மடத்து வாசலிலே எழுந்தருளி வானமாமலை ஜீயர் முதலானவர்களை புரஸ்கரித்தருளி அவர்களுடனே அண்ணன் அதிவிநீதராய் "ஜீயர் திருவடிகளே ப்ராப்யப்ராபகமாக வந்தடைந்தோம்; தேவரீர் அங்கீகரிப்பித்தருள வேண்டும்" என்ன, வானமாமலை ராமாநுஜஜீயர் இது கேட்டு அதிப்ரீதராய் ஸ்தப்தராயிருந்து பிற்பாடு ஸந்நிதிக்கெழுந்தருள; அதற்குள்ளே ஆய்ச்சியார் அதித்வரையுடனே ஸமயமான வாறே ஜீயர் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, "இற்றைக்கு சோபநம்; அண்ணன் முதலானாரெல்லாரும் திரளாகத் திருவடிகளிலே ஆச்ரயிக்க எழுந்தருளுகிறார்கள்" என்ன, அவ்வளவிலே வானமாமலை ராமாநுஜஜீயருமெழுந்தளி ஹர்ஷபரவசராய் விண்ணபஞ் செய்ய ஜீயர் கேட்டு உகந்து, "இவற்றிற்கெல்லாம் மூலபூதை ஆச்சியாரன்றோ!" என்று திருவுள்ளம்பற்றி, திருமலையாழ்வாரிலே வந்து விண்ணப்பஞ் செய்த ஸ்ரீவைஷ்ணவரையழைத்தருளி 'உம்முடைய பேரேது?" என்று விநோதமாகக் கேட்டருள, அவரும் "அடியேன் ராமாநுஜதாஸன்" என்ன, "அப்படியன்று, அசட்டாச்சான்" என்று அவரைப் பரிஹஸித்து; திருவுள்ளத்தில்உகப்போடே

## அண்ணன் ஜீயரை ஸேவித்தல்

Aவித்யா விமுக்திஜநநீ விநயாதிகத்வ மாசாரஸம்பதநுவேலவிகாஸ
ஶீலம் |
ஸ்ரீலக்ஷ்மணார்யகருணாவிஷயீக்ருதாநாம் சித்ரம் நதாசரதிவம்ஶ
ஸமுத்பவாநாம் ||

[மோக்ஷத்துக்கு உதவக் கூடிய ஜ்ஞாநமும் அதிசயிக்கத்தக்க விநயமும், அநுஷ்டானச் செல்வமும் வேளைக்கு வேளை வளரும் சீலமும் எம்பெருமானார் கருணைக்கு இலக்கான ஸ்ரீமுதலியாண்

---

டான் வம்ச...

A. இந்த ச்லோகத்தை மாமுனிகள் வேடலப்பை விஷயமாக, அருளிச் செய்ததாகவும் கூறுவர், வேடலப்பை விஷயம் பின்னர் வரும். அங்கு இது மிகப் பொருந்தும்.

டான் திருவம்சத்தினருக்கு வாய்த்திருப்பதில் வியப்பில்லை] என்றருளிச் செய்து புறப்பட்டருளி மடத்து வாசலிலே அவர்களெல்லாரையுங் கண்டு

**ஸ்ரீராமாநுஜயோகீந்த்ரகருணாபரிப்ரும்ஹிதாம் |**
**ஶ்ரேயஸீமநகாம் வந்தே ஸ்ரீமத்வாதூல ஸந்ததிம் ||**

[ஸ்ரீராமாநுஜர் என்னும் யோகியர் தலைவர் கருணையால்பல்கியதும் சிறந்ததும் குற்றமற்றதுமான ஸ்ரீமத்வாதூல குலக் கொடிவழியை வணங்குகிறேன்] என்றநுஸந்தித்தருள, அவர்களெல்லாரும் திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ணி, ''நகர்மணா நப்ரஜ்யாதநேந'', ''வேதாஹமேதம்'' என்கிற பஞ்சாதிகளை அநுஸந்தித்து, உபஹாரங்களை ஸமர்ப்பிக்க, அங்கீகரித்தருளி, உள்ளே எழுந்தருளி திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து * பொலிக பொலிக, என்கிற திருவாய் மொழிக்கும், * திருப்பல்லாண்டுக்கும் ஸங்க்ரஹமாக அர்த்தோபந்யாஸம் செய்தருளி இப்படி ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி நித்யமாய்ச்செல்லவும் எல்லாரும் மங்களாசாஸந பரராகவும் ஆசீர்வதித்தருளி எழுந்தருளியிருக்க; அண்ணன் வானமாமலைஜீயருடனே ஸமாஶ்ரயணத்துக்கு த்வரித்தருள, அழகியமணவாள மாமுனியும் எழுந்திருந்து அப்பாலே ரஹஸ்ய ஸ்தலத்திலே எழுந்தருளியிருந்து வானமாமலை ஜீயரைக் கொண்டு அண்ணனை அழைப்பித்து, ''தேவரீர் மஹாகுலப்ரஸூதரும் எல்லாருக்கும் குருகுலமன்றோ! இப்படி எதுக்கு?'' என்ன; ''அப்படியொன்றும் அருளிச் செய்யவேண்டா'' என்று தாம் முன்னிருந்த இருப்புக்கு க்ஷாபணம் பண்ணிக் கொண்டு ஸ்வப்நவ்ருத்தாந்தத்தை முதலிலிருந்து தப்பாமல் விண்ணப்பஞ் செய்யக் கேட்டருளி, ''ஈயானுடைய திருவம்சஸ்த்தராய் அநுகூலித்தவர் சிறுண்டே; அவர்களுக்கும் வேறே சில பாக்யாதிகர்களுக்கும் பெருமான் இரங்கி ஸ்வப்நாதிகளாலே தேவரீர் நியமனத்திலே கூட்டு இரூர். அவர்களையுங் கூட்டிக் கொண்டு இற்றைக்கு மூன்று நாள் கழித்து நாலாம் நாள் தேவரீர் திருவுள்ளப்ரகாரத்திற்கு எல்லோருக்கும் ஸமாச்ரயணமாகிறது'' என்று நிர்ணயித்தருளிப் புறப்பட்டுத் திருவோலக்கத்திலேயெழுந்தருளின. வநந்தரம் சாத்துப்படி அடைக்காயமுது விநியோகமாய் எல்லாரும் தம்தம் திருமாளிகைகளுக்கெழுந்தருளினார்கள்.

மீண்டும் பெருமான் சிலரைத்திருத்துவதாகத் திருவுள்ளம் பற்றி

**புநஸ்ஸ்வப்நாபதேஶேந தேஶேதேஶே ஶிரங்குரு: |**
**அபமர்ச்சாவதாரத்வ ஸமாதிமவதீரயத் ||**

**அத்யமர்த்யக் ததேதஸ்ய தத்வ மாத்யக்திகம் ஹிதம் |**
**அஸங்குசிதமாசக்யௌ புஜங்கஶயந: புமாந் ॥**

[அரவணையில் துயிலும் ப்ரமபுருஷன் மறுபடியும் ஒவ்வோரிடத்திலும், ஸ்வப்நமென்கிற வ்யாஜத்திஞல், தன்னைத் தடுப்பார் யாருமில்லாமையாலே-அர்ச்சாவதாரத்வத்தின் மெய்ப்பாட்டினை-பேசாமலிருக்கும் ஸ்வபாவத்தை உதறி தள்ளிவிட்டு, தேவர்களையும் விஞ்சிய-இம்மாமுனிகளுடைய உண்மைத் தன்மையையும் மோக்ஷத்திற்கு அந்திமோபாயமாயிருக்கும் தன்மையையும் விவரமாக அருளிச் செய்தான்.] என்று இத்யாதிகளாலே "குரும்ஶ ஸ்வப்நத்ருஷ்டம்ஶ" என்கிறபடியே அவர்கள் ஸ்வப்நத்திலே அர்ச்சாவதார ரூபியாய் வந்து "நாமே இப்படி ஆசார்யரூபேண அவதரித்தோம்; நீங்களுமப்படியே "ஆசார்யம்மாம் விஜாநீயாத் பவபந்த விமோசநம்" [ஸம்ஸாரபந்தத்தை விடுவிக்கும் நாமே மாமுனிகளென்று அறியக்கடவர்கள்] என்கிறபடியே விசேஷப்ரதிபத்திபண்ணி ஆச்ரயியுங்கோள்" என்றருளிச்செய்ய; அநந்தரம்:

## அண்ணன் ஜீயரிடம் ஸமாச்ரயணம்பெற்றது

**ராமாநுஜபதாம்போஜ ஸௌகந்த்ய நிதயோபியே |**
**அஸாதாரண மௌந்நத்யமவதூய நிஜம்தியா ॥**
**உத்தேஜயந்தஸ் ஸ்வாத்மாநம் தத்தேஜஸ்ஸம்பதா ஸதா |**
**ஸ்வேஷாமதிசயம் மத்வா தத்வேந ஶரணம் யயு: ॥**

[எம்பெருமானருடைய திருவடித்தாமரைகளில் நறுமணத்தையே நிதியாகப் பெற்றவர்களும் தம்முடையதான பிறர்க்கில்லாத உயர்த்தியை புந்திபூர்வகமாக உதறிவிட்டுத் தம்மை அதிகமாக ப்ரகாசிக்கும்படி செய்ய நினைத்தவர்களாய், அம்மாமுனிகளின் தேஜஸ்ஸம்ருத்தியிஞல் தமக்குப் பெருமை உண்டாகுமென்றெண்ணி அம்மாமுனிகளைப் பூர்ணமாகச் சரணமடைந்தனர்.] என்கிறபடியே ராமாநுஜபரிக்ருஹீதராய் அபிஜநவித்யாவ்ருத்தங்களாலுயர்ந்திருக்கிற கந்தாடை அண்ணன் முதலான ஆசார்ய புருஷர்கள் எல்லாரும் தந்தம் உயர்த்திகளைப் பாராமல் ஜீயர் திருவடிஸம்பந்தமே தங்களுக்கு ஸர்வா திசயங்களுமாக வெண்ணி ஜீயர் திருவடிகளை சரணமாக வந்தடைந்திருக்க அண்ணன் ஜீயர் திருமுன்பே சென்று, "தேவரீர் அடியோங்களை க்ருபை பண்ணுகைக்கு இட்டிருந்தநாளும் வந்தது; எம்பெருமானராலே ப்ரதிபத்திக்கப்பட்ட நம்முடையவர்களுக்கு பெருமாள் ஸ்வப்நாதி ஸா

ஜத்தாலே திருத்தத்திருந்தி தேவரீர் திருவடிகளை ப்ராப்யமாக வந்து இந்தகோஷ்டியிலே கூடியிருக்கிறார்கள். எல்லாரையும் க்ருபைபண்ணியருளத் திருவுள்ளமாகவேணும்'' என்று விண்ண பஞ்செய்ய; ஜீயரும் வானமாமலை ஜீயரை அழைத்து அதற்கு வேண்டியவைகளை ஸந்நத்தமாக்க நியமித்தருளி, தாமும் திரு வாராதநஞ்செய்தருளி திருப்பணியாரமும் பழவமுதும் பூர்ண மாகக் கண்டருளப் பண்ணி, ஸந்நிதி முன்பாக எழுந்தருளியிருந்து ஸமாச்ரயணமாக வேண்டியவர்களெல்லாரையும அழைத்து அண்டையிலே வைத்துக்கொண்டு செய்யுங்கிரிசைகளெல்லாஞ் செய்தருளி, ''தாப:புண்ட்ரஸ்ததா நாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம:'' [திருவிலச்சினை, திருமண்காப்பு, தாஸ்யநாமம், மந்த் ரோபதேசம், தேவபூஜை என்று ஐந்து]என்கிறபடியேபஞ்சஸம்ஸ் காரங்களையும் செய்தருளி பரமைகாந்த்ய மஹாபலத்தையும் பூர்ண மாக்கி உகந்தருளி நெடும்போது அண்ணனை *இருந்தான் கண்டு கொண்டு என்கிறபடியே கடாக்ஷித்துக் கொண்டிருந்து;

## அப்பாச்சியாரண்ணா வானமாமலை ஜீயரை ஆச்ரயித்தல்

வானமாமலை ராமாநுஜ ஜீயரைக் காட்டியருளி, ''இவர் நமக்கு ப்ராண ஸுஹ்ருத்து, நமக்குண்டான அதிசயமெல்லாம் இவர்க்குமுண்டாகவேணும், முதலியாண்டான் திருவம்சத்திலே நமக்கு ஸம்பந்த முண்டானாற்போல இவர்க்குமுண்டாகவேணும்' என்று அருளிச்செய்ய அண்ணன், திருவுள்ளக்கருத்தறிந்து ''அடியேனை அங்கே ஆச்ரயிப்பித்தருளாதே யொழிந்ததே'' என்று விண்ணப்பஞ்செய்ய, ''நமக்கு ப்ராப்தமானதை விடப்போமோ?'' என்ன, அண்ணன் தம்முடைய அநுபந்திகளை ஸாபிப்ராயமாகப் பின்னே ?கடாக்ஷித்தருள, பாவஜ்ஞராய் ஆச்சியாருடை குமாரரா யிருக்கிற அண்ணா எழுந்திருந்து தண்டன் ஸமர்ப்பிக்க என்ன வென்று கேட்டருள, ''அடியேனை எங்களாண்டவன் வானமாமலை ராமாநுஜ ஜீயருடைய திருவடிகளிலே ஆச்ரயிப்பிக்கவேணும்'' என்ன, ஜீயரும் மிகவுகந்தருளி, ''நம்மப்பாச்சியாரண்ணாவோ!'' Aஎன்றருளுச்செய்து, அவரைக் கைப்பிடித்துத் தம்முடைய அண்டையிலே வைத்துக்கொண்டு தாம் எழுந்தருளியிருந்த

---

A ''ஸ்ரீ தீர்த்ததேவராஜஸ்யதநயாப்பேதி விச்ருதா. தஸ்யாஸ்த நூஜோ வரத:'' என்று இவர் போற்றப்படுகிறார். திருமஞ்சனம் அப்பா என்ற தேவராஜருடைய குமாரத்தியாய் ஆச்சி என்று ப்ரஸித்தையானவருடைய குமாரரான வரதாசாரியர், ஜீயர் இவருக்கிட்ட பெயர் அப்பாச்சியாரண்ணா என்பது.

ஆஸனத்திலே வானமாமலை ஜீயரையிருத்தித் தம்முடைய திருக்கை களிலிருந்த ஆழ்வார்களை அவர் திருக்கைகளிலே ஸாதித்தருளி, 'இவர்க்கு ஸாதியும்' என்ன, அவர் சற்று இருப்க்க, "அப்படி செய்யவேண்டா, நமக்கு ப்ரியமானதைச் செய்யும்" என்றருளிச் செய்து அண்ணவை ப்ரீத்யதிசயத்தாலே தழுவிக்கொண்டிருந்து ஆச்ரயிப்பித்தருளினர்; உடனே அண்ணவுடைய திருத்தம்பி யாரன தாசரதி அப்பையும் அங்கே ஆச்ரயித்தார். உடனே வானமாமலை ராமாநுஜ ஜீயர் "போதும், இனி அடியேனை விட வேணும்" என்று எழுந்திருந்து தூரப்போய் தண்டன் ஸமர்ப் பித்து நிற்க. "அப்படியே யாகிறது; எழுந்தருளியிருக்க" என்ற ருளிச்செய்து, தாமும் முன்போலே எழுந்தருளியிருந்து கந்தாடை அப்பன் முதலான அண்ணன் ப்ராதாக்களுக்கும், ப்ராத்ருகோடி களாயுள்ளவர்களும், புத்ரகோடிகளாயுள்ளவர்களும் ஸ்வபார்யா திவர்க்கங்களுடனே நூற்றிருபது திருநாமம் மற்றும் சிங்கரையர் முதலான பகவத்க்ருபாபாத்ரபூதரான அநேகம் பேர்களும் ஆச்ர யித்தார்கள். அந்த ஸமயத்தில் கோயில் பரிகரமனைத்துக் கொத்தும் ஸகலமங்களவாத்யங்களுடனே பெருமாளுடைய ப்ரஸாதங் கொண்வர, ஜீயர் எதிர்கொண்டு ப்ரணமபுரஸ்ஸரமாக ஆதரித்து உள்ளே எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போயிருக்க, அண்ணன் அவர்களை யதோசிதம் ஆதரித்து பஹுமானஞ் செய்தருளி, அவர் களுடனே ஜீயர் தொடக்கமானவர்களும் அன்று ஆச்ரயித்தவர் களும் கோயிலிலே எழுந்தருளி எம்பெருமானர், ஆழ்வார் பெருமாள், நாய்ச்சியார், எல்லாரையும் "தேவீகோதா" இத்யா திப்படியே மங்களாசாஸனஞ் செய்தருளி மீண்டும் மடத்திலே எழுந்தருளித் ததீயாராதனமும் மஹோத்ஸவமாக நடந்தது. "ஜகத்ரக்ஷாபரோऽநந்த" என்று தோழப்பர் ஸ்வப்நத்திலே பேரரு ளாளர் (பக் 10 பார்க்கவும்) அருளிச் செய்தபடி பலிக்கக்கண் டோம்" என்று எல்லாரும் உகந்தருளினர்கள்.

இப்படி ஆச்ரயித்தவர்களெல்லாரும் ஜீயருடைய அதிமாநுஷ மான அத்புத சரிதங்களெல்லாவற்றையும் ஸேவித்து

சிரவிரஹதஶ்சிந்தாஸந்தா நஜர்ஜரசேதஸம்
புஜகசயநம் தேவம்பூய: ப்ரஸாதயிதும் த்ருவம் |
யதிகுலபதி:ஸ்ரீமாந்ராமாநுஜ:ஸ்வயமித்ய பூ
திதி ஸமதுஷந் ஸர்வே ஸர்வத்ர தத்ர ஸமீஜநா: ||

[யதிகுலநாதரான ஸ்ரீமத்ராமாநுஜர்—தம்மை வெகுநாட்கள் பிரிந்ததனால் இடைவிடாமல் தம்மையே நினைத்து நினைத்துக்

தனர்ந்த திருவுள்ளங்கொண்ட அரவணையானான ஸ்ரீரங்கநாதப் பெருமானை மறுபடியும் மகிழ்விக்கக்கருதியே போலும், தாமே மணவாள மாமுனிகளாக அவதரித்*தருளினரென்று அங்கு எல்லா விடத்திலும் உள்ள ஞானியர் அனைவரும் மிக மகிழ்ந்தனர்.] என்கிறபடியே யதிபுநரவதாரமாக வெண்ணித் தாங்களும் சிரோ பாஸிதஸத்வ்ருத்தரென்னும்படி அவர் திருவடிகளைப் பழுக்க ஸேவித்து, அங்குத்தைக்குப் பரிவராயிருந்தார்கள். இப்படி ஜீயர் சிஷ்யஸம்பத்துடனே இனிதாக வாழ்ந்தருளுகிறபோது திருவாழி யார்வார் பிள்ளையை ஸ்ரீகோசங்களையெல்லாம் அப்போதைக் கப்போது சோதித்து ஸம்ரக்ஷணம் பண்ணிக்கொண்டுவரவும் ஏறியருளப் பண்ணவேண்டிய ஸ்ரீகோசங்களை லேகரிகளையிட்டு நன்றாக ஏறியருளப்பண்ணவும் தாமபேக்ஷித்த அவஸரங்களிலே அபேக்ஷிந்த ஸ்ரீகோசங்களை ஸமர்ப்பிக்கவும் ஈடுமுப்பத்தாறுயிரப் படி அர்த்தமாம் படி சிறிது வ்யாக்யானங்களைக் கூட்டி ப்ரதி ஏறியருளப்பண்ணிவைக்கவும் நியமிக்க, அவரும் அப்படியே எல்லாவற்றையும் செய்து கொண்டு போந்தார்.

## ஆண்டபெருமாளி அண்ணனை ஆச்ரயித்தது

ஒரு நாள் சுந்தஸத்ஸிம் அண்ணனையழைந்தருளி போரவுகந் தருளி "ஆழ்வாருக்கு ஸ்ரீமதுரகவிகளைப்போலே நீர் அண்ணனுக்கு அபிமதவிஷயமாக விருக்கப் பெற்றிரே; *தன்னாரியனுக்குத் தாளடிமை செய்வதவனிந்தாடுதன்னிலிருக்கும் நாளன்றோ; ஸகல சுச்ருஷைகளும் பண்ணிக்கொண்டு வாழும்" என்று ஆசீர்வதித்து; குமண்டூர் ஆச்சான்பிள்ளை பௌத்ரராயும் ஜ்ஞாநாதிகராயும் ஸகல சர்ஸ்த்ரபாரங்கதராயுமிருக்கிற 'ஆண்டபெருமாளை ஜீயர், அண்ணனிடம் "உம்முடைய திருவடிகளுக்கு அந்தரங்கராய் தர்சநப்ரவர்த்தாராம்படி விநியோகித்துக் கொள்ளும்" என்று விட, அண்ணனும் அப்படியே செய்தருளினர், A

---

A. "வரவரமுநிப்ருத்யர்" என்றுநிருபகமாம்படி திருவடிக்கு அந்தரங்கராய் ஆசார்யாபிநைக நிஷ்டராயிரா நிற்க : (பக்-89) என்று தெலுங்குப்பதிப்பு, இதற்குமேல் : இதுகண்டு கந்தாடை அண்ணன் முதலானோர் இவர் திருவடிகளால் ஆச்ரயணோந்முக ராயிருக்க, அவ்வளவிலே பெருமாளும் அவர்கள் ஸ்வப்நத்திலே "அஸங்குசிதமாசக்யே புஜங்கசயந : புமாந்" (சேஷசாயியான ரங்கநாதன் விரிவாக அருளிச் செய்தார்) என்கிறபடியே விசத-மாக ஜீயர் திருவடிகளே ஆச்ரயிக்கும்படி நியமித்தருள், அவர்

## ஜீயர் நாயனார் திருவவதாரம்.

இப்படி ஸம்பந்த ஸம்பந்திகளும் உத்தாரகராம்படி வைபவமுடைய ஜீயர் தர்சநம் நிர்வஹிக்கிற காலத்திலே ஜீயருடைய பூர்வாச்ரமத்தில் குமாரரான *நம்மையனிராமானுசன் திருநகரியிலே வளர்ந்தருளி அங்கே திருக்கல்யாணஞ் செய்தருளி சிலகாலத்துக்குமேல் ஆவருக்குக் குமாரர் திருவவதரிக்க, அவருக்கு ‡"அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்" என்று ஜீயர் திருநாமம் சாத்தியருளினார். பின்பு அவர் ஸ்ரீவில்லிபுத்தூரிலே யெழுந்தருளியிருக்க பின்னுமொரு குமாரர் திருவவதரிக்க, அவருக்குத் திருநாமமேதென்று ஜீயர் ஸந்நிதியிலே கேட்டு வரக்காட்ட, "ஸ்ரீவில்லிபுத்தூரிலே பிறந்த பிள்ளைக்கு பெயரேதென்று கேட்டுவர விடுவதென்! பெரியாழ்வார் திருநாமம் சாத்துங்கோள்" என்று அருளிச்செய்து போகவிட, அப்படியே "பெரியாழ்வாரையன்" என்று திருநாமஞ் சாத்தியருளினார். அவர்களும் வளர்ந்து உபந்நரான பின்பு ஜீயர் திருவடிகளிலே வந்தாச்ரயித்தார்கள். அவ்விருவரில்

---

திருமுகப்படியே "ராமாநுஜபதாம்போஜ ஸௌகந்த்ய நிதயோ ப்ரியே" என்று தொடங்கி "ஶ்ருத்வைவ வைபவம் தஸ்ய தத்வேத ஶரணம் யயு." [எவர்கள் எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளின் பரிமளத்தையே தமக்கு நிதியாக *நினைத்திருந்தார்களோ அவர்களும் அந்த மணவாள மாமுனிகளுடைய வைபவங்களை உள்ளபடி கேட்ட மாத்திரத்திலேயே அவரைச் சரணம் பற்றினார்கள்] என்கிறபடியே, ராமாநுஜ பரிக்ருஹீதராய் அபிஜநவித்யாவ்ருத்தங்களாலும் உயர்ந்திருக்குமவர்களான கந்தாடை அண்ணன் முதலான ஆசார்யபுருஷர்களாயுள்ள அனைவர்களும் தந்தாமுயர்த்திகளைப் பாராமல் இவர் திருவடி ஸம்பந்தமே தங்களுக்கு தாரகமென்று அறுதியிட்டு வந்து ஜீயர் திருவடிகளையே சரணமாகப் பற்றி உஜ்ஜீவித்தார்கள். இப்படி ஆச்ரயித்தவர்களெல்லாரும் ஜீயருடைய அதிமாநுஷமான அற்புத சரித்திரங்களெல்லாம் கண்டு யதிபுநரவதாரமாக எண்ணி, தாங்களும் "சிரேபாஸிதஸத்வ்ருத்தர்" என்னும்படி அவர் திருவடிகளைப் பழுக்க ஸேவித்துக் கொண்டு அங்குத்தைக்கு அந்தரங்கராய் இருந்தார்கள்— என்று மட்டுமே தெலுங்குப்பதிப்பில் காண்பது. இந்த (ய. பா.) பதிப்பில் பக். 89 முதல் இதுவரை உள்ளவை தெலுங்குப் பதிப்பில் கிடையாது. மேலே வேடலப்பை, ஹஸ்திகிரிநாதரண்ணா விஷயங்கள் பேசப்பட்டு, ஜீயருக்கு பூர்வாச்ரம ஸந்ததி விஷயம் பேசப்பட்டுள்ளது, வேடலப்பை, அண்ணா பற்றியவை இப்பதிப்பில் பின்னர் வரும்.

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் ஜீயர் திருவடிகளைப் பிரியாது ஆட்செய்து ஸேவித்திருந்தார். ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் ஸ்வபுத்ரர்களுக்கு நாயனார் என்று திருநாமம் சாத்துகையாலே இவருக்கும் ''ஜீயர் நாயனார்'' என்றே நிரூபகமாயிருக்கும். இவரும் 'ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு ஆளவந்தாரைப் போலே தமக்குப் பௌத்ரரான இவரை தர்சநப்ரவர்த்தகாரம்படி விசேஷ கடாக்ஷம் செய்தருளினார். ஆசார்ய பௌத்ரரான அவரும் தீபாதுத்பந்ந ப்ரதீபம் போலே மிகவும் ப்ரகாசமாநராயிருந்தார். இத்தைக் கொண்டு ஸ்ரீபாதத்து முதலிகள்

**அஸ்மாஸு வத்ஸலதயாக்ருபயாச பூய:**

**ஸ்வச்சாவதீர்ணமிவ ஸௌம்யவரம் முநீந்த்ரம்**

**ஆசார்யபௌத்ரமபிராமவராபிதாநம்**

**அஸ்மத்குரும் குணநிதிம் ஸததம் ப்ரயாம: ||**

[நம்மிடம் வாத்ஸல்யத்தாலும் பரமக்ருபையாலும் தமதிச்சையாலே மணவாளமாமுனிகள் மீண்டுமவதரித்தாரோ என்னலாம்படியுள்ளவரும் நற்குணங்களுக்கு நிதிபோலவிருப்பிடமும், ஆசாரியர் திருப்பேரனாரும், அபிராமவரர் (அழகியமணவாளர்) என்ற திருநாமமுடையவருமான ஜீயர் நாயனாரான அஸ்மதசார்யரை எப்போதும் அணிபணிகிறேன்] என்று அநுஸந்தித்துப் போந்தார்கள்.

## ஜீயர் ஆழ்வார் திருநகரியேற எழுந்தருளல்

அநந்தரம் *எமரேழெழு பிறப்பும் கேசவன் தமரானார்களென்னும்படி ஆழ்வாரபிமாநாந்தர்ப்பூதரில் அக்ரகண்யரான ஜீயரும் ''பகவந் பவதுத்பவஸ்தலீ பவது ஸ்ரீநகரீகரீயஸீ'' [கல்யாணகுண பரிபூர்ணரே! தேவரீருடைய அவதாரஸ்தலமான திருநகரியானது எல்லாவிடங்களிலும் உயர்ந்து விளங்கட்டும்] என்று சொல்லுகிறபடியே, ஜீயர் தமக்குப் பிறந்தகமான ஆழ்வார் திருநகரியிலே சென்று ஆழ்வாரைத் திருவடி தொழவேணுமென்று திருவுள்ளமாய், *குருகூர் நம்பி! முயல்கின்றேனுன்தன் மொய்கழற்கன்பையே என்கிறபடியே உத்ஸாஹத்தையுடையராய், நம்பெருமாளை ஸேவித்து அநுமதி கொண்டு நம்மாழ்வாரை ஸேவிக்கப் புறப்பட்டருளி *அரங்கத் துறையுமின்துணைவனே வழித்துணையாகவெழுந்தருளி, திருவாய்மொழிப்பிள்ளை திருவவதாரஸ்தலமான குந்திநகரத்திலே த்ரிராத்ரமெழுந்தருளியிருந்து,

**சித்தந்திருமால்மேல் வைத்தருளும் சீர்மன்ன**
**ரத்தமிது காணு நாந்தொழில்—முத்தராய்ப்**
**போனாரேயாகிலும் பூங்கமலத்தாள் கடனைத்**
**தாமாரவைத்தார் தலம்**

என்றநுஸந்தித்து, ஸேவித்துப் புறப்பட்டருளி,

**யானியானிச திவ்யானி தேஶேதேஶே ஜகந்திதே: |**
**தானிதானி ஸமஸ்தானி ஸ்த்தானானி ஸமஸேவத ॥**

[அவ்வோ இடங்களில் எம்பெருமானுக்கு எந்தெந்த உகந்தருளின திவ்யதேசங்கள் உண்டோ அந்தந்த தலங்கள் எல்லாவற்றையும் திருவடி தொழுதார்] என்றும் *தானுகந்தவூரெல்லாம் தன்தாள்பாடி என்றுஞ் சொல்லுகிறபடியே வழியிலுண்டான திருப்பதிகளையெல்லாம் திருவடி தொழுது அவ்வவ்விடங்களிலே தத்காலோசிதமான மங்களசாஸநங்களைப் பண்ணி ஸேவித்தருளி,

**வைகுண்டநாத விஜாயஸந பூமிபாலாந் தேவேஶ**
**பங்கஜவிலோசந சோரநாட்யாந் |**
**நிக்ஷிப்தவித்த மகராலயகர்ணபாஶாந் நாதம் நமாமி**
**வகுளாபரணேந ஸார்த்தம் ॥**

[ஸ்ரீவைகுண்டநாதன், விஜயாஸநர், பூமிபாலர்' தேவபிரான், [புளிங்குடி) அரவிந்தலோசநர் (துலைவில்லிமங்கலம்), சோரநாட்யர் (மாயக்கூத்தர்), வைத்தமாநிதி, மகரநெடுங்குழைக்காதர், வகுளாபரணரான ஆழ்வாருடன் ஆதிநாதரையும் திருவடி தொழுகிறேன்] என்கிறபடியே அஷ்டதளம் போலேயிருக்கிற ஸ்ரீவைகுண்டம்முதலான திருப்பதிகளை ஸேவித்து, தத்கர்ணிகைபோலிருந்துள்ள திருநகரியை *திருக்குருகூரதனைப்பாடியாடிப் பரவிச் சென்மின்கள் என்று அத்யந்தம் ஹர்ஷப்ரஹர்ஷத்துடன் சென்று கிட்டி திருத்தாமிரபரணிச் சங்கண்ணித்துறையிலே நீராடி' *கேசவன் தமரில்படியே திருத்வாதசநாமங்களையும் சாத்தியருளித்தாமும் முதலிகளுமாக *குயில்நின்றார் பொழில்களையும், செந்தாமரைத் தடங்களையும், அதிலே அறுகாலவரிவண்டிசைபாட *அன்னமென் கமலத்தணி மலர்ப்பீடத்து அலைபுனலிலைக்குடை நீழல் செந்நெலொண் கவரியசைய வீற்றிருக்கும் (திருமொழி 9-1-5) படியையும் செம்பொன் மாடங்களையும், உயர்ந்த திருமாளிகைகளையும் *இலங்களாலமரர் வணங்கும் திருக்குருகூர் என்ற அவைரயும் அனுபவித்து

**புக்ககத்தினின்றும் பிறந்தகத்தில் போந்தது போல்**
**தக்க புகழ்த்தென்னரங்கந்தன்னினின்றும்—மிக்கபுகழ்**
**மாறன் திருநகரிவந்தோம் அரங்கன் தன்**
**பேறன்றோ? நெஞ்சே! இப்போது**

என்றநுஸந்தித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிறவளவிலே *நல்லார் பலர்வாழ் திருக்குருகூரிலுண்டான ஸத்துக்களெல்லாரும் குழாங் குழாமாக வந்து திருவடிகளிலே ஸேவிக்க, அவர்களையும் க்ருபை பண்ணியருளி, அவர்களுடனே கூடவெழுந்தருளி, ப்ரதமம் எம்பெருமானாரை *ஸ்ரீமாதவாங்க்ரி என்று தொடங்கி, ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா*(யதிராஜவிம்சதி-1) என்று ஸேவித்தருளி. அதிப்ரீதியுடனே தீர்த்தம் ப்ரஸாதப்பட்டு, அங்கு நின்றும் புறப்பட்டு, பிள்ளை (திருவாய்மொழிப்பிள்ளை) திருமாளிகையேறவெழுந்தருளி †தண்டன் ஸமர்ப்பித்து உள்ளே புகுந்து இனவாயர்தலைவனையும் மங்களாசாஸநஞ் செய்தருளி, *நம: ஸ்ரீசைலநாதாய என்றநுஸந்தித்து, பிள்ளை எழுந்தருயிருந்து வ்யாக்யானஞ் செய்தருளின ஸ்தலத்தையும் "நம்மை விஷயீகரித்த இடமன்றோ!" என்று ஸேவித்து, அங்கு நின்றும் புறப்பட்டு, *குன்றம்போல் மணிமாடங்களையும் *செம்பொன் மாடங்களையும் ஸேவித்துக் கொண்டுபோய் உபயப்ரதாநப்ரணவமான உறை கோயிலிலே புக்கு, "வகுளாபரணம் தேவம் ஸ்வகுலாபரணம் யயௌ" [தமது குலத்துக்கு பூஷணமான பூஜ்யரான நம்மாழ்வாரைக் கிட்டினார்-ஆச்ரயித்தார்] என்கிறபடியே முந்துற *நாட்கமழ் மகிழ்மாலைமார்பனை ஆழ்வார் திருவடிகளைச் சென்று கிட்டி, *மாதாபிதா என்று தொடங்கி *வகுளாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா என்றநுஸந்தித்து ஸேவித்தருளி, கண்ணிநுண்சிறுத்தாம்பையநுஸந்தித்து, *அன்னையாயத்தனாய் என்கிறபாட்டின்படியே ஸர்வவிதபந்து விசேஷங்களெல்லாம் தமக்கு *ஆழ்வாரேயென்று தோற்றும்படி அதிப்ரேமத்துடனே அநுபவித்துக் கொண்டு அஞ்ஜலித்து நிற்க, ‡ஆழ்வாரும் தேசாந்தரகதனான புத்ரனைக்கண்ட மாதாபிதாக்களைப் போலே காரிமாறப்பிரானார்-தாம் இவரைக் கண்டு கொண்டிருந்து, பின்பு தீர்த்தப்ரஸாதங்களையும் ப்ரஸாதித்து ஸ்ரீராமாநுஜனையும் ப்ரஸாதித்தருள. *செல்வச்சடகோபர் தேமலர்த்தாட்கேய்ந்தினிய 'பாதுகமாமெந்தை யிராமானுசனை வாய்ந்தெனது நெஞ்சமே வாழ்" என்றும், "வகுளாலங்க்ருதம் ஸ்ரீமச்சடகோப பதத்வயம். அஸ்மத்குலதநம் போக்யமஸ்துமே மூர்த்நிபூஷணம்" [மகிழ்மலர் மாலையாலலங்கரிக்கப்பட்ட செல்வச் சடகோபரின்

(ஆழ்வாரின்) இனிய திருவடியிணை அடியேனுக்கு சிரோபூஷண மாய் அமையட்டும்] என்றுமநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், அநந்தரம் *திரிதந்தாகிலும் தேவபிரானுடைக் கரிய கோலத்திவுருக் காண்பன் நான் என்கிறபடியே அவருகந்த விஷயமான பொலிந்து நின்ற பிரானையும் மங்களாசாஸனம் பண்ணிப் புறப்பட்டருளி மடமே யெழுந்தருளி அங்கே சிறிது காலம் எழுந்தருளியிருந்தார். அங்குண்டானவர்களெல்லாம் இவரை அவதார விசேஷ மென்றறிந்து இவர் திருவடிகளிலே ஆச்ரயித்தார்கள். அவர்களை க்ருபை பணணியருளி மாஹப்ரபாவராயெழுந்தருளியிருக்கிற காலத்திலே

**சுருதித்தமிழ்மொழியுஞ் சடகோபர்தம் பாதத்தைக்**
**கருதிப் பரவு மெதிராசராசன் கவியமுதம்**
**வருதிக்கறிந்துரை செய்யுமோ மாமுனிவன் புகழ்போய்ப்**
**பருதிக்கதிர் செல்லுமண்டலமேறப் பரந்ததுவே**

என்னும் படியான இவர் வைபவங்களெல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர்களுக்கு ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களின் அர்த்தமருளிச் செய்து கொண்டிருக்குங்காலத்திலே;

## திருநாராயணபுரத்தாயியுடன் ஸமாகமம்

ஆசார்யஹ்ருதயத்திற்குப் பொருள் அருளிச் செய்யும்போது ''ஜ்ஞாநசதுர்த்திகளின் மேலேயிறே ஆநந்தஷஷ்டிக்குதயம்'' என்கிற வாக்கியத்திற்கு அர்த்தம் ஸ்வரஸமாகவாகாமையாலே இதற்கு அர்த்தமருளிச் செய்வாராரென்று விசாரமுண்டாய் திருநாராயணபுரத்தாயி பக்கலிலே இவ்வர்த்தம் கேட்க வேணும் என்னும் பேராசையோடே ஆழ்வாருக்கு விண்ணப்பஞ் செய்து அவரநுமதி கொண்டு திருநாராயணபுரத்துக்குப் போவோமென்று புறப்பட்டெழுந்தருளாநிற்க, ஆயியும் ஜீயருடைய ப்ரபாவங்கேட்டு இவரை ஸேவிப்பதாகத் திருநகரிக்கு ஆலந்த மாக, மார்க்கமத்யே வந்து ஸங்கதராக, அவரைக் கண்டு 'என்னினபலம் எதிரிலே வரப்பெறுவதே'' என்று பெரியப்ரீதியோடே தீர்க்கப்ரணாமம் பண்ணி நிற்க, ஆயியும் தானுந்தடக்கையுங் கூப்பிஸேவிக்க, இருவரும் அந்யோந்யம் வந்தநபரராய் குசலப்ரஶ்நம் பண்ணிநிற்க, இத்தைக் கண்டு ஜீயர் ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் ''பெரிய நம்பியும் எம்பெருமானாரும் எதிர்ப்பட்டாப் போலேயாயிற்று'' என்று மிகவும் உகந்தருளினார்கள். அநந்தரம்

*குன்றமாடத்திருக்குகூரேறவெழுந்தருளி ஆயி பக்கலிலே ஆசார்யஹ்ருதய ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் கேட்டிருளி,

**ஆசார்யஹ்ருதயஸ்யார்த்தாஸ்ஸகலா யேந தர்ஶிதா: |**
**ஸ்ரீஸாநுதாஸமமலம் A தேவராஜம் தமாஶ்ரயே ||**

[எவரால் ஆசார்ய ஹ்ருதயத்தின் எல்லாவர்த்தங்களும் விளக்கமாகக் காட்டப்பட்டதோ, தோஷமற்ற திருத்தாழ்வரை தாஸர் என்ற அந்த தேவராஜரை (ஆயியை) அடிபணிகிறேன்] என்று அந்த உபகாரஸ்ம்ருதிக்கு அவர்விஷயமாக ஒருதனியன ,ருளிச் செய்தருள; ஆயி அதில் தமக்கந்வயமற்றபடிதோற்ற,

**பூதூரில் வந்துதித்த புண்ணியனோ? பூங்கமழும்**
**தாதாருமகிழ்மார்பன் தானிவனோ—தூதூர**
**வந்தநெடுமாலோ? மணவாளமாமுனிவன்**
**எந்தையிவர் மூவரிலும் யார்?**

என்றருளிச் செய்து 'ஜீயரை அவதாரவிசேஷமென்று ஆதரித்துக் கொண்டு அங்கேசிலகாலமெழுந்தருளிருக்க;

அதுவேஹேதுவாக, "ஆயி திருநாட்டுக் கெழுந்தருளினார்' என்று திருநாராயணபுரத்திலுள்ள அஸூயாளுக்கள் அவர் திருமாளிகையிலுள்ள ஸர்வஸ்வத்தையும் செல்வப்பிள்ளை அங்கீகரித்தருளும்படி ஸ்ரீபண்டாரத்தில் சேர்க்க அக்காலத்திலே ஆயியும் மீண்டும் திருநாராயணபுரத்தேற எழுந்தருளி. இச்செய்தியைக் கேட்டு ஹ்ருஷ்டராய் "யஸ்யாநுக்ரஹமிச்சாமி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்" [நான் எவன் விஷயத்தில் அநுக்ரஹம் பண்ண விரும்புகிறேனோ அவன் தனத்தை அபஹரிக்கிறேன்] என்னும் திருமுகப்படியே ப்ரத்யக்ஷமாகச் செல்வப்பிள்ளை இத்தைக் கொண்டருளிய பின்பு நாம் இரக்கத்துக்கு விஷயமென்பது கிம்புநர்ந்யாயஸித்தமிறே, "யஸ்யைதே தஸ்யதத்தநம்- உடையவன் உடைமையை ஸ்வீகரிக்கை ப்ராப்தமிறே" என்று ஈடுபட்டு ஆநந்தாச்ருக்கள் பனிப்ப எழுந்தருளி ஆசார்யக்ருபாலப்தரான

---

A. ஸ்ரீஶாநுதாஸம் என்று தெலுங்குப் பதிப்பில் பாடம். ஆயிஸ்வாமிக்கு திருத்தாழ்வரை, தாஸர் என்று 'திருநாமமுள்ளபடியால் [உ. ர. மாலை 58ம் பாசுரவ்யாக்யாநம் காண்க] ஸ்ரீஸாநு தாஸர் என்றபாடமே ஆதரணீயம். ஸாநு-தாழ்வரை. "கிரிஸாநுஷு-ரம்ஸ்யஸே-அஹம் ஸர்வே கரிஷ்யாமி" என்று இளையபெருமான் திருத்தாழ்வரை தாஸரானார்.

ஞானப்பிரான் ஒருவரையுமே அர்த்தித்துப் பெற்று மற்றவைகளை யெல்லாம் அங்குத்தைக்கு ஸமர்ப்பித்து யாதவகிரிநிலயனுக்கு மால்ய ஸமர்ப்பணைக நிஷ்டராய் அங்கே ப்ரீதராய் எழுந்தருளி யிருந்தார். அநந்தரம் திருநகரியிலே பெரியஜீயரும்,

**மாதவத்தோர் வாழ்த்தும் முடும்பை மணவாளன்**
**தோதவத்தித்தூய்மறையோரான பெற்றூர்—தீதற்ற**
**ஆசாரியவிதயம் பெற்றூர் நம்மாயியிவர்**
**தேசாரத்தன்கண் நெஞ்சேகாண்**

என்று ஆசார்யஹ்ருதய ஸம்ப்ரதாயத்தைத்தாமநுஸந்தித்தருள அப்படியே முதலிகளும்

**மாதவத் தோன் மாறன்மனம் கூறும்மணவாளன்**
**தோதவத்தித்தூய்மறையோரான பெற்றூர்- நீதியினல்**
**ஆங்கவர்தாள் சேர்பபெற்றூராயி மணவாளமுனி**
**பூங்கமலத்தாள்கள் நெஞ்சே! போற்று.**

என்றநுஸந்தித்தார்கள்.

## திருநகரியில் ஜீயர் மடம் தீக்கிரையாதல்.

இப்படி பெரிய ஜீயர் ஜ்ஞாநஸம்ருத்தியுடனே திருநகரியிலே வாழ்ந்தருளுங்காலத்திலே, இத்தைக்கண்டு ஸஹிக்க மாட்டாத சில அஸூயாளுக்கள் ஆஸுரப்ரக்ருதிகளாய் மஹாபாபிகளாய்க் கொண்டு கூரை மேய்ச்சலாயிருக்கிற மடத்திலே ஜீயர் எழுந்தருளி யிருக்க, அர்த்தராத்ரியிலே அக்நிப்ரக்ஷேபணம் பண்ண, அத்தசை யிலே ஜீயர் தம்முடைய ப்ரபாவத்தாலே அவ்வழல் தட்டாதபடி சேஷாக்ருதியாய்க் கொண்டு அனைவருங்காணப்புறப்பட்டு; மடம் வேகிறபடியைக்கண்டு விஷண்ணராய் சோகார்த்தராயிருக்கிற முதலிகள்திரளிலே வந்து புகுந்து நிற்க, இந்த அத்புதத்தைக் கண்டு முதலிகளெல்லாருங்கண்டு மிகவும் ஸந்துஷ்டராயிருந் தார்கள். இந்தச் செய்தியை அந்ததேசாதிபதியான ராஜா கேட்டு ப்ரச்சந்நசாரிகளான அவர்களைக் கண்டு பிடித்து தண்டிக்கத்தேட ஸாபராதைகளான ஏகாக்ஷி ஏககரணி தொடக்கமானவர்களையு முட்பட திருவடியோடே மறுதலித்து, "பாபாநாம் வா சுபாநாம் வா", "த்ராஹித்ராஹி" இத்யாதிப்படி ரக்ஷித்த ஜநககுலஸுந் தரியைப்போலே ஸுந்தரவரமுநியான இருவரும், "தேவீலக்ஷ்மீர்ப் பவஸிதயயா வத்ஸலத்வேந சத்வம்" [தயையாலும் வாத்ஸல்யத்

நாலும் தேவரீர் லக்ஷ்மீதேவியாகிறீர். வர·சதகம்—14]. என்னும் படியான தம்முடைய பரமக்ருபையாலும் வாத்ஸல்யத்தாலும் அவர்களையும் அப்படியே ரக்ஷித்தருளினார். பின்பு அநேககாலத் திற்கு மேல் அவர்கள் ஸாந்தாநிகராயுள்ளவர்கள் கருணம்ருத ஸிந்துவான காந்தோபயந்த்ரு முநிவர்ய கமநீய சரணகமலங்களை வந்தாச்ரயித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டார்கள்.

## திருக்குருகூரிலும் திருக்குறுங்குடியிலும் கைங்கர்யங்கள்

அநந்தரம் அத்தேசத்துக்கு அதிபதியாயிருப்பானொருவன் ஜீயருடைய ஜ்ஞாநாநுஷ்டான பூர்த்தியையும் ஸர்வஜ்ஞத்வாதி களையுங்கண்டு அத்யந்தம் ப்ரவணனாய்த் திருவடிகளிலே ஆச்ர யிக்க அவனுக்கு சடகோபதாஸர் என்று தாஸ்யநாமம் ப்ரஸாதித் தருளி, அவனைக்குறித்து 'அத்ருஷ்டத்திலே முக்காற்கூறுருசியும் அதருஷ்டாநுகுணமான த்ருஷ்டத்திலே காற்கூறுருசியும பண்ணிக கொண்டு போரும்'' என்று நியமித்தருள அவனும் அபபடியே செய்து கொண்டு வர்த்தித்து, காளமேகன் திருமண்டபம் தொடங்கித் திருவீதிகள், திருமதிள்கள், திருவெல்லைகள் முதலான அனேக கைங்கர்யங்களை ஆழ்வாருகந்தருளும்படி பண்ணி அழகிய மணவாளன் திருமண்டபத்தையும் உண்டாக்கினான்.

அநந்தரம் ஜீயர் திருக்குறுங்குடியிலே சென்று அங்கே திரு வேங்கடமுடையான் என்றொரு ப்ராஹ்மணனை க்ருபை பண்ணி யருளி அவருக்குத் திருவேங்கடதாஸர் என்று தாஸ்யநாமம் ப்ர ஸாதித்தருளி அவருக்குத் திருக்குறுங்குடியில் கைங்கர்யத்தை நியமித்தருள; அவர் நின்ற நம்பி இருந்தநம்பி, கிடந்தநம்பி A என்று ஸ்ரீவாரஹபுராண ப்ரஸித்தமான நம்பிகள் மூவருக்கும் தனித்தனியே திருவிருப்புகளையும் திருமண்டங்களையு முண்டாக்கி ஸேவித்துக் கொண்டிருந்தார் இப்படி திருக்குருகூர் நம்பிக்கும் திருக்குறுங்குடி நம்பிக்கும் அனைத்தழகும் கண்டருளப் பண்ணி, மற்றும் அத்தேசத்திலுண்டான திருப்பதிகளுக்கெல்லாம் அதிசயத தையுண்டுபண்ணத்தக்க ஆச்ரிதரையும் கற்பித்தருளி, பின்பு,

---

A. திருப்பாற்கடல் நம்பி, மலைமேல் நம்பி என்று நம்பிகளை வர்க்கும் தனித்தனியே திருவிருப்புக்களும்-என்று தெலுங்குப் பதிப்பில் பாடம்,

யதீந்த்ரப்ரவணப்ரபாவம்-15

## ஜீயர் மீண்டும் கோயிலேற எழுந்தருளல்

**பிறந்தகத்திற் சீராட்டுப் பெற்றாலுந் தன்னைச்**
**சிறந்துகக்கும் சீர்கணவன் தன்னை-மறந்திருக்கப்**
**போமோ மணவாளர் பொன்னடியை விட்டிருக்க**
**லாமோ கல்வியறிந்தால்,**

என்றநுஸந்தித்து அப்போதே ஆழ்வாரநுமதி கொண்டு கோயிலேறப் புறப்படெழுந்தருளி பெருமாளை ஸேவித்துக் கொண்டு இதரமத நிரஸநபூர்வகமாக ஸ்வமதஸ்த்தாபநம் பண்ணிக் கொண்டு சேஷாவதார மென்னுமது தோற்ற பெரிய பெருமாள் பரிஸரத்திலே ஸுகமே வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்திலே,

அப்பிள்ளாரென்றொருவர் B வித்வான் வாதிகளை ஜயிக்கப்போய் வடதேசத்திலுள்ளாரை ஜயித்து எறும்பியில் அப்பாவுடனே தர்க்கிக்கவேணுமென்று புக, அப்பாவுடைய ப்ரபாவத்தைக் கண்டு வித்தராய் அவரையநுவர்த்தித்துக் கொண்டு மூன்று நாளிருந்து ஜ்ஞாதவ்யாம்சங்களைக் கேட்டறிந்து, அனுப்புவித்துக் கொண்டு புறப்பட, வழிவிடவெழுந்தருளின அப்பாவும் "இப்பால் நீர் இனி எங்குப் போகவேண்டுவது?" என்று கேட்க, 'ஸ்ரீரங்கஸ்தலத்திலே ஜீயரென்றொருவர் ப்ரஸித்தராயிருக்கிறார்; அவரைக்கண்டு வாதிக்கவேணும்.' என்ன, அப்பாவும் அத்தைக்கேட்டு இவருக்கு ஹிதமாய் "நீரப்படி செய்யவொண்ணாது; ஜீயருடைய ப்ரபாவம் நானறிவேன்; பெருமாள் கோயிலிலே கிடாம்பிநாயனார் பாடே ஸ்ரீபாஷ்யம் ச்ரவித்தார்; நாயனாரும் C நம்மை அவருடனே சிந்தனைக்கிருக்கச் சொல்ல இருந்தேன்; அவர் ஸகலார்த்தங்களையும் யுகபத் ஸாக்ஷாத்கரித்து உபந்யஸிப்பர்; அவருடனே வாதிக்க ஒருவர்க்கும் க்ஷமமன்று; அதுக்குமேலே அவர் யதீச்வரர், ஸ்ரீவைஷ்ணவதர்சநத்திற்கு அபிவ்ருத்திகரர், அவரிடத்திலே நமக்கெல்லாம் ப்ரதிபத்திக்ரமம் வேறேயிருக்கிறது, ஸமயப்ராப்தே சொல்லுகிறேன்" என்றருளிச் செய்து அனுப்பியருளி மீண்டும் எறும்பியிலே எழுந்தருளினார்.

---

B. 'அப்பிள்ளாரென்றொரு'...முதல் "எறும்பியப்பா கோயிலேற வெழுந்தருளி" வரை தெலுங்குப் பதிப்பிலில்லை C. கிடாம்பிநாயனார் பாடே பாஷ்யம் கேட்டபோது சிந்தனை பண்ணுவித்தவர் திருநாமம் ஐயைகளப்பா (பக். 81) என்றுள்ளது. இங்குள்ளது மேல் வரும் வ்ருத்தாந்தத்துடன் சேரவில்லை.

## எறும்பியப்பா ஜீயரிடம் ஆச்ரயித்தல்

அநந்தரம் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலினின்றும் திருமலைக்கு எழுந்தருளுவதாக எறும்பியிலே வர, அப்பா கண்டு அவரையழைத்தருளி ஆதரித்து, கோயில் வ்ருத்தாந்தங்களையும் ஜீயருடைய வ்ருத்தாந்தங்களையுங் கேட்டருள, அவர், "கந்தாடையண்ணன் முதலான கந்தடையய்யங்கார்களும் மற்றும் திருவாழியாழ்வார் பிள்ளை முதலான பெரியோர்களும் ஸகுடும்பமாகவும், மற்றும் அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்களும் ஜீயர் திருவடிகளில் ஆச்சயித்தார்கள்; ஜீயருடைய வைபவம் உத்தரோத்தரம் அதிசயமாக நடக்கிறது" என்று விண்ணப்பஞ்செய்ய, திருவுள்ளமுகந்தருளி, அவருக்கு பஹுமானஞ் செய்தருளி அற்றைக்கு அவரை நிறுத்திக்கொண்டு, "நீர் சொன்னதெல்லாம் ஸாமாந்யமாகக் கேட்டிருந்தோம்; அந்த வ்ருத்தாந்தங்களையும், ஜீயர் திருநகரிக்கெழுந்தளி திரும்பியெழுந்தருளின செய்தியையும் விஸ்தாரமாக வருளிச்செய்யும்" என்று கேட்டருளி. அவரை, பிற்றைநாள் திருவேங்கடமுடையானை ஸேவித்து சீக்கிறமாக வரச் சொல்லி நியமித்து 'நாமும் பயணமாயிருக்கிறோம், கூடப்போவோம்" என்றருளிச்செய்துவிட. பின்பு தமது திருத்தமப்பனாருக்கு இச்செய்தியையறிவிக்க' அவரும், "ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிக்க வேணுமென்று ருசியுண்டுபோலேயிருக்கிறது; இனிமேல் அது நன்றன்றுபோலே தோற்றுகிறது; வேணுமாகில் அவரிடத்தில் ப்ரதிபத்தி பண்ணி ஜ்ஞாதவ்யாம்சமுண்டானால் அநுவர்த்தித்துக்கேட்டு ஸ்ரீபாத தீர்த்த தளிகை ப்ரஸாதஸ்வீகாராதிகளைப் பண்ணிவாரும்" என்ன, அந்த ஸ்ரீவைஷ்ணவரும் திருமலையில் நின்றும் வர, அவரைக் கூட்டிக் கொண்டு எறும்பியப்பா கோயிலேற வெழுந்தருளி நம்பெருமாளைத் திருவடிதொழுது, பெரிய கந்தாடை அண்ணன் ஆப்தபந்துவாகையாலே அவர் திருமாளிகையிலே அமுதுசெய்தருளி அவருடனே ஜீயர் ஸந்நிதிக்கெழுந்தருள, ஜீயரும் இவரைப் பெரியவித்வான் என்றறிந்து, பரத்வப்ரதிபாதகமான *உயர்வறவுயர்நல ப்ரவேசத்தை உபந்யஸித்துக்காட்டியருள. அப்பா அதுகேட்டு ஆஸ்சர்யப்பட்டு 'ஜீயருக்குத் தமிழொழிய ஸம்ஸ்க்ருதத்தில் மிகவும் பரிசயமில்லை யென்று கேட்டிருந்தோம்; இவர் உபயவேதாந்தத்திலும் மிக நிபுணரயிருக்கிறார்" என்று போரப்ரீதராயிருக்க ஜீயர் இவரை மடத்தில் அமுது செய்ப்ப்ரார்த்திக்க, அவரும்,

**யத்யந்நம் யதிபாத்ரஸ்தம் யதிநா ப்ரேஷிதம்ச யத் |**
**அந்நத்ரயம் நபோக்தவ்யம் புக்த்வா சாந்த்ரயணம் சரேத் ||**

[ஸந்யாஸிகளுடைய அந்நமும், ஸந்யாஸிகளுடைய பாத்ரத்திலுள்ள அந்நமும், ஸந்யாஸிகளால் அனுப்பப்பட்ட அந்நமும் இப்படி மூன்றும் புசிக்கத்தக்கவையன்று . அப்படி புசித்தானாகில் சாந்த்ராயண வ்ரதத்தையநுஷ்டிக்கக்கடவன்] என்கிற ஸாமாந்யசாஸ்த்ரைகநிரதராய், 'த்ருவரேல் (திருமாலை-41), ''ப்ரார்த்தயேத்'' என்கிற விசேஷ சாஸ்த்ரஜ்ஞாநரஹிதராய் ஜீயர் திருவடிகளிலாச்ரயியாமல் மறுத்தெழுந்தருளி A அண்ணனைப் போரவெறுத்து அவர் திருமாளிகைக் கெழுந்தருளாமல் அப்போதே கோயிலிலிருந்து புறப்பட்டுத் தம்மூரேற வெழுந்தருளி;

தமது திருவாராதநமான சக்ரவர்த்தி திருமகனுரைத் திருவடி விளக்குவதாகக் கோயிலாழ்வாரைத்திருக்காப்பு நீக்கப்புக; அது அவிசால்யமாய், ஸக்லோபாயங்களாலும் நீக்கப் போகாமையாலே மிகவும் து:கிதராய் அமுதுசெய்யாமலே கண்வளர்ந்தருள அவ்வளவில் அப்பாவின் ஸ்வப்நத்திலே

> ஸேஷ: ஸ்ரீமாநஜநிஹிபுரா ஸௌம்யஜாமாத்ருயோகீ
>
> போகீபூதஸ் ததநுபகவாந் ராகவஸ்யாநுஜந்மா |
>
> பூத்வாபவ்யோ வரவரமுநிர் பூயஸாபாஸமாந:
>
> ரக்ஷத்யஸ்மாந் ரகுகுலபதே ராஸ்தி்தோபத்ரபீடம் ||
>
> பூத்வாபவ்யோ வரவரமுநிர் போகிநாம் ஸார்வபௌம:
>
> ஸ்ரீமத்ரங்கே வஸதிவிஜயீ விஸ்வஸம்ரக்ஷணார்த்தம் |
>
> தத்வம் கந்தும் வ்ரஜ ஸரணமித்யாதிஸத் ராகவோயம்
>
> ஸ்வப்நே ஸோயம் வரவரகுருஸ் ஸம்ஸ்ரயோ மாத்ருஸாநாம் ||

[இந்த மணவாள மாமுனிகள் முதன்முதலில் கைங்கர்யஸ்ரீயை யுடைய திருவனந்தாழ்வானுக இருந்தார். அவ்வரவரசனே பின்பு இராமபிரானுடைய தம்பியான லக்ஷ்மண பகவானுகப்பிறந்தான். பின்பு ஆச்ரித ஸுலபரான மணவாள மாமுனிகளாக அவரே அவதாரம் செய்து சக்ரவர்த்தி திருமகனுடைய மங்களமான ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து நம்மை ரக்ஷிக்கிறார்.]

---

A. ''அண்ணனை வெறுத்தருளி'' என்பது தெலுங்குப் பதிப்பிலில்லை. தமது நெருங்கிய பந்து ஒருவர் மாமுனிகளை ஆச்ரயித்தது இவருக்கு இசைவில்லை போலும்.

"திருவனந்தாழ்வான் ஆச்ரித ஸௌலபரான மணவாள மாமுனிகளாக அவதரித்து லோகத்தை ரக்ஷிப்பதற்காக ஸ்ரீரங்கத்தில் எல்லோரினும் மேம்பட்டு வாழ்கிறார். தத்வஜ்ஞானம் பெறுவதற்காக அவரை நீர் தஞ்சமாகப் பற்றுவீராக" என்று இந்த சக்ரவர்த்தி திருமகன் அப்பாவுக்கு ஸ்வப்நத்திலே உத்தரவிட்டருளினார். அப்படிப்பட்ட மணவாள மாமுனிகள் நம்மைப் போன்றவர்களுக்கு சரணமடையத்தக்கவராகிறார்]

என்கிறபடியே அவர் திருவாராதநமான சக்ரவர்த்தி திருமகன், "நீர் சேஷாவதாரமான ஜீயர் திருவடிகளிலே அபசாரப்பட்டு வந்தீர்; "பகவத் பக்தஸம்புக்த பாத்ர சிஷ்டோதநாதராத்—கோபிதர்ஸீஸௌதோப்யாஸீதம்ருதோ வை நாரதோऽபவத்" [பகவத்பக்தரொருவர் அமுது செய்த பாத்திரத்தில் மிச்சமான ப்ரஸாதத்தை அன்போடு உண்டதனால், வேசியின் மகனொருவன் கூடதான் இறந்த பின்பு மறுபிறவியில் நாரதராகப் பிறந்தான்,] என்று ஸ்ரீநாரதபகவான் உத்பத்தி கேட்டறியீரோ? ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயித்து அபராதக்ஷாமணம் பண்ணிக் கொண்டு வந்தாலொழிய உம்முடைய கையினாலே நாம் திருவராதநங் கொள்ளக் கடவோமல்லோம்; சடக்கெனப் போகீர்" என்று நியமித்தருள; அப்பாவும் திருக்கண்களை விழித்து விஸ்மிதராய் ஸ்வப்நத்தை விச்வஸித்து அப்போதே புறப்பட்டுக் கோயிலேறச் சென்று புக்கு, "அங்கேகவேரகந்யாயாஸ்துங்கே புவநமங்களே .. ரங்கேதாம்நி ஸுகாஸீநம் வந்தே வரவரம்முநிம்"— [திருக்காவேரி மத்யத்திலே, உலகங்களுக்கு மங்களாவஹமாய் விளங்கும் திருவரங்கத்திருப்பதியில் இனிதாக வெழுந்தருளியுள்ள மணவாள மாமுனிகளை அடிபணிகிறேன்] என்றநுஸந்தித்கொண்டு செல்ல; அவ்வளவிலே ஜீயரும் பெருமாளை ஸேவிப்பதாகப் புறப்பட்டு எதிரே எழுந்தருளக்கண்டு அத்யாதரத்துடனே 'தண்டவத்ப்ரணமேத்பூமாவுபேத்ய குருமந்வஹம்" [நாடோறும் ஆசாரியனைக் கிட்டி தரையில் தடிபோல் விழுந்து ஸேவிக்கக்கடவன்] என்கிறபடியே திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பிக்க, ஜீயரும் அவரை 'லோசநாப்யாம் பிபந்நிவ' என்கிறபடியே நிரீக்ஷணஸுதாஸந்துக்ஷிதாரம்படி குளிர நோக்கிக் கொண்டு நிற்க, அப்பாவும், அப்போது தம்மை விஷயீகரிக்கப் புறப்பட்டருளின ஜீயரின் திவ்ய மங்களவிக்ரஹ ஸௌந்தர்யத்திலே யீடுபட்டு, "மயிப்ரவிஷ்டி ஸ்ரீமந்" என்று தொடங்கி மயிப்ரஸாதப்ரவணம்" (பூர்வதினசர்யை) என்னுமளவாக அநுஸந்தித்துக் கொண்டு நிற்க;

ஜீயரும் இவருடைய உஜ்ஜீவநத்திலேயூன்றிப் போமவராகை யாலே மீண்டும் உள்ளே புக்கு, ஆத்மலாபத்தைப்பார்க்கிலும் வேறொரு உயர்ந்த லாபமில்லை யென்றறுதியிட்டு, இவரை யங்கீ கரிக்கையிலுள்ள நசையாலே மதுரோதார பாஷணம் பண்ணி யிருந்து, ஸ்ரீபாதத்து முதலிகளை ''பெருமாளை ஸேவித்து வாருங் கோள்'' என்றனுப்பியருள, அவர்களும் பெருமாளை ஸேவித்து மீண்டுவர ஜீயரும்; அவர்களுடனே ''பெருமாள் இன்னவொப் பனையோடே யெழுந்தருளியிருக்கிறார்; இன்னபடி அமுதுசெய்த தருளினார்'' என்றருளிச் செய்ய, அவை ஒத்திருக்கையாலே, எல் லாரும் ஜீயருடைய ஸர்வஜ்ஞதையைக்கண்டு விஸ்மயப்பட் டார்கள். அப்பா, நெடுந்தூரத்திலிருந்து வந்தவராகையாலே வழி யிலுண்டான விடாயெல்லாந்தீர பசியன் சோற்றைக் கண்டாப் போலே ''பவந்தமேவ நீரந்த்ரம் பச்யந்வச்யேந சேதஸா'' [தேவரீ ரையே, அடியேன் வசப்பட்ட மனத்தோடு, இடை விடாமல் ஸேவித்துக் கொண்டு] என்கிறபடியே வைத்த கண் வாங்கமாட் டாதே தாரக போஷகபோக்யங்களெல்லாம் ஜீயருடைய திவ்ய மங்களவிக்ரஹாநுபவமேயாக அநுபவித்துக் கொண்டு போந்தார்.

மற்றை நாள் அபரராத்திரியிலே அண்ணன் முதலானார்கள் ஜீயர் திருப்பள்ளியறை வாசலிலே எழுந்தருளி

**ரவிருதயத்யதாபி நவிநஶ்யதிமே திமிரம்**
**விகஸதி பங்கஜம் ஹ்ருதயபங்கஜமேவ நமே |**
**வரவரயோகிவர்ய! வரணீயகுணைகநிதே**
**ஜயஜயதேவ! ஜாக்ரஹி ஜநேஷு நிதேஹி த்ருஶம் ||**

[சூரியன் உதித்தபோதிலும் அடியேனுடைய அகவிருள் நீங்கவில்லை; குளங்களில் தாமரை மலர்கள் மலராநின்றன; அடியேனுடைய மனமான தாமரை மலரவில்லை; விரும்பத்தக்க கல்யாண குண நிதியே! ஸ்வாமிந்! மணவாள மாமுனியே! விஜயியாயெழுந்தருளி யிருக்கவேணும்; திருப்பள்ளி உணர்ந்தருளவேணும்; ஆச்ரிதஜனங் களைக் கடாக்ஷித்தருள வேணும்] என்று திருப்பள்ளியுணர்த்த, திருப்பள்ளியுணர்ந்து, குருபரம்பராபூர்வகமாக ரஹஸ்யத்ரயத் தையும் அநுஸந்தித்தருளி அதில் பரவ்யூஹாந்தர்யாமி குணங் களைத்திருமந்த்ரத்தாலும், விபவஸௌலப்யாதிகுணங்களை சரமச் லோகத்தாலும், அர்ச்சாவதார குணபூர்த்தியை த்வயத்தாலும் அநுஸந்தித்தருளி, பின்பு,

**அயம்புநஸ்ஸ்வயம்வ்யக்தாநவதாராநநுத்தமாந் |**
**நிதாய ஹ்ருதிநிரந்தரம் நித்யாயந் ப்ரத்யபுத்யத ॥**
**விஸேஷேண ஸிஷேவேச ஸேஷபோக விபூஷணம் |**
**அமேயமாதிமம் தாம ரமே ஸம் ரங்கஸாயிநம் ॥**
**A த்யாயம் த்யாயம் வபுஸ்தஸ்ய பாயம் பாயம் தயோததிம் |**
**காயம் காயம் குணாநுச்சைஸ் ஸோயம் தத்பூயஸாந்வபூத்**

*[இம்மணவாள மாமுனிகளோவென்னில் ஸ்வயம்வ்யக்தங்களான அர்ச்சாவதாரங்களை முறையே சிந்தையில் வைத்து இடைவிடாமல் த்யானித்துக் கொண்டே திருக்கண்விழுத்தருளினார். சிறப்பாக, திருவனந்தாழ்வானுடைய திருமேனிக்கு ஆபரணமும் அளவிடற்கரியதும் ஸ்ரீரங்கத்தில் துயில்கொண்டிருப்பதுமான ச்ரிய:பதியென்னும் உயர்ந்த தேஜஸ்ஸை த்யானம் செய்தருளினார். அத்திருவரங்கநாதனுடைய திருமேனியை த்யானித்துச்கொண்டும் அவனுடைய கருணையாகிய கடலைப் பருகிக் கொண்டும் அவன் குணங்களைப் புகழ்ந்து பாடிக் கொண்டும் இம்மாமுனிகள் முற்கூறிய தேஜஸ்ஸாகிய ஸ்ரீரங்கநாதனை மறுபடியும் மறுபடியும் அனுபவித்தார்]*

*என்கிறபடியே, அர்ச்சாவதாரத்துக்கு வேர்ப்பற்றான பெரிய பெருமாளுடைய விக்ரஹகுணங்களை விாசஷித்தநுஸந்தித்தருளி அதினுடைய பராகாஷ்டையான யதீந்த்ரசரணத்வந்த்வ ப்ராவண்யத்தோடே நீராடி நித்யாநுஷ்டானங்களையுஞ் செய்தருளித் திருமண்காப்புச் சாத்தியருளி; தம்முடைய திருவாராதனமான ஸ்ரீரங்கராஜர் திருமுன்பே எழுந்தருளி, தண்டன்ஸமர்ப்பித்து*

**ஆத்மஸ்வருபயாதாத்ம்யம் ஆசார்யாதீநதைவயத் |**
**ஆம்நாயாநாம் ரஹஸ்யந்த தகிலேப்ய: ப்ரகாஸயந் ॥**
**ஸர்வம்பதிபதேரேவ குர்வந்நாதே ஸ பூர்வகம் |**
**க்ருத்யாக்ருத்யேஷு கர்த்ருத்வம் க்ருதீகிமபி கஸ்ப்ருஸந் ॥**
**ததந் தஸ்ய முகோல்லாஸம் சிகீர்ஷந்நேவகேவலம்**

*[யாதொரு ஆத்மஸ்வருபத்தின் உண்மையான தன்மையானது ஆசார்யனுக்கே பரதந்த்ரமாயிருப்பதோ, ச்ருதிகளில் ரஹஸ்யமாயுள்ள அந்த ஆசார்ய பாரதந்த்ர்யத்தை ப்ரகாசிப்பிப்பவராய், கேவலம் அவ்வாசார்யனுடைய (எம்பெருமானாருடைய) முக*

---

A இந்தச்லோகம் தெலுங்குப்பதிப்பில் இல்லை.

மலர்த்தியையே விரும்பிச் செயல்படுபவராய் அவ்யதீந்த்ரரின் நியமனப்படியே எல்லாவிதமான கைங்கர்யங்களையுஞ் செய்து கொண்டு 'கார்யாகார்யங்களில் 'நாம்செய்தோம்' என்ற எண்ணம் சிறிதுமில்லாதவராய் தந்யராய் எழுந்தருளியிருந்தார்] என்கிறபடி தம்முடைய பாரதந்த்ர்யத்துக்குச் சேர்ந்த ப்ரதிபத்தியுடனே திருவாராதநத்தையும் செய்தருளி;

அநந்தரம் ஸந்நிதிஸ் நம்பமூலபூதல பூஷணமாய் எழுந்தருளியிருக்க, அவ்வளவிலே அப்பாவும் அண்ணனைப் புருஷகாரமாகக் கொண்டு'' அடியேனை அங்கீகரித்தருள வேண்டும்'' என்ற பேக்ஷிக்க அப்படியே அங்கீகரித்தருளி, திருவிலச்சினை முதலான பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து விசேஷகடாக்ஷம் செய்தருளி, திருவடிகளாலே அவருடைய திருமுடியையலங்கரித்தருளி, பின்பு அத்தலைக்கு மங்களாசாஸனபரராக வேணுமென்னும் திருவுள்ளக்கருத்தோடே மந்த்ரத்ரயத்தையும் ப்ரஸாதித்தருளி, அவரையும் அந்தரங்கராக்கிக் கொண்டு அவருடன் கூட பெருமாளை மங்களாசாஸனம் பண்ணுவதாகப் புறப்பட்டருளி நான்முகன் திருக்கோபுரத்தைத் தண்டன் ஸமர்ப்பித்து மெள்ள வெழுந்தருளி உள்ளே புக்கு

**தேவீகோதாயதிபதி ஶடத்வேஷிணௌ ரங்கஶ்ருங்கம்**

**ஸேநா நாதோவிஹகவ்ருஷபஶ் ஸ்ரீநிதிஸ்ஸிந்து கந்யா |**

**பூமாநீளாகுருஜநவ்ருத: பூருஷஶ்சேத்யமீஷாம்**

**அக்ரேநித்யம் வரவரமுநேரங்க்ரியுக்மம் ப்ரபத்யே**

[ஆண்டாள், எம்பெருமானார், நம்மாழ்வார், ஸ்ரீரங்கவிமானம், சேனை முதலியார், பக்ஷிராஜனும் பெரிய திருவடி ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்கநாச்சியார், பூமிதேவி, ஸ்ரீதேவி நீளாதேவி ஆழ்வார்கள் ஆகியவர்களால், சூழப்பட்ட பரமதநாதன். என்னும் க்ரமத்திலே மங்களாசாஸனார்த்தமாக எழுந்தருளி ஸேவை ஸாதித்தருளும் மணவாள மாமுனிகளின் இணையடிகளை தினமும் தொழுகின்றேன்] என்கிற அடைவிலே ஸேவித்து தத்தத்ஸ்தலோசித *மங்களாசாஸனங்களைப் பண்ணி, பெரிய பெருமாளையும் நம்பெருமாளையும் திருவடி தொழுது அநந்தரம்

**உபேத்ய புநரப்யேஷ நிஜமேவ நிவேஶநம் |**

**நிவேத்ய நிகிலம் தத்ர யதீந்த்ராய நமஸ்யயா ||**

[இந்த மணவாள மாமுனிகள் மீண்டும் தமது மடத்துக் கெழுந்தருளி அங்கு கோயில் கொண்டெழுந்தருளியுள்ள யதிராஜரிடம் நடந்ததையெல்லாவற்றையும் தெண்டனிட்டு விஜ்ஞாபித்து] என்கிறபடியே மீண்டும் மடமே யெழுந்தருளி அங்கு எழுந்தருளியிருக்கும் உடையவர் ஸந்நிதியிலே ஸர்வமும் விஜ்ஞாபித்து. திருமலையாழ்வாரிலே தத்பாதச்சாயையாகப்ரதிபத்தி பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருந்து, இவர்க்கு [எறும்பியப்பாவுக்கு] ஸம்சாரநிவர்த்தகமாயிருக்கிற ஸ்வதிவ்யசரணாம்போஜ ஸ்பர்ஶஸம்பந்த ஸௌரபமான ஶ்ரீபாததீர்த்தத்தையும் ப்ரஸாதித்தருளி

அத மாத்யாஹ்நிகம் க்ருத்யம் க்ருத்வா ஸத்வோத்தரம் முநி. |
ஆராத்ய விதிவத்தேவமங்வபூத் ரங்கபூஷணம் ॥
ததஸ்தந் முகஸம்ஸ்பர்ஶரஸேந ஸுகந்திநா |
ஶுசிநா ஸுகுமாரேண ஸத்வஸம்ஶுத்தி ஹேதுநா ॥
பக்திபூர்வம் ப்ரபூதேநபோஜ்யேந பகவத்ப்ரியாந் |
தத்பரஸ்தர்ப்பயாமாஸ ததீயப்ரேம வ்ருத்தயே ॥
ஆத்மாநமாத்மநாபஶ்யந் போக்தாரம் புருஷம்பரம் ॥
அநுயாகம் யதாயோகம் நிஸ்ஸங்கோ நிரவர்த்தயத் |

[பிறகு பரமஸாத்விகரான மணவாளமாமுனிகள் மத்யாஹ்ந அநுஷ்டானங்களை முடித்து ஶ்ரீ அரங்கநகரப்பனுக்கு முறைப்படி திருவாராதனம் கண்டருளப்பண்ணி, குணநுபவம் பண்ணிக் கொண்டிருந்தார். பின்னர் அவ்வெம்பெருமானுடைய திருப்பவள ஸம்பந்தத்தினால் அமுதமாய், பரிமளிதமாய் துயதாய், மென்மையுடைத்தாய், ஸத்வஸ்வபாவத்துக்கும் மனத்தூய்மைக்கும் முக்கியகாரணமாயிருப்பதான, ஸம்ருத்தமான பகவத் ப்ரஸாதத்தால் எம்பெருமானடியார்களை ததீயபக்திபூர்வமாக, தத்கைங்கர்யபரராக அவர்களிடம் ப்ரேமம் வளர்வதற்குறுப்பாக ஆராதித்தார்; தாம் (ப்ரஸாதத்தை) அமுது செய்தருளுவதனால் தம்மூலமாக அந்தர்யாமியான பரம புருஷனையே போக்தாவாக அத்யவஸித்து அமுது செய்வதில் நேரே தொடர்பில்லாதமனதுடன் பிக்ஷை யேற்றருளினர்] என்கிறபடியே பெருமாளமுது செய்தருளினர். அநந்தரம் தாமும் அமுது செய்தருளி, "போனகஞ்செய்தசேடந்தருவரேல் புனிதமன்றே" என்னும்படி ஸுபாவனமான திருத்தளிகை ப்ரஸாதம் ப்ரஸாதிக்கப் பெற்று இவர் (அப்பா) க்ருதார்த்தராயெழுந்தருளியிருக்க; பின்பு,

ததஸ்ஜலமுலஜீத ஶ்யாம கோமளவிக்ரஹே |
பீதகௌஶேயஸம்வீதே பீநவ்ருத்த சதுர்புஜே ॥
ஶங்கசக்ரகதாதாரே துங்கரத்நவிபூஷணே |
கமலா கௌஸ்துபோரஸ்கே விமலாயதலோசநே ॥
அபராதஸஹே நித்யம் த ஹராகாஶகோசரே |
ரேமே தாம்நி யதாகா ஶம் யுஞ்ஜாநோத்யாந ஸம்பதா ॥
ஸதத்ர நிஶ்சலம் சேத, சிரேண விநிவர்த்தயந் |

[பிறகு நீர் கொண்ட மேகம்போல கருமையாயழகான திரு மேனியில் பீதாம்பரமணிந்தவனுய, பருத்துதிரண்ட நான்கு திருத்தோள்களையுடையனுய், திருவாழி திருச்சங்கு கதைகளுக்கு இருப்பிடமாய், சிறந்த ரத்நமயமான திருவாபரணங்களாலலங்கரிக்கப்பட்டவனுய், பெரிய பிராட்டியாரையும் ஸ்ரீகௌஸ்துபத்தையும் திருமார்பில் தரித்தவனுய் நிர்மலமான நீண்ட பெரியவாயகண்களையுடையனுய், ஆச்ரித தபராதங்களைப் பொறுப்பவனுய் எப்போதும் சேதநஹ்ருதயமத்யத்தில் வாஸம் செய்பவனுய் பரமப்ராப்யனை பரமபுருஷனிடம், தமது த்யான ஸம்ருத்தியினுல் ஒன்று பட்டு லயித்து யதாவகாசம் தமது மடத்தில் மகிழ்ந்திருந்தார். அப்பெருமானிடத்தில் ஸ்திரமாயிருந்த தமது மனஸ்ஸை வெகுகாலம் கழித்து மீட்டு] என்கிறபடியே ஶுபாஶ்ரயமான அந்தர்யாமி விஷயத்திலே நிமக்நஹ்ருதயத்தையுடையராய் அத்தை ஒருபடி மீட்டு, யதீந்த்ரப்ரவணமாக்கி, யதிராஜவிம்சதியையநுஸந்தித்தருளி, பின்பு ஸ்ரீவசநபூஷணவாக்யங்களுக்கு வ்யாக்யாநம் ப்ரஸாதித்தருளி, ஸாயங்காலமானவாறே ஸர்வாநுஷ்டானங்களையும் முன்பு போலவே செய்தருளி, மீளவும் ஸந்நிதியிலேயெழுந்தருளி எல்லாவுபசாரங்களையும் கண்டருளப்பண்ணி, திருப்பல்லாண்டையநுஸந்தித்து மங்களாஸசாநம் பண்ணி, பின் கண்வளர்ந்தருளுவதற்காக

தத꞉ கநகபர்யங்கே தருணத்யுமணித்யுதௌ |
ரத்நதீபத்வயோதஸ்த மஹதஸ்ஸ்தோமஸ மேதிதே ॥
ஸோபதாநே ஸுகாஸீநம் ஸுகுமாரே வாரஸநே |
அநந்யஹ்ருதயைர்த்தந்யை ரந்தரங்கைர் நிரந்தரம் ॥
ஶுஶ்ருஷமாணை꞉ ஶுசிபி꞉ த்வித்ரைர்ப்ருத்யை ருபாஸிதம் |
ப்ராசாமாசார்யவர்யாணும் ஸூக்திவ்ருத் த்யநுவர்ணநை꞉ ॥
வ்யாசக்ஷாணம் பரம்தத்வம் வ்யக்தம் மந்ததியாமபி |

(பிறகு உச்சிப்பட்ட சூரியன்போல ப்ரகாசமுடைத்தாய், ரத்நமயமான இருதிபங்களினின்றும் உண்டான ஒளியினால் மிகவிளங்கா நின்ற பொன்னாலான கட்டிலில் தலையணையுடன் கூடிய மென்மையான அழகிய ஆஸனத்தில் இனிதேயெழுந்தருளியிருப்பவரும். அந்த மாமுனிகளல்லது வேறிடத்தில் செல்லாத மனதையுடையராய் பாக்யமுடையரான அந்தரங்கராய் கைங்கர்யபரரான இரண்டு மூன்று சிஷ்யர்களால் இடைவிடாமல் ஆட்செய்யப்படுமவராய், பூர்வாசாரியர்களுடைய ஸ்ரீஸூக்திகளையும் அநுஷ்டானக்ரமங்களையும் அருளிச்செய்வதால் மந்தமதிகளுக்கும் பரதத்வத்தைதெளிவாயருளிச் செய்து கொண்டிருக்கும் மாமுனிகளை) என்கிறபடியே திருப்பள்ளியறையிலேபுக்கு திருப்படுக்கைலே சாய்ந்தருளி எல்லார்க்கும் தெரியும்படி பூர்வாசாரியர்கள் போதமநுட்டானங்கள் கூறுவாராக வெழுந்தருளியிருக்கிற, போக்யதையை அநுபவித்து அவ்வனுபவத்துக்குத் தேசிகரானவர்களோடே கூட அஸ்தாநேபயசங்கிகளாய்

மங்களம் ரம்யஜாமாத்ருமு நிவர்யாய மங்களம் |
மங்களம் பந்நகேந்த்ராய மர்த்யரூபாய மங்களம் ||
ஏவம்மங்களவாணீபி ரேஷம் ஸாஞ்ஜலிபந்தநா: |
ஸத்க்ருத்ய ஸம்ப்ரஸீதந்தம் ப்ரணேமு: ப்ரேம நிர்ப்பரா: ||

(ஆசார்யச்ரேஷ்டரான மணவாளமாமுனிகளுக்கு மங்களம் மங்களம், மனிதவுருவில் அவதரித்துள்ள திருவனந்தாழ்வானை மாமுனிகளுக்கு மங்களம், மங்களம்; இப்படி மங்கள வார்த்தைகளால் ப்ரஸந்நரான இந்த மணவாள மாமுனிகளை பக்தி நிறைந்த சிஷ்யர்கள் கைகூப்பிக் கொண்டு ஸேவித்தார்கள்) என்கிறபடியே மங்களாஸாசனம் பண்ணி ஸாஞ்ஜலிஹஸ்தராய் ஸாஷ்டாங்கதீர்க்க ப்ரணாமாதிகளைப் பண்ணிப்ரேமநிர்ப்பரராய் ஸேவித்துக் கொண்டிருக்க, "அதப்ருத்யாநநுஜ்ஞாப்ய" என்கிறபடியே அவர்களை விடைகொடுத்தனுப்பியருளி

ததஸ்ஸச்சீக்ருதம் ப்ருத்யை: பயநீயம் விபூஷயந் |
யுயோஜ ஹ்ருதயம்தாம்நி யோகித்யேய பதத்வயே ||

(பிறகு சிஷ்யர்களால் ஸித்தப்படுத்தப்பட்ட படுக்கையில் சயனித்து, யோகிகளால் த்யானிக்கத்தக்க திருவடிகளையுடைய பரமபுருஷனிடத்தில் மனதை சேர்ப்பித்தார்) என்கிறபடியே *படுத்தபைந்நாகணையாயிருக்கிற தாமும் ஒரு படுக்கையைப்

பற்றிக் கண்வளர்ந்தருளுவதற்காக யோகித்யேயமுமாய் "ரங்காஶ்ரயம் மமஶுபாஶ்ரயமாஶ்ரயாணி" என்னும்படி ஶுபாஶ்ரயமுகமாய் *அணைப்பார் கருத்தனுவானவெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை மணவாள யோகியானதாம் மனத்திற் கொண்டு *நெஞ்சத்துப் பேராது நிற்கும் பெருமானாய் ஸுப்ரதிஷ்டிதனாயெழுந்தருளியிருக்கிற சேஷசாயியான ஸர்வேச்வரன் திருவடிகளிலே வைத்த சிந்தையையுடையராய் நிர்ப்பரராய் கண்வளர்ந்தருளப்புக்கார்.

**இத்தம் திநேதிநே குர்வங்வ்ருத்திம் பத்யுः ப்ரஸாதிநீம் |**
**க்ருதீர் கடாபதம் சக்ரே ப்ராக்தநீம் தத்ர வர்த்தநீம் ॥**
**இத்தம் திநேதிநே குர்வங் வ்ருத்தம் பர்த்துः ப்ரஸாதிநீம் |**
**க்ருதி கண்டா பதஞ்சக்ரே ப்ராக்த்நீம் தத்ரவர்த்தநீம் ॥**

(இப்படி ஸ்வாமியான மணவாள மாமுனிக்கு திருவுள்ளத்துக்குகப்பான கைங்கர்யத்தை நாடோறும் செய்து கொண்டு அவ்விடத்தில் திநசர்யையை. க்ரந்தமாகச் செய்தருளி அதன் மூலமாம் அந்த க்ரந்தத்தை எல்லோரும் அனுஸந்திக்கும்படி ராஜமார்க்கக போலே ப்ரஸித்தமாக்கினார்.) என்கிறபடியே எழுந்தருளியிருக்கிற நாளிலே நாடோறும் ஸந்நிதியிலே கைங்கர்யம் பண்ணிக்கொண்டுசெய்து கொண்டு அப்பா எழுந்தருளியிருக்க; A பின்புயர்

**வரவரமுநிவர்யபாதயுக்மம் வரதகுரோः கரபல்லவத்வயேந |**
**ரஹஸி ஶிரஸிமே நிதீயமாநம் மநஸிநிதம்ய நிதாநவாந் பவாமி ॥**

(கந்தாடையண்ணனுடைய இருதளிரன்னகைகளாலும் ஏகாந்தத்தில் அடியேனுடைய சிரஸில் வைக்கப்பட்ட மணவாள மாமுனிகளின் திருவடித் தாமரைகளை மனதில் கொண்டு ஸத்தை பெற்றவனாகிறேன்) என்று இவர் ஹ்ருஷ்டராம்படி தம் திருவடிகளைப்ரஸாதித்து, "ஸஞ்சரேறப்போம்" என்று விடைகொடுத்தருள அப்பாவும் பெருவருத்தத்தோடே ஸஞ்சரேறவெழுந்தருளினார்.

---

A. "பின்பு ஜீயர்" முதல் "ஸஞ்சரேறவெழுந்தருளினார்." வரை தெலுங்குப் பதிப்பில் அதிகப்பாடம். ஸப்தகோத்ர வ்யவஸ்தை: அதன்பின் காணும் அப்பிள்ளை அப்பிள்ளார் ஆச்ரயணமும்தெலுங்குப் பதிப்பில்லிலை. உத்தமநம்பி ஜீயரிடம் அபசாரப்பட்டது சடகோபக்கொற்றி என்பாளுக்கு அநுரக்ஹம், இவை தெலுங்குப் பதிப்பில் "ஸஞ்சரேறவெழுந்தருளினார்". என்பதை தொடர்ந்து காணப்படுகின்றன. இவற்றை இப்பதிப்பில் பின்னர் காணலாம்.

## நாயனார் ஸப்தகோத்ர வ்யவஸ்தை செய்தருளியது

இவர்க்கு அநுபந்திகளுமாய் கந்தாடையண்ணனுக்கு ஸம்பந்திகளுமாயிருப்பார், கந்தாடை நாயன் தேவிகளைப் பிறந்தகத்தினின்றும் புக்ககத்திற்கு அழைத்துக் கொணடுவருமளவில் அப்ராப்தவாஹநத்திலே ஏற்றிக் கொண்டு வர, அப்பா அத்தைக்கண்டு ஜீயர் ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்ய, திருவுள்ளங்கலங்கி உடனே அண்ணனை அழைத்தருளி "இப்படியாகாது, அவர்களையும்பெண்ணையும் த்யஜிக்கிறது தகுதி" என்ன "அவர்களுக்கு ஸ்வரூபசிக்ஷா பூர்வகமாக ஹிதோபதேசம் செய்யலாகாதோ? என்ன, "அப்படியாகாது, எம்பாவுக்கு ஆப்தஸம்பந்திகளான துர்மாநிகள்" என்ன, "ஆகில்விடும்" என்ன, பின்பு முதலியாண்டான் திருவம்ஶ்யரான கந்தாடையண்ணன் முதலான கந்தாடை அய்யங்கார்களையும் அவர்களுடைய ஸம்பந்திகளையும் கூட்டி விசாரித்து அவர்களை க்ருபை பண்ணியருளி ஹிதோபதேசஞ் செய்தருளி, ஸப்தகோத்ரவ்யவஸ்தை செய்தருளி "இந்த ஸப்தபர்வஸ்த்ருக்கும் பரஸ்பரஸம்பந்தங்களும் அப்யவஹாராதிகளுமாம்படி மர்யாதைகட்டி இன்ன கோத்ரத்தாரின்னாரென்று பட்டோலை கொண்டு திருமங்கைமன்னன் திருமாளிகையில் சிலாசாஸனமுமிடுவித்து விசேஷித்து கந்தாடையய்யங்கார்களுக்கு விலக்ஷணப்ரவரமும் ஸாதித்து அப்பா திருவுள்ளம் மிகவும் ப்ரஸந்நமாம்படி செய்தருளி எழுந்தருளியிருக்கிற காலத்திலே ஜீயர் திருவடிகளிலே ஆநுகூல்யமில்லாமை மாத்ரமன்றிக்கே ப்ரதிகூலித்து வாக்துருக்திகளும் பண்ணினவாகள், தரித்ரராய் அபக்யாதி பாத்ரபூதராய் அநர்த்தப்பட்டுப் போனார்கள்

பின்பு ஜீயரும் முதலிகளும் ஒரு நாள் *ஆலின்மேலமர்ந்தான் என்கிற பாட்டுக்கு அர்த்தசிந்தநம் பண்ணிக் கொண்டிருக்கிறவளவிலே, ஒன்று ஆல வ்ருக்ஷமாய், மற்றதற்கு பத்ரபரமாய் அர்த்தம் சொல்ல, "ஆல் என்று இலையைச் சொல்லாது" என்று ஜீயரருளிச்செய்ய; பாலராய் ஒத்த பருவத்தாரோடே க்ரீடாஸக்தராயிருக்கிற கந்தாடை நாயன் "ஜீயா! ஆலாங்கட்டியென்றன்றோ வ்யவஹாரம்?" என்ன, அவரையழைத்து மடிமேலே வைத்துக் கொண்டு "நீர் தொழுகுலமன்றோ?" என்று உகந்தருளி தர்சநப்ரவர்த்தகராம்படி நன்றாக வாழ்த்தியருளினார்

## அப்பிள்ளை, அப்பிள்ளார் ஜீயர் திருவடிகளில் ஆச்ரயித்தல்

அநந்தரம் அப்பா சகுநவிருத்தமென்று மீண்டு தண்டன் ஸமர்ப்பிக்க, ஜீயரும் "இவ்விடத்திலே ஒரு அதிசயமுண்டாக வேணும். ஒரு நல்ல நாளிலே பயணப்படுத்துவோம்" என்று உகப்புடனே அருளிச் செய்ய, இது கேட்டுப் பெரியோர்கள் "ஸ்ரீஸூக்தியில் மோகமாவது ஒன்றுமில்லையே: ஏதோ அதிசயமுண்டாம்" என்று ஒருவருக்கொருவர் அருளிசெய்து கொண்டிருக்க, அவிளம்பேந அக்காலத்திலே அப்பிள்ளை அப்பிள்ளார் இருவரும் ஜீயர் திருவடிகளிலே ப்ராவண்யமின்றிக்கே பெருமாளை ஸேவிக்கவேணுமென்று திருக்காவேரிக்கரையிலே வந்திறங்கி இரண்டு நாளிருந்து. ஜீயருடைய ஸ்த்திதி கதிகளை ஆராய்ந்து அவருடைய வாக்சாதுர்யத்தையும், கந்தாடையண்ணன் முதலானோர் ஆச்ரயித்த படிகளையும் ஸப்ரகாரமாகக் கேட்டு "இதுவென்!" என்று விஸ்மிதராயிருந்து, அப்பிள்ளை அப்பிள்ளாரையழைத்து "இது ஸம்பவிக்குமோ" என்று கேட்க, அவர்: "எறும்பியப்பா ஸகலசாஸ்த்ர வல்லபர், அதிக்ருத பரமார்த்தர்; அவரிப்படிச் செய்யார்; நாம் விசாரித்து வருகிறோம்" என்று பேர்ய் மடத்துக்கு ஸமீபத்திலேயிருந்து, தமக்கு அந்தரங்கராய் ஸமர்த்தரயிருப்பாரொருவரையழைத்து "நீர் போய் அப்பிள்ளான் வந்திருக்கிறான்" என்றறிவியும் அந்த எறும்பியப்பாவேயாமாகில் உடனே எழுந்தருளுகிறார்; அன்றிக்கே மற்றொருவராகில் 'அப்பிள்ளானை யாரறிவார்? என்கிறார்" என்றுவிட, அவர் சென்று எறும்பியப்பாவைக் கேட்டறிந்து கொண்டு தண்டனிட்டு "அப்பிள்ளார் வந்து தெருவிலேயிருக்கிறார், தேவரீருக்குத் தெரிவிக்கச் சொன்னார்" என்ன. அப்பா. உகந்தருளி, 'அவருக்கு நல்விடிவு' என்றருளிச் செய்து கொண்டு தாம் புறப்பட்டெழுந்தருள, அப்பிள்ளார் அவருடை புஜமூலங்களிலேயிருக்கிற சிஹ்நங்களைக் கண்டு ஒரு தெளிவுபிறந்து அவர் திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ணிநிற்க, அப்பா குசலப்ரச்நங்களுடன் ஆதரித்து இருவருங்கூடி ஒரு திண்ணையிலேயிருந்து, பெருமாள்தம்மை உஜ்ஜீவிப்பிக்க ஜீயர் திருவடிகளிலே சேர்த்தப்ரகாரத்தை முந்துற அப்பா அருளிச்செய்யக் கேட்டுத் தெளிந்து, ஸ்வாத்மோஜ்ஜீவநபரராய் அப்பாவை அநுவர்த்தித்து, அப்பிள்ளை முதலானார் திருக்காவேரிக்கரையிலிருக்கிற செய்தியையும், அவ்விடத்திற்கு அப்பா எழுந்தருள வேணுமென்கிற கார்யத்தையும் அறிவிக்கக் கேட்டருளி, திரும்பி மடத்திலே எழுந்தருளி, இச்செய்தியை வானமாமலை ஜீயருக்கறிவித்து "தாம் அவர்களைத் திருத்திக் கொண்டுவரலாம்படி கடாக்ஷித்தருளவேணும்" என்று புறப்பட்டு

அப்பிள்ளாரைக் கூட்டிக் கொண்டு அப்பிள்ளைபாடே எழுந்தருளி அவருக்கு ஹிதமருளிச் செய்து ஆஸ்திக்யாதரங்கள் விஞ்சிவரப் பண்ணிக் கொண்டிருக்க, வானமாமலை ஜீயர், ஜீயர் ஸந்நிதியிலே எழுந்தருளி, ''அப்பிள்ளை அப்பிள்ளார் என்பவர்கள் ப்ரஸித்தர், அவர்கள் திருக்காவேரிக்கரையிலே இரண்டு நாளாகவிருக்கிறார்கள்; அவர்களுக்கு

**ஈஶ்வரஸ்யச ஸௌஹார்தம் யத்ருச்சாஸுக்ருதம் ததா**
**விஷ்ணோः கடாக்ஷமத்வேஷமாபிமுக்யம்ச ஸாத்விகை:**
**ஸம்பாஷணம் ஷடேதாநி**

யன்றோ? ஸாத்விகஸம்பாஷணம் ப்ராப்தமாயிற்று; எறும்பியப்பா அங்கே எழுந்தருளியிருக்கிறார்; இப்படி ஆசார்யப்ராப்தி ஹேதுக்களெல்லாமுண்டானபடியாலே தேவரீர் திருவடிகளிலே ஸம்பந்தம் லபிக்கிறது; 'ஆத்மலாபாத்பரம் கிஞ்சிதந்யத் நாஸ்தி' என்றன்றோ தேவரீர் திருவுள்ளமிருக்கும்; ஆசார்யன் இருவருக்கும் உபகாரகன் என்றன்றோ இருக்கிறது; அவர்கள் விஷயத்தில் இரங்கியருள வேணும்; அப்பாவுடையவும் அடியேனுடையவும் மநோரதம் நிறைவேறும்படி ''ஶுபேநமநஸாத்யாதம்'' என்கிறபடியே திருவுள்ளம்பற்ற வேணும்'' என்று விண்ணப்பஞ் செய்ய, ஜீயரும் ''எம்பெருமானார் அப்படியே திருவுள்ளமாயருளினார்; ஒருவருக்கு எம்பெருமானார் திருநாமம்'' என்றருளிச் செய்தருள, வானமாமலை ஜீயர் உகந்தருளி ''அவர்களை எதிர் கொண்டு ஆதிரிப்பதற்காக அடியேனுக்கு விடைஸாதிக்க வேணும்''என்ன அப்படியே அனேகம் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கூட்டி அனுப்பியருளப் புறப்பட்டு எழுந்தருளாநிற்க. இவர்கள் வருகிற செய்தியை அப்பிள்ளாருக்கறிவிக்க. அவரெழுந்திருந்து அந்த கோஷ்டியைக் கண்டு ஸாஷ்டாங்கப்ரணாமம் பண்ணி அஞ்சலிஹஸ்தராய் வைத்தகண் வாங்காதே ஸேவித்துக்கொண்டு 'தமக்கத்யந்த மபிமதமாயிருக்கிறத பட்டுப்பச்சைவடத்தை இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கையிலே கொடுத்து நீங்கள் அதித்வரையாகச்சென்று அவர்களெழுந்தருளுகிற வழியிலே அகலமெல்லாம் படுத்து அத்தை நாலண்டையும் எல்லாருமெழுந்தருளும்படி பண்ணி, அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாதரேணுவை ஸாவதாநமாகக் கொண்டு வரச் சொல்லிவிட்டு. அடைக்காய்த்தட்டும் பழத்தட்டும் மத்யையில் வைத்து எறும்பியப்பாவை முன்னிட்டுக் கொண்டு எதிரே சென்று ஜீயர் திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ணி ஸ்வஜநங்களையெல்லாங்காட்டி, 'அடியோங்களெல்லாரையும் உஜ்ஜீ

விப்பித்தருளவேணுமென்று ஸ்ரீபாததூளியை எல்லாரும் சிரஸாவஹித்து நிற்க, ஜீயர் குசலப்ரச்நம் செய்தருளி உபலாளித்தருளி பெருங்கூட்டமாக அண்ணன் திருமாளிகைக்கெழுந்தருள, அண்ணன் எதிர்கொண்டு ஆதரித்தருளி உள்ளே அழைத்துக் கொண்டுசென்று திருவோலக்கமாயிருந்து, தாம் முன்னிருந்த இருப்பையும், நிர்ஹேதுகமாக எம்பெருமானார் க்ருபையால் வந்த மஹாலாபத்தையும், ஜீயர் யதிபுநரவதாரமென்பதையும் பஹுமுகமாக அருளிச்செய்யக்கேட்டுத் தாம் ஜீயர் திருவடிகளை ஸேவிக்க த்வரிக்க, அப்படியே திருமுன்காணிக்கைகளையும் பட்டுப் படாவளிகளையும் பச்சையையும் முன்னே பிடித்துக்கொண்டு மடத்திலே சென்று திருமலையாழ்வாரிலே ஜீயர் கோஷ்டியாக எழுந்தருளியிருக்கக் கண்டு மிகவும் ஈடுபட்டு,

''அபூர்வரூபஸம்ஸ்தாநம் தேஜஸாம் ராசிமூர்ஜிதம்'' எங்கும் கண்டறியாத நிறத்தோடு கூடிய அவயவஸந்நிவேசமுடையவரும் த்ருடமான தேஜோராசிபோலிருப்பவருமான வரை என்று கொண்டு திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ணி உபஹாரங்களையும் ஸமர்ப்பிக்கத்தக்க மரியாதையுடனே ஸமர்ப்பித்து நிற்க, ஜீயர் அவர்களுடைய வைதுஷ்யங்களுக்கநுரூபமாகச் சிறிது ஸ்ரீஸூக்திகளையருளிச் செய்ய, அவர்களும் வித்தராய் ஸமாச்ரயணத்துக்கு ப்ரார்த்தித்துத்வரைப்பட, தாப; புண்ட்ர:' இத்யாதிப்படியே பஞ்சஸம்ஸ்காரங்களையுஞ் செய்தருளி கோயிலுக்குப் புறப்பட்டு 'தேவீகோதா' இத்யாதிப்படியே அவர்களோடே மங்களாசாஸனஞ் செய்தருளி மீண்டுமடத்திலே யெழுந்தருளி ததீயாராதநமும் நடந்து, 'குரோருச்சிஷ்டம் புஞ்ஜீத', *போனகஞ்செய்தசேடந் தருவரேல் புனிதமன்றே என்கிறபடியே ஸ்வாபாவநமான தளிகைப்ரஸாதத்தையும் ப்ரஸாதித்தருளி திருவடிகளுக்கு அந்தரங்கராக்கி உஜ்ஜீவிப்பித்தருளினார். அப்பா திருத்தமப்பனார் எறும்பியிலே அப்பாவைக் காணவேணுமென்று ஜீயருக்ருக்குக குறித்து வரக்காட்ட, பின்பு ஜீயர்தாமே அப்பாவை ''ஊருக்குப் போம்'' என்று விடை கொடுக்கப் பெருவருத்தத்தோடே ஊரேற எழுந்தருளினார்.

## பெரியபெருமாள் உத்தமநம்பியைத் திருத்துதல்

பின்பொருநாள் ஜீயர் பெருமாளை மங்களாசாஸநம் பண்ண எழுந்தருளினவளவிலே ஏகாந்தஸேவையாய் திருத்திரை பரிமாறித் திருவாராதநங் கொண்டருளாநிற்க, இவரும் உள்ளேசென்று திருவடிதொழுதுநிற்க, அவ்வளவிலே திருவாலவட்டம் ஸேவித்துக்

கொண்டிருந்த உத்தமநம்பியும், *வெள்ளிப்பெருமலைக்குட்ட ரான ஜீயருடைய 'க்ஷீரஸங்காதகௌரம்' என்கிறபடியே *பாலின் நீர்மைபோலிருக்கிற விக்ரஹவைலக்ஷண்யத்தைக் கண்டு பாப வாஸனையாலே அந்யதாசங்கை பண்ணி ஜீயரை "நெடும்போ திருக்கவேண்டா" என்ன, இவரும் அபிப்ராயமறிந்து "மஹாப்ர ஸாதம்" என்று புறப்பட்டு மடமே யெழுந்தருளினார். அவ்வளவிலே திருவாலவட்டம் ஸேவித்துக் கொண்டிருந்த உத்தமநம்பியும் தூங்கிப் பலகணிக்கதவிலே சாய்ந்திருக்க, *அரவினணைமிசை மேய மாயனாரான பெரியபெருமாளும் இவர் கனவில்வந்து, திருப்பவளச் செவ்வாய் முறுவல் தோன்ற, *அணிவிளங்குமுயர்வெள்ளையணை யான திருவநந்தாழ்வானைத் தொட்டுக்காட்டி, 'இவர்கிடீர் ஜீயராக வந்து, அவதரித்தருளினார்; அவருடைய நிறம் வெளுப்பு; விச்வஸித்திரும்'' எனறருளிச்செய்ய, அவரும் அத்யந்தம் பீதராய், அப்போதே மடமேற வந்து ஜீயர் திருவடிகளை ஸேவித்து இச் செய்தியை விண்ணப்பஞ்செய்து அபராதக்ஷாமணம் பண்ணிக் கொண்டு திருவடிகளுக்கந்தரங்கராய்ப் போந்தார். அதுபற்றி *அனந்தாவதாரர் வரயோகியென்பது தென்னரங்கள், மனந்தான றியும் மற்றாரறிவார்? என்று பின்புள்ளாரும் சொல்லும் படியாயிற்று.

## ஒரு ஸாத்விகைக்கு ஜீயர்தமது நிஜாகாரத்தைக் காட்டியருளல்

அநந்தரம் ஸாத்விகைகளில் சடகோபக்கொற்றி யென்னும் திருநாமத்தையுடையளாயும் ஆச்சியார்பாடே திவ்யப்ரபந்தம் நாலாயிரத்தையும் ரஹஸ்யங்களையும் அதிகரித்தவளாயும் திருவடி களுக்கு மிகவும் அந்தரங்கையாயுமிருப்பாளொரு அம்மையார் ஒருநாள் திருவோலக்கங்குலைந்தவநந்தரம் மத்யாஹ்நத்திலே திருமலைபாழ்வாராகிற வ்யாக்யாந மண்டபத்தில ஏகாந்தமாகத் திருக்காப்பு சேர்த்துக் கொண்டு தக்கமாமணிவண்ணனடியிலே வைத்த சிந்தையராய் எழுந்தருளியிருக்க, அப்போது கதவுப் புரையிலே ஸேவிக்குமளவில் ஆயிரம் பைந்தலையனான திரு வநந்தாழ்வானுக்கத் ஸேவைஸாதிக்கக் கண்டு திடுக்குற்றிருக்க, ஜீயர் அத்தைக்கண்டு திருக்காப்பு நீக்கிக் கொண்டு புறப்பட்டு வந்து சிரித்தருளி அம்மையாரை நடந்தபடியென்னென்று கேட்டருள, அவள் அப்போது ஸேவித்தபடியை விண்ணப்பஞ் செய்ய, "ஆகில் ஒருவர்க்கும் சொல்லாதே கொள்" என்று நியமித்தருளினார். இப்படி ஜீயர் அவதார விசேஷமென்பது எல்லார்க்கும் ப்ரத்யக்ஷமிறே.

## A ஜீயர் வ்யாக்யானங்கள் அருளிச் செய்தது.

''பூத்வாபூயோ வரவரமுநிர் போகிநாம் ஸார்வபௌம:
ஸ்ரீமத்ரங்கேவஸதி விஜயீ விஶ்வஸம்ரக்ஷணார்த்தம்'' [ஆதிசேஷன் உலகைக் காப்பதற்காக மறுபடியும் மணவாளமாமுனிகளாக அவதரித்து ஸ்ரீரங்கத்தில் மிகவும் மேம்பட்டு வாழ்கிறார்] என்கிற படி ஜகதரக்ஷணார்த்தமாக அவதரித்தவராகையாலே ஜகத்தை யெல்லாம் உஜ்ஜீவிப்பிக்கும்படி ஸகலஜீவாதுவாகப் பிள்ளைலோகா சாரியர் அருளிச்செய்த ரஹஸ்யங்களுக்கெல்லாம் வ்யாக்யாநம் செய்தருள்வதாகத் திருவுள்ளம் பற்றி

ரஹஸ்யக்ரந்த தத்வேஷு ரமயாமாஸ தத்ப்ரியம் |
வாக்யஸங்கதி வாக்யார்த்த தாத்பர்யாணியதாச்ருதம் ||
வ்யாகுர்வந்நேவ பூர்வேஷாம்வர்த்தமாந: பதேபதே |
ஸ்வமநீஷாகதாம் நைவ கல்பயந் கிஞ்சிதப்யயம் ||
குப்தாம ஸர்வைர்குருத்வேந கூடாநர்த்தாநதீதிஶத் |
தேஶிகாநாம் நிடந்த்ருணாம் தர் | ஸ்யந்நேக கண்டதாம். ||
வாக்யாலங்கார வாக்யாகி வ்யாசக்ஷாணோ விசக்ஷண: |
ஸுதீய:ஸ்வாதயாமாஸ;ஸ்வஸ்வரூபம் ஸுதுர்க்ருஹம் ||

[இந்த மணவாள மாமுனிகள் முன்னோர் மொழிந்த முறைகளில் நிலைநின்றவராய் ஒவ்வொரு சொல்லுக்கும் தந்நெஞ்சில் தோற்றினதே சொல்வதைச் சிறிதும் பண்ணாமல் ஆசார்ய முகமாய்க்கேட்ட அர்த்தாநுகுணமாக வாக்யங்கள், ஸங்கதிகள், வாக்யார்த்தங்கள் பாவார்த்தங்கள் இவற்றை விசேஷமாக அருளிச்செய்து கொண்டு, ஸகல பூர்வாசாரியர்களாலும் அர்த்த கௌரவம் பற்றி மறைத்து வைக்கப்பட்ட ரஹஸ்யமான விசேஷார்த்தங்களையும் தமதுக்ருபையால் வெளியிட்டார். இப்படி ரஹஸ்யக்ரந்தங்களில் ஈடுபட்டவர்களை அவற்றின் தத்வார்த்தங்களில் மகிழச்செய்தார். மேலும் வேதங்களென்ன, வேதாந்தங்களான உபநிடதங்களென்ன, இவற்றையுட்கொண்டு பேசப்

---

A தெலுங்குப்புதிப்பில் இவ்விடத்தில் நம்பெருமான் மணவாள மாமுனிகளைத் தம்திருமுன்பே பகவத்விஷயகாலக்ஷேப மருளிச் செய்ய நியமித்தது, அதன்பின் நடந்த வருத்தாந்தங்களெல்லாம் பேசப்பட்டுப், பின்னர் 'வியாக்யானங்கள் அவதரித்த விஷயம் பேசப்படுகிறது.

பட்ட ஸ்ம்ருதிகளென்ன, ஸ்ரீராமாயணாதி இதிஹாஸங்களென்ன, ஸ்ரீபாஞ்சராத்ரமென்ன, இந்தப்ரமாணங்களால்-பலக்ரந்தங்களை யருளிச் செய்துள்ள ஆசாரியர்களின் ஒருபடிப்பாட்டைக் காட்டி யருளி, நிபுணராய் ஸ்ரீவசனபூஷண சூர்ணிகைவாக்யங்களை வ்யாக்யானம் செய்தருளுமவராய் அறியவரிதான ஆத்மஸ்வரூபயாதாத்ம்யத்தை ஞானிகளுக்கு அநுபவிப்பித்து மகிழ்வித்தார்] என்றிப்படி ப்ரதமம் தத்வரஹஸ்யங்களுக்கு வ்யாக்யாநம் செய்தருளி அநந்தரம் அசேஷார்த்தப்ரதிபாதகமுமாய் ஆழ் பொருள்களையுமுடைத்தான ஸ்ரீவசனபூஷணத்திற்கு *மெச்சும் வியாக்கியையென்று விலக்ஷணபரிக்ரஹமாம்படி வ்யாக்யாநஞ் செய்தருளி, தாமும்

சீர்வசனபூடணமாந்தெய்வக்குளிகை பெற்றோம்
பார்தன்னைப் பொன்னுலகாப்பார்க்கவல்லோம்-தேறில்நமக்
கொப்பாரினியா ருலகாசிரியனருள்
தப்பாமலோதியபின் தான்

என்று இதினுடைய வைபவத்தை அநுஸந்தித்துப் ரீதராயருளினார். முதலிகளுமப்படியே

வாக்பூஷணம் வகுளபூஷண சாஸ்த்ரஸாரம்
யோ மாத்ருசாஞ்ச ஸுகமம் வ்யவ்ருணோத்தயாளு: |
ரம்யோபயந்த்ருமுநயே யமிநாம் வராய
தஸ்மை நமஶ்ஶமதமாதிகுணார்ணவாய ||

(வகுளாபரணரான நம்மாழ்வாரின் அருளிச்செயலான திருவாய்மொழி எனும் சாஸ்தரத்தின் ஸாரமான ஸ்ரீவசனபூஷணத்தை மந்தர்களான நம்போல்வாருக்கும் எளிதில் அறியும்படி எந்த மணவாளமாமுனிகள் விவரித்தருளினரோ, சமம், தமம் முதலான கல்யாணகுணக்கடலாய் யதிசரேஷ்டரான அம்மணவாளமாமுனிவருக் வணக்கம்) என்றும்,

மேஷந்தவத்து வரயோகிவிட்ட வியாக்கியையால்
தேவுந்திகைக்கும், நற்றிந்தத்துவரகஸ்யத்துடனே
தாவும்பெரும் புகழாசாரிய விதயத்திற்குமா.
நர்வும் பொருள்செறி சொல்லாபரணச் சுருதிக்குமே

என்றும் இப்படி உபகரித்தமையை அநுஸந்தித்தார்கள்.

அநந்தரம் ஸ்ரீவசனபூஷணத்திற்கு அடியாய் சரமபர்வநிஷ்டாக்ரமங்களை ப்ரதிபாதிக்கிற இராமானுச நூற்றந்தாதிக்கும் ஞானஸார ப்ரமேயஸாரங்களுக்கும் வியாக்யானஞ்செய்தருளி A. திருவாய்மொழி முதலான அருளிச் செயல்களையெல்லாவற்றையும் ப்ரவர்த்திப்பித்து, தர்சநத்துக்குப்பண்டில்லாத அதிசயங்களையும் உண்டாக்கிக் கொண்டு எழுந்தருளியிருக்கிற காலத்திலே, "திருவாய்மொழி விஷயமாக திருப்பவளத்தாலே ஏதேனுமொரு ப்ரபந்தம் அருளிச்செய்ய வேணும்" என்று முதலிகளெல்லாரும் அபேக்ஷிக்க, திருவாய்மொழி நூற்றந்தாதியையருளிச் செய்து தத்வத்ரயத்திற்கும் ஈட்டுக்கும் ப்ரமாணத்திரட்டு ஸங்க்ரஹித்தருளி ஆசாரியர்களுடைய உபதேசபரம்பராப்ராப்தமாய் வந்த தர்சந தாத்பர்யங்களையெல்லாம் உபதேசரத்தின மாலை என்கிற ப்ரபந்தமுகேந ப்ரதிபாதித்து, உடையவர் நித்யத்தை ஸங்க்ரஹமாகவும் பண்ணியருளி இப்படி ஞானவர்த்தகராய் எழுந்தருளியிருக்கிறகாலத்திலே,

## தம்முள் விரோதப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களைத் திருத்தியது.

இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அஹங்காரத்தாலே அந்யோந்யம் விவாதம் பண்ணிக்கொண்டுபோர, அப்போது நிஹீநஜந்துக்களுக்கு விவாதமுண்டாக (நாய்களுக்குள் சண்டைமூள), ஜீயர் அத்தைக் கண்டு "நீங்களும் இவர்களைப்போல ஸ்ரீவசனபூஷணாதிகாரிகளோ அஹங்காரம் நடையாடி விவாதம் பண்ணுகைக்கு?" என்ன, அவர்கள் இத்தைக் கேட்டு லஜ்ஜாபுரஸ்ஸரமாக அதில் நின்றும் நிவ்ருத்தரானார்கள்.

## பொருளில் பற்றின்மை

பின்பு வடதேசத்தினின்றும் சிலதிருநாமதாரிகள் சிலத்ரவ்யம் மடத்திற்கு வரக்காட்ட, அத்தை நிரூபித்துப் பார்த்தவளவில் அநுகூலமன்றியிலேயிருக்க, அது த்யாஜ்யமென்று கழிக்க, அநந்தரம்

---

A, மற்றை ரஹஸ்யங்களுக்கும் ஈட்டுக்கும் ப்ரமாணத்திரட்டு ஸங்க்ரஹித்து அருளியும் கீதைக்கு தாத்பர்யதீபமென்றொரு வ்யாக்யானமுமிட்டருளி உடையவரருளிய நித்ய திருவாராதனக்ரமத்தையும் ஸங்க்ரஹமாகவும் ஸவ்யக்தமாகவும் ஸர்வவாத்மோஜ்ஜீவார்த்தனமாகச் செய்தருளினாரே-இது தெலுங்குப்பதிப்பில் அதிகபாடம்.

மடத்துக்கு க்ஷேத்ரமுண்டாய் (விளைநிலம் சேர்ந்ததால்) தத் த்வாரா வந்த குடிகள் மடத்தில் புஜித்துப்போக அவ்விடம் கோமயத்தாலே சுத்திபண்ணி ஈரமாயிருக்க, யாத்ருச்சிகமாகப் புறப்பட்டருளினவர் அத்தைக் கண்டு ஈரமேதென்று கேட்டருள, அங்கிருந்தவர்கள் அக்காரணத்தை விண்ணப்பஞ் செய்ய அப்போதே அந்தப் பங்கை பெருமாளுக்கு ஸமர்ப்பித்து அந்தக் கையோலையையும் ஸ்ரீபண்டாரத்திலே அர்த்தராத்திரியிலே போகவிட்டருளி எழுந்தருளியிருக்கிற காலத்திலே.

## கிழட்டணிலாகிலும் மரமேற வல்லதன்றோ?

அதிவ்ருத்தையாயிருப்பாள் ஓரம்மையார் ஒருநாள், ராத்திரி மடத்தைவிட்டுப் போகமாட்டாமையாலே சயநிக்க அவளைக் கண்டு அர்த்தராத்திரியிலே மடத்தினின்று புறப்படவிட்டு (கேட்டவர்களுக்கு) "கிழட்டாணிலாகிலும் மரமேறவல்ல தொன்றன்றோ? உகவாதார்-அபவாதம் சொல்ல இதுபோறுமே" என்றருளிச் செய்து இப்படி யோக்யதையில்லாதவிடத்திலும் 'பிணமெழுந்து கடிக்கிறதோ" வென்று அதிசங்கையும் போராதிறக;

## சிலருக்கு ஸ்வரூபசிக்ஷை

ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தூதுளங்கிரை கொண்டுவந்து Aதளிகைக்குச் செய்கிற அம்மையார் கையிலே "இத்தைப்பாங்காச் செய்து ஸமர்ப்பியும்" என்று கொடுக்க, அவர் அத்தை உதாசித்துச் செய்யாமலிருக்க, பின்பு அமுது செய்தருளும்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் அம்மையார் முகத்தைப்பார்க்க, ஜீயரும் அத்தைக் கண்டருளி இதென்னென்று கேட்டருள அவர் உண்மையை விண்ணப்பஞ்செய்ய அத்தைக்கேட்டருளி அம்மையாரை "ஆறுமாஸம் தளிகைக்குப்பண்ண வேண்டாம்" என்று வெறுத்தருளிப் பின்பு பாகவதாவமானம் பண்ணினதற்கு க்ஷாமணம் பண்ணுவித்து பின்பு பூர்வம்போலே நியமித்தருளி நடந்து செல்லுகிற நாளிலே;

---

A தளிகைக்குச் செய்தலாவது-தளிகைக்கு உபயோகமாகக் கறியமுது திருத்துதல் முதலியன செய்தல்

## ஸ்ரீவைஷ்ணவர்கள் தனிவழிவரக் கூடாது

வரந்தரும் பெருமாள்பிள்ளை "ஜீயர் திருவடிகளை ஸேவிக்க வேணும்" என்ற ஆதாரதிசயத்தாலே தனித்துப்புறப்பட்டு அதித்வரையுடனே வந்து திருவடிகளிளே ஸேவிக்க, 'இப்படி ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸமின்றிக்கே தனியே ஸாஹஸித்துவருவதே,!" என்று வெறுத்து அவரை ஆறுமாஸம் புறத்திண்ணையிலேயிருக்கும்படி உபேக்ஷித்து பின்பு அங்கீகரித்தருளி எதத்விஷயமாக

1 பக்ஷிதம் ஹி, விஷம்ஹந்தி ப்ராக்ருதம் கேவலம் வபு: |
மந்த்ரௌஷதமபீதத்ர பவத்யேவ ப்ரதிக்ரியா, ॥
தர்ஶநஸ்பர்ஶ ஸம்ஶ்லேஷ விஶ்லேஷ ஶ்ரவணுதபி |
அப்ரதிக்ரிய மாத்மைவ ஹந்யதே விஷயைர் த்ருடம் ॥
இத்தமுத்கோஷயந் தோஷாந் விஸ்தரேண ஸாதுஸ்தராந் |
தூரம் நிர்வாஸயாமாஸ வாஸநா விஷயேஷ்வஸௌ ॥ என்றும்

2. நிதாநம் ஸர்வதோஷாணும் நிதாநம் க்ரோத மோஹயோ: |
மாந எவ மநாம்ஸ்யேஷாம் நித்யமுந்மூலயத்யஸௌ ॥ என்றும்

3. அர்த்தஸம்பத் விமோஹாய விமோஹோ நரகாயச |
தஸ்மாதர்த்தமநர்த்தாக்யம் ஶ்ரேயோர்த்தீ தூரதஸ்த்யஜேத் ॥
யஸ்யதர்மார்த்தமர்த்தேஹா தஸ்ய நிரீஹைவ சோபநா |
ப்ரக்ஷாளநாத்தி பங்கஸ்ய தூராதஸ்பர்ஶநம் வரம் ॥ என்றும்

(1. உட்கொள்ளப்பட்ட விஷம் ப்ரக்ருதமான உடலைமட்டும் அழியச்செய்கிறது; அவ்விஷயத்தில் மந்த்ரரூபமாயும் ஔஷதரூபமாயும் பரிஹாரம் இருக்கிறது ஸித்தம். ஜீவாத்மாவோ (அவற்றை) காண்பதாலும், தொடுவதாலும் அவற்றுடன் கூடுவதாலும் அவற்றைப் பிரிவதாலும், கேட்பதாலும்-பரிஹாரம் பண்ணவொண்ணுதபடி விஷயங்களால் நன்ருக அழிக்கப்படுகிறது. இந்த மணவாளமாமுனிகள் எவ்விதத்திலும் நிவர்த்திக்க முடியாத விஷயதோஷங்களை விரிவாக நன்ருக வெளிக்காட்டி, அவற்றில் வாஸனையை மீண்டும் அணுகவெண்ணுபடி ஸமூலமாக போக்கினுர். 2. ஸ்வாபிமாநமே (அஹங்காரமே) எல்லா தோஷங்களுக்கும் காரணம். கோபமோஹங்களுக்கும் காரணம். இவ்வபிமானமானது சேதநருடைய மநஸை எப்போதுமாக அடியோடு அழித்துவிடுகிறது. 3. பொருட் செல்வமானது மோஹத்

துக்குக் காரணமாகிறது. மோஹம் நரகஹேதுவாகிறது. ஆசையால் நன்மையைக்கோருமவன் அநர்த்தம் என்கிற பெயருடைய செல்வத்தை கிட்டவொண்ணாமல் விலக்கக்கடவன். எவனுக்குத் தருமஞ்செய்வதற்காகப் பொருளில் ஆசையுண்டாகிறதோ அவனுக்குப் பொருளில் ஆசையில்லாமையே நல்லது. சேற்றைக் காலிலிருந்து அலம்புவதைவிட, தூர நின்று அதைக்காலில்பட விடாதிருப்பது நலம்.)

4. ப்ருத்யோஹம் விஷ்ணுபக்தாநாம் ஶாஸிதாரஸ்தஏவமே |
க்ரேதும் விக்ரேதும்பிமாமீஶதேதே யதேப்ஸிதம் ||
இதியஸ்யமதம் நித்ய மயமேவாத்ம வித்தம: |
ஸ்வரூபஸித்திஸ்ஸர்வேஷாம் ஸ்வோஜ்ஜீவநமபி த்ருவம் |
ஶ்ரேயஸீ தேஶிகாநாஞ்ச ஸித்யதி ப்ரத்யுபக்ரியா || என்றும்

5. ஆசார்யவத் தேவதாவத் மாத்ருவத் பித்ருவத்ததா |
த்ரஷ்டவ்யாஸ்ஸந்த இத்யாதிர்த்ருஷ்ட: ஶாஸ்த்ரேஷு
விஸ்ராத் | என்றும்

6. ஸுஶீலஸ்ஸுலபஸ்ஸ்வாமீ ஸ்ரீமாநபிக்ருபாநிதி: |
அஜ்ஞைரபி மஹத்த்வேஷாதத்த்யந்தாம் யாதிவிக்ரியாம் |
பாவநீமஹதாம் த்ருஷ்டி: ப்ரச்யுதாநபிமோசயேத் |
அமர்ஷ; புநரல்போபி நித்யாநபி நிபாதயேத் |
ப்ரியாத் ப்ரியதரம் ஶௌரேஸ்ஸஜ்ஜநாநாம் ஸபாஜநம் |
அப்ரியாதப்ரியஸ்தேஷாமவமாநோமநாகபி || என்றும்

7. ஸஜ்ஜநாதிக்ரமக்ரௌர்யம் ஶாஸ்த்ரைரர்த்தம் ப்ரதர்ஶயந் |
ஸூக்திபிர்யுக்தியுக்தாபிஸ்ஸர்வாந் ஸமுதஜீவயத்

(4. அடியேன் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தாஸபூதன். அவர்களே அடியேனுக்கு நியந்தாக்கள்; அவர்கள் அடியேனை தங்களிஷ்டப்படி விற்கவும் வாங்கவும் உரியவர்கள். இப்படி எந்த சேதனனுக்கு அத்யவஸாயம் நித்தியமாய்ச் செல்லுமோ அவனே ஆத்மஸ்வரூபமுணர்ந்தவரில் முதல்வன். இதனால் எல்லாருக்கும் ஆத்மஸ்வரூபம் நிலைபெறுகிறது. தமதுஜ்ஜீவநமும் ஸித்திக்கிறது. ஆசாரியர்களுக்கும் மேலான ப்ரத்யுபகாரமானது ஸித்திக்கிறது.

5. ஆசார்யனைப்போலவும் தேவதையைப் போலவும், தாயைப் போலவும். தந்தையைப் போலவும் ஸத்புருஷர்கள் அபிமானிக்கத்தக்கவர்கள். என்று இது போன்ற நல்வழிகள் சாஸ்தரங்களில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.

6. ஸர்வஸ்வாமியான எம்பெருமான் ஸ்ரீமானாயினும், யாவருடனும் கலப்பவனாயினும், எளியனாயினும், பரமகாருணிகனாயினும், மஹான்களிடம் பண்ணப்பட்ட சிறிது அபசாரத்தாலும் மிகவும் மனக்கலக்கம் (சீற்றம்) அடைகிறான். யாவரையும் பரிக்ஷித்தராக்கவல்ல மஹான்களுடைய கடாக்ஷமானது எம்பெருமானிடமிருந்து நழுவியவரையும் உயர்த்தவல்லது. அவர்களின் மனக்கலக்கம் சிறிதாயினும் நித்யர்களையுங்கூட நழுவப்பண்ணவல்லது. அந்த மஹான்களுக்கு நேரிட்ட அவமானமானது சிறிதாயினும், எம்பெருமானுக்கு-தனக்கு நேரிடும் அநிஷ்டத்தைக்காட்டிலும் மிகவும் அநிஷ்டமாயிருக்கும்.

7. ஸத்புருஷர்கள் விஷயத்தில் பண்ணுமபசாரத்தின் (பாகவதபாசாரத்தின்) கொடுமையை இப்படி சாஸ்த்ரமுகத்தாலும் யுக்திகளுடன் கூடிய திருவாக்குக்களாலும் எடுத்துக்காட்டி யாவரையும் உய்வித்துப்பேந்தார்]-என்றும் இத்யாதிகளாலே இவற்றினுடைய ஸாஹித்யராஹித்யங்களாலுண்டான குண தோஷங்களைத் தம்முடைய தீர்க்க தர்சித்வத்தாலே தர்சிப்பித்தருளி ஸர்வரையும் உஜ்ஜீவிப்பித்துக்கொண்டு போருகிற காலத்திலே

## ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் காட்டித்தருதல்.

இவருடைய உக்த்யநுஷ்டானங்களையெல்லாம் உத்தரதேசத்திலே வைஷ்ணவப்ரபுவாயிருப்பாரொருவர் கேட்டு, தம்முடைய உஜ்ஜீவநத்திற்குடலாக "ஸகலசாஸ்த்ர தாத்பர்யங்களையும் ஸங்க்ரஹரூபேண அநுஷ்டேயமாயிருப்பதொருபடி அடியேனுக்கு அருளிச்செய்து வரக்காட்டியருள வேண்டும்" என்று குறித்து வரக்காட்ட, ஜீயரும் அப்படியே 'பகவத்தாஸ்யரஸம் புருஷார்த்தமென்று தெளிந்த அதிகாரிக்கு கேவலம் பகவத்தாஸ்யரஸம் புருஷார்த்தமன்று; கேவலம் பகவல்லாஞ்சந தாரணமாத்ரமும் போராது; கேவலம் பகவத்ஸமாராதந நிஷ்டாமாத்ரமும் போராது; கேவலம் ஆசார்ய பரதந்த்ரயாதிகார மாத்ரமும் போராது; கேவலபாகவதாநுவர்த்தநமாத்ரமும்போராது; பின்னை எங்ஙனேயென்னில்; யதோசித கைங்கர்யைகநிரதர்களாய் ஸ்வகீயமான க்ருஹத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் நிஸ்ஸங்கமாக ப்ரவேசித்துப் பாங்காக வர்த்திக்கத் தன்னை அத்தலைக்காகவே வைத்துத் தலைக்கட்டும்-*அடியார்க்கென்னை ஆட்படுத்த, *எத்தம்மை

விற்கவும் பெறுவார்களே என்னும் நிலையுண்டாகவேணுமிறே, இப்படி இவ்வர்த்தம் அநுஸந்தித்து அநுஷ்டியாளுகில் தனக்கு ப்ரதிபத்தி ஸௌபாக்யைஶ்வர்யங்கள் கைகூடாது. ''ந்யக்ரோத பீஜேவடவத் ப்ரணவே ஶப்தஜாலவத்; ஸித்தே ததீய ஶேஷத்வே ஸர்வார்த்தாஸ்ஸம்பவந்திஹி''-ஆலம் விதையில் பலகிளைகளையுடைய ஆலமரம் போலவும், ப்ரணவத்தில் பலசப்தராசிகள் (அக்ஷரங்கள், பதங்கள்) போலவும் பாகவதஶேஷத்வம் அநுஷ்டாந ஸித்தமாளுல் எல்லா ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களும் தன்னடையே கைபுகும்] என்கிறபடியே சரமார்த்த விசேஷம் கைபுகுந்ததாகில் விவிதங்களாய் விசித்ரங்களாய் அநந்தங்களாயிருந்துள்ள பகவத் ரஹஸ்ய விசேஷங்களெல்லாம் அறியவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. இவ்விசேஷாநுஷ்டாநமின்றிக்கே செல்லுகிற ஜ்ஞாநுஷ்டாந ப்ரதிபாதநமும் பகவத்ரஹஸ்ய விசேஷங்களும். வேஶ்யை சொல்லுகிற பதிவ்ரதாதர்மம் போலே வ்யர்த்தமாகி விடும்.'' பூஜநாத் விஷ்ணுபக்தாநாம் புருஷார்த்தோஸ்தி நேதர:; தேஷு வித்வேஷத: கிஞ்சிந்நாஸ்தி நாஶகமாத்மநாம்''-எம்பெருமானிடம் பக்தியுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை ஆராதிப்பதிற்காட்டில் வேறு உயர்ந்த புருஷார்த்தமில்லை. அவர்களிடம் த்வேஷம் பண்ணுவதைக்காட்டில் ஆத்மநாசம் பண்ணுவது வேறொன்றில்லை] என்கிறபடியே திருமந்த்ரார்த்தமான சரமார்த்தநிஷ்டையை ஸ்வதிவ்யஸூக்தி விசேஷத்தாலே தர்சிப்பித்து எழுதிப்போகவிட்டருள, அவரும் அப்படியே ததீயாராதநத்திலே நிஷ்டராய் 'தஸ்யை நித்யம் ப்ரதிஶததிஶே தக்ஷிணஸ்யை நமஸ்யாம்'' [அந்த தெற்குத் திசைக்கு எப்போதும் நமஸ்காரம் செய்யுங்கள்] என்றும், ''திஶோவாபி நமஸ்குர்யாத் யத்ராஸௌ வஸதிஸ்வயம்'' [இவ்வாசாரியர் தாம் எத்திசையில் வசிக்கிறுரோ அத்திசைக்காவது நமஸ்கரிக்கக் கடவன்] என்றுஞ் சொல்லுகிறபடியே ஜீயரெழுந்தருளியிருக்கிற திக்கை நோக்கி, *தொழுமத்திசையுற்று நோக்கியே (திருவாய் 6-5 5) என்கிறபடியே நாடோறும் ஸேவித்துக் கொண்டு தம்முடைய வர்ணுநுகுணமான கைங்கர்யத்தையும் மடத்திற்கு நடத்திக்கொண்டு போந்தார்.

அக்காலத்திலே கோயிலிலேயிருக்கிற பட்டர் பெருமாள் திருவோலக்கத்திலே ஜீயரைஸேவித்து ''உம்முடைய சிஷ்யர்கள் நம்மை தண்டனிடாமல் அவமதிபண்ணிப் போராநிற்பர்கள்'' என்று அறிவிக்க, ஜீயரும் மடத்திற்கெழுந்தருளி அவர்களையழைத்து ''நீங்கள் இப்படி செய்வானென்?'' என்று கேட்டருள, அவர்கள், அவரிருக்கிற இருப்பை விண்ணப்பஞ்செய்து, ''அவரைய

நுவர்த்திக்க எங்களுக்குமனமில்லை'' என்ன, ''ஆகில், பெருமாளும் பிராட்டியும் திவ்யஸிம்ஹாஸநத்திலே எழுந்தருளியிருக்கிறதாக ப்ரதிபத்தி பண்ணி ஸேவித்துக்கொண்டு போருங்கோள்'' என்று அருளிச்செய்து, இப்படி தோஷமுள்ள விடத்திலும் குணப்ரதிபத்தி நடக்கும்படியான பகவத்ப்ராவண்யத்தையுடையவராய், பின்பு வ்ருத்தாசாரங்களை அறிந்தருளுமவராகையாலே வேதகப் பொன்னான விலக்ஷண விஷயங்களையும் ஆதரித்துக்கொண்டு, அவர்கள் விஷயத்திலே பூர்வர்கள் அநுஷ்டித்துப்போரும் சேஷ வ்ருத்திகளெல்லாம் அநுஷ்டாந பர்யவஸாயியாம்படி அநுஷ்டித் தருளி;

**எக்குணத்தோரெக்குலத்தோ ரெவ்வியல் வோராயிடினும்-**
**அக்கணத்தே நம்மிறைவராவரே-மிக்க புகழ்க்**
**காரார்பொழிற் கோயிற்கந்தாடையண்ணனெனும்**
**பேராளனையடைந்த பேர்**

என்று அநுஸந்திந்தருளி, இப்படி விலக்ஷணமானஜ்ஞாநுஷ்டாநங்களோடே கூடி ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயுடனே எழுந்தருளியிருக்கிற காலத்திலே :

## வேடலப்பையைக்கொண்டு குத்ருஷ்டியை நிரஸித்தல்

குத்ருஷ்டி மதாவலம்பியாயிருப்பானொருவன் கோயிலிலே வந்து ஸ்வமதாபந்யாஸம் பண்ணிக்கொண்டு இறுமாந்திருக்க; ஸர்வஜ்ஞரானஜீயரும் அவனுடனே தர்க்கிக்கைக்கும் ப்ரஸங்கத்திலே அவனை வாய் மூடப்பண்ணுகைக்கும் ஸாமர்த்யமுண்டாயிருக்கச் செய்தேயும் *கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதாம் என்கிறபடியே அவனைத்ருணவத்கரித்து அநாதரித்துக்கொண்டு ''பகவதநுபவ விரோதியான இவனை ஊரோடு ஒட்டக்கடவோம்'' என்று ஸங்கல்பித்து, முன்னே அவன் வாதூலவம்ஶ்யரான வேடலப்பையை ஆஶ்ரயித்திருந்தவன், ஸஹவாஸதோஷத்தாலே கலங்கி ப்ரச்சந்நபௌத்தரான விரோதிகளோடே கூடிக்கொண்டு மதாந்தரப்ரவிஷ்டனானதையாலே, த்ரிசங்குவைப் போலே கர்ம சண்டாளனான அவனை ஆலோசித்து வார்த்தயருளிச்செய்யக் கூசி வேடலப்பையைக் கொண்டு நிரஸிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி அவரை அழைப்பித்தருள; அவரும்

வந்து ஜீயரை ஸேவித்து கோயிலிலே அவனைக்கண்டு "மாணீ! இவ்விடம் கொண்டயோ?" என்ன, அவனும் அவரைக்கண்டு கருடனைக் கண்ட ஸர்ப்பம் போல மிகவும் பீதனாய் ஸேவித்து அங்குநின்றும் புறப்பட்டு ஓடிப்போனான். அப்பையுடைய வித்வதப்ரதிமப்ரபாவத்தை ஜீயர் கண்டருளி விஸ்மயப்பட்டு அப்பையை, "தேவரீர் இங்கே யெழுந்தருளியிருக்கவேணும்" என்று மிகவும் ஆதரிக்க, அவரும் ஜீயர் நியமித்தபடி செய்யாமல் தம் தேஹயாத்ராசேஷமான வெலௌகிக கார்யங்களையும் அபிஜநவித்யாவருத்தங்களையும் நினைத்து Aப்ரக்ருதி பரவசராய் பர்யுஷிதாந்நத்தையும மாஹிஷ ததியையும் நினைத்து அங்கு நிற்கமாட்டாதே ஸ்வக்ராமத்தை நோக்கி எழுந்தருளினார்.

---

A மணவாள மாமுனிகளால் வித்யாபூர்த்தியையிட்டு மதிக்கப்பட்டவரும், முதலியாண்டான் திருவம்சயருமான வித்வானைக் குறித்து இந்த பரிஹாஸோக்திகள் பொருந்தவில்லை. தமது வயது முதிர்ந்த பருவத்தை யுத்தேசித்து தம்மையொத்த ஒரு வித்வானான தமது சிஷ்யரான ஹாசரதி ஆசசானை ஜீயர்ஸந்நிதியிலிருக்கும்படி நியமித்து ஸ்வக்ராமம் எழுந்தருளியதாகப் பழநடைவிளக்கம் ' என்னும் நூல் கூறுகிறது. அதிலுள்ள விவரங்கள் வருமாறு.

ஸ்ரீமான் திருமழிசை கோயில் கந்தாடை அண்ணவப்பங்கார் ஸ்வாமி அருளிச்செய்த பழநடைவிளக்கம் (சென்னை ஸடார் ஆப இந்தியா அச்சுக்கூடம்; 1891, பக், 70). பின்பு க்ருஷ்ணநந்தியென்கிற ஏகதண்டி ஸந்யாஸி கோயிலிலே வந்து தன்னோடே சாஸ்த்ர வாதம் பண்ணச்சொல்ல, பெரிய ஜீயரும், "இவனோடே வாதம் பண்ணும்போது மங்களாசாஸந விரோதமாமே! வாதம் பண்ணா விட்டால் விரோதி நிரஸனம் ஸித்தியாதே! என்ன செய்வோம்?" என்று சிந்தித்துக்கொண்டிருக்கச் செய்தே, பெரிய பெருமாள் நியமனத்தாலே வேடலப்பைக்குப் பெரியபெருமாள் ஸ்ரீமுகத்தை யனுப்ப, முதலியாண்டான் திருவம்சயராய், மஹாவைபவமுடையரான வேடலப்பையும் ஸ்ரீமுகத்தை சிரஸாவஹித்து, தம்முடைய ஸந்நிதியிலே சாஸ்த்ரங்களையும் அதிகரித்து மஹாவித்வானாகிய தாசரதியாச்சானையும் கூட்டிக்கொண்டு கோயிலுக்கெழுந்தருளி நம்பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளி ஸகலவரிசைகளையும் விசேஷகடாக்ஷங்களையும் பெற்று, ஸ்ரீரங்கநாயகியாரை மங்களாசாஸனம் செய்தருளி அவருடைய பரிபூர்ணகடாக்ஷம் பெற்று, ஸம்மானமும் பெற்று, வில்வ வ்ருக்ஷத்திற்கு ஸமீபமாக வெழுந்

தருளச் செய்தே அப்போதவ்விடத்தில் ஜபம் பண்ணிக் கொண்டிருக்கிற ஏகதண்டியானவன் இவர்களைக்கண்டெழுந் திருந்து, தனக்கு ஸகலசாஸ்த்ரங்களும் படிப்பித்த வேடலப்பையை தண்டனிட்டு நின்றான். வேடலப்பையும் அவனைப்பார்த்து குசலப்ரச்நம் பண்ணினார். அவனும் தான் வந்தகாரியத்தை வேடலப்பைக்குச் சொன்னான் வேடலப்பையும் "அதற்கன்றோ நாமிங்கே வந்தது" என்றருளிச் செய்தார். "ஆனால் அபசாரப்பட் டேன்" என்று பயப்பட்டு தண்டனிட்டு நின்றான். வேடலப்பையும் அண்ணன் திருமாளிகைக்கெழுந்தருளி, அண்ணனும் வேடலப் பையும் தாசரதியாச்சானும் அமுதுசெய்தருளி, க்ருஷ்ணநந்தி இவர்களுடைய ப்ரஸாதத்தை அர்த்தித்தானகையால் ஒரு பரிசு ப்ரஸாதத்தை அவனுக்கு ப்ரஸாதித்தார்கள். அவனுமிவர்கள் அநுமதிகொண்டு புறப்பட்டுப் போய்விட்டான்'.

பின்பு வேடலப்பையும் தாசரதியாச்சானையுங் கூடக் கூட்டிக் கொண்டு அண்ணனும், பெரிய ஜீயர் ஸந்நிதியிலேயெழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்து க்ருஷ்ணநந்தி போய் விட்ட செய்தியை விண்ணப்பஞ்செய்ய, பெரிய ஜீயரும் அண்ணனையும் வேடலப் பையையும் தாசரதியாச்சானையுங் கடாக்ஷித்து மிகவுமுகந்து உகப்பினுடையவதிசயத்தால் முதலியாண்டான் திருவம்ச விஷயமாக இரண்டு ச்லோகம் அருளிச் செய்து (இந்த ய. பா. பதிப்பில் 99-ம் பக்கம் காண்க) பரிபூர்ணாநுக்ரஹம் செய்தருளி வேடலப்பையையும் தாசரதியாச்சானையும் ஸந்நிதியிலே நித்ய வாஸம் பண்ணும்படி நியமித்தருள, வேடலப்பையும் வார்த்தக மான படியினாலே தாசரதியாச்சானை யங்கேயிருக்கும்படி நியமித்து தாம் பெரியஜீயர் ஸந்நிதியிலே அநுமதிபெற்று மிகவும் உபலாள னம் பெற்று வேடலுக்கெழுந்தருளினார். இது முடிய பழநடை விளக்கம்.

## ப்ரதிவாதிபயங்கரமண்ணா வ்ருத்தாந்தம் A

இனி இதற்காவாராரென்று சிந்தித்திருக்க, அவ்வளவிலே ஹஸ்திகிரிநாதரண்ணாவெனனும் திருநாமத்தையுடையராய் தர்சந விரோதிகளான வாதிகளை ஜெயித்து 'ப்ரதிவாதிபயங்கரர்' என்று விருதிடும்படியான ப்ரபாவத்தையுடையராய் 'லோகேவேதே பண்டித; லௌகிகே ஸமயாசாரேக்ருதகல்போவிஶாரத;' இத்

A, இந்தவ்ருத்தாந்தம் தெலுங்குப்பதிப்பில் வேறுவிதமாக உள்ளது. அதுவும் பின்னர் இப்பதிப்பில் வெளியிடப்படுகிறது.

யாதிப்படியே லௌகிக வைதிகங்களிலே அத்விதீயராய் பெருமாள்கோயிலிலே சிலநாள் வஸித்து திருப்பதியிலே நித்ய வாஸமாக எழுந்தருளியிருக்கிற காலத்திலே அவருக்கு மூன்று குமாரர்கள் திருவதாரித்திருந்து அவர்கள் அதிமேதாவிகளாகவும். தேவிகள் கூரத்தாண்டாளோடொத்திருப்பளொருத்தியும் இப்படியிருக்கிற ப்ரதிவாதிபயங்கரமண்ணு கூரத்தாழ்வானைப் போலே ப்ராப்யவிரோதியென்று ஐச்வர்யத்தில் ஜிஹாஸை பிறந்து கேவலம் ஸத்வநிஷ்டராய் ''அர்த்தஸம்பத்விமோஹாய'' இத்யாதிகளையநுஸந்தித்து *முற்றவும் வீடுசெய்து எல்லாவற்றையும் பகவத்பாகவதஸ்வம் மாக்கி, தமக்கு பரமபோஷி விஷயத்தில் கைங்கர்யமே புருஷார்த்தம் என்றறுதியிட்டு திருவேங்கடமுடையான் திருவடிகளிலே *ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேணும் என்று நிற்க, திருமலைதோழப்பர் உகந்தருளி ''அந்யத்பூர்ணாதபாம்கும்பாதந்யத்பதாவநேஜநாத் அந்யத்குஶலஸம்ப்ரஶ்நாந்நசேச்சதி ஜநார்த்தந:''-ஜநார்த்தனனாகிய கண்ணபிரான் பூர்ணகும்பமோ-திருவடி விளக்குதலோ குசலப்ரச்னமோ இவற்றில் ஒன்றைத்தவிர வேறொன்றையும் ஆசைப்படமாட்டான் என்று வெள்ளிக்குடத்தை ஸாதித்து ''ஆகாசகங்கையினின்றும் திருமஞ்சநம் கொண்டுவந்து பூர்ணமாக ஏலாதிஸம்ஸ்க்ருதிமாக்கி நீரே ஸமர்ப்பித்துவாரும்'' என்று நியமிக்க, அண்ணா ''நாயந்தே, நாயந்தே'' என்று குடத்தை வாங்கிக்கொண்டு அதிஸந்துஷ்டராய் ''இவ்வளவாகிலும் சேஷத்வஸித்தியுண்டாயிற்றே'' என்று நித்யமாக நடத்திக்கொண்டு போர, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயிலினின்றும் அப்பனை ஸேவிக்க வந்து நிற்க, அவரை ஸேவிக்கப் பண்ணிவைத்து, வரிசை பெறுவித்துத் தாமும் ஸ்த்கரித்து அற்றைக்கு தம்முடைய அண்டையிலே வைத்துக் கொண்டு கோயில் வ்ருத்தாந்தங்களையும் பெருமாளமுது செய்கிற வரிசைகளையும் உத்ஸவங்களையும் அழகிய மணவாளமாமுனியுடைய அப்ததிமவைபவத்தையும் கேட்டுக் கொண்டிருந்து பிற்றை நாள் தாம் திருமஞ்சனத்திற்கெழுந்தருளுகிற போது அவரையுங் கூட்டிக்கொண்டு ''க்ருஷ்ணம்யஹம் ப்ரீதிகரம் மமநாதஸ்யகீர்த்தநம்'' [எனக்குப்ரீதியையுண்டு பண்ணும் என் நாதனுடைய கதையைக் கேட்கிறேன்] என்கிறபடியே அழகிய மணவாளமாமுனியினுடைய திநசர்யையையும் அத்புதவைபவங்களையுஞ் சொல்லுமென்று ததேகசித்தராய் திருமஞ்சநங்கொண்டு வந்து, ஏலாலவங்க கர்ப்பூராதிகளைப் பரிமாறுவதற்காகத் திருத்த, அப்போது ஒரு ஏகாங்கி ஓடிவந்து குடத்தையெடுத்துக் கொண்டு திருவாராதநஸமயத்திற்கு உதவவேணுமென்று கொண்டு போகாநிற்க, ''திருமஞ்சநத்ரவ்யங்கள் இன்னும் பரிமாறவில்லையே''

என்ன அதை அவர் கேளாமல் கொண்டுபோய் ஸமர்ப்பிக்க எப்போதும்போல் திருவாராதநம் கொண்டருளாநிற்க அண்ணா, ''அபசாரம் வந்ததே'' என்று ஏலாதிகளை வட்டிலிலே கொண்டு நிற்க அர்ச்சகர், அவசராய் ''இத்தனை நாளைக்காட்டிலும் பரிமள த்ரவ்யங்கள் விஞ்சி, திருமஞ்சன வாஸனை அதிகமாயிருக்கிறதே'' என்ன அண்ணா பாவஜ்ஞராகையாலே ''இது வெறுமன்று; உகப்பு விஞ்சியிருக்கிறது; இதற்கு ஹேது ஜீயருடைய வைபவஸ்வண மாக வேணும்'' என்று எண்ணி, அந்த ஸ்ரீவைஷ்ணவரையழைத்து ''நீர் அழகிய மணவாளமாமுனி வைபவமான ஐதிஹ்யங்களை அருளிச்செய்ய அடியேன் கேட்டபடியினாலே க்ருதார்த்தனானேன்; அப்பன் திருவுள்ளம் ப்ரஸன்னமாயிற்று; அழகிய மணவாளமா முனியை ஸேவிக்கப் பெறுதேனாகவேணும்' என்ன; அப்பனும் உகந்து அவரை ஸத்கரித்து அனுப்பியருளினார்.

பின்புதாம் எப்போதும்போலே சிலநாள் திருமஞ்சநகைங்கர்யஞ் செய்தருளி, அப்பனுடைய நியமனத்தினாலே ஸகுடும்பமாகக் கோயிலுக்கும் புறப்பட்டருளி, பயணகதியிலே திவ்யநகரத்தைத் தண்டன் ஸமர்பித்து வைத்த கண்வாங்காமல் ஸேவித்துக் கொண்டு நீராடி திருமண்காப்புச் சாத்தியருளி ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடத்திலே எழுந்தருளி பின்பு பெரியபெருமாளை மங்களா சாஸநம் பண்ணுவதாக ஸேவாக்ரமத்திலே யெழுந்தருள சித்ர மண்டபத்திலே ஜீயர் கோஷ்டியாக எழுந்தருளியிருந்து *ஒன்றுந் தேவு ப்ரவேசம் நடக்க, அந்த கோஷ்டியைக்கண்டு ஹர்ஷபரவசராய் தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, ''ப்ரதிவாதிபயங்கரர் அண்ணா'' என்று ஜீயர் கேட்டருளி குசலப்ரச்நம் செய்தருளி ''இத்தனை நாளைக்காக இன்று ஸேவிக்கப் பெற்றேன்'' என்று தழுவிக் கொண்டு பின்பு அவரையும் கூடவைத்துக்கொண்டு காலக்ஷேபம் நடத்த மூன்றுபாட்டாய் நாலாம் பாட்டுத்தறுவாய் நிறுத்தினவளவிலே ப்ரதிவாதிபயங்கரநண்ணா ' இப்படி ஆழ்வார் பரதத்வநிர்ணயஞ் செய்தருளி வைத்தபடியை தேவரீர் திருவடிகளிலே ஸம்பந்தமுண்டானாலல்லது 'ஆர்க்குமறியப் போகாது'' என்று வித்தராயிருக்க அவர் திருக்கைகளைப் பிடித்துக் கொண்டு பெருமாளைத் திருவடிதொழப்புக, தீர்த்தம் ஸ்ரீசடகோபன் முதலான வரிசைகளெல்லாம் ப்ரஸாதித்து, பெருமாள் அர்ச்சகமுகேந ''வாரீர் ப்ரதிவாதிபயங்கராசார்யரே!'' என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு ' திருமலையிலேபோரத்திரு மஞ்சநகைங்கர்யம் பண்ணினீரே; ஒரு நாள் திருமஞ்சநங்கொண்டு வரும்போது அழகிய மணவாளமாமுனி வைபவங் கேட்டுக் கொண்டு

வர அதிலே தீர்த்தருச்யாதிக்யமும் பரிமளாதிக்யமுமுண்டாய் நாம் உகந்தபடியை நினைத்துவந்தீர்; உமக்கு விலக்ஷண ஸம்பந்தம் தந்தோம்'' என்று ஜீயர் திருக்கையிலே ஸ்ரீவரைக் காட்டிக் கொடுக்கப் புறப்பட்டு மடமே யெழுந்தருள;

அநந்தரம் அண்ணா கந்தாடையண்ணன் திருமாளிகைக் கெழுந்தருளுவதாகப் புறப்பட்டரிள, அண்ணன் எதிர்கொண்டு, ''வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தாண்டவத் ப்ரணமேத் புவி'' என்கிற படியே அந்யோந்ய வந்தநபரராய் சேஷத்வபுரஸ்ஸரமாக குசலப்ரச்நங்களுடனே திருமாளிகையிலே எழுந்தருள, அங்கே யாத்ருச்சிகமாய் வானமாமலை ஜீயரெழுந்தருளியிருக்கக் கண்டு, ''அருள்கொண்டாடுமடியவரன்றோ தேவரீர்!'' என்று திருவடிகளிலே தீர்க்கப்ரணாமம் பண்ண ஜீயர், ப்ரணாமபூர்வமாகத் தழுவிக்கொண்டு மூவருங்கூடியிருந்து ஜீயருடைய யதிபுநரவதாராதி வைபவங்களையெல்லாம் அந்யோந்யமநுஸந்தித்துக் கொண்டு, மடத்திலே ரெழுந்தருளி; சிறட்பும் திருமுன்காணிக்கையும் ஸமர்ப்பித்தருளி தேவிகள் குமாரர் எம்பெருமானாரப்பன், அநந்தய்யன்ப்பை, திருவாய்மொழிப் பெருமாள் நாயனார் முதலானோரெல்லாரைங் கூட்டிக்கொண்டு திருவடிகளிலே ஆச்ரயித்தருளி க்ருதார்த்தராய் ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப்ரஸாதமும் ஸ்வீகரித்துத் திருவடிகளுக்கந்தரங்கராய் வாழ்ந்தருளினார். ஜீயருடைய ஸம்பந்தமுடையராய் *அடங்கெழில் சம்பத்து என்கிற படியே கட்டடங்க விலக்ஷணமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயை *அடங்கக்கண்டு என்கிறபடியே கார்த்ஸ்ந்யேந கண்டு *படைடங்கெழில் என்கிறபடியே பந்நகாதீசரான அழகிய மணவாளமாமுனிகளுடைய நிரவதிக விலக்ஷணஸ்ரீயிலே *அஃதென்றடங்குகவுள்ளே என்கிறபடியே தாமுமொன்றென்று அந்தர்பவித்து, ''ப்ரஸித்த: பரகோஷ்டீஷு ப்ரவாதிபயங்கர:; ஸ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டீஷு தத்தாஸஇதி விச்ருத: [ஸ்ரீவைஷ்ணவால்லாத புறம்பான கோஷ்டிகளில் பரவாதிபயங்கரரென்று ப்ரஸித்தரானாலும் ஸ்ரீவைஷ்ண கோஷ்டிகளில் அவர்களுக்கடியவர் என்று நன்கறியப் பட்டவர்] என்று ஸ்வசேஷத்வாநுஸந்தாநத்துடனே ஜீயர் திருவடிகளுக்கந்தரங்கராய் வாழ்ந்தருளினார்.

**A. (பக.139). தெலுங்குப் பதிப்பிலுள்ளபடி ப்ரதிவாதபயங்கர மண்ணா வ்ருத்தாந்தம்**-(வேடலப்பை ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸத்துக்கு இசையாமல் அகன்று போக 'இனி இதற்கு ஆவாரர்?' என்று சிந்தித்துப் பெருமாள் கோயிலில் 'ப்ரதிவாதி பயங்கரர்' என்று

திருநாமமுடையராய் விதேசேஷ்வபீ வித்யாதராய்ப் போருகிற ஹஸ்திகிரிநாதரண்ணாவின் பக்கல் திருவுள்ளம் குடிபோய் *ஆம் முதல்வனிவன் என்று அபிமானித்தருளி 'அவரை ஸ்ரீவைஷ்ண வதாஸராக்கவேணும்'' என்று கருதித் தன் திருவடிகளுக்கந்தரங்கர் களான ஸ்ரீவைஷ்ணவரிருவர் கையிலே தம்முடைய திருமுக மெழுதிக் கொடுத்து அவர்பக்கல் போகவிட்டருள, அவர்களும் ப்ரதிவாதி பயங்கரமண்ணாவைக் கிட்டித் திருமுகத்தையும் கொ டுத்து ஜீயர் அனுப்பின வ்ருத்தாந்தத்தையும் அறிவிக்க, அண்ணாவும் கேட்டு அதிப்ரீதராய்த் திருமுகத்தை சிரஸாஹித்துக் கொண்டு, முன்பே த்ராவிடவேதாந்தார்த்த ச்ரவண ச்ரத்தாயுக்தரானவர் இதுவே இடமாமென்று கருதி தத்க்ஷணமே புறப்பட்டு *தாய்நாடு கன்றே போல் என்றும் ' வத்ஸோவா மாதரம்'' என்றுஞ்சொல்லு கிறபடியே ஸ்ரீவத்ஸகுலதிலகராய் ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரதுல் யரான இவரும் ஸ்ரீரங்காபிமுகராய் ''ஆஜகாம முஹூர்த்தேநல் என்கிறபடியே பயணகதிகளை அர்ச்சிராதிகதியாக மநோரதித்துக் * கொண்டு ''மணவாளமாமுனிவன் பாதகமலங்கள் காணவேணும்'' என்ற பேராசையுடனே திருவரங்கப் பெருநகரிலே சென்று ''காவேரீ விரஜா ஸேயம்'' என்கையாலே அந்த வைகுந்த நாட்டிலே விரஜைதானென தன்மையுடைய திருக்காவேரியிலே நீராடி நதீநிஸ்தரணாநந்தரம் ப்லவபரித்யாகம் போலே, சேதனன் வாஸநா ரேணுவைக் கழிக்குமாபோலே அநுவாதரீதியாகிற வாஸநா ரேணுவைக் கழித்து கேசவாதி த்வாதசோர்த்வபுண்ட ரங்களையும் தரித்துக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவாலங்காரமுடைய ராய் திவ்யநகர ப்ரவேசயுக்தராயிருக்க;

அவ்வளவிலே அவரண்டைக்குப் போகவிட்ட ஸ்ரீவைஷ்ணவர் களும் ஜீயருக்கு இவர் எழுந்தருளின வ்ருத்தாந்தத்தை விண்ணப் பம் செய்ய, ஜீயருங்கேட்டு "''பக்வமாய்ப் பலிக்குமோ?'' என்று அவர்களை வினவியருள அவர்களும் ''தேவருடைய அமோக ஸங்கல்பம் பழுது போமோ? அங்கோலதைலம் போலே அப்போதே பலபர்யந்தமாய் பலித்தது'' என்ன, போரவுகந்தருளி, இவர்க்கு அபிமுகமாகக் கோயிலண்ணைத்துப்பரிகரத்துடனே தம்ஸந்நிதி ஸ்ரீவைஷ்ணவர்களைப் போக விட்டருள, இவரும் அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்களின்பமிகு பெருங்குழுவுகண்டு கண்டு ஸேவித்து ஹ்ருஷ்டராய் நிகிலஜநஸாஹ்ருத்துக்களானவர் களுடனே கூட திருவரங்கந்திருப்பதியிலே ப்ரவேசித்து, அவர்கள் முன்னிலையாகப் பெருமாள் ஸேவாகரமந்தப்பாமல் ஸேவித்து மீண்டு வரயோகி மடத்திலே சென்று ''ரங்கேதாம்நிஸாகாஸீநம்- வந்தே வரவரம் முநிம்'' என்கிறபடியே விசேஷாதிஷ்டாநமாக

ஸ்வாங்கீகாரோந்முகராய் எழுந்தருளியிருக்கிற ஜீயர் திருவடிகளிலே "அகிஞ்சநோऽநந்யகதிஶ்ஶரண்யத்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே" என்கிறபடியே ஆகிஞ்சந்ய அநந்யகதித்வபூர்வமாகத், தாளுந்தடக்கையுங் கூப்பி ஸாஷ்டாங்கப்ரணமம் பண்ணுநிற்க; ஜீயரும் க்ருபை செய்து, "லோசநாப்யாம் பிபந்நிவ' என்னும்படியே குளிரநோக்கி, "வசஸாஸாந்த்வயித்வைநம்" என்னும்படி குசலப்ரஶ்நம்பண்ணி இருத்திக்கொண்டு அப்போது நடக்கிற *ஒன்றுந்தேவின் ப்ரவேசத்தை உபந்யஸித்துக்காட்ட இவருங்கேட்டுப் போரவாச்சர்யப்பட்டு, "திருவாய் மொழியிலு மருளிச்செயலிலு மொழிய ஸம்ஸ்க்ருத்தில் பரிசயமில்லை" என்று கேட்டிருந்தோம்; இவர் உபயவேதாந்தத்திலும் மிகவும் நிபுணராயிருந்தார்" என்று ஜீயரிடத்தில் அத்யாதரம் பண்ணி, இனி, "அடியேனை யாட்கொண்டருளவேணும்" என்ன, ஜீயரும், "நீர் ப்ரதிவாதி பயங்கரர்; நாம் ஏது; எங்ஙனே கூடுகிறது?" என்ன, அண்ணவும் ஜீயரைக் குறித்து "ப்ரஸித்த. பரகோஷ்டீஷு பரவாதிபயங்கர:, ஶ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டீஷு தத்தாஸ இதி விஶ்ருத:" என்று அடியேனுக்கு இங்ஙனே இரண்டு ப்ரஸித்தியுமுண்டு" என்ன அத்தைக்கேட்டு ஜீயரும் உகந்ததிருவுள்ளத்தையுடையராய் பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து, *பலரடியார் முன்பருளிய என்றும் "பஹுமாநேந மஹதா" என்றுஞ் சொல்லுகிறபடியே விசேஷாபிமானம் செய்தருளி, ஜந்மாத்யுத்க்ருஷ்டதாதிகளால் உண்டான அபிமானம் போம்படி *அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன் என்கிறபடியே ஆத்மதாஸ்யமாக ஶ்ரீவைஷ்ணவதாஸன்" என்று ஆர்க்கும் ஸித்தியாத தாஸ்யநாமத்தையும் ததியசேஷத்வமே நிலைநின்ற நிரூபகமாம்படி ப்ரஸாதித்தருளி, "காந்தோபயந்த்ருயமிந: கருணைக்பாத்ரம்" என்னும்படியான அண்ணவைக் குறித்து "இதரமதநிராகரணபூர்வமாக ஸ்வமதமான ஶ்ரீராமாநுஜஸித்தாந்தத்தையே ரக்ஷித்துக்கொண்டு விசிஷ்டபக்ஷத்திலே நிஷ்டராய்ப் போரும்" என்று நியமித்தருள, இவரும் ஒரு பிறவியிலே இருபிறவியாய் ஸத்தா மூலமான மூலஸ்பர்ஶமுள்ள தொன்றைப் பற்றி "ஸந்தமேநம்' என்னும்படி ஸத்தையும் பெற்று க்ருதார்த்தராய், உடையவர் திருவடிகளுக்கு ஆழ்வானைப்போலே அந்தரங்கராய், ஸகலவ்யாக்யான நிர்மாண ஸஹகாரியாய் . தத்பாதாப்ஜஸேவைகதாரகராய் வாழ்ந்துகொண்டு ஜீயருக்கு உகப்பாகப் பெருமாளையும் ஸேவித்து *அரிய அருளிச் செயற் பொருளையெல்லாங் கேட்டு

ஆதரித்துக்கொண்டு எழுந்தருயிருந்தார். பின்பு "தஸ்மாத்பார்யாதய: புத்ராஸ்ததமேகம் குருமாப்நுயு" [அண்ணா ஆசரயித்படியால் அவருடைய புத்ரர்களும் பத்நீ முதலானவர்களும் அம்மாமுனிகளொருவரையே ஆச்சார்யராக ஆச்ரயித்தார்கள்] என்னுமபடி தத்ஸம்பந்திகளான அப்பா முதலானவர்களும் ஜீயர் திருவடிகளில் ஆச்ரயித்து உஜ்ஜீவித்தார்கள். அந்த அப்பாவிறே அஸ்மத்தேசிகராயிருக்கிற சடகோதேசிகரை ப்ரதமம் கடாக்ஷித்தருளினர்.

## ஜீயர் மீளவும் திருமலையாத்திரை செய்தருளல்.

அநந்தரம் ஜீயர் மீளவும் திருமலை முதலான திவ்யதேசங்களைத் திருவடி தொழ வேணுமென்று திருவுள்ளமாய், "ப்ரதீதைரப்ரதீதத்ப்ருத்யை பரதிவாதிபயங்கரை: (ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவுடனும் பிரசித்தர்களான அவருடைய அடியார்களுடன் என்கிறபடியே ப்ரதிவாதிபயங்கரரண்ணா முதலான அனேக ஸ்ரீவைஷ்ணவர்களுடனே திருக்காவேரி வடக்கு நோக்கினாப் போல புறப்பட்டருளி

**அதவிலோகநலோகதமேநுதம் த்வததவலோகநதுங்க குதூஹலம் |**
**த்விரதஶைலஶிரோக்ரஹமேதிநம் வரதமுத்தரவேதிவிபூஷணம் ॥**

(பின்னர் தமது கடாக்ஷித்தாலே ஜநங்களுடைய அஜ்ஞான இருளை அடியோடு போக்குமவராய் தேவரீரை கடாக்ஷிப்பதில் மிகவும் குதூஹலமுடையவராய் திருவத்தி மாமலையுச்சியில் நித்யாவாஸம் செய்தருள்பவராய் உத்தரவேதியான யாகசாலைக்கு அலங்காரபூதரான பேரருளாளனை) என்கிறபடியே அர்த்திதார்த்த பரிதானத்தில் அவஸரப்ரதீக்ஷராயெழுந்தருளியிருக்கும் பேரருளாளரைத் திருவடி தொழுவாராக ப்ரதமம் பெருமாள் கோயிலேற எழுந்தருள, அங்குண்டான ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லாரும் எதிர்கொண்டுவந்து ஸேவிக்க அவர்களை க்ருமைபண்ணி அவர்களுடனே எழுந்தருளி கோயிலுக்குள்ளே புக்கு.

1. **ஸ்ரீமந்த்வாரவரம் மஹத்திபலிபீடாக்ர்யம் பணீந்த்ரஹ்ரதம்**
**கோபீநாம்ரமணம் வராஹவபுஷம் ஸ்ரீபட்டநாதம் ததா |**
**ஸ்ரீமந்தம் ஶடவைரிணம் கலிரிபும் ஸ்ரீபக்திஸாரம் முநிம்**
**பூர்ணம் லக்ஷ்மணயோகிநம் முநிவரிராநாத்யாநத்**
**த்வாரபௌ ॥**
**ஸ்ரீமஞ்ஜநமண்டபம் ஸரஸிஜாம் ஹேதீஶ போகீஶ்வரௌ**
**ராமம் நீலமணிம் மஹாநஸவரம் தார்க்ஷ்யம்**
**ந்ருஸிம்ஹம்ப்ரபும் |**

**ஸோபாநம் கரிபூதரம் ததுபரி ஸ்ரீபுண்யகோடிம் ததா**
**தந்மத்யே வரதம் ரமாஸஹசரம் வந்தேதத்லைபவ்ருதம் ।**

2. **கமலிநீவேஶிதாங்க்ரிகமலம் கமலாபரணம்**
**கமணிபூஷணத்யுதிகடாரித காத்ருருசிம் |**
**அபயகதாஸுதர்ஶநலஸேருஹசாருகரம்**
**கரிகிரிஶேகரம் கிமபி சேதஸி மேநிததே ।**

1. *நித்யஸ்ரீயுடன் விளங்கா நின்ற பெரிய திருக்கோபுர வாயிலையும் பலிபீடத்துக்குமுன்புள்ள திருவநந்தஸரஸ்ஸையும், கோபீரமணனை ஸ்ரீவேணுகோபாலனையும, ஞானப்பிரானையும், அப்படியே பட்டர்பிரானையும், ஸ்ரீமானை சடகோபனையும், திருக்கலிகன்றியான திருமங்கையாழ்வாரையும், திருமழிசைப் பிரானையும் பெரியநம்பியாரையும், எம்பெருமானாரையும், முதலாழ்வார்களையும், பிறகு திருவாசல்காக்கும் முதலிகளையும், திருவபிஷேகமண்டபத்தையும், தாமரையாளான பெருதேவித்தாயரையும், திருவாழியாழ்வானையும், திருவநந்தாழ்வானையும் சக்கரவர்த்தி திருமகனையும், கரியமாணிக்கவரதரையும், திருமடைப்பள்ளியையும், பெரிய திருவடி நாயனாரையும், ஸ்வாமியான அழகிய சிங்கரையும், சேனை முதல்வரையும், திருமத்திமாமலையையும் அதன்மேல் ஸ்ரீபுண்ய கோடிவிமானத்தையும் அதன் மத்தியில் ஸ்ரீதேவி பூதேவி முதலானோரால் சூழப்பட்ட திருமகள்கேள்வனை தேவப்பெருமானையும் அடிபணிகிறேன். 2. ஆஸநபத்மத்தில் அழுதியிட்ட திருவடித்தாமரைகளையுடையனாய் லக்ஷ்மீவல்லபனாய் உயர்ந்த மணிமயமான திருவாபரணங்களின் ஒளியினால் பொன்வண்ணமாக்கப்பட்ட திருமேனி சோபையுடையனாய். அஞ்சேலென்று காட்டும் முத்திரையென்ன கதை சங்கம் சக்ரம் இவ்வாழ்வார்களென்ன இவற்றை தரிக்கும் திருக்கைகளாலே அழகாக விளங்கா நின்ற அத்திகிரிக்கு சிரோபூஷணமான அநிர்வசநீயனான பேரருளாளனை எம்பெருமானை எனது மனதில் த்யாநிக்கிறேன்) என்கிறபடியே அடைவே ஸேவித்தருளி வையமாளிகையிலே ஏறியருளி பேரருளாளரைத் திருவடிதொழுது "மங்களம் வேதவேதி மேதிநீ க்ருஹமேதிநே வரதாயதயாதாம்நே தீர்ரேதாராய மங்களம் "—பிரமனுடைய யாகபூமியில் எழுந்தருளியிருப்பவராய், க்ருபாநிதியாய், ஆசரிதாபேக்ஷிதங்களைத் தருவதில் நிலைநின்றவரான பேரருளாளருக்கு மங்களம், மங்களம்-என்று தொடங்கி மங்களாசாஸனம்பணணி எழுந்தருளி நிற்க திருவடிக்கீழவர்கள் தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்தருளி தண்டன்ஸமர்ப்பித்துப் புறப்*

பட்டருள, அங்குண்டானவர்கள் எழுந்தருளியிருக்கும்படி அங்கே ஒரு மடத்தைக் தற்பிக்க.

**கதிசித்திநாநி கரிஶைலவாஸிந கமலாலகஸ்யாயகாநுபவ |
நிஜபாதபங்கஜ ரஜோபிஷேசநைரகிலாச்ரிதாந் விமலாயந்
வானஸ: ॥**

(அம்மணவாளமாமுனிகள் சில நாட்கள் ஹஸ்திகிரியில் நித்ய வாஸியாய் ச்ரிய:பதியான பேரருளாளனுடைய கடாக்ஷத்திற்கு இலக்காகி, அங்கு எல்லா ஆச்ரிதகளையும் தமது திருவடித் தாமரைகளின் ஸ்பர்சத்தால் சுத்தஸ்வபராகச் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்) என்கிறபடியே அங்கேயே அவர்களுக்கு உகப்பாக நாலாறு நாள் எழுந்தருளியிருக்க, அநந்தரம் திரு வைசாகத் திருநாள் தொடங்கி நடக்க, மூன்றுந்திருநாளன்று பெருமாள ஒப்பித்துக்கொண்டு

**ஆரூட: பதகேந்த்ரமஸ்ய கரயோரங்க்ரித்வயீமர்ப்பயந்
திவ்யைரம்பரபூஷணைர்திசுக்ருதோ தீப்திம்'திவாதீபயந் |
மக்தேந்துஸ்மிதிரோசிஷா மதுரயந் முக்தாதபத்ரச்ரியம்
விச்வம் பச்யதி சக்ஷுஷா விகஸதாவீதீவிஹாரீ ஹரி: ॥**

(தேவப்பெருமாள் பெரியதிருவடியின் மேலே எழுந்தருளி அவருடையகைகளிலே இருதிருவடிகளையும் வைத்துக் கொண்டு, திவ்யமான திருப்பரிபட்டங்களாலும் திருவாபரணங்களாலும் சூரியனுடைய ஒளியைப் பகல் விளக்காக்குமவராய், அழகிய வெண்மதி போன்ற புன்முறுவலுடைய காந்தியால் திருமுத்துக் குடைகளின் சோபையை விளங்கச் செய்பவராய், திருவீதிகள் தோறும் பவநிஎழுந்தருளி, திருக்கண்ணோக்கினால் யாவரையும் குளிரக்கடாக்ஷித்தருளுகிறார்) என்கிறபடியே பெரிய திருவடிமேற் கொண்டு திருவீதியிலே புறப்பட்டருள ஜீயரும் பெருமாளை ஸேவித்துக் கொண்டு கங்கை கொண்டான் மண்டபத்தேற வெழுந்தருள;

## எறும்பியப்பா ஜீயரை ஸேவித்தல்

எறும்பியப்பாவும் சில ஸ்ரீவைஷ்ணவர்களும் திருநாள் ஸேவிக்க எழுந்தளினவர்கள் அங்கே அசிந்திதமாக ஜீயரை ஸேவித்து

**ஆருஹ்யபதகவ்ருஷபமாயாந்தம் வரதமாதராத்ரஷ்டும் |
கத்வாதக்ரபூமிம் ஈாத்ரக்ஷம் தத்ர தேசிகம் த்ருஷ்ட்வா**

(பெரிய திருவடியின்மேல் எறியருளி எழுந்தருளும் தேவப்பெரு மாளை ஸேவிக்க ஆதரத்துடன் சென்று அவ்விடத்தில் ஆசார் யரை-மணவாளமாமுனிகளை-ஸேவித்து அங்கு ஈடுபாட்டினால் அதற்கு மேலே எதையும் பார்க்கவில்லை) என்னும்படி அப்பா விஸ் மிதஹ்ருதயராய் மோஹித்து ஜீயர் திருவடிகளில் ஆதராதிசயத் தாலே விழுந்து தத்விக்ரஹாநுபவம் பண்ணிக்கொண்டு "சிரேண ஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்யசைவ விசிந்தயாமாஸ விசாலநேத்ரா"- வெகுகாலம் கழித்துத் (சீதை) தன்னினைவடைந்து மேலும் மலர்ந்த திருக்கண்களையுடையளாய் சிந்திக்கலானாள்-என்கிற படியே மூன்று நான்கு நாழிகைக்கு மேலே தெளிந்து, பின்பு திரு நாளென்றறிந்து ஜீயரை ஸேவித்துக் கொண்டுபோய் *குமிறு மோசை விழவொலி தொலைவில் லிமங்கலம் கொண்டுபுக்கு [திருவாய் 2-4-2] என்றும் *இழைகொள் சோதிச் செந்தாமரைக் கண்பிரான் இருந்தமை காட்டினீர் [திருவாய் 5-5] என்றுஞ் சொல்லுகிறபடியே ஸேவித்தருளி A பின்பு ஜீயரும் பெரியதிருவடி யோட்டைச் சேர்த்தியை ஸேவித்தருளி

ஸுபர்ணப்ருஷ்டமாரூடஶ்ஶ்யாம: பீதாம்பரோ ஹரி: |
காஞ்சநஸ்யகிரேஶ்ஶ்ருங்கே ஸதடித்தோயதோயதா ||

(பெரியதிருவடி நாயனாரின் முதுகிலே எழுந்தருளியிருக்கும் நீல மேகஶ்யாமனனும் பீதகவாடைப்பிரானுமான தேவப்பெருமாள் ஒரு பொன்மலையின் மேலே மின்னலுடன் கூடிய மேகம் போலே விளங்கினார்.) என்கிறபடியே *மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்த மாமுகில் போன்றவடிவை அநுபவித்தருளி

நீலமுத்து மணிதவள நற்பவளமருணரத்ந வகைசாத்தியயே
சங்குசக்கரமுமங்கையில் திகழ மங்ஸகபாகனரனேத்தவே
நகருமொத்தமரர் திரளுமேத்தும் நரவாகவனன் வருணனிந்திரன்
கடுவு நான்]மறைகொள் முனிவர் வானவர் குணலமிட்டு
நடமாடவே
வரைகளிற் பெரியவடகிரிக்குமிசை மரதகக்குவடு போலவே

---

A என்கிறபடியே ஜீயர் புருஷகாரமாக "ஸௌம்யோபயந்த்ரு முநிநா மமதர்ஶிதௌ தௌ ஶ்ரீதேவராஜசரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்கிறபடியே ஸேவித்தருளி என்று தெலுங்கு பதிப் பில் அதிகபாடம்.

வரதர் கச்சிநகர் வருதனித்தெருவில் வடகலைக்கழகு
பொழியவே
அரவுதித்தமணிமகுடமுற்றவொரு வணிபிணைக்குடன் மிழற்றவே
கனகமொத்த தொருவடிவமொத்திவரு கருடனிற்பவனி
வருவரே

என்றநுபவித்து அதற்குப் பாசுரமிட்டருளி ஹ்ருஷ்டராயெழுந்தருளியிருந்து மற்றைத் திருநாள்களையும் ஸேவித்தருளி எழுந்தருளியிருக்க.

## அப்பாச்சியாரண்ணாவைக் கச்சியில் நித்யவாசம்பண்ண நியமித்தல்

ஸ்தலத்திலுள்ள பெரியோர்களெல்லாங் கூடியெழுந்தருளி, ''ஜீயர் மங்களாசாஸநஞ் செய்தருளுகையாலே இந்தவிசை திருவைசாகமஹோத்ஸவம் அதிவிலக்ஷணமாகக் கண்டருளினோம்'' என்று உகந்தருளக் கேட்டருளி, ஜீயர் அவர்களை ஆதரித்தருளி. கர்த்தவ்யாசாரபாகங்களையும் பரஸ்பரசேஷத்வ ஸௌஹார்தாவஶ்யகத்வத்தையும் திவ்யப்ரபந்தவாஸநாத்யாவஶ்யகத்தையும் அவர்களுக்கு உத்தரோத்தரம் அதிசயமாகவேணுமென்று அருளிச்செய்ய, எல்லோரும் ''அப்படியே யாகவேணும்; இவற்றிற்கெல்லாம் ஒருவரைச் சமர்ப்பித்தருளி அடியோங்களைத் திருத்திப்பணி கொள்ளும்படி இந்தஸ்தலத்திலே நித்யவாஸமாக நியமித்தருள வேண்டும்'' என்ன ஜீயரும் போரவுகந்தருளி வானமாமலை ஜீயரை இட்டு 'நம்முடைய அப்பாச்சியாரண்ணாவை அழைத்து வாரும்'' என்று நியமிக்க அவருமப்படியே செய்தருள, அப்பாச்யாரண்ணாவை எல்லார்க்குங்காட்டியருளி, ''இவரை நம்முடைய மர்யாதைக்காகவெண்ணி க்ருபைபண்ண வாருங்கோள்'' என்றருளிச்செய்து அவரையும் 'நீர் முதலியாண்டான் திருவம்சத்திலே அவதீர்ணராயிருக்கையாலே ஆண்டான், தோழப்பர், முதலானார்க்கு உகப்பாக நம்முடைய வாக்யாநுவிதாயியாய் இவர்களுக்கெல்லாம் ஹிதப்ரவர்த்தகராய்ப் பேரருளாளருக்கு மங்களாசாஸநபரராய் நித்ம வாஸம் பண்ணும்

ஶ்ரேயாம்ஸி கரிஶைலேந்த்ர: கருணா வருணாலய: |
தோதுஷ்யாத்வரதஶ் ஶ்ரீமா நர்த்திநாம் நிதிரவ்யய: ||

யாசிப்பவர்களுக்குக் குறையாத நிதியாய்க்கருணைக் கடலாய் ஹஸ்திகிரி நாதனாய் ஸ்ரீமானான வரந்தரும் பெருமாள் நன்மைகளை (உமக்குச்) சுரந்தருளுவாராக] என்று ஆசீர்வதித்தருளினார் A,

## ஜீயர் திருக்கடிகை, எறும்பி வழியாகத் திருமலை எழுந்தருளல்.

அநந்தரம் அட்பாவையுங் கூட்டிக் கொண்டு திருப்புட்குழி வழியாக எழுந்தருளி அங்கே *புட்குழி[illegible]ரற்றையும் ஸேவித்துப் புறப்பட்டு,

**கடிகாசலஶேகரம்ததோ நரஸிம்ஹம் நயநேநநிர்விஶங் |**
**உதஜீவயதர்ஶிதைரஜனைரவநீம் தாமபநீதபந்தனை: ||**

(பிறகு கடிகைத்தடங்குன்றுக்கு சிரோபூஷணமாயெழுந்தருளியுள்ள நரசிங்கப்பிரானைத் திருக்கண்களாலே பூர்ணமாயநுபவித்து, தம்மையாச்ரயித்தவர்களாய் அறுக்கப்பட்ட ஸம்ஸார பத்தத்தையுடைய சில மனிதர்களுடன் அந்த நாட்டை அநுக்ரஹித்தருளினார்) என்கிறபடியே *வண்டு வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகைத்தடங்குன்றேறவெழுந்தருளித் தக்கானையும் திருவடிதொழுது க்ராமாந்தரங்களினின்றும் அநுகூலராய் வந்து ஆச்ரயித்தவர்களையும் க்ருபை பண்ணியருளி, அநந்தரம் கடிகைத் தடங்குன்றின் மேல் ஏறியருளி *மிக்கார்வேதவிமலர் விழுங்கும் அக்காரக்கனியையநுபவித்தருளி, *அந்தியம்போதிலரியுருவாகியரியையழித்தவனைப் பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதும் என்கிறபடியே மங்களாசாஸனம் பண்ணி 'அங்கேயெழுந்தருளி நின்று எறும்பியைக் கடாக்ஷித்தருளி 'வட திருவரங்கம்'' என்று ஊருக்குத் திருநாமஞ்சாத்தியருளி அங்குண்டானவர்களெல்லாரையும் 'அழகிய-மணவாளதாஸ'ரென்று அபிமானித்தருளி அண்ணல்மலையருகே அரங்கமாநகராக்கி அநந்தரம் *வண்பூங்கடிகைக்கு *பண்டெல்லாம் வேங்கடம் என்று திருமலையோடே சேர்த்தியுண்டாகையாலே பொன்மணியை அணியார்ந்ததோர் மின்னைவேங்கடத்துச்சியில் கண்டு இப்படி ஸ்ரீநிதியாகிற பொருள்படைப்பாராக *ஒண்ணுதல் மாமையின்படியே மநோரதத்தையுடையராய் ''தேவம் திவ்யம் ஶேஷஶைலேவஸந்தம் தத்பாதாப்ஜம் வீக்ஷிதும்''-என்று வேங்கடத்தினுச்சியில் கோயில் கொண்டுள்ள தேவனின் திருவடி தொழுவாராக திருஅடிவாரமான திருப்பதியிலே மூந்துறவெழுந்தருள அங்குள்ள ஆசார்யபுருஷர்கள் முதலானோரனைவரும் எதிர்கொண்

---

A. இவ்விஷயம் தெலுங்குப்பதிப்பிலில்லை.

ஸேவிக்க அவர்களுடன் கூட கோவிந்தராஜப் பெருமாளைத் திரு வடிதொழுவதாக எழுந்தருளி ப்ரதமம் எம்பெருமானாரைத் திரு வடித்தொழுது, அவருகந்து எழுந்தருளப்பண்ணினவரென்று அத் யாதரத்துடனே ஸ்ரீகோவிந்த் ராஜப்பெருமாளையும் *கையினார் சுரிசங்கனலாழியர் என்கிற படியே அத்யாதரத்துடன் ஸேவித் தருளி கோவிந்தன் குணம்பாடி மங்களசாஸனம் பண்ணியருளி கோவிந்தன் தன்னடியாராயிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுடனே புறப்பட்டருளி திருமலையடிவாரத் திலே எழுந்தருளியிருக்கிற நம் மாழ்வார் முதலான ஆழ்வார்களையும்ம் *உலகுய்யமால் நின்ற என்று தொடங்கி மகிழ்மாறன் தாளிணையே உன் சரணாய் நெஞ்ச மேயுள் (திருவாய் நூற்,60) என்றும் *ஒழிவிலாக்காலம் என்று தொடங்கி *மிக்க நலஞ்சேர் மாறனை பூங்கழலை நெஞ்சே புகழ் (திருவாய் நூற்-23) என்றும் அநுஸந்தித்து ஸேவித்தருளி அன்றைக்கு அங்கே எழுந்தருளியிருந்து அங்குண்டானவர்களையும் க்ருபைபண்ணியருளி, பிற்றைநாள் *திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத்தைச் சென்றுவணங்கி, அநந்தரம் *மொய்த்த சோலை மொய்பூந்தடந்தாழ்வரே (திருவாய் 3-3-10) என்றும் *தேனேய் பொழில்சூழ்; திருவேங்கடமாமலை (திருமொழி 1-9-2) என்றும் ' அப்ராக்ருதமமேயஞ்ச ஸர்வரத்நமயம்கிரிம், ஹிரண்மயமஹாஶ்ருங்கம் பஞ்சோபநிஷதாத்மகம்'' (பஞ்சோபநிஷநயமாய் அபரா க்ருதமாய் அளவிடற்கு அரியதாய்ஸ்கலமணிமயமாய் பொன் மயமான பெரிய சிகரத்தையுடைத்தான 'திருமலையை என்கிற படியே அப்ராக்ருததிவ்வயபுஸ்ஸையுடைய திருமலை) யாழ் வாரையடைந்து வணங்கி, அப்பால் பரமபதத்துக்குப் படி யொழுங்கு போலேயிருக்கிற திருமலையிலே *தம்பாதேநாத்யாரோஹதி (கௌஷீடக் 1-5) என்னும் ப்ரதிபத்தியுடன் ஏறிஎழுந்தருளி காட்டழகியசிங்கரையும் திருவடி தொழுது *தேனாறுபாயுந் திரு வேங்கடத்திலுண்டான கானாறுகளையும் கண்டு களித்துக் கொண்டு அவ்வருகே எழுந்தருளுகிறவர் *விண்ணின் மீதியன்றே வேங்கடத்திலுண்டான விலங்கல் குடுமிகளையும் மின்திகழ் குடுமி களையும் கோல்தேன் பாய்ந்தொழுகும் தளிர்சோலைசூழ்ந்தவழகை யும் கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனைகளையும் செப்பார் திண்வரையையும் ஸேவித்துக்கொண்டு அப்பாலே எழுந்தருளி *காட்டில் வேங்கடத்திலுண்டான காட்டையும் வைகுந்தநாட்டுக் கொப்பான வடவேங்கடநாட்டையுமநுபவித்து *மாலுகந்தவூ ரான ஊரருகேயெழுந்தருளி *நன்மணிவண்ணன் (நான்.திரு. 47) என்ற பாட்டின்படியே அங்குண்டான அபூர்வங்களையெல்லாம்

ஆஶ்சர்யத்துடனே அநுபவித்து, *கண்ணன் விண்ணூரைத் தொழுதுஊரருகே, ஸேவித்துக்கொண்டு நிற்க அவ்வளவில் *வெங்கடத்தைப் பதியாக வாழுகிற கோயில்கேள்வி ஜீயர்களும் ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றெல்லாரும் வந்தெதிர் கொண்டு ஸேவிக்க, அவர்களை *நிகரிலமரர் முனிக்கணங்கள் என்று ப்ரதிபத்திபண்ணியருளி அவர்களுடனே கூடத் திருவேங்கட நகரைப்ரவேசித்து அவ்வருகே வைகுந்தன் திருவாசல், அவாவறச்சூழ்ந்தான் திருவாசல், என்கிற திருவாசல்களையும் தண்டன் ஸமர்ப்பித்து ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி அங்கே அநந்தாழ்வான் கைங்கர்யமான ''இராமானுசன்'' என்கிற திருநந்தவனத்தையும் மற்றுமுண்டான திருநந்தவனங்களையும் திருப்பூமண்டபங்களையும் ஸேவித்து திருவுள்ளமுகந்தருளி, பின்பு திருக்கோனேரியிலே நீராடி த்வாதச ஊர்த்வபுண்ட்ரங்களையும் தரித்தருளி *மேலொருநாள் மண்கோட்டுக்கொண்டான் மலை (மூன்-திரு-45) என்கிறபடியே *ஏறிதிரையையும் முற்றும் ஏனத்துருவாயிடந்த க்ஷேத்ராதிபயான ஞானப்பிரானையும் ஸேவித்து *ஊனேறு செல்வத்தை (பெரு.திரு.4) அநுஸந்தித்து அங்குண்டான திர்யக்ஸ்தாவரஜந்மங்களை ப்ரார்த்தியாநின்றுகொண்டு கோனேரி வாழுங்குருகு தொடக்கமான பக்ஷிஸங்கங்களையும் தம்பகமாய் நிற்கும் தவமுடையாரையும் அநுபவித்துகொண்டு, பெரிய திருக்கோபுரத்துக்கருகே தண்டன் ஸமர்ப்பித்து உள்ளே புகுந்து, நம்பெருமாள் எழுந்தருளியிருந்த அழகிய மணவாளன் திருமண்டபத்தையும் ஸேவித்தருளி

1. ஸ்ரீமதிமஹிதித்வாரா சிஞ்சாம் காஞ்சநமயஞ்ச பலிபீடம் |
ஸ்தாநமதயாமுநேயம் சம்பகதருஸம்பதம் ப்ரதீஹாரம் ॥
விநதாதநய மஹாநஸ மணிமண்டபம் கநகமய விமாநவரம் |
ப்ருதநாபதி யதிதுர்யௌ நரஹரிமதநமத ஜாநகீஜாநிம் ॥

2. அதபுநரநக மணித்யுதி கவசித கமலாநிவாஸ புஜமத்யம் |
கலயதகமலவிலோசந மஞ்ஜுந கிரிநிதி மநஞ்ஜநம் புருஷம் ॥

. ஶரணமய மித்யங்க்ரிம் நிர்திஶ்ய தக்ஷிணபாணிநா
கரகிஸலயம் ஸவ்யம் ஸவ்யோருஸீம்நி ஸமர்ப்பயந் |
மணிகணமஹோமக்நே வக்ஷஸ்ஸ்தலே தததிந்திராம்
பவதபிமத ஸ்ரீமாநஸ்மாகமஸ்து பரம்பதம் ॥

(பெரியதிருவாயிலில் அந்தாணிப்புளியையும் பொன்மயமானபலிபீடத்தையும் அதன்பின்னர் 'யமுனைத்துறைவர்' என்கிற புஷ்பமண்டபத்தையும் செண்பகவ்ருக்ஷஸம்பத்தையுடைய செண்பகத்திரு

வாசலையும் பெரியதிருவடி நாயனாரையும் திருமடைப் பள்ளியையும் திருமாமணி மண்டபத்தையும், தங்கத்தால் சமைந்த ஆநந்த நிலயவிமானத்தையும், சேனை முதல்வரையும்,யதிராசனாரையும், நரசிங்கப்பிரானையும் பின்னர் இராமபிரானையும் வணங்கக் கடவீராக. (2) பின்னர் தோஷமற்றமணிகளின் காந்தியால் வியாபிக்கப்பெற்றதாய்ப் பெரிய பிராட்டியாருக்கு இருப்பிடமான திருமார்பையுடையனாய் செந்தாமரையையொத்த திருக்கண்களையுடையனாய் அஞ்ஜநகிரிநிதியாய் ஹேய ப்ரதிபடனாய் பரமபுருஷனை திருவேங்கடமுடையானை கண்ணாரக் கண்டு களிக்கக்கடவீர்கள் (3) இந்தத்திருவடிகளே உங்களுக்கு மோக்ஷோபாயம் என்று வலது திருக்கையால் காட்டிக்கொண்டு, தளிர்போன்ற இடது திருக்கையை இடது திருத்தொடைப்ரதேசத்தில் வைத்திருப்பவராய், ரத்நங்களின் ஒளியில் மூழ்கின திருமார்பில் பெரியபிராட்டியாரைத் தரிக்குமவனாய் உங்களுக்கு ப்ரியதமனான திருவேங்கடமுடையான் ஸ்ரீநிவாஸன் நமக்கு மேலான ப்ராப்யஸ்தானமாக ஆகக் கடவன்] என்கிறதடியே திருவேங்கடமுடையானைத்திருவடி தொழுவதாக ஸேவாக்ரமத்தில் அடைவே அத்தாணிப்புளி, ஸ்ரீபலிபீடம், யமுனைத்துறைவனென்கிற திருப்பூமண்டபம், செண்பகத்திருவாசல், பெரியதிருவடி, திருமடைப்பள்ளி, திருமாமணி மண்டபம், திவ்யவிமானம், முதலானவற்றையும் ஸேவித்தருளி, அநந்தரம் சேனைமுதலியாரையும் திருவடி தொழுது *நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் நிறைவேங்கடப் பொற்குன்றமும் என்றும் *இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் என்றும் இத்யாதிகளை அநுஸந்தித்து எம்பெருமானாரையும் ஸேவித்து அவருடைய அநுமதியோடே புறப்பட்டருளி *தூயனாயதனூடரியாய் என்றநுஸந்தித்தருளி *திருவேங்கடத்தரியையும் ஸேவித்து, வென்று மாலையிட்டான் திருமண்டபத்தேயெழுந்தருளி *தாயேதந்தை என்று தொடங்கி *நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே என்று கண்டன் ஸமர்ப்பித்து உள்ளேபுக்கு, பின்பு *மிடைந்த ஏழ்மரங்களுமடங்கவெய்து வேங்கடமடைந்தமாலான சக்ரவர்த்தி திருமகன் திருவடிகளையடைந்து.. அப்பால் *அவன் தாளிணைக்கீழ்ப்புகும் காதலையுடையராய்க்குலசேகரன்படியருகே சென்று *அகலகில்லேன் என்று பூர்வாக்யப்ரக்லரியையாலே *அடிக்கீழமர்ந்து புகுந்து நின்று ஸேவித்தருளி, அநந்தரம் *செங்கமலக் கழலில்படியே.

திருமகள் மருவுமிருபதமலரு முழந்தாள்களுங்குறங்குந்தாங்கு
செக்கரம்மாமுகில்போலத் திருவரைச் செம்பொனம்பரமும்
அருமைசேர் சீராவு மயனைத்தந்ததோருந்தியுமமுதமாருதர
பந்தமும்
அலர்மேல்மங்கையுறைதிருமார்வமு மாரமும் பதக்கனன்னிரையும்
பெருவரையனையபுய மொருநான்கும் பிறங்கடலாழியுஞ்சங்கும்
பெறுதிவமென்று காட்டியகரமும் பிடித்ததோர் மருங்கினிற்கறமும்
ஒருமதியெனவே சோதிசேர்முகமு முயர்திருவேங்கடத்துறைபு
மொப்பிலாவப்பன்கருணை சேர்விழியு மென்னுளெலாம் நிறைந்து
நின்றனவே

என்று பாதாதிகேசமாக அநுபவித்தருளி *அலங்கல்துளபமுடியையும் *திருத்தியகோறம்பையும் *சுற்றுமொளிவட்டஞ்சூழ்ந்து சோதிபரத்த *கோளிழைவாள் முகத்தையும் அதில் *தன்முகத்துச்சுட்டியையும், திருநெற்றியில் சாத்தின முத்தின்திருநாமத்தையும் ''வெண்ணெயுண்டான் திருமுக்கு'' என்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணலாம்படி புழுகிலே முழுகியிருக்கிற *கோலநீள்கொடிமூக்கையும் *தாமரைசகட்கனிவாயையும், *வார்காதிலே சாத்தின *இலகுமகரகுண்டலங்களையும் *உலகமுண்ட பெருவாயாலே *அண்டமுநாடுமடங்க விழுங்கியகண்டத்தையும் அத்திருக்கழுத்தினில் காறையையும் *அலர்மேல் மங்கையுறைமார்வையும், அதில் *பவளவாய்ப்பூமகளும் பன்மணிப்பூணாரமுமான சேர்த்தியையும், அத்தோடு சேர்ந்த வெண்புரிநூலையும் *வடவேங்கடவனுடைய மல்லார்தோள்களையும் அதிலே சாத்தின *தண்டுழாய் விரைநாறு கண்ணியையும் திருக்கைகளிலே தரித்த வலம்புரி ஆழியையும் அவற்றிற்குப் பரபாகாவஹமான *வண்ணமருள் கொளணிமேக வண்ணத்தையும், *உய்யவுலகு படைத்துண்டமணிவயிற்றையும் அதில்திருவுதரபந்தநத்தையும். அதுக்கநந்தரபாவியாய் உடையார் கனமணியோடொண்மாதுளம்பூ இடைவிரவிக்கோத்த வெழில் தெழ்கினோடும் பொன்னரைநாணொடு மாணிக்கக் கிண்கிணியையும் *பெருமானரையில் பீதகவண்ணவாடை என்று ப்ரணயினிகள் வாய் புலற்றும்படியான அந்திபோல் நிறத்தாடையையும் * பல்லிநுண்பற்றுகச்சாத்தின உடைவாளையும், புரிந்து மலரிடுகிற புண்டரீகப்பாதமான *பூவார்கழல்களையும் அதில் அதிர்கழல்சதங்கைகளையுமுடைய திருவேங்கடமுடையானை *என்னம்புகுந்து தித்திக்குமமுதே என்கிறபடியே கேசாதி பாதாந்தமாக அநுபவித்தருளி ப்ரீதராய்த் திருப்பல்லாண்டு

தொடவகி அநுஸந்தித்து, மங்களாசாஸனம்பண்ணி, பர்யாப்தி பிறவாமையாலே.

**மங்களம் மாநுஷேலோகே வைகுண்டமதி திஷ்டதே |**
**ஶேஷஶைலநிவாஸாய ஶ்ரீநிவாஸாய மங்களம் ॥**

*மானிடவுலகில் ஸ்ரீவைகுண்டமான திருமலையில் எழுந்தருளியிருக்கிற திருவேங்கடவனுக்கு மங்களமுண்டாகவேணும்; என்று மங்களாசாஸநம்பண்ணியருளி.*

**ஸௌம்யோபயந்த்ருமுநிநா மமதர்ஶிதௌ தே |**
**ஶ்ரீவேங்கடேஶ சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥**

*ஆசார்யரான ஸ்ரீமணவாளமாமுனிகளாலே அடியேனுக்குப்புகலாகக் காட்டியருளப்பட்ட ஸ்ரீவேங்கடேசபாதகமலங்களைப்புகலாகப் பற்றுகிறேன் என்கிறபடியே எல்லார்க்கும் புகலாக *அடிக்கீழமர்ந்துபுகுந்து அடியீர்வாழ்மின் என்று திருவடியைக்காட்டியருள அவனும் *மலைமேல்தான் நின்று என் மனத்துளிருந்தான் என்கிறபடியே இவர்திருவுள்ளத்தைக் கணிசித்துக்கொண்டிருந்து இப்போது இவரைப் பெற்றவாறே "ஸ்ரீமத்ஸுந்தரஜாமாத்ருமுநிமாநஸ வாஸிநே" என்னும்படி இவர் திருவுள்ளத்தைத் தனக்கு ஆவாஸஸ்தாநமாக விரும்ப, *எந்தாய்-வந்தாய் (திருவாய் 2-6-9, திருமொழி 1-10-9) என்கிற பாட்டுக்களின்படியே *இனியெங்குப்போகின்றதே, *நிகரில்புகழான வாத்ஸல்யாதி குணங்களுக்குத்தோற்று அதிலே ஈடுபட்டு, *ஒழிவில்காலம் என்கிறபடியே உத்தரவாக்யத்தில் கைங்கர்யப்ரார்த்தனையையும் பண்ணியருளாநிற்கிறவளவிலே, தீர்த்தம், ப்ரஸாதம், ஸ்ரீசடகோபன், பூவார் கழல்கள் முதலான வரிசைகளெல்லாம் ப்ரஸாதிக்கப் பெற்று க்ருதார்த்தராய் புறப்பட்டருளி "கதிசந திவஸாநி தாம்நி தஸ்மிந் கமலவிலோசநமேந மீக்ஷமாண:,'- சில நாட்கள் செந்தாமரைக் கண்ணனை இவ்வெம்பெருமானை ஸேவித்துக்கொண்டு அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார் என்கிறபடியே அங்கே சிறிது நாளெழுந்தருளியிருந்து அங்குண்டானவர்களையும் அபிமானித்துதருளி இது *விண்ணோர் வெற்பாயிருக்கிறது என்றருளிச் செய்து அங்குள்ளவைபவங்களையெல்லாம் ஸேவித்தருளிப் புறப்பட்டவளவிலே அங்குள்ளார் "இங்குத்தைக்குப்பரிவராயிருப்பாரொருவரைக் கற்பித்தருள வேணும்" என்ன, எம்பெருமானார் ஜீயரைக் கற்பித்தருளினார். A*

---

A திருவேங்கடவனுடைய ஐச்வர்யங்களை ரக்ஷித்து நிர்வஹிக்க பகவத்ராமாநுஜர் "ஸ்ரீஸேநாபதிஜீயர்" என்றபட்டப்பெயருடன் ஒரு ஏகாங்கியை நியமித்ததாக அநந்தார்யர் அருளிச் செய்த ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸமாலை கூறுகிறது. பின்னர்

அவ்விராமாநுஜரே அந்த ஏகாங்கிக்கு ஸந்யாஸாஶ்ரமம் தந்து "அப்பன் திருவேங்கட சடகோபஜீயர்" என்ற திரு நாமத்துடன் கோயில் கார்ய நிர்வாஹகராக நியமித்து அவருக்குத் துணையாக நாலு ஏகாங்கிகளை ஏற்படுத்தியாக இதிஹாஸ மாலை கூறுகிறது. இவருக்குக் "கோயில் கேள்வி ஜீயா ' என்ற பிருதும் உண்டு. பின்னர் பெரிய கேள்வி ஜீயர் என்றும் சிறிய கேள்வி ஜீயர் என்றும் இரண்டு ஜீயர் ஸ்வாமிகள் பெரியவருக்கு சிறியவர் இளவரசாக நியமனம் பெற்றதாகத் தெரிகிறது. மணவாளமா முனிகள் "சிறிது காலம்" திருமலை-திருப்பதியில் தங்கியிருந்ததாக யதீந்த்ரப்ரவணப்ரபாவமாகிற இந்நூலில் சொல்லப்பட்டுள்ளது. இந்த சிறிது காலம் ஒன்றிரண்டு ஆண்டுகள் இருக்கலாம் பிள்ளை லோகாசாரியர் காலத்துக்குப் பின்னர் ராமாநுஜார்ய திவ் யாஜ்ஞை என்று திருவரங்கம் திருவேங்கடம் முதலான இடங் களில் நடந்து வந்த கட்டுக்கோப்பு கலக கலாபாங்கள் காரண மாகக் குலைந்து, பின்னர் மணவாள மாமுனிகள் காலத்தில் ராமா நுஜார்ய திவ்யாஜ்ஞை வரவரமுநி திவ்யாஜ்ஞையாக நிலை நாட்டப்பட்டது. "கோயில் கேட்கும் எம்பெருமானார் ஜீயர்" என் பவர் [கி பி] 1445ம் ஆண்டு T T கல்வெட்டில் பேசப்படுகிறார். 1370 1443-என்ற காலத்தில் வாழ்ந்திருந்த மணவாள மாமுனிகள் நிய மித்த ஜீயர் இவரே என்பது தெளிவாகிறது. இவர் திருமங்கையாழ் வார் கோயிலுக்கு தருமகர்த்தரானபடியால் இவர் சின்ன ஜீயரே யாவர் என்று கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து ஊகிக்க முடிகிறது திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடான [திருப்பதி, 1953] "திருமலையொழுகு" என்ற திருமலைதிருப்பதி ஐதிஹ்யமாலையில் "சகாப்தம் 379 விகாரி வருஷம் தைமீ அப்பன் சடகோப ஜீயரை பகவத்ராமாநுஜர் கோயில் கேள்வி ஜீயராகப்பட்டாபிஷேகம் செய்வித்ததாகவும் அவரும் 45 ஆண்டுகள் கைங்கர்யத்துக்குப்பின் ஜய வருஷத்தில் தமக்கு இளவரசாக அழகியமணவாளஜீயர் என் பவரை நியமித்ததாக" காணப்படுகிறது [பக்.125]. இதே நூலில் [பக் 104) காண்பது: "முன்னாளில் ஸ்ரீராமாநுஜ தரிசநப்ரவர்த்தக ரான ?மணவாள மாமுனியானவர் திருப்பதிக்கெழுந்தருளித் தேசாதிபதியை ஆசீர்வதித்து ஸ்தலத்திலே மதாந்தரஸ்தராலே உபத்ரவம் வராதபடிக்கு ஒரு உத்தமாச்ரமியை ஸ்தலாதிப தியாகக்கவேணுமென்று சிந்தித்து, தம்முடைய சிஷ்யராய், கோயிலில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்ரீபண்டாரத்துக்கு நிர்வாஹ கராய் இருக்கிறப் போலே திருமலைக்கு உத்தாரகராய் நிக்ரஹா நுக்ரஹஸமர்த்தரான ஒரு ஜீயரைக் "கோயில் கேள்வித்திருவேங் கட ஜீயர்" என்று திருநாமம் சாத்தி தேசாதிபதி அநுமதி

**ஜீயர் திருவாலிதிருநகரியில் திருமங்கையாழ்வாரை ஸேவித்தது**

*அநந்தரம் :*

**அஹிராஜஶைலமபிதோ நிரந்தரம் ப்ருதநாஸதே நஸவிலோகயந் தத: |**
**அவருஹ்ய திவ்யநகரம் ரமாஸ்பதம் புஜகேஶயம் புநருபேத்யபூருஷம் ||**

"அந்த மணவாளமாமுனிகள் தாம் சிஷ்யஜநபரிவாரத்துடன் திருமலைக்கு நான்கு புரத்திலும் இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டே அம்மலையினின்றும் இறங்கி திவ்யநகரமான கீழ்த்திருப்பதியை அடைந்து மறுபடியும் பெரிய பிராட்டியாருக்கு இருப்பிட

---

கொண்டு அர்ச்சகர் முதலான ஸமஸ்தபரிகரங்களையும் ஸ்தல நிர்வாஹகரான "ஆழ்வார் கோவிந்த ஜீயர்" என்ற ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவரையும் திருவேங்கட ஜீயர் அதீனமாக்கி இவர்களெல்லாருக்கும் இவர் சிக்ஷகராயும் ரக்ஷகராயும், திருவேங்கடச் செல்வத்துக்கு வர்த்தகராயும் தேசாதிபதிக்கு பகவத்தர்மோபதேஷ்டாவாயும் கல்பித்து, எம்பெருமானார் திருமேனி முத்ரையாக ஒரு முத்ரை மோதிரத்தைப் பண்ணி ஜீயரைத் தரிக்கச் சொல்லிக் கொடுத்து விஷ்வக்ஸேந முத்ராஸூசிதமாக எம்பெருமானார் நியமனஸித்தமாய் ஏகாங்கி பரம்பராப்ராப்தமான கண்டா, கடாரி, ஹநுமத்த்வஜங்களையும் அவர் வசம்பண்ணி, கைங்கர்ய யாத்ரா காலங்களிலே கண்டாநாத ஹநுமத்த்வஜ புரஸ்ஸரமாக ஸஞ்சாரம் பண்ணுமென்று நியமித்து: [illegible] XXX ஸ்ரீராமாநுஜபுரத்திலே ஜீயருக்கு ஒரு மடமும் ஸங்கல்பித்துக் கொடுத்து திருவேங்கட ஜீயர் ஜ்ஞாநஸந்தான பரம்பராந்தர்பூதரான ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர்களில்தானே திருமலை ஸ்தானத்துக்கு தத்தத்காலங்களிலே உத்தமாச்ரமியாய் மடாதிபதியாய்த் திருவேங்கட நாட்டுக்கும் திருவேங்கடச் செல்வத்துக்கு கர்த்தாவாகவும் நியமித்துக்கோயிலுக்கு கெழுந்தருளினார்." இதுவரை மலையொழுகு நூலில் காண்பவை.

**குறிப்பு :** எம்பெருமானார் நியமித்த ஸ்தலாதிகாரி ஜீயருக்கு திருவடி [அனுமான்] முத்ரையாக ஒரு முத்ராங்குளீயகத்தை தரிக்திருக்கும்படி எம்பெருமானார் நியமலம் [திருமலையொழுகு, பக், 42] மணவாளமாமுனிகள் நியமித்த ஜீயருக்கு எம்பெருமனார் முத்ரையுள்ள அங்குளீயகம் என்று சொல்லியுள்ளபடியால் இவர் எம்பெருமானார் ஜீயர் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவரே சின்ன ஜீயர் என்றும் தெரிய வருகிறது. **ஆசிரியர்.**

மாய்த்திருவனந்தாழ்வான் மேல் பள்ளிகொண்டிருக்கிற பரம புருஷனை கோவிந்தராஜனை ஸேவித்தார். என்கிறபடியே அங்கு நின்றுமிறங்கி 'யெழுந்தருளி ஸ்ரீகோவிந்தராஜப் பெருமானையும் 'குளிரருவிவேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடுவாராய் அநுப வித்துப் புறப்பட்டருளி, திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி முத லான திருப்பதிகளெங்கும் திருவடிதொழுது பெருமாள் கோயி லேற வெழுந்தருளி பேரருளாளரையும் திருவடிதொழுது, அங்கு நின்றும் அவரநுமதியுடனே புறப்பட்டருளி மண்ணில் பெரிய மதுராந்தகத்தேற எழுந்தருளி.

**மருமலர் கமஞ்சோலை மதுரைமாநகர் வந்தெய்தி**
**அருள்பொழி பெரியநம்பியன்றெதிராசராசற்கு**
**அரும்பொருள் வழங்கு மெங்களேரிகாத்தருள்வார் கோயில்**
**திருமகிழடியிற்செல்வீர் தீவினைதீருமாறே**

என்று அங்கேறவெழுந்தருளி,

**இதுவோ கிளியாறிவ்வூரோ திருமதுரை?**
**இதுவோ திருமகிழுங்கோபுரமு— மிதுவோ**
**பெரியநம்பிதாமுகந்து பின்னு மெதிராசர்க்குத்**
**துயமளித்த தூயப்பதி.**

என்று அங்கே தண்டன் ஸமர்ப்பித்து அத்யந்த ஹ்ருஷ்டராய் அற்றைக்கங்கே எழுந்தருளியிருந்து பிற்றைநாள் புறப்பட்டு திருச்சித்திரக்கூடத்தேற வெழுந்தருளி கோவிந்தராஜரையும் திருவடிதொழுது. அநந்தரம் சோழ மண்டலத்திலுண்டான திருப்பதிகளைத் திருவடிதொழுவாராக மனோரதித்துக் கொண்டு புறப்பட்டருளி அப்படியே வழியிலுள்ள திவ்யதேசங்களையும் மங்களாசாஸநம் செய்தருளி, பின்பு திருவாலி திருநகரியேற வெழுந்தருளித் திருமங்கையாழ்வாரைத திருவடி தொழுது

**உறைகழித்த Aவேலையொத்த விழிமடந்தை மாதர்மேல்**
**B உறையவைத்த மனமொழித்தவ் வுலகளந்த நம்பிமேல்**
**குறையை வைத்து மடலெடுத்த குறையலாளி திருமணங்**
**கொல்லைதன்னில் வழிபறித்த குற்றமற்ற செங்கையான்**
**மறையன்வைத்தC மந்திரத்தை மாலுரைக்க வவன்முன்னே**
**மடியொதுக்கி மனமொடுக்கி வாய்புதைத்தவ் வொசன்னலர்**
**கறைகுளித்த வேலணைத்துநின்ற விந்தநிலைமையென்**
**கண்ணைவிட்டகன்றிடாது கலியனுணையாணையே** என்றும்

---

A. வாளையொத்த; B. உருகவைத்த; C மறையுரைத்த என்றும் பாடங்கள்.

அணைத்த வேலும் தொழுகையும், அழுத்தியதிருநாமமும்.
ஓமென்ற வாயும், உயர்ந்த மூக்கும், குளிர்ந்த முகமும்,
பரந்தவிழியும், இருண்ட குழலும், சுருண்ட வளையமும்,
வடித்தகாதும், மலர்ந்தகாதுகாப்பும், தாழ்ந்தசெவியும்
செறிந்தகழுத்தும், அகன்றமார்பும், திரண்டதோளும்
நெளித்த முதுகும் குவிந்த இடையும், அல்லிக்கயிறும்
அழுந்திய சீராவும், தூக்கியகருங்கோவையும்'
தொங்கலுந்தனிமாலையும்,சாத்திய திருத்தண்டையும்,
சதிரான வீரக்கழலும் நந்திமிட்ட கணைக்காலும்.
குளிரவைத்த திருவடிமலரும், மருவலர்தமுடல் துணிய
வாள்வீசும் பரகாலன் மங்கைமன்னரான வடிவே என்றும்

ஐயனருள்மாறி செய்யவடிவிணைகள் வாழியே
அந்துகிலும் சீராவுமணையுமரை வாழியே
மையிலகுவேலணைத்த வண்மை மிக வாழியே
மாறுமல் அஞ்சலிசெய் மலர்க்கரங்கள் வாழியே
செய்யகலனுடனலங்கல் சேர்மார்பும் வாழியே
திண்புயமும் பணிந்த திருக்கழுத்தும் வாழியே
மையல் செய்புமுகமுறுவல் மலர்க்கண்கள் வாழியே
மன்னுமுடித்தொப்பாரம் வலயமுடன் வாழியே

என்றும் ஈடுபட்டு,

வேலணைத்த மார்வும் விளங்குதிருவெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்தவலச் செவியும்—காலணைத்த
தண்டையும் வீரக்கழலுந் தார்க்கலியன் வாண்முகமும்
கண்டுகளிக்குமென் கண்.

என்று அவர் மந்த்ரலாபத்துக்கு நின்ற நிலையிலே மக்நமநாவாய் அநுபவித்து மங்களாசாஸனஞ்செய்தருளி பரகாலர்க்கு பரமப்ரீதி கரரான வயலாலி மணவாளரையும் ஸேவித்துப் புறப்பட்டுத் திருமணங்கொல்லையேறவெழுந்தருளி

ஈதோ திருவரசு? ஈதோ மணங்கொல்லை
ஈதோ எழிலாலி என்னுமூர்—ஈதோதான்
வெட்டுங்கலியன் வேலைவெட்டி நெடுமால்
எட்டெழுத்தும் பறித்தவிடம்!

என்று அவ்விடத்தையும் ஸேவித்துப் புறப்பட்டருளி,

*நீணிலாமுற்றத்து நின்றிவள் நோக்கினுள், காணு மோகண்ணபுரமென்று காட்டினுள் என்கிறபடியே திருக்கண்ண புரத்திலே திருவுள்ளஞ் சென்று *இன்றே சென்று திருக்கண்ண புரம் புக்கு. என்கிறபடியே அதித்வரையுடனே அங்கேறவெழுந் தருளி கருவரை போல் நின்ருனையும் ஸர்வாங்கஸுந்தரரான சௌரிராஜனையும் ஸேவித்தருளி *கண்ணபுரத்தடியன் என்றதுவே நிருபகமான திருமங்கையாழ்வாரையும் அங்கேயேறியருளப் பண்ணி, *காலின் மணிகரை யலைக்கும் கணபுரத்தினின்றும் போந்து *வாவித்தடஞ்சூழ் மணிமுத்தாற்றின் நறையூர் நெடு மாலான நம்பியையும் நாய்ச்சியாரையும் ஸேவித்துப்புறப்பட்டு *செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தையிலே சேர்ந்து ஆராவ முதாழ்வாருடைய * ஏரார் கோலத்திருவுருவையுந் திருவடி தொழுது, அங்கு நின்றும் புறப்பட்டருளி. *திருமால் சென்று சேர் விடமான தென்திருப்பேரையில் சென்று திருப்பேர்நகரானை யும் திருவடிதொழுது அங்குநின்றும் புறப்பட்டருளி *மாமலராள் புணர்ந்தபொன்மார்வன் பொருந்தும்பதிதொறும் புக்குநிற்கும் என்றும்,

**திவ்யாநிதத்ரநகராணி திகந்தராளேர்தேவேநயாநி ஹரிணு**
**விஷயீக்ருதாநி**
**ஸத்யம் த்வதீக்ஷணஸம்ர்த்த மஹோத்ஸவாநி தந்யாநி தாநி**
**ஜகதம் ஶமயந்த்வகாநி**

[அவ்விடத்தில் திங்மத்யத்தில் எந்த திவ்யதேசங்கள் எம்பெருமா னுலே ஆச்ரயிக்கப்பட்டனவோ, தேவரீருடைய கடாக்ஷத்தால் ஸம்பூர்ணமான விசேஷாத்ஸவங்களையுடையனவாய் தந்யங்களான அந்த திவ்யதேசங்கள் லோகங்களுடைய ஸகல பாபங்களையும் போக்கக்கடவன.]

என்றுஞ்சொல்லுகிறபடியே மற்றுமுண்டான திருப்பதிகளையும் மங்களாசாஸநம் பண்ணியருளி, தையல்நல்லார்குழல்மாலையும் மற்றவர்தட முலைச்செய்யசாந்தும் கலந்திழிபுனல்சூழ் தென்னரங் கத்தே சென்று பெரியபெருமாளையும் ''ஏஷப்ரஹ்மப்ரவிஷ் டோஸ்தி க்ரீஷ்மே ஶீதமிவஹ்ரதம்' [இந்த நான் க்ரீஷ்மகாலத் தில் குளிர்ந்திருக்கிற மடுவில்போல் பரப்ரஹ்மத்தில் மூழ்கினலுகி றேன்] என்றும், *பொற்றாமரைக்கயம் நீராடப்போனுள் என்றுஞ்சொல்லுகிறபடியே விடாய்கெட படிந்து குடைந்தாடி யநுபவிந்து தீர்த்தப்ரஸாதம் பெற்று ஹ்ருஷ்டராய்ப் புறப்பட்டு;

**அப்பாச்சியாரண்ணவை பெருமாள் கோயிலுக்கு நியமித்தது**

தமக்கிருப்பான திருவரங்கன் திருப்பதியிலேயெழுந்தருளி பெருமாளை ஸேவித்து,

**யதீந்த்ரப்ரவணப்ரபாவம்-21**

**சித்ராணி தீப்ததரரத்நவிபூஷணாநி சத்ராணி சாமரயுகம் வ்யஜநாஸநாநி |**
**தந்நாமலாஞ்சநயுதாநி ததௌ ததைவ ரங்காதிபாய தயிதா ஸஹிதாய தஸ்மை ||**

*[அந்த அழகியமணவாளனுடைய திருநாமத்துடனும் சங்கு சக்கரம் முதலிய அடையாளங்களுடனும் கூடியிருக்கிற-ஆச்சர்ய கரமாய் மிகவும் ப்ரகாசியா நின்ற ரத்நமயமான திருவாபரணங்களையும் திருவெண்கொற்றக்குடைகளையும் திருவெண்சாமரங்களையும் திருவாலவட்டங்களையும் சித்ராஸநங்களையும், பெரிய பிராட்டியாருடன் கூடியிருக்கிற அந்த அழகியமணவாளன் பொருட்டு அப்போதே ஸமர்ப்பித்தார்.]* என்னும்படி தாம் கொண்டெழுந்தருளின திருவாபரணங்கள், திருவெண்கொற்றக் குடை. திருவெண்சாமரம், திருவாலவட்டம், ரத்நகம்பளம், திருமெத்தை முதலான வஸ்துக்களெல்லாவற்றையும் ஸமர்ப்பித்து மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க' பெருமாளும் மிகவுமுகந்தருளி. தீர்த்தம், ஸ்ரீசடகோபன் முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்தருளி உத்தமநம்பி பிள்ளையை கோயில் பரிகரமனைத்துக்கொத்துடனே வரிசையாக ஜீயரை மடத்திலே விட்டுவரவென்று அருள்பாடிட்டருள, அவரும் அப்படியே அஷ்டாதசவாத்யங்களுடனே மஹோத்ஸவமாக மடத்திலே எழுந்தருளப்பண்ணினார். நம் பெரியஜீயரும், மடத்திலேயெழுந்தருளியிருக்கிற அப்பிள்ளை, திருவாழியாழ்வார் பிள்ளை தொடக்கமான பெரியோர்களையும் மற்றும் கைங்கர்யபரராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களையும் க்ருபை பண்ணியருளி திருமலை பெருமாள்கோயில் தொடக்கமான திவ்யதேசங்களினின்றும் கொண்டெழுந்தருளின தீர்த்தப்ரஸாதங்களையும் விநியோகம் செய்தருளி;

அப்பாச்சியாரண்ணாவை அழைத்தருளி முன்நியமனப்படிக்கு பெருமாள்கோயிலுக்கு நியமித்தருள, அவரும் "இந்தஸேவையையும் கோஷ்டியையும் விட்டு விடைகொள்ளவல்லேனோ?" என்று வ்யாகுலப்பட, ஜீயர் அவர்கையைப்பிடித்துக்கொண்டு ஸந்நிதியிலேயெழுந்தருளி தாம் அடிதொடங்கி "இராமனுசன்" என்று திருநாமம்சாத்தி பஹுநாளாண்டதாய் ஜீர்ணமாயிருக்கிற தீர்த்தச்செம்பு ஸ்வாமியுடைய ப்ரஸாதமென்று வானமாமலை ஜீயர் தமது திருமண்கூடையிலே வைத்து ஸேவித்துக்கொண்டிருக்

கிறதைக் கொண்டுவரச்சொல்லி திருக்கையிலேவாங்கிக் கொண்டு முன்னிருந்த இராமானுசன் என்கிற விலாஸமும், திருவாழி திருச்சங்கு, திருமண் ஸ்ரீசூர்ணம் எல்லாம் பரிமுஷிதமாயும் ஜீர்ணமாயுமிருப்பதனாலே, நம்மைப்போலிருக்கிற இரண்டு விக்ரஹங்கள் இத்தையிட்டு உண்டாக்கி "உம்முடைய ஆசாரியருக்கு ஒரு விக்ரஹமும் உமக்கு ஒரு விக்ஹேமுமாகக் கொள்ளும்" என்று ஸாதித்தருளி, கோயிலாழ்வாரிலே எழுந்தருளியிருக்கிற "என்னைத் தீமனங்கெடுத்தார்" ஆட்கொண்டவில்லி ஜீயர் திருவாராதனமாய் எழுந்தருளியிருந்தவராகையாலே, அவர் திருவடிகளுக்கு அந்தரங்கரான கந்தாடையாண்டான் திருவம்சமாக அவருடைய கைங்கர்யம் போலே நீரும் கைங்கர்யம்பண்ணத்தக்கவராகையாலே உமக்கு இவர் திருவாரதனம் என்று உகந்து ஸாதித்தருளி கோஷ்டியிலே எழுந்தருளி

**ஸ்ரீதீர்த்ததேவராஜார்யதநயாம்பேதி விஶ்ருதா |**
**தஸ்யாஸ்தநூஜோ வரத: காஞ்சீநகரபூஷண: ||**

*[திருமஞ்சனம் அப்பா என்ற தேவராஜார்யரின் குமாரத்தியாய் ஆய்ச்சி—அம்பா என்று அறியப்பட்டவரின் குமாரரான வரதாசாரியர் (அப்பாச்சியாரண்ணா) காஞ்சீநகரத்துக்கு ஆபரணமானவர்] என்று "பேரருளாளரே ஆச்சியாருக்குக் குமாரராக அவதரித்தருளினார்" என்று ப்ரீத்யதிசயத்தாலே அருளிச்செய்து பெருமாள் கோயிலிலே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு ஸுகோத்தரராயிரும்" என்றுவிடை ஸாதித்தருளினார்.*

## முதலிகளை ஆசார்யஸிம்ஹாஸனங்களில் அபிஷேகம் செய்தல்

ஒருநாள் ப்ரதிவாதிபயங்கரமண்ணாவை அழைத்தருளி, கந்தாடையண்ணன், போரேற்றுநாயனார், அநந்தய்யனப்பை. எம்பெருமானார் ஜீயர் நாயனார், கந்தாடைநாயன் இவர்களெல்லாருக்கும் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தருளும்படிக்கு நியமித்து அவருக்கு ஸ்ரீபாஷ்யாசாரியர்" என்று திருநாமம் ப்ரஸாதித்தருளி ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனத்திலே அபிஷேகம் செய்தருளினார்.

மற்றுமொருநாள் கந்தாடையண்ணனை அழைத்தருளி, பெரிய கந்தாடையப்பன், திருக்கோபுரத்து நாயனார்பட்டர், சுத்தஸத்வ மண்ணன், ஆண்டபெருமாள் நாயனார், அய்யனப்பா இவர்களுக்கு பகவத்விஷயம் ப்ரஸாதிக்கும்படிக்கு நியமித்தருளி "பகவத்ஸம்பந்தாசாரியர்" என்று திருநாமம் ஸாதித்தருளி ஆசார்யஸிம்

ஹாஸநத்திலே அபிஷேகம் செய்தருளினார். சுத்தஸத்வமண்ண னுடைய வ்யாக்யாநசாதுர்யத்தைக்கண்டு போரவுகந்தருளி அவருக்குத் "திருவாய்மொழியாசாரியர்" என்று திருநாமஞ்சாத்தி பகவத்விஷயஸிம்ஹாஸனத்திலே அபிஷேகஞ்செய்தருளினார். ஒரு நாள் ராத்திரி கந்தாடைநாயனும் ஜீயர்நாயனாரும் பகவத்வி ஷயத்திலே கூடமானவாக்யங்களுக்கு அர்த்தவிசாரம் செய்ய, நாயன் ஸம்ஸ்க்ருதமாக அர்த்தோபந்யாஸம் செய்யக்கண்டு பகவத்விஷயத்திற்கு ஸம்ஸ்க்ருதத்தில் அரும்பதவிளக்கம் பண்ண நியமித்தளி உபலாளித்தருளினார். A.

## எறும்பி அப்பாவை கோயிலுக்கழைத்தல்

முன்பு ஜீயர் ஸந்நிதியினின்று அனுப்புவித்துக்கொண்டு எழுந் தருளின எறும்பி அப்பா தத்விச்லேஷம் ஸஹிக்கமாட்டாமல் ஜீய ருடைய தினசர்யா ப்ரகாரங்களை அநுஸந்தித்துக்கொண்டு அநுபவ பரீவாஹரூபமாக "திநசர்யை" என்கிற ப்ரபந்தத்தைச் செய் தருளி, ஜீயர் ஸந்நிதிக்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கையிலே கொடுத்து வரக்காட்ட, அத்தைக்கண்டு ஜீயர் மிகவும் உகந்தருளி, "அபிமாந நிஷ்டராகில் இப்படியிருக்கவேண்டாவோ?" என்று மிகவும் க்ருபை பண்ணி, அவரிடத்திலே திருவுள்ளஞ்சென்று, அப்போதே அப்பா எழுந்தருளும்படிக்கு "ப்ரீத: ப்ரேஷிதவாந் முநிர்வரவரோ யஸ்மை முஹு: ஸ்ரீமுகம்" என்கிறபடியே எறும்பியேறத்திருமுகம் போகவிட்டருள. அப்பாவும் ஜீயரை அப்போதே காணவேணும் என்று பேராசையோடிருக்க,

**பாராவாரப்லவநசதுர: குஞ்ஜரோவாநராணாம் பத்மாபர்த்து:**
**ப்ரியஸஹசர: பத்ரிணாமீஸ்வரோவா |**
**வாயுர்பூத்வாஸபதியதிவா மார்க்கமுல்லங்க்ய துர்க்கம்**
**காலேகாலே வரவரமுநே காமயே வீக்ஷிதும் த்வாம் ||**

[மணவாளமாமுனியே! பெருங்கடலைத் தாண்டுவதில் ஸமர்த்த ரான வானரங்களுள் ச்ரேஷ்டரான சிறிய திருவடியாகவாவது, பூமகள் கேள்வனை எம்பெருமானுக்கு ப்ரியனாய் ஸதா அருகே நித்யகைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் பக்ஷிராஜனை பெரிய திருவடியாகவாவது அடியேன் ஆகி, இப்பொழுதே கடக்க முடியாத வழியையும் கடந்து தேவரீரைக் காலந்தோறும் கண்

---

A. அப்பாச்சியாரண்ணாவை பெருமாள் கோவிலுக்கு நியமித்தது முதல் இதுவரையுள்ள விஷயங்கள் தெலுங்குப்பதிப்பில் இல்லை.

ஸூர்க்கண்டுகளிக்க ஆசைப்படுமேறேன்] என்றும் மநோரதித்துக் கொண்டிருக்கிற தசையிலே திருமுகம் வரக்கண்டு அத்யாதரத்துடனே ப்ரத்யுக்தராய்ச் சென்று ஸேவித்து திருமுகத்தை சிரஸா வஹித்து.

'தேவ:ஸ்வாமீ ஸ்வயமிஹபவந் ஸௌம்யஜாமாத்ருயோகீ |
போகீஶ த்வத்விமுகமபிமாம் பூயஸாபஶ்யஸித்வம்'?
"அர்த்தௌதார்யாதபிச வசஸாமஞ்ஜஸா ஸந்நிவேஶாதா
விர்பாஷ்பைரமலமபிதிர் நித்யமாராதநீயம்
ஆஶாஸாநைர் வரவரமுநே நித்யமுக்தைரலப்யம் மர்த்யோலப்தும்
ப்ரபவதிகதம் மத்வித: ஸ்ரீமுகம்தே'
"ஸாரஸாரப்ரமிதி ரஹிதஸ்ஸர்வதாஶாஸநம்தே ஸத்யஸ்ரீமாந்
கபிகரக்ருதரமாலிகாமேவ குர்யாம்'

[திருவநந்தாழ்வானே! தேவரீர் தாமாக இவ்வுலகில் அஸ்மதாதிகளுக்கு ஸ்வாமியான மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்து, தேவரீரிடத்தில் விமுகனுயிருப்பினும் அடியேனை விசேஷமாக கடாக்ஷித்தருளிற்று. மணவாளமாமுனியே! தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளின் அமைப்பினுலும் அர்த்தகௌரவத்தாலும்' தூயமதியுடையவரால் ஆநந்தக்கண்ணீருடன் எப்போதும் ஆராதிக்கத்தக்கனவாய், எப்போதும் பல்லாண்டுபாடிக்கொண்டுள்ள நித்யமுக்தர்களாலும் அடையவரிதான தேவரீருடைய ஸ்ரீமுகத்தை அடியேன் போல்வார் அடைய எப்படித்தக்கவராவர்.' தன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவற்ற அடியேன் எல்லா விதத்திலும் தேவரீருடைய ஸ்ரீமுகத்தை குரங்கின் கைப்பூமாலையாகவே ஆக்குவேன்] என்று அதிலே ஈடுபட்டு, அப்போதே கோயிலைக்குறித்து அத்யபிநிவேசத்துடனே எழுந்தருளி மடத்திலே புகுந்து வழியிலுண்டான விடாயும் நெடுநாளாக ஸேவியாத விடாயும் தீர "ஸுதாநிதிமிவ ஸ்வைர ஸ்வீக்ருதோதக்ர விக்ரஹம்" [அமுதக்கடல்போல தமதிச்சையாலேஸ்வீகரிக்கப்பட்ட உயர்ந்த திருமேனி] என்னும்படியான விக்ரஹத்தைக்கண்டு களித்து, வரவரமுநியோகிவர்யருடைய ஸ்ரீபாதபத்மங்களைத்தம் நெஞ்சிலும் கண்ணிலும் ஒற்றிக்கொண்டு ஸேவித்து,

பொன்னிதனிற் குளித்தாங்கந் தனிற்புகுதப் பெற்றேம்
பொருவருஞ்சீர் நம்பெருமாள்பதம் புகழப்பெற்றேம்
மன்னியசீர் மணவாளமாமுனிவனென்னையன்
வாழ்ந்திருக்கும் மடந்தனில் வந்திருக்கப்பெற்றேம்

**சென்னிதனிலவனடியார் பதஞ்சூடப் பெற்றோம்**
**திருமலையாழ்வாரிலென்றும் சிறந்திருக்கப்பெற்றோம்**
**பின்னையவர்க்கந்தாங்கப் பொருளும் பெற்றோம்**
**பெருந்திவத்திலின்பமிங்கே பெருகவும் பெற்றோமே** *என்றும்*
**மண்ணூடு வாழவந்தோன் மணவாளமாமுனிவன் வண்மை**
**கண்ணாருளுக்கிலக்காக நல்வாழ்வுங்கண்டவன்தன்**
**திண்ணாரடிகளில் குற்றேவல் செய்து திரியவும் நான்**
**எண்ணாதிருக்க நடுவே நமக்குவந் தெய்தியதே**

*என்றுஞ் சொல்லுகிறபடியே தாம்பெற்ற பேற்றினுடைய கௌரவத்தை நாடோறும் அநுஸந்தித்துக் கொண்டு,*

**அந்தః ஸ்வாந்தம் கமபிமதுரம் மந்த்ரமாவர்த்தயந்தீம் உத்யத்பாஷ்ப**
**ஸ்திமிதநயநாமுஜ்ஜிதாசேஷவ்ருத்திம் |**
**வ்யாக்யாகர்ப்பம் வரவரமுநே த்வந்முகம் வீக்ஷமாணம்**
**கோணேலீந: க்வசிதனுரஸௌ ஸம்ஸதம்தாமுபாஸ்தாம் ||**

*[மணவாள மாமுனிகளே, மனத்தினுள்ளே மதுரமானதோர் மந்த்ரத்தை அடிக்கடி உச்சரிப்பதும், உண்டான ஆனந்தக் கண்ணீரினால் அசையாத திருக்கண்களையுடையதும், வேறு காரியங்களை விட்டிருப்பதும், உபயவேதாந்த ரஹஸ்யார்த்த விவரணத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கிற தேவரீர் திருமுக மண்டலத்தை ஸேவித்துக் கொண்டிருப்பதுமான-(பெரியோர்களுடைய) அந்த கோஷ்டியை, அற்பனான அடியேன் ஒரு மூலையில் மறைந்திருந்து அருகிலேயே ஸேவித்திருக்கக்கடவேன்.] என்னும்படியான திவ்ய கோஷ்டியை ஸேவித்துக்கொண்டு வரவரமுநிப்ருத்யர்களுடனே வாழ்ந்துகொண்டு எழுந்தருளியிருந்தார். அவர்களிலே வரந்தரும் பெருமாள் பிள்ளை ஜீயருடைய திருக்கைச் செம்பும் திருவொற்றுவாடையுங்கொண்டு ஸேவிப்பாராயிருக்கிற நாளிலே அவர்க்குத் திருக்குழற்கற்றை வளர்ந்திருக்க, இதேதென்று ஜீயர் கேட்டருள, தத்தேதுவை அவர் விண்ணப்பஞ்செய்ய, "இன்று திருமுடி விளக்கும்" என்று நியமித்தருள, அவரும் அப்படியே திருமுடி விளக்குவித்துக் கொண்டு எழுந்தருள, அவர்க்கு குமாரர் திருவவதரித்தாரென்றும் பத்துநாளாயிற்றென்றும் அன்று ஆள்வர, இத்தைக்கேட்டு இதென்ன ஸர்வஜ்ஞதை! என்று எல்லாரும் விஸ்மயப்பட்டார்கள் அவரும் பின்பு தம்முடைய குமாரருக்கு நாயனாரென்று ஜீயர் திருநாமஞ்சாத்தியருளினார்; இப்படி பலரும் திருநாமஞ்சாத்தினார்கள்; ஆகையாலே *வந்து பரந்ததெங்குமித்*

திருநாமமிங்கு என்கிறபடியே இதுவும் அழகிய மணவாளன் கோத்ரமென்னும்படி எங்கும் விஸ்த்ருதமாயிற்று.

அக்காலத்திலே கந்தாடையண்ணன் ஜீயர் விரும்பியமுது செய்தருளும் கீரைக்கறியமுது நடத்திக்கொண்டுபோந்து ஸர்வ காலத்திலும் தத்பதாஶ்ரயராய் ஸேவித்துக்கொண்டுயோருகிறவர், தம்முடைய எம்பெருமான் தளிகைக்கு உபாதானத்ரவ்யத்தாலே நடத்திக்கொண்டுசெல்ல, அவருக்குண்டான த்ருஷ்டஸங் கோசதைத் திருவுள்ளம்பற்றி, தமக்குவந்த திருமுன்காணிக்கை களையும் அவர்க்குப்ரஸாதித்தருளி, இப்படித்ருஷ்டாத்ருஷ்டங் களிரண்டும் ஸ்வாதீனமாக நடத்திக்கொண்டு போருகிற நல்லடிக் காலத்திலே,

அப்பிள்ளை கந்தாடையண்ணன் முதலானோர்
செப்பமுடன் சேர்ந்த திரள்தன்னை-யெப்பொழுதும்
பார்த்தாலும் எமக்கிழவாம் பட்டர்பிரான் தாதர்தனைச்
சூர்தீரக்காணுமையால்

என்று அவர் விச்லேஷம் ஸஹியாமலருளிச் செய்துவிட,

அப்பிள்ளானுங்கந்தாடையண்ணனுமருள்புரிந்த சடகோபதாதரும்
ஒப்பிலாத சிற்றணுங்கூடியே யோங்குவண்மை மணவாளயோகி தாள்
செப்பிவாழ்ந்துகளித்துத் தென்கோயிலிற் சிறந்தவண்மையைச் சேவித்திராமலே
தப்பியோடித் தவித்துத்திரிவது தலைமெழுத்துத் தப்பாதுகாணுமே

என்று தம்முடைய இழவை அநுஸந்தித்து அப்போதே புறப்பட்டு வந்து திருவடிகளிலே ஸேவித்துக் கொண்டிருந்தார். பின்பு.

வாதுசெயவென்று சிலவாதிள்ர்கள் வந்து ஸ்ரீமணமுறிய நிற்பாருபால்
வாழியெனவேபெரியசாபமறவென்று சிலர்வந்தனைகள் செய்வ ரொருபால்
போதுமினிவாதமுனபாதம்ருனென்று புகழ்ந்துசிலர் நிற்ப ரொருபால்
பொங்கிவருமெங்கள்வினை மங்கவருளென்று சிலர் போற்றிசெய்து நிற்பரொருபால்

**ஈதிலைவிடக்க மறைநூற்றமிழ் தெரிந்துசிலரேதமற வாழ்வரொரு பால்**
**ஏதமறவாதுலர்கள் பேதையர்கள் தாமயங்கி நிறைதிறைஞ்சி நிற்பரொருபால்**
**மாதகவினுலுலக மேழையுமளிக்கவென வந்தவெதிராசனடிசேர்**
**மாமுனிவர்தீபமருளாளர் மணவாளமுனிமன்னுமடம் வாழும் வளமே**

என்று இப்படி பாகவதஸம்நத்தியுடனே வாழுகிற நாளிலே

**நம்பெருமாள் ஜீயரை பகவத்விஷயகாலக்ஷேபம் ஸாதிக்க நியமித்தது**

**தத: கதாசிதாஹூய தமேநம் முநிபுங்கவம்!**
**ஸத்க்ருதம் ஸாதுஸத்க்ருத்ய சரணுப்ஜ ஸமர்ப்பணுத் ॥**
**ஸந்நிதௌ மேநிஷீதேதி** ஶாஸாஸ முராஶாஸந: |
**மஹாக்ப்ரஸாத இத்யஸ்ய** ஶாஸநம்ஶிரஸாவஹந்
**ததைவதத்ர வ்யாக்யாது தத்க்ஷணுதுபசக்ரமே |**
**ஸ்ரீமதி ஸ்ரீபதிஸ்ஸ்வாமிமண்டபே மஹதிஸ்வயம் |**
**தத்வந்தஸ்ய ப்ரபந்தஸ்ய வ்யக்தந்தேநைவ தர்ஶிதம்**
ஶடவைரிமுகை ஶ்ருண்வந் **தேஶிகைர்திவ்யதர்ஶநை: |**
**அததிவ்யமுநேஸ்தஸ்ய மஹிமாநமமாநுஷம் ॥**
**அநுபூயேமமாபால கோபாலமகிலோ ஜந: |**
**அமந்யத பரம்தந்யமாத்மாநம் தத்ர நிக்ஷிபந் ॥**

[பின்பொருகால் நித்யஸூரிநிர்வாஹகரான பெருமாள் முனிவர் பெருமாளுகிய இம்மணவாளமாமுநிகளை வரவழைத்து க்ருபை யினுல் தமது ஸ்ரீசடகோபனை ஸாதிப்பதன் மூலமாக மிகவும் கௌரவித்து, "தேவரீர் நமது ஸந்நிதியல் திருவாய் மொழி ஸ்ரீஸூக்திகளின் அறிவரிய விசேஷார்த்தங்களை உபந்யஸித்துக் கொண்டு வாரீர்" என்று நியமித்தருளினுர். மாமுனிகள் அவருடைய உத்தரவை, பெரிய அநுக்ரஹமென்று சிரஸா வஹித்து அப்படியே அந்த அந்தக்ஷணத்திலேயே உபந்யஸிக்கத் தொடங்கினுர். ச்ரிய பதியான ஸ்ரீரங்கநாதர் பெரிதாய் அழகிய பெரிய திருமண்டபத்தில் தாம் நம்மாழ்வார்முதலான திவ்யஜ்ஞா நம்படைத்த ஆசார்யர்களுடன் எழுந்தருளிவிருந்து அந்தத் திருவாய்மொழிக்கு அம்மணவாளமாமுனிகளாலேயே தெளி வாக அருளிச்செய்யப்பட்ட உண்மைப் பொருள்களைக் கேட்டருளி மகிழ்ந்தார். பின்பு குழந்தைகள் இடையர் தொடக்கமான சாதாரண ஜனங்கள் முதலாக எல்லோரும் அந்த உயர்ந்த முனிவரான மணவாள மாமுனிகளின் அமானுஷமான

ஸ்வபவத்தை அனுபவித்துத் தம்மை அவரிடத்திலேயே ஸமர்ப்பித்துத் தம்மை மிகவும் பாக்யசாலிகளாக நினைத்தார்கள்.] என்கிறபடியே பரீதாபிவருஷத்தில் திருப்பவித்ரத்திருநாளிலே

**க்ருபயாபர யா ஸரங்கராட் மஹிமாநம் மஹதாம் ப்ரகாஶயந்**
**குருசேஸ்வயமேவசேதஸா வரயோகி ப்ரவரஸ்ய ஶிஷ்யதாம்**

[அந்த ஸ்ரீரங்கராஜர் தமது உயர்ந்த தயையினாலே முநிச்ரேஷ்டரான மணவாள மாமுனிகளின் பெருமையைப் பெரியோர்களுக்கு வெளிப்படுத்துவதற்காக, அம்முனிவர்க்குத் தாம்சிஷ்யராக வேணுமென்று தாமே தமதுமனத்தினால் விரும்பினார்] என்று ஸ்ரீரங்கநாயகரான பெருமாள் தம்முடைய பரமக்ருபையாலே ஜீயருடைய மஹிமையை பெரியோர்களுக்கெல்லாம் ப்ரகாசிப்பிப்பதாக ஶ்ரேஷ்டரான ஜீயருக்கு சிஷ்யராகுகையை "பிதரம் ரோசயாமாஸ ததா தஶரதம் ந்ருபம்' என்று பெருமாள் சக்ரவர்த்தியை பிதாவாக ருசித்தாப்போலே இங்கும் தாமே திருவுள்ளத்திலே ருசித்தருளினார், அநந்தரம்.

**ஶ்ரோதும் த்ராவிடவேதஸூரி விவ்ருதிம் ஸௌம்யோம்யந்துர்முநே**
**ருத்கடண்டாஸ்திமமைந மாங்யததஸ்தார்க்ஷ்யாஶ்ரயம் மண்டபம்**
**ஆவிஶ்யார்ச்சகமுகே வாநிதிமுதா, நிஶ்ஶேஷலோகாந்விதோ**
**ரங்கீவத்ஸரமேகமேவமஶ்ருணோத் வ்யக்தம் யதோக்தம் க்ரமாத் ।**

[ஸ்ரீரங்கநாதன் த்ராவிடவேதமான திருவாய்மொழியின் உரையாகிய ஈட்டை மணவாளமாமுனிவரிடமிருந்து கேட்க வேணுமென்ற ஆசை எனக்குள்ளது ஆகையால் அவரை கருடமண்டபத்துக்கு அழைத்து வாரும்' என்று அர்ச்சகரை ஆவேசித்து அருளிசெய்தான், பின்பு அப்பெருமான் எல்லாரோடும் கூடியிருந்து ஸந்தோஷமாக முறையே ஒரு வருஷகாலம் அம்முனிவர் ஸ்பஷ்டமாக ஸாதிக்கக் கேட்டருளினான்] என்று ஸ்ரீரங்கநாதர் "நமக்கு அழகிய மணவாளமாமுனிபக்கத்திலே த்ராவிடவேதமான நாலாயிரம் திவ்யப்ரபந்தவ்யாக்யானங்களைக்கேட்டருள அபிநிவேசமாயிருக்கிறது; ஆகையாலே இந்த மணவாளமாமுனியை கருடமண்டபத்திலே அழைப்பியும்" என்று அர்சசகரிடத்திலே ஆவிஷ்டராய் ஸந்தோஷத்துடனே அருளிச்செய்து, தாமுமங்கே யெழுந்தருளி, ஸமஸ்தஜனங்களோடுங் கூடியிருந்து ஒரு ஸம்வத்ஸரம் இப்படியே வ்யக்தமாக ஜீயரருளிச்செய்த க்ர்மத்திலே கேட்டருளினார். அதெங்ஙனேயென்னில்:

யதீந்த்ரப்ரவணப்ரபாவம் 22

**மங்களாயதநேரங்கே ரம்யஜாமாத்ருயோகிராட் |**
**யுகபத்த்ராவிடாம்நாய ஸர்வ வ்யாக்யாந கௌதுகீ ||**

என்கிற படியே மிகவும் ஹ்ருஷ்டராய்

**தேஶாந்தரகதோவாபி த்வீபாந்தரகதோபிவா |**
**ஸ்ரீரங்காபிமுகோபூத்வா ப்ரணிபத்ய நஸீததி ||**

[மங்களங்களுக்கு இருப்பிடமான ஸ்ரீரங்கத்தில் மணவாள மாமுனிகள் ஒரே சமயத்தில் திருவாய்மொழியின் எல்லா வ்யாக்யானத்தையும் உபந்யஸிப்பதில் ஆசையுடையராயிருந்தார்]

[தேசாந்தரத்திலிருந்தாலும் த்வீபாந்தரத்திலேயிருந்தாலும் ஸ்ரீரங்கத்திற்கெதிர்முகமாக நின்று ஒருவன் தண்டம் ஸமர்ப்பித்தானாகில் அவன் எவ்வித வருத்தமும் அடையமாட்டான்] என்றும் தேசாந்தரங்களிலே இருந்தானேயாகிலும் திருவரங்கன் திருப்பதியை திக்குநோக்கி தண்டன் ஸமர்ப்பித்தமாத்ரத்திலே ஸகலதுரிதநிவர்த்தகமாய் ஸகலமங்களப்ரதமான கோயிலிலே எழுந்தருளியிருந்து *ஸ்ரீரங்கமங்களமணியான பெருமாள் ஸந்நிதியிலே ஸ்வாமி அழகிய மணவாளமாமுனி, த்ராவிட வேதமான திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படிகளையும், திருவாய்மொழிக்கு அங்கோபாங்கங்களான அருளிச்செயல் வ்யாக்யானங்களையும் ஒருக்கால் காலக்ஷேபம் நடத்தத்திருவுள்ளமாயெழுந்தருளியிருந்தார். பெருமாளும் திருப்பவித்ரோத்ஸவவ்யாஜமாகப் புறப்பட்டருளியிருந்தார், பெருமாளும் திருப்பவித்ர மண்டபத்திலேயேறியருளி பேரோலக்கமாயெழுந்தருளி *அணியரங்கன் திருமுற்றத்தடியார், ஆசார்யபுருஷர்கள், ஜீயர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைத்துக்கொத்துக்கும் அருள்பாடுஸாதித்தருளி, ஜீயரும் முதலிகளுடனே பெருமாளை மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டெழுந்தருளியிருக்க, *பலரடியார் முன்பருளிய என்கிறபடியே ஜீயரைத் தனித்து அருள்பாடிட்டருளி, ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்தருளி, "நாளை முதலாக தம்முடைய பெரிய திருமண்டபத்திலே பெரியவண்குருகூர் நம்பியான ஆழ்வாருடைய திருவாய்மொழிப்பொருளை ஈடுமுப்பத்தாறாயிரத்துடனே நடத்தும்" என்ன; "இப்படி அருளுவதே!" A என்று மிகவும்

---

A. நாமார்? பெரியதிருமண்டபமார்? நம்பெருமாள்
தாமாக நம்மைத்தனித்தழைத்து—நீ மாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாளுமிங்கே
வந்துரையென்றேவுவதே வாய்ந்து.

என்று மாமுனிகள் பாசுரம் அருளியதாகக் காணப்படுகிறது.

ஹ்ருஷ்டராய் பிற்றைநாள் தொடங்குவதாக எழுந்தருளி இன்பம் பயக்கவிருக்க நிலத்தேவர் குழுவிலே பாட்டுக்கேட்பிப்பதாக காநகோஷ்டியைப் பாரித்தாப்போலவும் இராமாயணத்தைக் கேட்பதாக "பார்த்திவாம்ஸ்ச நரவ்யாக்ர: பண்டிதாந் நைகமாம்ஸ்ததா" [(புருஷச்ரேஷ்டனை) இராமபிரான் அரசர்களையும் புலவர்களையும் வேதம்தாவல்லவர்களையும் வரவழைத்தான்] என்று தொடங்கி பரிகணிதரான அனைவரையும் திரட்டினைப் போலவும் பெருமாள் நாய்ச்சிமாருடனேகூட திவ்யஸிம்ஹாஸநத்திலேயேறியருளி திவ்யகோஷ்டியைப் பாரித்து அந்த கோஷ்ட்யந்தர்பூதராய் சேர்த்தியை அநுபவிக்கிற *அயர்வறுமமர்களான திருவாநந்தாழ்வான், பெரிய திருவடி, ஸேநாபதியாழ்வான் என்கிற ஸூரிமார்களோடும், *வைகுந்தத்து முனிவராயிருந்துள்ள நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் பதின்மரோடும், நாதமுநி யதிவர ப்ரப்ருதிகளான ஆசார்யர்களனைவரோடும், ஸ்ரீரங்கநாராயண ஜீயர், திருமாலைதந்த பட்டர் தொடக்கமானோரோடும், அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்களின்பமிகு பெருங்குழுவோடுங்கூட பேரோலக்கமாக வெழுந்தருளியிருந்து ஈடு தொடக்கமான ஐந்து வ்யாக்யானத்துடனே திருவாய்மொழி தொடங்கி, அவ்வவ்விடங்களிலே இது ச்ருதிப்ரக்ரியை, இது ஸ்ரீபாஷ்யப்ரக்ரியை, இது ச்ருதப்ரகாசிகாப்ரக்ரியை, இது கீதாபாஷ்ய ப்ரக்ரியை, இது ஸ்ரீபாஞ்சராத்ரப்ரக்ரியை, இது ஸ்ரீராமாயணப்ரக்ரியை, இது மஹாபாரதப்ரக்ரியை, இது ஸ்ரீவிஷ்ணுபுராணப்ரக்ரியை, இது ஸ்ரீபாகவதப்ரக்ரியை, இது பதார்த்தம், இது வாக்யார்த்தம், இது மஹாவாக்யார்த்தம், இது ஸமபிவ்யாஹாரார்த்தம், இது த்வந்யர்த்தம், இது அர்த்தரஸம், இது பாவரஸம், இது ஒண்பொருள், இது உட்பொருள் என்று இவர் இப்படி அருளிச்செய்யும்படியையும், 'ரங்கீ வத்ஸரமேகமேவமச்ருணோத் வ்யக்தம் யதோக்தம் க்ரமாத்'' [ஸ்ரீரங்கநாதன் மாமுனிகளால் முறையே ஸ்பஷ்டமாகச்சொல்லப்பட்ட விஷயத்தை இங்ஙனமே ஒரு வருஷகாலம் கேட்டருளினான்] என்கிறபடியே இவர் தொடங்கி நடத்தியருளும்படியையும் திருச்செவிசாத்தியருளி அங்கே இப்படியே ஒரு ஸம்வத்ஸரம் நடந்து பின்பு சாத்தியருளும்போது.

## பகவத் விஷய சாத்துமறை

முன்புபோலே, பராங்குசபரகால பட்டநாத யதிவராதிகளுடனே கூட ஏறியருளித் திருச்செவிசாத்தியருளி ஜீயரை மிகவும் உபலாளித்தருளி திவ்யப்ரபந்த த்த்வவ்யாக்யாநவைபவங்களையும், ஜீயருடைய வைபவங்களையும் ப்ரகாசஞ் செய்தருளவேணு

மென்றும், தாம் அநுஷ்டித்துக் காட்டவேணுமென்றும் திருவுள்ளமாய்

**ஸமாப்தௌ க்ரந்தஸ்ய ப்ரதிதவிவிதோபாயநசயே பரம்**
**ஸத்ஸங்கீபூதே வரவரமுநேரங்க்ரி ஸவிதே |**
**ஹடாத்பால: கஶ்சித்குதஇதிநிரஸ்தோப்யுபகத: ஜகௌ**
**ரங்கேஶாக்ய: பரிணதசதுர்ஹாயநஇதம் ||**

[பகவத்விஷயக்ரந்தத்தின் சாத்துமுறை ஸமயத்தில், வெற்றிலை பாக்கு பழம் என்றிங்ஙனே ப்ரஸித்தமான பலவகைப்பட்ட உபஹாரங்கள் ஸித்தப்படுத்தப்பட்டவளவில், நான்கு பிராயம் நிறைந்து ரங்கநாயகன் என்னும் பெயர்பூண்ட சிறுவனொருவன் திடீரென்று அங்குவரப்புக, 'நீ எதற்கு வருகிறாய் அப்பால் செல்' என்று தடுக்கப்பட்டபோதிலும் அருகே வந்து நின்று இத்தனியனைச் சொன்னான்) என்கிறபடியே ஜீயருக்கு ஆசார்யஸம்பாவனையாக சில த்ரவ்யங்களும் ஏலாலவங்க கர்ப்பூராதிகளும் திருப்பரிவட்டங்களும், அடைக்காயும், பலங்களும், அமர்த்திநிற்க

### ஸ்ரீஶைலேஶதயாபாத்ர தனியனவதாரம்

அழகிய மணவாளபட்டரான அர்ச்சககுமாரராய் ஐந்தாம் வயதாய் ரங்கநாயகமென்கிற திருநாமத்தையுடையரான சிறுபிள்ளை, ஸம்பாவனைத் தட்டுக்களுக்கும் பெருமாளுக்கும் நடுவே வந்து நிற்க, அப்பாலே விடவிடத்திரும்பிவந்து நிற்க. "இது வெறுமனன்று, ஒரு ஆஶ்சர்யமுண்டாக வேணும்" என்று எல்லாரும் பார்த்திருந்து சிறு பிள்ளையை நீர் நிற்கிற காரியமேதென்ன, அவர் கையைக்கூப்பிக்கொண்டு பயப்படாமல் ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் என்ன, பின்னுமேதென்ன, தீபக்த்யாதிகுணார்ணவம் என்ன, இன்னஞ்சொல்லுமென்ன, யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜா, மாதரம் முநிம் என்று சொல்லி ஓடிப்போக, பெரியோர்களெல்லாம் ஆஶ்சர்யப்பட்டு இந்த ச்லோகத்தைப் பட்டோலை கொண்டு மஞ்சட்காப்புச் சாத்தித் திருவடிகளிலே ஸமர்ப்பித்து, பின்பு அத்தைத் தட்டிலே வைத்து ரங்கநாயகத்தை உபலாளித்தழைத்து இன்னமேதென்ன, நானொன்றுமறியேனென்ன முன்பு சொன்னத்தை இன்னமொருமுறை சொல்லுமென்ன, நானொன்றுமறியேனென்று ஓடி விட;

### வாழித்திருநாமத்துக்கு நியமனம்

பின்பு அந்தப்பிள்ளைக்கு அருள்பாடு ஸாதித்து நீர் வாழித்திருநாமமோதுமென்ன, அவர் தமிழிலே அதிசதுரராகையாலே,

A வாழிதிருவாய்மொழிப்பிள்ளை மாதகவால்
வாழும் மணவாளமாமுனிவன்—வாழியவன்
மாறன் திருவாய்மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படியுரைக்கும் சீர் என்றும்

B செய்யாதாமரைத் தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி புகழ்வாழி
வாழியே என்றும்

C அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்டமிழ்நூல் வாழ—கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாளமாமுனியே!
இன்னுமொரு நூற்றாண்டிரும்

என்றும் ஓத, பெருமாளுகந்தருளி அவரை க்ருபை பண்ணியருளி வரிசைகளும் ப்ரஸாதித்து:

### திவ்யதேசங்களுக்கு நம்பெருமாள் நியமனம்

உடனே திருமலை, பெருமாள்கோயில் தொடக்கமான திருப்பதிகளுக்கெல்லாம் ஸ்ரீசேனை முதலியாருடைய ஸ்ரீமுகமாக அநுஸந்தான காலங்கள் தோறும் ஜீயர் விஷயமாக நம்பெருமாளருளிச் செய்த தனியன்

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம் ||

என்றநுஸந்தித்துத் தொடங்கவும், ப்ரபந்தம் சாத்தி *வாழி திருவாய்மொழிப்பிள்ளை என்று தொடங்கி, *மணவாளமாமுனியே

---

A. திருவல்லிக்கேணி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பித்த நாலாயிர திவ்யப்ரபந்த புத்தகத்திலும், அதை யொட்டி வெளிவந்துள்ள பல வெளியீடுகளிலும் இப்பாசுரம் மடத்துப் பிள்ளை அருளிச் செய்தது என்று பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்த வெளியீடுகளில் B, C இரண்டும் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் அருளியதாகக் காணப்படுகிறது. தெலுங்கு ய.ப்ரபாவப்பதிப்பல் A B C மூன்றுமே அப்பிள்ளை அருளியதாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இன்னமொரு நூற்றுண்டிரும் என்று அநுஸந்தித்துத் தலைக்கட்டவும் என்று அனும்பி விட்டருளி ஜீயருக்கு ஸம்பாவனையும் செய்தருளி வரிசையுடன் மடத்திற்கு அனுப்பியருளிநிற்க, பின்னும் ஒரு அதிசயம் ப்ரவர்த்தமாயிற்று.

**அண்ணன் திருமாளிகையில் அதிசய நிகழ்ச்சி**

ஈடுச த்துமுறையுத்ஸவம் ஸேவிக்க அனைவரும் கோயிலிலே சேர்ந்தவளவிலே அண்ணன் திருமாளிகையிலே ஜ்ஞாநாதிகைகளான அம்மைமார்களும் அண்ணன்தேவிகளும் சேரவிருந்து கொண்டு ஜீயருடைய வைபவத்தை அநுஸந்தித்திருக்கிறவளவிலே ஒரு ப்ரஹ்மசமரி வந்து ஒரு சீட்டை அண்ணன்தேவிகள் கையிலே கொடுத்து, இத்னத அண்ணன் திருக்கையிலே ஸமர்ப்பியும்' என்ன; அவர் அத்தை வாங்கி வாசிப்பித்து "இது ஒரு ச்லோக மிருத்தபடியே!" என்று உகந்து ப்ரஹ்மசாரியைக் கேட்டு ஆதரிக்கப்பார்க்க, அங்கே அவரைக் காணுதொழிய பின்பு எல்லாரும் எழுந்திருந்து எங்குந்தேடியுங் காணப்பெறுமையாலே அங்குள்ளவர்கள் பகவல்லீலையென்று அறுதியிட, அவர்களிலே சிலர் பெரிய திருமண்டபத்திலே சென்று முறியை ஸமர்ப்பித்துச் செய்தியை விண்ணப்பஞ் செய்யக்கேட்டு

**ஹடாத்தஸ்மிந் க்ஷணே கஸ்சித்வர்ணீ ஸம்ப்ராப்யபத்ரிகாம் |**
**வாதூல வரதாசார்ய தர்மபத்ந்யா: கரே ததௌ ॥**

[இடீரென்று அக்கணத்திலே ஒரு ப்ரஹ்மசாரி வந்து கோயிற்கந்தாடையண்ணனுடைய தேவிகளின் கையில் ஒரு ஓலையைக் கொடுத்தான்] என்று அநுஸந்தித்து அனைவரும் ஆச்சர்யப்பட்டு முறியில் திருவெழுத்துப்பட்ட ஸ்ரீசைலேஶதயாபாத்ர ச்லோகத்தைக்கண்டு வித்தராய், தனியனின் அர்த்தத்தை திருமந்த்ரமாகயோஜித்து A அநுஸந்தித்து, வானமாமலை ராமாநுஜஜீயர், கந்தாடை அண்ணன், அப்பா, அண்ணு முதலான பெரியோர்கள் தாங்கள் தங்களுடைய பக்த்யதிசயத்தாலே தனியனுக வேணுமென்று அருளிச்செய்த ச்லோகங்களையும் இதிலே அந்தர்பவிப்பித்தருளி

---

A. பிள்ளைலோகஞ்ஜீயர் அருளிய ஸ்ரீசைலேச தனியன் வ்யாக்யானத்தில் இது ||விசதம். உதாரணமாக, 'ஸ்ரீசைலேசதயாபாத்ரம்' என்பது ப்ரணவார்த்தம். ஸ்ரீசைலேச (திருமலையப்பன்) அகாரார்த்தம். தயாபாத்ரம்-அவன் க்ருபைக்கு பாத்ரமான ஜீவாத்மா மகாரவாச்யன். எம்பெருமானுக்குரியன் என்ற ஸம்பந்தார்த்தமும் தயாபாத்ரம் என்பதனுல் காட்டப்பட்டது.

"இது எல்லார்க்கும் உத்தாரகம்" என்று உகந்திருக்க, பெருமாள் ஆழ்வார்களுக்கு அருள்பாடிட்டு அனுப்பியருளி, *உள்ளே பெரிய பெருமாள் சேர்த்தியிலே எழுந்தருளினவாறே கோயில் பரிகர மனைத்துக்கொத்தும் ஸகலவரிசைகளுடனே ஜீயரையெழுந்தருளப் பண்ணி வைத்துக்கொண்டு திருவீதிப்ரதக்ஷிணமாக மடத்திலே யெழுந்தருளப் பண்ணிவைத்தார்கள். பின்பு கோயில் பரிகரமனைத் துக்கொத்தும் ஸந்நிதியிலே சென்றவாறே அவர்களைப் பெருமாள் உகந்தருளி, ஜீயர் முப்பத்தாறுயிரப் பெருக்கர் என்னுமது கண் டோம் என்று மிகவும் க்ருபை பண்ணியருளினர். இதற்கு முதலி களும் *வாழிதிருவாய்மொழிப்பிள்ளை என்று தொடங்கி மங்களா சாஸநம் பண்ணியும்

**அடிசூடியென்தலைமே லருமறையாய்ந்து தொண்டர்**
**முடிசூடியபெருமாள் வரயோகிமுனங்குரவோர்**
**படிசூடுமுப்பத்தாறுயிரமும் பணித்தரங்க—**
**ரடிசூடிவிட்டதற்கோ எந்தாயென்பதுன்னையுமே**

என்று ஆபாலகோபாலரெல்லாரும் தத்வைபவத்திலே யீடுபட்டு ததேக பரராய் தந்நாமகுணங்களை அநுஸந்தித்துக் கொண்டு ஹ்ருஷ்டராயிருந்தார்கள்.

### திருவேங்கடமுடையான் இத்தனியனை ப்ரவர்த்திப்பித்தது

இத்தனியனுக்கு இன்னம் அதிசயமுண்டு. அதெங்ஙனே யென்னில்; *தென்னனுயர் பொருப்பிலழகரும் தெய்வ வடமலையப் பனும் இதற்கு ப்ரவர்த்தகராயிருப்பர்கள். முன்பு முமுக்ஷுவாய் தேசாந்தரங்களிலே திரிவாரொருவருடைய உஜ்ஜீவநார்த்தமாக ஸர்வேச்வரன் ஸ்வப்நத்திலே இந்த ச்லோகத்தையவருக்கு உப தேசிக்க, அவரும் அத்தைத் தஞ்சமாக நினைத்திருந்து பின்பொருக் கால் இந்தச்லோகம் நடையாடுகிற தேசமான திருமலையிலே திருப்புரட்டாசித் திருநாள் ஸேவிக்கும்போது திருவேங்கட முடையான் அவரை க்ருபைபண்ணி அர்ச்சகமுகேந கையைப் பிடித்திட்டுவந்து திருவோலக்கத்திலே ஸ்ரீவைஷ்ணவர்கள் நடுவே யிட்டு, "அவர்கள் அருளிச்செய்வதைக் கேள்" என்றும் அவர்களை "இவன் பணிப்பதைக் கேளுங்கோள்" என்றும் நியமிக்க, சேனை முதலியார் திருமுகப்படியே நடத்துகிற தனியனை பெரியகேள்வி ஜீயர் தொடங்க, அத்தைக்கேட்டு விலக்ஷணராகையாலே தெண் டனிட்டு, "ஒரு விண்ணப்பம்; கேட்டருளவேணும்" என்று விண்ணபஞ் செய்து "அடியேனுக்கு ஸ்வப்நலப்தமாய் அதுதன்னை

அடியேன் தஞ்சமாக நினைத்திருக்கிற ச்லோகத்தையே தேவரீர் களும் அநுஸந்தித்தது இதென்ன ஆச்சர்யம்!'' என்ன, "ஆகில் நீர் அந்த ச்லோகத்தைச் சொல்லிக்காணீர்'' என்ன, அவர் ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தைச் சொல்ல அத்தைக்கேட்டு எல்லாரும் மிகவுமுகந்தருளித் தங்களுக்கு வந்தவற்றையெல்லாம் ஸப்ரகார மாக அருளிச்செய்யக் கேட்டு அதிப்ரவணராய்ப் புறப்பட்டுக் கோயிலிலேசென்று ஜீயர்திருவடிகளிலே வேரற்றமரம் போலே விழுந்துகிடக்க; பரமதயாளுவான ஜீயரும் அவரைத் திருக்கை யாலே ஸ்பர்சித்து ''நீயார்? வந்தகாரியமேது?'' என்று கேட்டருள "அடியேன் முமுக்ஷுவாய் தீர்த்தயாத்ராப்ரஸக்திரிவாரொருத் தன்'' என்று தொடங்கிச் சிலவற்றையும், ஸ்வப்த வ்ருத்தாந்தத்தையும் தனியனையும் விண்ணப்பஞ்செய்து ஜீயர் திருவடிகளைத் தன்தலையிலே நற்றரிக்க வைத்துக்கொண்டு, "திரு வேங்கடமுடையான் அடியேனை விசேஷகடாக்ஷசெய்தருளி, இத் தனியனைத் திருவோலக்கத்திலே ஸாதித்து தேவரீர் திருவடிகளை ஸேவிக்கவிட்டார்'' என்று விண்ணப்பஞ்செய்து நிற்க; . இப்படி, பகவத் கடாக்ஷபாத்ரபூதனோ நீ!'' என்று மிகவும் உகந்தருளி, "இனி உனக்கு வேண்டுவதென்?'' என்ன,. "மோக்ஷோபாயமான மந்த்ரரூபமான தனியனையும் மந்த்ரதாசார்யரூபியான அப்பனை யும், மந்த்ரப்ரப்ரதிபாத்யதேவதையான தேவரீர் திருவடிகளையும் க்ருடமாகப் பற்றி முத்தனானேன்; இனிவேண்டுவதுண்டோ?'' என்று கைகைத்தட்டிச் சிரித்துக் கூத்தாடி நிற்க, ஜீயரும்,

மந்த்ரேதத்தேவதாயாஞ்ச| ததாமந்த்ரப்ரதேகுரௌ |
த்ரிஷு பக்திஸ்ஸதாகார்யா ஸாஹிப்ரதமஸாதநம் ||

[மந்த்ரத்தினிடத்தும், அதன் உள்ளீடான தேவதையிடமும் அப்படியே அம்மந்த்ரத்தையுபதேசித்த ஆசாரியனிடமுமாக இம் மூன்று விஷயங்களிலும் எப்போதும் பக்தி செய்யப்படவேண்டும்; இந்தபக்தியே பகவத்ப்ராப்திக்கு முக்யஸாதநம்] என்னுமது இவருக்குண்டாயிருக்கிறதே! அதிகாரபூர்த்திக்கு வேண்டுவதும் இதுவேயன்றோ?'' என்று உகந்தருளி, அவருக்கு தாபாதி பஞ் சஸம்ஸ்காரங்களையும் ஸாதித்து "திருவேங்கடராமாநுஜதாஸர்'' என்று தாஸ்ய நாமத்தையும் ஸாதித்து க்ருபை பண்ணியருளினார். பெருமாளும், '' வாரீர் திருவேங்கட ராமாநுஜதாஸரே! உமக்கு மேல் வீடு தந்தோம்'' என்று ஸ்ரீ சடகோபனை ஸாதிக்க உடனே அவர் திருநாட்டுக்கெழுந்தருளினார்- எல்லாரும் அவருக்குப் பெரியோர்களுக்குச் செய்யும் க்ரியைகளெல்லாஞ் செய்து நிறை

வேத்றி ஜீயருடைய வைபவத்தை எல்லாருமாகக் கொண்டாடிக் கொண்டு எழுந்தருளியிருந்தார்கள்'

**திருமாலிருஞ்சோலை அழகர் இத்தனியனை ப்ரவர்த்திப்பித்தது**

அழகர் திருமலையிலே ஸமஸ்த கைங்கர்ய நிரதராய் ஜீயர் திருவடி ஸம்பந்தமுடையாராயிருக்கிற ஜீயர் தம்முடைய ஆசார்ய ருடைய ஆத்ம குணங்களையும் விக்ரஹ குணங்களையும் சிந்தித்து அநுஸந்தித்துக் கொண்டு ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி, தமக்கு நித்யாநுஸந்தேயமாக ஜீயர் விஷயமான தனியன் பெரியோர்களி டத்தினின்று உண்டாக வேணுமென்று எண்ணிக்கொண்டு சேனை முதலியார் ஸந்நிதியிலே தண்டன் ஸமர்ப்பித்து நிற்க: அந்த அவ ஸரத்திலே அர்ச்சகரும் ஸேனை முதலியாருக்குத் திருவாராதநங் கண்டருளப்பண்ணி திருவந்திக் காப்புங்கண்டருளப் பண்ணி திருமுக மண்டலத்தை ஸேவித்து

**ஸ்ரீசைலஸுந்தரே ஹ்யஸ்ய கைங்கர்யநிரதோயதி: |**
**அமந்யதகுரோஸ்ஸ்வஸ்ய பத்யஸம்பவமார்யத: ||**

[தெற்குத் திருமலையழகருடைய கைங்கர்யத்திலே ஊற்ற முடைய ஒரு ஜீயர் தமது ஆசார்யராகிய மணவாளமாமுனி களுக்கு ஒரு தனியன் பெரியோர் திருவாக்கிலிருந்து அவதரிக்க வேணுமென்று எண்ணினார்]. என்று விண்ணப்பஞ்செய்து கொண்டு பெருமாள் ஸன்னிதியிலே அமுது செய்தருளப் பண்ணச் செல்ல, அவ்வளவிலே அழகிய மணவாளமாமுனியினுடைய திருவடி ஸம்பந்தமுடைய சேனைமுதலியார் என்பவர் தெற்குத் திருப்பதிகளெல்லாம் மங்களாசாஸனம்பண்ணி அழகரைத் திருவடி தொழ வெழுந்தருள, ஸ்ரீகார்யம்பார்க்கிற ஜீயரும் அவரைக் கண்டு மிகவும் ஆதரித்துப் பெருமாளை மங்களாசாஸனம் பண்ண வெழுந்தருளப் பண்ணி வைத்துக்கொண்டு திருமுன்பேசெல்ல, அழகரும் அவரை மிகவும் க்ருபை பண்ணியருளி தீர்த்தம் முதலான வரிசைகள் ப்ரஸாதித்து ஸ்ரீசடகோபனையும் அவர் திருமுடியிலே நற்றரிக்க வைத்தருளி உமது நாவின் நுனியில் நான் இருந்து

**ஜிஹ்வாக்ரே தவவக்ஷ்யாமி ஸ்த்தித்வாவதஸுபாவநம் |**
**பத்யம் த்வதார்யவிஷயம் முகேரஸ்ய மமாஜ்ஞயா: ||**

கொண்டு சொல்லப் போகிறேன், என்னுடைய நியமனமாக-உம் முடைய ஆசார்யரான மணவாளமாமுனிகளுடையதாய்ப் பரமப வித்ரமான (இந்த) ச்லோகத்தை இந்த ஜீயருக்குச் சொல்லும். என்று அர்ச்சக முகேந நியமிக்க சேனை முதலியாரும்,

ஸந்த்ரப்ரவணப்ரபாவம் 23

**தம்பேர்ஸ்மிதிச்லேஷோ தேசிகோவததல்வயம்।**
**வஹந்ஸிரஸிதேவஸ்ய பாதௌபரமபாவநௌ ।**

*[சேனைமுதலியாரென்பவர் அழகருடைய பரமபாவநமன திருவடி நிலைகளை தமது திருமுடியில் வைத்துக் கொண்டு அடியேன் தந்யனானேன் என்று கூறி, தாமே அத்தனியனைச் சொன்னார்]*

என்கிறபடியே ஸ்ரீசடகோபனையும் முடியில் தரித்துக் கொண்டு "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்" என்னுமித்தனியனை யருளிச் செய்ய, உடனே அர்ச்சகரும் தெரியப்பட்டு ஜீயருக்கு ஸாதித்தருளினார். பின்பு சேனைமுதலியாருக்கும் அர்ச்சகருக்கும் இந்த ச்லோகம் தெரியாதொழிய, ஜீயர்மடமே சென்று ச்லோகமருளிச் செய்யவேணு மென்று கேட்க, "அருளிச்செய்த தேவரீரே கேட்கவேணுமோ?" என்ன, "எனக்கொன்றும் தெரியவில்லை, இது ஸுந்தரராஜர் தானே ஸுந்தரஜாமாத்ருமுநி விஷயமாக அருளிச் செய்தார்" என்று மூன்று திருநாமமும்கூடி தெரிவிப்பை கடாக்ஷித்துக் கொண்டு வித்தராய்த் தங்களுக்குத்தஞ்சமாகக் கொண்டருள, சேனைமுதலியாரும் அதிப்ரீதியுடனே இச்செய்தியைக் கோயிலிலே பெரியோர்களுக்கெல்லாம் தெரிவிக்கவேணுமென்று அதித்வரையாக எழுந்தருளி கோஷ்டியிலே ஜீயரைத் தண்டன் ஸமர்ப்பித்து இவ்வைபவங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்ய, எல்லாரும் மிகவுமுகந்தருளி "இப்படி திருவேங்கடமுடையானும் அழகரும் உகந்தருளின இத்தனியனை ப்ரகாசப்பித்தருளிகிறதே! இதென்ன வைபவந்தான்!" என்று போரவித்தராயருளினார்கள்.

### வானமாமலை ஜீயர் முதலானோர் ஜீயரைப் புகழ்தல்

வானமாமலை ராமாநுஜ ஜீயர் மிகவும் ஹர்ஷபரவசராய் ஸ்தப்தராயிருக்க, ஜீயரும் திருக்கைகளாலே அவரைத் தட்டி "உம்முடைய ஹர்ஷத்துக்குப் போக்குவீடாக வார்த்தையருளிச் செய்யலாகாதோ?" என்ன, அவரும் "இரண்டு முலைக்காம்பினும் மாறாதே பெருகுகிறபாலை ஆராவமுதமாகப் பருகுவார் நாமே யன்றோ?" என்று கந்தாடையண்ணனைப் பார்த்தருளிச் செய்ய, அண்ணனும் "அந்தப்பாலிலும் இந்த உக்திரஸம் அதிசயமாயிருக்கிறதே!" என்ன, ப்ரதிவாதிபயங்கரரும் உத்தரோத்தரம் அதிசயமாயிருக்கிறதென்று அண்ணனைக்கொண்டாட, அப்பிள்ளை இருந்து, மந்த்ரோத்தரமான பூர்வவாக்யத்திலும் உத்தரவாக்ய மதிசயித்திருக்குமென்ன, பட்டர்பிரான்ஜீயர், "த்வயத்திலும் கட-

கோபத்வயம் அதிசயிதமாய், அதுதன்னிலும் ராமாநுஜத்வயயோத்தரம் அதிசயமாய், (அதுதன்னிலும்) தந்நிஷ்டரான நம் ஜீயரைத் தொழுவதாயிருக்கிற இந்த்த்தனியனே ச்ரேஷ்ட்டமென்று ஒருவருக்கொருவர் இட்டீடுகொண்டு சாடுரஸோக்திகள் அருளிச்செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்கள்-

### ஜீயர் வடதேசத்தெம்பெருமான்களை த்யாநித்தது

அநந்தரம் ஒருநாள் ஜீயர் ப்ராத: காலத்திலே திருமலையாழ்வாரிலே எழுந்தருளியிருந்து திவ்யதேசங்களை த்யாநித்து அங்கே ஆஸக்தமான திருவுள்ளத்தையுடையராய் பாரவஶ்யத்தையுமடைந்து அந்த திவ்யதேசங்களையே வாய்புலத்திக் கொண்டு இரண்டுயாமபர்யந்தமெழுந்தருளியிருந்து "காலம் போகிறதே" என்று, *சிந்திக்கும் திசைக்கும்தேறும் கைகூப்பும்; *வெருவாதாள் வாய்வெருவி; *அருவிசோர் வேங்கடம நீர்மலையென்று வாய்வெருவி; *இவறிராப் பகல் வாய்வெரீஇ என்கிறபடியே வாய்புலத்திக் கொண்டு தளர்ந்துசாய்ந்தருள, காலக்ஷேபத்திற்கு சில ஆசார்யர்களெழுந்தருளி பின்னுஞ்சில ஆசார்யர்கள் எழுந்தருள வேண்டியிருக்கிற அவஸரத்திலே.

**அவ்யாஜபந்தோர் கருடத்வஜஸ்ய திவ்யாஞ்சிதாந்யாயதநாநிபூய: |**
**த்யாயம்ஸ்தமோஹாபஹாணி மோஹவஶாத்ததேவப்ரஹரத்வயம்ஸ: |**
**த்யாத்வாதிவ்யாஞ்சிதார்ச்சா விலஸிதநிலயாந்யௌத்தராண்யாஶ**
**விஷ்ணோஸ்தத்ஸேவாயத்தசித்தே ப்ரணிகததி முஹுர்நாமதஸ் தாநிதாநி |**
**தூஷ்ணீம் பூதேஸபாஷ்பம் ஸபுளகநிசயம் ரம்யஜாமாத்ருயோகி ந்யப்யேத்யாஹ்ம்யஸர்வே கிமிதமிதி பராமார்த்திமார்த்திமாபூர்ம ஹாந்த: |**

[இயல்பாகவே உறவினனும் கருடத்வஜனுமான எம்பெருமானுடைய அஜ்ஞானநாசகங்களான திவ்யங்களென்று கௌரவித்துச் சொல்லப்படுகிற திருப்பதிகளை (திவ்யதேசங்களை) த்யானித்துக்கொண்டே மோஹித்து இரண்டு நாழிகைக்காலம் அப்படியே மாமுனிகள் இருந்தார். பின்பு எம்பெருமான் அர்ச்சாவதாரமாக ஸேவைஸாதிக்கிற-வடதேசத்திலுள்ள திவ்யதேசங்களை த்யானித்து அவற்றை ஸேவிக்கவேணுமென்ற ஆசையுடையவராய் அத்திருப்திப்பதிகளின் திருநாமங்களையே அடிக்கடி உச்சரிப்பவராய் மயிர்க்கூச்செறியக் கண்ணீர் மல்கி வெறுமனே அவர் இருந்தலவளவிலே சிஷ்யர்களான பெரியோர்கள் அருகில் வந்து வணங்கி இது என்? என்று மிகவும் வருத்தமடைந்தார்கள்] என்கிறபடியே ஜீயர் *இள

சேரானியில்லை செருவதன்முன்னம்... சார்வது சதிரே (திருவாய் 9-10-1) என்றநுஸந்தித்திருந்து, வடதேசத்திலே திருவயோத்யை முதலான திவ்யதேசங்களை த்யானித்து "ஸேவிக்கப் பெற்றிலேமே!" என்று நிருபாதிகபந்துவாய் ஆஶ்ரிதரக்ஷணத்திற்குக் கொடிகட்டியிருக்கிற திவ்யதேசங்களைத்யாநித்து மோஹித்திருக்க, அஷ்டதிக்கஜங்கள் முதலான ஆசாரியர்கள் இதென்னென்பதென்று கலங்கி அநேகவிதமாக ஸமாதானம் விண்ணப்பஞ்செய்யச் செய்தேயும் திருக்கண்களைத் திறவாமல் அஶ்ருக்களோடே புளகிதகாத்ரராய் ஜீயரெழுந்தருளியிருக்கக் கண்டு கிட்டவந்து, உற்றுஸேவித்து இதென்னவென்று பெரியவர்களெல்லாம் பரவஶராய் ஆர்த்தியையடைந்து விட்டார்கள்; அவ்வளவிலே சரமபர்வநிஷ்டராய் திருவடிகளுக்கந்தரங்கராய் *கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்கிறபடியே திவ்ய தேசங்களில் மிகுந்த கைங்கர்யத்தைப் பண்ணுகிற ராமாநுஜ தாஸர்,

**ஸமேத்ய ராமாநுஜதாஸநாமாவ்ய ஜிஜ்ஞ பத்தம் வரயோகிவர்யம்—**
**நிஷேவ்யஸர்வாணிபதாநி விஷ்ணோ: ஸமர்ப்பயிஷ்யாமிதஸைவதத்வ: —**

[ராமாநுஜதாஸரென்னும் பெயர் பெற்ற ஒருவர் வந்து, 'விஷ்ணுவின் ஸ்தலங்களனைத்தையும் சென்று ஸேவித்துத் திரும்பிவந்து அந்த ஸேவையை அப்படியே தேவரீருககுக் காணிக்கையாகச் செலுத்துகிறேன்'' என்று அம்மாமுனிகளிடம் விண்ணப்பம் செய்தார்] என்கிறபடியே அவர் ஜீயர் ஸந்நிதியிலே சென்று "அடியேன் ராமாநுஜதாஸன் தேவரீர் திருவடிகளை முன்னிட்டு வட தேசதிருப்பதிகளெல்லாம் தேவரீர் மங்களாசாஸநமாகத் தொழுது வந்து அந்தப்படியே ஸமர்ப்பிக்கிறேன்'' என்றும்

**ஆஸேதோராபதர்யாஶ்ரமவரநிலயா தாசபூர்வா பராப்தே:**
**க்ஷேத்ராணிஸ்ரீதரஸ்ய த்ருஹிணஶடஜிதாத்யஞ்சிதாநிப்ரணம்ய |**
**ப்ராப்ஸ்யேராமாநுஜோஸம் பவதபதநுசதஶிந்தயம்ஸ்த்வத்**
**பதாவித்யஸ்மிந் விஜ்ஞாபயித்வா ப்ரணமதி புபுதேஸௌம்ய**
**ஜாமாத்ரு யோகீ ।**

'தென்திசையில் உள்ளஸேதுமுதலாக வடதிசையிலுள்ள பதரிகாச்ரமென்னும் உயர்ந்தஸ்தானம் வரையில் கிழக்குக் கடல் தொடங்கி மேற்குக்கடலீறான இடங்களிலுமுள்ளவையாய், பிரமன் முதலியதேவர்களாலும் நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்க

னாலும் பூஜிக்கப்பட்ட விஷ்ணுவின் திவ்யதேசங்களையெல்லாம் ஸேவியாததனால் தேவரீர்க்குள்ள மனவருத்தம் காரணமாக சென்று தேவரீர் திருவடிகளை த்யானித்துக் கொண்டு ராமானுஜ தாஸனாகிய அடியேன் ஸமர்த்தனாய் ஸேவித்து வருகிறேன்' என்று விண்ணப்பித்து அவர் வணங்க, மாமுனிகள் மோஹந்தெளியப் பெற்றார்] என்று ராமாநுஜதாஸர் விண்ணப்பஞ் செய்து தண்டன்ஸமர்ப்பித்தவுடனே ஜீயர் தெளிந்து திருக்கண்களை மலரத் திறந்து "வாரீர் ராமாநுஜதாஸரே!" என்றருளிச் செய்ய திக்கஜங்கள் முதலானோரெல்லாரும் தேறி அவரை மிகவும் கொண்டாடியிருக்க, ஜீயரும் எழுந்திருந்து "நெடும் போதாயிற்றே காலக்ஷேபமின்றிக்கேயொழிந்ததே!" என்று அருளிச்செய்ய, தேவரீர் திவ்ய தேசங்களில் அநுபவபரவசராயெழுந்தருளியிருக்க ஸேவித்தநுபவித்துக் கொண்டிருக்கமாட்டாமல் கலங்கி பயப்பட்டுவிட்டோம்" என்று விண்ணப்பஞ்செய்து நிற்க, "ராமாநுஜதாஸரே! நீர் சொன்னது கூடவற்றோ?" என்றருளிச்செய்ய, அவரும் அப்பொழுதே பயணமாகப்புறப்பட்டு நிற்க, திருவடிநிலைகளில் ஸம்பந்தமுடையராயிருக்கிற குமாரண்டூர் இளையாழ்வார் பிள்ளையையழைத்தருளி, "ராமாநுஜதாஸரைக் கூட்டிக்கொண்டு திருப்பதிகளை ஸேவித்து வருகிறீரோ?" என்று கேட்டருள அவரும் பாக்யமாயிற்றென்று விண்ணப்பஞ்செய்து நிற்க

**திதேஸ்யுக்த ஸ்வகமுத்தரீயம் விதீர்ய ராமாநுஜதாஸமாஶு |**
**ஸஹஸ்வபாதாவநி நித்யயோக மஹோரஜ ஹாசாசுகல க்ஷமனோக ॥**

பின்பு ஜீயர் உடனே ராமாநுஜதாஸருக்குத்தமது உத்தரீயத்தைத் தந்தருளி அவரை—தம் திருவடிநிலைகளோடு நித்யஸம்பந்தமாகிற தேஜஸ்ஸைப் பெற்றவராய் வேகமாகச் செல்லும் இளையாழ்வார் பிள்ளையோடு செல்லுமாறு நியமித்தார்.] என்கிறபடி ஜீயர் திருவடிக்குத் திருவடிநிலைகள் கொண்டு ஸதாஸேவிக்கிற மஹாநிசயத்தையுடைய இளையாழ்வார் பிள்ளையோடே ராமாநுஜ தாஸரைத் தம்முடைய திருவடி நிலைகளை சீக்ரமாகப்ரஸாதித்துப் பயணமாக நியமித்தருளினார்

**இளையாழ்வார்பிள்ளையும் ராமாநுஜதாஸரும் யாத்திரை செய்தல்.**

சீர்ணர்ந்த இருமகனார் ஸ்ரீபரதாழ்வானுக்குத் திருவடி நிலைகளை சாதிக்க இளையபெருமானுக்கில்லாதொழிந்ததே அப்போது பரதாழ்வானைப்போலே இளையபெருமாள் இருதாமத்தையுடைய இவரும் ஜீயருடைய திருவடிநிலைகளைப்பெற்று லோகத்தில் ஜனங்களுக்கு ஸந்தோஷோத்ஸவத்தைச் செய்தருளினார்

இப்படி அவருக்குத் திருவுத்தரீயம் ஸாதித்தருளினபோலே இவருக்குத திருவடிநிலைகள். இப்படி தமக்கு ப்ரதிநிதியாகத் திருவடிநிலைகளை ஸாதித்தருளியிருக்க, இளையாழ்வாரும், "தநம் மதீயம் தவபாதபங்கஜம்" என்கிறபடியே மஹாதநத்தை லபித்தருளி "மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" என்று திருமுடிமேலே நற்றரிக்கவைத்துக்கொண்டு நிர்மர்யாதஹர்ஷயுக்தராயருளினர். ராமாநுஜதாஸரும் *பெருமானரையில் பீதகவண்ணவாடை கொண்டு என்னை வாட்டத்தணிய வீசினீர் என்று மிகவுமுகந்தார்.

இப்படி அவரும் ஜீயர் திருவடிநிலைகளையே திருவாராதனமாக வெழுந்தருளப்பண்ணிவைத்துக்கொண்டு அதித்வரையாக கங்காதீரத்திலே எழுந்தருளி திருவடிநிலைகளுக்கு நன்ருக சாஸ்த்ரப்ரகாரம் நெடும்போது கங்கையில் திருமஞ்சனம் பண்ணி ஜீயர் நீராடுகிறதாக அத்யவஸித்து அத்தீர்த்தத்திலே தாங்களும் நீராடி பின்பு அங்குண்டான இடங்களெல்லாம் ஸேவித்து

**க்ரமேண தீர்த்தாநி ஶரீர பாஜாம் பாபாபஹாந்யூர்ஜித ஸௌக்யதாநி |**
**பரிக்ரமந்தாவதிதிம் த்ருஶோஸ்தௌ விதேநதுஃ ஸ்ரீபதரீநிவாஸம் ॥**
**விசித்ரதேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்**

[அவ்விருவரும் மனிதர்களின் பாபங்களைப் போக்க வல்லவையாய் உயர்ந்த ஸௌக்யத்தையளிக்கவல்ல தீர்த்தங்களையெல்லாம் முறையே நீராடிச்சென்று பின்பு தம் கண்களுக்கு ஸ்ரீபதரிகாச்ரமப் பெருமாளை அதிதியாக (விருந்தாக) ஆக்கினர் ] [பலவகையான சக்திகளைப்பெறற சரீராவயவஸம்ருத்தியானது பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது ] என்கிறபடியே பகவதாத்தமாக தேஹபரிக்ரஹம் பண்ணினவர்களுக்கு ஸ்வஸம்பந்தத்தாலே ஸம்ஸ்தப்ரதிபந்தகங்களையும் போக்கி ஊர்ஜிதமான மஹா புருஷார்த்தத்தை ஸாதிக்கிற திவ்யதேசங்களை இரண்டு திருநாமங்களும் க்ரமேண ஸஞ்சரித்து ஸேவித்து பதரிகாச்ரம நாராயணனைத் தங்களுடைய திருக்கண்மலர்களுக்கு ஸர்வப்ரியதர்ஶநமாக அடைவித்தார்கள். இப்படி நரநாராயணப் பெருமாளை மங்களாசாஸநம் பண்ணிப்புக்தவளவிலே

**[illegible] ராமாநுஜதாஸநாமா [illegible] |**
**வஶீ நிஜஶ்ரீகுலஶேகரஸ்ஸன் ஹரிம் பதர்யாஶ்ரம வாஸிநம்தம் ॥**

[அப்போதுபாராமாநுஜதாஸரென்பவர், அனைவரையும் [illegible] ட்டவழக்கான்வயவராய்த் தமது ஸ்ரீவைஷ்ணவகுலத்துக்கிச் சிரோ

டூஷணமானவராய், மிகத்தெளிந்த மனமுள்ளவராய்க் கொண்டு மகிழ்ச்சியுடன் எப்போதும் ப்ரஸித்தரான பதரிகாச்ரமப் பெருமாளை ஆராதித்து வருகிறார்] என்று அயோத்யை ராமாநுஜதாஸரென்கிற திருநாமத்தையுடையவர், குலசேகரராய்க் கொண்டு ஸமஸ்ததுரிதஸ்ஹரரான வயதரிாச்சிராமப் பெருமாளை எக்காலத்திலும் ஸந்தோஷத்துடனே ஆராதித்துக்கொண்டிருந்தார்,

**ஸவிஷ்மணம்விஷ்யபவித்ரரூபம் ஸமேத்யராமநுஜதாஸமேநம் |**
**ஸமர்ச்சயித்வா விவிதோபசாரைஸ்ஸதர்பயாமாஸ ரமாஸஹாயம் ||**

[அந்த அயோத்யாராமாநுஜதாஸர்-இளையாழ்வார் பிள்ளையோடு வந்த இந்த சுத்தஸ்வரூபரான ராமாநுஜதாஸரைக் கிட்டி வந்து பலவகைப்பட்ட உபசாரங்களைச் செய்து ஆராதித்துப் பின்பு பதரிகாச்ரம பெருமாளான ச்ரிய:பதியை இவர்களுக்கு ஸேவை ஸாதிக்கப் பண்ணினார்]. என்று ராமாநுஜய்யங்கார் பரமபாவநராயிருக்கிற இவரைக் கண்டு ஸேவித்து நரநாரயணப் பெருமாளுக்கு விசேஷித்து தளிகைக்கு வரிசையாக ஸமர்ப்புத்துத் தளிகை அமுது செய்தருளப் பண்ணுவித்து உடனே அநுஸந்தாநம் நடக்க வேணுமென்ன;

**வரயோகிவராகதௌஸைதௌ நரநாராயணஸந்நிதௌபுரஸ்தாத் |**
**த்ரமிடோபநிஷந்மஹாப்ரபந்தப்ரதமோதாஹரணே ந்யயுங்தவித்வாந் ||**

[வித்வானுகிற அயோத்யாராமாநுஜய்யங்கார்-மணவாள மாமுனிகள் ஸந்நிதியிலிருந்து வந்த இவ்விருவரையும்-நரநாராயணப் பெருமாள் ஸந்நிதியில் பெருமாளுக்கு – முன்னிலையில் திவ்யப்ரபந்தம் தொடங்கும்படி நியமித்தார்.] என்கிறபடியே அழகிய மணவாளமாமுனியினுடைய ஸந்நிதியினின்றும் அவருடைய மரியாதையாக எழுந்தருளின இவர்களை நரநாராயணப் பெருமாள் திருவோலக்கத்திலே அருளிச்செயலாகிற மஹாப்ரபந்தாநுஸந்தானத் தொடக்கத்திலே நியமிக்க, இளையாழ்வார் பிள்ளையும்

**ததா விதிஜ்ஞோவிதிவத் ப்ரஸாதாத்வரோப்யந்துர்துரிரங்கதாம்நா |**
**நிவேதிதம் பத்யவரம் த்விகண்டம்படஞ்ஜகௌ த்ராவிடவேதமேஷ: ||**

[முறையறிந்த இவ்விளையாழ்வார் பிள்ளை அவர் நியமனத்தின்படியே, மணவாள மாமுனிகள் முன்பே ஸ்ரீரங்கநாதரால் மனத்தெளிவோடு அருளிச்செய்யப்பட்டதாய் இரண்டு பாகங்கள்

கொண்ட 'ஸ்ரீசைலேச' என்ற ச்லோகரத்தைத்தை முதலில் சொல்லிப் பின்பு திவ்யப்ரபந்தத்தை ஓதினர்.] என்கிறபடியே ராமாநுஜருடைய நியமனத்தினபடியே தொடங்குகிறவராய்க் கொண்டு "ஸ்ரீஸைலேஸதயாபாத்ரம்" என்கிற தனியனை முந்துற அநுஸந்தித்து மற்றத் தனியன்களையும் க்ரம ப்ரகாரம் அநுஸந்தித்து ப்ரபந்தாநுஸந்தாநஞ் செய்தருளினர். அதுகண்டு ராமாநுஜய்யங்கார் முதலானவர்கள் விஸ்மிதராயிருக்க,

ஜஜ்ஞேடமுநாஸ்வப்ந நிவேதிதம்ஹியத் கதம் பதர்யாச்ரம நித்ய வாஸிநா ।

ப்ராகாஶி மந்த்ரார்த்தமிதம் முரத்விஷேத்யயோத்ய ராமாநுஜ ஆவிஸிஷ்மயே ॥

[பத்ரிகாச்ரமற்றில் நித்யவாஸம் செல்யும் இந்த முராரியான பகவானலே நம்ஸ்வப்நததில் அருளிச் செய்யப்பட்டு எந்தத் தனியன் உண்டாயிற்றே மந்த்ரார்த்தங்களைத் தன்னகத்தே கொண்ட இந்தத்தனியன் இவர்களால் எப்படி வெளிப்படுத்தப் பட்டது' என்று அயோத்யா ராமானுஜய்யங்கார் மிக்க ஆச்சரிய மடைந்தார்]. என்று "ஸ்ரீபதரிகாச்ரகப் பெருமாளாலே நமக்கு ஸ்வப்நத்திலே அருளிச் செய்யப் பட்டதன்றே இது?" என்று இவர்களாலே ப்ரகாசமாய் மந்த்ரார்த்தமானத்தையறிந்து இது க்ருஷ்ணலீலை யென்று ராமாநுஜய்யங்கார் மிகவும் ஆஶ்சர்யப் பட்டு, பின்பு இந்த ச்லோகம் தேவரீருக்கு வந்தபடி யென்னென்ன; கோயிலிலும் பெருமாள் "ஆசிநோதிஹிஶாஸ்த்ரார்த்தாந்" [சாஸ்த்ரப் பொருள்களை வெளியிடுமவன் ஆசாரியன்] என்கிற படியே இந்த ஸ்தலத்திலே நரநாராயணரூபேண பெரிய திருமந்த்ரத்தை வெளியிட்டருளினப்போலே அந்தமந்த்ரார்த்தமான திவ்ய ப்ரபந்த தத்வ்யாக்யாநங்களை லோகோபகாரமாக ப்ரவர்த்திப் பிக்கத் திருவுள்ளமாய் "யதோசிதம் சேஷ இதீரிதே" [ஸமயத்துக்குத் தக்கபடி அடிமைக்கு உறுப்பான பல சரீரங்களைக் கொள்ளுகையால் சேஷன் என்று சொல்லப்பட்டவன்] என்கிற படியே அசேஷசேஷ வ்ருத்தியிலும் அந்வயித்திருக்கிற திருவநந்தாழ்வானை ஜீயராக வவதரிக்கச் சொல்லி நியோகிக்க, அவரும் தத்கைங்கர்யமாய் அவதரித்து திவ்யப்ரபந்தத்த் வ்யாக்யாநங்களை அதிசதுரராய் நடத்திக்கொண்டு போர, அவருடைய வைபவங்களை ப்ரகாசஞ் செய்தருளத் திருவுள்ளமாய் ஜீயரிடத்திலே தாம் ஈடுகேட்டருள நியமிக்க, ஜீயரும் இதுவுமொரு கைங்கர்யமென்று தொடங்கி. நடத்திச் சாத்துகிற ஸமயத்திலே

ஆசார்யஸம்பாவனை காலத்திலே, அர்ச்சகபுத்ரராய் ரங்கநாயக மேல்கீழ் பெயருடையரான அஞ்சவயஸ்ஸுள்ளவர்மேலே பெரும்மாள் ஆவேசித்து அருளிச்செய்தபடியையும், அந்தப் பிள்ளையைக் கொண்டு வாழிதிருநாம மவதரிப்பித்தபடியையும் ப்ரபந்தாநுஸந்தான காலத்திலே ஆதியிலே இந்தத்தனியனையும் ப்ரபந்தம் சாத்தினுல் இந்த வாழித்திருநாமத்தையும் அநுஸந்திக்கும்படி திருமலை பெருமாள் கோயில் தொடக்கமான திவ்ய தேசங்களிலும் மற்றெங்கும் நடக்கும் படிக்கு

**ஶ்ரீரங்கநாதஶமுநே: பத்யம் ரங்கேஶபாஷிதம் |**
**அஷ்டோத்தர ஶததிவ்யதாமேஷ்வநுஸந்தாநமாசரேத் ||**
**இதீரிதா பத்ரிகா விஷ்வக்ஸேநேந ப்ரதிபாதிதா |**
**ததாரப்ய மஹத்பிஶ்ச பட்யதே ஸந்நிதே:புரா ||**

*[ஸ்ரீரங்கநாதனுல் மணவாள மாமுனிகள் விஷயமாக அருளிச் செய்யப்பட்டது இந்தச்லோகம். இதுதன்னை நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் எல்லோரும் அனுஸந்தானம் செய்யக்கடவர்கள்' என்று நியமனபத்ரிகை ஸ்ரீஸேனை முதலியாரால் அனுப்பப்பட்டது. அது முதலாகப் பெரியோர்களாலும் இச்லோகம் பெருமாள் ஸந்நிதானத்தின் கண் முதலில் அநுஸந்திக்கப் பட்டு வருகிறது. என்கிறபடியே ஸ்ரீசேனை முதலியார் திருமுகம் வரவிட நடக்கிற படியையும், திருவேங்கடமுடையான் தீர்த்த யாத்ரா ப்ராஹ்மணனுக்கு*

**உபதிஷ்டம் மயாஸ்வப்நே திவ்யம் பத்யமிதம் ஶுபம் |**
**வரயோகிஸமாஶ்ரித்ய பவத:ஸ்யாத் பரம் பதம் ||**

*மிக்வுயர்த்தும் மங்களகரமுமான இந்தச்லோகம் கனவில் உனக்கு உபதேசிக்கப்பட்டது. மணவாள மாமுனிகளை ஆச்ரயித்தால் உனக்குப் பரமபத ப்ராப்தி உண்டாகும்.] என்று ஸ்வப்நத்திலே இந்தத்தனியனையும் ப்ரஸாதித்து சிலநாட்களுக்குப் பின்பு அந்த ப்ராஹ்மணனை ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயிக்கும் படிக்கு*

**இத்யுக்த்வாதம் வ்ருஷாத்ரீஶோ ஸ்ரீபதாதரேணுரேவச |**
**தத்வாஶுப்ரேஷயாமாஸ கச்சயோகிவரம் ஶுசிம் ||**

*[திருவேங்கடமுடையான் இங்ஙனம் கூறிவிட்டு, ஸ்ரீபாத ரேணுவையும் அவனுக்குக் கொடுத்து, பரிசுத்தரான மாமுனிகளிடம் செல்வாயாக என்று சொல்லி விரைவாக அனுப்பினார்.]* என்கிறபடியே அவருக்கு ஸ்ரீசடகோபனையும் ஸ்ரீபாதரேணுவையும ப்ரஸாதித்தருளினபடியையும், அவரும் ஆச்ரயித்துத் திருவடிகளைச் சார்ந்தபடியையும், திருமாலிருஞ்சோலையழகர் ஜீயர் திருவடிகள் ஸம்பந்தமுடைய ஸேனை முதலியார் முகமாக இந்தத்தனியனை அருளிச் செய்தபடியையும், பகவதுக்தியாயிருக்க ஈஷத்பேதமுண்டாயிருந்ததேயாகிலும் அர்த்தைக்யப்ராதாந்யேந ஸேனை முதலியார் ஆசார்யகோடிப்ரவிஷ்டராகையாலே "அவர் திருமுகத்தின்படியே எங்கும் அநுஸந்தித்துப் போருகிறபடியையும் ப்ரஹ்மசாரி சிறுமுறி கொடுத்ததையும் ஸர்வவ்ருத்தாந்தாந்தங்களையும் அருளிச்செய்யக்கேட்டு வித்தராய் தமக்கு இந்தத் தனியன் வந்தபடியை அருளிச் செய்யத் தொடங்கினார், A

### தனியனவதரித்த வருஷம் மாதம் முதலியன கூறல்

*அதில் முந்துற இத்தனியனும் வாழித்திருநாமமும் அவதரித்த வருஷம் மாஸம் தேதிகளைக் கேட்டருள, இளையாழ்வார் பிள்ளையும்*

**நல்லதோர் பரீதாபி வருடந்தன்னில்**
**நலமானவாவணியின் முப்பத்தொன்றில்**
**சொல்லரியசோதியுடன் விளங்குவெள்ளித்**
**தொல்கிழமை வளர்பக்க நாலாநாளில்**
**செல்வமிகு பெரியதிருமண்டபத்தில்**
**செழுந்திருவாய்மொழிப் பொருளைச் செப்புமென்று**
**வல்லியுறை மணவாளரரங்கர் நங்கண்**
**மணவாள மாமுனி வழங்கினரே** என்றும்,

**ஆனந்தவருடத்தில் கீழ்மையாண்டில்**
**அழகான ஆனிதனின் மூலநாளில்**
**பாநுவாரங்கொண்ட பகலில் செய்ய**
**பௌரணையிலுளியிட்டுப் பொருந்தி வைத்தே**

---

A-தெலுங்குப் பதிப்பில் நம்பெருமாள் ஈடுதிருச்செவிசாத்தியதும் ஸ்ரீசைலேசதனியனவதாரமும் சிறிது வேறுபட்டுக் காண்கிறது. அந்த விவரங்கள் (பக் 186 காண்க)

ஆனந்தமயமான மண்டபத்தில்
அழகாக மணவாளரிடு சாத்த
வானவரும் கீரிட்டவழக்கே என்ன
மணவாள மாமுனிகள் களித்திட்டாரே என்றும்

---

தத: சதுர்சிதாஹஸ்ய தமேகம் முநிபுங்கவம் |
க்ருபயா ஸாதுலக்ருத்ய சரணம்புஜமர்ப்பணாத் ।
தர்ஸயந் துர்க்ரஹார்த்தாந் த்ரமிடோபநிஷத்கிரம் |
ஸந்நிதௌ வியாகுருஷ்வேதி ஸஸாஸ அமரஸாஸந: ।

என்கிறபடியே பெருமாளும் ஒரு திருப்பவித்ரோத்ஸவத் திருநாளிலே அங்குண்டான அனைவரும் பேரோலக்கமாக ஸேவித்துக் கொண்டிருக்கச்செய்தே, ஜீயரும் முதலிகளும் பெருமாளை மங்களாசாஸனம் பண்ண எழுந்தருளினவளவிலே, "பலரடியார் முன்பருளிய பாம்பணையப்பன் என்கிறபடியே, தம்முடைய பரம க்ருபையாலே உடையவருடைய வைபவத்தை நம்பிதாமே வெளியிட்டாப்போலே ஜீயருடைய மஹிமையை ப்ரகாசிப்பித்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றி தாமும் ஜீயருக்கு ஶிஷ்யராகுகையைக் குறித்து ஜீயரைத் தனித்தருளப்பாடிட்டருளி, "நாளை முதல் நம்முடைய பெரிய திருமண்டபத்திலே பெரியவண் குருகூர்நகர் நம்பியான ஆழ்வாருடைய திருவாய்மொழியை ஈடு முப்பத்தாறாயிரம் தொடக்கமான ஐந்து வ்யாக்யானங்களுடனே நடத்தும்" என்று நியமித்தருள,

மங்களாஶாஸநே ரங்கே ரம்யஜாமாத்ருயோகிராட் |
யுகபத் த்ராவிடாம்நாய வ்யாக்யாத்யாஸ கௌதுகீ ।

என்கிறபடியே, "இப்படி ஏவியருளுகிறதே!" என்று ஹ்ருஷ்டராய்

மஹாந் ப்ரஸாத இத்யஸ்ய ஸாஸநம் ஸிரஸாவஹந் |
ததைவதத்ரவ்யாக்யாதும் தத்க்ஷணாதுபசக்ரமே ।
ஸ்ரீமத்திருப்பதிஸ்ஸ்வாமிமண்டபே மஹதிஸ்வயம் |
தத்வம்தஸ்ய ப்ரபந்தஸ்ய வ்யக்தம் தேஸிகஸம்ஸதி ।

ஸடவைரிமுகைஸ்ஸர்வைஸ் தேஸிகைர்திவ்யதர்ஸநை: |
அத திவ்யமுநேஸ்தஸ்ய மஹிமாநமமாநுஷம் ।
அநுபூயே மஹேஸாந தேஸபாலமவிஸோநுஜ: |
அமந்யத பரம்தந்யமாத்மாநம் தத்ராஸிஷ்யந் ॥

என்கிறபடியே ஈடு தொடக்கமாக ஐந்து வ்யாக்யானங்களுடன் மாறன் பணித்த தமிழ் மறைக்கு அர்த்தம் நடத்துகிறபடியை

அருளிச்செய்ய; அன்றுராத்ரி ஸ்வப்நத்திலே பதர்யாஶ்ரம நாராயணன் தமக்குப் பாடமாமளவும் ஸாதித்து ஸாயம்ப்ராத: அநுஸந்தான காலத்திலே அநுஸந்தித்து ப்ரபந்தாநுஸந்தானஞ் செய்யென்று நியமித்தபடியைச் சொல்லிக்கொண்டு விஸ்மிதராய் ஆனந்தபரவசராயிருக்க, இளையாழ்வார் பிள்ளை முதலானாரும் "பகவத்ப்ரஸாதலப்தமன்றோ இத்தனியன்?" என்று பரஸ்பரம் கொண்டாடிக் கொண்டு மிகவும் ஈடுபட்டிருக்க, ராமாநுஜ ஐயங்கார் க்ரமத்திலே தேறி அழகியமணவாள மாமுனியினுடைய வைபவங்களை யெல்லாம் அடியேனுக்கு இரங்கி ப்ரஸாதித்தருள வேணுமென்று திருவடிகளைப் பிடித்துப்ப்ரார்த்திக்க, இளையாழ்வார் பிள்ளையும் ஓமறைந்து மடத்திலேயாகிறதென்ன; திருப்பாவை அநுஸந்தாநத்தையும் நிறைவேற்றிச் சாத்தி தீர்த்தப்ரஸாதங்களும் விநியோகமாய் இளையாழ்வார் பிள்ளைக்கு வரிசைகளும் ப்ரஸாதித்தனுப்பியருள, அவரும் ராமாநுஜய்யங்கார் மடத்திலே யெழுந்தருளி அவருக்கு அழகிய மணவாள மாமுனியினுடைய வைபவங்களையெல்லாம் ஸாதித்து உகப்பித்தருளினார், ராமாநுஜய்யங்காரும் வைபவங்களையெல்லாங்கேட்டு வித்தராய் ஜீயரைக் கண்டு ஸேவிக்க வேணுமென்று அத்யபிநிஷ்டராயிருக்க' அவருடைய மநஸ்ஸையறிந்து ராமாநுஜதாஸர் "பத்ரிகாச்ரமம் முதலான திவ்ய தேசங்களில் கைங்கர்யங்களுக்கு தேவரீர் நியமித்தபடிக்கு சிலநாளைக்கு ஸேவித்துக்கொண்டிருந்து ஜீயர் திருவடிகளை ஸேவிக்க விடைகொள்ளுகிறேன்" என்று சொல்லி, தேவரீர் இளையாழ்வார் பிள்ளையுடன் கோயிலுக்கு எழுந்தருள வேன்று அருளிச் செய்ய. ராமாநுஜய்யங்காரும் மிகவும் ப்ரியப் பட்டு அவரை பஹுவாக உபலாளித்தருளி ஜீயர் திருவடிநிலைகளை வரிசையுடன் எழுந்தருளப் பண்ணிவைத்துக் கொண்டு

---

இன்பம் பயக்கவிருக்க நிலத்தேவர்குழுவிலே பாட்டுகேட்பிப்பதாக கானகோஷ்டியைப்பாரித்தாப்போலே பெருமாளும் நாச்சிமாருடனே திவ்யமணிம்ஹாஸநத்திலே ஏறியருளி அச்சேர்த்தியையநுபவிக்கிற அயர்வறுமமரர்களான திருவநந்தாழ்வான், பெரியதிருவடியாழ்வான், ஸ்ரீசேநாபதியாழ்வானுகிற நித்யஸூரிகளோடும், வைகுந்தத்து முனிவரான நம்மாழ்வார் "தொடக்கமான ஆழ்வார்கள் பதின்மரோடும் ஸ்ரீரங்கமாமறையோரான அனைத்துப் பரிகரத்தோடும் அணியரங்கத்திருமுற்றத்தடியார்களோடுங்கூடப் பேரோலக்கமாக எழுந்தருளியிருந்து "ரக்ஷிவத்ஸரமேகமேவம் ஶ்ருணோத்வக்தும் யதோக்தம் க்ரமாத்"— என்கிறபடியே திருச்செவி சாத்தியருள;

இளையாழ்வார் பிள்ளையும் ராமாநுஜய்யங்காரும் திருமலையிலே சென்று திருவேங்கடமுடையானை ஸேவிக்க நிற்க, அப்பனும் இவர்களை மிகவும் க்ருபை பண்ணியருளி அயோத்யை ராமாநுஜய்யங்காருக்குச் சிலகைங்கர்யங்களை நியமிக்க, அவரும் அதற்கு அங்கே நிற்கவேண்டுகையாலும் ஜீயரைத்தம்முடைய மநோரதத்தின்படி ஸேவிக்கப் பெறுமையாலும் ப்ரீத்யப்ரீதி ஸமராயிருந்தார்

## மேலும் கோயிலில் நடந்தவை

இனிக்கோயில் வ்ருத்தாந்தம்: திருவேங்கடமுடையான் ராமாநுஜ அய்யங்காருக்கு கைங்கர்யம் நியமித்தருளின தினத்திலே திருமலையாழ்வாரிலே பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தியருள, அற்றைக்கு "ஒழிவில் காலத்தறுவாய் நடந்து செல்ல, "ஒழில்காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும்" என்று உக்திமாத்ரமாயொழிவதே! என்று மிகவுந் தளர்ந்து பரவசராய்ப்படுப்பதும் இருப்பதும் நிற்பதும் புலம்புவதுமாயிருக்க, அற்றைக்கு முதல்நாள்ராத்ரி ப்ரதிவாதிபயங்கர மண்ணு ஸ்வப்நத்திலே திருவேங்கடஜீயர் என்னும் திருநாமத்தையுடைத்தாயிருக்கிற ஒரு ஏகாங்கி சென்று, "வாரீர்! ஸ்ரீவைஷ்ணவதாஸரே! நாளை ஒழிவில்காலவ்யாக்யாநாவஸரத்திலே ஜீயர்கைங்கர்யருசி விவசராயிருப்பர், அவருக்கு சேஷசைலத்திலே சேஷாவதாரமான ஜீயர் மனோரதப்படியே கைங்கர்யம் கொண்டருளுகிறோம் என்று நீர் விண்ணப்பஞ்செய்யும்'; என்று இப்படிக் கண்டு எழுந்திருந்து வித்தராய் 'ஈதொரு ஸ்வப்நவைபவமிருந்தபடியே!" என்று எண்ணிக்கொண்டு நித்யகர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றி மடத்திலே யெழுந்தருளித் திருமலையாழ்வாரிலே ஜீயரை தண்டன் ஸமர்ப்பித்து, எழுந்தருளியிருக்கிற ப்ரகாரத்தைக்கண்டு தம்முடைய ஸ்வப்நமிருந்த ஸ்த்தியும் சேர்ந்திருக்கிறபடியையுங்கண்டு, ஹ்ருஷ்டராய் இந்த ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தை ஜீயர் திருவுள்ளத்தில்படுத்த, ஜீயரும் "இதுவுமொரு க்ருபையே!" என்று ஹ்ருஷ்டராய் அண்ணவை உபலாளித்தருளி, புந: புந: கேட்டருளி, திச்சஜங்களை "இது எப்படி இருக்கிறது?" என்று கேட்டருள, அவர்களும் "இந்த வேளை திருமலையிலே ஒரு அத்புதமுண்டாயிருக்கவேணும்; அத்தையறியும்படிக்கு ஒருவரை நியமித்தருளவேணும்" என்று விண்ணப்பஞ்செய்ய; அவ்வளவிலே அழகியமணவாளன் எழுந்திருந்து தண்டன் ஸமர்ப்பித்து, "அடியேன் தேவரீர் திருவடிகளை முன்னிட்டு

கொண்டு திருமலைக்கு விடைகொண்டு அப்பனையும் ஸேவித்து செய்தியையும் அறிந்துகொண்டு விடைகொள்ளுகிறேன்'' என்று விண்ணப்பஞ்செய்ய, ஜீயரும் போரஉகந்தருளி அனுப்பியருள, அவரும் அதித்வரையாகக் திருமலையிலேசெறு பெருமாளை ஸேவிக்க, உடனே இளையாழ்வார் பிள்ளையைக்கண்டு அந்யோந்ய வந்தநபரராய்க்கொண்டு குசலப்ரச்நம் பண்ணிக்கொண்டு அயோத்யை ராமாநுஜய்யங்கார்பாடே செல்ல, அழகரண்ண னுக்கு பஹுமானம்பண்ணி ப்ரதிபத்தி பண்ண, ஜீயருடைய வைபவங்களை புந:புந: கேட்டுத் திருவேங்கடமுடையான் தமக்குக் கைங்கர்யங்கள் நியமித்தருளினபடியையும் தாம் ஜீயர் திருவடி களிலே ஆச்ரயிக்கவேணுமென்கிற த்வரையையும் அருளிச் செய்ய அழகரண்ணனும், ஜீயருக்கு உகப்பு கைங்கர்யம் செய்து போருகை யாய் நிற்குமென்று, ப்ரதிவாதி பயங்கரருடைய ஸ்வப்நவ்ருத்தாந் தத்தையுமருளிச்செய்ய; ராமாநுஜ அய்யங்காரும், ''ஆகில் தன்ய னேன், ஜீயர் நியமனப்படிக்கு அவருடைய திருக்கைகளாலே யதா-சக்தி செய்து போருகிறேன்'' என்று சொல்லி இளையாழ்வார் பிள்ளையையும் அழகரண்ணனையும் கோயிலுக்கு அனுப்பிவிட; அவர்களும் உடனே புறப்பட்டெழுந்தருளி ஜீயரை தண்டன் ஸமர்ப்பித்து வடக்கில் எம்பெருமான்களுடைய அபயஹஸ்த ப்ரஸாதங்களையும் ஸமர்ப்பித்துத் திருவடிநிலைகளையும் திருவடி களிலே சேர்க்க, ஜீயரும் இளையாழ்வார்பிள்ளையை பஹுநாளைக் காகக் கண்டோமே! என்று மிகவும் க்ருபைபண்ணியருளி, அழகரண்ணனையும் போரக்ருபைசெய்தருளி, ப்ரதிவாதி பயங்கர மண்ணனை 'உம்முடைய ஸ்வப்நம் பலவ்யாப்தமாயிற்று; உமக் காகவன்றோ திருவேங்கடமுடையான் க்ருபைபண்ணியருளினர்!'' என்று உகப்புதோன்ற அடிக்கடி அருளிச்செய்துகொண்டு இளையாழ்வார்பிள்ளையை அடிக்கடி திருக்கையாலே தழுவி உபலாளித்து, ''நெடுந்தூரம் சென்று வந்தீரே!'' என்று அருளிச் செய்துகொண்டு ராமாநுஜ அய்யங்கார் ஸ்வரூபஸ்வபாவங்களை உகந்தருளிக்கேட்டுக்கொண்டு, நம்பெருமாள், ஸ்ரீபதிகாச்ரமப் பெருமாள், திருநாராயணப் பெருமாள், திருவேங்கடமுடையான், அழகர், இவர்களுடைய ஐககண்ட்யத்தையும் அருளிச்செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். இந்த அர்த்தங்களையெல்லாம் **வரவரமுனி வைபவ விஜயம்** என்கிற ப்ரபந்தத்திலே கந்தாடை யப்பன் விஸ்த்ருதமாக அருளிச் செய்ய ஜீயர் திருச்செவி சாத்து யருளினர்.

பின்பொருநாள் திருக்காவேரியினின்றும் எழுந்தருளச் செய்தே ஜீயருக்கு இளையாழ்வார் பிள்ளை திருக்கை ஸமர்ப்பித்துக்

கொண்டு வரும்போது ப்ரஸங்காத் அயோத்யை ராமாநுஜ அய்யங்காருடைய மநோரதத்தை விண்ணப்பஞ்செய்யக்கேட்டருளி, 'திருவேங்கடமுடையானை இன்னுமொருக்கால் ஸேவிக்கையுமுண்டாம், அப்போது அவர் மநோரதப்படியே ஆகிறது; இப்போது அவர் கைங்கர்யஸ்ரீயுடனேயிருக்கக்கடவர்'' என்றருளிச்செய்ய, பின்னும் ராமாநுஜ அய்யங்கார் இந்தித்திருவடி நிலைகளைத் தமக்குத் திருவாராதனமாக ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிறாரென்று விண்ணப்பஞ்செய்ய, அப்படியே ஆகிறதென்று மடத்திலேயெழுந்தருளினவுடனே தைவாதீனமாகத் திருவடி ஸம்பந்தமுடையரான சில வைஷ்ணவர்கள் திருமலைக்கு விடைகொண்டு திருப்புரட்டாசித் திருநாள் ஸேவித்து விடைகொள்ளுகிறோமென்று தண்டன் ஸமர்பபித்து நிற்க, போர உகந்தருளி, *புணர்த்தகையினராயடியேனுக்கும் போற்றுமினே என்று திருமலையை நோக்கித்தொழுது ராமாநுஜ அய்யங்காருக்குத் திருவடி நிலைகளை ஸாதித்து விடைகொடுத்தருள; அவர்களும் புறப்பட்டுத் திருமலைக்கு எழுந்தருளினார்கள்.

## கந்தாடை அண்ணன் திருமலைக்கு எழுந்தருளல்

பின்பொருநாள் கந்தாடையண்ணனை கடாக்ஷித்தருளி ''திருவேங்கடமுடையானை மங்களாசாஸநம் பண்ணவேண்டாவோ?'' என்ன, அப்பிள்ளை, ''காவேரி கடவாத கந்தாடையண்ணனன்றோ?'' என்ன, *அரங்கத்தரவினணையான் வானவர்கள் சந்தி செய்ய நின்றது அங்கேயேயன்றோ? என்று ஜீயரருளிச் செய்ய, அண்ணனும் ''அப்படியே நியமித்தருளவேணும்'' என்ன, அவரையுங்கூட்டிக் கொண்டு பெருமாள் ஸந்நிதியிலே எழுந்தருளி விடை கொடுப்பித்தருளி உத்தமநம்பியையும் கூடவே ஸேவித்துக் கொண்டு போரும்படி நியமித்தருளி, அனேகம் ஸ்ரீவைஷ்ணவர்களையும் ஜீயர்களையும் ஏகாங்கிகளையும் சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்களையும் கூடப்பயணஞ் செய்தருளியிருக்கிறவவஸரத்திலே; உத்தம நம்பியும் †அண்ணனுக்குத் திருப்பல்லக்கு முதலான வரிசைகளைச் சேர்த்துப் புறப்பட்டிருக்கும்படிக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டு நிற்க, அண்ணனும் அவைகளையெல்லாம் நிரோதித்து ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியை ஸேவித்துக்கொண்டு திருமலைக்குப் பெருங்கூட்டத்துடனே செல்லுகிற நமக்கு உசிதமன்றென்று மாறுமண்ணப்பஞ்செய்யவொண்ணாதகடிக்கு நிஷேஷித்துவிட்டு ''திருநாளிலே இரண்டு மூன்று நாளாகிலும் மங்களாசாஸனமாக வேண்டும்'' என்று அதித்வரையாகப் பயணகதிகளிலே யெழுந்

தருளி திருமலையடிவாரத்திலே அடிப்புளியழகியசிங்கரைத் தொழுது திருமலையேறியருள; அச்செய்தியைத் திருமலையநந்தாழ்வான்A கேட்டருளி, பெரிய கேள்வி ஜீயர் முதலானோர், மற்ற ஆசார்யபுருஷர்கள், ஸ்தலத்தார் எல்லாருக்குமறிவிக்க, அவர்களெல்லாரும் போர உகந்தருளி வெள்ளிக்கிழமை புழுகுக்காப்பு உத்ஸவத்தை அண்ணன் மங்களாசாஸனம் செய்தருளவேணுமென்று ப்ரார்த்; கால்வேளைக்கு நிறுத்தி, பெருமாள் திருத்தேரிலே ஏறியருளினவுடனே அனைவரும் வரிசையுடனே அண்ணனை எதிர்கொண்டு எழுந்தருளப்பண்ணுவித்துக்கொண்டு வந்து திருத்தேரிலே பெருமாளை மங்களாசாஸனம் பண்ணுவித்து, பின்பு திருத்தேர் திருவீதியெழுந்தருள இயல் தொடங்குகிறவிடத்திலே அயோத்யை ராமாநுஜ அய்யங்கார் கண்டு பக்தி பரவசராய் ஸேவித்து நிற்க, அவரையும் க்ருபைபண்ணியருளி எழுந்தருளா நிற்கிறவளவிலே:

ஸ்ரீபதரிகாச்ரமத்தினின்றும் ராமாநுஜதாஸர் வந்து அசிந்திதமா அண்ணனெழுந்தருளியிருக்கக் கண்டு மிகவும் விஸ்மிதராய் உகந்து திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பிக்க, அண்ணனும் போரவுகந்தருளி எடுத்தணைத்துக் கொண்டு அத்யந்தம் ஹர்ஷபரவசராய் "வாரீர் ராமாநுஜதாஸரே! உம்மைக் காணப்பெற்றோமே! தேசாந்தரகதனான புத்ரனிடத்தில் பித்ருஹ்ருதயம்போலே ஜீயர் திருவுள்ளம் உம்மிடத்திலே ஒருமைப்பட்டிருக்கிறது" என்று அங்குள்ள பெரியோர்களுக்கெல்லாம இவருடைய ஆசார்ய நிஷ்டையை யருளிச்செய்து, திருத்தேர் நிலையில் எழுந்தருள, பெருமாளும் உள்ளே எழுந்தருளினவுடனே ஸேவாக்ரமத்திலே அப்பனை பாதாதிகேசாந்தமாகவும் கேசாதிபாதாந்தமாகவும் ஸேவித்து பூர்ணமநோரதராய், புழுகுக்காப்புஸேவையுமாய், தீர்த்தம் ஸ்ரீசடகோபன், ஸ்ரீபாதரேணு ப்ரஸாதித்தருள ஸ்வீகரித்தருளி, பின்பு அநந்தாழ்வான் திருமாளிகைக்கு எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு எழுந்தருள, அங்கேயெழுந்தருளினவுடனே அநந்தாழ்வானும் ஸர்வோபசாரங்களையுஞ் செய்தருள அங்கே எழுந்தருளி இருந்தார்.

## அயோத்யை ராமாநுஜ அய்யங்கார் அண்ணனை ஆச்ரயித்தது

ராமாநுஜதாஸரும் ராமாநுஜ அய்யங்காரைக் கண்டு, "தேவரீர் திருமுகப்ரகாரம் அவ்விடத்தில் கைங்கர்யங்களெல்லாம்

A. இவர் ஒன்றான திருமலையநந்தாழ்வான் திருவம்சயராய் அவர் ஸ்தாநத்தில் கைங்கர்யம் பண்ணியிருந்தவராதல் வேண்டும்.

அமர்த்தி, சிறிய ராமாநுஜ அய்யங்காரைக் கற்பித்து அவரைக கொண்டு ஸகலவித கைங்கர்யங்களும் நடக்கும்படி பண்ணி வந்தேன்; தேவரைக் காணப்பெற்றேன்; அண்ணன் திருவடிகளையும் ஸேவிக்கப் பெற்றேன்'' என்று விண்ணப்பஞ்செய்ய; ராமாநுஜ அய்யங்காரும் போர உகந்தருளித் தமக்கு ஹிதங் கேட்கத் தொடங்கி அப்பன்திருவடிதொழுதவன்று தொடங்கி இற்றை வரைக்கும் தம்முடைய வ்ருத்தாந்தங்களையெல்லாம் விண்ணப்பஞ்செய்யக் கேட்டு அவருக்கு ஹிதமருளிச் செய்தபடி; ''ஜீயர் திருவடிகளில் ஆச்ரயிக்கவில்லையென்கிற குறையை விடும்; அதிலும் அதிசயமாய் ஜீயருக்கு இரட்டிப்பு உகப்பாயிருக்கும்: நாளை தீர்த்தம் திருவோணத்தில் அண்ணன் திருவடிகளிலே ஆச்ரயணமாக'' என்று நியமிக்க: ராமாநுஜ அய்யங்காரும் அதிஸந்தோஷத்துடனே அவரையுங்கூட்டிக்கொண்டு அண்ணனைத் தெண்டன் ஸமர்ப்பித்து நின்று இச்செய்தியை விண்ணப்பஞ் செய்ய, அண்ணனும் ''ஜீயருடைய நியமனமும் அப்படியே இருக்கும்'' என்றருளிச் செய்து, ''ராமாநுஜதாஸர் ஹ்ருதயமும் ஜீயர் திருவுள்ளமும் ஏகமாயிருந்தபடியென்!'' என்று போரவித்தராயிருக்க, அண்ணனும் ''ஜீயர், தமக்கு ப்ரதிபிம்பமாக அபிமாணித்ருளி திவ்யதேசமங்களாசாஸநம் செய்தபடி அறிவீரே'' என்று அருளிச் செய்து வைஷ்ணகோஷ்டி புரஸ்ஸரமாக ராமாநுஜ அய்யங்காருக்கு ஸமாச்ரயணம் செய்தருளினார். ராமாநுஜ தாஸரும் *பண்டைக் குலத்தைத் தவிர்த்து தாமும் வேதகப் பொன்னானார் பின்பு அண்ணன் இருவரையும் கூட்டிக்கொண்டு கோவிலிலே எழுந்தருளி அப்பனை மங்களாசாஸநம் செய்தருளாநிற்க, பெருமாளும் அண்ணனை மிகவும் க்ருபை பண்ணியருளி ராமாநுஜ அய்யஙகாருக்கு அண்ணன் திருவடிஸம்பந்தம் தோற்ற ''கந்தாடை ராமாநுஜ அய்யங்கார்'' என்று அருள் பாட்டுடனே பட்டுவஸ்த்ரம் ப்ரஸாதித்து இதுவே இவருக்குத் திருநாமமென்று விதித்தருளிச்செய்து உபலாளித்தருளினார் பின்பு பெரியகேள்வி சிறிய கேள்வி ஜீயர்கள, ஏகாங்கிகள, ஆசார்ய புருஷர்கள் முதலான ஸ்தலத்தாரனைவரும் அண்ணன் ஸந்நிதிக்கெழுந்தருளி, சிறப்புவரிசைகளும் ஸமர்ப்பித்து, ஆச்ரயிக்க வேண்டியவர்கள் ஆச்ரயித்து ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்து, அமுது செய்யத்தக்கவர்கள் அமுதுசெய்தருளி, தளிகைப்ரஸாதப்ராப்தாக்கள் தளிகைப்ரஸாதம் ஸ்வீகரித்து உபலாளித்து க்ருதார்த்தரானார்கள்.

## அண்ணன் திருமலையினின்றும் கோயிலுக்கெழுந்தருளல்

மற்றைநாள் அண்ணனை அனைவரும் கோவிலுக்கு வரிசையுடனே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து மங்களாசாஸநம் பண்ணினவுடனே *பெருமாளரையிற் பீதகவண்ணவாடையான பெரிய பீதாம்பரம் முதலான வரிசைகளெல்லாம் ஸாதித்தருளி கந்தாடை ராமாநுஜ அய்யங்காருடைய திருப்பல்லக்கு, சத்ரசாமராதிதள், மற்றை ஸமர்ப்பணைகளையெல்லாம் பரிக்ரஹிக்கும்படிக்கு அர்ச்சகமுகேந நியமித்தருளி விடைகொடுத்தருள உடனே புறப்பட்டருளிக் கீழ்த்திருப்பதியிலே யெழுந்தருளி ஸ்ரீகோவித்தராஜப் பெருமாளையும் மற்றவர்களையும் மங்களாசாஸநஞ் செய்தருளி வரிசைபெற்றுப் புறப்பட்டு எறும்பியிலே எழுந்தருள, அப்பா திருத்தகப்பனார் ஐயைகளும் அழகியமணவாளதாஸராகிய ஸ்ரீவைஷ்ணவர்களுடனே எதிர்கொண்டு ஸேவித்துத் தம்முடைய திருமாளிகையிலே எருந்தருளப் பண்ணிவைத்துக் கொண்டுசென்று உபசரித்தருளின வளவிலே; அண்ணன், "இளையாழ்வார் பிள்ளை, திருவாய்மொழியாழ்வார் பிள்ளை முதலான ஆசார்யர்களும், எம்பெருமானார் ஜீயர், திருவேங்கட ஜீயர் முதலான ஜீயர்களும், முந்தி எழுந்தருளுகிறார்கள்" என்ன, "அடியேன் சேரிக்கு எழுந்தருளி க்ருபைபண்ணியருளாமல் அப்படிச் செய்தருளலாமோ?" என்று ஐயைகள் வெறுத்துக் கொண்டு சுத்தஸத்வமண்ணனைக் கேட்டருள, அண்ணனும், "ஸ்வாமி ஆசார்யரண்ணன், தாம் திருப்பல்லிக்கிலே யெழுந்தருளச் செய்தே' அவர்களும் கூட எழுந்தருளப்போகாதென்று முன்னே அனுப்பியருளினார். அவர்களும் பத்மபுரமென்கிற திருமலையடி வாரத்திற்கெழுந்தருளுகிறார்கள்" என்ன, ஆகில் தாம் எழுந்தருளி அவர்களையெல்லாரையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரவேணுமென்று சுத்தஸத்மண்ணன் திருக்கைகளைப்பிடித்துக் கொண்டு பத்மபுரமேயெழுந்தருள, அவர்களுங்கண்டு அந்யோந்யம் வந்தநபராய் குசலப்ரச்நம் பண்ணிக்கொண்டு எல்லாரும் எறும்பியிலே ஐயைகள் திருமாளிகையிலே எழுந்தருளி சக்ரவர்த்தி திருமகன் அதிவிஜ்ரும்பணமாக பூர்ணமாக அமுது செய்தருளி ததீயாராதநமும் நடக்க, மற்றைநாள் திருக்கடிகையில் *அக்காரக்கனியையடைந்து மங்களாசாஸநஞ்செய்தருளிப் புறப்பட்டுப் *புட்குழியெம்போரேற்றைத்தொழுது பெருமாள் கோயிலுக்கெழுந்தருள, அங்குள்ள ஆசார்யர்களும் கோயிலனைத்துக்கொத்தும் எதிர்கொண்டு எழுந்தருள்வித்துக்

கொண்டுபோய் பேரருளாளர் பெருந்தேவியாரை ஸேவாச்ரமத்திலே மங்களாசாஸநம் பணுவித்துத் திருமாளிகையிலே எழுந்தருளப்பண்ணிச் சிறப்பும் நிரவதிகமாக ஸமர்ப்பித்து உபசரித்தருளினார்கள். அப்பாச்சியாரண்ணாவும் முதலியாண்டான் தொடங்கியுண்டான தம்முடைய பெரியோர்களையெல்லாம் ஸேவித்தாற்போலிருக்கிறதென்று மிகவும் உகந்தருளி ப்ரதிபத்தியுடனே ஸ்வாமியண்ணனையும், கூட எழுந்தருளின ஸ்வாமிகளையும் மற்றுமுண்டானபரிஜனங்களையும் தந்திருமாளிகையிலே தானே எழுந்தருளப் பண்ணி வைத்துக் கொண்டு பஹுவாக உபசரித்து உபலாளித்துக் கொண்டெழுந்தருருளியிருந்தார். பேரருளாளரும் உகந்தருளி அண்ணனுக்குத் திருநாமம் "ஸ்வாமி" என்று அனைவரும் அநுஸந்திக்கும்படிக்கு ஆஜ்ஞாயித்தருளி அருள்பாடும் ப்ரஸாதித்தருளினார்.

**ஸ்வாமியண்ணன் பேரருளாளனுக்கு சாலைக்கிணற்றில் திருமஞ்சக கைங்கர்யம் செய்தல்-**

ஸ்வாமி யண்ணனும் பேரருளாளனுக்கு மிதவும் உகப்பாக எம்பெருமானார் உகந்து செய்தருளின கைங்கர்யமாய், பின்பு முதலியாண்டானும் அப்படியே செய்தருளி, *துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பரும் விரும்பிச் செய்தருளின சாலைக்கிணற்றில் திருமஞ்சநகைங்கர்யமின்றிக்கேயொழியவொண்ணாதென்று அப்பாச்சியாரண்ணவுக்கருளிச் செய்து, தாமும் புறப்பட்டருளி அருணோதயகாலத்திலே அநுஷ்டாநகுளத்திலே நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்களையும் நிறைவேற்றி, கைங்கர்யருசியையுடையருமாய் சக்தருமாயெழுத்தருள ஸ்ரீவைஷ்ணவர்களுடனே சாலைக்கிணற்றருகே எழுந்தருளி குடங்களை சோதித்துத் திருமஞ்சநம் பூரித்துத் திருமுடியிலே வைத்துக்கொண்டு ஆளவந்தார் ஸ்தோத்ராநுஸந்தாநத்துடனே தண்ணீரமுது வழிதிருத்துகிற உத்ஸவம்A போலே தாம் எழுந்தருளியிருக்கிற நாளெல்லாம் பேரருளாளருக்குத் திருமஞ்சநகைங்கர்யம் செய்தருளி, பின்பு

---

A தண்ணீரமுது வழிதிருத்துகிற உத்ஸவம் எம்பெருமானார் திருமலையிலே நியமித்து ஏற்படுத்தியருளிய ஒரு உத்ஸவம். திருமலையப்பன் ஒரு வேடனுருவில் பெரிய திருமலை நம்பி நித்யமாக் ஆகாச கங்கையினின்றும் கோயிலுச்கு எழுந்தருளப் பண்ணும் திருமஞ்சநத்தை ஒருநாள் குடத்தை அம்பெய்து ஓட்டை பண்ணி பெருகிய தீர்க்தத்தைப் பருகியருளியதை அனைவரும் அறியும்படி, பல ஸ்ரீவைஷ்ணவர்கள் குழாமாக ஆகாசகங்கையிலிருந்து அத்யயந உத்ஸவம் முடிந்தமறுதினம் திருமஞ்சனம் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு திருவீதிவலம் வந்து கோயிலில் ஸமர்ப்பித்த ல்

அப்பாச்சியாரண்ணாவை "இந்தகைங்கர்யம் தப்பாமல் நடத்தி வாரும்" என்று நியமித்தருளினார்.

## கந்தாடை ராமாநுஜ அய்யங்கார் செய்த கைங்கர்யங்கள்

ஒரு நாள் கந்தாடை ராமாநுஜ அய்யங்காரைத் திருமலை திருப்பதியில் கைங்கர்யங்களை நிறைவேற்றி மீண்டுவந்து, திருவநந்தஸரஸ்ஸுக்கு நீராழி மண்டபமும், சுற்றிவர ஸோபாநங்களும் தென்கரையில் உந்நதமான குளக்குறடும், ஸிம்ஹாஸநமும், மண்டபமும், திருமழிசைப்பிரான் கோயில் கைங்கர்யமும், திருவபிஷேக மண்டபத்திற்கு முன்னே பெரியமண்டபமும் திருமலைக்கு ஒலிமுகமண்டபம் முதலான இன்னுஞ்சில மண்டபங்களும், திருமடைப்பள்ளி, வடக்குத் திருக்குளப்படிக்கட்டும், யதாஸம்பவம் திருவாபரணங்களும், திருமஞ்சனகாலத்திற்கு மஞ்சள்காப்பு கைங்கர்யம் முதலான அனேக கைங்கர்யங்களும், திருப்பவளத்திற்கு உகப்பாக அமுது செய்தருளும்படிக்குச் சில கட்டளைகளும் நியமித்து, "இவைகளெல்லாம் அழகிய மணவாள மாமுனிகள் கைங்கர்யம், அவச்யம் நடத்திவாரும்" என்றும் "அப்பாச்சியாரண்ணாவை நாமாகவே ப்ரதிபத்தி பண்ணி வாரும்" என்றும் புத்திகளை ஸாதித்து திருமலைக்கு அனுப்பியருளினார்.

## "அண்ணன் ஜீயர் — ஜீயரண்ணன்"

பின்பு தாமும் ஸ்ரீபெரும்பூதூர் முதலான திவ்யதேசங்களை மங்களாசாஸநம் பண்ணத்திருவுள்ளமாய், பேரருளாளர் ஸந்நிதியிலே அனுப்புவித்துக்கொள்ள எழுந்தருள, திருவாராதநம் கண்டருளி தத்யோதந அவஸரம் அமுது செய்தருளினவுடனே அண்ணனை அருள்பாடிட்டழைத்து உடுத்துக்களைந்த பீதகவாடை, அபயஹஸ்தங்கள், திருவடிசோடு, களபம், சூடிக்களைந்த தொடுத்த துழாய்மலர், ப்ரஸாதங்கள் இவையெல்லாங்கட்டி "இவை ஜீயருக்கு" என்று அண்ணன் திருக்கைகளிலே ஸாதித்தருளி அண்ணனுக்கு உகப்புடனே வரிசைகளும் ஸாதித்தருளி விடைகொடுத்தருள, ஸ்வாமியண்ணனும் திருவையமாளிகையிலே கச்சிக்குவாய்த்தான் திருமண்டபத்திற்கு எதிராக எழுந்தருளியிருந்து ஜீயருடைய வைபவங்களை அநுஸந்திக்க, அதற்கு அநுகுணமாக பேரருளாளர் உபலாளித்தருளி உகந்து கொண்டிருக்க, அவ்வளவிலே சில பெரியோர்கள் "நம்முடைய ஸ்வாமி ஜீயருக்கு", "அண்ணன் ஜீயர்" என்று பேரருளாளர் திருநாமம் சாத்துவதே" என்று உகந்தருள' வேறுசில பெரியோர்கள், அண்ணனுக்கு பெரிய

பெருமாள் "ஜீயரண்ணன்" என்று திருநாமம் சாத்தினதுண்டே! யென்று, "ராமாநுஜம் லக்ஷ்மணபூர்வஜம் ச" என்கிறபடியே ஜீயருக்கும் அண்ணனுக்குமுண்டான அந்யோந்ய ப்ரீத்யதிசயத்தையும் அப்ரதிம வைபவங்களையுமிட்டுப் பேரருளாளரும் பெரியோர்களும் உகந்தருளி இப்படித்திருநாமங்கள் சாத்தினார்களென்று எல்லாருங் கொண்டாடிக்கொண்டு திருமாளிகையிலே எழுந்தருள; "பஹுநாளாயிற்று அதிசீக்ரமாக வரவும்" என்று அண்ணனுக்கு ஜீயருடைய திருமுகம் வர, அண்ணனும் அந்தத் திருமுகத்தை சிரஸாவஹித்தருளி உட்பட்டுக் கொண்டு ஸ்ரீபெரும்புதூர் முதலான திவ்யதேசங்களை திக்குநோக்கி தண்டன் ஸமர்ப்பித்துக் கோயிலுக்குப் புறப்பட்டு *பொன்னடி காண்பதோராசையினால் அதித்வரையாக பயணகதியிலெழுந்தருளித் திருக்காவேரிக் கரையிலே யெழுந்தருள, கோயிலுள்ள பெரியோர்களெல்லாருங் கேட்டருளி மிகவுமுகந்திருக்க, பட்டர் கோயில்பரிகரமனைத்துடனே எதிர்கொண்டு திருமாளிகையிலே எழுந்தருளிப் பண்ணி வைத்தார். ஜீயரும் அண்ணன் திருமாளிகையிலே எழுந்தருளியிருந்து அண்ணனை க்ருபை பண்ணியருளி, திருவேங்கடமுடையான், பேரருளாளர் ப்ரஸாதங்களையும் அங்கீகரித்தருளி அவ்வவ்விடங்களிலுள்ள வைபவங்களைக்கேட்டருளி உகப்புடனே எழுந்தருளியிருக்கிறவளவிலே, ஸ்ரீவைஷ்ணவர்கள், பேரருளாளர் ஜீயருக்கு "அண்ணன் ஜீயர்" என்று திருநாமம் ஸாதித்தபடியை விண்ணப்பஞ் செய்யக்கேட்டருளி மிகவுமுகந்து, "நம்முடைய மனஸ்ஸுக்குத்தக்கபடி பேரருளாளரும் தேவரீர் ஸம்பந்தந்தோற்ற அருளிச்செய்வதே!" என்று அண்ணனைப் பார்த்தருளிச்செய்ய, ஸ்வதந்த்ரனுடைய அதிக்ரமணத்துக்குத் தடையுண்டோ? என்று சிலவருளிச் செய்யப்புக ப்ரதிவாதிபயங்கரமண்ணனும் "ச்ரிய: பதி" என்னுமாபோலே ஜீயருக்கு இதுவுமொரு திருநாமமென்ன, அவரை எல்லாரும் கொண்டாடினார்கள்.

பின்பு ராமாநுஜதாஸர் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அவர் திருமுடியிலே தந்திருவடிகளை நற்றரிக்க வைத்தருளி மிகவும் விசேஷகடாக்ஷம் பண்ணியருளினார். அவரும் வடதேசத்தெம்பெருமான்களுடைய ப்ரஸாதங்களை நாலு ஸ்ரீவைஷ்ணவர்களைக்கொண்டு எழுந்தருளப்பண்ணி அவற்றையெல்லாம் ஸமர்ப்பிக்க, அங்கீகரித்தருளி விநியோகம் செய்தருளி தாமும் ஸ்வீகருத்தருளி பூர்ணமநோரதராய், வடக்கில் திருப்பதிகளெல்லாம் ஸேவித்தீர்பிற்றென்று ராமாநுஜதாஸரை நெருங்கத்தழுவியருளினார்.

அநந்தரம் அப்பாவை ஊரேறவரும்படிக்கு அவர் திருத்தமப் பனார் ராமாநுஜதாஸர் திருக்கையிலே திருமுகம் வரக்காட்ட அவரும் ஸேவாவிச்லேஷபீருவாயிருக்க, அவருக்குத் தஞ்சமாகத் தம்முடைய விக்ரஹமாக ஒரு விக்ரஹத்தையும் திருவடி நிலைகளையும் திருஉத்தரீயத்தையும் ப்ரஸாதித்தருளினார்

**ப்ரீத: ப்ரேஷிதவாந் முநிர்வரவரோ யஸ்மை முஹு: ஸ்ரீமுகம்**
**ப்ராதாத் ஸ்வாங்க்ரி ஸரோஜஸங்கஸுபகம் ஸ்வீயாமுபாநத்யுகம் |**
**ஸ்வீயம் ஸுந்தரமுத்தரீயமமலம் ஸ்வாம்மூர்த்திமர்ச்சாமயீம்**
**தம் தேவேஸகுரும் பஜேம ஸரணம் ஸம்ஸார ஸந்தாரகம் ||**

[மணவாளமாமுனிகள் யாருக்கு அடிக்கடி உகந்து ஸ்ரீமுகம்ஸாதித்தாரோ, யாருக்கு தம்திருவடித்தாமரைகளின் ஸம்பந்தத்தினால் பாக்யம்பெற்ற தமது பாதுகைகளிரண்டையும், தமது அழகிய தாய்த்தூயதான உத்தரீயத்தையும் தமது அர்ச்சாவிக்ரஹத்தையும் தந்தருளினாரோ, ஸம்ஸாரதாரகரான அந்த தேவராஜ குருவென்னும் எறும்பியப்பாவைச் சரணமாகப் பற்றக்கடவோம்] என்று பின்புள்ளாரும் இவ்வ்ருத்தாந்தத்தையநுஸந்திக்கும்படி அபிமானித்தருள, பின்பு எறும்பியப்பாவின் திருப்பேரனாரான பிள்ளையப்பாவும் இந்தவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தருளினாரிறே. அப்பாவும் ஜீயரநுமதி கொண்டு கோயிலினின்றும் புறப்பட்டு எறும்பியேற எழுந்தருளி தம்திருத்தமப்பனாரைத் திருவடிதொழுது அவருக்கு சுஶ்ருஷித்திக் கொண்டிருந்து, "எண்டிசையுமறிய வியம்புகேன் ஒண்டமிழ்ச் சடகோபனருளையே என்கிறபடியே, ஜீயருடைய சேஷாக்ருதித்வ லக்ஷணாக்ருதித்வ ப்ரப்ருதிகமான அப்ரதிமப்ரபாவத்தை வரவரமுநி ஶதகம், வரவர முநி ப்ரபந்தம், வரவர முநி பஞ்சாஶத், வரவரமுநி ஸ்தவம், வரவர முநி மங்களாசாஸநம் வரவரமுநி கத்யம் முதலான ஹ்ருதயமான அநேகப்ரபந்தங்களாலே வெளியிட்டு உபகரித்தருளினார்.

## ஸ்ரீ வானமாமலை ஜீயர் அரங்கநகரப்பனை திருவாராதனமாகப்பெறுதல்

அவ்வளவிலே வானமாமலை ஜீயரை வானமாமலை ஸ்ரீகார்யார்த்தமாக அனுப்பியருளவேணுமென்று ஸேனைமுதலியார் ஸ்ரீமுகம்வர, எதிர்கொண்டு சிரஸாவஹித்து உட்பட்டுக்கொண்டு அப்படியே ஸம்மதியாம்படி ஜீயர் நியமித்தருளி, அவரையும் கூட்டிக்கொண்டு பெருமாள் திருமுன்பே சென்று இச்செய்தியை விண்ணப்பஞ்செய்து தாமும் திவ்யப்ப்ரபந்தம் நாலாயிரத்தில்

னைய் நூறுபாட்டுக்ரமத்திலே நித்யாநுஸந்தானமாக அநுஸந்திக்கிறது அவற்றைக்குத் திருமொழிசாற்றுமுறையாய், *அணியார் பொழில்சூழ் அரங்கநகரப்பா! என்று அநுஸந்திக்கிற வேளையிலே பெருமாளும் அப்படியே ஸம்மதித்து, தம்முடைய ஸந்நிதியிலே பூபாலராயனில் தட்டிலேயெழுந்தருளியிருக்கிற அரங்கநகரப்பனாகிய லக்ஷ்மீநாராயணனை தாம் வானமாமலை ஜீயருக்கும் உமக்குமாக வருகிறோமென்று வானமாமலை ஜீயர் திருக்கையிலே எழுந்தருளப்பண்ணிக் கொடுக்க, அவரும் ஜீயர் திருமுகமண்டலத்தைப் பார்த்து *பெரியார்க்காட்பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் தீர்த்தம் திருப்பரிபட்டம், திருமாலை அபயஹஸ்தம் முதலான வரிசைகளும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதமும் ஸாதித்து விடைகொடுத்தருள, ஜீயரும் மங்களவாத்யங்களுடனே அரங்கநகரப்பனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு மடத்திலே யெழுந்தருளி அமுது செய்தருளினவுடனே ஜீயரை வாழ்த்தி அரங்கநகரப்பனை ப்ரஸாதித்து வானமாமலைக்கு அனுப்பியருளினார்.

## ஸ்ரீகோவிந்ததாஸரப்பனின் மதுரகவிநிஷ்டை

அநந்தரம் ஜீயரும் ஒருநாள் எல்லாரும் பேரோலக்கமாக ஸேவித்துக் கொண்டிருக்கச் செய்தே முதலிகளைக்குறித்து, எல்லாருமறிந்தார்களேயாகிலும் *தேவுமற்றறியேன் என்றிருக்கிற இருப்பு ஸ்ரீகோவிந்ததாஸரப்பனுக்கேயுள்ளதொன்றிறே என்று விசேஷாபிமாநம் செய்தருளி,

**ஸாக்ஷாந்நாராயணோதேவः க்ருத்வாமர்த்யமயீம் தநும் |**
**மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ।** என்றும்
**ஜகதோ ஹிதசிந்தாயை ஜாக்ரத பணிராயிந: |**
**அவதாரேஷ்யங்யதமம் வித்தி ஸௌம்யவரம் முநிம் ।**

[ஸர்வேச்வரனான நாராயணன்தானே இவ்வுலகில் மனிதவுருவில் (ஆசார்யனாய்) வந்தவதரித்து ஸம்ஸாரமாகிற கடலில் மூழ்கிக் கிடக்குப் ஜனங்களைத் தமது கருணையினால் சாஸ்த்ரங்களைக் கைக்கொண்டு மேலெழச்செய்கிறான்-என்றும், உலகங்களுக்கு நன்மை செய்யும் எண்ணத்தினால் அதன்பொருட்டு விழிப்புடனுள்ள சேஷசாயியான எம்பெருமான் பண்ணியருளும் அவதாரங்களில் மணவாளமாமுனிகளையும் ஒரு அவதாரமாக அறிவீர்] என்றும் சொல்லுகிறபடியே தாம் பகவதவதாரமென்னுமிடம் தோன்ற "நாமே இடீர்" என்றருளிச்செய்து தம்மழகியமணவாளப் பெருமாளையும் அவருக்குத் திருவாராதனமாகப்ரஸாதித்து ப்ராப்யைக நிஷ்ட

ராக்கியருளினார். அவரும், மோர்முன்னாக முப்பதுஸம்வத்ஸரம் தளிகைப்ரஸாதம் ஸ்வீகரிக்கப்பெற்று Aக்ருதார்த்தராய் ஸகலர ஹஸ்யார்த்தங்களையுங் கேட்டு ஜீயர்திருவடிகளை ஒருக்காலும் பிரியாதே, பிரிந்தாலும் இராத்தங்குமுருக்கும் போகாதே, நித்ய ஸேவை பண்ணிக் கொண்டிருந்தார். பின்பொரு திருவாடிப் பூரத்திலே சூடிக்கொடுத்த நாச்சியார் தீர்த்தப்ரஸாதங்களை போர ஆதரித்துக் கொண்டுவந்து ஸமர்ப்பிக்க, ஜீயரும் அங்கீகரித் தருளி பெரியப்ரீதியோடே ஆண்டாளுக்குகப்பாக "பட்டர் பிரான் தாஸர்" என்று திருநாமம் ஸாதித்தருளினார். பின்பு கோவிந்ததாஸரப்பன் மஹாவிரக்தராய் ஆச்ரமஸ்வீகாரம் செய்ய, "பட்டர்பிரான் ஜீயர்" என்று, திருநாமமாயிற்று. எம்பெரு மானார் திருவடிகளுக்கு வடுகநம்பியைப்போலயாய்த்து இவரும் ஆசார்யநிஷ்டாக்ரேஸரராயிருக்கும்படி. இப்படியானவிவர் சரம பர்வ நிஷ்டையை மணவாளயோகி வாழ்ந்தருளிகிற காலத்திலே தணவாதவடிமை ஸகலகாலத்திலும் செய்தருள, "பட்டர்பிரான் ஜீயர்" என்றும், *தேவுமற்றறியேன்என்றும், "பட்டநாதமுநிவரா பீஷ்டதைவதம்" [மணவாளமாமுனிகள் பட்டர்பிரான் ஜீயருக்கு இஷ்டதேவதை] என்றும் 'ஸ்ரீமதுரகவிசரிதகாரி மஹிதசாரித்ர꞉ ஸ்ரீமாந் பட்டநாதபதீஸ்வர." [ஸ்ரீமதுரகவிநிஷ்டையை மணவா ளமாமுனிகளிடம் உடையவர் நன்னடத்தையுள்ள ஸ்ரீபட்டர் பிரான் ஜீயர்] என்றும் அங்குத்தைக்கு அந்தரங்கரானவர்கள் அருளிச் செய்தார்கள்

இப்படி அந்திமோபாய நிஷ்ட்டாக்ரேஸரராலே ஸேவ்யமா நராய் எழுந்தருளியிருக்கிற ஸௌம்யஜாமாத்ருமுநிவர்யரான ஜீயரும் *அன்னையாய் அத்தனாய் என்கிறபடியே தமக்கு ஸர்வ விதோத்தாரக பந்துபூதரான நம்மாழ்வாரை ஸேவித்து நெடு நாளாயிற்று ஆகையால் தத்விஷயப்ரேமமதிசயித்து *தாய் நாடுகன்றேபோல த்வரித்துக் கொண்டு பெருமாளுக்கு

---

A. ஆசார்யன் அமுது செய்த பாத்ரத்தில் (இலையில்) அவர் கடைசியாக அமுது செய்த மோர்ப்ரஸாதம் ரஸம் மாறுமல் அதையே சிஷ்யனை தாம் முதலில் உண்டு பிறகு மற்ற வ்யஞ்சனங் களுடன் அதே இலையில்உண்பது. ஆசாரியன் *போனகம் செய்த சேடம் உண்கை சிஷ்யனுக்கு ப்ராப்யம். இப்படி மோர்முன்னாரையுள் என்னும்படி 30 ஆண்டுகள் தினமும் ஆசாரியனின் உச்சிஷ்ட முண்டு கிரோபாஸிதஸத்வ்ருத்தர் என்று கொண்டாடப் பெற்றவர் பின்புள்ளாரிலுமுண்டு.

விண்ணப்பஞ்செய்து அப்போதே திருநகரியேற எழுந்தருளுகைக்காகப் புறப்பட்டு, "கூடல்" என்கிற மதுரையிலே சென்று திருப்பல்லாண்டு அவதரித்த ஸ்தலமென்று உகந்தருளி *மல்லாண்ட திண்டோள் மணிவண்ணனையும் திருவடிதொழுது, *பல்லாண்டு பல்லாண்டு என்று மங்களாசாஸநம் செய்தருளி அங்கேயெழுந்தருளியிருக்குமளவிலே,

## மஹாபலிவாணநாதராயன் ஜீயரை ஆச்ரயித்தல்

அத்தேசத்துக்கதிபதியான மஹாபலிவாண நாதராயன் வந்து திருவடிகளிலே ஆச்ரயிக்க, அவனையும் விசேஷகடாக்ஷம் பண்ணி தாப புண்ட்ராதி பஞ்ச ஸம்ஸ்காரயுக்தனாக்கித் திருவடிகளுக் காட்படுத்திக்கொண்டு அற்றைக்கு அங்கேயெழுந்தருளியிருந்து பிற்றைநாள் அர்த்தராத்ரியிலே

**மணிகாஞ்சநஸஞ்சந்நாம் சிபிகாம் தததிஷ்ட்டிதாம் |**
**ஸபந்நயந்த ஸ்வஸ்கந்தே க்ருத்வாகேசித் ப்ரதஸ்த்திரே ||**

[சில ஸ்ரீவைஷ்ணவர்கள் பொன்னாலும் ரத்னங்களாலும் ஆனதும், நன்கலங்கரிக்கப்பட்டதும், மாமுனிகள் எழுந்தருளியுள்ளதுமான அத்திருப்பல்லக்கை சலிப்பில்லாமல் தமது தோள்களிலே தாங்கிக்கொண்டு புறப்பட்டார்கள்] என்கிறபடியே அந்த ராஜாஸமர்ப்பித்த அநர்க்கமான நவரத்நகசிதரமணீயாந் தோளிகையிலே ஏறியருளிப் புறப்பட்டு மூடுபனியாகையாலே திருப்பல்லக்கை குக்கூடலிட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாதந் தாங்கிக் கொண்டு எழுந்தருளா நிற்க,

**சத்ரம்சித்ரம் தது: கேசித் சாமரே தத்ரேபரே |**
**ப்ருங்காரமவரேபிப்ரக் கலாசீமபி கேசந ||**
**தத்பதாப்ஜர ஜஸ்பர்ச பாவநீமாத்ம பாவிநீம் |**
**ஸந்த்ஸ ந்தாரய ந்திஸ்ம மௌளி நாமணிபாதுகாம் |**
**அகாயந்நக்ரத:கேசிதத ந்ருத்யந்தி கேசந ||**

[சிலர் திருவெண் கொற்றக்குடையைத் தாங்கிச் சென்றனர்; சிலர் திருவெண்சாமரங்களை வீசினர்; சிலர் படிக்கம் காளாஞ்சிகளைத் தாங்கிச் சென்றனர் சில பாகவதர்கள் ஜீயருடைய ஸ்ரீபாதரேணு படுதலால் பரிசுத்தராய் ஸ்வரூபாநுகுணமாக ஸ்வாமியினுடைய மணிபாதுகங்களை திருமுடிமேல் தாங்கி சென்றனர்; சிலர் முன்னே பாடிச் சென்றனர்; சிலர் ஆடிச்சென்றனர்] என்கிறபடியே சத்ரசாமராதிகள் தொடக்கமான கைங்கர்யோபகரணங்களை

தரித்துக்கொண்டு பாடுவாராடுவார் உகந்தாலித்துக் கேட்பாராய் ஸஸம்ப்ரம ந்ருத்தகீதத்துடனே அனைவரும் ஸேவித்துக்கொண்டு போருகிறபடியைக்கண்டு இராமல்லாம் அவலைரப்ரதீக்ஷராய் ஜீயரறியாதபடி ஸ்ரீபாதம் தாங்கிக்கொண்டு இருகாதவழிஸேவித்து வர, விடிந்த பின்பு வைகையாற்றின் கரையிலே அநுஷ்ட்டானார்த்தமாக இறங்கியருளினவளவிலே ராஜாவும் கச்சைகட்டியுடுத்து ஸந்நத்தனாய் ஸ்ரீபாதம் தாங்கின வேஷத்தோடே வந்து திருவடிகளிலேஸேவிக்க, ஜீயரும் அதுகண்டு "இப்படி செய்வதே" என்று ஆஶ்சர்யப்பட்டருள அப்போது அநுஷ்ட்டானம் பண்ணுவதாகவெழுந்தருளியிருந்த "முத்தரசன்" என்கிற கிராமத்தை அங்கீகரித்தருள வேணுமென்றபேக்ஷிக்க, ஜீயருமவனுடைய நிர்ப்பந்தத்துக்காக அந்த க்ராமத்தை அங்கீகரித்தருளி அன்று தொடங்கி அந்தக்ராமத்திற்கு "அழகியமணவாள நல்லூர்" என்று திருநாமம் ப்ரஸாதித்து மஹாபலிவாணநாதராஜாவையும் மிகவுமுகப்போடே அனுப்பியருளி, திருப்புல்லாணிவழியாக எழுந்தருளுமளவிலே முதலிகளும் தாமுமாக அத்வஶ்ரமாந்தராய் நிழல்தேடிவாராநிற்க, அங்கே ஸ்த்தாவரவிசேஷமாயிருப்பதொரு திந்த்ரிணீவ்ருக்ஷம் நீரந்த்ரச்சாயாயுக்தமாய் நிற்கக்கண்டு அங்கேயெழுந்தருளி அப்புளியமரநிழலிலே விச்ரமித்து அத்வஶ்ரமம் தீர்த்துக்கொண்டு எழுந்தருளியிருக்க;

## ஜீயர் புளியமரத்துக்கு மோக்ஷமருளுதல்

முதலிகளெல்லாரும் இப்படி மஹோபகாரம் பண்ணினவிதற்கு ஒரு க்ருபைபண்ணியருளவேணுமென்று ஜீயரைப்ப்ரார்த்திக்க, அவரும் ஸ்வக்ருபாதிசயத்தாலே அந்தப் புளியமரத்தைத் திருக்கையாலே ஸ்பர்சித்து, "நாம் பெற்ற பேற்றை நீயும் பெறக்கடவாய்" என்று அநுக்ரஹித்து எழுந்தருளினார். பின்பு அசிரேண அம்மரம் உலர்ந்திருக்கக் கண்டு முதலிகள்

**யம்யம் ஸ்ப்ருஶதி பாணிப்யாம் யம்யம் பஶ்யதி சக்ஷுஷா ।**
**ஸ்தாவராண்யபிமுச்யந்தே கிம்புநர்பாந்தவாஜநா: ॥**

[ஸத்துக்கள் யார்யாரைத் திருக்கைகளால் ஸ்பர்சிப்பார்களோ, யார்யாரைத் திருக்கண்களால்கடாக்ஷிப்பர்களோ அவரில் தாவரங்களும் மோக்ஷமடைகின்றன; பந்துஜனங்களைப்பற்றிச் சொல்லவும்

வேணுமோ?] என்கிற அர்த்தம் இவரிடத்திலே அந்வர்த்தஸித்த மிறே! என்று உகந்தருளினார்கள்.

அநந்தரம் ஜீயரும் திருப்புல்லாணியேற எழுந்தருளி புல்லாணி யெம்பெருமானைத் திருவடிதொழுது அங்குநின்றும் புறப்பட்டுப் பயணகதியிலே திருநகரியேறவெழுந்தருளி ஸேவாக்ரமந் தப்பாமல் அடைவே ஆழ்வாரையும் பொலிந்துநின்ற பிரானையும் ஸேவித்து மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு அங்கே அங்கே ஆத்மாக்களை திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கி, திருவாய் மொழி முதலான திவ்யப்ரபந்தங்களையும் ப்ரஸாதித்து நின்று, ப்ரதிதினம் ஆழ்வார் திருமஞ்சனகாலத்தையும் மற்றதிவ்யோத் ஸவங்களையும் ஸேவித்துக் கொண்டெழுந்தருளியிருக்க;

**கோயிலில் அநுபவங்களில்லாமைக்கு வருந்துதல்**

இப்படிக் காலங்கழிந்து செல்லாநிற்கச் செய்தே மார்கழிமாஸம் வர,

**எந்தையெதிராசர்சிறப்பை யெழிலரங்கர்**
**சிந்தைமகிழ்ந்தமுது செய்ய—அந்த நிலம்**
**சென்று நின்று சேவிக்கும் செல்வமின்று பெற்றிலமே**
**என்று சேவிக்குமினியாம்?**

என்று "எம்பெருமானார் திருப்பாவைச் சிறப்பை ஸேவிக்கப் பெற்றிலோமில்லையே" என்று வெறுத்தருளியும், பின்பு ஸங்க்ர மணம் வர,

**சீராரங்கர்தந்தேவியரோடு சிறப்புடனே**
**யோராரு மாறன் கலியனெதிராசனோடமரப்**
**பாரோர் மகிழ்ந்தேத்தும் தட்டுக்கள்தன்னுடன் போற்றுமந்தப்**
**பேரார வாரத்தையின்று கண்டின் புறப் பெற்றிலமே**

என்று அதற்கும் நொந்தருளி, பின்பு தைத்திருநாளை நினைத்தருளி

**தேவியருந்தாமும் திருத்தேரின்மேலரங்கர்**
**மேவி விக்கிரமன் வீதிதனிற்—சேவைசெயு**
**மந்தச்சுவர்க்கத்தையநுபவிக்கப் பெற்றிலமே**
**யிந்தத்திருநாளிலே யாம்**

என்றநுஸந்தித்துப் பேரிழவோடேயெழுந்தருளியிருந்து நொந்து *அணியரங்கமாடுதுமோ என்றும், *திருவரங்கப்பெருநகருள்

தென்னீர்ப் பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டென் கண்ணிணைகள் என்று கொலோகளிக்கும் நாள் (பெருமாள் திரு.1-1) என்றும் 'ஊரரங்கமேயென்பதிவன் தனக்காசை'' என்றுஞ் சொல்லுகிற படியே அபிநிவேசத்தைப் பண்ணிக்கொண்டு அதித்வரையுடனே ஆழ்வார் திருமுன்பே சென்று A.

**திருக்குருகைப்பெருமான் தன் திருத்தாள்கள் வாழியே**
**திருவானதிருமுகத்துச் செவியென்றும் வாழியே**
**இருக்குமொழியென்னெஞ்சில் தேக்கினன் வாழியே**
**யெங்கையெதிராசர்க்கிறைவனார் வாழியே**
**கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே**
**காசினியிலாரியனைக் காட்டினன் வாழியே**
**வருத்தமறவந்தென்னை வாழ்வித்தான் வாழியே**
**மதுரகவிதம்பிரான் வாழிவாழி வாழியே**

என்று மங்களாசாஸனம் பண்ணிஸேவித்து, ஆழ்வாரநுமதி கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டருளி B அதித்வரையுடனே ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று ப்ரவேசித்து *பொங்கும் பரிவுடைய பட்டர்பிரானையும் வடபெருங்கோயிலுடையானையும் ஸேவித்து, நாச்சியார் திருமாளிகையிலே சென்று புகுந்து ஆழ்வார் திருமகளாராண்டாளையும் அன்புடனே அடி பணிந்து நிற்க, கோதையும் கோயிலண்ணருடைய திருவவதார மன்மறு நீர்!'' என்று மிகவும் க்ருபை செய்தருள, ஆண்டாளருள் கொண்டு புறப்பட்டு அழகனலங்காரன் மலையான திருமாலிருஞ் சோலை மலைநின்ற சுந்தரத்தோளுடையானை பரமஸ்வாமியையும் ஸேவித்து, அழகர் திருக்குறுங்குடிக்குக் குடிவாங்கிப் புறப்பட்டெழுந்தருளியிருக்கையாலே அவ்விடம் *நல்லதோர் தாமரைப் பொய்கை நாண்மலர்மேல் பனிசோர அல்லியுந்தாதுமுதிர்ந்திட்டழகழிந்தாலொத்ததாலோ, இல்லம் வெறியோடிற்றாலோ என்

---

A. ''ஊரரங்கமென்பதிவன்--'' என்னுமிடத்தில், ''காரினம் புரைமேனி நங்கதிர் முத்தவெண்ணகைச் செய்யவாய் ஆரமார்வ னரங்கமென்னும் அரும்பெருஞ்சுடரொன்றினை, (பெரு திரு. 2-7) சேரும் நெஞ்சுடையராய் அப்போதே ஆழ்வார் திருமுன்பே சென்று-என்று தெலுங்குப் பதிப்பு. B ஊரரங்கமென்பதிவன்... என்பவை தெலுங்குப் பதிப்பில் இங்கு இடம் பெறுகிறது,

மகளை வெங்குங்காணேன் (பெரியாழ்வார்திரு. 3-8-1) என்று அழகழிந்திருக்கிற கோயிலைக்கண்டு "புத்ரத்வயவிஹீநம் தத்" (ராமலக்ஷ்மணர்களாகிற புத்திரரிருவரும் இல்லாத; அந்த வீடு, இத்யாதிப்படியே மிகவும் அவஸந்நராய் க்லேசித்தருளி இவரும் உடையவரைப்போல் வேண்டும் பொருள்களையெல்லாம் அழைப்பித்தருளி அங்கே பாங்காக தளிகை பண்ணி *நாறுநறும் பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு (நாச் திரு. 9 6) என்கிறபடியே அமுது செய்தருளப்பண்ணி, அத்தைக்கண்டருளினதற்குக் கைக்கூலியாக *பின்னுமாளுஞ்செய்வன். *உன்பொன்னடி வாழ்க (பெரியா திரு. 5-3-3) என்று மங்களாசாஸநம் பண்ணியருளி பரமஸ்வாமியின் திருமுகமண்டலத்தை ஸேவித்து *நங்கள்குன்றம் கைவிடான் (திருவாய் 10-8-4) என்று ஆழ்வாரருளிச்செய்த பொய்யில்பாடலை அந்வர்த்தனீத்தமர்க்கியருளவேணுமென்று ப்ரார்த்தித்தருளி;

## ஜீயர் மீண்டும் கோயிலுக்கெழுந்தருளியது

அங்கு நின்றும் புறப்பட்டு மாலிருஞ்சோலைமணாளனூர் பள்ளிகொள்ளுமிடமான திருவரங்கன் திருப்பதியைக் குறித்து எழுந்தருளி *கொடியணிநெடுமதிள் கோபுரம் குறுகினர் (திருவாய் 10-9-8)என்னும்படிகிட்டியவாறே அங்குண்டானவர்களெல்லாம் எதிர்கொண்டு வந்து திருவடிகளிலே ஸேவித்து

**வகுளதரஸவித்ரீம் யாதியஸ்மிந் தரித்ரீம் மதுமதநநிவாஸோ**
**ரங்கமாஸீதஸாரம் |**
**புநரபிஸமௌம்ருத்தம் பூயஸா ஸம்ப்ரவிஷ்டே வரவரமுநிவர்யோ**
**மாநுஷ:ஸ்யாத்கிமேஷ ||**

எந்த மணவாளமாமுனிகள் மகிழ்மாலைமார்பரான நம்மாழ்வாருடைய பிறப்பிடமான திருநகரியை அடைந்திருந்தபோது மதுமதநனை பெருமாளுக்கு வாஸஸ்தானமான திருவரங்கமானது பொலிவற்றதாய்ப் போயிற்றே அவர் அங்கு மீண்டும் எழுந்தருளினவளவில் அந்த ஸ்ரீரங்கம் மிகவும் நன்றாக பொலிவுற்றது; இந்த மணவாளமாமுனிகள் மனிதராக எண்ணத்தக்கவராவாரோ?] என்றநுஸந்தித்து ப்ரீதராய் ப்ரதிபத்திபண்ண, அவர்களையும் க்ருபை பண்ணியருளி அவர்களுடனேகூட ப்ரதமம் எம்பெருமானாரைத் திருவடிதொழுது அவர் புருஷகாரமாக ஸ்ரீரங்கநாச்சியாரையும் பெரிய பெருமாளையும் திருவடிதொழுது அவர்கள் ப்ரஸாத விசேஷங்களையும் பெற்று மடமேயெழுந்தருளி

''ரங்கேதாம்நி ஸுகாஸீநம்'' என்கிறபடியே திருமலையாழ்வாரிலே இனிதாக வீற்றிருந்து வ்யாக்யாநித்து அகிலரையும் ஆநந்திப்பித்துக்கொண்டு வாழ்ந்தருளாநிற்க, முதலிகளும் அவ்விருப்புக்கு

**ஜயதுயரஸோதுங்கம்ரங்கம் ஜகத்த்ரயமங்களம்**
**ஜயதுஸுசிரம் தஸ்மிந்பூமா ரமாமணிபூஷணம்**
**வரதகுருணாஸார்த்தம் தஸ்மை ஶுபாந்யபிவர்த்தயந்**
**வரவரமுநி:ஶ்ரீமாந்ராமாநுஜோ ஜயதுக்ஷிதௌ ॥**

[பெருமையினால் உயர்ந்து மூவுலகுக்கும் மங்களாவஹமான திருவரங்கமானது பெருமையுற்று விளங்கவேணும்; அத் திருப்பதியிலே பெரிய பிராட்டியாரையும் ஸ்ரீகௌஸ்துபத்தையும் திவ்யாபரணமாகவுடையனான எம்பெருமான் பல்லாண்டாக விளங்கவேணும்; அவ்வெம்பெருமானின் பொருட்டு வரதகுருவான அண்ணனுடன் மங்களங்களை மேலும் மேலும் உண்டாக்குபவரான ராமாநுஜாபராவதாரரான மணவாளமாமுனிகள் இப்புவியில் விளங்கவேணும்] என்று மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு வாழ்ந்தருளுகிற காலத்திலே

### அழகர் கோவிலுக்கு நிர்வாஹகராக ஒரு ஜீயரை அனுப்பியது

இவர் அழகருக்குப் பண்ணிய மங்களாசாஸனம் பலித்து அழகர் மீண்டும் தம்கோயிலிலே குடிபுகுந்தருளி ஜீயருக்குத்தம் திருமுகமெழுதி, ''நாம் உம்முடைய நினைவின்படியே வந்து *நங்கள் குன்றங்கைக்கொண்டு குடிபுகுந்தோம்; நம் வீட்டில் கார்யமாராய்ந்து நன்றாக நடத்தியருளும்படி ஒருவரை வரவிட வேணும்'' என்று வரக்காட்டியருள, ஜீயரும் போர உகந்தருளி எதிராஜ ஜீயர் என்னும் திருநாமமுடையராய் மஹாவிரக்தராய் மங்களாசாஸன பரராயிருக்குமவரை அழகர் ஸ்ரீகார்யார்த்தமாக அனுப்பியருள, அவரும் அங்கேசென்று அழகரை ஸேவித்து ஆசார்யப்ரீத்யர்த்தமாக அனைத்தழகும் கண்டருளப்பண்ணினாரிறே.

### முதலிகளைக் கொண்டு திவ்யதேசகைங்கர்யங்கள் செய்வித்தல்

அநந்தரம், ஜீயரையாச்ரயித்த மஹாபலிவாணநாதரும் திருமாலை தந்தான் தோழப்பரை (திருமலைதோழப்பரை) முன்னிட்டுக் கொண்டு மாலிருஞ்சோலை மாலுக்கு ஸர்வவித கைங்கர்யங்களும் செய்துபோந்தார். இவர்களாலே அழகா கைங்கர்யம் ஸம்ருத்த

மாயிற்று. இப்படி கோயில் திருமலை முதலான திருப்பதிகளின் கைங்கர்யமெல்லாம் குறைவறக் கொண்டருளுகையாலே மிகவு முகப்புடனே எழுந்தருளிருக்கும் காலத்திலே துளவருடைய வம்சத்திலே பிறந்து தேசாந்தரத்திலே திரிந்துபோருவாரொரு பிள்ளை திருவடிகளிலே வந்து ஆச்ரயிக்க, அவனை விசேஷித்து க்ருபை பண்ணியருளி, ''ஸ்ரீராமானுஜதாஸர்'' என்று தாஸ்ய நாமம் ப்ரஸாதித்து அவனைக் கொண்டு அநேகந்திருப்பதிகளில் கைங்கர்யமெல்லாங் கொண்டருளப்பண்ணும்படிக்கு விசேஷாபி மானஞ் செய்தருள, அவ்விசேஷகடாக்ஷமடியாக பெருமாள் கோயில் தொடக்கமான திருப்பதிகளில் அவரைக்கொண்டு கைங் கர்யங்களெல்லாம் கொண்டருளப் பெற்றது. அநந்தரம் ஜீயரும்

**திவ்யோத்ஸவப்ரஸங்கேஷு தேவதேவமதந்த்ரித: |**
**ஆராதாநஸ்ஸமாஸீதந்நத்ராக்ஷீத் ரங்கபூஷணம் ||**

[விசேஷமான உத்ஸவகாலங்களில் சோர்வில்லாமல் ஸர்வேச் வரனை ஸ்ரீரங்கநாதனை அனுக்கராய் ஸேவித்து மங்களாசாஸனம் பண்ணினார்] என்கிறபடியே திவ்யோத்ஸவங்களிலும் நம்பெரு மாளை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு *செந்நெலரிசி பருப்புச் செய்தவக்காரம் நறு நெய் பாலால் என்று சொல்லப் படுகிற அக்காரவடிசில் தொடக்கமான அனேகவகைத் தளிகை களும் அமுதுசெய்தருளப்பண்ணிப்போருகிறதுக்குமேலே *ஒன்றும் தேவும் சிறப்பும், *கண்ணிநுண்சிறுத்தாம்புச் சிறப்பும், நூற்றந் தாதிச் சிறப்புப், ட்ரதிஸம்வத்ஸரம் பெருமாளும் நாச்சியாரும் உகந்து அமுதுசெய்தருளும்படி நன்றாக நடத்திக்கொண்டு ஆழ்வார்களின் அருளிச்செயல்களை வ்யாக்யானங்களுடன் அநு தினம் அநுஸந்தித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கும் நாளிலே A

---

A. ''திவ்யோத்ஸவங்களிலும் நம்பெருமாளை மங்களா சாஸனம் பண்ணிக்கொண்டு' என்பதையடுத்து தெலுங்குப் பதிப் பில் அதிக பாடம்;-

1. **கஸ்தூரி ஹிமகர்ப்பூர ஸ்ரக் தாம்பூலாநுலேபநை: |**
**திவ்யைரப்யபஜத் போஜ்யை: ரங்கநாதஞ் திநே திநே ||**

என்கிறபடியே ப்ரதிதினமும் பாங்காக கிஞ்சித்கார பூர்வகமாக கைங்கர்யங்களையும் நடத்திக்கொண்டு, மார்கழி மாஸத்திலுமப் படியே

2. **காலேகோதண்டமார்த்தாண்டே காங்க்ஷந்கே வாருணோதயம் |**
**ந்யஷேவதவிரோஷேண ரோஷிணம் ரோஷசாயிநம் ||**

## பெரியாழ்வார் திருமொழிக்கு வ்யாக்யானம் அருளிச்செய்தல்

பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வ்யாக்யானம் காணாமையாலே அதற்கு வ்யாக்யானம் செய்தருளத் திருவுள்ளமாய் (திருப்பாணாழ்வார்தாதர் நாயனாருக்கு)

**செந்தமிழிலாழ்வார்கள் செய்தவருளிச் செயலை**
**சிந்தை செயல் தன்னுடனே செப்பலுமாம்-அந்தோ**
**திருப்பாணாழ்வார்தாதர் நாயனார் சேர**
**விருப்பாராகில் நமக்கீடாவர் யார்**

(தெலுங்குப்பதிப்பில் 2ம் அடி 'சிந்தையினால் தேறலுமாம் வாய்கொண்டு செப்பலுமாம்'' என்று.) என்று திருமுகம் போக விட்டருள, அவரும் திருநகரியிலே தடதிருநந்தவனத்திலிருக்கிறவர் அந்த ஸ்ரீஸூக்தியைக் கண்டு உகந்து சிரஸாவஹித்து, திருநந்த

---

**மங்களாநிப்ரயுஞ்ஜாநோ மாதவம் ப்ரத்யபோதயத் |**
**ஸம்யகேநம் ஸமப்யர்ச்ய ஸர்வதாநுகுணை: க்ரமை: ||**
**ஸ்வஸ்வகாலோசிதைர்திவ்யை: ஸ்வாங்கல்போபலம்பிதை: |**
**அபோஜ்யதயம் போஜ்யை ஶாகமூலபலாதிபி: ||**
**ஸூபாபூப க்ருதக்ஷீர சர்க்கரா ஸஹிதம் ஹவி: |**

[1. அநுதினமும் ஸ்ரீரங்கநாதனை கஸ்தூரி, பச்சைகற்பூரம்,பூமாலை, அடைக்காயமுது, பரிமளத்ரவ்யங்கள் இவற்றால் உபசரித்தாராதித்தார். 2 தநுர்மாதத்தில் அருணோதயத்திற்கு முன்னே அரவணைமேல் பள்ளியானை எம்பெருமானை விசேஷமாக பூஜித்தார். மங்களமான பாசுரங்களை அநுஸந்தித்து திருமகள் மணாளனை திருப்பள்ளியுணர்த்தினார். எல்லாப்படியாலும் சாஸ்த்ர முறையான திருவாராதனக்ரமங்களால் எம்பெருமானை நன்றாக ஆராதித்து, பின்னர் மணவாள மாமுனிகள் தமது நியமனப்படி வரவழைக்கப்பட்ட தத்தத்காலோசிதங்களாய், உயர்ந்தவையான காய், கிழங்கு, பழம், முதலான இனிய பதார்த்தங்களுடன் வடை, பருப்பு, நெய், பால் சர்க்கரை இவைகளுடன் கூட ப்ரஸாதத்தை அமுது செய்தருளப் பண்ணினார் ]

வனத்தினின்றும் அப்போதே புறப்பட்டுஅதிசீக்ரமாகவெழுந்தருளி வந்து ஸேவித்து நிற்க, அவருடைய அத்வச்ரமத்தையும் ஸ்வவிஶ்லேஷத்தாலுண்டான பெருவிடாயையும் தத்விக்ரஹத்திலேகண்டு "மிகவுமிளைத்தீரே" என்று குசலப்ரஶ்நம் பண்ணிக் குளிரகடாக்ஷித்தருளி, பிற்றைநாள் அவரையுங்கூட்டிக்கொண்டு திருமொழி நாலுபத்தளவாக நன்றாக வ்யாக்யாநஞ் செய்தருளி மற்றை நாற்பது பாட்டுக்களுக்கு சேஷித்திருந்த பூர்வர்கள் வ்யாக்யானத்தை அழைப்பித்து அத்தோடு சேர்ப்பதாக வைத்திருக்க,

### கந்தாடை நாயன் ஜீயரருளிய வ்யாக்யானத்தை ஸேவித்தது

அப்போது அதிபாலராயிருக்கிற கந்தாடை நாயன் அங்கே எழுந்தருளி ஜீயருடைய ஸ்ரீஸூக்திகளையும் அபயப்ரதராஜஸூரி ஸ்ரீஸூக்திகளையும் ஆலேகித்து அவற்றில் அபயப்ரதராஜஸூரி திவ்யஸூக்தியைக் கீழே ஒரு பீடத்திலிட்டு வைத்து அபிராமவரயோகி திவ்யஸூக்தியை ஆதரேண ஆலோகியாநிற்கிறவர் "இந்த நாற்பது பாட்டுக்கும் சேஷிடாதே முற்றப்போகாதொழிவதே!' என்ன; இத்தை மணவாளமாமுனிகள கேட்டருளி, "அதிபால்யத்திலே இவருக்கு இத்தனை ஞானபூர்த்தியுண்டாவதே!" என்று உகந்து, நாயனைக் "கருணை பொங்கிய கண்ணிணைகளாலே கடாக்ஷித்து அழைத்தருளி "ஒன்றைப் பொகட்டு ஒன்றை ஆதரிப்பானென்; இங்ஙனமிருப்பதொன்றுண்டோ?" என்று கேட்டருள, நாயனும், "மாம்பொழிற்றளிர்கோதிய மடக்குயில் வாயதுதுவர்ப்பெய்த தீம்பலங்கனித்தேனதுநிகர்" என்று சொல்லுகிறபடியே அஸாரத்தைவிட்டு ஸாரத்தைப்பற்றுகையன்றோ ஸாரஜ்ஞக்ருத்யம்; ஆகையாலே அதிலுமிது மஹாரஸவாக்ய ஜாலவத்தாயிருக்கிறதென்று ஆதரித்தது என்ன, ஜீயரும் அது கேட்டானந்தித்து இவரும் ஒரு அவதாரவிசேஷமென்று ஆலிங்கித்துக்கொண்டருளினார். *இவள் வாயனகள் திருந்தவே என்கிறபடியே A நாலூர் பிள்ளையிட்டருளின வ்யாக்யானங்களெல்லாவற்றிலும் அதிசயித்திறே இவருடைய ஸூக்தி வைபவமிருப்பது. இப்படிப் பெரியாழ்வார் திருமொழிக்கு ஸாவஜநஹ்ருதய மாம்படி வ்யாக்யானஞ்செயதருளி, திருப்பாணாழ்வார்தாதர்நாயனார்க்கு பிள்ளைலோகாசாரியர் திருக்கை ஸ்பர்சமுடையராய் "ஸ்ரீரங்கராஜ: பதிம்ம ஸஹாய:' என்கிறபடியே தமக்குத்துணையாய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீரங்கராஜரையும் திருவாராதனமாக ப்ரஸாதித்து விடை கொடுத்தருளினார்.

A, திருவாய்மொழிப்பிள்ளை இட்டருளிய என்று தெலுங்குப் பதிப்பு.

யதீந்த்ரப்ரவணப்ரபாவம—27

## ஜீயர் ஆசார்யஹ்ருதயத்திற்கு வ்யாக்யானமருளியது

அநந்தரம் ஆசார்யஹ்ருதயத்திற்கு வ்யாக்யாநஞ் செய்தருளத் திருவுள்ளமாய்த் திருமேனியில் தௌர்ப்பல்யத்தையும் பாராமல் திருவணையிலே சாய்ந்தருளினபடியே திருக்கழுத்து நோவத்திரு வெழுத்துச்சாத்தியருளும்படியைக் கந்தாடையண்ணன் கண்டு "தேவரீர் இப்படி எதுக்காக ப்ரயாஸப்படுவது?" என்ன, ஜீயரும் "உம்முடைய புத்ரபௌத்ராதிகளுக்காகப் படுகிறேன்" என்றரு ளிச் செய்து வ்யாக்யானத்தையருளிச் செய்து தலைக்கட்டினர்.

## எட்டூர் சிங்கராசாரியர் ஜீயரை ஆச்ரயித்தல்-அஷ்டகோத்ரநிபந்தனை

அக்காலத்தில் பெரியதிருமலை நம்பி திருவம்சஸ்தரான எட்டூர் சிங்கராசாரியர் ஜீயருடைய அப்ரதிமப்ரபாவத்தைக்கேட்டு *பெருமையும் நாணும் தவிர்ந்து ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களை முன்னிட்டு அநந்யசரணராய் ஜீயர் திருவடிகளை ஆச்ரயிக்க, அவரை க்ருபை செய்தருளி, தன்மூலமாக வந்த த்ரவியத்தை ஆழ்வார் திருக்கோபுர கைங்கர்யத்துக்கு திருநகரிக்குப் போக விட்டருளினர். அக்கைங்கர்யம் சிறிது குறையாக விருக்க பின்பு ஜீயர் நாயனர் அக்குறையைத் தீர்த்தருளி சிகரபர்யந்தமாக நிறைவேற்றியருளினர்.A பின்பு போளிப்பாக்கம் நாயனரை அழைப்பித்தருளி அவர் முகமாக ஸப்தகோத்ர நிபந்தனை செய் தருளி அதில் இந்த எட்டூர் சிங்கராசாரியரையுங்கூட்டிக்கொண்டு அஷ்டகோத்ரஸங்க்யையாயிரும் என்று நியமித்தருளினர்,

இப்படிவாசாமகோசரமான வைபவத்தையுடைய ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயித்து B

**ஜகத்ரக்ஷாபரோSநந்தோ ஜநிஷ்யத்யபரோமுநி: |**
**ததாச்ரயாஸ்ஸதாசாராஸ் ஸாத்விகாஸ்தத்வதர்சிந: ||**

[ஜகத்ரக்ஷணத்தில் ஊன்றியுள்ள திருவநந்தாழ்வான் வேறு முனிவராக-மணவாளமாமுனியாக-அவதரிக்கப்போகிறார். அவரை ஆச்ரயிப்போர் நல்ல ஆசாரசீலர்களாகவும், ஸாத்விகர்களாகவும்

---

A இந்த விஷயம் தெலுக்குப்பதிப்பிலில்லை. B. இந்தச் ச்லோகம் தெலுங்குப் பதிப்பில் இங்கு அதிக பாடம்- இந்த ச்லோகம் துன்னுபுகழ்க்கந்தாடைத் தோழப்பருக்கு ஸ்லப்நத்தில் கச்சிப் பேரருளாளன் அருளியதாக இந்த நூலின் தொடக்கத்தில் வந்துள்ளது காண்க.

தத்வார்த்தங்களை உணர்ந்தவர்களாகவும் ஆவார்கள் என்கிற படியே ஸத்வோத்தராய் ஸதாசாரநிரதராய் தத்வதர்சிகளாய் அதிகதபரமார்த்தராய் அநவரதம் ஜீயரை ஸேவித்துக் கொண்டிருக்கும் முதலிகள்;

## அஷ்டதிக்கஜங்கள்

பாரருமங்கை திருவேங்கடமுனி பட்டர்பிரான்
ஆராமம் சூழ்கோயில் கந்தாடையண்ணன் எறும்பியப்பா
ஏராருமப்பிள்ளை அப்பிள்ளார் வாதிபயங்கரரென்
பேரார்ந்த திக்கயஞ்சூழ் வரயோகியைச் சிந்தியுமே

என்று சொல்லப்பட்ட வானமாமலை ஜீயர், திருவேங்கடஜீயர் பட்டர்பிரான் ஜீயர், கந்தாடையண்ணன், எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளார், ப்ரதிவாதிபயங்கரமண்ணா என்கிற அஷ்டதிக்கஜங்களுக்கும், திருப்பாணாழ்வார் தாஸர், ஏட்டூர் சிங்கராசாரியர், வரந்தரும்பெருமாள் பிள்ளை, மேனாட்டுத் தோழப்பர், அழகியமணவாளப்பெருமாள் நாயனார், ஜீயர் நாயனார், அண்ணராய சக்ரவர்த்திகள் தொடக்கமானாரும் "ஜகத்ரக்ஷாபரோऽநந்தோ...தத்வதர்ஶிந:" என்கிறபடியே இவர்களெல்லாரும் ஸத்வோத்தரராய் ஸதாசாரநிரதராய் தத்வதர்சிகளாய் ஜகதுஜ்ஜீவனைகபரராய் இருப்பார்கள்.

## முதலிகளுக்கு வகுத்த கைங்கர்யங்கள்

இப்படிப்பட்ட திக்கஜங்களாலும் மற்றுமுள்ள முதலிகளாலும் ஸேவ்யமாநராயிருக்கிற ஜீயர் திருவடிகளிலே நித்ய கைங்கர்யம் செய்யும் முதலிகளாரென்னில்: 1. வானமாமலை ஜீயர் பால்யாத்ப்ரப்ருதிஸந்நிக்தராய் ஆஶ்ரயித்தவன்று தொடங்கி பிரியாதாட் செய்திருப்பர். 2. கந்தாடை அண்ணன் "ராமாநுஜமுநீந்த்ரஸ்ய ஶ்ரீமாந்தாஶரதிர்யதா" என்று உடையவருக்கு முதலியாண்டானைப்போலே அத்யந்தம் ப்ரீதி விஷயபூதராய் பாதுகாஸ்தாநீயரா ருப்பர் 3. எறும்பியப்பா வடுகநம்பியைப் போலே *தேவுமற்றறியாதே ஜீயருக்கு அத்யந்தமபிமதராயிருப்பர். 4 ப்ரதிவாதிபயங்கரமண்ணா உடையவர் திருவடிகளுக்குக் கூரத்தாழ்வான் போலே ப்ரதிபக்ஷநிரஸந பூர்வகமாக ஶ்ரீபாஷ்யத்திற்கு உசாத்துணையாயிருப்பர். 5. ஸேனை முதலியாரண்ணன், சடகோபதாஸர், அப்பிள்ளை, திருப்பாணாழ்வார் தாஸர் இவர்கள் திருவாய்மொழி முதலான அருளிச்செயல்களுக்கு

உசாத்துணையாயிருப்பர்கள்; விசேஷித்து அப்பிள்ளை ஜீயர் நிய மனத்தினாலே ஐந்து திருவந்தாதிகளுக்கும் உரையருளிச் செய்து யதிராஜவிம்சதிக்கும் வ்யாக்யானம் செய்தருளினார். 6. அப்பிள் ளார் மடத்தில் ஸர்வபரங்களையும் பரித்துக்கொண்டு தளிகைக்குப் பாங்காக அமுதுபடி, பருப்பமுது, கறியமுது, பாலமுது, நெய் யமுது,தயிரமுது தொடக்கமானவை நடத்திக்கொண்டு போருவர். 7. பட்டர்பிரான் ஜீயர் எம்பாரைப்போலே ஸ்ரீபாதச்சா யாபந்நராய் பிரியில் தரியாமையை முன்னிட்டு அடிமை செய்து தத்தேகநிஷ்டராய் ஸர்வவித கைங்கர்யங்களிலும் அந்வயித்துத் திருவடிகளையல்லது ஒரு தெய்வமறியாதிருப்பர். 8. ஜீயர் நாயனார் இளவரசராய் எல்லார்க்கும் உத்தேச்யராய் திருக்குருகைப்பிரான் பிள்ளானைப்போலே அத்யாதரணீயராயிருப்பர்

இப்படி இவர்களாலே ஸேவ்யமானராயிருக்கிற வரவரமுநி வர்யரான A பெரிய ஜீயர், ஜகத்திலுண்டான சேதனரெல்லா ரையும் அர்த்தபஞ்சக நிஷ்டராயும் அந்திமோபாய நிஷ்டராயும் உஜ்ஜீவிக்கும்படிக்குத்திருத்தி வாழ்வித்தருளி நாயனாருக்குத் திரு வாய்மொழி ஈடும் ஸ்ரீபாஷ்யமும் விசதமாகப்ரஸாதிக்கும்படி அண்ணனையும் அண்ணனவயும் நியமித்தருளி க்ருதார்த்தராய்,

**தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்**
**திருவரங்கந்திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்**
**மன்னியசீர்மாறனகலை யுணவாகப்பெற்றோம்**
**மதுரகவிசொற்படியே நிலையாகப் பெற்றோம்**
**முன்னவராநங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்**
**முழுதுநமக்கிவை பொழுதுபோக்காகப் பெற்றோம்**
**பின்னையொன்றுதனில்நெஞ்சம் போராமற்பெற்றோம்**
**பிறர்மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே**

என்று இப்படி ஸ்வநிஷ்டாவிசேஷத்தை மதித்துக்கொண்டு அகாரணக்ருபாபரிதஸ்வவிஷேகடாக்ஷபாதேந புளி முதலான வ்ருக்ஷாதிகளையும் உஜ்ஜீவிப்பித்துக் கொண்டெழுந்தருளியிருந் தார். "யக்யம் ஸ்ப்ருஶதி பாணிப்யாம்" என்கிற ச்லோகார்த்தம் இவ்விடத்திலே அந்வர்த்தஸித்தமாய் பலித்தபடிகண்டபின்பு மநுஷ்யரான ஜ்ஞாநிகளுக்குஜ்ஜீவநம் இப்புநர் ந்யாயஸித்தமிறே

A. இங்கு தெலுங்குப்பதிப்பில் காணும் அதிகப்படி பங்க் திகள்:-"திருமகள் தன் கொழுநனிருக்கழல் சேர் மாறனடிபரவு மெதிராசர் செம்பொற்பாதமிரவுபகல் மறவாமலின்றருஞ்சியேத்து

மெழில் இருவாய்மொழிப் பிள்ளையிணைத்தான் பேணுமவரான மணவாளமாமுனிவனெந்தை மண்ணுலகிலவதரித்து வாழ்ந்தபின் முன்னறிவெனவுமறியாத மானிடவரெல்லாமுதிதான வர்த்த பஞ்சக நிட்டரானார் என்றும்,

இத்தம் ப்ருத்யாநர்த்திநஸ்தோஷயித்வா தேசேஸதஸ்மிந்
தர்ஸயந்வைபவம் ஸ்வம்
ப்ரத்யாவ்ருத்தஸ்த்வந்திமோபாயதத்வம் தத்ரத்யேஷு
ஸ்தாபயித்வா ஜநேஷு ॥

[இப்படி விஷயங்களையறிவேணுமென்று வந்த சிஷ்யர்களை மகிழ்வித்துக் கொண்டு அந்த திவ்ய தேசத்தில் தமது வைபவங்களை ப்ரகாசிப்பித்துக் கொண்டு அங்குள்ள வைஷ்ணவரிடையே அந்திமோபாய நிஷ்டையின் உண்மையை நிலைநிறுத்தித் திரும்பியெழுந்தருளினார்] என்று சொல்லுகிறபடியே-

B. இங்கு தெலுங்குப்பதிப்பில் அதிக பங்க்திகள்:

தத்பாதபத்ம ஸம்ஸ்பர்ஸபாவநம் ஸலிலம் ஜநா |
ஸ்வீகுர்வந்தஸ்ஸுகேநைவ ஸ்வரூபம் ப்ரதிபேதிரே ॥
ஆலோகைரநுகம்பாத்யைராலாபைரம்ருதச்யுதை: |
அங்வஹம் பாணிசாதன் யஸ்பர்ஸாங்யாலைஸ்சபாவநை: ॥
மந்த்ரரத்நப்ரதாநேந தத்தத்ப்ரதிபாதநாத் |
ஆத்மார்ப்பணேந கதிசிதஜ்ஞாதஜ்ஞாபநேந ச ॥
கேசித்க்ஷேமம்யயுஸ்தஸ்ய பாதபத்மஸ்ய ஸம்ஸ்ரயாத் |
அந்யே தத்ரூப நித்யாநாதந்யே தந்நாமகீர்த்தநாத் ॥
ஸ்ருத்வா தஸ்யகுணாந் திவ்யாந் ஸ்துத்வாதாநேவ கேசந |
நத்வாதாம் திஸமுத்திஸ்ய ஸ்ம்ருத்வா தத்வைபவம் பரே ॥
அபதிஸ்யகமப்யேநமந்யே ப்ரதித வைபவம் |
அந்யேதத் பருத்ய ப்ருத்யாநாமலோக ஸ்பர்ஸாநாதபி ॥
அந்யேதத்பாதலம் ஸ்பர்ஸ தந்யேஸம்பூயபூதலே |
அபவந் பூயஸா தஸ்ய முநே: பாத்ரம் க்ருபாத்ருஸாம் ॥
ஏவம் ஸர்வே முநீந்தரேண பஹவுஸ்ஸ்ரஸ்தபந்தநா: |

[அம்மணவாளமாமுனிவருடைய திருவடித்தாமரைகளின் ஸம்பந்தத்தினால் பரிசுத்தமான ஸ்ரீபாததீர்த்தத்தைப் பருகின அடியார்கள் எளிதில் தமது ஸ்வருபத்தை (சேஷத்வத்தை) உணர்ந்தனர். அவருடைய திவ்யகடாக்ஷத்தாலும் அம்ருதம்போல் பாயாநின்ற

க்ருபாதிசயத்தாலும், திருவடிகளின் ஸ்பர்சத்தாலும் அவற்றில் பரஸமர்ப்பணத்தினாலும், மந்த்ரத்நமான த்வயத்தை உபதேசமாகப் பெற்றும் அதன் பொருளை அருளிச் செய்யக் கேட்டும் சிலர் ஆத்மஸமர்ப்பணத்தினாலும் (ப்ரபத்தியாலும்), தமது அறியாமையை விண்ணப்பம் செய்வதாலும், (சிலர்) அம்மாமுனிவருடைய திருவடித்தாமரைகளில் ஆச்ரயிப்பதாலும், ஆத்மோஜ்ஜீவனத்தை (க்ஷேமத்தை) அடைந்தார்கள். சிலர் அம்மாமுனிவருடைய திருமேனியை எப்போதுமாக த்யாநவிஷயமாக்குதலாலும், அவர் திருநாமங்களைப் பாடுதலாலும்,சிலர் அவருடைய கல்யாண குணங்களைக்கேட்டு ! அவற்றைக்கொண்டு அவரைத் துதித்தும், அவர் எழுந்தருளியுள்ள திக்குநோக்கித் தண்டனிட்டும், அவருடைய பெருமைகளைச் சிந்தித்து மகிழ்ந்தும், இப்படிப்பட்ட வைபவமுடைய ஸ்வாமியை ஈடற்றவராக நிச்சயித்தும், சிலர் அவருடைய தாஸதாஸர்களின் கடாக்ஷத்தினாலும் ஸ்பர்சத்தினாலும், அவர்களின் பாதஸ்பர்சத்தினாலும் தன்யமான இப்பூவுலகில் (பாக்யசாலிகளாக) பிறந்து, அம்முனிவருடைய க்ருபா கடாக்ஷத்திற்கு மேலான பாத்ரபூதர்களாக ஆனார்கள். இப்படி யாவரும் முநீந்த்ரரான மணவாள மாமுனிகளருளாலே பந்தங்கள் நீங்கியவர்களாக ஆனார்கள்] என்கியபடியே தம்முடைய ஸ்ரீபாததீர்த்தஸ்வீகாராதிகள் தொடக்கமாக ஈக்ஷணத்யாந ஸம்ஸ்பர்சாபிமாநாதி விசேஷங்களாலே ஸமீபஸ்தரோடு தூரஸ்தரோடு பவிஷ்யோத்தரமுண்டாமவர்களோடு வாசியற ஸர்வரையும் ஸம்ஸாராதுத்தீர்ணராம்படி பண்ணி ஸம்ஸார பரமபதவிபாகமற பூதலமெங்கும் பொன்னுலகமாக்கி, இனி தேடித் திருத்தும்படியாக வொழிந்ததசையாய்

ஸர்வாவஸ்தா ஸத்ருசவிபவாசேஷக்ருத்த்வம் ரமயாபர்த்து;
த்யக்த்வா ததபி பரமம் தாமதத்ப்ரீதி ஹேதோ: |
மக்நாநக்ஞௌ வரவரமுநே மாத்ருசாநுக்கிரீஷந்
மர்த்யாவாஸே பவஸி பகவந் மங்களம் ரங்கதாம்ந: ||

[கல்யாண குணபூர்ணரான மணவாள மாமுனிவரே! ச்ரிய:பதியான எம்பெருமானுக்கு எல்லா நிலைகளிலும் தகுந்தபடி வைபவம் மிக்க குற்றேவல்களைத்தும் செய்துகொண்டுள்ள தேவரீர் அந்தப் பரமபதத்தையும் விட்டு அவ்வெம்பெருமானுடைய ப்ரீதியின் பொருட்டு ஸம்ஸாராக்நியில் அழுந்திக்கிடக்கிற அடியேன் போல்வாரை உத்தரிப்பிக்கத் திருவுள்ளமாய் இம்மாநிடவுலகில் திருவரங்கமான திருப்பதிக்கு அணிவிளக்காய் உள்ளீர்] என்கிற படியே தம்முடைய அவதாரகாரியம் தலைக்கட்டியருளி: [இதுவரை B அடிக்குறிப்பு]

திருவடிகளே ஶரணம், *இராமானுசாயநம : என்றது நடுவாக *இந்தவரங்கர் என்று தலைக்கட்டாக அருளிச்செய்ய, அதுவே ஆர்த்தி என்று அறுபது பாட்டாய் ஒரு ப்ரபந்தமாய்த் தலைக் கட்டிற்று. அந்த அபிநிவேசம் அவ்வளவிலே நில்லாதே பரவி

எம்பெருமானார் தம்பிரானென்னுமவரை
நம்பெருமாள் தாமுகந்து நாள்தோறும்—தம்பரமா
ஏறிட்டுக்கொண்டளிப்ப ரென்றுமவர் தம்மை
வேறிட்டுத் தாங்கைவிடார் என்று தேறுவதென்றும்,

பொல்லானிவனென்று போதிடென்று நங்குரவ
ரெல்லாருமென்னையிகழ்ந்தாரோ-நல்லார்கள்
வாழ்வான வைகுந்தவான் சபையில் வண்கூரத்
தாழ்வானிருந்திலனோ வங்கு? என்று கலங்குவது
மாய் அநுகம்பாஞ்சலியானவர்களை ஆராய்வதும்,

ஆரியர்காள்! ஆழ்வீர்காள்! அங்குள்ளமுக்தர்காள்!
சூரியர்காள்! தேவியர்காள்! சொல்லீரோ—நாரணற்கு
எங்களடியானிவனுமீடேறவேணுமென்
நுங்களடியரருமுள என்று கடகர்
பலரையும் பலகால் கால்கட்டி அர்த்திப்பதும்,

தென்னரங்கர் தேவியே! சீரங்கநாயகியே!
மன்னுயிர்கட்கெல்லாம் மாதாவே!—என்னையினி
இவ்வுலகந்தன்னிலிருந்து நலங்காமல்
அவ்வுலகில் வாங்கியருள் என்றும்

சீரங்கநாயகியே! தென்னரங்கன் தேவியே!
நாரங்கட்கெல்லாம் நற்றாயே! — மாருதிக்கு
வந்தவிடாய் தன்னையொரு வாசகத்தால் போக்கினநீ
எந்தனிடர் தீராததென்? என்றும் மறுக்க
வொண்ணாத மாத்ருத்வஸம்பந்தத்தைச் சொல்லி மடிபிடிப்பதும்

இந்தவுடம் போடினியிருக்கப் போகாதுன்.
செங்கமலத்தாள்தன்னைத் தந்தருள்நீ—அந்தோ
மையார்கருங்கண்ணி மணவாளா! தென்னரங்கா!
வையாமலிருப்பாயேயிங்கு
என்று ஆர்த்ரஹ்ருதயத்வவிஶிஷ்டராய்A அவர்முன்பே தம்முடைய ஆர்த்தியைச் சொல்லுவதும்,

---

A. ஆர்த்திஹரத்வ விசிஷ்டரான-என்று தெலுங்குப்பதிப்பு. இதுவே நல்ல பாடம்.

**சென்று திருமாலடியார் தெய்வக்குழாங்கூடு**
**மென்று மொரு நாளாமோ? ஆழ்வாரே!-துன்னுபுகழ்க்**
**கமலம்பாடினீரையோ அடியேனுமிக் A**
**கமலஞ்சேர்காயம் விட்டு**

என்று "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ? என்று அர்த்தித்த ஆழ்வாரிடத்தில் ஸ்வரூபாநுரூப மான ப்ராப்யத்தை அபேக்ஷிப்பதும்

**இந்தவுடம்போடிருவினையாலிவ்வளவும்**
**உந்தனடிசேரா துழன்றேனே—அந்தோ**
**அரங்கா! இரங்காயெதிராசர்க்காக**
**இரங்காய் பிரானே இனி**

என்றும் "திருவரங்கா! அருளாய் இனியுன் திருவருளாலன்றிக் காப்பரிதால்'' என்கிறபடியே மீளவும் மரங்களுமிரங்கும்படி அவர்க்கந்தரங்கரை முன்னிட்டுக்கொண்டு அவரிரக்கத்தையிரப்பது மாய், இப்படி ஒரு தேசவிஷேசத்திலே சென்றாலொழியதரியாத் தசையையடைந்து எழுந்தருளியிருக்க;

அந்த தசையிலே தேசாந்தரஸ்தரான மேல்நாட்டுத் தோழப் பரும் அவர் திருந்தமயனாரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் பெருமாளை ஸேவிப்பதாகக் கோயிலுக்கெழுந்தருள அவர்களைத் தென்மாடத்திருவீதியிலே பட்டர்பிரான் ஜீயர் கண்டருளி, "நீங்கள் எங்கு நின்றும் எழுந்தருளினீர்கள்? எங்கேறப் போகிறீர்கள்?'' என்று கேட்க, அவர்களும் ஸஸாத்வ ஸவிநயராய் ஸாஷ்டாங்கப்ரணமம்பண்ணி உகப்போடே யதா மநோரதம் வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய, 'இப்படி ஜ்ஞாநபக்த்யாதிகள் வடிவிலே தொடைகொள்ளலாம்படி அநு கூலராயிருக்கிற நீங்கள் யதிபுநரவதாரமான நம்முடைய பெரிய ஜீயரை ஸேவிக்கவேண்டாவோ?'' என்றருளிச்செய்ய,

---

A. கமலப்பாடி நிறையா அடியேனுமிக்—என்று தெலுங்குப் பதிப்பு. இரண்டு பாடங்களிலும் பொருள் தெளிவாகவில்லை. வேறுபாடம் கிடைக்கில் கண்டுகொள்வது.

அவர்களும் அதற்கிசைந்து மடமேற கூடவெழுந்தருள, ''மணவாளயோகி தஞ்சமாம் மலர்த்தாளிணைகாட்டி'' என்கிறபடியே ஜீயர் திருவடிகளை ஸேவிக்கப்பண்ண, அவ்வளவிலே நாயனாரும் ''புரைகொண்ட கோயில் மணவாளமாமுனிக்கண்ணனே'' என்றும்

**போதச் சிவந்து பரிமளம் விஞ்சும் புதுக்கணித்த**
**சீதக்கமலத்தை நீரேறவோட்டிச் சிறந்தடியேன்**
**ஏதத்தை மாற்றும் மணவாளயோகியினிமைதரும்**
**பாதக்கமலங்கள் கண்டேனெனக்குப் பயமில்லையே**

என்றும் வாசிககைங்கர்யமாக இந்தத் திருநாமத்தை விண்ணப்பஞ்செய்துகொண்டு திருவடிகளிலே ஸாஷ்டாங்கமாக தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, ஜீயரும் அவர் அபேக்ஷித்தபடியே அமலங்களாகக் கடாக்ஷித்தருளி அப்போது எம்பெருமானார் திறத்திற்சென்ற சிந்தையரானதாம் 'இவர்கள்' என்றவாறே எம்பெருமானாருடைய விசேஷாபிமானமுள்ள திருநாராயண புரத்தை நினைத்து, அவர் அந்திம தசையிலருளிச் செய்தருளின

**கச்சம்பதம்பர்முவாச வசாம்ஸி யாநி**
**ராமநுஜார்ய இஹதேஷு சதுர்த்தஸித்தாம் |**
**ஸ்ரீயாதவாத்ரிவஸதிம் ஸததம்பஜந்தஸ்**
**ஸந்தோ பவந்தி மமஸந்ததி மூலநாத: ॥**

[எமது குலகூடஸ்தரான எம்பெருமானார் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளுமளவில் அருளிச்செய்த (ஆறு) வார்த்தைகளில் நாலாவதான (வார்த்தைப்படி) திருநாராயணபுரத்தில் இடைவிடாமல் வாஸம் செய்பவர்கள் மஹான்களாவர்] என்கிறபடியே ''திருநாராயணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுவார் நம்முடைய முதலிகளிலே ஒருவருமில்லையோ?'' என்று ஜீயரருளிச் செய்ய, அப்போது தோழப்பர் திருப்பரியட்டத்தைத் தலையிலே முடிந்து கொண்டு ''இந்த கைங்கர்யம் அடியேனுக்காக வேணும்'' என்று ப்ரார்த்திக்க, ஜீயரும் மிகவுமுகந்தருளி, ''எம்பெருமானாருக்கும் நமக்கும் ப்ரியமாம்படி கிஞ்சித்காரபூர்வமாக எதிராஜகுமாரரை ஸேவித்து மங்களாசாஸநபரராய் நித்யவாஸம் பண்ணியிரும்'' என்று நியமித்தருளினார்.

### அண்ணராயரை பட்டர்பிரான் ஜீயர் திருவடிகளுக்காளாக்கினது

அந்தசமயத்திலே ராமாநுஜபரிக்ருஹீதராய் திருமலை நல்லான் திருவம்சஸ்தராய் .*இடங்கொள்சமயத்தையெல்லாம் எடுத்துக்

களைந்து ஸ்வமதஸ்தாபகராயிருக்கிற அண்ணராய சக்ரவர்த்திகள் ஸகுடும்பராக பெருமாளை ஸேவிக்க எழுந்தருளிக் கோயிலிலே பெருமாளை ஸேவித்துக் கொண்டெழுந்தருளியிருக்க, அப்போது ஜீயருடைய சரமதசையை தேசாந்தரஸ்த்தரோடும் தத்தேசிய ரோடும் வாசியற ஸர்வரும் குழாங்குழாமாகச் சென்று ஸேவித்து மீளுகிறபடியை அண்ணராய சக்ரவர்த்தி திருத்தாயார் ஆச்சி கண்டு, அவ்விசேஷங்கேட்டு, "அண்ணராயனே! நமக்கு ஜீயரை ஸேவிக்க வேண்டாவோ?" என்ன, சக்ரவர்த்தியும் இசைந்து எல்லாரையுங்கூட்டிக்கொண்டு ஜீயர் மடத்திலே சென்று பட்டர் பிரான் ஜீயர் புருஷகாரமாக வந்து ஸேவித்து திருவடிகளிலே வேரற்றமரம்போலே விழுந்துகிடக்க, ஜீயர் நெடுநாளாக அங்கீ கரிக்கைக்கு விஷயங்காணாமையாலே முடங்கிக்கிடந்த திருவடிகள் இப்போது இவரைக்கண்டு நிமிரப்பெற்றுA தந்திருவடித்தாமரை களை இவர் திருமுடியிலே வைத்தருள, இத்தைக்கண்டு முதலிக ளெல்லாரும் இவருடைய பேறிருந்தபடியென்! என்று உகந் தருளினார்கள். ஜீயரும் சக்ரவர்த்திகளைக்குறித்து "எம்பெருமானார் ஜீயரை திருவேங்கடத்ரோஹிகள் நலியாவண்ணம் காத்துரக்ஷித்து நம் தர்சந விஷயமாக அநேககார்யங்கள் பண்ணிப்போந்தவ ரன்றோ நீர்!" என்று மிசவுமுகந்தருளி, "உமக்குத்தகுதியான பேறில்லையே, சற்றுமுந்துறச்சேரப்பெற்றீரில்லையே" என்று அருளிச்செய்து, பட்டர்பிரான் ஜீயரைப்பார்த்து, வாரீர் கோவிந்தப்ப தாஸரே! என்றழைத்தருளி, "ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:" [ராமபிரானுக்கு வலதுகை லக்ஷ்மணன்] என்று நமக்கு தக்ஷிணபாஹுஸ்த்தாநீயரன்றோ நீர்? ஆகையாலே நாம் செய்கிற தாக நினைத்து நம் ஸம்பந்தத்தை அபேக்ஷித்திருக்கிற இவர்களுக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் செய்யுமென்று அண்ணராய சக்ரவர்த் திகளையும் தோழப்பரையும் நாயனாரையும் அவர் கையிலே காட்டிக் கொடுத்து 'தர்சநப்ரவர்த்தகராம்படி திருத்தும்" என்று நியமித்தருள, அவரும் அப்படியே அவர்களை விசேஷகடாக்ஷம் செய்தருளினார். பின்பு அப்பிள்ளானும் ஜீயர் நாயனாரும் ஜீயர் திருவடிகளிலே ஸேவித்து, "அடியோங்களுக்குத் தஞ்சமாக தேவரீ

---

A **தத:ஸ்திமிதமுத்க்ஷிப்ய சரணம் சக்ரலாஞ்சிதம் |**
**க்ருபயாமூர்த்நி விந்யஸ்ய ஸநிநாய தருச்ரமம் ||**

[பிறகு அம்மணவாளமாமுனிகள் சக்கர அடையாளம் பெற்ற நிச்சலமான தம் திருவடிகளை உயரவெடுத்து க்ருபையுடன் அவர் திருமுடியில் வைத்தருளி அவரது பெருவிடாயைப் போக்கினார்] என்கிறபடியே: இது தெலுங்குப்பதிப்பில் இங்கு அதிகபாடம்,

ருடைய அர்ச்சாரூபமான விக்ரஹம் வேணும்'' என்றபேக்ஷிக்க, அப்படியே அநுமதி பண்ணித் தம்முடைய திருக்கைச்செம்பை உபாதாநமாக்கியருள, அப்படியே அவர்களும் இரண்டு விக்ரஹம் ஏறியருளப்பண்ணிக்கொண்டு உகந்தருளினார்கள்.

## பெரிய ஜீயர் சரமதசையில் நாலாயிரமும் கேட்டருளியது

பின்பு தனித்தனியே முதலிகளெல்லாருக்கும் வேண்டிய ஹிதங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளி *மேலிலங்குவானை கலங்காப் பெருநகரில் சென்று இமையாதகண்ணினராய் வழுவிலாவடிமை செய்யப் புறப்பட்டெழுந்தருள நாலுநாளென்னவே, ''நாலாயிரமும் தொடங்கி நடத்துங்கோள்'' என்று நாயனார் தொடக்கமான முதலிகளுக்கு நியமித்தருள, அவர்களுமப்படியே தொடங்கி அநுஸந்திக்க, இவைகளையெல்லாம் திருச்செவிசாத்தியருளி ஜீயரும் உகப்புடனே *வளர்த்ததனால் பயன் பெற்றேன் என்றருளிச் செய்து, மஸ்தகாஞ்சலியாய் ததர்த்தாநுபவ பாரவஶ்யதத்தாலே நிமீலிதாக்ஷயுகளராயிருக்க, ''இப்போது திருவுள்ளத்திலோடுகிறதென்?'' என்று கந்தாடையண்ணன் கேட்டருள, ''ஈட்டில் அர்த்த ரஸம் தலைமண்டியிட்டுச் செல்கிறது'' என்று அருளிச்செய்து, அப்படியே நடக்கும்போது *மருளொழி நீ மடநெஞ்சே என்னும் தசையைப்ராப்தராய் இங்ஙன் ஏகாதசி சென்று மற்றைநாள் திருத்வாதசியிலே உத்தமநம்பி தொடக்கமான அனைத்துப்பரிகரத்தையும் அழைப்பித்து ''ஸர்வாபராதங்களையும் பொறுத்தருள வேணும்'' என்று க்ஷாமணம்பண்ணிக்கொள்ள, அவர்களும் ''தேவரீருக்குமோரபசாரமுண்டோ?'' என்று அருளிச்செய்ய, மீளவும் அவர்களைக் குறித்து ''பெரியபெருமாளுடைய ஸ்ரீகார்யத்தைக் குறைவற நடத்திக்கொண்டும், ஸ்ரீவைஷ்ணவர்களை வரவணைத்துக்கொண்டும் போருங்கோள்'' என்றருளிச்செய்துப் போகவிட்டு, திருவாராதநம் [திருவாராதந எம்பெருமான், ஆசாரியர் திருமேனிகள்], ஸ்ரீகோசங்கள், மற்றுமுண்டான உபகரணங்கள், மடம் முதலான எல்லாவற்றையும் ''யஸ்யைதே தஸ்யதத்தநம்'' என்னும்படி நம்பெருமாளுக்கு சேஷமாக்கி ஸமர்ப்பித்து, ஸ்ரீவைஷ்ணவர்களை அமுது செய்வித்து அவர்கள் தீர்த்தமும் ஸ்வீகரித்து அபராதக்ஷாமணம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்க, முதலிகளும் பலிதமான வ்ருக்ஷத்தை பக்ஷிஜாதங்கள் காத்துக் கொண்டிருக்குமாபோலே பரிந்து ஸேவித்துக்கொண்டு அஞ்ஜலிபத்மதங்களையுடையராய் அநுபவித்துக்கொண்டிருக்க, ஆதித்யாஸ்தமனமானவாறே தத்காலீந கர்மத்தையுஞ் செய்தருளி ''பிள்ளை திருவடிகளே சரணம்-வாழி உலகாசிரியன்'' என்றநு

ஸந்தித்துப் பிள்ளையை த்யாநித்துக் கொண்டு அவசராக அணையிலே சாய்ந்தருள, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் கைகூப்பிக் கொண்டு ப்ரஹ்மவல்லி ப்ருகுவல்லி, *சூழ்விசும்பணிமுகில், அர்ச்சிராதி, நூற்றந்தாதி இவைகளை அநுஸந்திப்பாராய் பெரிய ஆரவாரத்துடனே செல்லுகிறவளவிலே *அங்கயல்பாய்வயல்தென்னரங்கன் [இரா. நூற். 108] என்ற பாசுரத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திக்கக்கேட்டு தாமும் க்ருதாஞ்ஜலிபுடராய் "எம்பெருமானார் திருவடிகளே சரணம்" என்றநுஸந்தித்து தத்கதசித்தராய்த் திருக்கண்களைச் செம்பளித்துக் கொண்டிருக்க:

## ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளியது

*கநககிரிமேலே கரியமுகில்போல விநதை சிறுவன் மேற்கொண்டு என்றும், *எந்தை திருவரங்கரேரார் கருடன் மேல் வந்து முகங்காட்டி வழி நடத்த என்றும் இவர் அபேக்ஷித்தபடியே பெரிய பெருமாளும் *செழும்பறவை தானேறித்திரிவாராய்த் தம் தாளிணையை இவர் திருமுடிமேலே வைத்து *மஞ்சுயர் பொன்மலை மேலெழுந்தமாமுகில்போன்ற தன் வடிவை ஸாக்ஷாத்கரிப்பித்து அநுபவிப்பிக்க அநுபவித்து *உன்சரணந்தந்தென் சன்மங்களையாயே என்றும் "ஸ்நேஹேநமாம் ப்ரக்ருதிம் ஸ்தூலஸூக்ஷ்மரூபாம் விஸ்ருஜ்ய" என்றும், *நோய்களாலென்னை நலங்காமல் சதிராக உன் திருத்தாள் தா என்றும் நிரதிசயபோக்யமான திருமேனியை விடுவித்து அங்கீகரிக்கப்பெற்று, *மாதவன் தன் துணையா நடந்தான் என்றும் *அரங்கத்துறையுமின் துணைவனொடும் போய் என்றுஞ் சொல்லுகிறபடியே ச்ரிய:பதியான பெரிய பெருமாள் பெரியதிருவடி மேற்கொண்டு ஹார்த்தன் வழி நடத்த, ஸுஷும்நையாகிற வாசலிலே புறப்பட்டு சிர:கபாலத்தை பேதித்து ப்ரஹ்மரந்த்ரத்தாலே ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

அநந்தரம் பெரியபெருமாளும் "விஸ்ருஜ்ய லக்ஷ்மணம் ராமோ துக்கசோக ஸமந்வித :- [இளையபெருமாளைப் பிரிந்த ராமபிரான் சோகதுக்கங்களின் வசமானான்] என்கிறபடியே "ஸௌமித்ரிர்மே ஸகலு பகவாந் ஸௌம்ய ஜாமாத்ருயோகீ- [ஸௌம்ய ஜாமாத்ருயோகி-மணவாளமாமுனிகள் இளையபெருமாளே] என்கிற இளையபெருமாளவதாரமான ஜீயரையும் வழிவிட்டு வந்து, இளையபெருமாளைப் பிரிந்து *ஒரு பகலாயிரமூழியாய் அமுது செய்யாதே முசித்துக் கொண்டு பெருமாளிருந்தாப்போலே இவரும் அமுது செய்யாதே முசித்துமுடிக்கிடந்தார். ஸ்ரீபாதத்து முதலிகளெல்

வாரும் *ஐயோ கண்ணபிரான்! அறையோ! *முறையோ? அரவணைமேல் பள்ளிகொண்ட முகில் வண்ணனே! என்று பெரு மிடறு செய்து கையெடுத்துக் கூப்பிட்டுக்கொண்டு துடிக்க, அருகிலிருந்த முதலிகள் தேற்றத்தேறி நின்று இப்படியெழுந் தருளின அவருடைய அந்திமதசையை எல்லாருமறிந்து உஜ்ஜீவிக் கும்படி

**கும்பம்பாஸ்வதி யாதி தத்ஸுததிநே பக்ஷே வளக்ஷேதரே**
**த்வாதஸ்யாம் ஶ்ரவணர்க்ஷபாஜி ருதிரோத்கார்யாக்ய ஸம்வத்ஸரே |**
**தீபக்த்யாதிகுணார்ணவோ யதிவராதீநாகிலாத்மஸ்த்திதி:**
**ஸ்ரீவைகுண்டமகுண்ட வைபவமகாத் காந்தோபயந்தா முநி: ||**

[ஜ்ஞாந பக்தி வைராக்யம் முதலான குணங்களுக்கு மஹா ஸமுத்ரம் போன்றவரும், எம்பெருமானாருக்கு ஸ்வாதீநமான தமது ஸமஸ்தமான நிலைகளையுமுடையவருமான மணவாளமா முனிகள் ருதிரோத்காரி ஸம்வத்ஸரத்தில் சூரியன் கும்பராசியை யடைந்த அளவில் (மாசி மாதத்தில்) சனிக்கிழமையில் க்ருஷ்ண பக்ஷத்தில் திருவோண நக்ஷத்ரம் கூடிய த்வாதசிதினத்தன்று எல்லையற்ற பெருமையுள்ள ஸ்ரீவைகுண்டத்தை அடைந்தருளினார்] என்று அங்குத்தைக்கு அந்தரங்கர்கள் அருளிச்செய்தார்கள். அவ்வளவுமன்றிக்கே,

**ஆசிலாத மணவாளமாமுனியண்ணல் பூமியுறவுைப் பசியிற்றிருமூலம்**
**தேசகாளதுவந்தருள்செய்த நந்திருவாய்மொழிப்பிள்ளை தா**
**ளீசனுகி யெழுபத்து மூவாண் டெவ்வுயிர்களையுமுய்வித்து வாழ்ந்தனன்**
**மாசி மால் பக்கத்துவாதசி மாமணிமண்டபத்தெய்தினன் வாழியே**

என்று இப்படி அவர் தோன்றியது முதலாகத் தன்னுலகம் புக்கதீருகப் பேசித் தலைக்கட்டினார்களிறே

### ஜீயருக்கு சரம கைங்கர்யங்கள்

அநந்தரம் ஜீயருக்கு சரமகைங்கர்யங்களைச் செய்வதாக முதலி களெல்லாரையுங்கூட்டிக்கொண்டு ஜீயர் நாயனார் திருக்காவேரிக் கெழுந்தருளி நீராடி அலங்காரத்திருமஞ்சனங்கொண்டுவந்தருளி ஜீயரைத் திருமஞ்சநம் கொண்டருளப்பண்ணுவதாக ஒரு திருமஞ் சநவேதிகையிலே விமலசரம விக்ரஹத்தை யேறியருளப்பண்ணி புருஷஸூக்தாநுஸந்தத்தாலும் த்வயாநுஸந்தாநத்தாலும் மற்று

முண்டான அநுஸந்தத்தாலும் திருமஞ்சநங் கொண்டருளப் பண்ணி திருவொற்றுவாடை சாத்தி, திருப்பரியட்டஞ்சாத்தி அலங்கரித்து, ''விஸ்தீர்ணபாலதல விஸ்புரதூர்த்வபுண்ட்ரம்'' [விசாலமான திருநெற்றியில் மிகவிளங்கும் திருமண்காப்புடையவர்] என்கிறபடி. த்வாதசோர்ந்த்வபுண்ட்ரங்களையும் தரிப்பித்து தச்சேஷமான திருமண் ஸ்ரீசூர்ணங்களையெல்லாம் தங்களுக்கு ஆபத்தநமாகச் சேர்த்துவைத்துக் கொண்டு, ஜீயரை திவ்யஸிம்ஹாஸநத்திலே ஏறியருளப்பண்ணி அவர் திருவடிகளைக் கண்ணிலும் நெஞ்சிலும் ஒற்றிக்கொண்டு ஸ்வசிரோபூஷணமாக தரித்துக் கொண்டு, *அத்தன் மணவாளயோகி அடியிணையைச் சித்தப் பெருங்கோயில் கொண்டருளி என்று சுபாச்ரயமான திவ்யமங்கள விக்ரஹத்தைத்தம்தாம் திருவுள்ளங்களிலே தேக்கிக்கொண்டு வைத்தகண்வாங்காதே விமலசரமவிக்ரஹாநுபவம் பண்ணிக் கொண்டிருக்க :

அவ்வளவிலே *அரங்கத்தம்மானரைச்சிவந்தவாடையையும், *அவன்மார்வணிந்த வனமாலையையும் பொற்றட்டிலே வைத்துக் கொண்டு ஸகலவாத்யகோஷங்களுடனே உத்தமநம்பி சிரஸாவஹித்துக் கொண்டு அனைத்துக்கொடுத்துப் பரிகரத்துடனே மடத்து வாசலிலே செல்ல, முதலிகளும் அவற்றை எதிர்கொண்டு தண்டன் ஸமர்ப்பித்து அங்கீகரித்து, *உடுத்துக்களைந்த பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு தொடுத்ததுழாய்மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டரான ஜீயருக்கு அவற்றைச் சூட்டி அலங்கரித்து, கோயிலண்ணத்துப்பரிகரம், ஆசார்யபுருஷர்கள், ஜீயர்கள், ஏகாங்கிகள், ஸ்ரீவைஷ்ணவர்கள், சாத்தாத முதலிகள் மற்றுமுண்டானவர்களெல்லாருங்கூடி ஜீயரை ஸேவித்து, *செய்யதாமரைத்தாளிணை வாழியே என்று தொடங்கி அநுஸந்தித்து மங்களாசாஸநம் பண்ணி ''எம்பெருமானாரை ஸேவியாத இழவெல்லாம் தீர்ந்தோம் இவரை ஸேவித்து; இப்போது இவ்வவதாரமும் தீர்த்தம் ப்ரஸாதித்துப் போவதே! என்று மிகவும் துக்காபிதப்தராய் சோகித்து, பின்பு அங்கிருந்தமுதலிகள் தேற்றத்தேறிநின்று ஸந்நிதியில் முதலிகளெல்லாரையுங் கூட்டிக் கொண்டு யதாக்ரமத்திலே ஸ்ரீசூர்ணபரிபாலநத்தையும் நடத்தி தச்சேஷமான ஸ்ரீசூர்ணப்ரஸாதங்களைத் தாங்களும் தரித்துக் கொண்டு, பின்பு *எண்ணெய் சுண்ணங்கொண்டாடி திவ்யாலங்க்ருதமான புஷ்பகவிமாநத்திலே ஜீயரை ஏறியருளப்பண்ணி வைத்து எல்லோரும் ஸ்ரீபாதந்தாங்கிக் கொண்டு சத்ரசாமரதாலவ்ருந்தாதிகள் பணிமாற, மஹாஸம்ப்ரமத்துடனே மத்தளங்

கள் சங்ககாஹள பேரிகள் தொடக்கமான ஸகலவாத்யங்கள் கடல் போலே முழங்க,

பதாகாத்விஜிநீம்ரம்யாம் தூர்யோத்குஷ்ட நிநாதநீம் |
ஸிக்தராஜபதாம் ரம்யாம் க்ருத்ஸ்நம் ப்ரகீர்ண
குஸுமோத்கராம் ||

[நகரத்தையும் மார்க்கத்தையும் அலங்கரித்தக் க்ரமம்-அங்கங்கே நாட்டிய கொடிகளால் அழகியதாய், ஸகலவாத்ய கோஷங்களால் சப்தமயமனதாய், நீர்தெளித்து அலங்கரிக்கப்பட்டதாய், புஷ்பங் களை ராஜமார்க்கமெங்கும் தெளித்துவைத்ததாய் ஆக்கினூர்கள்] என்கிறபடியே காவொத்தகமுகு, பல, கதலிச்சோலைகளாய் அரங் கன் திருவீதியெட்டிலும் நாட்டி "மகரதோரணம் மேற்கொடி களாட" என்று சொல்லுகிறபடியே ஸர்வாலங்கார ஸம்ப்ருதை யான எட்டுத்திருவீதிகளிலும் கரும்பேந்தி நூற்றந்தாதி முதலாக அநுஸந்திக்க, திருநீர் பரிமாற பொரியும் புஷ்பமும் சிதற "தர் சநத்திலே மணவாளமாமுனிகள் திருநாட்டுக்கெழுந்தருளினூர்" என்று ஒற்றைத்திருச்சின்னம் பணிமாற ஸுமங்கலிகள் தீப மெடுக்க, திருவீதிகளிலே அங்குண்டானவர்களெல்லாம் ஸேவிக்க எழுந்தருளப் பண்ணுவைத்துக் கொண்டுபோய்;

## திருபள்ளிப்படுத்தல்

"மகிழாதிகேசவன் தன்னடிக்கீழாக" என்கிறபடியே ஆதி கேசவப்பெருமாள் திருவடிக்கிழாக அவர் திருவடி பிரியர்வண் ணம் தவராசன் படுகையிலே பெண்ணித்தென்பாலிலே A எழுந்த ருளப்பண்ண ஒருப்பட அவ்வளவிலே பூதேவியானவள் முன்பு ஜனகராஜன் திருமகளை மடியிலே வைத்து அணைத்துக்கொண்டு ஆதரித்தாற்போலே அந்தமண்மகளான பிராட்டியும் மணவாள மாமுனியான இவரையும் மடியிலே எழுந்தருளப்பண்ணி வைத் துக்கொண்டு மகிழ, ஆளவந்தார் எம்பெருமானுரைப்போலே யதிஸம்ஸ்காரவிதியடங்கச் செய்து களித்துவாழும்படி திருப்பள் ளிப்படுத்தினூர்கள்.

---

A. இங்கு சொல்லப்படும் ஆதிகேசவப்பெருமாள் ஸந்நிதியை யும் மணவாளமாமுனிகள் திருவரசையும் தென்திருக்காவேரிப் படுகையில் இன்றும் ஸேவிக்கலாம்; ஆனல் கவனிப்பாரற்ற நிலே யிலுள்ளது சோசநீயம்,

## முதலிகள் ஜீயர் பிரிவாற்றுமல் சோகித்தல்

அநந்தரம் ''கதிரவன்போய் குணபால்சேர்ந்த மகிமைபோல்'' என்கிறபடியே கீழ்திக்கில் ஒரு ஆதித்யன் அஸ்தமித்தாற்போல இருக்கையாய் தத்ப்ரபாவஜ்ஞரான ஜீயர்நாயனுர் கந்தாடையண்ணனுள்ளிட்ட முதலிகளெல்லாரும்

A சீயரெழுந்தருளிவிட்டார் செகமுழுதும்
போயிருள் மீளப்புகுந்ததே தீய
வினைநைய வெம்புலனு லீடழிந்து மாய்வோ
ரீனவார்க்குமேதோ வரண்?

என்று மிகவும் சிந்தாக்ராந்தராய் துக்கித்து பின்பு சிஷ்யர்களான தாங்கள் தங்களுடைய சேஷத்வாநுகுணமாக திருமுடி விளக்குவித்துக்கொண்டு பெருமாள் அவப்ருதம் கொண்டாடுமாபோலே அவப்ருதம் கொண்டாடி மீண்டும் மடத்திலே எழுந்தருளி வெறித்தானமடத்தைக்கண்டு *இல்லம் வெறியோடிற்றுலோ என்று ஆசார்யவிஸ்லேஷாஸஹிஷ்ணுக்களாய் மிகவும் க்லேசித்து தங்களிலே தேறிநின்று

B சீயர்திருத்தமபிரானுரே தென்னரங்க
மேய பெருமானே விண்ணப்பம்-காயவிலங்
கெந்நாள் விடுவீரெடுத்தபணியுமக்குப்
பன்னுளும் செய்யும்படி என்றும்

C சீயரபிமானமே தேர்ந்தருளித் தீவினையோம்
காய விலங்கைக்கழித்தருளீர்—தூயபுகழ்
நம்பெருமாளே! இமையோர் நாயகரே! நான்மறைதேர்
எம்பெருமாஞர் பெருமாளே!

D தாயகலக் கண்டு சிலுகிட்டடியேனை
மாயையிலே மூட்டி மருட்டாதே-சீயரே
காயவிலங்கைக்கடுகெனவே தீர்த்தருளீர்
தூய திருத்தாளே தொழ.

E எழும்பாவி யைம்புலன்கள் சொன்னவண்ணம் செய்து
தழும்பேறி வாழுந்தமியேன்-செழும்பொன்
மணவாளமாமுனியே மாசுடலைத்தீர்க்குமின
முணவாகவாழ்ந்திடுகையோர்

---

A, B, C, D, E, இந்த வெண்பாக்கள் தெலுங்குப் பதிப்பில் அதிகபாடம்.

A நானெனதென்னும் நரகத்திடையழுந்திப்
போனவிந்தக்காலமெல்லாம் போதாதோ?-கானமலர்
மாலையணிதிண்டோள் மணவாளமாமுனியே
சால நைந்தேனுன் பாதம் தா A

புண்ணாராக்கை தன்னுள் புக்குழலும் தீவினையேன்
தண்ணாருமென்கமலத்தாளிணைவ தென்றுகொலோ
பண்ணாரு நால்வேதம் பயின்றுய்யும் பண்டிதனே
மண்ணுளவந்த மணவாளமாமுனியே

என்று இத்யாதியான ஆர்த்தியை அவர்விஷயத்தில் விண்ணப்பஞ்செய்து திருமிடறு தழுதழுப்பத் திருமுத்துதிர்த்துத் தங்களிலேதேறி நின்று வித்த்யுக்தப்ரகாரேண செய்யவேண்டுங் க்ருத்யங்களையெல்லாஞ்செய்து ஜீயர் வைபவத்திற்கு அநுகுணமாகப் பெருக்கத்திருவத்யயநம நடத்தியருளி தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து, பின்பு தந்தாமுக்கு நியமித்தருளின கைங்கர்யங்களைச் செய்துகொண்டு போந்தார்கள்.

அநந்தரம் "இக்ஷ்வாகூணாம் குலதநம்" என்னும்படியான பெரிய பெருமாளும் ஜீயர் நாயனாருக்குக் குலதநமான ஸ்ரீரங்கராஜரையும் மடத்தையும் நோக்கிக்கொண்டுபோருமென்று திருவுள்ளமாய், தீர்த்தம், திருமாலை, திருப்பரியட்டம், ஸ்ரீசடகோபன் எல்லாம் ஸாதித்து வாழ்வித்தருளினார். இத்தைக்கண்டு ஜீயருடைய அபிமாநாந்தர்ப்பூதரெல்லாரும் ஹர்ஷப்ரகர்ஷயுக்தராய், ஜீயர் நாயனாரை பெரியஜீயரைக் கண்டாப் போலே கண்டு அநுவர்த்தித்து ஸேவித்துக் கொண்டிருந்தார்கள்.

## ஜீயர் நாயனார் ஸ்ரீபாஷ்யம், திருவாய்மொழி ஈடு பெறுதல்.

கந்தாடையண்ணனும் ஆசார்ய நியமனத்தின்படியே ஆசார்ய பௌத்ரரான ஜீயர் நாயனாருக்கு திருவாய்மொழியினீட்டை ப்ரஸாதித்தருளினார். அநந்தரம் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவும் ஸ்வாசார்ய நியமனத்தின்படியே தாயனாருக்கும் கந்தாடைநாயனுக்கும் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தருளி,

B ஸ்ரீமாந் ஸுந்தரஜாமாத்ருமுநி: பர்யாயபாஷ்யக்ருத் |
பாஷ்யம் வ்யாகுருதே தஸ்ய ஶ்ரோத்ருகோடௌ மமாந்வய: ||

---

A, B, இவை இரண்டும் தெலுங்குப் பதிப்பில் அதிகபாடம்

[பாஷ்யகாரருடைய புநவரவதாரமான, கைங்கர்யஸ்ரீமானான மணவாள மாமுனிகளே ஸ்ரீபாஷ்யத்தை விளக்கிக் கொண்டிருக்கிறார். அந்த ஸ்ரீபாஷ்யத்தை அதிகரிப்பாருடைய கோஷ்டியிலே அடியேனுக்கு ஸம்பந்தமுள்ளது] என்று அதில் தமக்குண்டான கர்த்ருத்வத்தையும் கழித்துக் கொண்டருளினார், பின்பு திருப்பதியேயிருப்பாக எழுந்தருளியிருந்த போளிப் பாக்கம் போரேற்று நாயனார் தொடக்கமானவர்களுக்கும் ஸ்ரீபாஷ்யத்தை ப்ரஸாதித்தருளியும், பட்டர்பிரான் முனிபாத சேகரராய் தத்வம்ஸ்யரான பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியருக்கும் அவருக்கு ஸப்ரஹ்மசாரிகளான பரவஸ்து அழகியமணவாள ஜீயருக்கும், திருவாய்மொழி நாயனார் என்று நிருபகமாம்படி திருவாய்மொழியினீட்டை ப்ரஸாதித்தருளியும், ப்ரதிவாதி பயங்கரரென்னும் ப்ரஸித்திதோற்ற ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தை ரக்ஷித்துப்போந்தார்.

### வானமாமலை ஜீயர் எழுந்தருளல்

அநந்தரம் அழகியவரதரான வானமாமலை ஜீயர் வடதேசத்தினின்றுமெழுந்தருளி ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளின வ்ருத்தாந்தத்தை பெரியதிருமலையருகே கேட்டு மிகவும் ப்ரலாபித்தருளி திருமலையேறவெழுந்தருளி அங்கே சிறிதுகாலம் பாடாற்றிக் கொண்டு எழுந்தருளியிருந்து கைங்கர்யார்த்தமாகக் கூட்டின த்ரவ்யங்களையெல்லாம் கொண்டு கோயிலேறவெழுந்தருளி மடத்திலே சென்று போரக்லேசித்து ஜீயர் நாயனாரையும் ஸேவித்து உடனே வானமாமலையேற வெழுந்தருளி, கைங்கர்யங்களையெல்லாம் தலைக்கட்டியருளி மீண்டு திருமலையேறவெழுந்தருளி நடுவே எறும்பியிலே சிலநாளெழுந்தருளியிருந்து சுத்தஸத்வ மண்ணனுக்கும் போளிப்பாக்கம் நாயனாருக்கும் திருவாய்மொழியின் ஈடு முதலாக பகவத்விஷயத்தை ப்ரஸாதித்தருளி மீண்டு வானமாமலையேற வெழுந்தருளி தெய்நாயகன் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தார்.

### பட்டர்பிரான் ஜீயர் அந்திமோபாய நிஷ்டை அருளியது

பட்டர்பிரான் ஜீயரும் 'வடமாமலைக்கதிபர் பட்டநாதமுனி' என்கிறபடியே திருமலையிலே எழுந்தருளியிருந்து அண்ணராய சக்ரவர்த்தி, நாயனார், தோழப்பர் தொடக்கமான அனேகாத்

மார்க்களைத் திருத்தி இந்தத்தரிசன ப்ரவர்த்கர்களாக்கியருளி பரவஸ்து அண்ணரையும, பரவஸ்து அழகியமணவாள ஜீயரையும் ஸத்புத்ர ஸச்சிஷ்யர்களாக அபிமானித்து ஸத்ஸம்ப்ரதாயப்ரவர்த்தகராம்படி திருத்தியருளி அகிலாத்மாக்களும் உஜ்ஜீவிக்கும்படி அந்திமோபாயநிஷ்டாக்ரேஸரர் என்னுமது தோற்ற 'அந்திமோபாய நிஷ்டை' என்கிற சரமரஹஸ்ய ப்ரபந்தத்தையருளிச் செய்து வாழ்வித்தருளியும்.

A அந்திமோபாயநிஷ்டாயா வக்தா ஸௌம்யவரோமுநி: ।
லேககஸ்யாந்வயோமேடத்ர லேகநீ தாளபத்ரவத் ॥

[அந்திமோபாய நிஷ்டா எனுமிந்தக்ரந்தத்தை அளிச் செய்தவர் மணவாளமாமுனிகள். ஓலைபோலவும் எழுத்தாணிபோலவும் பட்டோலையில் இதை எழுதுப் தொடர்பே அடியனுக்குள்ளது] என்றும்

எந்தை மணவாளயோகி யெனக்களித்த
அந்திமோபாய நிட்டையாமிதனைச்-சிந்தைசெய்திங்
கெல்லாரும் வாழவெழுதிவைத்தேனிப்புவியில்
நல்லறிவொன் றில்லாத நான்

என்று அதில் தமக்கு கர்த்ருத்வராஹித்யத்தையும் அருளிச்செய்து உபகரித்தருளினார்.

## திருநாராயணபுரத்தில் திருநந்தவன கைங்கர்யம்

ஆசார்யபரதந்த்ரரான பட்டர்பிரான் ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயித்த தோழப்பரும் அவர் திருத்தமையனாரான அழகிய மணவாளதாஸ நாயனாரும் ஜீயர்நியமனத்தின்படியே அரங்கத்துறைவரநுமதியுடனே திருநாராயணபுரத்திலெழுந்தருளி, எம்பெருமானாருக்கும் செல்வப்பிள்ளைக்கும் திருநாராயணப் பெருமாளுக்கும் திருநந்தவனம் தொடக்கமான எல்லாவடிமைகளும் செய்துகொண்டு அங்கே அனேகரையும் ஜீயரபிமானந்தர்பூதராம்படி திருத்தி ஸ்ரீசைலத்திற்கு மேற்கும் ஸ்ரீசைலேதயாபாத்ரரின் வைபவத்தை வர்த்திப்பித்துக் கொண்டு எதிராஜர் மடத்துக்குப் பின்னடியிலே வாழ்ந்து கொண்டிருந்தார். பின்பு அவர்கள் ஸந்தானபரம்பரையிலுண்டான ஐயன் முதலானரும் அந்தக்கைங்கர்யங்களை அவிச்சின்னமாக நடத்திக்கொண்டு போந்தார்களிறே.

---

A இந்த ச்லோகம் தெலுங்குப் பதிப்பில் அதிகபாடம்.

## எறும்பியப்பாவின் ஆர்த்தி

பின்பு அழகியமணவாளதாஸரான எறும்பியப்பாவும் ஜீயர் திருநாட்டுக்கெழுந்தருளின செய்தியைக்கேட்டு

**A வரவரமுநி பதிர்மே தத்பதயுகமேவ ஶரணமநுரூபம் |
தஸ்யைவ சரணயுகளே பரிசரணம் ப்ராப்யமிதி நநுப்ராப்தம் ||**

[மணவாளமாமுனிகளே அடியேனுக்கு ஸ்வாமி; அவருடைய திருவடித்தாமரைகளே பேற்றுக்கநுருபாமன உபாயம்; அவருடைய திருவடித்தாமரைகளில் கைங்கர்யமே மேலான உபேயம் என்றே அடியேனால் அடையப்பட்டது; இதுவே எனது அத்யவஸாயம்] என்கிற நிஷ்டை யுடையவராகையாலே ஆசார்ய விச்லேஷாஸஹிஷ்ணுவாய் அவர் விஷயத்திலே ஆர்த்தி மிகுந்து

**1. வபுரபி ஸபதிமதீயம் வரவரமுநிவர்ய மோசநீயமிதம் |
பரிசரதிநஹிபவந்தம் பகவநிநஹி பகவதபிமதா நபிவா ||**

என்றும்

**2 இதிபுநரேஷ விதந்நபீதுரி தரதிர்தூரநிம்நபதரூட: |
வரவரமுநிவரகருணும் நிக்நந் பதந்ருபசுரஶ்நுதே நியமாந் ||**

என்றும்

**3, ஆயுரபஹரதிஜகதாமயமுதயம் விலயமபிபஜந் பாநு: |
மயிபுநரிதம ந்ருஶம்ஸோ வரவரமுநிவர்ய வர்த்தயத்யேவ ||**

என்றும்

**4 ததித பரமநுரூபம் நவிளம்பிதுமிதி சிந்தயந்தயயா |
மலபாஜநாதிதோமாம் வரவரமுநிவர்ய மோசயத்வரிதம் ||**

[1. கல்யாண குண பூர்ணரான மணவாள மாமுநிவரே! அடியேனுடைய இவ்வுடலும தேவரீரால் இப்போதே விடுவிக்கத தக்கது இதனுலே தேவரீருககு கைங்கர்யம் செய்யப் பெற்றதில்லே எமபெருமானடியார்களான பாகவதர்கள் விஷயததிலுமில்லே. 2 "இவன் மனிதவுடலை படைத்த விலங்கினம்" என்னுமபடி அறிவிருந்தும் பாபகார்யங்களில் ஆசையுடையவனுய் மிகத் தாழ்ந்ததான நிலேயிலிழிந்து மணவாளமாமுனிகளுடைய க்ருபையையழித்துக் கொண்டு கர்மபலன்களே அநுபவிக்கிறன். 3. மணவாள மாமுனிகளே! இந்த சூரியன் உதயத்தையும் அஸ்தமனத்தையும் செய்து உலகங்களின் ஆயுளே அபகரிக்கிறன். அடியேன் விஷ்யததில் மட்டும் கொடியவனுய் இந்த ஆயுளே வளரச்செய்கிறன். 4 ஆதலால், மணவாள மாமுனிவரே!

---

A இந்தச்லோகம் தெலுங்குப்பதிப்பில் அதிகபாடம்.

அடியேன் விஷயத்தில் இனி கால விளம்பம் செய்யத்தக்கதன்று. தயையுடைய மனத்தினராய் இவ்வழுக்குடம்பினின்றும் அடியேனை விடுவித்தருளவேணும்] என்கிறபடியே தம்முடைய ஆர்த்தியை ஆவிஷ்கரித்து குணைநுபவைகதத்பரராய் தத்ஸேவாபிநிவேசத்தையுடையராய் ஜீயரைப் பிரிந்து ஸம்ஸாரத்திலிருக்குமிருப்பு பிராட்டி பெருமாளைப்பிரிந்து ராவணபவனத்திலே தனிச்சிறையிருந்தாப்போலே அதிதுஸ்ஸஹமாய் *பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும் இந்நின்ற நீர்மையினியாமுறாமை என்றும், *கூவிக்கொள்ளுங்காலமின்னங் குறுகாதோ? என்றும், *ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் யான் என்றுஞ் சொல்லுகிறபடியே பெற்றல்லது தரிக்ககில்லாத பேரார்த்தியையுடையராய் ஒருபகலாயிர மூழியாய் அவர் திருநாமந்தன்னையே பலகாலும் வாய்வெருவிக்கொண்டு முன்னடி தோற்றாதே திகைத்து மதிமயங்கி *உன்மத்தர்போல் பித்தேயேறி என்னும்படி எழுந்தருளியிருந்தார்,

### ஸ்ரீபாதத்து முதலிகள் தந்நிஷ்டராய் வாழ்ந்தது

இப்படி ஜீயர் திருவடிகளிலாச்ரயித்த முதலிகளெல்லாரும் ஆசார்யாபிமானநிஷ்டராய் "யதீந்த்ரப்ரவணரான ஜீயர் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்" என்று தந்தாம் சிஷ்யர்களுக்கு அருளிச்செய்து எல்லாரையும் வரவரமுநிப்ருத்யராக்க அவர்களும்

அபகதமதமானை: அந்திமோபாயநிஷ்டை:
அதிகதபரமார்த்தை ரர்த்தகாமாநபேக்ஷை: |
நிகிலஜநஸுஹ்ருத்பிர் நிர்ஜிதக்ரோதலோபை:
வரவரமுநிப்ருத்யைரஸ்துமே நித்யயோக: ||

[செருக்கும் தான் சுதந்திரனென்னும் அபிமானமுமில்லாதவர்களும், கருமம் ஞானம் பக்தி ப்ரபத்தி ஆசார்யாபிமானம் என்பவற்றில் ஐந்தாமுபாயமான ஆசார்யாபிமானத்தில் ஊன்றியவர்களும், புருஷார்த்தத்தின் எல்லையான ஆசார்யகைங்கர்யத்தையடைந்தவர்களும், செல்வத்திலும் அதைக் கொண்டு அனுபவிக்கும் சிற்றின்பத்திலும் ஆசையற்றவர்களும் பகைவரிடமும் நல்ல மனமுடையவர்களும் கோபத்தையும் உலோபித்தனத்தையும் வென்றவர்களுமாகிய மணவாளமாமுனி சிஷ்யர்களுடன் சேர்க்கை அடியேனுக்கு உண்டாகவேணும்] என்கிறபடியே ஜிதாரிஷட்வர்க்கமாய் த்ருணீக்ருதவிரிஞ்சாதி நிரங்குசவிபூதிகளையுடையராய் அதிகதபரமார்த்தராய் அந்திமோபாய

நிஷ்டராய் ஆஸ்திகாக்ரேஸரராய், இடைச்சுவர்தள்ளி இரண்டு விபூதியையுமொன்றாக்கிக் கொண்டு எல்லாரும் தந்நிஷ்டராய் தத்ஸேவோத்ஸுகராய் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

**ஸ்ரீஶடாரிகுரோர்திவ்ய ஸ்ரீபாதாப்ஜமதுவ்ரதம் |**
**ஸ்ரீமத் யதீந்த்ரப்ரவணம் ஸ்ரீலோகார்யமுநிம் பஜே ||**

*யதீந்த்ரப்ரவணப்ரபாவம் முற்றிற்று.*
*பெரியஜீயர் திருவடிகளே சரணம்*
*பிள்ளைலோகார்ய ஜீயர் திருவடிகளே சரணம்.*

—O—

மணவாளமாமுனிகள் வாழித்திருநாமம்

**இப்புவியிலரங்கேசர்க் கீடளித்தான் வாழியே**
**எழில் திருவாய்மொழிப் பிள்ளை இணையடியோன் வாழியே**
**ஐப்பசியில் திருமூலத்தலதரித்தான் வாழியே**
**அரவரசப் பெருஞ்சோதி அநந்தனென்றும் வாழியே**
**எப்புவியும் ஸ்ரீசைலமேத்தவந்தோன் வாழியே**
**ஏராருமெதிராசரெனவுதித்தான் வாழியே**
**முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே**
**மூதரிய மணவாளமாமுனிவன் வாழியே,**

நாள் பாட்டு

**செந்தமிழ்வேதியர் சிந்தைதெளிந்து சிறந்துமகிழ்ந்திருநாள்**
**சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலித்திடுநாள்**
**மந்தமதிப்புவி மானிடர்தங்களை வானிலுயர்த்திடுநாள்**
**மாசறுஞானியர்சேரெதிராசர்தம் வாழ்வுமுளைத்திடுநாள்**
**கந்தமலர்பொழில்சூழ் குருகாதிபன் கலைகள்விளங்கிடுநாள்**
**காரமர்மேனி அரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்**
**அந்தமில்சீர்மணவாளமுனிப்பரன் அவதாரம் செய்திடுநாள்**
**அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலமதெனும் நாளே.**

மங்களம்

**ஸ்ரீமத்ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே |**
**ஸ்ரீரங்கவாஸிநேபூயாத் நித்யஸ்ரீர்நித்ய மங்களம் ||**

*மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்*

# ஸ்ரீபிள்ளைலோகார்ய ஜீயர் வைபவம்

மணவாளமாமுனிகள் வைபவபரமான **யதீந்த்ரப்ரவணப்ர பாவம்** எனும் இந்த திவ்யக்ரநததத்தை அருளிச்செய்த பிள்ளை லோகார்ய (பிள்ளைலோகம்), ஜீயர் மணவாளமாமுனிகள் திருவடிகளில் மதுரகவி நிஷ்டராய் அந்தரங்கரான கோவிந்தப்பதாதர் (தாஸர்) என்பவரின் திருவம்சத்தில் உதித்தவர். இந்த கோவிந்தப்பர் ஆச்ரமஸ்விகாரம் பண்ணி பட்டர்பிரான் ஜியர் என்று திருநாமம் பெற்று மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவராய் விளங்கினர். கோவிந்தப்பருடைய குமாரர் அழகியமணவாளர். அழகிய மணவாளருடைய பௌத்ரரான வரதாசாரியர் என்பவர் உததமாச்ரமம் ஸ்வீகரிதது பிளளைலோகம ஜீயர் என்று ப்ரஸித்தி பெற்றார். இவர் மணவாள மாமுனிகள் அருளிச்செய்த யதிராஜ விம்சதி, உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி ப்ரபந்தம் இவைகளுக்கு மணிப்ரவான வ்யாக்யானங்கள் அருளிச்செய்துள்ளார். ராமாநுஜார்ய திவ்யசரிதம் என்னும் வைபவக்ரந்தம், இராமானுச நூற்றந்தாதி வ்யாக்யானம், நாலாயிர தனியன்கள் 'வ்யாக்யானம் இவைகளையும் அருளிச்செய்துள்ளார். இவருடைய திருநக்ஷத்ரம் சித்திரையில் திருவோணம்.

திருக்கடல் மல்லையில் கடல் கொண்டு விட்ட தலசயனத் துறைவார் ஸந்நிதியை இப்போதுள்ளவிடத்தில் கட்டி, அதில் பெருமாளையும் பூதத்தாழ்வாரையும் திருப்ரதிஷ்டை கண்டருளப் பண்ணி அந்த ஸந்நிதியில் தீர்த்தம் முதலிய சிறப்புகளைப் பெற்று வாழ்ந்திருந்தார் இன்றும் இவருடைய பூர்வாச்ரம ஸந்ததியினர் இச்சிறப்புகளை அநுபவித்து வருகின்றனர். இந்த ஜீயருடைய விவரமான வாழ்க்கைக்குறிப்புகள் கிடைக்கவில்லை.

ஸ்ரீ பிள்ளைலோகார்ய ஜீயர் திருவடிகளே சரணம்

# ஸ்ரீசைலேசமந்த்ர ப்ரபாவம்

**ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் ।**
**யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம்முநிம் ॥**

மணவாளமாமுனிகள் விஷயமாக இந்தத் தனியனை ஸ்ரீரங்க நாதன் தான் மாமுனிகளுக்குச் சிஷ்யனாயிருந்து அருளிச்செய்தது ப்ரஸித்தம். இது நமக்கு மந்த்ரரத்னத்துக் கொப்பான மஹா மந்த்ரமாகும். இந்த மந்த்ரத்தின் பெருமைகளைப் வரும் பக்கங்களில் அநுபவிக்கலாகும்,

1. **பிள்ளைலோகம் ஜீயரருளிச் செய்துள்ள வியாக்யானத்தைத் தழுவிய உரை**

"வாழி திருவாய்மொழிப்பிள்ளை மாதகவால் வாழும் மணவாள மாமுனிவன்" என்று பேசும்படி பெரிய ஜீயர் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை ஆச்ரயித்துத் திருவாய் மொழி முதலான திவ்யப்ரபந்த தாத்பர்யங்களையும் அவரடி பணிந்து பெற்று, தாம்பெற்ற அர்த்தங்களை எல்லாரும் கேட்டு உஜ்ஜீவிக்கும்படியாக நடத்தவேணும் என்று அதற்கநுகுணமாக எழுந்தருளியிருக்க, இவரை நம்பெருமாள் அர்ச்சகர் மூலமாய் அழைத்தருளி, "திருவாய்மொழியின் அர்த்தத்தை நாமும் நம்மடியார் களும் கேட்டு வாழும்படி பெரிய திருமண்டபத்திலே நடத்தும்" என்று தம் திருவடிகளை ஊன்றுவித்து அருள்பாடிட்டு நியமித் தருள, இவரும் அப்படியே நடத்த, "உயர்வற உயர் நலம்" தொடங்கி "அவாவறச்சூழ்" என்கிற சாற்றுப்பாட்டளவாக இவர் உபன்யாஸம் நடத்துவதைக் கேட்டருளி, மிகவும் உகந்து முப்பத்தாறாயிரப் பெருக்கர் என்று இவருக்குத் திருநாமம் சாத்தி யருளி "ஸ்ரீசைலேசதயாபாத்ரம்" என்ற தனியனும் அநுஸந்தித் தருளினார். இப்படிப் பெரிய பெருமாள் நிர்ஹேதுகமாகத் தமீமை விஷ்யீகரித்து நியமித்தருளியதற்கு ஜீயர் அருளிச் செய்த திரு நாமம் (பாசுரம்):

**நாமார் ? பெரியதிருமண்டபமார்? நம்பெருமாள்**
**தாமாக நம்மைத்தனித்தழைத்து—நீ மாறன்**
**செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை நாளுமிங்கே**
**வந்துரையென்றேவுவதே வாய்த்து.**

இப்படி நம்பெருமாள் அருளிச்செய்த பெரிய ஜீயரது தனியனுக்கு அர்த்தம்—"திருவாய்மொழிப்பிள்ளையனுடைய க்ருபைக்கு விஷயபூதராய், ஞானபக்தி வைராக்ய மஹோததியாய் ஸ்ரீபாஷ்யகாரர் விஷயத்திலே ப்ராவண்யத்தையுடையராய்க் கொண்டிருக்கிற கோயில் அழகிய மணவாளச் சீயரை ஸேவிக்கிறேன்'' என்றபடி.

**ஸ்ரீசைலேசதயாபாத்ரம்** : நம்மாழ்வாருளாலே அவர் திருவடிகளான எதிராசர் திருவடிகளை எப்போதும் மறவாமல் இறைஞ்சி ஏத்தும் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளுக்கு ஏற்றகலமாயிருப்பவர் மணவாளமாமுனிகள். ஸ்ரீசைலபூர்ணர் A (பெரிய திருமலை நம்பி) க்ருபையாலும் ஸ்ரீசைலதேசிகர் (திருவாய்மொழிப்பிள்ளை) தயையாலும் இராமாயணமென்னும் பக்தி வெள்ளமும் தீர்த்தங்களாயிரமான திருவாய்மொழியும் யதீந்த்ரப்ரவணரான இவரிடம் குடிகொண்டுள்ளன. **தீபக்த்யாதி குணார்ணவம்.** ஞானம், பக்தி வைராக்யம்முதலான குணங்களுக்குக் கடலாயிருப்பவர் மணவாள முனிகள். முன் நிலைகளான இளையபெருமாள் (லக்ஷ்மணர்) இளையாழ்வார் (உடையவர்) இரண்டிலும் ஞான பக்த்யாதிகள் பூர்ணமாய் உண்டு: பெரிய ஜீயருடைய அந்தப்ரேமாதிகள் பெரிய பெருமாள் விஷயத்துக்குச் சேர இரட்டித்திருக்கும். **யதீந்த்ரப்ரவணம்**; இனி நம்பெருமாளிடத்தில ப்ராவண்யம் அதன் எல்லை நிலமான எம்பெருமானாரளவும் செல்வதைச் சொல்வது "யதீந்த்ரப்ரவணம்''. அவர் (எம்பெருமானார்) பராங்குச பக்தர். இவர் (மாமுனிகள்) யதீந்த்ரப்ரவணர் இவரை அனைவரும் கால் கட்டுகிறது இவர் யதீந்த்ரப்ரவண ராகையாலேயே. வந்தே ரம்யஜாமாதரம் முநிம்; அழகிய மணவாளமாமுநி என்று திருநாமத்தை யநுஸந்தித்து அவர் கால்களில் விழுகிறார்.

இப்படிகளால் ஏற்றங்களையுடைய இவர் ஸ்துதி ரூபமான இந்தத் தனியன், "யத்வேதாதௌஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தேச ப்ரதிஷ்டித:'' என்று வேதத்துக்கு ஓம் என்னுமாபோலே, ஸகல திவ்யப்ரபந்தங்கள், அவைகளின் வ்யாக்யான விசேஷங்கள், இவைகளின் ஸாரமான ரஹஸ்யங்கள், இவை எல்லாவற்றினுடைய முதலிலும் முடிவிலும் அகில திவ்யதேச விலக்ஷண அதிகாரிகளாலும் அநுஸந்திக்கப்படுமதாய் இருக்கும்.

---

A. ஸ்ரீசைலபூர்ணர் க்ருபையால் பக்திவெள்ளத்தைப் பெற்றது முன்பு ராமாநுசனை; தீர்த்தங்களாயிரத்தை ஸ்ரீசைலேசர் தயையால் பெற்றது பின்பு மாமுனிகளை.

ப்ரணவத்திலே அகாரம் பகவத்வாசகமாயும் மகாரம் சேதன வாசகமாயும் உகாரம் இருவருடைய உறவை ப்ரகாசிப்பதாயும் இருக்கும். "அவ்வானவர்க்கு மவ்வானவரெல்லாம் உவ்வானவர் அடிமை என்றுரைத்தார்" என்பர் பெரியோர். இந்த ச்லோகத்திலே பதங்கள் தோறும் இவ்வர்த்தம் காணலாம்.

**ஸ்ரீசைலேசதயாபாத்ரம் :** ஸ்ரீசைலேச என்று அகாரவாச்யனை ஸர்வேச்வரனைச் சொல்லி, தயாபாத்ரம் என்று வேறு யாவர்க்குமில்லாமல் அவனுக்கே உள்ளவனான சேதனன் அவன் க்ருபைக்கு பாத்ரம் என்பதைச் சொல்கிறது. மேலும், ஆசார்யனை அவன்தானாகவே சொல்லுவது விசேஷாதிஷ்டானத்தாலே. 'ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத்" என்று ப்ரமாணம்.

**தீபக்த்யாதி குணார்ணவம்:** என்கிற இப்பதத்தாலும் 'தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு" என்றும், "ஆதியஞ்சோதிக்கே ஆராத காதல்" என்றும் "உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்" என்றும் சொல்லுகிறபடியே ஞான பக்தி வைராக்கியங்களைச் சொல்லுகையாலே, அகாரத்தில் சொன்ன பகவத்சேஷத்வத்தை பக்தியால் சொல்லுகிறது. ஸ்வரூபமும் "உன்னினைத் தாமரைகட்கு அன்புருகி நிற்கு"மதே. எம்பெருமானைப்பற்றியே ஜ்ஞானமாதலால், சேஷத்வம் பற்றிய ஞானமே ஞானம். தேவதாந்தரத்யாகப்ரதானமாயிருப்பது வைராக்யம்.

**யதீந்த்ரப்ரவணம்** யதீந்த்ரராகையாவது—பகவத் பரதந்த்ரரான தம் நிலையை நினைத்து துரும்பும் நறுக்காமல் வெறுமனே இருப்பவர்களைத் திருத்தித் திருமகள் கேளவனுக்காக்கி அடிமை செய்விக்கை. இது பற்றி எம்பெருமானாரிடம் ப்ரவணராயிருந்தார். பகவதநந்யார்ஹசேஷத்வம் அவனடியார் வரையிலும் செல்ல வேணும். மேலும், யதீந்தரசப்தம் அஸாதாரணமாக ராமாநுசனைச் சொல்லுவது, ராமசப்தத்தாலே அகாரார்த்தமும், அநுஜசப்தத்தாலே கைங்கர்யபரனான ஆத்மஸ்வரூபத்தையும் சொல்லிற்று. "ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா" என்றபடி ப்ரஎவண்யதிலே

**வந்தே ரம்யஜாமாதரம் முநிம் :** இத்தாலும் உகாரார்த்தமே சொல்லுகிறது. ரம்யஜாமாத்ரு சப்தத்தாலே அகாரவாச்யனான பகவானைக்சொல்லி முநிசப்தத்தாலே பகவதநந்யார்ஹசேஷத்வ ஜ்ஞானருடைய பரமசேதனனைச் சொல்லுகிறது. ரம்யஜாமாத்ருமநதம் கரோதிதி ரம்யஜாமாத்ருமுநி: ஆக இவை எல்லா மந்த்ரமும் ப்ரணவார்த்தமாக யோஜிக்கத்தட்டில்லை.

ஸுக்ரீவனுடைய கார்யத்தை கவனியாமலிருக்க, பெருமாள் இளையோனை நோக்கி, "லக்ஷ்மணா! நீ ஸுக்ரீவனிடம் சென்று நான் சொன்னதாக சொல்லு. செய்நன்றி மறந்த பாபிஷ்டன் புருஷர்களிற்கடையானவன்; வாலி சென்றவழி ஸுக்ரீவனுக்கும் திறந்திருக்கிறது அவனை உற்றுருறவினரோடும் யமபுரமனுப்பச் சித்தமாயிருக்கிறேன்." இப்படி மனஸ்தாபப்பட நேர்ந்துவிட்டதனால் முன்பு சைலேசதயாபாத்ரபூதனை வொருவனை வணங்கின குறைதீர இப்போது ஸ்ரீசைலேசதயாபாத்ரபூதரை வணங்கி வாழ்கிறேனென்றதாயிற்று. திருமலையாழ்வாரென்கிற திருவாய்மொழிப்பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கான மாமுனிகளை வணங்குகிறேன் என்கை.

2. **தீபக்த்யாதி குணார்ணவம்:** ராமாவதாரகாலத்தில் லவணார்ணவமான ஸமுத்ரத்தின் காலிலும் குனிந்தமை ப்ரஸித்தம். "ஸமுத்ரம்ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி" என்ற விபீஷணாழ்வானுடைய வாக்கின்படி லவணார்ணவத்தை நோக்கிச் சரணாகதி பண்ணியிருந்து அங்கும் மனஸ்தாபமே மிகுந்தது. அக்கடலரசன் முகங்காட்டிற்றிலனாக, மிகவும் சீறிச்சிவந்து, "சாபமானய லக்ஷ்மணமித்ரே! சராம்ச்ச ஆசீவிஷோபமாந் ஸாகரம்ஸோஷயிஷ்யாமி" "லக்ஷ்மணா! வில்லையும் கொடிய அம்புகளையும் கொண்டுவா; இதோ கடலை வெறுந்தரையாக்கி விடுகிறேன்" என்று கூறி சரணாகதி பண்ணினவிடத்தில் நிக்ரஹத்திலேயன்றோ நின்றது. அப்படியான குறைதீர அந்த லவணார்ணவத்தைவிட்டு தீபக்த்யாதி குணார்ணவத்தை அடிபணிந்து வாழப்பார்க்கிறபடி. ஜ்ஞானபக்தி வைராக்யங்களுக்குக் கடலான மாமுனிகளை வணங்குகிறேனென்றபடி.

3. **யதீந்த்ரப்ரவணம்:** "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்" ஸ்ரீரங்கநாதனுமிய பெருமாள திருவேங்கடமுடையானாகவும் நிற்கிறநிலையிலே "அப்பனுக்குச் சங்காழி அளித்தருளும் பெருமாள்" என்று போற்றப்படும் ஸ்ரீராமானுஜரிடம் திருவாழி திருச்சங்கு பெற்றதனும் அந்த யதீந்த்ரரிடத்தில் சிஷ்யவ்ருத்தி கொண்டிருந்தது ப்ரஸித்தம். அங்கு மநஸ்தாபம் ஒன்று நேரவில்லையாயினும் "தன்னையுற்றாட்செய்யும் தன்மையினார்" (ராமாநுசநூற்-97) என்கிற பாட்டைத் திருச்செவிசாத்தின பின்பு "யதீந்த்ரரிடத்தில் சிஷ்யவ்ருத்தி செய்வதற் காட்டிலும் யதீந்த்ரப்ரவணர் திறத்திலே சிஷ்யவ்ருத்தி செய்வதுதான் சிறந்ததென்று தோன்றிவிட்டது. ராமாநுசன் தன்னையுற்று ஆட்செய்வதிற்காட்டிலும் தன்னையுற்று ஆட்

செய்யும் தன்மையினையுற்று ஆட்செய்வாரே சிறந்தவர் என்பது இந்தப்பாட்டில் காட்டப்பட்டதன்றோ? அதனால் யதீந்த்ர ப்ரவணரையிறைஞ்சுகிறேனென்கிறதாயிற்று. மாமுனிவனுக்கு யதீந்த்ரப்ரவணரென்கிற திருநாமம் சிறப்பாகக்கிடைத்ததொன்று

**4. வந்தே ரம்யஜாமாத்ரம் முநிம்:** இராமனும் க்ருஷ்ணனும் அவதரித்த ஸமயங்களில் இரண்டு முனிவர்களிடத்திலே சிஷ்யவ்ருத்தி செய்திருந்தானெம்பெருமான் அதாவது விச்வாமித்ர முனிவரிடத்திலும்சாந்தீபினி முனிவரிடத்திலும், அவ்விருவரிடத்திலும் வெறுப்பேயாயிற்று. மிதிலையில் ஜனகருடையயாகசாலையில் கௌதமபுத்ரரான சதாநந்தர் (பாலகாண்டம் 51-ம் ஸர்க்கம் முதலாக) விச்வாமித்ரருடைய பழைய வரலாற்றையெல்லாம் சொல்ல, மேனகையுடன் கூடியது, வசிஷ்டபகவானிடம் பெரும் சண்டையிட்டது முதலான ரஜோகுண தமோகுண கார்யங்களைக் கேட்டபோது "இப்படிப்பட்ட ஒருவரையா ஆசார்யனாகக் கொண்டோம்" என்று வெறுத்திருக்க நேர்ந்தது. க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபினி முனிவரிடத்தில் ஸகலகலைகளையும் பயின்று முடிவில்; குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கநின்றவளவிலே "மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்" என்கிறபடியே என்றோ ப்ரபாஸதீர்த்தத்தில மாண்டுபோன மகனை மீட்டுத்தர வேண்டும் என்று வேண்டி அப்படியே பெற்றான் கண்ணபிரான் ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணன் என்று அறிந்து வைத்தும் அவனிடம் மோக்ஷத்தை வேண்டாமல் க்ஷுத்ரபுருஷார்த்தத்தையே வேண்டினமையால் அவன் பக்கலிலும் வெறுப்பாயிருந்தது. இப்படி வெறுப்புக்கு இலக்கான இரண்டு முனிகளையும் விட்டு ஸமஸ்த கல்யாணகுணக்கடலாய் வைராக்ய நிதியான ரம்யஜாமாத்ரு முனியை வணங்கி வாழ்கின்றேனென்கிற தாயிற்று

இவ்வளவு; அர்த்தவிசேஷங்களைக்கொண்ட இந்தச்லோகம் எம்பெருமான்தானே சொல்லியிருக்கவேண்டும். இவையெல்லாம் அவன் நெஞ்சுதன்னில் உறையும் விஷயங்களாகையால் பிறரொருவர்க்கு ஏறிட்டுக்கொள்ளவும் முடியாது. ஆகவே இத்தனியன் தெய்வவாக்கே என்பது திண்ணமாயிற்று

ஜீயர் திருவடிகளே சரணம்

## ஸ்ரீமதுபயவே. காரப்பங்காடு வேங்கடாசாரியர் ஸ்வாமி வழங்கும் செம்பொருள் :

ஸாக்ஷாத் ஸர்வேச்வரனான ஸ்ரீரங்கநாதனாலேயே அருளிச் செய்யப்பட்ட இந்த மந்த்ரத்தை விட உத்க்ருஷ்டமான மந்த்ரமே இல்லை என்றால் மிகையாகாது. ஸ்ரீசைலேசதயாபாத்ரம் என்று ஸ்வாசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையினுடைய பூர்ண க்ருபைக்கு பாத்ரமாயிருந்தவர் ஸ்வாமி மணவாளமாமுனிகள். இப்படி சொல்லப்பட்ட ஆசார்யாபிமானத்தின் பலனை பகவத் ப்ராப்தியாகச் சொல்லாமல் யதீந்த்ரப்ராவண்யமும் தீபக்த்யாதி குணார்ணவத்வமுமாகத் காட்டப்படுகின்றன. இங்கு ஸ்வாமி எம்பெருமானாரிடம் அதிகமான ப்ரேமையுடையவராய் யதீந்த்ர ப்ரவணராய்த் திகழ்ந்ததும், ஞான பக்தி வைராக்யங்களாகிற குணங்களுக்குக் கடலாக விளங்கியதும் 'எந்தை திருவாய்மொழிப் பிள்ளை இன்னருளால் வந்த'' என்று ஸ்வாமியே உணர்த்தும் ஸ்வாசார்ய (ஸ்ரீசைலேசரின்) க்ருபை. தனமுள்ளவன் ஸுகாநுபவம் பண்ணுகிறான். அவனுக்கு ஸுகாநுபவம் கேவலம் தனமுள்ளமையால் ஏற்படுமாப்போலே; ஸ்வாமிக்கு யதீந்த்ரப்ராவண்யம். ஆத்மகுணபூர்த்தி ஆகிய பெருமைகள், ஸ்வாசார்ய க்ருபையால்—இவர் ஸ்ரீசைலேசதயாபாத்ரராகையால்—ஏற்பட்டவை, உபகாரகரான ஸ்வாசார்யருடைய க்ருபையால் உத்தாரகரான யதிராஜ ஸம்பந்தமும் அபிமானமும் ஏற்படுகின்றன. "ராமாநுஜார்ய கருணைவது மத்கநிஸ்தே'' என்று யதிராஜ விம்சதியிலும், "மாசில் திருமலையாழ்வார் என்னை நேசத்தால் நின்பால சேர்த்தார்'; "உந்தனபிமானமே உத்தாரகமென்று சிந்தை செய்திருக்கச் செய்த நீ அந்தோ! எதிராசா! சதிராக நின் திருத்தாள் தா;'' "அவர்க்காய் (ஸ்வாசாரியருக்காக) எதிராசர் எம்மைக் கடுகப் பரமபதம் தன்னில் ஏற்றுவர். என்ன பயம் நமக்கே?; எதிராசர்தம அபிமான மென்னும் போதத்தை ஏறிப் பவமாம் புணரிதனைக் கடந்து பாதக்கரையைக் குறுகுவனே'', என்றெல்லாம் ஆர்த்திப்ரபந்தத்திலும் எம்பெருமானாரிடத்தில் தம்து மதுரகவி நிஷ்டையையும் ப்ராவண்யத்தையும வெளியிட்டுள்ளார். ஸ்வாமி உபதேசரத்தினமாலையிலும் நற்பயனாக "எந்தை எதிராசரின்னருளுக்கிலக்காகி சதிராக வாழ்ந்திடுவர்'' என்றுரைத்தார். ஆக நாராயண சதுரக்ஷரியினும் எதிராஜ, ராமாநுஜ சதுரக்ஷரிகள் மிகச் சீரியவை என்பது மாமுனிகள் காட்டும் பரமார்த்தம் இதுவே ஸாரதமமான செம்பொருள். இந்தத் தனியனில் நம்பெருமாள் அருளும் பரமார்த்தம். எம்பெருமான் திருநாமத்தையும் உள்ளடக்கியுள்ள ரம்யஜாமாத்ரு முனி என்ற திருநாமத்தை அநுஸந்தித்து வந்தே ரம்யஜாமாதரம் முநிம் என்று ஸ்வாமியை சரணம் பற்றுவோம்,

ஏறும்பி அப்பா அருளிச்செய்த

# ஸ்ரீசைலேசாஷ்டகம்

ஸௌம்யஜாமாத்ரு யோகீந்த்ர சரணாம்புஜஷ்ட்பதம் ।
தேவராஜகுரும் வந்தே திவ்யஜ்ஞாநப்ரதம் சுபம் |

சேஷ:ஸ்ரீமாநஜநி ஹி புரா ஸௌம்யஜாமாத்ரு யோகீ
போகீ பூதஸ்ததநு பகவான் ராகவஸ்யாநுஜந்மா |
பூத்வாபூயோ வரவரமுநி. பூயஸா பாஸமாந:
ரக்ஷத்வஸ்மாந் ரகுகுலபதே: ஆஸ்திதோ பத்ரபீடம் ॥ (1)

ச்ரோதும் த்ராவிடவேதபூரி விவ்ருதிம் ஸௌம்யோப யந்த்ருமுநே
உத்கண்டாஸ்தி மமைநமாநயத தம் தார்க்ஷ்யாச்ரயம் மண்டபம் |
ஆவிச்யார்சகமூசிவாநிதி முதா நிச்சேஷலோகாந்வித:
ரங்கீ வத்ஸரமேகமேவ ச்ருணோத் வ்யக்தம்யதோக்தக்ரமாத் ॥ (2)

ஸ்ரீ பூம்யாம் ரங்கநாதே சடஜிதுபநிஷத்வ்யாக்ரியாம்
ஸ்ரோதுகாமே |
சேஷஸ்ஸந்தோஷயிஷ்யந் வரவரமுநிதாம் ப்ராப்ய
யோ வர்த்ததேக்ரே |
காஷாயஸ்ரீதுலஸ்யம்புஜமணி ஸுசிகாயஜ்ஞஸூத்ர த்ரிதண்டை:
பாந்தம் ஸூப்ரோர்த்வபுண்ட்ரம் ஸ்மர ஹ்ருதய ஸதா கோசமுத்
ராங்கஹஸ்தம் ॥ (3)

க்ருபயா பரயா ஸ ரங்கராட் மஹிமாநம் மஹதாம் ப்ரகாசயந் |
வுலுபே ஸ்வயமேவ சேதஸா வரயோகிப்ரவரஸ்ய சிஷ்யதாம் ॥ (4)

ஸமாப்தௌ க்ரந்தஸ்ய ப்ரதிதவிவிதோபாயநசயே
பரம் ஸஜ்ஜீபூதே வரவரமுநேரங்க்ரிஸவிதே |
ஹடாத்பால: கச்சித் குத இதி நிரஸ்தோப்யுபகத:
ஜகௌ ரங்கேசாக்ய: பரிணதசதுர்ஹாயந இதம் ॥ (5

ஸ்ரீமாந் ரங்கேச்வரோ யத்வகுளதர வசோ பாஷ்ய ஸாரார்த்தஜாதம்
ச்ருத்வா ஸௌம்யோபயந்தா முநிவரசரணே ச்சாத்ரபாவம்
ப்ரபந்ந: |
ஸ்ரீசைலேசேதி பத்யம் ககபதிநிலயே மண்டபே,தத்ஸமாப்தௌ
உக்த்வாத்யேதவ்யமேதந்நிகில நிஜக்ருஹேஷ்வாதி சத்தத்த
தாதௌ ॥ (6)

வேதாதெள பூர்வமுக்தா ஹரிரிதி ஸா ஜநோவக்தி பஸ்சாத்யதோமித்யேவம்
வக்தவ்யமேதத்வகுலதத்வசோஹம்ரவராஸ்புகாலே |
ஸ்ரீசைலேசேதி பத்யம் ப்ரதமமதலதாம் ஸம்ப்ரதாயைகநிஷ்டை:
லக்ஷ்மீநாதேதி பத்யம் ஸ்வயமிதி பகவாநாதிசத்ரங்கநாத: ॥ (7)

யத்வத்வக்தும் ந யுக்தம் ப்ரணவஹரிபதாப்யந்தரேந்யத்பதம் தத்
க்ருஷ்ணேத்யேதத் கதாசிந் முநிசதவசநைர்வைதிகை:
ப்ரஹ்மநிஷ்டை: |
தத்வத்ரங்கேசபக்தை:சமதமநியதை: ஸாதுபிஸ்தத்வவித்பி: வக்தும்
யுக்தம் ந மத்யே ஸபதி நியதயோரேதயோ: பத்யமந்யத் ॥ (8)

சடரிபுரேக ஏவ கமலாபதிதிவ்யகவி: மதுரகவிர்யதா ச சட்ஜிந்முநி
முக்யகவி: |
யத்குலபுங்கவஸ்ய புவி ரங்கஸுதாகவிராட் [1]வரவரயோகிநோ
வரதராஜகவிஸ்சததா ॥ (9)

பரவாதிகேசரியார் அருளிய

# ஸ்ரீ சைல வைபவம்

கூறுகேன் உலகீரே குங்குமத்தோளரங்கேசர்
மாறன் மறைப்பொருள் கேட்க மணவாளமாமுனியை
[1]ஏற்றமணை தனிலிருத்தி [2]இருநிலத்தில் தாமிருந்து
வீறுடனே செவிசாத்தி [3]விரையடி [4]பூசனையாற்றி, (1

[5]ஆறுஇரண்டு புறஞ்சூழ அரங்கமுதல் [6]நூற்றெட்டும்
கூறியசீர் [7]சயிலத்தைக் கொண்டாடி உரைக்கவெகு
ஊறியதேன் பெருக்கென்ன [8]உன்னிஅதை உகந்துரைத்தான்
[9]சேறுவளர் கமலை [10]மைந்தன் சிந்தைமகிழ்ந்து [11]ஒருப்பட்டே. (2)

பட்டர்பிரான் முதலாய பதின்மர்கலை [12]பழிச்சலிலும்
சிட்டர்களாய்த் தினந்தோறும் திருமணிடு வேளையிலும்
இட்டமுற உணும்பொழுதத்து [13]ஒண்கரநீர் ஏற்கையினும்
அட்டதிக்கும் விளங்குஸ்ரத்தார் [14]ஆரியர்களனைவருமே. (3)

---

1. உயர்ந்த ஆஸனம் 2 பூமியில் 3 திருவடிகளை 4. தொழுது 5. இரண்டு காவேரிகள் 6. திருவரங்கம் முதலான 108 திருப்பதிகள் .7. ஸ்ரீசைலேச...என்னும் தனியன் 8. எண்ணி 10. அன்பன் (கமலை மைந்தன்—லக்ஷ்மீகாந்தன்; ச்ரிய:பதி) 11. ஒப்புக் கொண்டு, ஸம்மதித்து 12. ஆழ்வார்கள் பதின்மரும் பாடியுள்ள புகழ்மாலைகள் 13. பரிசேஷணத்தில் ஆசமநம் 14. ஆசாரியர்கள்

ஆரியர்கள் கொண்டாடி ஆசரித்த தனியனைத்தான்
பேரியலும் தொண்டர்க்குழாம் பெரும்பேறுக் கொண்டனரால்
சீரியராய் வாழவெண்ணில் செகதலத்தீர் கற்றுணர்மின்
[15]தாரியலும் அரங்கருக்கும் தமிழ்மறைக்கும் மணாளமே (4)

மணவாளமாமுனியை [16]வழுத்துறவோர் பயன்பெறுவர்
குணமாகக் கொண்மின் இதைக் கொடும்பிறவிப் பிணி அகல்வீர்
[17]பணவாளரரவிவராம் பகைத்தாரே யுய்தலிலர்
மணமுடைய மந்திரமா மதிக்கொள்ளீர் தனியனையே. (5)

தனியனென்று பேர் சாற்றித் தன்னரங்கர் மூன்னர்
இனிய திருப்புவளத்தாலே—[18] முனிவரனுர்
மாறன்மறை [19]முப்பத்தாறுயிரத்தின் [20]மாண்பொருளைக்
கூற உபதேசித்தார் கொண்டு. (6)

தேசமெங்கும் இது திருப்பதிகள் தோறுரைக்க
நேசமுற அரங்கர் நேசித்தார்—ஏகமவர்
பாதகராய் எரிவாய் பாழ்நகரில் [21]துய்ப்பர் இன்னல்
[22]வேதனுர் உள்ளமட்டும் [23]எய்த்து (7)

எய்யத் துணிய [1]இராவணியைக் கொன்றவன் காண்
செய்ய நெறிவிளங்கும் சேஷனவன்—வையக்
தனை வளர்க்குமாறு வரயோகி தானும்
[2]வினையறுத்து [3]வீடருளும் [4]வேந்து. (8)
வேந்தராய் மண்ணுண்டு [5]விண்ணேறலாம் எளிதாய்
தோய்ந்த உறவாயிருக்கில் தொல்லுலகீர்—ஓர்ந்துய்ய
[6]ஏதிகொடு காலனிழந்து அமர்மேவான் [7]விண்ணோர்
நாதனும் வந்தே வணங்கு நன்கு. (9)

---

15. தார்-பூமாலை 16. துதிப்பவர்கள் 17. பணவான் அரா—பணுமணிகளுடைய ஆதிசேஷன்; மணவாளராவிவராம் என்றும் பாடம் காண்கிறது 18. மாமுனிவர்—சடகோபமாமுனிகள் 19. ஈடுமுப்பத்தாறுயிரம் 20 உயர்ந்த அர்த்தங்கள் 21. இன்னல் படுவர் 22 பிரம்மா 23 வருந்தி 1, ராவணன் பிள்ளையான இந்த்ராஜித்தைக் கொன்ற லக்ஷ்மணன் 2. பாபங்களைப்போக்கி 3. மோக்ஷம் தரும் 4. முனிவர் பெருமான் 5, விண்-பரமபதம் 6. ஆயுதம் 7. விண்ணோர் நாதன்-பரமபதநாதன்

வணங்கினர் சீர்பெற்றார் வரன்முறையால் [8]வீடணர்போல்
இணங்கினர் ஒரொருவர் இருநிலத்தில் சிறப்புற்றார்
[9]பிணங்கினர் பேய்ப்பிறவிப் [10]பேதையர் கடமைக்கண்டே
[11]உணங்கினர் [12]தாமதராய் உட்சனந்தார் தென்றவரே, (10)

[13]தென்தலையாம் தமிழ்வேதச் சீர்சைலத் தனியனெனும்
நன்கலையும் உள்கசிந்து நவிற்று பெருந்தகைமாந்தர்
[14]மின்கலையும் புரிநூலும் [15]மேனேக்கு புண்டரமும்
தென்கலையும் வடகலையும் திகழ்நாவர் ஆகுவரே. (11)

ஆருகலென் இனி எனக்கோர் ஆராவமுதாய் என்
சோகமற உளத்தடத்து துலங்குவர வரயோகி
[16]சேகறுசெம்மலர்த்தாளும் சீர் சைலத்தனியனும் இன்று
[17]ஓகையுறப் பெற்றனனால் ஒலிகடல் தாரணியீரே. (12)

தாரணியோர் வாழவெண்ணித் தானே திருவரங்தன்
பேரணியும் குருகைநகர் [18]பிறங்கநனிப் பேரருளால்
சீரணியும் மணவாளமாமுனியாய்ச் [19]செனித்தனால்
தாரணியும் அரங்கருக்குத் தமிழ்மறைத் தேசிகனெனவே, (13)

தமிழ்மறை ஓதுவரேல் தனியனது மற்றில்லை
[20]திமிரமற மெய்ஞ்ஞானச் செழுஞ்சுடர்சேர் மனமுடையீர்
அமிழாமல் சமுசாரத்து ஆழ்கடலைக் கடத்தி ஒரு
நிமிடத்தில் நித்தியராய் நிறுத்தும் பேரின்பத்தே. (15)

பத்துத்திசைகளினும்-பணமணிகள் சுடரெறிப்ப
முத்திதரும் அரங்கருக்கு மூவணையாய் சூழ்ந்திலங்கும்
எத்திசையும் பணிந்தேத்தும் எம் பெரியமுனியாகும்
[21]அத்தனெழில் வரயோகி ஆயிரவாய் அரவரசே. (15)

அரவேறு மேவி[22]யறிதுயில் கொள்ளும் அரங்கநாரை
வரயோகி சீர்சைலத்தின் பெருமாப்புகழ் வைபவத்தை
வீரகால் இசைமறையோர் திலகன் தமிழ்வீறுடைய
ரரவாதிகேசரி பாப்பதினைந்து பணித்தனனே. (16)

---

8. விபீஷணன் 9. மாறுபடுபவர் 10. அறிவிலிகள்
11. காய்கின்றவன் 12. மந்தர் 13. அழகியகலை 14. மின்-ப்ரகாசம்
15. ஊர்த்வபுண்ட்ரம்-திருமண்காப்பு 16. துயாறு 17. மகிழ்ச்சி
18. விளங்க 19. அவதரித்தனன் 20. மயர்வற-இருள்போக
21. ஆசார்யனை அழகியமணவாள மாமுனிகள் 22. யோகநித்திரையில் ஆழ்ந்த திருவரங்கன் அருளிச்செய்த.

# ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதுபயவே நல்லான் சக்ரவர்த்தி T. ராமக்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி

திருமகள் கேள்வனே முழுமுதற் கடவுள். உலகனைத்தையும் ஈன்றெடுத்தளிப்பவன் அவனே. அத்தகையோன் தன்னை ஈன்றெடுத்தளிக்குமொருவனைப் பெற நெடுநாட்களாக அவாவி வந்தனன். அவ்வவா தயரதனைத் தந்தையாகப் பெறும் வாய்ப்பினால் நிறைவேறியது உலகிற்கோர் 'முந்தைத்தந்தை சக்கரவர்த்தித் திருமகனானன்.

உடல் கொடுப்பவன் தந்தை; மெய்யுணர்வை அளிப்பவன் ஆசார்யன்; தந்தையினும் ஆசார்யன் சிறந்தவன். தந்தை தருமுடல் அழியும்; ஆசார்யன் அளிக்கும் மெய்யுணர்வு அழியாது. அத்தகைய ஆசாரியனாயிருப்பவனும் திருமகள் கேள்வனே; நமது குருபரம்பரையில் அவனே முதலாசாரியனாய் விளங்குகிறான். அவனுக்கு வேறொரு குரு இல்லை. அத்தகையான் தனக்கு அறிவுரை கூறும் குரு ஒருவனைப் பெற நெடுங்காலமாக அவாவி வந்தனன், அவ்வவா மணவாளமாமுனிகளைக் குருவாகப் பெறும் வாய்ப்பினால் நிறைவேறியது. ஆதி குரு மணவாளமாமுனிகளுடைய சீடனானான். எல்லாம் இயல்பாக அறிபவன் ஆதிகுரு. அவனே மாமுனிகளைக் குருவாய்ப் பெற விரும்பினால் மாமுனிகளின் மதி நுட்பத்தை நாம் என்னென்பது!

மணவாளமாமுனிகளிடமே அஸாரமானவைகளை நீக்கிஸாரதம மந்த்ரத்நார்த்தமான திருவாய்மொழியின் வியாக்யநமான ஈடு என்னும் திவ்ய சாஸ்திரத்தை ஓராண்டு முழுதும் விழுமிய வேட்கையுடன் அரங்கன் கேட்டான். "தத்தேரங்கி நிஜமபிபதம் தேசிகாதேசகாங்க்ஷீ" என்றபடி அரங்கன் குரு வாக்கை மறுக்ககிலாதவன், கண்ணனைப் போல் படித்ததாகப் பேராக்கிக் கொள்ளாமல் கேட்டறிந்து ரஸிக்கும் சிஷ்யனாய்ப் போரின்பம் கண்டனன்' அரங்கன். அர்ச்சை வடிவினனாய்க் கேட்குமரங்கன் தன் ஈச்வரத் தன்மையை மறைத்து வடிகட்டின சீடத்தன்மைய்ந்தவனாய் ஈடு கேட்பதில் மிக்க ஈடுபாடு கொண்டான்.

ஈச்வரத்தன்மை விஞ்சிநின்ற ஸாந்தீபநீசிஷ்யன் கண்ணன் பண்டே இறந்துபோன குருவின் மகனை உயிர்ப்பித்து குருதக்ஷிணை வழங்கினான். ஈச்வரத்தன்மை மறைந்த சிஷ்யத்தன்மை விஞ்சி நின்ற மாமுனிவரின் சிஷ்யனாகிய அரங்கனோ "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்" என்று தொடங்கும் தனியனை ஸமர்ப்பிப்பதன்றி வேறு குருதக்ஷிணைதர வழியின்றி நிற்கின்றான். எம்பெருமானார் தனியனான "யோநித்யமச்யுத" என்று தொடங்கும் சுலோகம் போல் பெரிதாக அமைந்திலது மாமுனிகள் தனியன். உவகையால் உள்ளம் உடைகுலைப்பட்டிருக்கிற அரங்கனுக்கு சுலோகம் சிறிதாகவே அமைந்தது.

வஸிஷ்ட்டரும் ஸாந்தீபனியும் அவதார நிலையில் ராமனுக்கும் கண்ணனுக்கும் ஆசார்யராயிருந்தனர். மாமுனிகளோ அர்ச்சை நிலையில் ஆசார்யராய் வீறுபெற்றுகிறார். ஆழ்வார் ஆசார்யர்கள் அர்ச்சை நிலையில் ஆசார்யராய் விளங்கினாலும் மாமுனிகளுக்கு உள்ள ஏற்றமவர்களுக்கும் இல்லை, நமமாழ்வார் பலகாலும் அர்ச்சாவதாரபரமான திருவாய்மொழியில் உபதேசிப்பதும் ஈச்வரனிடத்தில் சிஷ்ய லக்ஷணம் அமைந்திருப்பதும் ஆசார்யஹ்ருதயத்தில் நன்கு காட்டப்பட்டுள்ளன. ஆண்டாள் கண்ணனை எழுப்பி "உனக்கே நாமாட்செய்வோம்" என்று கற்பித்திருக்கிறாள். ஆயினும் மாமுனிகள் போலத் தொடர்ந்து ஒரு நூலை விரித்துரைத்து அவர்கள் கற்பித்திலர் என்பது கருத்தக்கது. திருமங்கை மன்னன் ஒலிக்க பாடலை அவரிடமே கற்க விரும்பினான் எம்பெருமான். "தின்தனக்கும் குறிந்பாகில் கற்கலாம்கவியின் பொருள்தானே" என்று கற்பிக்கத் திருமங்கை மன்னனும்முற்படுகிறார்.

ஆழ்வார்களோடு ஒரே கோவையாகக் கருதப்படுகிறவர் எம்பெருமானார். அவரிடம் பலகால் சிஷ்யனாகியிருக்கிறான் எம்பெருமான். வடவேங்கடவன் வடமொழி வேதாந்தத்தைச் சுருக்கமாக ஸ்ரீபாஷ்யகாரரிடம் கேட்டான். அவ்வுபதேசமே "வேதார்த்தஸங்க்ரஹம்" என்னும் நூலாய் விளங்குகிறது. உபதேசித்த ஸ்ரீபாஷ்யகாரர் இன்னும் ஞாநமுத்திரைக் கையுடன் விளங்குவதை நாம் திருமலையிலே ஸேவிக்கலாம். சங்காழி அளிக்கப்பெற்று அப்பன் ஸ்ரீபாஷ்யகாரருக்குச் சிஷ்யனாய் உய்வு பெற்றதும் உலகறிந்ததே. திருக்குறுங்குடி நம்பி ரஹஸ்யோபதேசம் பெற்று ஸ்ரீராமாநுஜ சிஷ்யராகி "ஸ்ரீவைஷ்ணவநம்பி" என்று பேர் பெற்றதும் ப்ரஸித்தம.

வடவேங்கடவன் வடமொழி மறைப்பொருளை ஸ்ரீபாஷ்ய காரரிடம் ஸங்க்ரஹமாகத்தான் கேட்டான். தென்னரங்கனோ தென்மொழி மறை முழுதும் விரித்துரைக்கத் தினவு தீரும்படி ஈடு முப்பத்தாறாயிரப்பெருக்கரிடம் கேட்டான். ஸ்ரீரங்கநாதன் யதிநாதனோடு ஸம்பாஷணை செய்து கொண்டிருந்தது ஐதிஹ்யத் தாலும் கத்யத்தாலும் தெரிகிறது. திருவாய்மொழியின் வளர்ப்புத் தாயான அந்த யதிநாதனிடம் ஸ்ரீரங்கநாதன் தென்மொழி மறைப் பொருளைக் கேட்டிருக்கலாம். கேட்டிலன், ஏன்? த்ரமிடோபநிஷத்பாஷ்யம் எனப்படும் ஈடு அக்காலத்தில் இல்லையே! நம்பிள்ளையிடம் ஈடு கேட்டிருக்கலாம், கேட்டிலன். காரணம், பெருக்கிச் சொல்லி விளக்கும் வாக்குப்படைத்த மணவாளமாமுனிகள் திருவாயாலே விளக்கமுறக் கேட்டு மகிழ வேண்டும் என்கிற பேரவாதான். மணவாளமாமுனிகளால்தான் அரங்கனது நெடுநாளைய ஆசை நிறைவேறியது.

வடக்கே ஸ்ரீபெரும்பூதூரில் வடமொழி வேதாந்தத்தை வளர்க்க அவதரித்த ஸ்ரீபாஷ்யகாரர் தெற்கே தென்மொழி மறை தோன்றிய ஆழ்வார் திருநகரியிலேயே அதனைப் பரப்ப மீண்டும் மாமுனிகளாய் அவதரித்ததும், மாமுனிகளுக்குத் தென்மொழி மறையிலேயே கண் செலுத்துமாறு ஆசார்ய நியமநம் ஆனதும், ஸர்வஜ்ஞனும் ஸத்யஸங்கற்பனுமான அரங்கனது ஆசை நிறை வேறுவதற்காகவே அமைந்தன என்பதுணரத்தக்கது. ஆக அரங்கன் ஈடுகேட்டதால் வந்த பெருமை வேறெந்த ஆசாரிய ருக்கும் இல்லாத தனிப்பெருமையாக மாமுனிகளுக்கு அமைந்தது என்பதில் ஐயமில்லை.

திருவாய்மொழி மதிளரங்கரையே ஓதுவதாக நாம் கருதுகிறோம். மதுரகவியாழ்வார நேரே நம்மாழ்வாரிடமே திருவாய்மொழி கேட்டார் அவருடைய நுண்ணறிவுக்கு அதன் உட்பொருள் புல னாயிற்று. தம் நெஞ்சில் உட்பொருள் நிற்கும்படி நம்மாழ்வார் தமக்கு அருளிச்செய்ததாக அவர் கூறிக்கொள்கிறார். "வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான்" என்பது அவர் திருவாக்கு. வேதத்தின் பொருள் எம்பெருமான்; "வேதப் பொருளே என் வேங்கடவா" என்று காண்க. உட்பொருள்— பாகவதர். பாகவதருக்கு ஆட்படும் மனப்பான்மையை நம்மாழ் வார் அருளினார் என்றபடி, அவர் ஆட்பட்ட பாகவதர் நம்மாழ் வாரே. திருவாய்மொழியின் உட்பொருள் மதுரகவியாருக்குத் தம்

மாழ்வாராயினர். ''தேவுமற்றறியேன்'' என்று நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வமில்லை என்று அவர் முடிவு கட்டினர். திருவாய் மொழியை ஓதி முடிக்கும்போதெல்லாம் ''ஆழ்வார் திருவடிகளே சரணம்'' என்றுதான் முடிவு கட்டினதைச் சொல்லி முடிப்பது வாடிக்கையாயிற்று. பின்னர் நாதமுனிகள் நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்து த்ரமிடோபநிஷத்தைப் பெற்று அதனைத் தன் ஸந்தானத்துக்கும் உபகரித்து மதுரகவிகளைப் போலவே ''ஆழ்வார் திருவடிகளே சரணம்'' என்று சொல்லி முடிப்பதை வாடிக்கையாக்கினர்,

உரைநூல் இடுவித்தும் காலக்ஷேப கோஷ்டிகளை நடத்தியும் நடப்பித்தும் திருவாய்மொழியை வளர்த்த எம்பெருமானர் காலத்திய பெரியோர் அவரை நம்மாழ்வார் திருவடியாகக் கொண்டு நம்மாழ்வார் திருவடி உத்தேச்யமன்றோ என்னும் கருத்துடன் ஸ்ரீராமாநுஜனையும் வேதத்தின் உட்பொருளாக ஏற்றனர். ஏற்கவே முன்னவர் கட்டின முடிவுடன் தங்கள் முடிவையும் சேர்த்து ''ஆழ்வார் திருவடிகளே சரணம்'' ''எம்பெருமானர் திருவடிகளே சரணம்,' என்று தென்மொழி மறையை ஓதி முடிக்கும்போதெல்லாம் அவர்கள் அநுஸந்திப்பாராயினர்.

தற்காலத்தில் ''ஜீயர் திருவடிகளே சரணம்'' என்பதையும் சேர்த்து அநுஸந்தித்து முடிப்பது ஸம்ரதாயமாயிருக்கிறது. இந்த ஸம்ப்ரதாயம் அரங்கன் திருவுள்ளத்துக்கு மிகவும் ஒத்தது என்பது அவன் தனியன் ஸமர்ப்பித்துத் தென்மொழி மறை ஓதும் போதல்லாம் முன்னும் பின்னும் அதனை அநுஸந்திக்க வேண்டுமென்று திவ்யாஜ்ஞை பிறப்பித்ததனுல் நன்கு விளங்குகிறது. ஜீயர் என்பது இங்கே மணவாள மாமுனிகளே. ''பெரிய ஜீயர்'' என்று வழங்குவது முண்டு.

ஆழ்வார், எம்பெருமானர், ஜீயர், என்று மூன்று திருநாமங்களைச் குறிப்பிட்டாலும் மூவரிலும் வேறுபாடின்மையின் உட்பொருள் மாறுபடவில்லை. திருவடியாதலின் நம்மாழ்வாரினும் எம்பெருமானர் வேறுபடாமலிருப்பதும், எம்பெருமானர் எடுத்த புநரவதாரமே ஜீயராதலின் அவரும் வேறுபடாமலிருப்பதும் காண்க. ஆக இம்மூவரையும் மாமுனிகள் காலத்திலுள்ள பெரியோர் உட்பொருளாகக் கருதி ''ஆழ்வார் திருவடிகளே சரணம், எம்பெருமானர் திருவடிகேளே சரணம், ஜீயர் திருவடிகளே சரணம்'' என்று ஓதி முடிப்பது ஏற்புடையதே என்க.

இம்மூவரை மட்டும் உட்பொருளான பாகவதர் என்று பெரியோர் விசேடித்துக் கொண்டதற்குக் காரணம் இவர்கள் மூவரும் முறையே தமிழ்மறைக்கு ஈன்ற தாயாகவும், வளர்ப்புத் தாயாகவும் பெருக்கி வாழ்வளிக்கும் வள்ளலாகவும் விளங்கியதே என்க. மேலும் பகவத், பாகவத, ஆசார்யர்கள் மூவரும வேதப் பொருளாவர். பகவான் புறப்பொருள். ஏனையோர் உட்பொருள்கள். அவர்களுள் ஆசார்யனை உட்பொருளாகக் கொண்டால் "குருரேவ பரம்ப்ரஹ்ம" என்றபடி அவர் பகவானுகவும், அவர் இயல்பினில் பாகவதராகவும் இருத்தலின்; முப்பொருளாகவும் இருத்தல் ஆசார்யனுக்கே அமைகிறது. ஏனைய ஆசார்யர்கள் இம்மூவருமே யாதலின் ரஸிகப் பெருமக்கள் இம்மூவரையும் வேதத்தின் உட்பொருளாகக் கொண்டது மிகவு மேற்புடையாதயிற்று.

திருவாய்மொழியில் முதலில் தோன்றும் புறப்பொருள் மதிளரங்க மணவாளன், முடிவெல்லையாய்த் தோன்றும் உட்பொருள் கோயில் மணவாள மாமுனிகள், அரங்கனுடைய உலகமளந்த பொன்வடி புறப்பொருளின் ஸாரம். மாமுனிகளின் "பொன்னடியாம் செங்கமலம்" உட்பொருளின் ஸாரம் ஸாரமான இவ்விரு பொருள்களும் நெஞ்சிறப்படும்படி ஈடுமுப்பத்தாறுயிரத்தைப் பெருக்கி மாமுனிகள் உரைப்பதைச் செவிமடுத்த அரங்கன் அரும்பொருளை இங்ஙன் எளிமைப்படுத்துவதே! என்று நாவன்மையை வியந்து, தக்க கைம்மாறு காணகிலாது சாத்துமுறையின்போது நன்றியறிவுடன் "ஸ்ரீசைலேச"த் தனியனும் மந்த்ரரத்நத்தை ஸமர்ப்பித்ததாக மாமுனிகள் காலத்தவரான எறும்பியரே அருளிச்செய்கிறுர்

**ஆத்மாநாத்மப்ரமிதிவிரஹாத் பத்யுரத்யந்ததூர:**
**கோரே தாபத்ரிதயகுஹரே கூர்ணமானோ ஜனோயம்,**
**பாதச்சாயாம் வரவரமுநே! ப்ராபிதோ யத்ப்ரஸாதாத்**
**தஸ்மை தேயம் ததிஹ கிமிவ ஸ்ரீநிதேர்வர்த்ததே தே.**

(வரவரமுநி சதகம் 63)

(தேஹாத்ம விவேகம் கூட இல்லாமையால் எம்பெருமானுக்கு நெடுந்தூரதிலுள்ளவரும், கோரமான தாபத்ரயப் படுகுழியிற் சுழலுகின்றவருமான என்னைப்போன்ற மக்கள் எவருடைய அனுக்ரஹத்தால் திருவடி நிழலிற் சேர்க்கப்பட்டனரோ, அத்தகைய

தேவரீருக்குத் திருமகள் கேள்வனும் இவ்விஷயத்தில் வழங்கலாம்படியான வேறு கைம்மாறு யாது உள்ளது? என்னைப் போன்றவரையும் திருவடி நிழலிற் சேர்த்து வைத்த பேருதவிக்குத் தனியன் ஸமர்ப்பித்தது தவிரத் திருமாலுக்கும் வேறு கைம்மாறு செய்ய இயலாதென்பது கருத்து.)

இந்த சுலோகத்தில் 'பாதச் சாயா'' என்னுமிடத்தில் பற்றப்படும் திருவடி என்னும் உபாயமும், நிழல் என்று ஒதுங்கும் இடமாகிய உபேயமும் தோன்றுகின்றன. அரங்கன் திருவடியே உபாயம்; நிழல் தந்து தாபந்தவிர்க்கும் அவ்வடியே உபேயம் என்றதாயிற்று. இது திருவாய்மொழியின் புறப்பொருளாக முதலிற் புகட்டப்படுவதாகும். இதே 'பாதச் சாயா' என்பது பின்னர்ப் புகட்டப்படும் உட்பொருளின் முடிவு நிலத்தையும் காட்டவற்றுயுள்ளது. திருவாய்மொழியின் உட்பொருளின் முடிவு நிலமான மணவாள மாமுனிகளையே குறிப்பதாகவும் நுண்ணறிவுடையோர் கொள்ளும்படி இது அமைந்துள்ளது. "விஷ்ணு: சேஷீததீய: சுபகுண நிலயோ விக்ரஹ: ஸ்ரீசடாரி:; ஸ்ரீமாந் ராமாநுஜார்ய: பதகமல யுகம்பாதி ரம்யம் ததீயம்'' என்றபடி எம்பெருமானது நற்குணம் நிரம்பிய திருமேனியாக நம்மாழ்வாரையும், அவருடைய இணைத்தாமரையடியாக ராமாநுஜனையும் கொள்ளும் மரபிலே அரங்கன் திருவடியாகிறார் ராமாநுஜன். அவர் திறத்து அத்யந்த பாரதந்த்ரியத்தை அநுஸந்திப்பதனால் நிழல் போன்றவரான யதீந்த்ரப்ரவணர் திருவடி நிழலாகிறார் ஆகவே, அடிப்படையான தேஹாத்ம விவேகமேயில்லாத பாமரரையும் பேற்றின் எல்லை நிலமான தன்னையே [மணவாள மாமுனிகளையே) சேர்ப்பிக்கும் வித்தகத்தைக் கண்டு இவ்வரிய பொருளை உலகம் மறவாது என்றும் நெஞ்சில் நிலைநிறுத்தற்கும், தன் நன்றியை வெளிப்படுத்தற்கும் ஸ்ரீசைலேசத் தனியனை வெளியிட்டுத் தமிழ் மறைத் தொடக்கத்திலும் முடிவிலும் அதனை யாவரும் எங்கும் அநுஸந்திக்க வேண்டுமென்று ஸ்ரீரங்கநாதன் கட்டளையிட்டருளினன்.

வேதப் பொருள் ஹரியே என்பது தோன்ற முதலிலுமிறுதியிலும் ஹரி: என்று வேதமோதும் போது சொல்வது போலத் தமிழ் மறை ஓதும் போது அதன் உட்பொருளின் முடிவு நிலமான ரம்யஜாமாத்ரு முனிவரை முதலிலும் இறுதியிலும் தான் ஸமர்ப்பித்த தனியனால் அநுஸந்திக்க வேண்டும் என்பது ரங்கநாதன் திருவாணை. வடமொழி மறை எல்லாருக்கும் பொதுவானது. ஆதலின் உட்பொருளைக் கூறுது புறப்பொருளாகிய ஹரியையே

முதலிலும் இறுதியிலும் கூறுகிறோம். உட்பொருளை ஹரி சப்தத்திலும் ப்ரணவத்திலும் பரமஸாத்விகர்கள் அநுஸந்திப்பர், தென்மொழிமறையோ பரமஸாத்விகர்க்கே ஏற்பட்டதாதலின் ரம்யஜாமாத்ரு முனியாகிய உட்பொருளையே அநுஸந்திக்க வேண்டுமென்பது ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞை. ஸம்ஸார மோக்ஷ ஹேதுவான ஹரியை அநுஸந்திப்பது இம்மை மறுமை வீடுகளைப் பற்றிக் கலந்து பேசும் வடமொழி மறைக்கு ஏற்கும். வடிகட்டின வீட்டின்பம் பேசும் தென்மொழிமறைக்கு மோக்ஷைக ஹேதுவான ரம்யஜாமாத்ருமுனிவரை வந்திப்பதே பொருந்தும்.

மணவாள மாமுனிகளே உட்பொருள் என்பதைத் தாமே அவர் வெளிப்படையாகக் கூறவிடினும் அவரிடம் காலக்ஷேபம் கேட்ட பெரியோர் இந்நுண் பொருளை உணர்த்திருந்தனர். தமக்குள் அந்த ரஹஸ்யத்தை அவர்கள் பேணிப் பாதுகாத்தனர். கருணை வாய்ந்த திருவரங்கன் ஓராண்டு கேட்டு வந்து இந்த உண்மையான ஒண் பொருளைக் கோஷ்டியில் அந்வயிக்காதவர்களும் பிற்பட்டவர்களும் இழக்கவொண்ணுதென்று தான் அருளிச்செய்த தனியனை முதலிலும் முடிவிலும் சொல்லுமாறு தென்மொழி மறையை அநுஸந்திப்பவர்களுக்குக் கட்டளையிட்டு இவ்வொண் பொருளை நாமும் உய்த்துணருமாறு செய்திருக்கிறன். அந்தக் கட்டளையின் பலனே நாம் இன்று முடிவுப் பொருளாய் அநுஸந்திக்கும் ''ஜீயர் திருவடிகளே சரணம்'' என்பது.

# மணவாளமாமுனிகள் விஷயமான ஸ்தோத்ரங்கள்

மணவாளமாமுனிகள் விஷயமாக் ஸ்வாமியுடைய நேர் சிஷ்யர்களும் பின்பு தோன்றியவர்களும் பலபல துதிகள் இயற்றியுள்ளார்கள். எம்பெருமானுர் விஷயமாகக்கூட இவ்வளவு துதிநூல்கள் இயற்றப்படவில்லை. மாமுனிகளுடைய ஆத்மகுணங்களும் திருநாவீறுமே துதிக்கு முக்கிய விஷயங்களாக அமைந்துள்ளன. ஸ்ரீசைலேசாஷ்டகமும் ஸ்ரீசைலவைபவமும் முன் தொகுதியிலேயே சேர்க்கப்பட்டன. இங்கு தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலுமாக சில ஸ்துதிகள் இடம் பெருகின்றன. இங்கு இடம் பெருதவை பல பல வுள. எல்லாவற்றையும் சேர்க்க இயலவில்லை.

## ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா அருளிச்செய்த பாதாதிகேசமாலை

(மணவாளமாமுனிகள் விஷயமான அமலனாதிபிரான்)

[1]போதச்சிவந்து பரிமளம் வீசிப் [2]புதுக்கணித்த
[3]சீதக்கமலத்தை நீரேறவோட்டிச்சிறந்து அடியேன்
[4]ஏதத்தைமாற்று மணவாளயோகி இனிமை தரும்
பாதக்கமலங்கள் கண்டேன் எனக்குப்பயமில்லையே. 1

[5]வேழக்குருத்தின் அழகைப் பழித்து [6]விரைமருவும்
வாழைப்பருவத்தின் ஆகாரங்கொண்டு வளம்புனைந்த
ஏழைக்கிரங்கும் மணவாளயோகி இரு[7]குறங்கைக்
[8]கேழற்ற நெஞ்சில் வைப்பேற்கு ஒருகோலமும் கேடில்லையே. 2

[9]தேனமர் மாலை மணவாளயோகி [10]திருமருங்கு
வினைமிலாத இளமையின் எழில்[11]சகனம்
வாணிலையுய்த்த [12]துவராடை இன்று என் மனந்தை விட்டுத்
தான் அசலாமல் என்னை ஊழிகாலமும் தாங்கியவே. 3

வந்திக்க வாழ்வித்து அருள் மணவாளமுனி வடிவைச்
சிந்திக்கவும் அரிதாம்; அழகாற்றில் திகழ் சுழிபோல்
[13]உந்திச்சுழி எனது உள்ளமும் [14]சூறை கொண்டாய தென்றும்
சந்தித்தவர் கண்ணும் நெஞ்சும் கொள்ளா நிற்கும் தாமிருந்தே, 4

ஆரும் வணங்கு மணவாளமாமுனி [15]அம்புயமும்
[16]காரும் [17]சுரபியும் போலே வழங்கும் கைத்தாமரையில்
சேரும் [18]திருத்தண்டும் சேவித்த மானிடர் தீவினையால்
[19]ஈரும்படிப் பிறவார் திருநாட்டு இன்ப மெய்துவரே. 5

[20]தடங்கொண்ட [21]கோயில் மணவாளமாமுனி [22]தாமரைந்தார்
[23]வடங்கொண்ட மார்பினில் [24]வண்புரிநூலும் எனது நெஞ்சில்
இடங்கொண்டு அடங்க எழுதிவைத்தேன் இனி வலவினைகாள்
திடங்கொண்டு நீசர் தம் தேயததில் ஏசிடும் தீதறவே. 6

---

1. தாமரைப்பூவைப்போல செவ்வியுடையதாய் 2 அலங்கரித்த 3. குளிர்ந்த தாமரை 4 துன்பம, பாபம் 5. மூங்கில் 6, வாஸனை 7. தொடை 8. ஒப்பில்லாத 9 தேன் பொழியும் மலர்களாலான மாலைதரித்துள்ள 10 இடை 11: தொடையினுட்பக்கம் 12 காஷாயம 13. கொப்பூழ் (நாபி) 14 கொள்ளை 15. புஜம்—திருத்தோள் 16. மேகம் 1/. அமுதசுரபி—காமதேனு 18. த்ரிதண்டம், கையுமேந்திய முக்கோலும் வாழியே என்கிறபடி. 19, அறும்படி. 20 விசாலமான 21. ஸ்ரீரங்கம் 22. தாமரை மணி மாலை 23. மணிவடம் 24. யஜ்ஞோபவீதம்—முப்புரிநூல் மணிவடமும் முக்கோல்தரித்தான் வாழியே—காண்க

மங்காது உலகை அருள் மணவாளமுனி [6]மருவார்
சிங்கார மாலைத் திருத்தோள்களும் அவற்றேதிகழும்
[7]சங்காழியும் தொழுதேத்தினேனல் [8]தமியேனுடைய
பங்காளும் வல்வினை எங்கோ கணத்தினில் [9]பாறியவே 7

பொழியும் [10]தமிழ்ப்புனையும் மணவாளமுனி கருணை
பொழியுந் திருவிழியும் திருமூக்கும் பொலிமறைகள்
செழியன்பு கொண்டு உரைக்கும் திருநாவும் திருமுகமும்
வழியன்பு கொண்டு [12]வழுத்தினேன் பேறின்பமற்றில்லையே 8

[13]பொருநல் துறையில் அருளாலிருந்த [14]நம்புங்கவர்கோன்
அருள்நல் தமிழுரை மாமணவாளவரு முனிவன்
திருநெற்றியும் திருநாமமும் [15]நாலும் திருச்சிகையும்
[16]வருணத்தெழலும மனத்தினுள்ளே நின்று வாழ்விக்குமே. 9

வாழிசெந்தாமரைத்தாள் துவராடை மருங்கு கொப்பூழ்
வாழி முந்நூலுறை மார்பு முக்கோலங்கை வாழி திண்தோள்
வாழி செவ்வாய் விழி வாழி பொன் நாம மருவு நுதல்
வாழி பொற்கோயில் மணவாளமாமுனி வாழ் முடியே. 10

செய்யதாமரைத் தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணை பொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழி புகழ் வாழி வாழியே.

---

6. வாஸனை பொருந்திய 7. திருவாழி திருச்சங்கு—திருவிலச்சினை; வைஷ்ணவ அடையாளங்கள் 8. வேறு கதியில்லாதவன் 9. ஓடிவிட்டனவே 10. தமிழில் இனிமையான பாக்கள் இயற்றும் 11. கருணை பொங்கிய கண்ணிணை வாழியே—காண்க 12. துதித்தேன் 13. தாமிரபரணி 14. உத்தம ஆசாரியன் 15. தாழ்ந்தமுடி 16. நிறம்.

## கோயில்கந்தாடை அண்ணன் அருளிச்செய்த மணவாளமாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு.

### தனியன்

எக்குணத்தோர் எக்குலத்தோர் எவ்வியல்போர் ஆயிடினும்
அக்கணத்தே நம் இறைவராவாரே-மிக்க புகழ்க்
காரார் பொழில் கோயில் கந்தாடை அண்ணனென்னும்
பேராளனை அடைந்தபேர்.

---

[1]சீருற்ற செஞ்சொல் திருவாய்மொழிப்பிள்ளை செம்முகமும்
[2]தாருற்ற மார்பும் [3]தளிரேய் பதங்களும் தன்மனத்துப்
[4]பூரித்து வாழும் மணவாளமாமுனி பொன்னடிகள்
பாரில் [5]தனித்த அடியேன் சரணென்று பற்றினனே. 1

பற்றினன் செம்மைத்திருவாய் மொழிப்பிள்ளை பாதங்களே
[6]உற்றனன் செம்மறை யுள்ளதெல்லாம் இவை உண்மை யென்றே
கற்றனன் கோயில் மணவாளமாமுனிக் [7]கார்முகிலைப்
பெற்றனன் இங்கு அடியேன் இனிமேல் பிறவாமலுக்கே. 2

பிறவாமல் வாழ்விக்கும் [8]பேரருளாளர் பெருமையென்றும்
துறவாத சிந்தை எதிராசன் [9]துய்யபதங்கள் நெஞ்சில்
மறவாத சீலன் மணவாளமாமுனி மாமலர்த்தாள்
[10]பறையாத வாசகர் யாரவர் [11]பஞ்சமாபாதகரே. 3

[12]பாதகமுள்ளவை தாமே ஒழித்துப் பரிந்தவர்க்குச்
சாதகமானதும் ஈதென்று கொண்டு சரண்கொடுக்கும்
[13]மாதகவோன் மணவாளமாமுனிப்பரன் பூமலர்த்தாள்
பாதுகையைச் சரணாய் முடிமேல் கொண்டு பற்றினர்க்கே. 4

---

1. பெருமையுடையவன் 2. மாலையணிந்த 3 தளிரைப் பழிக்கக்கூடிய திருவடிகள் 4. நிரப்பிக்கொண்டு 5. வேறுகதியில்லாத 6. அடைந்தேன் 7. மணவாளமாமுனியாகிய மேகம்; பிறர் வாழும்படி மழைபெய்து தன்னை அழித்துக்கொள்வது மேகம்; அப்படிக் கைமாறு கருதாது அருள்புரிபவர்; காரேய் கருணை இராமாநுச- (இரா, நூற்-25) காண்க 8. அத்திகிரி அருளாளர் வரதராஜர் 9 பவித்திரமான-பரிசுத்தமான; எதிராசரிணையடி என்றும் மறவாதவர் மாமுனிகள் 10 சொல்லாத 11. கொடும் பாவங்களைச் செய்தவர்கள் 12. தடையாய் நிற்பவை 13. மிகவும் கருணை

நற்கேசவன் [14]தமர் நற்றவத்தோர் நயனங்களுக்குப்
[15]பொற்கோல மேனியன் பூதலத்தோர் செய்த புண்ணியமாம்
முக்கோல் தரித்த மணவாளமாமுனி மூர்த்திதனை
எக்கோடி காலமும் சிந்தை செய்வார் தமக்கீடில்லையே. 5

இல்லை என்றே எண்ணி என் [16]பவக்காட்டை எரியிலிட்டு
நல்லருள்மாரிபெய்து என்னைத் தளிர்ப்பித்து நன்கு தன்பால்
[17] தொல்லருள் ஞானம் விளைத்து [18]ஆழ்ந்த போகத்தைத்
[19]துய்ப்பிக்கவே
வல்லவன் கோயில் மணவாளயோகியை வாழ்த்துவேனே, 6

வாழ்த்துவேன் எந்தை மணவாளமாமுனி மாமலர்த்தாள்
தாழ்த்துவேன் யானவன் தாளிணைக்கீழ்ச் சிரந்தாரணியில்
[1]காழ்த்திடும் செல்வமுதல் [2]முக்குறும்பும் கரிசறவே
[4]பாழ்த்திடும் என்றனன் அதிகோர பாவங்கள் பற்றறவே. 7

பாவங்கள் பற்றறும் பாசங்கள் பற்றறும் பற்றிவைகும்
கோவங்கள் பற்றறும் குற்றங்கள் பற்றறும் கோடிசன்மத்
தாவங்கள் பற்றறும் தண்ணரங்கன் புகழ் [5]சாந்த குண
தீவன் கருணை மணவாளயோகியைச் சிந்திக்கவே 8

சிந்தித்து அரங்கரைச் சிந்தை பயங்கெடச் சென்னிதன்னால்
வந்தித்து நிச்சலும் வாயார வாழ்த்துமெய்ம் மாமறையோர்
[6]புந்திக்குள் மேவும் வரயோகி தம்மைப் [7]புகைந்துசிலர்
சிந்திக்கினுமே விடார் இது காண் அவர் [8]நீர்மை நெஞ்சே, 9

[9]நெஞ்சே அனைய அடியார் [10]நிறங்கொண்ட நிச்சயமாம்
[11]மஞ்சேறு சோலை அரங்கப்பதி தனில் வாதியர்க்கு

---

உள்ளவர்; பொன்னடியாம் செங்கமலம்என்னப்படும் ஸ்வாமியின் பாதுகையைச் சரணாய்ப் பற்றியவர்க்கு அதுவே பாதகங்களை ஒழித்து அநுகூலங்களைச் செய்யும்; உப, ரத். மாலை கடைசி பாசுரம் காண்க 14 அடியார் 15. மிகவும் அழகிய திருமேனி 16 ஸம்ஸாரமாகிய காடு—பாபங்களின் திரள் 17. அநாதியான; இயற்கையான அருள்; நிர்ஹேதுகமானது. 18. எல்லையில்லாத பேரின்பம் 19. அநுபவிக்கும்படி செய்ய

1. வைரம் பாயும்-எளிதில் அழிக்க முடியாதது 2, செல்வம், கல்வி, ஜாதி இதுபற்றி வரும் செருக்கு 3, தோஷம் போகும்படி 4. பாழாகும்படி செய்யும் 5 ஸத்வகுணத்தால் விளங்குமவன் 6 புத்தி 7 மாமுனிகளிடம் அஸூயை கொண்டு 8. பெருந்தன்மை 9. திருவுள்ளத்துக்கு இசைந்த அடியவர்; அந்தரங்க சிஷ்யர்கள்; 10 நிறம்-மார்பு; உள்ளத்தில் கொண்ட நிச்சயம் 11. மேகம் படிந்த

நஞ்சேயனையே மணவாளயோகி இந்நாளளிக்கும்
தம்சேவை தன்னை இகழ்வார்க்கல்லால் அவர்தாமிட்டரே. 10

இட்டர்கள்வாழ எதிராசர் வாழ இருநிலத்தே
[12]சிட்டர்கள்வாழ நம் [13]தேசிகர் வாழச் செகத்திலுள்ள
துட்டர்கள் மாள மணவாளமாமுனி தோன்றினனே
[14]எட்டு மிரண்டும் அறியாரிங்கு [15]ஏசினும் யாவருமே. 11

யாவருமுய்ய மணவாளயோகி தயாளுவென்னப்
பூமகள் மண்மகள் புண்ணியமாய் இந்தப் பூதலத்தே
தாம் [16]அவதாரம் செயாதிருந்தால் சடகோபர் திரு
வாய்மொழியோடு கடலோசையோடு என்னவாசியுண்டே?12

வாசியறிந்த [17]வதரியில் நாரணனூர் மனங்கொள்
[18]தேசுடை எந்தை மணவாளமாமுனி சீர் தழைப்பச்
சீசயிலேச தயாபாத்திரமெனும் சீர்மந்திரம்
[19]தேசிகனுய்க் கண்டு உரைத்தார் இவ்வையகம் சீருறவே. 13

## அப்பிள்ளார் அருளிச் செய்த
## சம்பிரதாய சந்திரிகை

(மணவாளமாமுனிகள் வைபவம்)

ஆதியிலே [1]அரவரசை அழைத்து அரங்கர்
அவனியிலே இருநூருண்டு இரும் நீரென்னப்
பாதியிலே உடையவராய் வந்து தோன்றிப்
பரமபதம் நாடி அவர் போவேனென்ன
நீதியாய் முன் போல நிற்க நாடி
[2]நிலுவைதனை நிறைவேற்றி வாரும் என்னச்
[3]சாதாரணமெனும் மா வருடம் தன்னில்
தனித்துலா மூலநாள் தான் வந்தாரே. 1

---

12. சிஷ்டர்கள்—நல்லொழுக்கம் படைத்த பெரியோர் 13. ஆசாரியர்கள் 14. திருவெட்டெழுத்தான திருமந்திரம்; இரண்டு வாக்யம் கொண்ட த்வயம் 15. இகழ்ந்தால் என்ன வாகும்? 16. மணவாளமாமுனிகள் அவதாரம் செய்திலனேல் திருவாய்மொழி கடலோசைபோல் பயனற்றிருக்கும்; "மணவாளமாமுனி வந்திலனேல் ஆற்றிற்கரைத்த புளியல்லவோ தமிழாரணமே?" (ஸம்பிரதாய சந்திரிகை-காண்க) 17. பதரி காச்ரமம் 18. ஒளி 19 ஆசாரியனுய் ஸ்ரீசைலேச தயாபத்ர மென்னும் மந்திரத்தை பதரீநாராயணன் ப்ரகாசிப்பித்தான்
1. ஆதிசேஷன்-திருவநந்தாழ்வான், 2, பாக்கி, 3. ஸாதாரண வருஷம் ஐப்பசி மாஸம் திருமூல நல்நாளில் அவதாரம்,

[4]நற்குரோதன வருட மகரமாத
  நலமாகக் கன்னிகையை மணம் புணர்ந்து
[5]விக்கிரம வற்சரத்தில் விட்டிருந்து
  வேதாந்த மறைப்பொருளைச் சிந்தைசெய்து
புக்ககத்தில் பெண்பிள்ளை போலே சென்று
  புவனியுள்ள தலங்களெல்லாம் வணங்கி வந்து
துக்கமற வைணவர்கள் தொண்டு செய்யத்
  [6]துரியநிலை பெற்று உலகையுயக்கொண்டாரே. 2

செயநாமமான திருவாண்டு தன்னில்
  சீரங்கராசருடைத் திருநாள் தன்னில்
செயமாகத் திருவீதி வாராநிற்கத்
  தென்னாட்டு வைணவரென்றொருவர் வந்து
தனையுடைய மணவாளப் பெருமாளை நூர்
  தன்முனையே ஓரருத்தம் இயம்பச்சொல்லிச்
சயனம் செய்து எழுந்திருந்து சிந்தித்தாங்கே
  சந்தித்துக் கோயில் காத்து அருளினாரே. 3

வதரியாச் சிரமத்தில் இருமெய்த் தொண்டர்
  வகையாக நாரணனை அடிவணங்கிக்
கதியாக ஓர்பொருளை அளிக்க வேண்டும்
  கண்ணனே! அடியேங்கள் தேற வென்ன
[7]சதிராகச் சீசைல மந்திரத்தின்
  [8]சயமான பாதியை ஆங்கு அருளிச்செய்து
பதியான கோயிலுக்குச் செல்மின் நீவிர்
  பாதியையும் சொல்லுதும்யாம் தேற வென்றார். 4

---

4. குரோதன வருஷம் தை மாதம்வி வாஹம், 5. விக்கிரம வருஷம் ஸந்யாச ஆச்ரமம் பெற்றார், 6. ஸந்யாசம், 7. அழகாக 8. ஸ்ரீசைலேச தயாபாத்ரம் என்ற தனியனின் முன்பாதியை பதரீ நாராயணனும் பின்பாதியை ஸ்ரீரங்கநாதனும் அருளிச் செய்தனர்.

சென்றவர்கள் இருவருமே சேர வந்து
திருவரங்கன் [1] தினசரியை கேளா நிற்பச்
சன்னிதிமுன் கருடாழ்வார் மண்டபத்தில்
நாம் ஈடு சாற்றுகின்ற சமயம் தன்னில்
பொன்னிதனில் நீராடிப் புகழ்ந்து வந்து
புகழரங்கர் சன்னதிமுன் வணங்கி நிற்பச்
சன்னிதியின்று அரங்கர் தாமே அந்தத்
[2] தனியனுரை செய்து தலைக்கட்டினாரே 5

நல்லதோர் பரிதாபி வருடந்தன்னில்
நலமான ஆவணியின் முப்பத்தொன்றில்
சொல்லரிய சோதியுடன் விளங்கு வெள்ளித்
தொல்கிழமை வளர்பக்க நாலாநாளில்
செல்வமிகு பெரியதிரு மண்டபத்தில்
செழுந்திருவாய் மொழிப்பொருளைச் செப்புமென்றே
வல்லியுறை மணவாளர் அரங்கர் நங்கள்
மணவாள மாமுனிக்கு வழங்கினாரே. 6

ஆனந்தவருடத்தில் கீழ்மை ஆண்டில்
அழகான ஆனிதனில் மூல நாளில்
பானு வாரங்கொண்ட பகலில் செய்ய
பௌரணையில் நாளிட்டுப் பொருந்தி வைத்தே
ஆனந்தமயமான மண்டபத்தில்
அழகாக மணவாளர் ஈடு[4] சாற்ற
வானவரும் நீரிட்ட வழக்கே யென்ன
மணவாள மாமுனிகள் களித்திட்டாரே. 7

---

1. நாட்குறிப்பு 2. 'ஸ்ரீசைலேச' தனியனுக்கும் பெரியபெருமாள் விளக்கவுரை அருளிச்செய்தார் 3. பரிதாபி வருஷம் ஆவணி 31உ வெள்ளிக்கிழமை சுக்லசதுர்த்தியன்று திருவாய்மொழிப்பொருளைச் சொல்லும்படி ஸ்ரீரங்கநாதன் திவ்யாஜ்ஞை பிறந்தது. 4. ஆனந்த வருஷம் ஆனி மாதம் மூலநன்னாளில் பௌர்ணமியன்று ஈடுதொடக்கப்பெற்றது

தேவியர்கள் இருவருடன் சீரரங்கேசர்
திகழ்திருமா மணிமண்டபத்தில் வந்து
[5] தாவிதமா இந்த உலகோர்கள் வாழத்
தமிழ்மறையை வரமுனிவன் உரைக்கக்கேட்டே
ஆவணிமா சந்தொடங் நடக்கும் நாளில்
அத்தியயனத்திருநாள் அரங்க நாதர்
[6] தாவமற விற்றிருந்து தருவாய் என்று
தாம் நோக்கி [7] சீயர் தமக்கருளினரே 8

அருளினதே முதலாக அரங்கருக்கும்
அன்று முதல் அருந்தமிழை அமைத்துக்கொண்டு
தெருளுடைய வியாக்கியை [1]ஐந்துடனே கூட்டித்
திகழ்திருமா மணிமண்டபத்தில் வந்து
பொருளுரைக்கும் போதெல்லாம் பெருமாளுக்குப்
புனசிரிப்பும் பாவனையும் மகிழ்வும் கொள்ள
அருளுடைய சடகோபர் உரைத்த வேத
மதுகேட்டுச் சாற்றியது [2] இத்தனியன் தானே.

தாமரர் மெருஞ்சீர்கொள் மண்டபத்து நம்பெருமாள்
தாமாக வந்து தனித்தழைத்து—நீ மாறன்
செந்தமிழ் வேதத்தின் செழுமபொருளை நாள்தோறும்
வந்துரையாய் என்னுரையால் வாய்ந்து. 10

சேற்றுக்கமல வயல் சூழரங்கர் தம் சீர் தழைப்பப்
போற்றித் தொழும் நல்ல அந்தணர் வாழவிப் பூதலத்தே
[3]மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல்
ஆற்றில் கரைத்த புளியல்லவோ [4]தமிழாரணமே. 11

---

5. தாவு-பற்றுக்கோடு 6. தாபம்போகும்படி 7. சீயர்-மணவாள மாமுனிகள்

1. ஆறுயிரப்படி, ஒன்பதினுயிரப்படி, பன்னிராயிரப்படி, இருபத்திநாலாயிரப்படி, முப்பத்தாறுயிரப்படி என்ற ஐந்து வியாக்யானங்கள், 2. இவைகேட்டு மகிழ்ச்சி கொண்டு அரங்கன் அருளியது ஸ்ரீசைலேச தயாபாத்ரத் தனியன், 3. மிகவும் சிறந்த, 4 தமிழ் மறைகள் மணவாளமாமுனிகள் அவதரிக் வில்லையாகில் திருவாய்மொழியின் பொருள்கள் ஆற்றில் கரைத்த புளிபோல் வீணாகியிருக்கும்.

ஸ்ரீ:

## கந்தாடை அண்ணன் அருளிச்செய்த
## வரவரமுநி அஷ்டகம்

ஸகலவேதாந்தஸாரார்த்த பூர்ணாசயம் விபுலவாதூல
கோத்ரோத்பவாநாம்வரம் |
ருசிரஜாமாத்ருயோகீந்த்ரபாதாச்ரயம் வரதநாராயணம்
மத்குரும் ஸம்ச்ரயே ||

—X—

பர்யங்கேபி பரம் தத்வம் ரங்கஶாயிநமேவ ய: |
உத்திஷ்டத்யநுபூயாஹம் தம் வந்தே வரயோகிநம் || 1
உக்ஷண்யுக்தாய லோகார்யப்ரமுகாசார்யஸூக்திபி: |
உச்சை: ஸ்துத்வாத கோவிந்தம் தத்திவ்யஸ்தலகாஞ்சிதம் || 2
காவேர்யா: கமலோத்பாஸி ஸம்ஸ்ப்ருஶ்ய ஸலிலம் ஶுபம் |
கோவிந்தகுணஶீலாதி த்யாத்வாஸ்ருகலிலாநந: || 3
ரோமாஞ்சிதசலத்காத்ர: பக்த்யா பரமயைவ ய |
புநாதி தீர்த்தம் ஸங்காஹ்ய தம் வந்தே வரயோகிநம் || 4
பகவச்சாஸ்த்ரநிர்த்திஷ்ட விதிநைவ நிமஜ்ஜ்ய ய: |
திவ்யகாஷாயஸுத்தோர்த்வ புண்ட்ர மாலாதிபூஷித: || 5
மஹாமந்த்ராதி ஸம்ஜப்ய விஶிஷ்டை: பரிவாரித: |
ஸ்ரீரங்கதாம ஸம்ஸேவ்ய தத்தத்வாந்யுபப்ருஂஹ்ய ச || 6
ஆராத்ய ரங்கராஜாதீந் அநுபாகம் விதாய ச |
அபுநர்கம்ருதைரார்யாந் தம் வந்தே வரயோகிநம் || 7
வந்தே ஸௌம்யவராக்ர்ய யோகிநமஹம் த்யாநாம்ருதா
ஸ்வாதிநம்
ஸ்ரீரங்காதிபபாதபங்கஜபரிசார்யாகுணைகாந்திநம் |
ஆஜ்ஞாஶாஸ்த்ர விதேரவிச்யுதமலம் ஸம்ஸாரிகந்தாஸஹம்
ஶேஷாந் தர்ஶயதைவ காமிதபலப்ராப்த்யை குரூணாம்
குரும் || 8

—X—

## ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா அருளிச்செய்த
## வரவரமுநி ஸுப்ரபாதம்

வேதாந்ததேசிக கடாக்ஷவிவ்ருத்தபோதம்
காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம் ।
வத்ஸாந்வவாய மநவத்ய குணைருபேதம்
பக்த்யா பஜாமி ப்ரவாதிபயங்கரார்யம் ॥

—X—

ரவிருதிதஸ்த்வதாபி ந விநஶ்யதி மே திமிரம்
விகஸதி பங்கஜம் ஹ்ருதயபங்கஜமேவ ந மே ।
வரவரயோகிவர்ய! வரணீய! தயைகநிதே!
ஜயஜயதேவ ஜாக்ருஹி ஜநேஷு நிதேஹி தியம் ॥ 1
ஸ்வப்நமிதம் தவ ஸ்வபஹிமாநுபவைகபலம் ததாபி
ததாவிதம் ததிதி ஜாது ந வேத்தி ஜந: ।
வரவரயோகிவர்ய! ததிதம் விஜஹாது பவாந்
அபரிமிதம் ஹிதம் த்ரிஜகதாமநுசிந்தயிதும் ॥ 2
அவதரணம் ததேவ ஜகதாமவிவேகப்ருதாம்
விவித ஹிதாவபோதந க்ருதே ஹி க்ருதம் பவதா ।
ததிஹ ஏஹி யோகஶயநாந் மம நாத
ஜநாந் அம்ருதமயைரபாங்கவலயைரபிஷேசயிதும் ॥ 3
ஶரதரவிந்தப்ருந்தஸுஷமாபரிபோஷஜுஷா
தவ நயநேந கேசந பரே சரணே ந ததா ।
மதுகபீரநீரசதுரைருகிநரீதரே வரத!
துரம் தரந்தி பவஸிந்துமமும் தரிதும் ॥ 4
பரமதபோநிவாஸ! பணிபுங்கவ! ரங்கபதே:
பவநமிதம் ஹிதாய ஜகதோ பவதாதிகதம் ।
ததபி ஸைவ தேவ ந்ருகநிப் ப்ரகபீதருசே
ததிஹ மஹத் தவைவ குரு வைபவ பத்பிதுரம் ॥ 5
த்வதபிமதப்ரியஸ்த்வதநுவர்த்தநதந்யதமாத்
அலமதிரிக்த இதயகில லோகஸுபோதமிதம் ।
அவநிதலம் த்வதீப்ஸிதமிதம் ச ஹி தத்ர வஸந்
அயமகிலஸ்தவைதவ நிருபாயமுபைது பதம் ॥ 6

—X—

## ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா அருளிச்செய்தவை
(ஸ்ரீ வேங்கடேச ஸ்தோத்ரத்திலுள்ளவை)

*ஸத்வோத்தரைஸ்ஸததஸேவ்யபதாம்புஜேந*
*ஸம்ஸாரதாரகதயார்த்ர த்ருகஞ்சலேந ।*
*ஸௌம்யோபயந்த்ருமுநிநா மம தர்ஶிதௌ தே*
*ஸ்ரீவேங்கடேஶ சரணௌ ஶரணம் ப்ரபத்யே ॥*
*ஸ்ரீமத்ஸுந்தரஜாமாத்ருமுநிமாநஸவாஸிநே ।*
*ஸர்வலோகநிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் ॥*

—X—

## வரவரமுநி விஷய முக்தகம்

*ப்ரபத்யே பதபத்மாநி பரமப்ரேமஸம்பதாம்*
*ஸௌம்யஜாமாத்ருயோகீந்த்ர சரணைகஜுஷாம் ஸதாம் ॥*
*ஸம்பத்ஸ்வரூபாநுகுணைக யஸ்மிந் ஸர்வோத்தரோயத்ர*
*மந: ப்ரஸாத: ।*
*ஸத்பிஸ்ஸமந்தேவ தமேவ தேஶம் ப்ராப்யம் ப்ரயத்யே*
*பவதங்க்ரிமூலம் ॥*
*யந்மூலாரஸ்வயுஜமாஸ்யவதாரமூலம்*
*காத்தோர்பயந்த்ருயமிந: கருணைகஸிந்தோ: ।*
*ஆஸீதஸத்ஸுகணிதஸ்ய மமாபி ஸத்தாமூலம்*
*ததேவ ஜகதப்யுதயைக மூலம் ॥*
*ஸ்ரீமத்ரங்கம் ஜயதுபரமம் தாமதேஜோநிதாநம்*
*பூமா தஸ்மிந் பவது குஶலீ கோऽபி பூமா ஸஹாய: ।*
*திவ்யம் தஸ்மை திஶது விபவம் தேஶிகோ தேஶிகாநாம்*
*காலேகாலே வரவரமுநி: கல்பயந்மங்களாநி ॥*
*அபகத மதமாநைரந்திமோபாய நிஷ்டை:*
*அதிகதபரமார்த்தைரர்த்தகாமாநபேக்ஷை: ।*
*நிகிலஜநஸுஹ்ருத்பிர் நிர்ஜிதக்ரோதலோபை:*
*வரவரமுநிப்ருத்யைரஸ்து மே நித்யயோக: ॥*
*ஸ்ரீமதேரம்யஜாமாத்ருமுநீந்த்ராய மஹாத்மநே ।*
*ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்யமங்களம் ॥*

—X—

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ருமுநயே நம:

# YATHIRAJA PADUKA

Spiritual Monthly

Editor : Dr. V. V. RAMANUJAM

carries articles by eminent scholars in Tamil and English in the field of Srivaishnavism-Sri Ramanuja Darisanam-Special monthly feature: Mangalasasanam (words of Grace) by Sri Mudaliandan Swamy- Sri K.K.V.A. Kumara Venkatachraya Swamy. Eleventh year of Publiction.


---

# Yatindrapravana Prabhavam

of

Sri Pillailokarya Jeer

Price : Rs. 30.00 1992